JL
3m211,N87KT
N87.1
161980

யும் செவ்வையாய்த் தெரிவிக்கிறதனுல் இதை முறையாயோதின வர்கள்

[illegible]

[illegible]

[செவ்வையா யறியப்பட்டுச் சரியாகப் பிரயோகிக்கப்பட்ட ஒரு சப்தமானது சுவர்க்க லோகத்தில் விரும்பியதை யளிக்கத்தக்க தாகின்றது.]

என்றபடி நல்ல ஞானத்தையும் சக்தியையும் யடைவார்கள்.

3. சந்தத்தில் மந்திராதிகளுக்கு சிருஷ்டிமுதலான அக்ஷரகணிதங்களும் சுலோக இலக்கணங்களும் விளக்கப்படும். சந்தம்பெரும்பாலும் எழுத்தின்மேற் கணக்கிடப்பட்டு காயத்திரி முதலாக இருபத்தாறு பேதங்க ளுள்ளதாயிருக்கும். ஒவ்வொரு சந்தசுக்கும் சம்பந்தப்பட்ட விருத்தபேதங்கள் அநேகமுண்டு. ஒவ்வொரு விருத்தத்துக்கும் கணம், யதி, பிராசம், என்கிற நியந்தனைகளும், ஒவ்வொரு கணத்துக்கும் அபிமான தேவதையு முண்டு. இந்த லக்ஷணங்களைச்செவ்வையாய் அறிந்துதான் ஸாஹித்தியங்களைச் செய்ய வேண்டும்; அங்ஙனன்றி மனதுக்குவந்தபடிசெய்தால்,

[illegible]

[illegible]

[சந்தஞ்சிதையச் சாகித்தியம் செய்தவன், செய்வித்தவன், அதைச்சொல்லுகிறவன், கேட்கிறவன், அநுசந்தானஞ்செய்கிறவன் இவர்களுக்கெல்லாம் அநிஷ்டமுண்டாகும்.]

என்கிறபடி அசுப பல முண்டாகும் என்பது சாஸ்திர நிச்சயம் அநுபவமுமுண்டு. ஆகையால் ஸாஹித்தியம்செய்வோர் மு[illegible] யவர்கள் இந்தசாஸ்திரத்தை நன்றாயறிந்து அந்த நியமப்ப செய்யவேண்டும்.

4. நிருக்தத்தில் வேதமந்திரங்களுக்குச் சொற்களின் அ[illegible] வார்த்தத்தோடு பொருள் உரைக்கப்படும்.

5. சோதிடத்திலே வேதத்தில் விதித்த கருமங்ச

[illegible] லக்கினம் [illegible]

6. கற்பத்தில் யாகாதிகிரியைகளைச் செய்யவேண்டிய வகைகள் போதிக்கப்பட்டிருக்கும்.

இவைகளேயன்றி வேதங்களின் பொருளை அறிய மீமாம்ஸை, நியாயம், புராணம், தருமசாஸ்திரம் என்று வேறுசாஸ்திரங்களும் உண்டு. இவை வேதங்களின் உபாங்கங்கள் எனப்படும். அவற்றுள்,—

7. மீமாம்ஸையால் வேதத்தின்பொருள் இதுவென்று நிச்சயிக்கத்தக்க நியாயங்கள் போதிக்கப்படும். இந்த மீமாஞ்சை கருமபாகத்தைப்பற்றிக் கருமமீமாம்ஸை யென்றும், பிரம பாகத்தைப்பற்றி பிரமமீமாம்ஸை யென்றும் இருவகைப் பட்டிருக்கும். கருமமீமாம்ஸை பூர்வமீமாம்ஸை யெனவும், பிரமமீமாம்ஸை உத்தரமீமாம்ஸை யெனவும் சொல்லப்படும்.

அவற்றுள், பூர்வமீமாம்ஸைக்கு ஜைமினிமுனிவர் சூத்திரஞ்செய்திருக்கிறார். அது முற்குறித்தபடி ஜ்யோதிஷ்டோமாதிகருமங்களைச் செய்வதற்குவேண்டிய விதிமுறைகளையும், அவற்றின்பலன்களையும் அவற்றிற்குச் சம்பந்தமான சுருதிகளின் பொருள்களையும் மற்றும் கர்மவிஷயமான பற்பல ஆக்ஷேப சமாதானங்களையும், ஸஹஸ்ர நியாயங்களையும், யுக்திகளையும்எடுத்துச்சொல்வதுமன்றி, புத்திக்கு ஓர் தெளிவுண்டாக்கவும், வேதாந்தக் கிரந்தங்களில் கருமவிஷயத்தைப்பற்றி பிரஸ்தாபித்திருப்பதைப் பிரயாசையின்றி அறிந்துகொள்ளவும் அனுகூலமானதாயிருக்கும். அந்தஜைமினிமுனிவர் கூறிய சூத்திரங்களின் பொருள் வெளிப்பட சாபரர் என்பவர் ஓர்பாஷியம் செய்திருக்கிறார். அது அவர் பெயரால் சாபரபாஷியமென வழங்கும். இந்த சாபரபாஷியத்தின்பொருள் நன்கு விளங்கும்படி அதற்கு பிரபாகர முனிவரால் பிராபாகரமென்று ஓர் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றது. இதுவும் ஒருமதாந்தரமாம். ஆயினும் ...ரய் பிராபாகரங்களும் ஒன்றுக்கொன்று தந்திரங்களில் விரு...போற் றோன்றுமாயினும் அந்தரங்கத்தில் விருத்தங்களாகா. ...த ஜைமினி சூத்திரங்கட்கே பட்டசாரி என்பவரால் மதாந்தரமாக வேறோர் பாஷியஞ் செய்யப்பட்டு, பாட்டமென வழங்கு

...ம்ஸைக்கு ... சூத்திரம் செய்

பாஷாவிஷயம்.

[௧0 - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

அவ்வகஸ்தியமுனிவர் தாம் செய்த நூல் பிரபலமாகவும், காசியிலுள்ளவடமொழிச்சங்கத்துக்கு எதிர்த்தட்டாகத் தென்றிசையில் ஓர் தமிழ்ச்சங்கமேற்படுத்தவும் கருதி, (அக்காரியங்கள் அரசர்களுடைய ஆதரவின்றி நிறைவேறுவது கடினமாதலின்) அக்காலத்துப் பாண்டிய நாட்டில் அரசுசெலுத்திவந்த காய்சினவழுதியைக்கொண்டு அவன் இராஜதானியாகிய தக்ஷிணமதுரையில் ஓர் சங்கமேற்படுத்துவித்தார். அது அப்பாண்டியர்களுடைய ஆதரவும் அநாதரவும் காரணமாக தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றாயிற்று. அவற்றின்விவரம் வருமாறு,—

தலைச்சங்கம்.

1. இத்தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தோர்—இறையனார், குமரவேள், அகத்தியமுனிவர் முதலாகிய (549) ஐந்நூற்று நாற்பத் தொன்பதின்மர்கள்.

2. இத் தலைச்சங்கத்திற் றத்தங் காவிய மரங்கேற்றிய புலவர் தொகை—நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது. (4449)

3. இத்தலைச்சங்கத் தரங்கேறிய நூல்கள்—தொல்காப்பியம், காக்கைபாடினியம், அவினயம், நற்றத்தம், வாமனம், புறப்பொருட்பன்னிருபடலம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலியன.

4. அவர்களுக்கு நூல்—அகத்தியம் *

5. இவர் சங்கமிரீஇயது—கடல்கொள்ளப் பட்ட தக்ஷிண மதுரை.

6. இத்தலைச்சங்கத்துக்குக் காலம்—முன்பின் நாலாயிரத்தைந்நூறு வருஷம். (4500)

7. இத்தலைச்சங்கம் காய்சினவழுதி முதல் கடுங்கோன் வழுதி யீறாக (89) எண்பத்தொன்பதின்மர் பாண்டியரை யுடையது.

8. இத்தலைச்சங்கத்துள் கவியரங்கேறிய பாண்டியர் எழுவர். (7)

இடைச்சங்கம்.

1. இடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தோர்—அகத்தியர், தொல்காப்பியர், முதலிய ஐம்பத்தொன்பதின்மர். (59)

---

* அதில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் மூன்றும் வகுத்துரைக்கப்பட்டன.—அவற்றுள், (1) இயற்றமிழ், தொல்காப்பியமுதலியவற்றுள்ளும், (2) இசைத்தமிழ், பெருநாரை, பெருங்குருகு, முதலியவற்றுள்ளும், (3) நாடகத்தமிழ், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் முதலியவற்றுள்ளும் விரித்துரைக்கப் பட்டன.

ந கர்மணா ந ப்ரஜயா தநேந த்யாகேநைகே அம்ருதத்வ
மாநசு:.

போதோந்யஸாதநேப்யோ ஹி ஸாக்ஷாந் மோக்ஷைகஸாதநம்।
பாகஸ்ய வஹ்நிவஜ் ஜ்ஞாநம் விநா மோக்ஷோ ந ஸித்யதி.

[கருமத்தாலாவது, ஸந்ததியாலாவது, தனத்தாலாவது, ஈகையாலாவது யாரும் மோக்ஷமடைந்ததில்லை. சமையலுக்கு நெருப்புப் போல மோக்ஷத்துக்கு ஞானமே முக்கியகாரணம்.]

என்கிறபடியே தத்துவஞானமே மோக்ஷத்துக்குமுக்கியகாரணமென்பதுமுதயலி சித்தாந்தங்களுள்ளதாய் எட்டத்தியாயமாயிருக்கும். அது ப்ரஹ்மஸூத்ரம் என்றும் சாரீரகசூத்திரமென்றும் சொல்லப்படும். இதற்கு சங்கராசாரியர் ஓர்பாஷியம் செய்திருக்கின்றனர். அது அத்துவைதபாஷியமெனப்பெறும். அந்த பாஷியத்துக்கு விவரணமாக விவரணாசாரியர் ஓர் வியாக்கியானம் செய்திருக்கிறார்.

8. நியாயசாஸ்திரத்தினால் பிரத்தியக்ஷம், அநுமானம் முதலான பிரமாணங்களின் இலக்கணங்களையறியலாம்; இதுதான் தர்க்க சாஸ்திரம். இந்த சாஸ்திரமானது,—

காணாதம் பாணினீயம் ச ஸர்வஶாஸ்த்ரோபகாரகம்.

என்கிறபடி வேதாந்த சாஸ்திராத்தியயனஞ்செய்ய அத்தியாவசியகமாயுள்ளது.

9. புராணங்களினால் சிருஷ்டிசங்காரங்களின் கிரமங்களும், மனுவந்தரங்களின் கிரமங்களும், வமிசங்களும், சரித்திரங்களும் அறியலாம். இதிகாசங்களும் புராணங்களோடு சேர்ந்தவையே.

10. தருமசாஸ்திரமானது பிராமணர்முதலான நான்கு வருணத்தாரும் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கமுதலானவைகளையும், கிருஷி, வியாபாரம், உத்தியோகம் முதலிய விருத்திகளால் திரவியம்சம்பாதிக்கிற மார்க்கத்தையும், செலவுசெய்யவேண்டிய விதங்களையும் அரசன் நீதிதவறாது குடிகளைக்காத்து, தாயபாக முதலிய வியவஹாரங்களைத் தீர்மானிக்க வேண்டிய விஷயங்களையும் பற்றிச் சொல்லும். இதுதான் ஸ்மிருதி என்று சொல்லப்படுவது. இதன்பொருள் வேதத்தின்பொருளை நினைத்துச் செய்யப்பட்டது என்பதாம்.

[தொடர்ச்சி.]

2. காவிய மரங்கேற்றிய புலவர்தொகை—மூவாயிரத் தெழுநூறு. (3700)

3. அரங்கேறிய நூல்கள்—கலி, குருகு, முதலியன.

4. இவர்க்குநூல்—அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் என்பன.

5. இவர் சங்கமிரீஇயது—கபாடபுரம்.

6. இவ்விடைச்சங்கத்துக்குக்காலம்—முன்பின் மூவாயிரத்தைந் நூறுவருஷம். (3500)

7. இவ்விடைச்சங்கம் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறனீறாக ஐம்பத் தொன்பதின்மர் (59) பாண்டியரையுடையது.

8. இவ் விடைச் சங்கத்துக் கவியரங்கேறிய பாண்டியர் ஐவர். (5)

கடைச்சங்கம்.

1. கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தோர்—நக்கீரர், மருதனிளநாகனார், சிறுமேதாவியார் முதலிய நாற்பத்தொன்பதின்மர். (49) [இவர்கள் பெயரெல்லாம் திருவள்ளுவமாலையிற் காண்க.]

2. கவியரங்கேற்றிய புலவர்தொகை—நானூற்று நாற்பத்தொன்பது. (449)

3. அரங்கேற்றியநூல்கள்—நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணைநானூறு, புறநானூறு, ஐங்குறுநானூறு, எழுபதுபரிபாடல், பதிற்றுப்பத்து, நூற்றைம்பது, கூத்துவரி, சிற்றிசை, பேரிசைமுதலியன.

4. இவர்க்கு நூல்—முற்கூறியவும், புதியாநுட்பம், பிரணிகை, சாயித்தியம் முதலியவுமாம்.

5. இவர் சங்கமிரீஇயது—தற்காலத்துள்ள உத்தரமதுரை. [இது இடைச்சங்கமிருந்த கபாடபுரம் முடத்திருமாறன் காலத்துக் கடல் கொண்டபின்தோன்றியது.]

6. இக்கடைச்சங்கத்துக்குக் காலம்—முன்பின் இரண்டாயிர வருஷம். (2000)

7. இக்கடைச்சங்கம் முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத் தொன்பதின்மர் (49) பாண்டியரையுடையது.

8. இக்கடைச்சங்கத்துக் கவியரங்கேறிய பாண்டியர் மூவர். (3)

இவ்விஷயமெல்லாம் சங்கத்தார் காலத்ததாகிய இறையனாரகப்பொருளுரையில் விளங்கக் காணலாம். அன்றியும்,

ஏழேழொ டைஞ்ஞூறு மேழே ழொடுபேஃதும்
ஏழேழுஞ் சங்க மிரீஇனர் - ஏழேழ்சேர்

நாற்பதினொ னூறுமப்பா லேழுமைய நானூற்று
நாற்பதினென் பான்கவிஞர் நாடு." *

என்னும் சங்கத்தார் காலத்துப் பழம் பாட்டின் ஒன்றுமுண்டு.

இக்கடைச்சங்கப் புலவர்கள் சரசுவதியினுடைய அம்சமாயுள்ளவர்கள். அதன் விவரம் வருமாறு—பாண்டியநாட்டில் வங்கியசேகர பாண்டியன் செங்கோல் செலுத்திவருநாளில் பிரமதேவர் காசியில் வேதவிதிப்படி பத்து அசுவமேதஞ்செய்து நிறைவேற்றிக் கங்காநதியில் அவப்ருதஸ்நானஞ்செய்வதற்காக சரசுவதி, சாவித்திரி, காயத்திரி என்னும் தம்மனைவியர் மூவரோடுஞ் செல்ல, சரசுவதி வழியிலோர் வித்தியாதர ஸ்திரீயின் பாட்டைக் கேட்டுக் கொண்டு பின் தங்கி நிற்க, பிரமதேவர் மற்றிருவரோடுங் கங்கைக்கரைசேர்ந்து சற்றுநேரங் காத்திருந்தும் சரசுவதி வாராமையினால், அவ்விருவருடனும் நாமக்கங்கையாடிக் கரையேறினார். அப்போதுசரசுவதி வந்து "என்னைவிட்டு நீர் ஸ்நானஞ் செய்யலாமா" வென்று கொடுமை கூற, பிரமதேவர் சீற்றமுற்றுக், குற்றம் உன்னிடத்திருத்தலால் நீ அநேக மனுஷியஜனனம் எடுத்து அக்குற்றத்தை நீக்கிக்கொள்ளக்கடவை என்று சபித்தார். அப்போது சரசுவதிபயந்து "சுவாமி! அடியேன் செய்தபிழையைப்பொறுத்துத்தேவரீர்க்குதர்மபத்தினியாகிய யான் மனுஷிய ஜனனமெடுத்து மயங்காவகை யருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்கப், பிரமதேவர் மனமிரங்கி "பெண்ணே! உனக்குப்பதில் உன் சொரூபமாகிய முதலெழுத்தைம்பத்தொன்றில் அகாரமுதல் ஹகாரமீறாக வுள்ள நாற்பத்தெட்டு எழுத்துக்களும் நாற்பத்தெட்டுப்புலவர்களாகப் பூலோகத்திற் பிறக்கக் கடவன; எழுத்துகளுக் கெல்லாம் அகாரமுதன்மையானதனால் அந்த அகரத்துக்கு முதன்மையாகிய கடவுளுமொரு புலவராய் அவர்களுக்கு முதன்மையராய் அறிவு விளங்கச் செய்துகொண்டு இருப்பார்" என்று அருளிச்செய்தார்.

அப்படியே அந்நாற்பத்தெட்டெழுத்துகளும் வெவ்வேறிடங்களில் மனிதராய்ப்பிறந்து தமிழ்ப்புலவர்களாய்த் தேசங்கள்தோறும்சென்று புலமைசெலுத்திப் பாண்டியதேசத்துக்கு வந்து மதுரையைநோக்கிச் செல்ல சொக்கநாதசுவாமியானவர் ஒருபுலவன்போல் எதிரில்வந்து அப்புலவர்களைப்பார்த்து நீங்களெங்கிருந்து வருகிறீர்களென்றுகேட்க, அவர்கள் நாங்கள்தேசசஞ்சாரஞ்செய்துகொண்டு வருகிறோமென்ன, சுவாமியானவர் "புலவர்களே! திருவாலவா

* "நாலாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான், பாலாநானூற்று நாற்பத்தொன்பான் - மேல்நாற், பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்குங், கத்தன் மதுரையிற் சொக்கன்" எனக்காளமேகப்புலவன் பாடியதாக வழங்குகின்ற பாட்டின் படியே தலைச்சங்கத்து வீற்றிருந்தபுலவர் நாலாயிரத்துநானூற்றுநாற்பத்தொன்பதின்மரெனவும், இடைச்சங்கத்துப் புலவர் நானூற்றுநாற்பத்தொன்பதின்மரெனவும், கடைச்சங்கத்துப் புலவர் நாற்பத்தொன்பதின்மரெனவும் ஏற்படுகின்றதேயென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம்; ஆயினும் அதற்குப் பிரமாணம் நூல்களிற் காணப்படாமையால் அது அவ்வளவு சரியென்று கொள்ளத்தக்கதல்ல.

யிலெழுந்தருளியிராநின்ற சோமசுந்தரக்கடவுளைத்தரிசிக்கவாருங்கள்" என்று சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டுபோய்த் தரிசனஞ் செய்வித்து தாம் அவ்வர்ச்சாரூபத்தில் அந்தர்த்தானமாய்விட்டார்.

அதைக்கண்ட அப்புலவர்கள் அதிசயித்து சோமசுந்தரக்கடவுளுக்குப் பாமாலைசாத்திப் பணிந்து, பின்பு பாண்டியராசனுடைய சபாமண்டபம் புகுந்து தமது கல்வித்திறத்தைக்காட்ட. அவனும் அவர்களுடைய கல்வி கேள்விகளை நோக்கித் தனது சபைக்குத் தக்கவர்களென்று நிச்சயித்துக்கொண்டு சொக்கநாதசுவாமி ஆலயத்துக்கு வடமேற்கில் சங்கமண்டபமென்று ஒருமண்டபம் கட்டுவித்து அப்புலவர்களுக்கு வேண்டியவைகளெல்லாம் அளித்து அவ்விடத்திற்றானே இருக்கச்செய்தான். அப்படி அவர்களுக்கு அரசன் பலவரிசைகள் செய்யக்கண்டு முன்பு அங்கிருந்த புலவர்கள் பொறாமைகொண்டு அந்நாற்பத்தெட்டுப் புலவருடனும் தனித்தனி வாதுசெய்து தோற்று முன்னுள்ள பெருமையும் இழந்துபோயினர். அவ்வாறே புறநாட்டுப் புலவர்களும் வந்து வாதுசெய்து தோற்றனர். இங்ஙனம் வாதுக்கு வந்தவர்களை வென்று செயம் பெற்றிருக்கும் சங்கப்புலவர்கள் ஒருநாள் தமக்கு முதன்மைப் புலவராகிய சொக்கநாத சுவாமிசந்நிதியிற் சென்று பணிந்து துதித்து, "சுவாமி! எல்லாரும் வந்து எங்களுடன் வாதுசெய்கிறார்கள். அவ்வாறின்றி அவரவரது கல்வித்திறத்தை அளவிடத்தக்க கருவியொன்று அடியேங்களுக்குத்தந்தருளல்வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்ய, சுவாமியும் அவர்கள் வேண்டுகோளியக்கருதித் தாமும் ஒரு புலவர்போல் வடிவு பூண்டு ஒரு சிறுபலகையைக் கையிலெடுத்து வந்து சங்கப்புலவர்க்குக் காண்பித்து, "புலவர்களே! இதோ இந்தப் பலகை இரண்டு சாணளவிற்குச் சதுரமாயிருக்கின்றது, இருந்தாலும் மெய்ப்புலவன் ஒருவன் வந்தால் அவனுக்கு ஒருமுழம் இடம் கொடுக்கும், அப்படி எத்தனை பேர்வந்தாலும் ஒவ்வொருமுழம் விழுக்காடு வளர்ந்து இடங்கொடுக்கும்" என்று சொல்லிக்கொடுத்தருள, அதை வணங்கி வாங்கிக்கொண்டு அச்சங்கமண்டபத்தை யலங்கரித்துஓர்பீடிகையில் அப்பலகையைவைத்து முதல் நக்கீரர் ஏறியிருந்தார். உடனே கபிலரும் பரணரும் ஏறினார்கள். இம்முறையே மற்றவர்களும் ஒவ்வொருவரா யேறியிருந்து அதுமுதல் தூய்தாகிய பாடல் செய்து வரும்போது பாடலெல்லாம் சொல்வளமும் பொருள் நயமும் ஒத்து ஒரே தன்மையவாயிருக்க, இன்னார் பாடியபாடல் இதுவெனப்பகுத்தறியாமல் ஒருவர்பாடியதை மற்றொருவர் பாடியதாக நினைத்துக் கலகப்பட்டுக்கொண்டிருக்கச் சோமசுந்தரக்கடவுள் ஒரு புலவர் வேடங்கொண்டு வந்து அவர்கள் பாடியிருக்கும் பாடல்களைக்கொண்டு வரச்சொல்லிப் பார்த்துச் சொற்றொடர்ச்சியும் பொருட்டொடர்ச்சியும் நோக்கிப் பகுத்து அவரவர் பாடிய பாடல்களை அவரவர் கையிற்கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டச்சங்கப் புலவர் மனங்களித்து, ஐயரோதேவரீரோ எங்களுக்கு முதல்வராயிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துச் சங்கப்பலகையின் மத்தியில் அவரை வீற்றிருக்கச்செய்து தாங்கள்சூழவிருந்து.இறையனருடன்நாற்பத்தொன்பதுபேராகிப் பின்னும் பலபாடல் செய்துவந்தார்கள்.

[தொடர்ச்சி.]

ஆரணியகாண்டம்.

மாரீசன்வதைப் படலம்.

[௪௯-வது. பக்கத்தின் தொடர்ச்சி.]

71.—தோளை ஏ சொல்லுகேன் ஓ-(அவளது) தோளழகையே யெடுத்துச் சொல்ல மாட்டுவேனோ? சுடர் முகத்து உலவுகின்ற வாளை ஏ சொல்லுகேன் ஓ - ஒளிபொருந்திய முகத்தினிடத் துலாவுகின்ற வாளைப்போன்ற கண்ணழகையே யெடுத்துச்சொல்ல மாட்டுவேனோ? வல் அவை வழுத்துகேன் ஓ - சொக்கட்டான் காய்களை யொத்த ஸ்தனங்களி னழகையே புகழ்ந்து பேசமாட்டு வேனோ? மீளவும் திகைப்பது அல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன் - (சொல்லத்தொடங்கினால் மனது) பின்னும் பிரமிப்ப தல்லாமல் (அவளுடைய அவயவங்களி னழகை) நான் ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லத் தக்கவ னல்லேன்; நாளை ஏ காண்டி அன்று ஏ - நாளைக்கே நீ காணப் போகிறா யல்லவா? நான் உனக்கு உரைப்பது என் - (ஆகையால் இப்போது) நானுனக்குச் சொல்ல வேண்டுவ தென்ன [ஒன்று மில்லை]; எ - று.—'அல்லவை வழுத்துகேனோ' எனப்பிரித்து மற்ற அவயவங்களைத் தான் நான் புகழ்ந்து பேசமாட்டுவேனோ என்றும் பொருள் கொள்ளலாம்.

72.—வில் ஒக்கும் நுதல் என்றால் உம் - வில்லானது (அவளுடைய) புருவத்தை ஒத்திருக்கும் என்று சொன்னாலும், வேல் ஒக்கும் விழி என்றால் உம்- வேலானதுகண்ணை யொத்திருக்கு மென்றாலும், முத்து பல் ஒக்கும் என்றால் உம் - முத்தானது பல்லைஒத்திருக்கும் என்றாலும், பவளத்தை இதழ் என்றால் உம் - பவளக்கொடியையே இதழ் என்று சொன்னாலும், சொல்ஒக்கும் பொருள் ஒவ்வா ஆல் - சொற்கள் ஒத்திருக்குமேயன்றி பொருள்கள் [வஸ்துக்கள்] ஒப்பாக மாட்டா, (ஆகையால்) சொல்லல் ஆம் உவமை உண்டு ஓ - (அவளுடைய) அவயவங்களுக்கு நிகராகத் தக்கவை யென்று சொல்லும்படியான உவமானங்களும் உலகத்தில் உளவா [இல்லை]? புல் நெல் ஒக்கும் என்றால் உம் - புல்லானது நெற்பயிரை யொத் திருக்கும் என்று சொன்னாலும், நேர் உரைத்து ஆக வற்று ஏ - (அவளுடைய அவயவங்களுக்கு எவ்வகைப் பொருளாவது) சமான மென்னும் வார்த்தையை யுடைய தாகும் வல்லமைய தாகுமா [ஆகாது], எ - று.

73.—ஐயா - அண்ணா! இந்திரன் சசியை பெற்றான் - தேவேந்திரன் சசிதேவியை [இந்திராணியை] அடைந்தான்; இரு மூன்று வதனத்தோன் தன் தந்தை உம் உமையை பெற்றான் - ஆறுமுக சுவாமியினுடைய தந்தையாகிய ருத்திர மூர்த்தியும் உமாதேவியை [பார்வதீ தேவியை] அடைந்தான்; தாமரை செம் கணான் உம் செம் திருமகளை பெற்றான் - செந்தாமரை போன்ற சிவந்த கண்களையுடைய திருமாலும் செம்மையாகிய ஸ்ரீ தேவியை

யடைந்தான்; நீ உம் சீதையை பெற்றாய் - நீயும் சீதாதேவியை அடைந்தாய்; அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கு இல்லை உனக்கு ஏ - தாரதம்மியம் பார்க்கும் போது நலம் [க்ஷேமம்] அவர்களுக்கில்லை உனக்கேயுள்ளது, எ - று.—துணிவுபற்றி "பெற்றாய்" என இறந்தகாலத்தாற் கூறினாள் என்க. இவள் இவனுக்கே க்ஷேமம் என்று சொல்ல வந்தாலும், மேல் இவன் கேட்டிற்கு சூசகமாக "நன்மைஅவர்க்கு, இல்லைஉனக்கு" எனப்பிரிந்து இவனுக்கு அனிஷ்டத்தைக் குறிக்கத்தக்க பொருள் படும்படி அவள் வாயில் வந்ததாக நூலாசிரியர் கூறியது காண்க. மேல் இரண்டு பாட்டிலும் இவ்வாறே இராவணனுக்கு அனிஷ்ட சூசகமாக வாக்கியங்க ளமைந்திருப்பதை அறிக.

74.—ஒருவன் பாகத்தில் வைத்தான் - ஒருவன் [சிவன்] மனைவியைத் தன் சரீரத்தின் பாதியில் வைத்துக் கொண்டான் [அர்த்தநாரீசுவரனானவன்]; ஒருவன் பங்கயத்து இருந்த பொன்னை ஆகத்தில் வைத்தான் - ஒருவன் [விஷ்ணு] தாமரை மலரில் வீற்றிருந்த இலக்குமியை மார்பிலே வைத்துக் கொண்டான் [ஸ்ரீதரனானவன்]; அந்தணன் நாவில் வைத்தான் - பிரமா(தன் மனைவியை) நாக்கில் வைத்துக் கொண்டான்; மேகத்தின் மின்னை முன் ஏ வென்ற நுண் இடையை- (நீர்கொண்ட) மேகத்திற் றோன்றுமின்னலை முன்னமே தோற்கடித்த நுட்பமான இடையை யுடைய சீதாதேவியை, மாக தோள் வீர நீ உம் பெற்றால் - உயர்ந்த தோள்களை யுடைய சுத்த வீரனாகிய நீயும் அடைந்தால், எ ஙனம் வைத்து வாழ்தி - எவ்விடத்தில் வைத்துக் கொண்டு வாழ்வாய்; எ - று.— "நீ எங்ஙனம் வைத்து வாழ்தி" என்பது "நீ எப்படி வைத்துக்கொண்டு வாழப்போகிறாய் [வாழமாட்டாய்]" என்று அனிஷ்டமாகப் பொருள் படுதல் காண்க.

75.—ஐயா - அண்ணா! பிள்ளைபோல் பேச்சினாளை பெற்ற பின் பிழைக்கல் ஆற்றாய் - குழந்தைகளுடைய பேச்சுப் போன்ற பேச்சையுடைய [மழலைச் சொற்களை யுடைய] வளை [சீதாதேவியை] நீ அடைந்தபிறகு (அவளிஷ்டத்துக்கு) தவறுசெய்யமாட்டாய்; கொள்ளைபோகின்ற செல்வம் அவளுக்கு ஏ கொடுத்தி - இப்பொழுது (வல்லார்) கொள்ளையாப் போகின்ற செல்வ முழுவதும் அவளுக்கே கொடுப்பாய்; வள்ளலே! உனக்கு நல்லேன் - (யாசிப்பவரது மன மறிந்து) வரையாது கொடுப்பவனே! நான் உனக்கு நல்லவளானேன், மற்று நின் மனையில் வாழும் கிள்ளை போல் மொழியார்க்கு எல்லாம் கேடு சூழ்கின்றேன் - மற்றபடி உன் வீட்டில் வாழ்கின்ற கிளி கொஞ்சுவது போலப் பேசுகின்ற பெண்களுக் கெல்லாம் கெடுதியை யோசிக்கின்றவளாகிறேன்; எ - று.—"பிள்ளைபோல் பேச்சினாளைப் பெற்றபின் பிழைக்கலாற்றாய்" என்பது "மழலைச் சொல்லை யுடைய சீதா தேவியை யடைந்த பின் நீ பிழைக்க மாட்டாய் [இறப்பாய்]" என அனிஷ்டமான பொருள் படுதல் காண்க. தனக்கு இராமனைக் கொடுக்கவேண்டும் என்னுங்குறிப்புத்தோன்ற "வள்ளலே" என நைச்சியமாக விளித்தாளென்க.

76.—மீன்கொண்டு ஊடாடும் வேலை மேகலை உலகம் ஏத்த-மீன்களைத்தன்னிடத்திலே கொண்டு அலைகின்ற கடலாகிய மேகலாபரணத்தையுடைய உலகத்திலுள்ளவர்கள் புகழும்படி, தேன்கொண்டு ஊடாடும் கூந்தல் சிறு இடை சீதை என்னும் மான் கொண்டு நீ ஊடாடு - வண்டுகள் தேனை யுட்கொண்டு உலாவப்பெற்றகூந்தலையும் சிறிய இடையையுமுடையசீதையென்கிற மானைத்துணையாக்கொண்டுநீ விளையாடு; உன் வாள் வலி உலகம் காண யான் கொண்டு ஊடாடும் வண்ணம் இராமனை என்பால் தருதி - உனது வாளின் பலத்தை யுலகத்தார் காணும்படி நான் சந்தோஷத்தை மனதினிடத்தே கொண்டு பழகுவதற்கு எனக்கு ஸ்ரீராமனைக் கொடு, எ-று.—இவள் வெகு துன்பமடைந்து வருந்தியும் ஸ்ரீராமபிரானை மறக்கவில்லை, அவரிடத்துத் தனக்குண்டாகிய ஆசைப் பெருக்கால் என வறிக.

மேகலை - மாதரிடையணியுள் எண்கோவை மணி. இனி எழுகோவை மணி காஞ்சி என்றும், பதினெட்டுக் கோவைமணி கலாபம் என்றும், பதினாறு கோவைமணி பருவம் என்றும், முப்பத்திரண்டு கோவைமணி விரிசிகை என்றும் சொல்லப்படும். இதற்கு,—

"எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை
பண்கொள் கலாபம் பதினெட்டு - கண்கொள்
பருவம் பதினான்கு முப்பத்திரண்டு
விரிசிகை யென்றுணரற் பாற்று"

என்பது மேற்கோள். ஆயினும், இது,—

ஏகயஷ்டிர்-பவேத்காஞ்சீ மேகலாஷ்டயஷ்டிகா ।
ரஸநாஷோடஸாஜ்ஞேயா கலாப: பஞ்சவிம்ஸக: ॥
ஸப்தகீஸப்தயஷ்டிஸ்ஸ்யாத் த்ரிஸ்ஸாரஸநம்ஸ்ம்ருதம் ॥

[காஞ்சி – ஒருகோவைமணி; மேகலை - எண்கோவைமணி; ரசனை-பதினாறு கோவைமணி; கலாபம் - இருபத்தைந்து கோவைமணி; ஸப்தகி-எழுகோவைமணி; ஸாரஸநம் - மூன்று கோவைமணி]

என்னும் வடநூன் மேற்கோளோடு மாறுபடுகின்றது.

77.—தருவது விதி ஏ என்றால் - (ஒருவருக்கு) எல்லாவற்றையும் கொடுப்பது ஊழே யாதலால், பெரிது தவம் உடையர் என் உம் வருவது வரு நாள் அன்றி வந்து கைகூட வற்று ஓ - ஒருவர் அதிகமாகிய தவத்தையுடையவராயினும் வரவேண்டியது அது வரவேண்டிய காலத்தில் வருமே யன்றி (அவர் நினைத்த பொழுது) வந்து சித்திக்கவல்லதா [அல்ல]; எந்தாய்! ஒருபதுமுகம் உம் கண் உம் உருவம் உம் மார்பு உம் தோள்கள் இருபது உம் படைத்த செல்வம் நீ எய்துவது இனி-என்னப்பா! பத்துமுகங்களும் (இருபது) கண்களும் அழகும் (அகன்ற) மார்பும் இருபது தோள்களும் பெற்ற பாக்கியத்தை யடைவது இனிமேல் தான்; எ.- று.—நாளைக்கு நீ சீதையை யடையப்போகிறாய், அதுதான் மேற் கூறியவற்றையெல்லாம் நீ பெற்றதற்குப் பயனாகும் என்று கருத்துக் கொண்டு இங்ஙனம் கூறினாளெனவறிக. விதியாவது - இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய நியதி. விதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி என்பன ஒருபொருட்கிளவி.

78.—இன்னவள் தன்னை உன்பால் உய்ப்பல் என்று எடுக்கல் உற்ற என்னை - இத்தன்மையளாகிய சீதையை உன்னிடத்தில்கொண்டு வருவேன் என்று எடுக்கப் போன என்னை, அ இராமன் தம்பி இடை புகுந்து இலங்கு வாளால் முன்னை மூக்கு அரிந்துவிட்டான் - அந்த இராமனுடைய தம்பியானவன் [இலக்குமணன்] நடுவே வந்து புகுந்து விளங்குகின்ற வாளினாலே [கூரியவாளால்] முன்னே எனது மூக்கை யறுத்துவிட்டான், என் வாழ்வும் முடிந்தது- (அப்பொழுதே) என்வாழ்வும் முடிந்து விட்டது, (ஆயினும்) உன்னின் சொன்னபின் உயிரைநீப்பான் துணிந்தனென் என்ன சொன்னாள்-உன்னிடத்தில் சொன்ன பிறகு பிராணனை விடும்படி நிச்சயித்தேன் என்றுசொன்னாள் [சூர்ப்பணகை], எ - று.—உய்ப்பல், துணிந்தனென் - தன்மை ஒருமை வினைமுற்றுகள், அல், என் - விகுதிகள். நீப்பான் - வினையெச்சம், பான்-விகுதி.

79.—கோபம் உம் மறன் உம் மான கொதிப்புஉம் என்றுஇனையஎல்லாம்-கோபமும் வீரமும் பெருமையும் என்று சொல்லப்பட்ட இவை யெல்லாம், பாவம் நின்ற இடத்து நில்லா பெற்றிபோல் பற்றுவிட்ட - பாவம்நின்ற விடத்தில் நில்லாத தன்மைபோல பற்றற்றன; தீபம் ஒன்று ஒன்றைஉற்றால் என்னல் ஆம் செயலில் புக்க-ஒரு தீபமானதுவேறொருதீபத்தைச் சேர்ந்ததென்று சொல்லத்தக்க தன்மையில் பொருந்திய, தாபம்உம் காம நோய் உம்ஆர் உயிர் கலந்த - தாபமும் காமநோயும் ஆகிய இவ்விரண்டும் அரியஉயிரைச் சேர்ந்தன [உயிரோடு வேற்றுமையறக்கலந்தன]; எ- று.

80.—கேட்ட மங்கையை மறந்திலாதான்- தான்கேள்விப்பட்ட பெண்ணாகிய சீதையை மறவாதவன் [இராவணன்], கரனை உம் மறந்தான் - கரனையும் மறந்து விட்டான், தங்கை மூக்கினை கடிந்து நின்றான் உரனை உம் மறந்தான் - தன் தங்கையினுடைய மூக்கை யறுத்தவனுடைய [இலக்ஷ்மணனுடைய] பலத்தையும் மறந்துவிட்டான், உற்ற பழியை உம் மறந்தான்-தனக்கு நேர்ந்தபழியையும் மறந்து விட்டான், அரனை உம் வெற்றி கொண்ட காமன் அம்பினால் - சிவனையும் ஜெயித்த மன்மதனுடைய பாணத்தினால், முன்னை பெற்ற வரனை உம் மறந்தான் - பூர்வத்தில் தான்பெற்ற வரத்தையும் மறந்து விட்டான், எ - று.

81.—சிறு இடை சீதை என்னும் நாமம் உம் சிந்தை தான் உம் இரண்டு ஒன்று ஆய் உற்று நின்றால் - சிறியஇடையையுடைய சீதை யென்கிற பெயரும் இவன் மனமும் இரண்டும்ஒன்றாய்ப் பொருந்தி யிருந்தால், ஒன்று ஒழித்துஒன்றை உன்னமற்று ஒரு மனம் உம் உண்டு ஒ - அவற்றுள்ஒன்றை யொழி

த்து மற்றொன்றை நினைக்க வேறொருமனமும் உண்டோ [இல்லை] ; மறக்கல் ஆம் வழி மற்று யாதுஓ-(ஆகையால்)இவளை மறக்கத்தக்க வழி வேறேது? கற்றனர் ஞானம் இன்று எல் காமத்தை கடக்கல் ஆம்|ஓ-படித்தவர்களுக்குஞான மில்லா விட்டால் அவர்களால்காமத்தை நீக்க முடியுமோ? எ - று.

82.—நீண்ட எயில்உடை இலங்கை நாதன் - பெரிய மதிலையுடைய இலங்காதிபதியானவன் [இராவணன்] , மயில்உடை சாயலாளை வஞ்சியா முன்னம்-மயிலினது சாயல் போன்ற சாயலை யுடைய சீதாதேவியை வஞ்சித்துக்கொண்டு போவதற்கு முந்தியே [வஞ்சித்துக்கொண்டு போய் அசோக வனத்திற் சிறைவைப்பதற்கு முந்தியே] , இதயம் ஆம் சிறையில் வைத்தான் - தன்னுடைய இதயமாகிற சிறையில் வைத்தான்; (அதனால்) அயில் உடை அரக்கன் உள்ளம் அ வழி மெல்ல மெல்ல வெயில் உடை நாளில் உற்ற வெண்ணெய் போல் வெதும்பிற்று - வேலையுடைய இராவணனுடைய மனமானது அப்பொழுது படிப்படியாய் கோடை காலத்து வெயிலில் பொருந்திய வெண்ணெய்போல வெதும்பிக் கரைந்தது, எ - று.—அன்று - ஏ, அசைகள்.

83.—விதியது வலியினன் உம் - விதியினுடைய பலத்தினாலேயும், மேல் உள வினைவினன் உம் - மேலே நடக்கவேண்டிய காரியங்களாலும், பதி உறு கேடு வந்து குறுகிய பயத்தினன் உம் - இலங்கைபாழாளாகத்தக்க அனிஷ்டமானது வந்து நெருங்கிய பலத்தினாலும், கதி உறு பொறியின் - வேக மிகுந்த யந்திரம்போலவும், கல்வி நோக்கா மதியிலிமறைய செய்த தீமைபோல்-தான் கற்ற கல்வியின் விதிவிலக்குகளை நோக்காத மூடன் பிறர் காணாதிருக்கச் செய்த தீமையைப் போலவும், வெய்ய காம நோய் வளர்ந்தது - கொடியகாம நோயானது விருத்தியாயிற்று ; எ-று.—இம்மையில் பழியையும் மறுமையில் நரகத்தையும் அடையச் செய்தலால் “வெய்ய காமம்” என்றார்.

84.—பொன் மயம் ஆன நங்கை மனம் புக புன்மை பூண்ட தன்மை ஓ-சுவர்ண தேஜசுள்ளசீதையானவள் இவன் மனதிற் புகும்படியான அற்பமாகிய்தன்மையை யடைந்ததனாலோ, அரக்கன் தன்னை அயர்த்தது ஓர் தன்மையால் ஓ - இராவணன் தன்னைத் தான் மறந்ததாகிய வோர் குணத்தினாலோ, மன்மதன் வாளி தூவி நலிவது ஓர் வலத்தன் ஆனான் - மன்மதனானவன் (மலர்க்) கணைசொரிந்து வருத்தத்தக்க வோர் சாமர்த்தியத்தை யுடையவனானான்; வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்து ஏ வதிந்தது அன்று ஏ- (உலகத்தில் எத்திறத்தோருடைய) மனவலியையு மழிக்கத்தக்க சக்தி காமத்தினிடத்திலே குடிகொண்ட தல்லவா; எ - று.

85.—ஆண்டு இருக்கை நின்று எழுந்தனன் - அப்போது (இராவணன்) சிம்மாசனத்தைவிட்டெழுந்தான் ; ஏழு உலகத்துளோர் உம் ஆசி மொழிந்தனர் - ஸப்தலோகத்தி லுள்ளவர்களும் ஆசீர் வசனங்களைச் சொன்னார்கள்; எங்கு உம் சங்க ஓசை முழங்கின - அப்போது எவ்விடத்திலும் சங்கநாதம் முழங்கின ; பூவின் மாரி பொழிந்தன - புஷ்பவருஷங்கள் வருஷித்தன; புறத்தோர் எல்லாம் போயினர் - வெளியி லிருந்து வந்திருந்தவர்கள் எல்லாரும் தத்தமிடத்திற்குப் போனார்கள்; அழிந்துஇழி சிந்தையோடு உம் ஆடக கோயில் புக்கான் - (அப்பொழுது இராவணனும்) மிகவருந்துகின்ற மனத்தோடு தன் பொன் மயமாகிய மாளிகைக்குட் பிரவேசித்தான், எ - று.—தான் நினைத்த பெண்களை யெல்லாம் நினைத்த போதே இலேசாய் அடையுமிவன் இவளை யப்படி யடைய முடியாமையால் மிகவும் மனம்வருந்திக் காமநோயில் அழுந்தியிருந்தா னென்க.

86.—நூக்கல் ஆகலாத காதல் நூறு நூறு கோடி ஆய்பூக்க - (புட்பங்கள் பரப்பிய பெரியமஞ்சத்திற் படுத்திருந்த ராவணனுக்கு) தள்ளக் கூடாதஆசையானது அநேகமாக உண்டாக, வாச வாடை வீசு சீத நீர் பொதிந்த மென் சேக்கை வீ கரிந்து - வாசனை பொருந்திய (வாடைக்) காற்றானதுவீசப்பெற்றதும் குளிர்ச்சி பொருந்திய நீர் [பனிநீர்] தெளிக்கப் பெற்றது மான மெத்தென்ற சயனத்தில் பரப்பிய புஷ்பங்கள் கருக, திக்கயங்கள் எட்டை வென்ற தோள் ஆக்கை தீய - திக்கஜங்கள் எட்டையும் ஜெயித்த தோள்களையுடைய தேகமானது தீயவும், உள்ளம் நைய - மனம் வருந்தவும், ஆவி வேவது ஆயினான் - பிராணன் வேகும் படியாகவும் ஆனான் [பலவகையில் விரக வேதனை யடைந்தான்], எ - று.—“நூறு நூறு கோடி” என்றது அளவிறந்தமை குறித்து நின்றது. “தோள் ஆக்கை” என்பதற்கு தோள்களையும் ஆக்கையையும் எனவும் பொருள் கொள்வர்.

87.—தாது கொண்ட சீதம் மேவு சந்து சந்தம் மென் தளிர் போது கொண்டு அடுத்த போது - பூந்தாதுக்களைக் கொண்ட குளிர்ச்சிபொருந்திய சந்தனத்தையும் அழகிய மிருதுவாகிய துளிர்களையும் புஷ்பங்களையும் கையிற்கொண்டு சைத்தியோபசாரம் செய்யக்கிட்டியபோது, பொங்கு தீ மருந்தினால் வேது கொண்டது என்ன மேனி வெந்து வெந்து - அதிகரிக்கின்ற நெருப்பு மயமான மருந்தினால் வேது கொண்டது போல உடல் மிகவும் வெந்து, விம்மு தீ ஊது வன் துருத்திபோல் உயிர்த்து உயிர்த்து - அதிகரிக்கின்ற நெருப்பை யூதுகின்ற வலிய துருத்தியைப்போல அடிக்கடி பெருமூச்செறிந்து, உயங்கினான் - வருந்தினான் (இராவணன்), எ - று.

88.—யாது தீது எனாது தாவி - சிறிதும் தீமையென்று நினையாமல்அபேக்ஷித்து, தையலாளை - சீதையை, மெய் உற பாவியாத போது இலாத- உடம்போடு பொருந்த நினையாத காலம் இல்லாத, பாவி - பாவியானவன் [இராவணன்], மாழை பானல் வேல் காவி ஆன கண்ணி - மாவடுவெகிர் நீலோற்பலம் வேலாயுதம் இந்திவரம் ஆகிய இவைகளை யொத்த கண்களையுடைய சீதாதேவியின், மேனி காண மூளும் ஆசையால் - திருமேனியைக் காண அதிகரிக்கின்ற ஆசையினால், ஆவி சால நொந்து நொந்து அழுங்குவான் உம் ஆயினான்- உயிர்மிகவும் வருந்தி வருந்தி யழுவானுமாயினான், எ - று.—‘தாவியாது தீதெனாது’ - (மனதை) ஸ்திரப்படுத்தாமலும் பாவமென் றெண்ணாமலும், எனவுமுரைக்கலாம்.

89.—பரம் கிடந்த மாதிரம் பரித்த பாழி யானையின் கரம் கிடந்த கொம்பு ஒடிந்து இரங்க வென்ற காவலன்-பாரந்தங்கிய திக்குகளைத்தாங்கிய பலம்பொருந்திய யானைகளது [திக்கயங்களது] துதிக்கையிற் பொருந்திய தந்தங்கள் முறிந்து வருந்தஅவற்றைச் செயித்தஅரசன் [இராவணன்], மரம் குடைந்த தும்பிபோல் அநங்கன் வாளி வந்து வந்து உரம் குடைந்து - மரத்தைக்குடைந்த வண்டைப் போல மன்மதனுடைய பாணமானது அடிக்கடி வந்து மார்பைத் துளைப்பதனாலே, நொந்து நொந்து உளைந்து உளைந்து ஒதுங்கினன்-(மனம்) மிக நொந்து (உடல்) மிகவருந்திப் புரண்டான், எ - று.

90.—கொன்றை துன்று கோதையோடு ஓர் கொம்பு என் நெஞ்சிடை வந்து நின்றது கண்டது உண்டு என்று அழிந்து அழுங்கு நீர்மையான் - கொன்றைக்காயினிடத்திலே [கொன்றைக்காய்போன்ற கூந்தலிடத்திலே] நெருங்கிய மாலையோடு ஒரு பூங்கொம்பு [கொம்பு போன்ற சீதை] என்மனதினிடத்துவந்து நின்றதைப்பார்த்ததுண்டென்றுமிகவும் வருந்துகின்ற தன்மையையுடையவன் [ராவணன்], மன்றல் தங்கு அலங்கல் மாரன் வாளிபோல மல்லிகை தென்றல் வந்து எதிர்ந்தபோது சீறுவான் உம் ஆயினன் - வாசனைபொருந்திய பூமாலை யணிந்த மன்மதனுடைய பாணத்தைப் போல மல்லிகை மணத்தோடு கூடிய தென்றற் காற்றுவந்து தாக்கியபோது கோபிப்பவனுமாயினன், எ - று.

91.—அன்ன காலை அங்கு நின்று எழுந்து - அப்போது அவ்விடம்விட்டுக் கிளம்பி, அழுங்கு சிந்தையான் - வருந்துகின்ற மனமுடையவன் [இராவணன்], இன்ன ஆறு செய்வென் என்று ஓர் எண் இலான் இரங்குவான் - இன்னபடி செய்வேனென்று ஒரெண்ணமு மில்லாது இரங்குபவனாகி, பாலை யாழ் பழித்த சொல் பொன் அனார் - ஸப்தஸ்வரங்களோடுங் கூடிய வீணாகாதத்தைப் பழித்தசொற்களையுடைய பொன் போலு மேனியுள்ள பெண்கள், மாலை பன்னு கோடி தீபம் எடுக்க - வரிசையாக நெருங்கிய பல தீபங்களைக் கையிலேந்திநிற்க, அங்கு ஓர் சோலையூடு போயினன் - அவ்வருகிலிருந்த ஒரு சோலைக்குட் பிரவேசித்தான், எ - று.—பாலை - ஸ்வரம், அது எழுவகை. 'பாலை' என்பதற்கு அமுதத்தை எனவும் பொருள் சொல்வர்.

92.—(அச்சோலையில்) மாணிக்கம் பனசம் - மாணிக்கத்தாற் செய்யப்பட்ட பலாமரங்களும், மரகதம் வாழை - பச்சை ரத்தினத்தினாற்செய்யப்பட்ட வாழை மரங்களும், வயிரம் தேமா - வச்சிரத்தினாற் செய்த தித்திப்பு மாமரங்களும், ஆணி பொன் வேங்கை - உரையாணிப் பொன்னினாற்செய்த வேங்கை மரங்களும், அரவிந்த ராகம் கோங்கம் - பதுமராகத்தினாற்செய்த கோங்குமரங்களும், நீலம் சேண் உய்க்கும் பூகம் - நீலரத்னத்தினாற்செய்த ஆகாயத்தையளாவிய பாக்கு மரங்களும், குருவிந்தம் சாலம்-குருவிந்தக்கல்லினாற் செய்த ஸாலவிருக்ஷங்களும், வெள்ளி தென்னம் - வெள்ளியினாற்செய்த தென்ன மரங்களும், பாணி தென் பளிங்கு நாகம் - நீருள்ள அழகிய ஸ்படிகக்கல்லினாற்செய்த புன்னைமரங்களும், பவளம் பாடலம் - பவளத்தினாற்செய்த பாதிரி மரங்களும் (இருந்தன); எ - று.

93.—வான் உற நிவந்த செம் கேழ் மணி மரம் துவன்றி வான மீனொடு மலர்கள் தம்மின் வேற்றுமை தெரிதல் தேற்றா தேன் உகு சோலை நாப்பண்-ஆகாயத்தை யளாவ வுயர்ந்த செவ்வையான நிறமுள்ள நவரத்தின மயமான விருக்ஷங்கள் நெருங்கி நக்ஷத்திரங்களுக்கும் அவ்விருக்ஷங் களின் மலர்களுக்கும்பேதந் தெரியப்படாத தேனைச் சொரிகின்ற அச்சோலைநடுவில், செம்பொன்மண்டபத்துள் ஓர் பால் நிற அமளி சேர்ந்தான் பையுள் உற்று உயங்கி நைவான்-சுவர்ணமயமான ஒருமண்டபத்தில் வெண்மைநிறமுள்ள ஓர்மஞ்சத்தில் சேர்ந்தான் [படுத்தான்] காமவருத்தமுற்று மனம் வருந்திச் சரீரம் தளர்பவன் [இராவணன்], எ - று.

94.—கனிகளின் மலரின் வந்த கள் உண்டு களிகள் அன்ன - பழங்களினின்றும் மலர்களினின்றும் பெருகிவந்த மதுவையுண்டமையால் மதுபானிகள் போன்ற, வனிதையர் மழலை இன் சொல் - ஸ்திரீகளுடைய மழலைச்சொற்போன்ற இனியசொற்களையுடைய, கிள்ளை உம் குயில் உம் வண்டு உம் இனியன மிழற்றுகின்ற யாவை உம் - கிளிப்பிள்ளைகளும் குயில்களும் வண்டுகளும் இனியனவாகிச் சப்திக்கின்ற மற்றயாவையும், இலங்கைவேந்தன் முனியும் என்று அவிந்தவாய மூங்கையர்போன்ற - இலங்காதிபதி [இராவணன்] கோபிப்பானென்று தணிந்த [மூடிய] வாயையுடையனவாகி ஊமைகள் போலிருந்தன, எ - று.—இராக்கால மாகையால் பட்சிகள் முதலிய யாவும் கூவாது சும்மாவிருந்தன என்பதாம். அன்ன கிள்ளை எனக்கூட்டுக.

95.—பருவத்தால் வாடை வந்த பசும் பனி - காலஸ்வபாவத்தினால் வாடைக் காற்று வீசவந்த குளிர்ந்த பனியானது, அநங்க பாணம் உருவி புக்கு ஒளித்தபுண்ணில் குளித்தலும்-மன்மதபாணமானது உருவிச்சென்றுஒளித்தபுண்ணில் தாக்கினவுடனே, உளைந்து விம்மி - வருந்தித் தேம்பி, இருது யாது அடா என்று இயம்பினன்-(இப்போது) என்ன இருதுவென்றுசொன்னான் [கேட்டான்]; இயம்பலோடுஉம் வெருவிபோய் சிசிரம் நீங்கி வேனில் வந்து இறுத்தது - சொன்ன வளவில் பயந்து போய் சிசிரருது நீங்கி வஸந்தருது வந்து சேர்ந்தது, எ - று.

96.—வன் பணை மரம் உம் தீய மலைகள் உம் குளிர வாழும் மென் பனி எரிந்தது என்றால் வேனலை விளம்பல் ஆம் ஓ - வன்மையும் பருமனுமுள்ள மரங்களும் தீயையுடையனவாகிய மலைகளும் குளிர்ச்சி யடையும்படி தங்கிய மெல்லிய பனிக்காலமே [சிசிரமே] அவனுக்கெரிந்த தென்றால் வேனிலின் [வஸந்தத்தின்] குணத்தைச் சொல்லக்கூடுமோ? அன்பு எனும் விடம் உண்டாரை ஆற்றல் ஆம் மருந்து உம் உண்டோ - ஆசையென்கிற விஷத்தையுண்டவரைத் தணிக்கத்தக்க மருந்துமுளதோ [இல்லை]; இன்பம் உம் துன்பம் தான்உம் உள்ளத்தோடு இயைந்தஅன்று எ - இன்பதுன்பங்கள் (இரண்டும்) மனதோடு பொருந்தியவை யல்லவா? [மனோவியாதிக்குமருந்தில்லை] எ - று.

97.—தன்மனத்து எழுந்த மையல் வேதனை - தன்மனதிலே தோன்றிய காமாவஸ்தையானது, மாதிரத்து இறுதி காறு உம் - திகாந்தத் தளவும், வெப்

பம் செய்ய - விரகதாபத்தை யுண்டாக்க, (அதனோடு) வேனல்உம் வெதுப்பும்
காலை - வேனிற்காலமும் (இவனுடையவுடலை) வாட்டுகின்ற சமயத்தில்,இது
யாது - இது என்னபருவம் ? இங்கு இதனின் முன்னை சிசிரம் நன்று - இப்
போது இதைப் பார்க்கிலும் முந்திய சிசிரமே நன்றாயிற்று, (ஆதலின்) இத
னை நீக்கி கூதிர் ஆம் பருவம் தன்னை விரைவினில் கொணருதிர்என்றான் - இவ்
வேனிற் பருவத்தைப்போக்கி கூதிர்ப்பருவத்தை சீக்கிரங் கொண்டுவாருங்கள்
என்று சொன்னான் (இராவணன்), எ - று.—கொணருதிர்—கொணா - பகுதி.

98.—கூதிர் வந்து அடைந்த காலை - கூதிர்ப்பருவம் வந்து சேர்ந்தவளவி
ல், குவவு திண் தோள் கொதித்தன - திரண்ட பலமுள்ள தோள்கள் காமஜ்
வரத்தாற்கொதித்தன ; சீதம் உம் சுடும் ஓ - குளிர்ச்சியாகிய இதுவும்சுடுமோ
[சுடாது],(ஆகையால்) இது முன்னை சிசிரம் ஏ என்றான்-இப்பருவம் முந்திய
சிசிரஇருதுத்தான் என்றுசொன்னான் (இராவணன்) ; (அப்போது)ஆதியாய்
அருள் அலது இயற்ற அஞ்சும் அன்று ஏ என்ன - எங்கள் தலைவனே ! உன்
னுடைய ஆக்கினை யில்லாததைச்செய்ய (எங்கள் மனம்) அஞ்சுமல்லவா என்
று பரிசாரகர் சொல்ல, யாது உம் இங்கு இருது ஆகாது - இப்போது எந்த
இருதுவும் கூடாது (ஆகையால்) , யாவை உம் அகற்றும் என்றான் - எல்லா
இருதுக்களையும் நீக்குங்கள் என்று சொன்னான் (இராவணன்), எ - று.

99.—என்னல் உம் இருது எல்லாம் ஏகின - என்று சொன்னவளவில்
இருதுக்க ளெல்லாம் சென்றன ; யா உம் தம்தம் பன்ன அரும் பருவம்
செய்யா யோகிபோல் பற்று நீத்த - ஸகலப்பிராணிகளும் தத்தம்முடைய
சொல்லுதற்கரிய பருவங்களைச் செய்யாது யோகிகளைப்போல எல்லாப்பற்
றையும் விட்டன ; பின்னர் உம் உலகம் எல்லாம் பிணி முதல் பாசம் வீசி
துன்ன அரும் தவத்தின் எய்தும் துறக்கம்போல் தோன்றிற்று - மேலும்
உலகமுழுதும் வியாதி முதலிய பாசங்களை ஒழித்து சேர்தற்கரிய தவத்தி
னால் [தபோபலத்தினால்] அடையத்தக்க ஸ்வர்க்கம்போலக் காணப்பட்டது,
எ - று.

100.—கூலத்து ஆர் உலகம் எல்லாம் குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க-
நீர்க்கரையோடு பொருந்திய உலகமுழுதும் சீதோஷ்ணங்களை நீங்கியிருக்க
வும், தார் அரக்கன் நீல மேனி நெய் இன்றி எரிந்தது - மாலையையணிந்த
ராவணனுடைய கறுத்தவுடம்பானது நெய்யில்லாமலே யெரிந்தது [இருது
க்களெல்லாம் தம்செயலற்றும் இராவணன் விரகதாபம் நீங்கவில்லை என்
றபடி] ; காலத்தால் ஆவது ஒன்றோ ! - இவ்விஷயத்தில் இருதுக்களா
லே ஆவது ஓர் காரிய முண்டா ? காயத்தால் கனலும் வெம் தீ - காம
த்தினால் மூளுகின்ற கொடியதீயானது, சீலத்தால் அழிவது அன்றி செய்ய
தான் ஆவது உண்டோ - நல்லொழுக்கத்தினால் [மனத்தூய்மையால்] அவி
யத்தக்கதே யல்லாமல் வேறெதனாலும் அதை யவிக்க முடியுமா [முடி
யாது], எ - று.

101.—நாரம் உண்டு எழுந்த மேகம் - நீருண்டெழுந்த மேகமும், தாம

ரைவளையம் - தாமரை இதழ்களும், நாறுசாரம் உண்டு இருந்த சீத சந்த
னம் - பலவகை வாசனைத்திரவியங்களைக் கொண்டிருந்த குளிர்ச்சிபொருந்
திய சந்தனமும் [கலவைச்சாந்தும்], தளிர் - இளந்துளிர்களும், மென்தாது
ஓடு - மிருதுவாகிய மகரந்தங்களும், ஆரம் - முக்தாஹாரங்களும், உண்டு
இருந்தும் - அணிந்திருந்தும், சிந்தை அயர்கின்றான் - மனம் வருந்துகின்ற
வன் [இராவணன்], அயல் நின்றாரை - அருகிலிருந்தவர்களை (நோக்கி),
ஈரம் உண்டு என்பர் ஓடி இந்துவை கொணர்மின் என்றான் - குளிர்ச்சி
யாயிருக்கும் என்று சொல்லுவார்கள் (ஆகையால்) விரைவிற் சென்று சந்
திரனைக் கொண்டு வாருங்கள் என்று சொன்னான், எ - று.

102.—வெம் சினத்து அரக்கன் ஆண்ட வியன் நகர் மீது போதும் நெ
ஞ்சிலன் ஒதுங்குகின்ற நிறை மதியோனை நோக்கி - வெவ்விய கோபத்தை
யுடைய அரக்கனானவன் [இராவணன்] ஆட்சி செலுத்திய பெருமை
பொருந்திய நகரத்துக்கு மேலே [லங்காநகரத்துக்கு மேலே] செல்லத்தக்க
மனோதைரியமில்லாதவனாய் ஒரு புறமாய்ச் செல்லுகின்ற நிறைந்தகலைகளை
யுடைய சந்திரனைப் பார்த்து, அரசன் நின்னை அழைத்தனன் - அரசன்
[இராவணன்] உன்னைக் கூப்பிட்டான், அஞ்சலை வருதி என்ன - பயப்ப
டாது வரக்கடவாய் என்று (அயல் நின்றார் சென்று) சொல்ல, அ சந்திரன்
சஞ்சலம் துறந்து உதிக்கல் உற்றான் - அந்தச் சந்திரனானவன் மனக்கவலை
நீங்கிப் பிரகாசிக்கத் தொடங்கினான், எ - று.

103.—உடைந்து வயிரம் உற்று சென்றோர் - (பகைவற்குத்) தோற்று(தரு
ணம் நேரும்போது அவனை வருத்த வேண்டி மனதில்) வயிரங்கொண்டு
(ஓடிப்) போனவர்கள், செயிர் உற சலந்தரு ஆண்டு ஓர் தெய்வு வந்து உற்
றபோது - (அப்பகைவற்கு) ஊனம் மிகப்பொருந்தியதாகிய ஓர் துன்பம் நே
ரிட்டபோது, வலியவன் செல்லும் ஆ போல் - அப்பகைவன்மேற் செல்வது
போல, உயிர் தெற காலன் என்பான் ஒத்தனன் - (இராவணனால்) முன்பு
மனம் வருந்தி யோடிப்போன சந்திரனானவன் (அவ்விராவணனது) உயிரை
வருத்த யமனை யொத்தவனாகி, அயிர் உற கலந்த நல் நீர் ஆழிநின்று ஆழி
நீத்து உதயம் செய்தான் - சிறுமணல் மிகவும் பொருந்திய நல்ல நீரையுடைய
சமுத்திரத்திலிருந்து அந்தச்சமுத்திரத்தைக் கடந்து உதயமானான், எ - று.

104.—பூராவ அரு கதிர்கள் எங்கும் பரப்பி மீ படர்ந்து - சொல்லுதற்
கரிய (சீத) கிரணங்களை எவ்விடத்தும் [பத்துத்திசையிலும்] பரவச் செய்து
(அவ்விலங்கா) பட்டணத்தின்மேலே சென்று, வானில் தராதலத்து எவர் உம்
பேணா அவனை ஏ சலிக்கும் நீரால் - சுவர்க்கலோகத்திலும் பூலோகத்திலும்
உள்ள யாவரும் விரும்பாத அவனொருவனையே [இராவணனையே] வருத்து
கின்ற தன்மையால், அரா அணை துயிலும் அண்ணல் காலம் ஓர்ந்து ஆற்
றும் நோக்கி இராவணன் உயிர்மேல் உய்த்த திகிரி உம் என்னல் ஆனான் -
பாம்பணையிற் பள்ளி கொள்ளும் பெருமையிற் சிறந்தோன் [ஸ்ரீமந்நாராய
ணன்] கால மறிந்து சமயம்பார்த்து இராவணனுடைய பிராணன்மேற்செ
லுத்திய சக்கராயுதமென்று சொல்லத்தக்கவனானான் (அச்சந்திரன்), எ-று.

105.—அருகு உறு பாலின் வேலை அமுது எலாம் அளைந்து வாரி பருகினன் பரந்து பாய்ந்த நிலா சுடர் பனி மென் கற்றை - தன்னருகிலுள்ள பாற்கடலின் அமிர்தத்தை யெல்லாம் அளைந்து வாரியுண்டு பரவிச்சென்ற சந்திர கிரணங்களுடைய குளிர்ந்த மெதுவாகிய ஸமூகமானது, நெரி உறு புருவம் செம் கண் அரக்கற்கு - நெரித்தபுருவங்களையும் சிவந்த கண்களையுமுடைய அரக்கனுக்கு [இராவணனுக்கு], நெருப்பின் நாப்பண் உருகிய வெள்ளி அள்ளி வீசினால் ஒத்தது - தீ நடுவே (தீர் போல்) உருகிய வெள்ளியை வாரியிறைத்தாலதை யொத்திருந்தது, எ - று.

106.—மின் நிலம் திரிந்தது அன்ன விழு நிலா - மின்னலானது பூமியில் வந்து திரிந்து கொண்டிருந்ததை யொத்த பெருமை தங்கிய நிலவானது, சென்னல் அம் கழனி சூழ்ந்த மிதிலை நாடன் திருமகள் செவ்வி கேளா நல் நலம் தொலைந்து சோரும் அரக்கனை - செம்பாப் பயிருள்ள அழகிய கழனிகள் சூழ்ந்த மிதிலை நாட்டரசனுடைய [ஜனகமஹாராஜாவினுடைய] செல்வப்புத்திரியினது [சீதையினது] வடிவழகைக் கேட்டு தனது நல்ல பெருமை கெட்டுவாடுகின்ற அரக்கனை [இராவணனை], நாள் உம் தோலா துன்னலன் ஒருவன் பெற்ற புகழ் என சுட்டது - ஒருபோதும் தோல்வியடையாத சத்துருவொருவன் பெற்ற கீர்த்திபோலே சுட்டது, எ - று.

107.—கரும் கழல் காலன் அஞ்சும் காவலன் - (அப்போது) பெருமை பொருந்திய வீரகண்டை யணிந்த யமனும் அஞ்சத்தக்க அரசனானவன் [இராவணனானவன்], கருத்து நோக்கி தரும் கதிர் சீத யாக்கை சந்திரன் தருதிர் என்ன - எனது கருத்தறிந்து குளிர்ச்சியைத் தரத்தக்க கிரணங்களோடுகூடிய குளிர்ந்ததேகத்தையுடைய சந்திரனை யழைத்துக்கொண்டுவந்து தாருங்கள் என்ன, முருங்கிய தணலின் மூரி விடத்தினை முகக்கும் சீற்றத்து அரும் கதிர் அருக்கன் தன்னை யார் அழைத்தீர்கள் என்றான் - நன்றாய்க்காய்ந்த தணலையும் பலத்த விஷத்தையும் அள்ளி வீசுகின்ற கோபத்தையுடைய சூரியனை யார் அழைத்துக்கொண்டு வந்தீர்கள் என்று சொன்னான், எ - று.—காவலன் என்றான் எனக.

108.—அ வழி சிலதர் அஞ்சி - அப்பொழுது பரிசாரகர்கள் பயந்து, ஆதியாய் - (எங்கள்) தலைவனே! அருள் இல்லாரை இ வழி தருதும் என்பது இயம்பல் ஆம் இயல்பிற்று அன்று - உன் கட்டளையில்லாதவர்களை இவ்விடத்தில் கொண்டுவருவோ மென்பது சொல்லத்தக்க தன்மையையுடையதல்ல; செவ்வழி கதிரோன் என்று உம் தேரின்மேல் அன்றி வாரான் - சிவந்த காந்தியுள்ள சூரியன் எப்போதும் தேரின்மேல் அன்றி வரமாட்டான்; திங்கள் வெவ் வழித்து எனின் உம் விமானத்தின் மேலது என்றார் - சந்திரன்கொடூரமானதாயினும் விமானத்தின்மேலிருக்கிறது என்றுசொன்னார்கள், எ - று.—சூரியன் தேரின்மேலும் சந்திரன் விமானத்தின்மேலும் ஏறிச்சஞ்சரிக்கிறார்கள் என்பது புராணஸித்தம்.

109.—உடுபதியே - சந்திரனே! தேயாநின்றாய் - உடல் தேய்கிறாய்! மெய் வெளுத்தாய் - தேகம் வெளுத்திருக்கிறாய்; உள்ளம் கறுத்தாய் - அகம் கறுத்திருக்கிறாய்; நிலை திரிந்து காயாநின்றாய் - உன்குணம்மாறுபட்டு எரிகிறாய்; (ஆதலால்), ஒரு நீ உம் - (என்னைப்போல்) நீயும், கண்டார் சொல்ல கேட்டாய் ஓ - (அச்சீதையைப்) பார்த்தவர்கள் (அவள் வடிவழகை) எடுத்துச் சொல்லக் கேள்விப்பட்டாயோ? (நீயும் இங்ஙனமாயின்), பாயாநின்ற மலர் வாளி பறியாநின்றார் இன்மையால் ஓயாநின்றேன் - (என்னகத்தில் வந்து) அழுந்தித் தைக்கிற புஷ்பபாணங்களை [மன்மத பாணங்களை] பிடுங்குகிறவர்கள் இல்லாமையினாலே வருந்துகின்ற என்னுடைய, உயிர் காத்தற்கு உரியார் யாவர் - பிராணனைக் காப்பாற்றுவதற் குரியவர்கள் யாரிருக்கிறார்கள் [ஒருவருமில்லையே], எ - று.

110.—(ஓ சந்திரனே!), என் ஆர் உயிர்க்கு கூற்று ஆய் நின்ற குல சனகி குவளை மலர்ந்த தாமரைக்கு தோற்றாய் - எனது அரிய வுயிருக்கு யமனாகிநின்ற நற்குடியிற் பிறந்த ஜானகியினுடைய குவளை மலர்கள் [குவளைமலர்கள்போன்ற கண்கள்] மலரப்பெற்ற தாமரைமலருக்கு [தாமரைமலர் போன்ற முகத்துக்கு] நீ தோல்வியடைந்தாய்; (அதனால்) உள்ளம்கறுத்தாய் அகம் கரிந்தாய் [களங்கத்தோடு கூடியிருக்கிறாய் என்றபடி]; மெலிந்தாய் (நாளுக்கு நாள்) மெலிவடைந்தாய் [இது கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரன்கலை தேய்வைக்குறித்தது], வெதும்ப தொடங்கினாய் - வெப்பம் கொள்ளத்தொடங்கினாய்; மாற்றார் செல்வம் கண்டு அழிந்தால் வெற்றி ஆக வற்று ஆம்ஓ - பகைவர் செல்வங்கண்டு மனமழிந்தால் அது ஒருவர்க்கு ஜயமாகத்தக்க வன்மையையுடைய தாகுமா, ஆற்றார் ஆகில் தம்மைகொண்டு அடங்கார் ஓ - ஒருவர் பிறர்செல்வங்கண்டு பொறாராயினும் தம்மறிவைக்கொண்டாவது அடங்கமாட்டார்களா, எ - று.

111.—என்ன பன்னி இடர் உழவா - என்று பல படியாகப்பேசித் துன்புற்று, இரவோடு இவனை கொண்டு அகற்றி - இராத்திரியோடு இச்சந்திரனைநீக்கி, முன்னை பகல் உம் பகலோன் உம் வருக என்றான் - முன்னிருந்த பகற் பொழுதும் சூரியனும் வரட்டும் என்று சொன்னான் (இராவணன்); மொழியா முன் உன்னற்கு அரிய உடுபதி உம் இரவு உம் ஒழிந்த - (அப்படியவன் சொல்லிச்) சொல்லாததற்கு முன்னமே நினைத்தற்கரிய சந்திரனும் இராப்பொழுதும் நீங்கின; (பின்பு), பன்னற்கு அரிய பகலவன் உம் பகல் உம் ஒரு நொடியில் வந்து பரந்த - (புகழ்ந்து) பேசுவதற் கரிய சூரியனும் பகற்பொழுதும் ஒருநொடிப் பொழுதில்வந்து வியாபித்தன, எ - று.

112.—அருக்கன் எய்த - சூரியன் உதிக்க, அவிர் செம் பொன் உருக்கு அனைய கதிர் பாய - பிரகாசிக்கின்ற செம் பொன்னை உருக்கியதை யொத்த அதனுடைய கிரணங்கள் பரவியதனால், உயர் கமலம் - புஷ்பங்களிலுயர்ந்த செந்தாமரையானது, இருக்கின் மொழியார் எரி முகத்தின் ஈந்த நெய்யின் அனல் போல் விரிந்தது - ருக்வேத பாடகர்களாகிய ஹோதாக்கள் என்னும் ருத்துவிக்குகள் அக்னிமுகத்திலே ஆஹுதி செய்த நெய்யினாலே ஜ்வாலை பரவியதுபோல மலர்ந்தது; சேது ஆம்பல் - செவ்வல்லி மலர்கள், அமை

ந்து அடங்கி வாழா - உள்ளதில் திருப்தியடைந்து அடக்கமாய் வாழாமல,
அடாத பொருள் எய்தி செருக்கி - தகாதபொருளைச் சம்பாதித்து கர்வித்து,
இடை ஏ திரு இழந்த சிறியோர்போன்ற - இடையே அச்செல்வத்தையிழந்த
அற்பரையொத்தன [அடங்கிக்குவிந்தன], எ - று.—கமலம், சாதியொருமை.
புஷ்பங்களில் தாமரை உயர்ந்த தென்பதை,—

"பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்பதனும் ;

"பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற் கருமுனியா யானைக் கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா"

என்னும் கவிசாகரப் பெருந்தேவனார் செய்யுளா னுமறிக.

ருத்து விக்குகள்—யாகஞ்செய்விப்போர்.

113.—அல் ஆண்டான் - இரவுக் கதிபதியாகிய சந்திரன், நாணி-வெட்கி,
நின்ற ஒளி மழுங்கி - நிலைபெற்ற காந்தி மழுங்கி, நடுங்காநின்ற உடம்பினன்
ஆய் - நடுங்குகின்ற உடம்பையுடைய வனுகி, சேணினின்று புறம் சாய்ந்து-
நடுவானத்திருந்து புறஞ்சாய்ந்து, கங்குல் தாரம் பின் செல்ல - இரவாகிய
மனைவி பின்தொடர, பூணின் வெய்யோன் ஒரு திசைஎ புகுதபோவான்-(வட்
டமாகிய) ஆபரணம் போன்ற சூரியன் ஒரு திக்கிலே யுதிக்கும்படிவர, புகழ்
வேந்தர் ஆணை செல்ல நிலை அழிந்த அரசர் போன்றுன் - புகழ்பெற்ற அரச
ரது ஆக்கினை நடக்க தம்நிலையழிந்த அரசரை [பராஜிதரானவரசரை] யொத்
தான் ; எ - று.—ஆணை - ஆஜ்ஞா சப்த பவம்.

114.—மணந்த பேர் அன்பரை மலரின் சேக்கையுள் புணர்ந்து - கலி
யாணஞ்செய்த மிக்ககாதலையுடைய தங்கணவரை புஷ்பசயனத்தில் சேர்ந்து,
அவரிடை ஒரு வெகுளி பொங்கலால் - அந்நாயகரிடத்துத் தமக்கு ஒருகோ
பமுண்டானதனுல், கனவின் உம் ஊடல் தீர்ந்திலர் கணம் குழை மகளிர்கள்-
கனுவிலும் ஊடல் தீரப்பெருதவராகிய பலவாய்த்திரண்ட காதணிகளை யணி
ந்த ஸ்திரீகள் [குலஸ்திரீகள்], கங்குல் நீங்கிட உணர்ந்திலர் - இரவுநீங்கவும்
தூக்கம் தெளியப் பெருதவரா யிருந்தார்கள், எ - று.—அகாலத்தில் பொழு
துபுலர்ந்தமையின் இவர்க ளதையுணரா துறங்கிக்கிடந்தன ரெனவும், யதாகா
லத்தில் பொழுதுபுலர்ந்தா லிவர்க ளவ்வா றுறங்கிக் கடவாரெனவுங் கூறிய
தாம்.

115.—தலைவர் நீங்கலால் - தங்கணவர் தம்மை விட்டுப் பிரிந்ததினுல்,
கொள்ளையின் அலர் தரு குவலை நாள் மலர் கள் உகுவன என கலுழும் கண்
ணினர் - மிகுதியாக மலர்ந்த புதிய நீலோற் பலமலர்களிலிருந்து தேன்துளி
கள் சிந்துவனபோல நீர்த்துளிகள் சிந்தப்பெற்ற கண்களையுடையவர்களும்,
தள்ளுறும் உயிரினர்-அலைகின்ற பிராணனை யுடையவர்களுமாகிய ஸ்திரீகள்,
நள் இரவிடை உறும் நடுக்கம் நீங்கலர் - பாதியிராத்திரியில் பொருந்திய மெ
ய்விதிர்ப்பு நீங்கப் பெருதவர்களாகி யிருந்தார்கள், எ - று.

116.—அணை மலர் சேக்கையுள் ஆடல் தீர்ந்தனர் - (மெத்தென்ற)

பஞ்சணையையும் (காம்பரிந்த) மலர்களையு முடைய சயனத்தினிடத்தில் சரச
ங்களைச்செய்து முடித்தவர்களாய், பணைகளை தழுவிய பவளவல்லி போல் இன்
உயிர் துணைவரை இணைமலர் கைகளின் இறுக தழுவினர்-பருத்தகிளைகளைச்சுற்
றியபவளக்கொடிபோல தமதுஇனிய பிராணநாயகரை இரண்டாகியபூப்போ
ன்ற கைகளினுலே அழுந்தக்கட்டி யணைத்துக்கொண்டு, சிலர் துயில்கின்றார்-
சிலஸ்திரீகள் தூங்கினுர்கள், எ-று. சேக்கை-படுக்கப்படுவது, சே-பகுதி, கு-
சாரியை, ககரத்தோற்றமும் உகரக்கேடும் சந்தி, ஐ-செயப்படுபொருள்விகுதி.

117.—தெளிவு இல இன் துயில் விளையும் சேக்கையுள் களிகளை நிகர்த்த
ன களி நல் யானை - தெளிவிலவாகி இனியதூக்கமானது [காட நித்திரையா
னது] உண்டாகின்ற படுக்கையிலே (படுத்துத்தூங்குகின்ற) கட்குடியரை
நிகர்த்தனவாகிய மதவெறியை மிகுதியாகவுடைய யானைகள், அளிஇனம்கட
ம்தொறும் ஆர்ப்ப - வண்டின் கூட்டங்கள் மதஸ்தானங்கள்தோறும் சப்திக்
கவும், ஆய் கதிர் ஒளிபட - சூரியகாந்தி தம்மேற்படவும், உணர்ந்திலஉறங்குகி
ன்றன-கண்விழியாதனவாகித் தூங்குகின்றன, எ - று.

118.—அரும் துறை நிரம்பிய உயிரின் அன்பரை பிரிந்து உறைதரும்
குல பேதைமாரின் - அருமையாகிய (அகப்பொருட்) துறைகளில் [ரதிரஹ
ஸ்யங்களில்] சமர்த்தரான தம் பிராணநாயகரைப் பிரிந்து (தம்முயிர் நிற்க
ஒளி யிழந்து) வசிக்கின்ற குலஸ்திரீகளைப்போல, விரிந்து உறை அறை
தொறு உம் - விசாலமாயிருக்கின்ற (மாளிகைகளின்) இடங்கள் தோறுமு
ள்ள, விளக்கம் யாவை உம் எரிந்து இழுது அஃகல ஒளி இழந்தன - தீபங்க
ளெல்லாம் எரிந்து நெய் குறையாதனவாய் காந்தியை இழந்து நின்றன,எ-று.

119.—வைகறை மலரும் மா மலர் - விடியற்காலத்தில் மலருகின்ற பெ
ருமைபொருந்திய புட்பங்கள், புனைந்து இதழ் உரிஞ்சுறு பொழுது புல்லி உம்
வனைந்தில - அலங்கரித்து இதழ்கள்விரியும் காலம் சேர்ந்தும் அலங்காரஞ்செ
ய்யாதனவாய் [மலராமல்], நனந்தலை அமளியில் துயிலும் நங்கைமார்-
சயனத்தினடுவில் நித்திரைசெய்கின்ற பெண்களது, அனந்தரின் நெடும்
கணோடு ஒத்த - நித்திரையையுடைய விசாலமான நேத்திரங்களுக்குச் சமா
னமாயிருந்தன ; எ - று.—வைகறை = விடியல், வைகு அறை எனப்பிரி
த்து 'அற்றை நாட்பொழுதுகழிக்கறுதல்' எனப்பொருள்கொள்க. வைகறைக்
வைகல்—துயிலுதல், அதுயிகாரத்தால் வைகுஎனுநின்றது, அஃது அறல்
அறுதல் அறையாயிற்று, 'பொறியறை' என்றாற்போல ; இது தொழிலாகு
பெயர் எனக்கோடலுமொன்று.

120.—நிச்சயம் பகலும் - உண்மையாகப் பகலாகியும், தம் இமைகள்
நீக்கிலர் - தமது இமைகளைத் திறக்காதவராய், பிச்சை உம் இடுதும் என்
உணர்வு பேணலர் - (யாசகர்க்குப்) பிச்சை கொடுப்போமென்று [illegible]
[illegible] விரும்பாதவராய், இச்சையில் துயில்வதற்கு யாவர் [illegible]
இஷ்டப்படி தூங்குவதனுல் எல்லாருடைய கண்களும் [illegible] நெடும
னைவாயில் ஆன - லோபிகளுடைய பெரிய வீடுகளின் (தலை) வாயிலுக்குச்
சமானமாயின, எ -

கிஷ்கிந்தாகாண்டம்.

பம்பைப்படலம்.

[சஅ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

15.—தான் - தான், உயிர் உற - (உடலேயன்றி) உயிரும் ஒன்றுபடும்படி, தனி - வேற்றுமை யற, தழுவும் பேடையை - காடாலிங்கனஞ்செய்யும் பெண்ணன்னத்தை, ஊன் உயிர் பிரிந்த என பிரிந்த - உடலினின்றும் உயிர்பிரிந்ததுபோல் பிரிந்த, ஓதிமம் - (ஆண்) அன்னமானது, வான் - சுவர்க்கத்தினின்றும் வருகிற, அரமகளிர்தம் - தெய்வப்பெண்களுடைய, வயங்கு - விளங்குகின்ற, நூபுரத்து - காற்சிலம்புகளின், தேன்உகு - தேன்சொட்டுகின்ற, மழலையை - குதலைச்சொல்லை [இனிய வோசையை], செவியின் ஏற்பது-காதிற்கொள்ளப்பெற்றது, எ - று.

16.—ஈறு இடல் அரிய - முடிவிடக்கூடாத, மால் - பெரிய, வரைநின்று - மலைகளிலிருந்து, ஈர்த்து - இழுத்துக்கொண்டு, இழி - பெருகுகின்ற, விரை - வாசனையுள்ள, ஆறு இடு - ஆறுகளாலிடப்பட்ட, அகில் ஆரம் ஆதி ஆ- அகிற்கட்டை சந்தனக்கட்டை முதலியவாக, ஊறிட - அந்நீரில் ஊறுவதால், [உரைக்கப்பட்டுவருதலால்], ஒள் நகர் - ஒளிதங்கிய நகரங்களில் [செல்வமிகுந்த நகரங்களில்], உரைத்த - அரைத்த, ஒள் - ஒள்ளிய [வாசனை சேர்த்த], தள சேறு இடு - சாந்தின்குழம்பிடப்பட்ட, பரணியின் - செப்புப்போலே, திகழும் ரேரது - விளங்கும் நேர்மையயுடையது ; எ - று—"பாணியின்" எனப் பாடங்கொண்டு நீரைப்போல எனவுமுரைக்கலாம்.

17.—(அப்பொய்கையில்), நவ்வி நோக்கியர் - மான் நோக்குப்போன்ற நோக்கையுடைய பெண்களது, இதழ் நிகர் - இதழோடொத்த, குமுதத்து உறும் தேன் - குமுதங்களின் மணமுள்ள மதுவை, வவ்வும் மகரம் - கிரகிக்கின்ற மகரமீன்கள், (நவ்வி நோக்கியர் இதழ் உறும் தேன் வவ்வும்) மாந்தரின் - அம்மான் விழியாரது நல்ல அதரா மிருதத்தை விரும்புகின்ற ஆடவர்போல், களி மயக்கு உறுவன - களிப்பினால் மயங்குவன ; கரண்டம்-நீர்க்காக்கைகள், எவ்வம் நீங்கிய - குற்றமற்ற, பிறப்பினோடு இறப்புஇலை என்ன- பிறப்பும் இறப்பும் இப்படியே (உயிர்களுக்கு மாறி மாறி வருகின்றன) என்று தெரிவிப்பனபோல, கவ்வும் மீனொடு - வாயிற் கவ்விய மீன்களோடு, முழுகுவ எழுவன - முழுகிக்கொண்டும் எழுந்து கொண்டு மிருக்கின்றன, எ - று. —மாந்தர்-நித்தியபதுவசனம். குமுதம் - அல்லி. அப்பொய்கையில் என்பது வருவித்துரைக்கப்பட்டது. நீர்க்காக்கையானது பலகால் மூழ்கிக் கிளம்புகையிலும் தன் வாயிற் கவ்வியதை நெகிழ விடாததுபோல அறிவுடையார் கருமவசத்தால் மாறிமாறிப் பலபிறப்பும்பிறக்க நேரினும் தமது மெய்ஞ்ஞானத்தைக் கைசோரவிடார் என்பது தோன்ற "எவ்வம் நீங்கியபிறப்பினோடிறப்பு" என்றார். 'நவ்வி' - முதலாகுபெயர். 'மகரம்' - பால்பகாவஃறிணைப் பெயர்.

18.—கமல யானை அன்னாற்கு - கமலத்தைக் கொண்டுநின்ற யானையையொத்த ஸ்ரீராமபிரானுக்கு, அந்த அழி நறும் கமலத்தவளை நகிலம் - வாசனை பொருந்திய நல்ல தாமரைமலரில் உள்ள அந்த இலக்குமியை [சீதையை] தேடிக் கொடுக்குந் திறமற்றேம் ; (ஆயினும்) ஆவது செய்தும் என்று அருளி - நம்மாலியன்றதை [உபகாரங்களை] செய்வோமென்று இரங்கி, திவளுவனும்படியாக, அன்னங்கள் - அன்னப்பறவைகள், திருநடைகாட்டுவ- அழகிய நடையை [அல்லது அச்சீதாப்பிராட்டியாரின்நடையழகைக்] காட்டாநிற்கும்;குவளை செம் கண் காட்டுவ-நீலோற்பலமலர்கள் செவ்வியகண்ணழகைக் காட்டாநிற்கும் ; குமுதம் துவர் இதழ் காட்டுவ - செவ்வல்லிமலர்கள் பவளம்போற்சிவந்த அதரத்தினழகைக் காட்டாநிற்கும் ; எ - று.—அதரம்=கீழுதடு.

19.—செய் கை அன்னங்கள் ஏந்திய சேடியர் என்ன - அழகிய கையினிடத்திலே அன்னங்களை யேந்திய தோழிப் பெண்களைப்போல், பொய்கை அன்னங்கள் ஏந்திய பூங்கொம்பர் பொலிய - அப்பொய்கையில் வாழுமன்னங்களை யேந்திய அழகிய (கயப்பூக்) கொடிகள் விளங்காநிற்க, வான் அரமகளிர் - பெருமைபொருந்திய தெய்வப் பெண்கள், பெய் கலன்களின் இலங்கு ஒளி - அணியப்பெற்ற ஆபரணங்களினது விளங்குகின்ற காந்தியானது, மருங்கொடு பிறழ - இடையோடுமின்ன, வைகலும் புனல் குடைபவர்- நாடோறும் ஜலக்கிரீடை செய்பவர் (ஆவர்) [ஜலக்கிரீடையாடா நிற்பர்] ; எ - று.—'ஆவர்' என ஒருவினை வருவித்து முடிக்க.

20.—பொங்கி ஆலும் மீன் இனம் - சந்தோஷித்துத் துள்ளுகின்ற மீன் கூட்டங்கள், வஞ்சி - கொடிகளையுடைய [கொடிகள் படர்ந்த], கூலம்-கரையிலுள்ள, மர்மரத்து - மாமரங்களில், இரும் சிறை புலர்த்துவ குரண்டம்- பெரிய சிறகுகளை யுலர்த்திக்கொள்வனவாகிய கொக்குகள், எலும் நீர் - (அப் பொய்கையில்) பொருந்திய தீர்த்தத்தில், இடை இடை - நடு நடுவே, நிழல் எறித்தலின் - தந்நிழலை வீசுதலாலே [பிரதி பிம்பங்காட்டலால்], படிகம் போலும் வார் புனல் புகுந்து உள ஆம் என - ஸ்படிகம் போன்ற [நிர்மலமாய்த் தெளிந்த] மிகுந்த அந்த தீர்த்தத்திலே பிரவேசித்திருக்கின்றனவென்று நினைத்து, வலம்வர அஞ்சின - ஸஞ்சரிக்கப்பயந்தன, எ - று.—அலம்வர எனப்பிரித்தாலும் இதுவேபொருளாம்.

21.—அங்கு - அத்தடாகத்தில், ஓர் பாகத்தில் - ஒருபக்கத்திலே, அஞ்சன மணி நிழல் அடைய - நீல ரத்தினங்களின் சாயை பரவுவதனாலும், பங்கு பெற்று ஒளிர் பதுமராகத்து ஒளி பரப்ப - (மற்றொருபக்கத்தில்) பிளவுபட்ட பதுமராகக்கற்களின் காந்தி வியாபிப்பதனாலும், கங்குல் உம் பகல் உம் என - இரவும் பகலும் போலே, பொலிவு எய்து கரைய வாளம் - விளங்குகின்ற கரையினிடத்தவாகிய சக்கிரவாளபக்ஷிகள், மங்கைமார் தட முலை என பொலிவ - யுவதிகளது அடிபரந்த ஸ்தனங்களைப் போலே விளங்குவன, எ - று.

22.—வலி நடத்திய வாள் என - பலத்தால்வீசிய வாளாயுதங்களைப் போல, வாளைகள் பாய - வாளைமீன்கள்பாய, நிலை நடத்தியதிரைதொறும்-

மேன் மேலும் செல்லுவனவாகிய அலைகளெல்லாம், உருள்வன நீர்நாய்-உருள்வனவாகிய நீர்நாய்கள், கலி நடை கழை கண்ணுளர் என - சதங்கையின் ஒலியையுடைய நடையோடுகூடிய கழைக்கூத்தரைப்போலே, நடம் கவின - நடனஞ்செய்ய, பொலிவு உடைத்து என - (அந்நடனம்) நன்றாயிருக்கிறதென்று, தேரைகள் புகழ்வன போலும் - தவளைகள் புகழ்வனவற்றையொத்திருக்கின்றன, எ - று.

23.—அன்னது ஆகிய அகல் புனல் பொய்கையை அணுகி - அப்படிப்பட்டதாகிய விரிந்த நீரையுடைய தடாகத்தைச் சேர்ந்து, கன்னி அன்னம் உம் கமலம் உம் முதலிய கண்டான் - இளமைபொருந்திய அன்னப்புட்களும் தாமரை மலர்களும் முதலியவற்றைக்கண்டு, தன்னின் நீங்கிய தளிரியற்கு உருகினன் - தன்னைப் பிரிந்த துளிர்போலும் மேனியை யுடையவள் [சீதை] பொருட்டு உடலுருகி, தளர்வான் - மனந்தளர்பவன் [ஸ்ரீராமன்], உன்னும் நல் உணர்வு ஒடுங்கிட - (நன்மைதீமைகளை) நினைத்தற்குரிய பகுத்தறிவானது அடங்க, புலம்பிடல் உற்றான் - புலம்பத் தொடங்கினான், எ - று.—அன்னது- குறிப்புவினையாலணையும்பெயர். 'கன்னி' - இளமையை யுணர்த்தும்போது உரிச்சொல், இளம்பெண்ணை யுணர்த்தும்போது கந்யா என்னும் ஆரியந் திரிந்த பெயர்ச்சொல்.

24.—வரி ஆர் மணி கால் வாளமே - இரேகைகள் பொருந்திய அழகிய கால்களையுடைய சக்ரவாளங்களே, மட அன்னங்காள் - இளமையான அன்னங்களே, எனை நீங்க தரியாள் நடந்தாள் - என்னைப்பிரியப்பொறாதவளாகிய சீதை சென்றாள், இல்லள் எல் - அவள் என்னிடத்தில்லாதவளாயின், தளர்ந்த போது உம் - நான் வாடின ஸமயத்திலும், தகவு எ ஓ - (நீங்களிப்படியிரங்காதிருப்பது) தகுதிதானோ, எரியாநின்ற ஆர் உயிருக்கு இரங்கினால் ஈது இசை அன்று ஓ - (பிரிவாற்றாமையால்) வருந்துகின்ற எனது அரிய வுயிருக்கு நீங்கள் இரக்கஞ்செய்தால் இது வுங்களுக்குக் கீர்த்தியல்லவா, பிரியாது இருந்தேற்கு ஒரு மாற்றம் பேசில் பெரிது பூசல் ஆம் ஓ - (இதுவரையில் ஒருகாலும் சானகியை) பிரியாதிருந்த எனக்கு ஒருவார்த்தை சொன்னால் (அதனால் உங்களுக்கு) பெரிதானவிரோதம் உண்டாகுமோ, எ - று.

25.—வண்ணம் - அழகிய, நறும் தாமரை மலர் உம் - வாசனைபொருந்திய தாமரைப்பூக்களையும், வாசம் நாள் குவளை மலர் உம் - வாசனையையும் புதுமையையுமுடைய நெய்தற் பூக்களையும், புண்ணின் எரியும் ஒரு நெஞ்சம் - (சீதையைப்பிரிந்து) புண்போலெரிகின்ற தனிமையான என் மனதிற்கு, பொதியும் மருந்தின் தரும் பொய்காய் - கவசம் பண்ணுகின்ற மருந்தைப்போலக் காட்டுகின்ற [மலர்ந்திருக்கின்ற] புஷ்கரிணியே, கண் உம் முகம் உம் காட்டுவாய் - (சானகியின்) கண்ணையுமுகத்தையுங் காட்டுகின்ற நீ, வடிவு உம் ஒரு கால் காட்டாய் ஓ - அவள் உருவத்தையும் ஒருதரம் காட்டமாட்டாயோ; ஒண்ணும் என்னில் அஃது உதவாது உலோபினர் உம் உய்ந்தார் ஓ - (தம்மால்) இயன்றதாயின் அவ்வியன்ற பொருளைக் கொடாமேல் லாபம் செய்தவர்களும் உலகத்திற் கடைத்தேறினார்களா, எ-று.

26.—விரிந்த குவளை - மலர்ந்த குவளை மலர்களும், சேதாம்பல் - செவ்வல்லி மலர்களும், விரை மென் கமலம் - வாசனை யுள்ள மிருதுவான தாமரைமலர்களும், கொடி வள்ளை - கொடியோடுகூடிய வள்ளை யிலைகளும், தரங்கம் - அலைகளும், கெண்டை - சேல்மீன்களும், வரால் - வரால் மீன்களும், ஆமை - ஆமைகளும், என்ற இ தகைய தமை நோக்கி - என்று சொல்லப்பட்ட இத்தன்மையவாய பொருள்களைப் பார்த்து, மருந்தின் அனையாள் அவயவங்கள் அவை நின் கண்டேன் - அமிர்தத்தை யொத்தவளாகிய ஜானகியினுடைய அவயவங்களாகிய அவைகளை உன்னிடத்துப் பார்த்தேன்; (அவை) வல் அரக்கன் அருந்தி அகல் வான் சிந்தினவோ - கடின (இருதயத்தையுடையவனான) அரக்கன் [இராவணன்] புசித்து விசாலமான ஆகாயத்திலிருந்து (உன்னிடத்திற்) சிந்தினவைகளோ, ஆவி உரைத்தி - பொய்கையே நீ சொல்வாயாக, எ - று.—ஆம் - அன்று - எ, அசைகள். 'என்ற' என்னும் பெயரெச்சவீறு தொகுத்தல். 'சேதாம்பல்' = செம்மை ஆம்பல்; [நன். சூ. 136 உரையிற்காண்க]. 'அருந்தி' - செயவெனெச்சத்திரிபு [நன். சூ. 346]. 'அருந்தியகல்வான்' என்பதற்கு '(ஆகாசத்தில்) அருதிச் செல்ல' எனவும் உரைக்கலாம்; அப்பொழுது 'அகல்வான்' என்பதை வினையெச்சத்திரிபெனக் கொள்க.

27.—ஓடாநின்ற களி மயிலே - (என்னெதிரே) ஓடுகின்ற சந்தோஷத்தையுடைய மயிலே, சாயற்கு ஒதுங்கி - (சீதையின்) சாயலுக்குத் தோற்று, உள் அழிந்து - மனமழிந்து, கூடாதாரின் திரிகின்ற நீ உம் - சத்துருக்களைப் போல் (மறைந்து) சஞ்சரிக்கின்ற நீயும், ஆகம் குளிர்ந்தாய் ஓ - (சந்தோஷத்தால்) மனங்குளிர்ந்தையோ, தேடாநின்ற என் உயிரை தெரிய கண்டாய் - அவளைத்தேடுகின்ற என்னுயிரின் நிலைமையை [தீனபாவத்தை] பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறாய்; [என்றால் தேடப்படுகிற என்னுயிர்க்கொப்பான சீதையை (அவள் போகும் போது) நீ நன்றாய் பார்த்திருப்பாய், என்றும் ஓர் பொருள்]; சிந்தை உவந்து ஆடாநின்றாய் - மனமகிழ்ந்து ஆடுகின்றாய்; (உனக்குத் தெரியாதென்று சொல்வையாயின்) ஆயிரம் கண் உடையாய்க்கு ஒளிக்கும் ஆறு உம் உண்டு ஓ - ஆயிரம் கண்களையுடைய உனக்கு ஒளித்துச் செல்லும் வழியுமுண்டோ [இல்லை], எ-று.—இங்கு 'கண்' என்றது பீலிக்கண்களை. 'உடையாய்' - குறிப்புவினையாலணையும்பெயர். 'களிமயில்' - இரண்டாவதன் உருபும் பயனு முடன்தொக்கதொகை; வினைத் தொகையாகவுங் கொள்ளலாம்.

28.—அன்னத்தின் பெடையீர் - அன்னப் பேடுகளே, அடையீர் எனின் உம் அறிந்தது ஒரு மாற்றம் உரையீர் - என்னிடத்தில் வாரீராயினும் ['அடைகிடப்பவராயினும்' என்றும் பொருள் படும்] (சீதையின் விஷயமாய்) நீங்க ளறிந்ததாகிய வொரு வார்த்தையும் சொல்லுகிறீரில்லை; ஒன்றும் பேசீர் ஓ - (என்னோடு) ஒரு சங்கதியும் பேசமாட்டீரோ; பிழையாதாற்கு பிழைத்தீர் ஓ - உங்களுக்குப் பிழை யொன்றுஞ் செய்யாதவனாகிய எனக்குப் பிழை செய்வீர்களோ; நடு இலாதார் எ - நடுவுநிலைமை

யில்லாதவர்கள்தாம் [‘இடையில்லாத சீதையே’ என்றும் பொருள் படும்,], நடை நீர் அழிய செய்தார் - நன்மார்க்கத்திலிருந்து நீங்கள் கெடு ம்படி செய்தவர்கள் [‘நீங்கள் நடையழகில் தோற்றொழியச் செய்தவர்’ எனவும் பொருள்படும்], (ஆகையால்) அவரோடு நனி பகை தான் உடை யீர் - அந்நடுவுநிலைமை யில்லாதவரோடு [‘அச்சீதையோடு’ என்றும் பொ ருள்படும்] மிகுந்த பகையையே யுடையராயிருக்கிறீர்; உமை நோக்கி உவ க்கின்றேனை முனிவீர் ஓ - உங்களைப் பார்த்துச் சந்தோஷிக்கின்ற என்னை வெறுப்பீரோ, எ - று.

29.—பொன் பால் பொருவும் - பொற் பகுதியை யொத்திருக்கிற, விரை அல்லி பொலிந்த - வாசனை பொருந்திய அகவிதழ்களோடு கூடி விளங்கிய, பொலம் தாது தன்பால் - பொன்னிறமான மகரந்தப்பொடியி னிடத்திலே, தழுவும் குழல் வண்டு - (ஆணும்பெண்ணுமாகத்) தழுவிநிற் கிற இசைவண்டுகள், தமிழ் பாட்டு இசைக்கும் தாமரையே - (செவிக்கு) இனிமையாகிய பாட்டைப் பாடப் பெற்ற [அல்லது, ‘தமிழ்ப்பாட்டைப் பாடப் பெற்ற’] தாமரைப்புஷ்பமே, என் பால் இல்லை - (சீதையார்) என் னிடத்திலில்லை; அப்பால் ஓ இருப்பார் அல்லர்; வேறிடத்திலிருக்கத்தக்க ரல்லர், விருப்பு உடைய உன்பால் இல்லை என்றக்கால் - பிரியமுள்ள உன்னி டத்தில் இல்லையென்று நீ சொன்னால், ஒளிப்பாரோடு உம் உறவு உண்டு ஓ - மறைத்துப் பேசுபவரிடத்திலும் உறவுளதாகுமோ [ஆகாது], எ - று.— இலக்குமியினிருப்பிடம் தம்மார்பும் தாமரையுமாகையால் இப்படிச் சொன் னார் ஸ்ரீராமபிரான் என்க. என்றக்கால் - வினையெச்சம்.

30.—ஒரு வாசகத்தை வாய் திறந்திட்டு உதவாய் - ஒரு வார்த்தையும் வாய்திறந்து சொல்லாமல், பொய்கையுள் ஒடுங்கும் திருவாய் அனைய சே தாம்பற்கு அயலே கிடந்த சேம் கிடையே - பொய்கையுட் குவிந்த அழ கிய வாயையொத்த செவ்வல்லி மலர்க்கு அருகிலே யுள்ள செங்கிடையே, வெருவா எதிர் நின்று அமுது உயிர்க்கும் வீழி செவ்வி கொழும் கனிவாய் தருவாய் - பயந்து என்னெதிர்நின்று அமிருதத்தை உயிர்க்கின்ற [அமுதொ ழுகப் பேசுகின்ற] அழகுங் கொழுமையுமுள்ள வீழிக்கனியையொத்த சீதை யின்வாயழகைக் காட்டுகின்ற நீ, அ வாய் முகிழ் நகை உம் தண் என் மொழி உம் தாராய் ஓ - அவ்வாயிலுள்ள அரும்பையொத்த பற்களையும் [பற்களின் வரிசையையும்] குளிர்ச்சிபொருந்திய வார்த்தைகளையும்தரமாட்டாயோ [காட் டமாட்டாயோ], எ - று.—‘திருவாய்’ என்பதற்கு ‘திருவினுடைய [சீதை யினுடைய] வாய்’ என்பதும் பொருளாம். குலஸ்திரீகளுக்கு தம் பர்த்தா விடத்து பய பக்தி விசுவாசங்களிருக்கவேண்டுமென்பது சாஸ்திரசித்தமாகை யால், ‘வெருவா’ என்பதைச் செய்யா என்னும் வாய்பாட்டு எச்சமாகக் கொண்டு ‘பயந்து’ என்று பொருளுரைக்கப்பட்டது. கிடை=சடை.

31.—கொடி வள்ளாய் - கொடியோடு கூடிய வள்ளையிலையே, அலசகண் உற்றேற்கு - துன்பமடைந்த எனக்கு, உற்று உதவற்கு - இசைந்து உதவி

செய்தற்கு, அடைவு ஒன்று உண்டே - ஒரு முறையும் உள்ளதே; (நீ) மலர் கொம்பு அனைய மட சீதை காது எ மற்று ஒன்று அல்லை - பூங் கொம்பையொத்த மடமைக்குணமுள்ள சீதையின் செவிகளே யன்றி நீ வே றொன்று மல்லை; (ஆகையால்) பொன் குண்டலம் உம் கொடும் குழை உம் புனை தாழ் பொன் தோடு உம் விலக்கி வந்தாய் - பொன்னாற்செய்த குண்டலத்தையும் வளைந்த குழையையும் புதுமை தங்கிய முத்தினாற் செய்த அழகிய தோட்டையும் நீக்கிவந்த நீ, விளம்பாதே இன்னும் பூசல் விரும் புதி ஓ - (அவள் சென்ற செய்தியின் உண்மையை எனக்குச்) சொல்லா மலே இன்னமும் விரோதத்தையே விரும்புகிறாயோ, எ - று.—ஈண்டு ‘மடம்’ என்றது நாண், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண்குணங்கள்பிற வற்றிற்கும் உபலக்ஷணம். அவற்றுள், - நாண் என்பது நாணம்; மடம் என்பது எல்லாமறிந்தும் அறியாது போலிருத்தல்; அச்சம் என்பது என்றுங் காணாததைக் கண்டவிடத்து அஞ்சுதல்; பயிர்ப்பு என்பது தங்கணவரல்லாத வர்கை மேற்படின் உடம்பு அருவருத்தல் ஆம்.

32.—பஞ்சு பூத்த விரல் பதுமம் பவளம் பூத்த அடியாள் - செம்பஞ் சுக்குழம்பூட்டிய விரல்களையுடைய தாமரைமலரை யொத்த பவளம்போற் சிவந்த பாதங்களை யுடையவளும், நெஞ்சு பூத்த தாமரையின் நிலையம் பூத் தாள் - என் மனமாகிய மலர்ந்த தாமரைப்பூவென்னும் வீட்டில் வசிப்பவ ளும், நிறம் பூத்த மஞ்சு பூத்த மலர் பூத்த குழலாள் - நிறமுள்ள மேக த்தையொத்த பூவையணிந்த கூந்தலையுடையவளுமாகிய சீதையினுடைய, கண்போல் மணி குவளாய் - கண்களை யொத்திருக்கின்ற அழகிய நீலோற் பலமே, நஞ்சு பூத்தது என்ன நகுவாய் என்னை நலிவாய் ஓ - விடம் பட ர்ந்தாற்போல நகைத்து என்னை நலியச்செய்வையோ? எ - று.—‘வினைப் பகுதிகள் வேண்டிய பொருளை விளைக்கும்’ என்னும் நியாயத்தாலே இப் பாட்டில், ‘பூத்த’ என்னும் சொல்லின் பகுதிக்கு சந்தர்ப்பத்திற் கேற்கப் பல பொருளுரைக்கப்பட்டது. வடநூலுரைகாரரும்

[illegible]

என்று நியாயங்கூறிப் போவர் எனவறிக. போல் - என்னும் காலங்கரந்த பெயரெச்சம் ‘குவளை’ என்னும் பெயர்கொண்டது.

33.—என்று அயா உயிர்க்கின்றவன் - என்று சொல்லி மனவருத்தத் தாற் பெருமூச்செறிபவன் [ஸ்ரீராமன்], ஏடு அவிழ் கொன்றை ஆவி புறத்து இவை கூறி - இதழ் விரிகின்ற கொன்றை மரங்களை யுடைய அப்பொய் கைப் புறத்தில் இவற்றைச் சொல்லி, யான் பொன்ற யாது உம் புகல் இலை போலும் - யானிறந்துபடவும் சிறிதும் பேசா திருப்பாய் போலும், வல் தயா விலி - கடின ஹிருதையயான கிருபையில்லாத பொய்கையே, என்ன வருந்தினன் - என்று சொல்லித் துன்புற்றான் - எ - று.—“வல்” என்பது “தயாவிலி” என்பதன் ஏகதேசமாகிய ‘தயையை விசேடியாது அம் முழுச் சொல்லையும் விசேடித்து நின்றதெனவறிக.

34.—பேர் அளிக்கு பிறந்த இல் ஆயினன் - அபாரமான கருணைக்குத் தாயகமானவன் [ஸ்ரீராமன்], வார் அளி தழை மா பிடி வாயிடை - நீண்ட மதுரமாகிய தழையைத் தின்னுகின்ற பெரிய பெண் யானையின் வாயில், கார் அளி கலுழி கரு கைம்மலை - கறுத்த வண்டுகள் மொய்க்கப் பெற்ற மதப் பெருக்கையுடைய பெரிய (ஆண்) யானையானது, நீர் அளிப்பது நோக்கினன் நின்றனன்-(தன் தும்பிக்கையால்) நீர் முகந்தளிப்பதைப் பார்த்துக் கொண்டு (திகைத்து) நின்றான், எ - று.

35.—ஆண்டு அன்பு எனும் ஆர் அணி பூண்ட தம்பி - அப்பொழுது அன்பென்னும் அருமையான ஆபரணத்தை யணிந்த தம்பி [இலக்ஷ்மணன்], அவள்ளலை-அந்த ஔதார்ய சீலரான ஸ்ரீராமனை (நோக்கி), நெடியோய்-அண்ணா, பொழுது கழிந்தது ஆல் - பொழுது போயிற்றாகையால், இரு புனல் ஈண்டு தோய்ந்து - பெருமை பொருந்திய (இந்த பம்பா புஷ்கரிணி) தீர்த்தத்திலே சீக்கிரம் படிந்து [ஸ்நாநஞ் செய்து], உன் இசை என நீண்டவன் கழல் தாழ் என்றான் - உன்னுடைய கீர்த்தி யோங்கி வளர்வதுபோலே வளர்ந்தருளினவனுடைய [திருவிக்கிரமனாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய] திருவடிகளை வணங்குவாயாக என்று சொன்னான், எ - று.—ஆல் - அசை யெனினுமாம்.

36.—அரசு உம் அ வழி நின்று அரிது எய்தி - அரசனாகிய ஸ்ரீராமனும் அவ்விடத்திலிருந்து வருத்தத்துடன் சென்று, திரை செய் அ தீர்த்தம் முன் செய் தவ உண்மையால் - அலைகளை வீசுகின்ற அந்தத் தீர்த்தமானது முன் செய்த தவத்தினது உண்மையினாலே [தவஞ் செய்திருந்த படியினாலே], வரை செய் மா மத வாரணம் நாண் உற - மலைபோன்ற பெரிய மதயானையும் வெட்கும்படி, விரை செய் பூ புனல் ஆடலை மேயினன் - வாசனை வீசுகின்ற அழகிய தீர்த்தத்தில் மூழ்குதலைப் பொருந்தினான் [மூழ்கினான்], எ-று.

37.—தீர்த்தம் நீரில் நெடியவன் மூழ்கலும் - பெருக்கையுடைய அத்தீர்த்தத்தில் ஸ்ரீராமன் முழுகின வுடனே, தீத்த காம தெறு கதிர் தீயினால் - தீய்க்கப்பட்ட காமமாகிய வருத்துகின்ற ஜ்வாலையையுடைய நெருப்பினால், அ தோயம் - அந்த நீரானது, கருமக கம்மியன் - கொற்றொழிலையுடைய கருமான், இரும்பை காய்த்து தோய்த்த தண் புனல் ஒத்தது - இரும்பைக் காய்ச்சித் துவைத்த குளிர்ந்த நீரை ஒத்திருந்தது [ஒத்துக் கொதித்தது], எ-று.

38.—அன்னம் ஆய் அரு மறைகள் பாடினன் - ஹம்ஸ ரூபங் கொண்டு அருமையாகிய வேதங்களை (பிரமதேவனுக்கு) உபதேசித்தவன் [ஸ்ரீராமன்], ஆடினன் - (அப்போய்கையில்) நீராடி, நீடும் நீர் முன்னை நூல் நெறி முறையின் - பல நன்மைகளமைந்த முதனூல் நெறியின் முறைமையால் [வேதவிதிப்படி], நேமி தாள் சூடினன் - சக்கிர தரனாகிய மாதவன் திருவடிகளைச் சிரஸா வஹித்து, முனிவர் தம் தொகுதி சேர் சோலைவாய் மாடு வைகினன் - முனிகணங்கள் சேர்ந்துள்ள சோலையில் ஒரு பக்கத்தில் தங்கியிருந்தான்; (உடனே) எரி கதிர் உம் வைகினன் - சூரியனும் அஸ்தமித்தான், எ - று.—நீடும் நீர் என்பதற்கு பெருமை பொருந்திய அர்க்கியத்தை எனவும் பொருள் கூறலாம். “அருமறைகள்பாடினன்” என்றது - வேதங்கள் ஈசுவர பிரதிபாதகங்களாய் அனந்தங்களாய் பிரம்மாவினுடைய அதீனமாயிருக்கையில் ஸோமகாசுரன் என்போன் பிரமதேவன் கண்வளருகையில் அவற்றை யபகரித்துக்கொண்டுபோய்க் கடலிற் கரந்து தானும் அதனுள் ஒளித்திருந்தான். அப்போது ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் மத்ஸியாவதாரஞ்செய்து கடலுட் புகுந்து அவனைக் கண்டுபிடித்து முடித்து வேதங்களைக்கொணர்ந்து ஹம்ஸ ரூபியாய் மீண்டும் பிரம்மாவுக் குபதேசித்தார் என்பதை.

39.—அந்தியாள் வந்து அணுக - மாலைப் பொழு தென்பவளாகிய பெண் வந்து பொருந்தவும், அங்கு அணுகு உறு சந்த வார் கொங்கையாள் - அவ்விடத்தில் வந்தடையாத சந்தன மணிந்த கச்சிறுக்கிய ஸ்தனங்களையுடையவளது [சீதையினது], தனிமை - வியோகத்தை, தனி நாயகன் - ஒப்பற்ற நாயகன் [ஸ்ரீராமன்], சிந்தியா நொந்து தேய் பொழுது - சிந்தித்து மனநொந்து உடல் மெலியும் பொழுது, தெறு சீத நீர் - தங்கிய குளிர்ந்த நீரையுடைய கடலினின்று, இந்து - சந்திரனானவன், எரி கதிரினன் என - தஹிக்கின்ற கிரணங்களையுடைய சூரியனைப் போல, வான் உந்துவான் - ஆகாசத்தில் உயருவான் (ஆயினன்) [உதித்தான்], எ - று.—ஆயினன் என்னும் பயனிலை வருவித் துரைக்கப்பட்டது. தான் - அசை. சீதநீர் - கடல், பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயர்.

“ காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்”

என்கிறபடியே மாலைக்காலத்தில் விரகமிகுதி பற்றி யிங்ஙனங் கூறினாரென்க. எரிகதிரினனென - தஹிக்கின்ற கிரணங்களையுடைய சூரியனைப் போல, வான் - ஆகாசத்தில், தெறு - வருத்துவதற்குரிய, சீதநீர் - குளிர்ச்சி பொருந்திய கிரணங்களை, உந்துவான் - வீசுவானாயினன் எனவுமாம். அந்தி - ஸந்த்யா என்னும் ஆரியச்சிதைவு; அது ஆகாரஈற்றுப் பெண்பாற் பெயர்; ஆகையால், கம்பரும் அந்தியாள் என அப்பாலிற் கூறினார்.

40.—பூ ஒடுங்கின - தாமரை முதலிய மலர்கள் குவிந்தன; விரவு புள் பொழில்கள் ஒடுங்கின - (பலசாதிகளாகக்) கலந்த பக்ஷிகள் சோலையிலே (தங்கூட்டில்) அடங்கின; மா ஒடுங்கின - மிருகங்கள் அடங்கின, மரன் உம் இலை ஒடுங்கின - மரங்களும் இலைகுவிந்தன; கிளிகள் நா ஒடுங்கின - கிளிப்பிள்ளைகள் நா வடங்கின; மயில்கள் நடம் ஒடுங்கின - மயில்கள் ஆட்டம் ஒழிந்தன; குயில்கள் கூ ஒடுங்கின - குயில்கள் கூவுதலடங்கின; களிறு பிளிறு குரல் ஒடுங்கின - யானைகள் கர்ஜிக்கின்றன சத்தமடங்கின, எ-று.—இராக்காலமாகையால் இங்ஙனங்கூறினார். மாவொடுங்கின, என்பதற்கு வண்டுகள் ரீங்காரஞ் செய்யா தடங்கின என்றுமாம்.

41.—மண் துயின்றன - பூமியிலுள்ள உயிர்கள் தூங்கின; நிலைய மலை துயின்றன - நிலையையுடைய பர்வதங்களிலுள்ள வுயிர்கள் தூங்கின; மறு இல் பண் துயின்றன - குற்றமற்ற இசைகள் தூங்கின; விரவு பணி துயின்றன - (பல்வகைப்படக்) கலந்த பாம்புகளுறங்கின [(பிராணிகளின்) தொழி

ல்கள் தூங்கின என்றுமாம்]; பகரும் விண் துயின்றன - சொல்லப்படும் ஆகாசத்திற் சஞ்சரிப்பனவாகிய வுயிர்கள் தூங்கின; கழுது உம் விழி துயின்றன-பேய்களும் கண்ணுறங்கின, (இப்படி யாவும் உறங்கிய காலத்திலும்) நெடிய கடல் துயின்றது ஓர் களிறு - பெருமை பொருந்திய பாற்கடலிலே நித்திரை செய்ததாகிய ஒரு யானையினது [யானைபோன்ற ஸ்ரீராமனது], பழுது இல் கண் துயின்றில - குற்றமற்ற கண்கள் மாத்திரம் உறங்கவில்லை, எ - று.—ஸ்ரீராமன்தவிர மற்ற யாவும் தூங்கின வென்பதாம்.

42.—(இவ்வாறிருக்கையில்) விமலன் துயரின் எழ - பரிசுத்தனான ஸ்ரீராமன் துன்பத்தினின்று நீங்கும்படி, வெம் கதிர் கடவுள் எழ - சூரியபகவானானவன் உதிக்கவே, பொங்கி முற்றிய உணர்வு புணர்தலும் - விளங்கி நிறைந்த அறிவானது ஒருவனைச் சேர்ந்த மாத்திரத்தில், புகையினொடு பங்கம் உற்று அனைய வினை பரிவு உறும்படி - புகையோடு சேற்றை யடைந்தாற் போன்ற தீவினைகள் அவனை விட்டு நீங்குவதுபோல, முடிவு இல் கங்குல் இற்றது - முடிவில்லாத இரவு கழிந்தது, கமலம் முகம் எடுத்தது - தாமரை மலர்கள் முகமலர்ந்தன [விகஸித்தன], எ - று.— நங்குலத்துதித்த இராகவன் பிராட்டியைப் பிரிந்து இரவிற் கெல்லை காணுகித் துன்புறுகின்றானாதலின் அதை நீக்கும் பொருட்டு நாமுதயஞ் செய்வோ மென்று சூரியனுதித்ததாகக் கற்பித்ததாம்.

43.—(அப்போது) ஆலை எய் துழனி அகல் நாடர் - கரும்பாலைகளிற் பொருந்திய ஒலியையுடைய விசாலமாகிய கோசல நாட்டை யுடையவரும், ஆர்கலி அமுதுபோல ஏ உரை செய் புனம் மானை நாடுதல் புரிஞர் - (பாற்) கடலிற் பிறந்த அமிர்தம் போலவே (மதுரமாக) வசனிக்கின்ற புனத்தில் வாழும் மான்போன்ற சீதாப்பிராட்டியை, நாடுதல் புரிஞர் - தேடுபவர்களும் (ஆகிய இராம லக்ஷ்மணர்கள்), காலை கடிது வர ஏ - உதயகாலமானது விளக்கத்தோடு வருகையால் [நிலந் தெளிந்ததனால்], கடல் கவினு சோலை ஏ மலை தழுவு கான நீள் நெறி தொலைய ஏகினர் - சமுத்திரம்போலே அழகிய சோலைகள் சூழ்ந்த மலைகளும் அவற்றைச் சேர்ந்த காடுகளுமாகியவற்றின் நெடுவழிமாள (அப்பாற்) சென்றனர், எ - று.

பம்பைப்படலம் முற்றிற்று.

பழமொழிகள்.

1. அவன் அன்றி ஓரணுவும் அசையாது.
   தேநவிநா த்ரணக்ரமபி நசலதி.
2. அகதிக்குத்தெய்வமே துணை. [அகதி=ஏழை, வறியவன்]
3. அகத்திலழகு முகத்திற்றெரியும்.
   "அடுத்ததுகாட்டும் பளிங்குபோனெஞ்சங்
   கடுத்ததுகாட்டுமுகம்."

கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் க.] கஅஅகூ - (ஷு) மேமீ [சஞ்சிகை ச

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதி யாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ றருளினெ லெளியவர்ச் சையுமா கியுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

மதவிஷயம்.

[ருஅ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

இருக்குமுதல் தருமசாஸ்திரமீறாகிய பதினான்கும் (=நான்கு வேதங்களும், ஆறு அங்கங்களும், நான்கு உபாங்கங்களும்)

"வேதமொருநான்குமாறங்கமுநன்னியாய மீமாஞ்சையொடுமிருதிபுராண
ஓதலுறும் வித்தைகளாம்......... [மீரேழா,

என்கிறபடியே வித்தைகள் எனப்பெறும். வடநூலார் இவற்றை * சதுர்த்தசவித்தை யென்பர். அதை

அங்காநி வேதாஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாய விஸ்தர: ।
புராணம் தர்மஶாஸ்த்ரஞ்ச வித்யா ஹ்யேதாஶ்சதுர்தஶ ॥

என்னும் விஷ்ணுபுராண வசனத்தாலறிக.

அன்றியும் இவற்றை வித்தியாஸ்தானங்கள் என்றும் சொல்லுவார்கள். வித்யாஸ்தானமாவது,—ஞானத்திற்கு இடமாயிருப்பது; அதாவது, ஞானத்தை யுண்டாக்குவது என்பது. இது

* ஆயுர்வேதோ தநுர்வேதோ காந்தர்வஶ்சேதி தே த்ரய: ।
அர்த்தஶாஸ்த்ரம் சதுர்த்தஞ்ச வித்யா ஹ்யஷ்டாதஶைவ தா: ॥ என்று உபவேதங்கள் நான்கையுங்கூட்டி அஷ்டாதச (=பதினெட்டு) வித்தைகளென்பதும் ஒன்று.

புராணந்யாயமீமாம்ஸாதர்மஶாஸ்த்ராங்கமிஶ்ரிதா: |
வேதா: ஸ்தாநாநி வித்யாநாம் தர்மஸ்ய ச சதுர்தஶ ||

என்னும் யாஜ்ஞவல்கிய ஸ்மிருதி வசனத்தால் விளங்கும். இவ் வசனத்தின் பொருள் முன்சொன்னபடி புராணமுதலிய பத்தோடுங்கூடிய வேதங்கள் [ஆகப் பதினான்கு சாஸ்திரங்களும்] வித்தைகளுக்கும் தருமத்திற்கும் இடமென்பதாம். முண்டகோபநிஷத்தில் அங்கங்களை வித்தைகளாகச் சொல்லியிருக்கின்றது. அப்படியே சாந்தோக்கியோபநிஷத்தில் நான்கு வேதங்களோடொக்க இதிகாச புராணங்களை ஐந்தாம் வேதமாகவும் வித்தியாஸ்தானமாகவும் சொல்லியிருக்கின்றது. இப்படியே தருமசாஸ்திரங்களும் நியாய மீமாம்ஸைகளும் வித்தியாஸ்தானங்கள் என்பது மிகவும் பிரசித்தம்.

சிக்ஷை முதலான அங்கங்களும் புராண மீமாம்ஸைமுதலான உபாங்கங்களுமில்லாமற்போனால் வேதங்களை ஓதவும், அவற்றின் பொருளையறியவும், அதை அனுஷ்டிக்கவும் வகைதெரியாமல் வேதமே அப்பிரயோசனமாகிவிடும். வேதத்திற்கு உரையிடுகிறவர்களுக்கும் ஆதாரமில்லாமற்போய்விடும். ஆதலால் இப்பதினான்கு சாஸ்திரங்களும் பிரமாணமேயாம்.

இவற்றுள் வேதம் முதன்மையான பிரமாணம், ஸ்மிருதிபுராணங்கள் அதைப்பின்பற்றிவந்த பிரமாணங்கள்.

வேதோऽகிலோ தர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்விதாம் |

என்று மநுஸ்மிருதி சொல்லுகின்றது. இதன்பொருள்: வேதமுழுதும் தருமத்திற்குப் பிரமாணம். அவ்வேதத்தை அறிந்தவர்களுடைய ஸ்மிருதியும் ஆசாரமும் தருமத்திற்குப் பிரமாணமாம் என்பது. இங்கே வேதமறிந்தவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள் யாரென்றால், மநு வியாச பராசராதி முநிவர்கள். நாமும் வேதமறியக்கூடுமானதனாலே அவர்களென்று சொல்லவேண்டுவதென்னவெனில்,

அநந்தா வை வேதா:

என்றபடியே அநந்தசாகைகளாகப்பிரிந்து வெகு விஸ்தீர்ணமான வேதங்களை நன்றாயறிந்து அவற்றின்பொருளை ஆராய்ந்து நிர்ணயஞ்செய்யத்தக்க சாமர்த்தியம் நமக்கு இல்லாமையால் அப்படிப்பட்ட சக்தியுள்ள அவர்களே வேதமறிந்தவர்கள் எனப்படுவார்கள்.

இவ்வர்த்தத்தை சங்கராசாரியர் ஸூத்ரபாஷ்யத்தில் தேவதைகளுக்கு சரீர ஸ்தாபனஞ் செய்யுமிடத்தில்

ருஷீணாமபி மந்த்ரப்ராஹ்மணதர்ஶிநாம் ஸாமர்த்யம் நாஸ்மதீயேந ஸாமர்த்யேந உபமாதும் யுக்தம், தஸ்மாத் ஸமூலமிதிஹாஸபுராணம்.

என்று சொல்லியிருக்கிறார்.

ஆகவே இதிகாசம் புராணம் முதலான சாஸ்திரங்கள் வேதத்திற்கு உபப்பிரம்மணங்களென்று சொல்லப்படும். உபப்பிரம்மணம் என்றால் 'வளர்ப்பது' என்று பொருளாம்; அதாவது அதன் கருத்து இன்னதென்று நியாயப் பிரமாணங்களால் தேற்றிவிளக்குவது. ஸ்ரீமத்ராமாயணத்தில் பாலகாண்டத்தில் (௪ - ம்) சர்க்கத்தில்

வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு: |

என்கிற சுலோகத்துக்கு வியாக்கியானஞ் செய்யுமிடத்தில் ஈசுவர தீக்ஷிதர் முதலானோர் இவ்வாறு விவரித்திருக்கின்றனர். உபப்பிரம்மணமான இதிகாச புராணங்களைக் கொள்ளாமல் வேதத்துக்குப் பொருள் செய்யப்புகுந்தால் அது தாறுமாறாய் விடும் என்கிற கருத்தை வித்தியாரணியர், ருக்வேதபாஷ்யத்தின் பீடிகையில்,—

இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத் |
பிபேத்யல்பஶ்ருதாத்வேதோ மாமயம் ப்ரஹரிஷ்யதி ||

என்கிற ஸ்மிருதி வசனத்தைக்கொண்டு வெளியிட்டிருக்கிறார். இவ் வசனத்தின்பொருள்: இதிகாசங்களையும் புராணங்களையும் கொண்டு வேதத்தை உபப்பிரம்மணஞ்செய்யவேண்டும். அங்ஙனஞ்செய்யாதபோது இவன் என்னை ஏமாற்றிவிடுவான் என்று சிற்றறிவுள்ள மனிதனுக்கு வேதம் அஞ்சுகின்றது என்பதாம். முன்னுரைத்த வேதமுதலிய பதினான்கு பிரமாணங்களாலும் திருந்திய ஞானமே வித்தையாகுமன்றி மற்றையதாகாது. இக்கருத்தை வித்தியாரணியர் வேதபாஷ்ய பீடிகையிலே விளக்கமாய் எழுதியிருக்கிறார். குணங்களைப் புருஷராக ரூபகப்படுத்தி வேதாந்தவித்தை எளிதில் விளங்கும்படி கிருஷ்ணமிச்சிரரென்னும் வித்துவான் செய்திருக்கிற பிரபோதசந்திரோதயம் என்கிற நாடகத்தில் ஐந்தாம் அங்கத்தில்,

வேதோபவேதாங்கபுராணஶாஸ்த்ர-
ஸாத்ரேதிஹாஸாதிஷு ப்ருஹ்மஶரீர: |

ஸர்வஸ்வ தீடேஜுகுராஸஸாங்க

ஸஜூக்ஷகா ஹிஸஹஸாவிராவலீச ||

என்கிற சுலோகத்திலும் இக்கருத்து விளங்கும். இதன் பொருள்: நான்கு வேதங்களும் உபவேதங்களும் ஆறங்கங்களும் புராணம் தருமசாஸ்திரம் இதிகாசம் ஆகிய இவைமுதலிய சாஸ்திரங்களால் தூக்கப்பட்ட காந்தியை யுடையவளாய்த் தோன்றினள் சரசுவதி என்பதாம். ஸ்மிருதி இதிகாச புராண முதலிய சாஸ்திரங்களைக் கொள்ளாமல் வேதத்துக்குப் பொருள்செய்யப்புகுதல் அசாத்திய மும் அப்பிரயோசனமுமாய் முடியும், ஆதலால் அவற்றை அநுசரித்தே கொள்ளவேண்டும். இந்தச்சாஸ்திரங்களெல்லாம் வேதங் களுக்கு ஒருவகை வியாக்கியானம் போன்றவைகள்.

வ்யாக்யாநதோ விஶேஷப்ரதிபத்திர் நஹி ஸந்தேஹாதலக்ஷணம்

என்று வையாகரணர் ஒரு நியாயங்கொண்டிருக்கிறார்கள்; அதன் கருத்து,— 'பெரியோர் செய்த வியாக்கியானங்களாலே நூலின் விசேஷத்தை அறியவேண்டும், நமக்குப் பொருள் மயங்குவதனால் சாஸ்திரம் அப்பிரமாண மாகமாட்டாது' என்பது; இதை 'உரையிற் கோடல்' என்று ஒரு யுக்தியாகத் தமிழரும் வழங்குவார்கள்.

இனி, மேற்குறித்த சாஸ்திரங்களின் உதவியைக்கொண்ட வேதத் தினால் போதிக்கப்பட்ட வைதிகமதத்தின் பொதுக் கோட்பாடு என் னவெனில்; எல்லாவற்றிற்குங்காரணமாய், ஆதியந்தமில்லாததாய், ஞானாநந்தமயமாய், இப்படிப்பட்டதென நிரூபிக்கக்கூடாததாய், சர்வவியாபகமாய் ஒருபொருள் உண்டு; அதுதான் பிரமம் என்றும் பரமாத்துமா வென்றும் பகவான் என்றும் சர்வேசுர னென்றும் சொல்லப்படுவது, அந்தக்கடவுளின் சங்கற்பத்தால் அவரிடத்தில் லயப்பட்டிருக்கின்ற பிரகிருதியில் விகாரமுண்டாகி மஹத்து என்னும் தத்துவம் உண்டாகின்றது. பிரகிருதியை விதைபோல வும் மஹத்தை முளைபோலவும் அறியவேண்டும். இப்படியே இனிச் சொல்லப்படுந் தத்துவங்களையும் ஏரிலேப்படுவது முதலான முறை யாக அறியவேண்டும். இந்தப்பிரகிருதிதான் மாயை யென்று சொல்லப்படுவது. அது சத்துவம், ரஜசு, தமசு என்கிற மூன்று குணமயமாயிருப்பது. இம்மூன்றுகுணங்களையும் நம்முடைய விவேகமுதலான உத்தமகுணங்களுக்கும், டம்பமுதலான மத்திம குணங்களுக்கும், களவுமுதலான அதமகுணங்களுக்கும் காரணமா னவையென்று ஒருவாறு அறியலாம்.

அந்த மகத்திலிருந்து அகங்காரம் என்னுந் தத்துவமுண்டாம். அதினின்றும் தேவர்களும் இந்திரியங்களும் பூதங்களும் உண் டாயின. பூதங்களுண்டான முறையாவது, முதலில் ஆகாசம், அதினின்றும் வாயு, அதில் அக்கினி, அதில் தண்ணீர், அதில் பூமி, என்பதே. இவ்வாறு உண்டான பஞ்சபூதங்களுங் கலந்து ஓரண்டமாயின. அந்த அண்டத்தினுள்ளே ஒரு புருஷனுண்டா னான். இவன் அந்தப்பரமாத்துமாவின் அம்சத்தினால் உண்டா னவன், இவனே பிரமதேவ னென்பார்கள். இவன் அந்த அண் டத்தில் அனேக லோகங்களையும், சமுத்திரம், பருவதம்முதலான வைகளையும், மிருகம், பக்ஷி, மனுஷியர், தேவதைகள், முனிவர் முதலான சகலத்தையும் படைத்தான். இப்படியாக இந்தப் பூத விகாரமெல்லாம் ஆத்மாக்களின் கருமத்தினாலுண்டானவை. அசே தனமான அவைகளுக்கு வேறேபயனில்லை. ஆத்துமாக்கள் அணு ரூபங்களாய், நித்தியங்களாய், ஞானஸ்வரூபிகளாய் இருக்கும். அவை அனந்தங்கள். அநாதியாய்க் கருமத்தினாலே மாயையெ ன்கிற பிரகிருதியிலே உட்பட்டு ஜநநமரணாதி அவஸ்தைகளை அடைந்துகொண்டிருக்கின்றன. எல்லாவற்றிலும் தேவசன்மம் மேலானது. அதில்தாழ்ந்தது மனிதசன்மம். அதிலுந்தாழ்ந்தது விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, முதலான திரியக்குச் சன்மம். அதினுமிழிந்தது மரம் புல் முதலான தாவரசன்மம். இவைகளிலே ஒவ்வொன்றிலு முண்டான தாரதம்மியம் பிரத்தி யக்ஷசித்தமல்லவா? இவ்வாறு நல்வினை தீவினை யென்கிற கரும வசத்தால் நற்கதியையும் துர்க்கதியையும் மாறி மாறி யனுபவித்துக் கொண்டே வந்து ஞானத்தினால் கடவுளை உபாசிக்கநேரிட்டபொ ழுது மோக்ஷமடைந்து நித்தியானந்தத்தைப் பொருந்துவார்கள்.

தேவதைகள் இயற்கையான தேவதைகளென்றும் கருமதேவதை களென்றும் இருவகைப்பட்டிருப்பார்கள். இந்திரன், அக்கினி, யமன், சூரியன், வாயு, வருணன் முதலானவர்கள் இயற்கையான தேவதைகள். இயற்கையான தேவதைகள் என்றால் உலகத்தின் உபயோகத்துக்காக அவ்வவ்வதிகாரத்தோடு ஆதியில் படைக்கப் பட்டு வேதத்தில் விதித்த யாகாதிகளுக்கு உத்தேசியராய்த்தொழப் பட்டுத் தங்கள் அதிகாரங்களைச் செலுத்திக் கடைசிவரைக்கும் இருந்து அழிபவர். கருமதேவதைகளோ புண்ணியத்திற்கேற்பச் சொர்க்காதி லோகங்களிலே போகங்களையநுபவித்து புண்ணியக்

கழிந்தவுடனே அங்கிருந்து தள்ளப்படுபவர். யக்ஷர், கின்னரர், கந்தருவர், முதலானவர்கள் தேவதைகளின் பிரிவுகள். பிதுரு தேவதைகளென்பவர்கள் இறந்துபோனவர்களுடைய புத்திராதிகளால் செய்யப்படுங் கருமங்களினாலே திருப்தியடைந்து இறந்தவருக்கும் அவரினத்தாருக்கும் நேர்ந்த துர்க்கதியை நீக்கவும் நற்கதியை யளிக்கவும் வல்ல ஒருவகை தேவதைகள். சந்தானம் சம்பத்துமுதலான இம்மைப்பயன்களையும், இந்திரலோகபோகம் பிதுர்லோகபோகம் முதலான மறுமைப்பயன்களையும் பெறும்படி சாஸ்திரங்களில் பலவகைக் கருமங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; இவைதாம் புண்ணியங்கள்; மறுக்கப்பட்டிருக்கிற கொலை, களவு முதலிய செய்கைகள்தாம் பாவம். இவற்றினால் நரகானுபவமும் இழிவுந் துன்பமுமுள்ள பிறப்பும் கிடைக்கும். இப்பாவபுண்ணியம் இரண்டும் பற்றற்று ஆத்துமஞானங் கைகூடினபோது மோக்ஷம் கிடைக்கும். [தொடர்ச்சி.]

பாஷாவிஷயம்.

[௫௭-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

இப்படியிருக்கையில் ஒரு வசந்தகாலத்தில் வங்கிய சூடாமணிபாண்டியன் தன்மனைவியோடு ஒருநாள் நந்தனவனத்திற் போயிருக்கும்போது இளந்தென்றல் அதிக பரிமளத்துடன்வீச, இஃதெப்புட்ப வாசனையுமன்றி ஓர் திவ்வியவாசனையாயிருக்கும்படி யென்னென்று அதிசயித்து, அது தன் பக்கத்திருக்கும் தன் மனைவியின் அளகபாரத்து வாசனையாயிருக்கக்கண்டு இவ்வாசனை இவள் அளகபாரத்துக் கியற்கையாயுள்ளதோ அல்லது செயற்கையால் வந்ததோ என்று சங்கித்து, இப்போது என்சங்கையறிந்து யாராவது ஒரு கவிசெய்தால் அவர்களுக்கு ஆயிரம்பொன் கொடுப்பேனென்று ஒரு பொற்கிழிகட்டி ஏவலாளிகள் கையிற்கொடுக்க, அவர்கள் அதை வாங்கிப் போய் அரசன் சொன்ன சங்கதியைச் சொல்லி சங்கப்புலவர்களுக்கெதிரில் கட்டினார்கள். அப்போது சங்கப்புலவரோவ்வொருவரும் யோசித்துப் பார்த்து பாண்டியன் கருத்தையறியாமல் வியாகுலமடைந்திருந்தார்கள்.

இவர்கள் இப்படியிருக்க, ஒரு சிவத்துவிஜன்மகனான தருமியென்னும் பெயருள்ள பிரமசாரியானவன் பொற்கிழி கட்டியிருப்பதைக் கேள்வியுற்று அது தனக்குக் கிடைத்தாற் கலியாணஞ் செய்துகொள்ளலாமென்று கருதிச் சொக்கநாதசுவாமியைத்தொழுது தோத்திரஞ்செய்து, "சுவாமீ! தாய் தந்தையில்லாத எளியேனுக்குப் பாண்டியன் கருத்துக்கிசைய ஒருகவி எழுதிக் கொடுத்தால் அதைக் கொண்டுபோய்க் கொடுத்து அப்பொற்கிழி யவிழ்த்துப் போய் விவாகஞ் செய்துகொண்டு தேவர் திருவடி அருச்சனைக்கு யோக்கியனாவேன்" என்று பிரார்த்திக்க, சொக்கநாதசுவாமி கிருபைகூர்ந்து,—

"கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற்செறியெயிற்றரிவை கூந்தலி
னறியவுமுளவோ நீயறியும் பூவே"

என்னுங் கவியை எழுதிக் கொடுக்க, தருமியும் சுவாமியைத் தொழுது சந்தோஷத்துடன் அதை வாங்கிக் கொண்டுபோய்ச் சங்கப்புலவரிடத்திற் கொடுக்க, அவர்கள் அதை வாசித்துப்பார்த்துச் சொல்லழகும் பொருட்பொலிவும் நன்றாயிருக்கின்றதென்று வியந்து பாண்டியராசனுக்கு அப்பாடலைப் படித்துக் காட்டப் பாண்டியன் கேட்டு சிரக்கம்பஞ் செய்து தருமியைப் பார்த்து நீர் இப்புலவருடன் போய்ச் சங்கமண்டபத்திற் கட்டியிருக்கும் பொற்கிழியை அவிழ்த்துக் கொள்ளுமென்று உத்திரவு செய்யத் தருமியும் சங்கமண்டபத்தில் நொங்கக் கட்டிய பொற்கிழியை அவிழ்க்கத் தொட்டமாத்திரத்தில், நக்கீரர் வந்து 'அடா! நீ கிழியை அவிழ்க்காதே, நீ கொண்டு வந்த பாட்டிற் குற்றமிருக்கிறது' என்று சொன்னார். தருமி அதைக் கேட்டவுடனே மிகுந்த துயரமடைந்து சொக்கநாதசுவாமி சந்நிதியிற்போய் அப்பாடலை வைத்துப் பணிந்து, 'ஐயரே! இப்பாடலை என் கையிற் கொடுத்தது மிக நன்றாயிருக்கின்றது. என் கலியாணத்துக்குப் பொருள் கிடைக்கவில்லையே யென்கிற மனவருத்தம் அடியேனுக்கில்லை. சில்நாள் பல்பிணிச் சிற்றறிவினோராய சங்கப்புலவர்கள் தேவரீர் பாடலுக்குக் குற்றஞ் சொன்னார்களே என்கிற விசனம் என்னை வருத்துகின்றது' என்று வருந்த, சுவாமியானவர் ஒரு புலவராக வேடம்பூண்டு சங்கத்தார் முன்பு சென்று நின்றுகொண்டு 'நம்முடைய கவிக்குக் குற்றஞ்சொன்னவன் யாவன்' என்று கேட்க, நக்கீர தேவர் கொஞ்சமும் அஞ்சாமல் 'நான்தான் சொன்னவன்' என்றார். ஆனால் அக்குற்றத்தைச் சொல்லென்ன, மாதர் கூந்தலுக்குப் புட்பத்தின் சேர்க்கையால் வரும் செயற்கை வாசனையேயன்றி இயற்கை வாசனை உண்டென்று சொன்னதுதான் குற்றமென்ன, 'பத்மினிசாதி ஸ்திரீயின் கூந்தலுக்கும் இயற்கை வாசனை யில்லையோ' என்ன, அதற்கும் செயற்கை வாசனையே யன்றி இயற்கை வாசனையில்லை யென்ன, 'தேவதாஸ்திரீயின் கூந்தலுக்கோ' வென்ன அதுவுங் கற்பக மலரையணிவதனால் செயற்கை வாசனையுள்ளதே யென்ன, 'நீ வந்தித்து வழிபாடு செய்கின்ற காளத்தீசருடைய வாமபாகத்தில் வீற்றிருக்கின்ற ஞானப்பூங்கோதையார் கூந்தலோ' என்ன, அதுவும் அப்படியே யென்று நக்கீரர் தங்கொள்கையை விடாமல் சாதிக்க, இன்னும் இவன் தைரியத்தை வெளியிடுவோ மென்று

"கற்றைவார்சடையானெற்றிக் கண்ணினைச்சிறிதேகாட்டப்
பற்றுவானின்னுமஞ்சா னும்பரார்பதிபோலாக
முற்றுநீர்கண்ணானாலு மொழிந்தநும்பாடல்குற்றங்
குற்றமேயென்றான்றன்பா லாகியகுற்றந்தேரான்"

" தேய்ந்தநாண்மதிக்கண்ணியா னுதல்விழிச்செந்தீப்
பாய்ந்தவெம்மையிற்பொருதுபொற் பங்கயத்தடத்தா
ளாய்ந்தநாவலன்போய்விழுந் தாழ்ந்தனனவனைக்
காய்ந்தநாவலனிம்மெனத் திருவுருக்கரந்தான்"

[புலவர் பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள் தமது நெற்றிக் கண்ணைச் சற்றே திறந்து காட்டினார். அதைக் கண்டும் பயப்படாமல் தேவேந்திரன்போல் உடம்பெல்லாங் கண்ணாகக் காட்டினாலும் நீர் சொன்ன பாடல் குற்றமுள்ளதே என்று சொல்லிச் சுவாமியினுடைய நெற்றிக் கட்டியினது வெப்பத்துக் காற்றாராய்ப் பொற்றாமரை யென்னும் புண்ணிய தீர்த்தத்திற் போய் மூழ்கி விட்டனர். புலவர் வேடம்பூண்டுவந்து வாதாடிய சோமசுந்தரக்கடவுளும் அந்தர்த்தானமாய்விட்டனர்.] அதுகண்டு கபிலர் பரணர் முதலிய மற்றைப் புலவர்கள் பயந்து மனம் நடுங்கி இனி என்செய்வோம், நக்கீரர் தேடிக்கொண்ட குற்றம் எளிதானதல்ல; சொக்கநாதசுவாமி செய்த பாடலென்று தெரிந்த பின்புங் குற்றஞ்சொன்னாரே, அப்படிச் சொல்லலாமா, இந்தக் குற்றம் அவராலே தீரவேண்டியதே யன்றி மற்றொருவரால் தீரத்தக்கதல்ல, ஆகையாலினி நக்கீர தேவர் பிழைப்பதருமையென்று எல்லாரும் இரக்கமுற்று,

" என்றவேந்தனிலாக்குடி யீட்டமுமின்கதிர்
கான்றநாயகமாமணி போகியகண்டியு
மான்றஞானமிலாதவர் கல்வியுமானதே
சான்றகீரனிலாதவை கூடியசங்கமே"

[நக்கீர தேவரில்லாத நம்முடையசபை அரசனில்லாத நாடு போலவும் நாயகமணியில்லாத மதாணிப்பதக்கம் போலவும் மெய்ஞ்ஞானமில்லாதவர் கற்ற கல்வி போலவும் பொலிவிழந்திருக்கிறது] என்று வருந்தி சொக்கநாதசுவாமியின் சந்நிதியிற்போய் அவர் பாதாரவிந்தங்களிற்பணிந்து பலவாறு தோத்திரஞ் செய்து, ' எங்கள் ஐயரே ! நக்கீரன் தெரியாமற் செய்த பிழையைப் பொறுத்தருளல்வேண்டும்,' என்று போற்றி செய்தார்கள்.

சொக்கநாதசுவாமியும் திருவுளமிரங்கி மீனாக்ஷிசமேதராய் தீர்த்தக் கரையி லெழுந்தருளிக் கிருபை கூர்ந்து நோக்கவே வெப்பம் நீங்க, நக்கீரர் சொக்கநாதசுவாமியின் திருவடிகளில் மிக்க அன்புடையராய் உலகமாதாவாகிய ஞானப்பூங்கோதையாருடைய அளகபாரத்துக்கும் செயற்கைவாசனையேயன்றி இயற்கைவாசனை யில்லையென்ற குற்றத்தைத் திருக்காளத்தியில் வீற்றிருக்கும் கடவுளே க்ஷமிக்க வேண்டுமாகையால் அவரையே தோத்திரஞ்செய்ய வேண்டுமென்று நினைத்து,

" சொல்லும் பொருளுமே தூத்திரியு நெய்யுமா
நல்விடிஞ்சி லென்னுடைய நாவாகச் — சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகற் கேற்றினேன் பெற்று"

" பெற்ற பயனிதுவே யன்றே பிறந்தியான்
கற்றவர்க ளேத்துஞ்சீர்க் காளத்திக்—கொற்றவற்குத்
தொளாகத் தாடரவஞ் சூழ்ந்தணிந்த வம்மானுக்
காளாகப் பெற்றே னடைந்து.

" அடைந்துய்ம்மி னம்மானை யும்மாவி தன்னைக்
குடைந்துண்ண வெண்ணியவெங் கூற்றங்—கடைந்துநுங்
கண்ணுளே பார்க்கும் பொழுது கயிலாயத்
தண்ணலே கண்டீ ரரண்.

" அரண மொருமூன்று மாரழலாய் வீழ
முரணம்பு கோத்த முதல்வன்—சரணமே
காணுமா றுற்றவன்றன் காளத்தி கைதொது
பேணுமா றுள்ளம் பெரிது."

என்பவை முதலாகக் கயிலையைக்குறித்து ஒரு வெண்பாவும் காளத்தியைக் குறித்து ஒரு வெண்பாவுமாக அந்தாதிக்கிரமத்தில் நூறு வெண்பாக்கள் பாடித்துதித்தார். அந்தப் பிரபந்தத்திற்குக் கயிலைபாதிகாளத்திபாதியந்தாதி என்று பெயர். அந்தப் பிரபந்தத்தைச் சொக்கநாதசுவாமியானவர் கேட்டருளிக் கிருபை கூர்ந்து நக்கீரர்கையைத் தம்முடைய திருக்கரத்தினால் பற்றிக் கரை யேற்றினார். உடனே நக்கீரர் சோமசுந்தரக்கடவுளைப் பணிந்து குற்றஞ் செய்தவர்களுக்குத் தண்டனையும் பத்தி செய்தவர்களுக்குக் கிருபையும் புரிந்தருளிய தன்மையைப் பொருளாகவைத்து ஒரு பிரபந்தம் பாடினார்; அப்பிரபந்தத்துக்குக் கோபப் பிரசாதம் என்று பெயர். பின்னும் சோமசுந்தரக் கடவுள் விஷயமாய் போற்றிக்கலிவெண்பாவும், பெருந்தேவபாணியென்றுஒரு தோத்திரப் பிரபந்தமும், திருவெழுகூற்றிருக்கையும், பாடிப்பணிந்தார்; மற்றைப் புலவர்களும் தனித்தனி பாடித் துதித்தனர்.

அப்பொழுது சோமசுந்தரக்கடவுள் நக்கீரரைக் குளிரநோக்கி நீமுன்போல் இப்புலவர்களோடு சங்கமண்டபத்தில் போயிரு வென்று கட்டளையிட்டு மறைந்து விட்டார். அக்கட்டளைப்படி நக்கீரரும் மற்றவர்களும் சங்கமண்டபத்திற் போயிருந்து அவ்விடத்திற் கட்டியிருந்த பொற்கிழியை அவிழ்த்துத் தருமிக்குத் தந்து, பின்னும் பாண்டியராஜனைக் கொண்டு பலவரிசைகள் கொடுப்பித்துத் திருவாலவாயினுடைய திருவருட் பெருமையை வியந்தவர்களாய்ச் சங்கமண்டபத்தில் கல்வி ஆராய்ச்சி செய்து வருகையில் ஒருநாள், சொக்கநாதர் நக்கீர தேவருக்குத் தரிசனமாகி, இவனுக்கு இலக்கணம் இன்னும் போதிக்க வேண்டு மென்று திருவுளம் பற்றி அகஸ்திய முனிவரைக் கொண்டு அவருக்கு இலக்கணம் போதிப்பித்தருளினார். [தொடர்ச்சி.]

ஆரணியகாண்டம்.

மாரீசன்வதைப்படலம்.

[௭௧-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

121.—நாளின் நீளம் ஓர் தஞ்சு உற நஞ்சு உறு பிரிவினை விடுவது ஓர் தயாவு தாங்கலால் - பகற்காலத்தின் நீட்சியானது ஒருஆதாரமாக(நின்று) விஷம்போல் தமக்கு நேர்ந்த பிரிவினை நீக்குவதாகிய ஒப்பற்ற தயவைப் பெற்றிருப்பதால், நேமிப்புள் எலாம் - (ஆணும் பெண்ணும் ஆகிய) சக்கிரவாக பக்ஷிகளெல்லாம், வெம் சிறை நீங்கிய வினையினார் என - கொடிய சிறையினின்று விடுபட்ட நல்வினையாளர்போல, நெஞ்சு உற களித்தன - மனம்மிகக் களிக்கப் பெற்றன, எ - று.—விடுவது - இங்கு பிறவினை.

122.—பாடல் தும்பி - இசைவண்டுகள், நாள் மதிக்கு அல்லது நடுவண் எய்திய ஆணையின் நீக்கலா அலரில் பாய்வன - (உதித்தலாலே) புதிய சந்திரனுக்கல்லது [சந்திரோதயமானாலல்லது] இடையில் நேர்ந்த யாருடைய ஆக்கினையினாலும் இதழ்களைவிரியாத (ஆம்பல் முதலிய) புஷ்பங்களில் பாய்வனவாகி, மாண் வினை பயன்படா மாந்தர் வாயில் சேர் பாணரில் தளர்ந்தன - நற்செய்கைகளில் பிரயோசனப்படாத மனிதருடைய தலைவாயிலைச் சேர்ந்த [சேர்ந்து உள்ளே செல்லுதற்குக் கதவு திறக்கப்பெறாத] இசைப்புலவர்களைப்போல சோர்வடைந்தன, எ - று.—நாண்மதி - நக்ஷத்திரங்களோடு கூடிய சந்திரனென்றுமாம்.

123.—எரி கதிர் அரு மணி சாளரமதனினூடு புக்கு இன் துயில் எழுப்பிஎற்ற உம் - சூரிய கிரணங்கள் அரிய மணிகளாற் சமைக்கப்பெற்ற பல கணிகளின் வழியாய் உள்ளே புகுந்து இனிய தூக்கத்தினின்று எழுப்பவும், மங்கையர் - யுவதி ஜனங்கள், தெருள் உற மெய் பொருள் தெளிந்திலாரின் - அறிவு இருக்கவும் தத்துவ முணராதவர்போல, மருள் ஒடு தெருள் உறு நிலையர் - (சற்று) மயக்கமும் (சற்று) தெளிவுமுள்ள நிலையையுடையவராய் இருந்தார்கள், எ - று.—தெருளுற மெய்ப்பொருள் தெளிந்திலாரின் - என்பதற்கு தெளிவாகத் தத்துவப்பொருளை யறியாதவர்போல என்றும் சொல்லலாம்.

124.—ஏவலின் வன்மையை எண்ணல் தேற்றலா - ராவணேசுவரனுடைய ஆஜ்ஞாபலத்தை யறியாமல், நாவலர் இயற்றிய நாமம் நாளின் நூல் - பண்டிதர்களியற்றிய பிரஸித்தமான ஜோதிடநூலை, காவலின் இனிது உணர் கணிதமாக்களும் - (மனதை ஒருப்படுத்திக்) காத்தலினாலே நன்றாயுணர்ந்த கணிகர்களும், கூ உறு கோழி உம் - (வைகறையில்) கூவுதலைப் பொருந்திய கோழிகளும், துயில்வுகொண்ட - உறங்கிக்கிடந்தன, எ - று.—கூ - முதனிலைத்தொழிற்பெயர்.

125.—இனையன உலகினில் நிகழும் எல்லையில் - இப்படிப்பட்ட காரியங்கள் உலகத்தில் நடந்துவருகையில், கனை கழல் அரக்கன் உம் கண்ணின் நோக்கினான் - சப்திக்கின்ற வீரகண்டையை யணிந்த ராவணனும் பிரத்தியக்ஷமாகப் பார்த்து, நினை உறு மனத்தை உம் நெருப்பில் தீக்கும்ஆல் - நினைக்கின்ற மனதையும்இதுநெருப்புப்போல தகிக்கின்றமையினால், அனைய அ திங்கள் ஏ ஆகும் என்றான் - அப்படிப்பட்ட அந்த சந்திரனே யாகுமென்றான், எ - று.

126.—சிலர் - (அப்போது அருகிலிருந்த) சில பரிசனங்கள், செல்வ - அகண்டைசுவரியமுள்ள ஓ ராவணேசுவரனே, இது திங்கள் அன்று - இப்போது உன்கண்முன்னிருப்பது சந்திரனன்று; பொங்கு உளை அம் பச்சை புரவி தேரது ஆல் செம்கதிர் (ஏ ஆகும்) - மிக்க பிடரி மயிரையுடைய அழகிய பச்சைக்குதிரை கட்டிய தேரையுடையது ஆதலால் (இது) சூரியனேயாகும்; (மேலும்) வெம்கதிர் மெய் உற சுடுவது ஏ அன்றி - சூரியன் உடம்பிலுறைக்கும்படி சுடுவதேயன்றி, தங்கு தண்கதிர் சுட தகாது என்றார் - குளிர்ச்சிபொருந்திய சந்திரன் சுடத்தக்கதன்று என்று சொன்னார்கள்.

127.—(அப்போது) சிகர நீல கிரி அன்னவன் - சிகரங்களையுடைய நீல மலைபோன்றவன் [இராவணன்], ஆலத்தின் உம் வெய்யன் நின்ற வெய்யோன் அகற்றி - நஞ்சினுங்கொடியனாகி நின்ற இந்தச் சூரியனை நீக்கி, அரற்றுகின்ற வேலை குரலை தவிர்க என்று விலக்கி - கோஷிக்கின்ற கடலை இரையவேண்டாமென்று தடுத்து, மேலை மாலை பிறை பிள்ளையை வல்லை கூவுதிர் என்றான் - மேற்றிசையில் மாலைக்காலத்திற் றோன்றுகின்ற பால சந்திரனை விரைவிலழையுங்கள்என்று கட்டளையிட்டான், எ - று.—நீலக்கிரி இராவணனுடையஉருநிறங்களுக்கும், சிகரங்கள்அவன்தலைகளுக்கும்உவமை. தவிர்கென்று என்பதில். அகரம் தொகுத்தல்.

128.—நிருதர்க்கு இறை அ மொழி சொன்னான் - இராக்ஷஸராஜன் [ராவணன்] அந்த வார்த்தை சொன்னான், சொல்லலோடு உம் அ நாளில் நிரம்பிய அம் மதி ஆண்டு ஓர் வேலை மு நாளின் இளம் பிறை ஆகி முளைத்தது என்றால் - சொன்னமாத்திரத்தில் அப்பொழுதே கலைகள் நிறைந்த அழகிய சந்திரன் [பூர்ணசந்திரன்] அவ்விடத்தில் ஒப்பற்ற கடலினின்று (பூர்வபக்ஷத்தில்) மூன்றுநாளுக்குரிய பாலசந்திரனாகி யுதித்ததென்றால், அ நாள் உம் அருந்தவம் அன்றி இயற்றல் ஆம் ஓ - எக்காலத்திலும்அரிய தவந்தவிர வேறொன்றைச் செய்யத்தகுமா [தகாது], எ - று.—இதனால் இராவணனது தவப்பெருமை கூறப்பட்டதாம்.

129.—குடபாலின் முளைத்தது கண்ட குணங்கள் தீயோன் - மேற்றிசையில் (சந்திரன்) உதித்ததைக் கண்ட குணக்கேடன் [இராவணன்], வடவை அனல் - (இது) வடவைத்தீ (ஆகும்); அன்று எனின் மண் பிடர் வைத்த பாம்பின் வாள் விட எயிறு - அல்லவென்றால் பூமியைப் பிடரியினாற் றாங்கிக்கொண்டிருக்கிற பாம்பினது [ஆதிசேஷனது] வாள்போன்ற [அல்லது ஒளிபொருந்திய] நச்சுப்பல்லாகும்; அன்று எனின் ஏனை வெகுண்ட மாலை

அட உருவிக்கொடு தோன்றியது வாள் ஆகும் - அல்லவென்றால் என்னைக் கோபித்த மாலைப்பொழுதாகிய பகைவன் (என்னைக்) கொல்வதற்கு உருவிக் கொண்டுவந்த வாளாதல் வேண்டும், எ - று.—வடவை - ஊழித்தீ; படபா என்னும் வடமொழிச்சிதைவு. அனல்-அநலம் என்னும் வடமொழிச்சிதைவு [அநிலம் - காற்று]. சந்தர்ப்பநோக்கி சந்திரன் என்பது வருவித்துரைக்கப்பட்டது. குணங்கடீயோன் - இது வடநூல் நடைபற்றிய தொகைநிலைத்தொடர் மொழி, தமிழ்நடைப்படியிருந்தால் தீயகுணத்தோன் என்றிருக்கும்.

130.—தண் தரங்கம் மோதும் கடலிற்கு இடை முந்து பிறந்த போது எ ஓதும் கடுவை தன் மிடற்றின் ஒளித்த தக்கோன் - குளிர்ச்சியுள்ள அலைகளை மோதுகின்ற கடலின் நடுவில் [திருப்பாற்கடலில்] பூர்வத்தில் [பாற்கடலைக்கடைந்தகாலத்தில்] தோன்றினபொழுதே யாவரும் கொடியதென்று சொல்லுகிற விஷத்தை தனது கண்டத்தில் மறைத்த மேலான சிவபெருமான், ஈது உம் தாது உண் சடில தலைவைத்தது - இச்சந்திரனையும் செவ்விய ஜடாமகுடத்தில் வைத்ததற்குக் காரணம், கடு ஆம் என எண்ணிய எண்ணம் அன்று எ - வெள்விடமென்று நினைத்த நினைப்பல்லவா, எ - று.—மிடற்றின் - இன் ஏழனுருபு. சடிலம், தரங்கம் - வடமொழிகள்.

131.—உரும் ஒக்க உயிர் உலைந்து நுங்கிய திங்கள் ஒடி திரும் இ சிறு மின் பிறை தீமை குறைந்தது இல்லை - இடிபோல உயிர் வருந்த விழுங்கியசந்திரன் ஒடித் திரும்பிய இந்தச் சிறிய மின்னுகின்ற பிறைச் சந்திரனிடத்தில் கொடுமை குறையவில்லை; கருமைக்கு அறை நெஞ்சினில் நஞ்சு கலந்த பாம்பின் பெருமை சிறுமைக்கு ஒரு பெற்றி குறைந்தது உண்டு ஒ- கருமைக்கிடமாயிருக்கிற கண்டத்தில் விஷம்பொருந்தியபாம்பினது பெருமை சிறுமைகளால் ஒருதன்மையதான விஷம் குறைந்த துளதோ, எ - று.—பாம்பினிடத்தும் அதன்குட்டியினிடத்தும் விஷம் ஒரு பெற்றித்தாயிருப்பதுபோல நிறைமதியிடத்தும் குறைமதியிடத்தும் காமுகரைச் சுடுந்தன்மை ஒரு பெற்றித்தாயிருக்குமென்பது இதனால் விசதமாயிற்று.

132.—கன்ன கனியும் இருள் தன்னை உம் காண்டும் - மிகவுமுதிர்ந்த இருளின்குணத்தையும் பார்ப்போம்; முன்னை கதிர் நன்று - முன்னே தோன்றின சூரியனே நல்லவன்; இது முன்பு அகற்றுதிர் - இப்பிறையை முன்னே நீக்கிவிடுங்கள்; சான்ற என்னை சுடும் என்னின் - (சௌரியதைரியபராக்கிரமங்கள் முதலிய எல்லா வீரகுணங்களும்) நிறைந்த என்னையே (இது) சுடுமாயின் [வருத்துமாயின்], இ ஏழுஉலகத்து உம் வாழ்வோர்பின்னைசிலர்- இந்த ஸப்தலோகங்களிலும் வாழ்பவர்களுள்வேறு சிலராவது, உய்வர் என்று ஒரு பேச்சு உம் அங்கு உண்டு ஒ (என்றான்) - பிழைப்பரென்று சொல்லத்தக்க ஒரு வார்த்தையும் அவ்விடத்திலுளதாகுமோ என்று சொன்னான், எ - று.—'என்றான்' என ஒருவினை வருவித்து "குடபாலின்" என்னுங் கவிமுதல் இதுகாறும் ஒரு முடிபாக முடிக்க. கன்னக்கனியும் என்பது - சின்னஞ்சிறுத்த, பென்னம்பெருத்த, கன்னங்கறுத்த, செக்கச்சிவந்த, பண்ணைப் பணைத்த என்பனபோல மிகுதிப்பொருள் பற்றிவந்த கனிஎன்பதன் அடுக்கெ

னக்கொள்க. இதனைவடநூலார் க்ரியாஸமபிஹாரம் என்பர். கனியும்மிருள்- மகரம் விரித்தல்.

133.—ஆண்டு அ பிறை நீங்கலும் - அப்போது அந்தப் பிறை நீங்கினவுடனே, தீண்டற்கு எளிது ஆய் - தொடுதற்கெளிதாகி, தேய்ப்பன பல தேய்க்கல் ஆகி - தேய்ப்பனவாகிய பலவற்றையும் தேய்த்தற்குரியதாகி, வேண்டின் - விரும்பினால், கரபத்திரத்து ஈர்த்து விழுத்தல் ஆகி - வாளாற் பிளந்து தள்ளக்கூடியதாகி,காண்டற்குஇனிது ஆய் - பார்ப்பதற்குஇனியதாகி, பல கந்து திரட்டல் ஆகி - அநேகந்தூண்களைத் திரட்டி யெடுக்கத்தக்கதாகி, அந்தகாரம் எய்தியது - இருள் வந்தது, எ - று.—நீங்கலும் - ஓர்வகை வினையெச்சம், உம் - விகுதி. அந்தகாரம், கரபத்திரம் - வடமொழிகள்.

134.—முருடு ஈர்ந்து - முருட்டுத்தன்மையைப் பிளந்து நீக்கி, உருட்டற்கு எளிது என்பது என் - உருட்டுதற்குச் சுலபமென்று சொல்வதென்ன, முற்று உம் முற்றி - முழுதும் நிறைந்து, பொருள் தீங்கு இல் கேள்வி சுடர் புக்கு வழங்கல் இன்றி - பொருளினாலே தீமையில்லாத கேள்வியாகிய ப்ரகாசமானது ப்ரவேசித்து வழங்காமல், ஈங்கு இது குருடு என்ன - இது குருட்டுத்தனமேயென்று சொல்லும்படி, குறிக்கொண்டு - மதித்து, கண்ணோட்டம் குன்றி - தாக்ஷண்யமில்லாமல், அருள் தீர்ந்த நெஞ்சின் - கிருபையற்ற மனம்போல, அ அந்தகாரம் கரிது என்பது - அவ்விருள் கரிதென்று சொல்லப்படுவது, எ - று.

135.—விள்ளாது இடை செறிந்து - நீங்காமல் இடந்தோறும் நெருங்கி [நிபிடீகரித்து], மேல் உற ஓங்கி - மேலிடத்திலும் பொருந்தும்படி யுயர்ந்து, எங்கு உம் நள்ளாது - எவ்விடத்திலும் பற்றாமல், இருள் அந்தகன் - இருளாகிய யமன், ஞாலம் விழுங்கலோடு உம் - உலகத்தை விழுங்கினமாத்திரத்தில், விடம் உண்ட ஒருத்தன் - விஷத்தைப் பருகின ஒப்பற்றவனாகிய சிவபெருமான், எள்ளாது - இகழாமலும், உலகு யாவை உம் யாவர் உம் விழும் என்பது உள்ளாது - உலகிலுள்ள ஸகலமான நிலையியற்பொருள்களும் இயங்கியற் பொருள்களும் இறக்குமென்பதை நினையாமலும், உமிழ்ந்தான் என்றான் - கக்கினான் என்று சொன்னான் [குணங்கடீயோன்], எ - று.

136.—இது வேலைத்தலை வந்து ஒருவன் வலியால் விழுங்கும் ஆலத்தின் அடங்குவது அன்று - இவ்வந்தகாரமானது (பாற்) கடலில் தோன்றி உருத்திரன் ஒருவன் தனது வலியாலே விழுங்கிய விஷத்திலே சேர்ந்ததன்று; அறிந்துணர்ந்தேன் - நன்றாய் அறிந்துகொண்டேன்; (மற்றையாதெனில்) ஞாலத்தொடு விண் முதல் யாவை உம் நாவின் நக்கும் காலகனல் - இப்பூமியோடு ஆகாயமுதலிய சகலத்தையும் நாவினால் சுவைப்பதாக நக்கியெரிக்கிற காலாக்கினியாகும்; (ஆயின் அனல் இவ்வாறு கறுத்திருக்குமோவெனில்) கார் விடம் உண்டு கறுத்தது - கரிய விஷத்தையுண்டு அதனாலே கறுத்தது, எ - று.

137.—அம்பு உம் அனல் உம் நுழையா கன அந்தகாரத்து - பாணமும் அக்கினியும் நுழையப்பெறாத (இந்த) காடாந்தகாரத்திலே, செம்பும் தமியோன்

முன் - காமத்தால் வெதும்புகின்ற தனியனுன எனக்கெதிரில், அயல் ஒப்பு அரிது ஆய துப்பின் கொம்பர் - வேறு ஒப்பில்லாததாகிய ஓர் பவளக்கொடியானது [பவளக்கொடிபோன்றசீதை], உம்பர் மழை கொண்டு - தன்மீது மேகத்தைத் தாங்கி [மேகம்போன்ற கூந்தலைத்தாங்கி], குரும்பை குலம் கொண்டது - தென்னம் பிஞ்சுகளின் இரட்டையைக்கொண்டதாய் [தென்னங்காய்போன்ற இரண்டுஸ்தனங்களையுடையளாகி], திங்கள் தாங்கி - சந்திரனையும் சுமவாநின்று [சந்திரபிம்பம்போன்ற முகத்தையுந்தாங்கி], விளக்கு என தோன்றும் - தீபம்போல காணப்படுகின்றது [தேதீப்யமானமாய்க் காணப்படுகிருள்], எ - று.—இக்கவியும் மேலிற்கவியும் உருவெளித்தோற்றம். கொம்பர் - போலி.

138.—மருளொடு வந்த மயக்கு ஓ - சித்தப் பிராந்தியினுலுண்டான மயக்கமோ, மதி மற்று உம் உண்டு ஓ - புத்திதான்வேருயிற்ரே, தெருளாது - தெளியப்படாது; இது என் ஓ - இதற்குக் காரணம் யாதோ (அறிந்திலேன்); இணி மை இழைத்தால் உம் ஒவ்வா இருளொடு - செறிந்த அஞ்சனத்தைக் குழைத்துப் பார்த்தாலும் ஒத்திராத இருட்டில், ஓர் சுடர் மா மதி - கிரணங்களையுடைய ஒரு பூர்ண சந்திரன், இரு குண்டலம் கொண்டு உம் - இரண்டு குண்டலங்களைத் தரித்தும், இருண்ட நீல சுருளோடு உம் - கறுத்த இரவையொத்த கூந்தலோடு கூடியும், வந்து தோன்றும் - வந்து காணப்படுகின்றது, எ - று.

139.—பண்டு எ உலகு ஏழின் உம் உள்ள படை கண்ணுரை கண்டேன் - ஆதிகாலந்தொட்டே ஸப்தலோகங்களிலுமுள்ள வாள்போன்ற கண்களையுடைய மாதரைப்பார்த்திருக்கிறேன்; (அப்படி யான் பார்த்தவர்களுக்குள்ளே) இவர் போல்வதுஓர் பெண் உரு கண்டிலேன் - இவருருவையொத்ததாகிய ஒரு பெண்ணுருவை யான் பார்த்தறியேன்; உண்டே எனின் - (பிரத்தியக்ஷமாய் எதிரே) இருக்கிறதேயென்றுல், இனி வேறு எங்கை உணர்த்தி நின்ற வண்டு எறு கோதை மடவார் இவர் ஆகும் - இனி வேறே என்தங்கை [சூர்ப்பணகை] யறிவித்த (பூந்தேனைப் பருகுதற்கு) வண்டுகளேறப்பெற்ற கூந்தலையுடைய முக்தையானவள் [சீதை] இவளாயிருக்க வேண்டும், எ - று.—எங்கை - என்தங்கை என்பதன் மரூஉ.

140.—யான் இ பிணி பூண்டு உறுகின்றது தான் பொறுதாள் தேண்டிக்கொடு வந்தனள் - நான் இக்காமநோய்கொண்டு படுந்துயரத்தைக்குறித்து தான் சகியாதவளாய் (இந்நோயைத் தணிக்க என்னைத்) தேடிக்கொண்டு வந்தாள்; (ஆதலால் யானிவளுக்கு) செய்வது ஓர் மாறு உம் உண்டு ஓ - செய்யத்தக்கதாகிய கைம்மாறுமொன்றுளதா [இல்லையே]; காண்டற்கு இனியாள் உரு கண்டவள் கேட்கும் ஆற்றுல் - பார்த்தற்கினிமையாயிருப்பவளது வடிவைக்கண்டுவந்து சொன்னவளைக்கேட்டுணரவேண்டிய வழியொன்றிருப்பதனுல், எங்கையை ஈண்டு இ பொழுது எ விரைந்து கூவுக என்றுன் - என் தங்கையை [சூர்ப்பணகையை] இவ்விடத்தில் இப்பொழுதே சீக்கிரமாகக் கூப்பிடுங்கள் என்று கட்டளையிட்டான், எ - று.

141.—என்றுன் எனலும் - அப்படிக் கட்டளையிட்டானென்றவுடன், கடிது ஏகினர் கூவும் எல்லை - (ஏவலாளர்கள்) விரைவாய்ச் சென்று அழைத்தபொழுது, வன் தாள் நிருத குலம் வேர் அற மாய்த்தல் செய்வாள் - வலிய முயற்சியையுடைய (அல்லது, வலிய கால்களையுடைய) ராக்ஷஸவம்சமானது நிர்மூலமாய்ப் போகும்படி நாசஞ்செய்ய வந்தவளும், ஒன்றுத காம கனல் உள் தெறலோடு - பொருந்தாத காமாக்னியானது மனதைச்சுடுதலோடு, நாசி பொன் தாழ் குழை தன்னொடு உம் போக்கினள் - மூக்கை பொன்னுற் செய்யப்பட்டுத் தொங்குகின்ற குழையணிந்த காதோடும் இழந்தவளும் ஆகிய சூர்ப்பணகை, போய் புகுந்தாள் - (இராவணனிருந்த விடம்) போய்ச் சேர்ந்தாள், எ - று.

142.—பொய் நின்ற நெஞ்சின் கொடியாள் புகுந்தாளை - பொய் நிலைத்திருக்கிற மனத்தினுற் கொடியவளாய் வந்தவளை [சூர்ப்பணகையை], நெய் நின்ற கூர் வாளவன் நோக்கி - நிணந்தங்கிய கூரிய வாளாயுதத்தையுடையவன் [ராவணன்] பார்த்து, நங்காய் நேர் உற நோக்கு - பெண்ணே! நேராகப்பார்; மை நின்ற வாள் கண் மயில் நின்று என வந்து - மைதங்கிய வாள் போன்ற கண்களையுடைய ஒரு மயிலானது நின்றுற்போல வந்து, என் முன்னர் இ நின்றவள் ஆம் கொல் இயம்பிய சீதை என்றுன் - எனக்கெதிரே இதோ நிற்கிறவள்தானே நீ சொன்ன சீதையென்பவள் என்று கேட்டான், எ - று.

143.—செம் தாமரை கண்ணொடு உம் - செந்தாமரைப் பூவிதழையொத்த கண்களோடும், செம் கனி வாயினொடு உம் - செவந்த கோவைக் கனியையொத்த வாயுடனும், சந்து ஆர் தடம் தோளொடு உம் - சந்தனக் குழம்பு பூசப்பெற்ற பெரிய தோள்களோடும், தாழ் தட கைகளோடு உம் - (முழந்தாள் வரையில்) தொங்குகின்ற நீண்ட கைகளோடும், அம் தார் அகலத்தொடு உம் - அழகிய மாலையை யணிந்த மார்போடும், அஞ்சன குன்றம் என்ன வந்தான் இவன் அ வல் வில் இராமன் என்றுள் - நீலமலைபோலே வந்தவனுகிய இவனே அந்த பலிஷ்டமான வில்லையேந்திய இராமனுவான் என்று சொன்னுள் (சூர்ப்பணகை), எ - று.

144.—நான் கண்டது இது பெண்பால் உரு - நான் பார்த்ததாகிய [என்னுற்காணப்பட்டதாகிய] இந்தவுருவம்பெண்ணுருவம்; பேதை - பேதைமையுள்ளவளே [சூர்ப்பணகையே]! நீ ஈண்டு எண்பால் உம் இலாதது ஓர் ஆண் உரு என்றி என் ஏ - நீ இவ்விடத்தில் நினைவிலுமில்லாததாகிய ஒரு ஆணுருவமென்றுய் (இதற்குக் காரணம்) என்னையோ; கண் பால் உறு மாயை கவற்றுதல் கற்ற நம்மை - கண்ணெதிரே மிக்க மாயையினுற் பிறரை வருத்துதலைக்கற்ற நமக்கு, மாயை விளைப்பவர் மண்பாலவர் ஏ என்றுன் - மாயையைச்செய்பவர் பூலோகத்தவராகிய மானுடரோ என்று சொன்னுன், எ - று.—எண்பாலும் என்பதற்கு அஷ்டதிக்கிலும் எனப்பொருள் கூறுவாருமுளர். கண்டது - செயப்படுபொருளைச் செய்ததுபோலக் கூறும் ஓர் வழுவமைதி. பேதை - குணியின்மேலேற்றிக்கூறும்போது பண்பாகுபெயர். என்றி - முன்னிலையொருமை இறந்தகாலத் தெரிநிலை வினைமுற்று.

145.—ஊன்றும் உணர்வு அ புறம் ஒன்றின் உம் ஓடல் இன்றி - நிலைபெற்றிருக்கின்ற மனமானது அப்பால் வேறொரு விஷயத்தினும் செல்லுதலில்லாமல், ஆன்று உம் உளது ஆம் நெடிது ஆசை கனற்ற நின்றாய்க்கு - விசாலித்தும் உண்டாகிற பெரிதாகிய ஆசைத் தீயானது சுடும்படி நின்ற உனக்கு, உன் எதிர் ஏ விழி என்று நோக்கும் இடங்கள் தோறு உம் அனையாள் தோன்றும் - உனக்கெதிரில் உன் கண்கள்பொருந்திப் பார்க்கிற இடங்களிலெல்லாம் அந்தச் சீதையானவள் காணப்படுவாள்; இது தொல்நெறித்து ஆகும் என்றாள் - இப்படிக் காணப்படுதல் (காமுகர்க்குப்) பழைமையான மார்க்கத்தையுடையதே என்று சொன்னாள், எ - று.—கனற்ற என்றதனால் ஆசைத்தீயெனப்பட்டது. ஆன்று - என்னும் இறந்தகால வினையெச்சத்துக்கு அகல் என்பதன் மரூஉவாகிய ஆல் - பகுதி. கனற்ற - பிறவினையாகிய செயவெனெச்சம்; கனல் - தன்வினை. இதுதொன்னெறித்தாகும் என்றதனால் காமுகர்க்கு தம்மால்விரும்பப்பட்டவர் இங்ஙனங் காணப்படுதல் வழக்கந்தான் என்று சொல்லித் தன்னிலைமையையும் குறித்ததாகக் கருத்துக் கொள்க.

146.—அன்னாள் அது கூற - அவள் [சூர்ப்பணகை] அந்த வார்த்தை சொல்ல, அரக்கன் உம் - ராவணனும், அன்னது ஆக - அப்படியாகுக, நின்னால் அ இராமன் காண்குறும் நீர் என் என்றான் - உனக்கு அந்த ராமன் காணப்படுகிற தன்மை யென்னவென்று கேட்டான்; (அதற்குச் சூர்ப்பணகை) எ நாள் அவன் என்னை இ தீர்வு அரும் இன்னல் செய்தான் அ நாள் முதல் யாள் உம் அயர்த்திலன் ஆகும் என்றாள் - என்று அந்த ராமன் எனக்கு இந்த நீங்குதலில்லாத துன்பத்தை யுண்டாக்கினானோ அன்று முதலாக நானும் அவனை மறந்திலேன் என்று சொன்னாள், எ - று.—'இராமனை' என்பதில் ஐயும், 'காண்குறும்' என்பதில் குவ்வும் சாரியை. 'இத்தீர்வருமின்னல்' என்பதற்கு காது மூக்கு மறுப்புண்டதாகிய இத்துன்பம் என்பது போக்குரையாகவும், அவ்விராமனைக் கண்டவுடனே எனக்குள் ஜனித்த காமமாகிய இத்துன்பம் என்பது உள்ளுரையாகவுங் கொள்ளத்தக்கது. இவள் இராமனைக்கண்டு காமுற்றிருக்க, 'இன்னல் செய்தான்' என்றது பொருந்துமோவென்னில், தான்கருதியது கைகூடாமையின் பொருந்தும் என்க.

147.—(அதைக்கேட்ட ராவணன்) ஆம் ஆம் - உண்மைதான், அது அடுக்கும் - அது வொக்கும்; என் ஆக்கையோடு ஆவி நைய வேம் - (இப்பொழுது) எனதுடம்போயிரும் வேகின்றது; மால் வினையேற்கு இனி விடிவு என் ஆகும் என்ன - மயக்கத்தைச் செய்கின்ற தீவினையையுடைய எனக்கு இதற்குமேல் முடிவு என்னவாகுமோவென்று சொல்ல, (சூர்ப்பணகையானவள்) உலகுக்கு ஒரு கோமான் நீ குறைகின்றது என் - லோகத்துக் கெல்லாம் ஏகாதிபதியானவனே நீ குறைப்படுவதற்குக் காரணம் யாது; பூ மாண் குழலாள் தனைவவ்வுதிபோதி என்றாள் - பூச்சூடியமாட்சிமைப்பட்ட கூந்தலையுடைய சீதையை எடுத்துக்கொண்டு வா போ என்று சொன்னாள், எ - று.—

கோமானாகிய நீ எனவும் கூறலாம். பூ மாண் குழலாள், என்பதற்கு மலர்கள் மாட்சிமையடைதற்குரிய இயற்கை மணங்கமழப்பெற்ற கூந்தலையுடையாளெனினும் ஒக்கும். மாட்சிமைப்படுதலாவது - கூந்தலின் இயற்கைமணத்தைத்தாமடைந்து மேம்படுதல். உத்தமசாதிப்பெண்கள் குழலுக்கு இயற்கை மணமுளதென்பதை,—

* "கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்தும்பி"

என்னும் இறையனார் திருப்பாசுரத்தாலறிக.

148.—என்றாள் அகன்றாள் - என்று சொல்லிப்போனாள் (சூர்ப்பணகை), அ அரக்கன் உம் ஈடு அழிந்தான் ஒன்றான் உம் உணர்ந்திலன் ஆவி உலைந்து சோர்ந்தான் - அந்தராக்ஷஸனும் [இராவணனும்] பெருமை குன்றிச்சிறிதும் பிரஜ்ஞையற்றவனாய் உயிர் நடுங்கி மூர்ச்சை போனான்; நின்றார் உம் நடுங்கினர் - அருகில் நின்றவர்களும் நடுக்கமடைந்தார்கள்; (இப்படியிருக்க) நின்று உள நாளினால் ஏ பொன்றாது உளனாயினன் அ தூணை - அவன் சேஷாயுஸ்ஸாலே [ஆயுர் பலத்தாலே] இறவாதிருந்தானத்துணை, எ - று.— போலும், அன்று - அசைகள்; ஏ - ஈற்றசை. அரக்கன் ஈடழிந்தான் - இது திணைவழுவமைதி.

149.—இறந்தார் பிறந்தார் என இன் உயிர் பெற்ற மன்னன் - செத்தார் பிழைத்ததுபோல இனிய உயிரைப்பெற்றெழுந்த அரசன் [ராவணன்], மறந்தான் உணர்ந்தான் - மதிமயங்கி மீட்டுந்தெளிந்து, அவண் மாடு நின்றாரை நோக்கி - அவ்விடத்தில் அருகில் நின்றவரைப்பார்த்து, கறந்தால் என நீர் தரு சந்திரகாந்தத்தால் ஏ - கறந்தாற்போல [தாரைதாரையாக] நீரைச்சொரிகின்ற சந்திரகாந்தங்களாலே, சிறந்த ஆர் மணி மண்டபம் செய்க என செப்புக என்றான் - மேன்மையான அரிய மண்டபத்தைச் செய்யவேண்டுமென்று சொல்வீராக என்று கட்டளையிட்டான், எ - று.

150.—(சொன்னவுடனே) நெடு வான் உறை தச்சன் வந்தான் மனத்து உணர்ந்தான் - நீண்ட [மிகவுயர்ந்த] தெய்வலோகத்தில் வசிக்கின்ற தச்சன் [விசுவகர்மா] வந்து மனதில் ஆலோசித்து, அம் தாம நெடும் தறி ஆயிரத்தால் அமைத்த சந்து ஆர் மணி மண்டபம் - அழகிய வரிசையாகியநீண்ட ஆயிரந்தூண்களால் சமைக்கப்பட்ட நல்ல நிறம் பொருந்திய ரத்தினமண்டபமொன்றை, தாமரையோன் உம் நாண - (படைத்தற்றொழிலிலே கைவந்தவனான) கமலாஸனனும் நாணும்படி, சிந்தா வினை அன்றி உம் செய்வினையான் உம் செய்தான் - மானஸகர்மத்தால் (நிருமித்தது) மாத்திரமன்றி கைத்தொழிலாலும்செய்து முடித்தான், எ - று.—நெடுந்தறியாயிரத்தாலமைத்தமண்டபம் - ஆயிரக்கால்மண்டபம். சந்தம் - விகாரம். சிந்தாவினையன்றியும் - உம்மை எதிரதுதழீஇயது; செய்வினையானும் - உம்மை இறந்ததுதழீஇயது; தாமரையோனும் - உம்மை உயர்வு சிறப்பு.

151.—கால மீனின் வேந்தன் ஒளி அன்றி உம் - காலத்திற்றோன்றுகிற நக்ஷத்திரங்களுக்கதிபதியாகிய சந்திரனது பிரகாசத்தை [ஒளிபடுதலை]

* இப்பாசுரத்தை அஎ - ம் பக்கத்தில் பூர்ணமாய்க்காண்க.

யல்லாமலும், அமுதின் துளி கால்வன காந்தம் - அமிருதபிந்துக்களைச்சொரிவனவாகிய சந்த்ரகாந்தக் கற்களை, மேலொடு கீழ் விரித்தான்-மேலுங் கீழுமாகப்பரப்பி, பூ தென்றல் புகுந்து உறை சாளரம் உம் புனைந்தான் - புஷ்பவாசனையோடுகூடிய தென்றற்காற்றானது நுழைந்துலாவத்தக்க பலகணிகளையும் அழகாக அமைத்து, சீதள மணி ஏந்தும் கற்பக கா இழைத்தான்-குளிர்ச்சியான அழகைக் கொண்டிருக்கிற கற்பகச்சோலையையும் நிருமித்தான், எ - று.—கற்பகம் என்பது ஐந்தருவுக்கும் பொதுப்பெயரென்பர்.

152.—பூணின் பொலிவார் அ தெய்வ மடந்தைமார்கள் - தாமணிந்துள்ள ஆபரணங்களினுமிக்கிலங்குபவராகிய அந்ததேவதா ஸ்திரீகள், சேண் உற்ற இருள் சீப்ப - ஆகாசமட்டுமெளாவிய அந்தகாரத்தை நீக்கும்படி, ஆணிக்கு அமை பொன் கை சுடர் ஆர் மணி விளக்கம் புடை ஏந்திட - உரையாணிக்கேற்ற பொன்னாற் செய்த ஆபரணங்களையணிந்த கைகளிலே ஒளிநிறைந்த ரத்ந தீபங்களை பக்கங்களிலேந்தி நிற்க, பொங்கு தோளான்-விளங்குகின்றதோளையுடையவன் [ராவணன்], மாணிக்க மானத்திடை மண்டபம் காண புக்கான் - மாணிக்கவிமானத்தின் மேலேறி அந்த மண்டபத்தைப் பார்க்கவந்தான், எ - று.—பூணின் - இதில் ஐந்தனுருபு எல்லைப்பொருட்டு. பொன் - ஆகுபெயர். விமானம் - முதற்குறை.

153.—இருள் ஆயிர கோடி அல் அடுக்கியது ஒத்தது என் உம் - அந்தகாரமானது ஆயிரகோடி ராத்திரிகளை அடுக்கினதை ஒத்திருந்தாலும், நல்லார் முகம் ஆம் களிர் வால் நிலவு ஈன்ற நாம பல் ஆயிர கோடி பனி சுடர் ஈன்ற திங்கள் எல்லாம் உடனாய் - (ராவணனோடுகூடவந்த) மாதரது முகங்களென்கிற குளிர்ந்த வெண்ணிலாவை விரித்த ப்ரபலமான அநேகமாயிர கோடியாகிய சீதள கிரணங்களை விரித்த சந்திரர்களெல்லாம் ஒருசேரக்கூடினதனாலே, ஓடி இரிந்தது - (எதிர்நிற்கமாட்டாது) ஓடி யழிந்தது, எ - று.—என் - இது எனின் என்பதன் மரூஉ. உடனாய் - இதில் ஆய் ஆக வென்பதன் திரிபு.

154.—பொற்பு உற்றன மா மணி ஒன்பது உம் பூவின் நின்ற கற்ப தருவின் கதிர் நாள் நிழல் கற்றை நாறி - அழகு பொருந்தினவாகிய பெரிய நவரத்னங்களும் மலர்களைப் போல விரிந்து நிற்கிற கல்பவிருக்ஷத்தின் காந்தியாகிய புதிய சாயாஸமூஹந் தோன்றி, அல் பற்று அழிய பகல் ஆக்கியது - அந்தகாரத்தை [இரவை] பட்டப்பகலாகச் செய்துவிட்டது; அருக்கன் நிற்ப தெளிகின்றது நீள் சுடர் மேன்மை அன்று - சூரியன்நிற்க அறிகின்றது நீண்ட காந்தியின் மேன்மையினாலல்லவோ, எ - று.

155.—பொறி - ஐம்பொறிகளுள், ஊறு ஓசை முதல் யாவை உம் - ஸ்பர்சம் சப்தம் முதலான புலன்கள் எல்லாவற்றையும், ஒன்றின் ஒன்று தேறு நிலை உற்றது ஓர் சிந்தையன் - ஒரு பொறியினால் மற்றொருபொறிதெளியாத நிலைமையையடைந்ததாகிய ஏகசிந்தையுள்ள ராவணன், செய்கை ஓரான்-நடக்கவேண்டிய காரியத்தை யறியானாகி, வேறு ஆய பிறப்பிடை வேட்கை விசித்தது ஈர்ப்ப - மற்றொருஜந்மத்தில் ஆசாபந்தமானது கட்டியிழுக்க, மாறு

ஓர் உடல் உற்றால் என வந்து மண்டபம் புக்கான் - மற்றொரு சரீரத்தையடைந்தாலதைப்போல வந்து அந்த மண்டபத்திற் பிரவேசித்தான், எ - று.—இராவணன் தன்னியற்கை மாறினான் என்பது கருத்து. ஐம்பொறிகளாவன: மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐம்புலன்களாவன: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். பொறிகளை இந்திரியங்களென்றும், புலன்களை விஷயங்களென்றும் கூறுவர் வடநூலார்.

156.—தண்டல் இல் தவம் செய்வோர் வேண்டிய ஏ தர நல்கும் மண்டல மகர வேலை - கெடுதலில்லாத தவத்தைச் செய்பவர்கள் விரும்பினவற்றையே கொடுப்பதற்குத் தயைசெய்கின்ற வட்டவடிவமான மகரமீன்கள் சஞ்சரிக்கிற பாற்கடலானது, அமுதொடு உம் வந்தது என்ன - அம்ருதத்துடனே வந்ததுபோல, பண் தரும் சுரும்பு சேரும் பசு மரம் உயிர்த்த பசு பொன் தண் தளிர் மலரின் செய்த சீதள சேக்கை சார்ந்தான்-பண்களைப் பாடுகின்ற வண்டுகள் சேர்கின்ற பசிய கற்பக மரங்களால் தரப்பட்ட பசும் பொன்னிறமுள்ள குளிர்ச்சியான தளிர்களாலும் மலர்களாலும் செய்யப்பட்ட குளிர்ந்த சயனத்தில் சேர்ந்தான், எ - று—தாம் - அசை. தரவே என்பதிலுள்ள ஏகாரத்தை வேண்டிய என்னும் வினையாலணையும் பெயரோடு கூட்டுக. நீர்வேண்டாமலேவளர்வனவாதலின் பசுமரம்என்றார்.

157.—நேர் இழை மகளிர் கூந்தல் நிறை நறை வாசம் நீந்தி - தகுதியாகியஆபரணங்களையணிந்த மாதரது கூந்தலில்நிறைந்ததேனோடுகூடியவாசனையில் படிந்துவந்து, வேரி அம் சரள சோலை வேனிலான் விருந்து செய்-வாசனையுள்ள அழகான சரளச்சோலையில் மன்மதனது விருந்தைப்பண்ண, ஆர் கலி அமுதம் தந்த மருந்து என - கடலாகிய இடமானது கொடுத்த அம்ருதம் போல, ஒருவர் ஆவி தீரின் உம் உதவற்கு ஒத்த தென்றல் - ஒருவரது உயிரானது நீங்கினாலும் (அந்தவுயிரை) மீட்டுங்கொடுக்கத்தக்க தென்றற்காற்றானது, வந்து இறுத்தது - வந்து தங்கிற்று, எ - று—சரளம் - என்பது தேவதாருவிசேடம்; அது, "சரளமெனுந்தேவதாரு" என்பதனாலறிக. சரளச்சோலை - இளமரக்கா என்றுங்கூறுவர்.

158.—(அத்தென்றலானது) சாளரத்தூடு வந்து தவழ்தலும் - பலகணிவழியாய் வந்து தவழ்ந்த மாத்திரத்தில், தரித்தல் தேற்றான் - (அதைச்) சகிக்காதவனாய், நீள் அரத்தங்கள் சிந்தி நெருப்பு உக நோக்கும் நீரான் - அதிகமான ரத்தத்துளிகளைச் சொரிந்து நெருப்புப்பொறிகள் உதிரும்படி கண்களாற் பார்க்கின்ற தன்மையை யுடையவன் [ராவணன்], வாழ் மனை ஆண்டு ஓர் மாசுணம் புகுந்து வர கண்டால் அன்ன கோள் உற - வசிக்கும் வீடாகிய அவ்விடத்தில் ஒரு மலைப்பாம்பானது புகுந்து வருதலைக் கண்டாற்போன்ற துன்பமிக, கொதித்து விம்மி உழையரை கூவி சொன்னான் - துள்ளித்துடித்து அருகிலிருந்தவர்களை யழைத்துச் சொல்வானாயினான், எ - று—தென்றல் பொதிய மலையிற்றோன்றி வருவதாய்ச் சொல்லப்படுவதால், மலைப்பாம்பென்பது தோன்ற மாசுணம் என்றார். புகுந்துவர என்பதில் வரஎன்னும் செயவெனெச்சம் தொழிற்பெயர்ப்பொருளது.

159.—கூவலின் உயிர்த்த சில் நீர் உலகினை குப்புற்றால் என்ன - ஒரு சிறுகிணற்றினால் தரப்பட்ட சுவல்ப ஜலமானது உலகத்தை முழுத்தினதுபோல, தேவரில் ஒருவன் என்னை இன்னல் உம் செய்ய தக்கான் - தேவதைகளில் ஒருவனாகிய வாயுவானவன் என்னை துன்பஞ்செய்ய வல்லவனுமானான்; ஏவலின் அன்றி இங்கு வந்து இ வழி எய்திற்று என்னா - என்னுடைய உத்தரவினாலல்லாமல் இங்கேவந்து இச்சாளரத்தின் வழியாய் (தென்றலும்) என்மேற் படிந்தது என்றுசொல்லி, காவலின் உழையர் தம்மை கடிதின் கொணருதிர் என்றான் - காவற்றொழிலோரைவிரைவாய்ப் பிடித்துக்கொண்டுவாருங்கள் என்று கட்டளையிட்டான், எ - று.—கூவல்-கூபம் என்னும் வடமொழிச்சிதைவு; கூவம் என்பதும் அது. சின்னீர் என்றதில் சில் என்பது சிறுமைப் பண்பையுணர்த்திநின்றது; இது தகுதி.

160.—அ வழி உழையர் ஓடி - அப்போது அருகிலிருந்தவர் ஓடி, ஆண்டு அவன் கொணர்தலோடு உம் - அவ்விடத்திலிருந்த அந்தக் காவலாளியையழைத்து வந்தவுடனே, வெய்யோன் வெவ் வழி அமைந்த செம் கண் வெருவுற நோக்கி - கொடியவனாகிய ராவணன் க்ரூரமான சிவந்தகண்களால் அஞ்சும்படி பார்த்து, தென்றலோற்கு நீ கொல் செவ் வழி திருத்தினை என்ன - தென்றலென்பவனுக்கு நீதானா வழியைச் செப்பனிட்டாய் என்று கேட்க, (அந்தக்காவற்காரன்) இ வழி இருந்த கிலே அவற்கு தடை இல்லை என்றான் - இவ்வழி [பலகணிவழி] யிருக்கும் போது அவனுக்கு (என்னாற் செய்யக்கூடிய) தடையில்லை என்றுசொன்னான், எ - று.—தென்றலை தென்றலோன் என உயர்திணையாற் கூறியது கடவுட்சாதியானமைபற்றி என்க.

161.—காற்றினோன் தன்னை வாளா முனிதலின் கண்டது இல்லை-வாயுவை வீணாகக் கோபிப்பதனால் கண்டபயன் ஒன்று மில்லை; குறித்த ஆற்றால் வேல் தரும் கரும் கண் சீதை மெய் அருள் புனையேன் என்றால் இன்றே கூற்று வந்து என்னை குறுகும் - நான்குறித்தபிரகாரம் வேல்போன்ற கரிய கண்களையுடைய சீதையின் மெய்யான அருளைப் பெறுமற் போவேனானால் இப்பொழுதே யமன் வந்து என்னைக் கிட்டுவன்; (ஆதலின்) ஆற்றலால் அடுத்தது எண்ணும் அமைச்சரை கொணர்திர் என்றான் - தமது வித்யாஸாமர்த்தியத்தால் தகுந்த காரியங்களை யோசிக்குமந்திரிகளை அழைத்துவாருங்கள் என்றான், எ - று.—மெய்யருள் என்பது மனத்தொடுபொருந்திய அருள்; மெய்யருள் என்பதற்கு மெய்யையும் அருளையும் எனவுமுரைக்கலாம். அமைச்சர் - அமாத்திய சப்தபவம்.

162.—ஏவின சிலதர் ஓடி ஏ எனும் தனையின் எங்கும் கூவினர்-அப்படி ஏவப்பட்ட ஏவலாளிகள் ஒரு நொடிப்பொழுதிலே எவ்விடத்தும் ஓடி அழைத்தார்கள்; கூவலோடும் - அழைத்தமாத்திரத்தில், கொடி இன் தேரர் - கொடிகள் கட்டிய ப்லமான தேரேறினவர்களும், மாவினர் - குதிரையேறினவர்களும், சிவிகை மேலர் - தண்டிகை யேறினவர்களும், மழை மத களிற்றர் - மதவர்ஷத்தையுடைய யானை மேலேறினவர்களும் (ஆகி), வைய தேவர் உம் - பூசுரர்களும், வானம் தன்னில் தேவர் உம் - சுவர்க்கத்திலுள்ள சுரர்களும், சிந்தை சிந்த - மனம் நடுங்கும்படி, குறுகினர்-(மந்திரிமார்) வந்தார்கள், எ - று.—சிவிகை - இது சிபிகா என்னும் வடமொழிச்சிதைவு. வையத் தேவராவார் - முனிவர். வையகத்துள்ளவரும்எனப்பிரித்து பூமியிலுள்ளயாவரும் எனப்பொருள்கொள்ளினுமமையும்.

163.—சிந்தையில் நினைந்த செய்யும் செய்கையன் - மனதில் நினைத்தபடியே செய்துமுடிக்கின்ற செய்கையையுடைய ராவணன், தெளிவு இல் நெஞ்சன் - (இவ்விஷயத்தில் இன்னது செய்யவேண்டு மென்னும்) துணிவு பிறவாத மனமுடையவனாகி, வந்த மந்திரியரோடு மாசு அற மனத்தின் எண்ணி - வந்த மந்திரிமாருடனே குற்றமற மனதிற் சிந்தித்து, [ஆலோசித்து], அந்தரம் செல்வது ஆண்டு ஓர் விமானத்தின் - ஆகாசத்திற் செல்வதாகிய அங்குள்ள ஒருவிமானத்தின் மேலேறி, ஆர் உம் இன்றி இந்தியம் அடக்கி நின்ற மாரீசன் இருக்கை சேர்ந்தான் - வேறு ஒருவருமில்லாமல் [தனியேயிருந்து] பஞ்சேந்திரியங்களையு மடக்கித் தவநிலையில் நின்ற மாரீசனுடைய இருப்பிடத்தை அடைந்தான், எ - று.—தவஞ்செய்வோர்க்குத் தனிமை வேண்டுதலின் மாரீசன் அங்ஙனமிருந்து தவம்புரிந்தானென்பது தோன்ற ஆருமின்றி என்றார். தவத்திற்குத் தனிமை வேண்டுமென்பதை "தவத்துக்கொருவரும் தமிழுக்கிருவரும்," "ஏகஸ்தபோத்விதீயாய" என்னும் பழமொழிகளானுமறிக. இந்தியம் - இது இந்த்ரியசப்தபவம். இந்தியமடக்கலாவது, பொறிகளைத் தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ளாமலிருக்கச்செய்தல்; இது தவத்திற் கின்றியமையாதது.

164.—இருந்த மாரீசன் - வனத்திலிருந்த மாரீசனானவன், அந்த இராவணன் எய்தலோடும் - அந்தராவணன் வந்தமாத்திரத்தில், பொருந்திய பயத்தன் - பயமடைந்தவனாய், சிந்தை பொரு முற்று - மனம் பொருமி, வெருவுகின்றான் - அஞ்சாநின்று, கரும் தட மலை அன்னானை - கரிய பெரிய கிரியையொத்தவனை, எதிர் கொடு - எதிர் கொண்டு சென்று, கடன்கள் யாவும் திருந்திய செய்து - செய்யவேண்டிய கடமைகளெல்லாவற்றையும் செவ்வையாகச்செய்து, செவ்வி திரு முகம் நோக்கி செப்பும் - (ராவணனது) காந்தியுள்ள அழகிய முகத்தைப் பார்த்துச் சொல்வான், எ - று.—எய்தலோடும் என்னும் இறந்தகால வினையெச்சத்தில் ஒடு என்னும் இசைநிறைமொழி நீட்டல்பெற்றது. திருந்திய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். கடன்களாவன,—வந்தோர்க்குச் செய்யும் அர்க்கியம், பாத்தியம், ஆசமநீயம் முதலிய உபசாரங்களாம். செப்பும் - செய்யுமென் முற்று, ஆண்பாலுக்குவந்தது.

165.—சந்தம் மலர் தண் கற்பக நீழல் தலைவர்க்கு உம் - அழகிய புஷ்பங்களையுடைய குளிர்ச்சியான கற்பக மரநிழலிலிருக்கிற இந்திரனுக்கும், அந்தகனுக்கு உம் - யமனுக்கும், அஞ்ச அடுக்கும் அரசு ஆள்வாய் - அஞ்சுதற்குரிய அரசாட்சி செய்கின்ற நீ, இந்த வனத்து என் இன்னல் இருக்கைக்கு-இந்தக் காட்டிலுள்ள எனது துன்பத்தைத் தருவதாகிய இருப்பிடத்துக்கு, எளியோரின் வந்த கருத்து என் சொல்லுதி என்றான் - யாசகரைப்போல

16198

வந்த அபிப்பிராயம் என்ன சொல்லுவாய் என்று கேட்டான், மருள்கின்றான் - மயக்கமடைந்தவனாகிய மாரீசன், எ - று.—இந்திரனையும் யமனையும் சொன்னதனால் இது மற்ற திக்குப்பாலகர்களுக்கும் உபலக்ஷணமாகக் கொள்ளத்தக்கது. உம்மைகள் உயர்வு சிறப்போடு எண்ணுப்பொருள் படநின்றன. தவத்தினரது இருக்கை தழைக்குடில் [—பர்ணசாலை] ஆதலின் 'இன்னலிருக்கை' என்றான்; மாரீசன் இராவணனைச் சிறப்பித்துச் சொல்லிய முதலிரண்டடியிலும், மேல் அவனுக்கு வரும் நிலைமைக் கேற்பச் சாபமாகக் கூறியதாகவும் ஓர் பொருள் தோன்றும்: (இந்திரனுச்கும் யமனுக்கும் இது வலாயில் அஞ்சாது அரசாண்ட நீ) இனி இந்திரனுக்கும் யமனுக்கும் அஞ்சத்தக்கதாகிய அரசுபுரிவாய் என; இப்பக்ஷத்தில் உம்மைகள் எண்ணுப்பொருளையே குறிக்கும். "வந்தசுருந்தென்" என்ற வினாவுக்கு 169 - ம் கவியின் பின்னிரண்டடிகளும் விடையாம்.

166.—(அதற்கு ராவணன்) ஆன தனைத்து உம் ஆவி தரித்தேன் - என்னாலியன்றதாகிய அவ்வளவு வரைக்கும் பிராணனைத் தாங்கிக்கொண்டிருந்தேன், (மேலும்) அயர்கின்றேன் - அயராநின்றேன்; என் பொற்பு உம் மேன்மை உம் புகழோடு உம் போனது - எனது அழகும் மேம்பாடும்கீர்த்தியுடனே போய்விட்டது; வானவருக்கு உம் நாணது அடுக்கும் வகை மன்- (நமக்கு அஞ்சித் தலை சாய்த்திருந்த) தேவர்களுக்கும் (நாம் அஞ்சித் தலை சாய்த்தற் கேதுவான) நாணத்தையுண்டாக்குகிற அபகீர்த்தியாகும், யான் என் நா இன்று எங்ஙன் உனக்கு அது இனிது உரைக்கேன் - நான் என்னுடைய நாவினாலே இப்போது எப்படி உனக்கு அதை நன்றாகச்சொல்லுவேன், எ - று.—இக்கவிமுதல் 169-ம் கவிவரையில் ஒரு தொடர்; இத்தொடர்க்கு ராவணன்என்பதைத் தோன்றா எழுவாயாகவும் 169-ம்கவியிலுள்ள என்றான் என்பதைப் பயனிலையாகவுங்கொண்டு ஒரு பிரதான வாக்கியமாகவும், இடையிலுள்ள வாக்கியங்களை அநுவாத வாக்கியங்களாகவும் கொள்க. போனது - பன்மையில் ஒருமை வந்த பால் வழுவமைதி. வானவருக்கும் - இழிவுசிறப்பும்மை.

167.—வன்மை தரித்தோர் மானுடர் - (நமக்கு இப்படிப்பட்ட அபகீர்த்தியை யுண்டாக்கிய) சாமர்த்திய முடையவர்கள் மனிதர்களாம்; அவர் வாளால் நின் மருகிக்கு நாசி இழக்கும் நிலை நேர்ந்தார் - அவர்கள் தமது வாளினால் உன் மருமானுக்கு நாசியை யிழத்தற்குரிய நிலைக்கு உடன்பட்டார்கள்; தெரிப்பின் - தெரிவிக்குமிடத்து, என் மரபுக்கு உம் நின் மரபுக்கு உம் - என் வம்சத்துக்கும் உன் வம்சத்துக்கும், இதன் மேல் ஓர் புன்மை இனி வேறு எற்று புகல் - இதனின் மேலான ஒரு இழிவு இனிவேறு எதுசொல்வாய், வேலோய் - வேலாயுதத்தையுடையவனே, எ - று.—எற்று- என் என்னும் வினாப்பெயரடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. ஏ - இரக்கப்பொருட்டு.

168.—திருகு சினத்தார் - மாறுபட்ட கோபத்தை யுடையவர்களாய், முதிர மலைந்தார் - அதிகமாகப் போர்செய்தவராகிய, இகல் வேல் உன் மருகர் - வலிய வேலைத்தரித்த உன் மருமக்கள் [கரதூஷணத்ரிசிரஸ்ஸுக்கள்], நாள் - தங்களுடையஆயுளை, சிறியோர்பருகினர் உலந்தார் என்றால் - அற்பராகியமனுஷ்யர்பருகினராக மடிந்தாரென்றால், வென்ற நலத்தின் பழிஅன்றுஓ - (அவர்கள்) ஜெயித்த அழகால் நமக்குப் பழியல்லவா, (இத்தனைபேர் நசிக்கும்படியாய்) ஒருவன் வரி வில்லால் மலைந்தான் - ராமனொருவனே கட்டமைந்தவில்லாலே போர் செய்தான்; (நீயோவென்றால்) இரு கை சுமந்தாய் இனிதின் இருந்தாய் - இரண்டுகைகளையுந் தாங்கிக்கொண்டு சுகமாக இருக்கிறாய், எ - று.—இருகையாலும் பயனில்லை யென்பான் இருகை சுமந்தாய் என்றான்.

169.—வெப்பு அழியாது என் நெஞ்சு உம் உலந்தேன் - (இந்தப்பழியினாலுண்டான வ்யஸனக்) கொதிப்பினால் என் (மெய் வாடினதல்லாமல்) மனமும் வாடினேன், விளிகின்றேன் - இறக்கவும் போகிறேன்; ஒப்பு அழிவு என்று ஏ போர் செயல் ஒல்லேன் - அவர்களைச்சமமாக்கிக்கோடல் குற்றம் [அபகீர்த்தி] என்றே அவர்களோடு போர் செய்தற்கு இசையமாட்டேன்; துப்பு அழி செவ் வாய் வஞ்சியை வவ்வ துணை கொண்டிட்டு இ பழி நின்னால் தீரிய இவண் வந்தேன் என்றான் - பவளமும் தோற்றுப்போதற்குரிய செவ்வாயையுடைய் பெண்ணை [சீதையை] எடுத்துக்கொண்டுவர ஒரு துணையைக்கொண்டு இந்தப்பழி உன்னால் தீர இவ்விடம் வந்தேன், எ - று.—வஞ்சி - உவமையாகுபெயர்.

170.—இ சொல் அனைத்து உம் - இந்தச் சொற்களையெல்லாம்; அரக்கன் - ராவணன், சொல்லி - சொல்லி, எரிகின்ற கிச்சின் உருக்கு இட்டு உய்த்தனன் என்ன - எரிகின்ற நெருப்பிலே நாராசத்தைக்காய்ச்சிக் காதில் செலுத்தினாற் போல, கிளவாமுன் - சொல்வதற்குமுன்னே, சிச்சி என தன் மெய்செவி பொத்தி தெருமந்தான் - சீசீயென்று தனது உண்மையான நல்ல வார்த்தைகளைக் கேட்டற்குரிய காதுகளை மூடிக்கொண்டு மதிமயங்கி, அச்சம் அகற்றி - பயத்தை யொழித்து, செற்றம் மனத்தோடு அறைகின்றான்- கோபமுள்ள மனத்தோடு சொல்லுகிறான், எ - று.—மெய்ப்பொருளைக் கேட்கின்ற செவியை மெய்ச்செவி யென்றார் ஓர் மரபுவழுவமைதியால். தெருமந்தான் - தெருமா - பகுதி.

171.—மன்னா - அரசனே! நீ நின் வாழ்வை முடித்தாய் - நீ உன் ஆயுளைமுடித்துவிட்டாய், மதி அற்றாய் - மதி கெட்டாய், ஈது - இது உன் ஊழ்வினை என்று ஏ உணர்கின்றேன் - விதியினால் விளைந்த தென்றே அறிகிறேன்; இன்னா நெஞ்சன் என் உம் இதம் உரைப்பல் என்னா - தீய மனமுள்ளோனாயினும் உனக்கு நன்மையைத் தருபவைகளைச் சொல்வேனென்று, அன்னவனுக்கு துணிவு எல்லாம் அன்று ஏ சொன்னான் - அந்தராவணனுக்குத் தனது நிச்சயத்தையெல்லாம் அப்பொழுதே சொல்லி யிட்டான், எ - று.—முடித்தாய்- ஆனது, உன்னான் அன்று - உன்னாலல்ல; துணிவினால் எதிர்காலம் இறந்தகாலமாய் வந்த காலவழுவமைதி.

172.—அற்ற கரத்தோடு - அறுபட்டகைகளோடு, உன் ..தலை - உன்

சிரங்களை, தீ எய் அனல் முன்றில் - சுடுதலைப்பொருந்திய நெருப்பினிடத்தில், பற்றி உய்த்தாய் - கொண்டுபோய் வீழ்த்தி, பல பல காலம் - அநேக காலம், பசிகூர - பசிமிகவும், உற்ற உயிர் உள்ளே தேய - (உடலிற்) பொருந்திய உயிரானது உள்ளே குறையவும், உலந்தாய் - தபித்தாய் [தவஞ்செய்தாய்]; (அதனால்) செல்வம் - ஐசுவரியத்தை, உழை அன்று ஓ - உன்னிடத்திலிருக்கும்படி யல்லவா, பெற்றனை - பெற்றிருக்கிறாய், அது - அந்தச் செல்வத்தை, பின் - அடைந்தபிறகு, இழந்தால் - சோரவிடுவாயானால், பெறல் ஆம் ஓ - மீட்டுமதனைப் பெறக்கூடுமோ, எ - று.—தீ - முதனிலைத் தொழிற்பெயர். தீ எய் அனல் முன்றில் என்பதற்கு ஜ்வாலாமயமான த்ரேதாக்னியில் என்றும் பொருள்கூறலாம்; அந்த பக்ஷத்தில் முன்றில்என்பது மூன்றில் என்பதன் குறுக்கலாகவும், ஈற்றில் முற்றும்மை தொகுத்தலாகவும் கொள்ளவேண்டும். த்ரேதாக்கினி=முத்தீ; அவை கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி என்பனவாம்.

173.—சொல் ஆய் மறை வல்லோய் - சொற்களையாராய்தற்குரிய வேதங்களில் வல்லவனே! திறம் திறனால் ஓ - மனத்திறமாகிய செம்மையினாலேயோ, மற திறனால் ஓ - தீமையின் வகையினாலேயோ, செய் தவம் முற்றி திரு உற்றாய் - செய் தவத்தை முடித்துச் செல்வத்தை யடைந்திருக்கிறாய், சொல்லுதி - சொல்லக்கடவாய்; அறம் திறனால் ஏ எய்தினை அன்று ஓ - தர்ம மார்க்கத்தாலே அடைந்திருக்கிறாயல்லவா, அது - அந்தச் செல்வத்தை, நீ உம் - (தர்மமார்க்கத்திலிருந்த) நீயும், புறம் திறனால் ஏ பின் உம் இழக்க புகுவாய் ஓ - பாபவழியாலே மீட்டுமிழந்து விடப் போகிறாயோ, எ - று.—நீயும் - உம்மை உயர்வுசிறப்பு.

174.—ஐயா - ஐயனே! நாரம் கொண்டார் - (பலர்க்கும் பயன்படுவதாகிய) ஊருணியைத் தம் வசப்படுத்திக்கொண்டவரும், நாடு கவர்ந்தார்- பிறர் நாட்டை அநியாயமாய்ப் பறித்துக்கொண்டவரும், நடை அல்லா வாரம் கொண்டார் - துர்மார்க்கமான [நீதியற்ற] குடியிறை வாங்கினவரும், மற்று ஒருவர்க்கு ஆய் மனை வாழும் தாரம் கொண்டார் - வேறொருவர்க்குரியளாய் அவர் வீட்டில் வாழ்கின்ற மனையாளைக் கவர்ந்தவரும், என்ற இவர் தம்மை - என்ற இவர்களை, தருமம் ஈரும் - அறக்கடவுள் அறுத்துவிடும்; கண்டகர் எவர் உய்ந்தார் - துஷ்டரானவர் யாவர் கடைத்தேறினார், எ - று.—கண்டாய் - முன்னிலை யசை. கண்டகர் - முட்போன்றவர், பிறர்க்குபத்திரவஞ் செய்வோரென்றபடி; துஷ்டரென்பது கருத்து. தாரம்- இது தாரா என்னும் வடமொழிச்சிதைவு; இது ஆகாரவீற்று வடமொழியாயினும்தமிழில் ஐகாரவீறுகாமையறிக; இதனை வேறுவகையாகவுங்கூறுவர். நடையல்லாவாரமாவது ஆறிலொருகடமைக்கதிகம் வாங்குதல். "நாரங்கொண்டார்.................வாரங்கொண்டார்" என்பதற்கு நேசித்தவர்களுடைய நாட்டை அபகரித்தவரும் நல்லொழுக்கமாகாத பக்ஷபாதஞ் செய்தவரும் எனவும் பொருள் கூறலாம்.

175.—அந்தரம் உற்றான் அகலிகை பொற்பால் அழிவு உற்றான் - ஸ்வர்க்கலோகத்தை ஸ்வாதீனமாகப் பெற்றிருப்பவனான இந்திரன் அகலிகையின் அழகால் நசித்தான்; இந்திரன் ஒப்பார் எ தனையோர் இழிவு உற்றார் - இந்திரனுக்கு ஸமானராகிய எவ்வளவினர் இழிவடைந்தார்கள்; செம் திரு ஒப்பார் எ தனையோர் நின் திரு உண்பார் - திருமகளையொப்பவராகிய எவ்வளவினர் நின் அழகை யனுபவிப்பவர்; (அப்படியிருக்க) மந்திரம் அற்றார் உற்றது உரைத்தாய் - ஆலோசனையற்றவர்க்குப் பொருந்திய இந்தவார்த்தையை நீ என்னோடு சொன்னாய், மதி அற்றாய் - புத்தியற்றவனே!, எ - று.—தாம் - அசை. செம்பொன்னிறமுள்ள திருமகளை செந்திருஎன்றது ஓர் மரபுவழுவமைதி.

176.—செய்தாய் என் உம் தீ வினையோடு உம் பழி அல்லால் எய்தாது - (உன்னெண்ணப்படி) செய்தாயானாலும் பாவமும் பழியும்உண்டாவதன்றி (உன்னெண்ணம்) கைகூடாது கைகூடாது; எய்தின் - (ஒருகால்உன் எண்ணம்) கைகூடின், உலகின்றான் இராமன் - லோககர்த்தாவாகிய இராமன், வைதால் அன்ன வாளிகள் கொண்டு - (நீத்தார்) சபித்தால் அனையொத்தபாணங்களைக்கொண்டு, உன் குழு எல்லாம் உன் வழியோடு உம் கொற்றம் முடித்து கொய்தான் - உன் கூட்டத்தையெல்லாம் உன் வமிசத்தோடு வலிகெடுத்து அறுத்துவிடுவான், எ - று.—கொய்தான் - துணிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. 'தீவினையோடும் பழியல்லால் எய்தாது' என்றது இருமையு மிழப்பாய் என்றதாம். பழி இம்மைக்கும் பாவம் மறுமைக்கும் உரியன. 'வைதாலன்னவாளிகள்' என்றதுமுனிவர்சாபம்போல் ராமபாணமும்தப்பாதென்பதாம். நீசெய்யும் பிழைக்கு நின்குழுவோடும் கொய்வானெனெனில்,—ஏக:பாபாநிகுருதே பலம்புங்க்தேமஹாஜந: என்னும்பழமொழியைமுன்னிட்டுக்கூறினனென்க.

177.—என்றால் - என்றுசொன்னாலும், என் ஏ நீ எண்ணலை ஏ - அந்தோ! நீ ஆலோசிக்கிறாயில்லையே; கரன் என்பான் நின் தானைக்கு உம் மேல் உளன் என்னும் நிலை (அறியாயோ) - கரனென்பவன் உன்சேனைக்கும்மேலான சேனையையுடையவன் என்னும் நிலைமையை நீயறியாயோ; தன் தானைக்கு உற்றாரொடு உம் மாள தனு ஒன்றால் கொன்றான் - (அப்படிப்பட்ட கரனும்) தன்சேனையோடும் உறவினரோடும் மடியும் படியாக ஓரோபாணத்தினால் ஸம்ஹரித்தவனாய், முற்று உம் கொல்ல மனத்தில் குறி கொண்டான்- (நமது ராக்ஷஸகுலம்) முழுதையும் கொல்வதற்காகவும் உத்தேசித்திருக்கிறான் (அவ்விராமன்), எ - று.—'கரன்என்பான்' என்பதில் என்பான் என்பது செயப்படுபொருள் வினைமுதல்போல வந்தது என்பது பரிமேலழகர் கொள்கை. இனி, பிரயோகவிவேக நூலாரும் தொல்காப்பியச்சூத்திர விருத்திகாரரும் எனப்படுவான் என்றபாலது செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படு விகுதிதொக்கு என்பான் எனநின்றது என்பர். இவ்வாறு வருவனவற்றை வடநூலார் நயக்த என்பர்.

178.—வெய்யோர் - பலசாலிகளுக்குள், வீர விராதன் துணை வெய்யோர் யார் - வீரத்தன்மையுள்ள விராதன்போன்ற பலசாலிகள் யார் [ஒருவருமில்லையே], ஐயோ - அந்தோ, அவன் அம்பொடு உம் உம்பர்க்கு போனான் என்றால் - அவனே [அப்படிப்பட்டவனே] (ஸ்ரீராமனுடைய) ஒரோ பாணத்

திருலே சுவர்க்கம் போய்ச் சேர்ந்தானென்றால், நம்மின் யார் ஏ உய்வார் என கொண்டு உணர் தோறு உம் நையாநின்றேன் - (இனி) நமக்குள்ளே யார்தாம் பிழைக்கப் போகிறார்களென்று மனதிற் கொண்டு யோசிக்குந்தோறும் (ஏற்கெனவே) வருந்திக்கொண்டிருக்கிறேன்; (நான் இப்படியிருக்க) நீ இது உரைத்து நலிவாய் ஓ - நீ இதைச்சொல்லி வருந்தலாமா, எ - று.—வீர - என்று இராவணனை விளித்ததாகவுமாம். யாரோ என்பதில் ஏகாரம் இரக்கப்பொருள்பட்டு நின்றது. துணை - உவமவுருபு.

179.—மாண்டார் மாண்டார் - மடிந்தவர்கள் மடிந்தார்கள்; நீ இனிமாள்வார் தொழில் செய்யவேண்டா வேண்டா - நீ இனிமேல் மடிவோருடைய தொழிலைச் செய்யவேண்டாம் செய்யவேண்டாம்; செய்கு எனின் உய்வான் விதி உண்டு ஓ - செய்வேனெனில் உயிர்பிழைக்க நியதியுளதோ; ஆண்டார் ஆண்டார் - லோகத்தை ஒருவர் பின்னொருவராய் ஆண்டவர்கள், எ தனை என்கோ - எவ்வளவினரென்று சொல்வேன்; அறம் நோனார் ஈண்டார் - தர்மந்தவறினவர்கள் விருத்தியடையார்; ஈண்டு ஆர் நின்றவர் - இவ்வுலகத்தில் நிலைத்தவர் யார்; எல்லாம் இலர் அன்று ஓ - அவர்களெல்லாம் இல்லாமற் போயினரல்லவா, எ - று.—மாண்டார் மாண்டார் என்பதற்கு மிக்கபலசாலிகளென்று மாட்சிமைப்பட்டவர்களெல்லாம் மாண்டார்களென்று முரைக்கலாம். செய்கு - தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று [சூ. "தவ்வொடு கரவும்மை"]. வேண்டா வேண்டா - இவ்வடுக்கு துணிவுப்பொருட்டு.

180.—எம்பிக்கு உம் என் அன்னை தனக்கு உம் இறுதிக்கு ஓர் அம்பு உய்க்கும் போர் வில்லி தனக்கு உம் - என் தம்பிக்கும் [சுபாஹுவுக்கும்] என்தாயாருக்கும் [தாடகைக்கும்] முடிவுசெய்தற்கு [இறக்கச் செய்தற்கு] ஒரே பாணத்தைப்ரயோகித்த போர்க்குரிய வில்லாளியாகிய வனுக்கும் [ஸ்ரீராமனுக்கும்], அயல் நிற்கும் தம்பிக்கு உம் - அவன்பக்கத்தில் நிற்கிற அவன் தம்பிக்கும் [லக்ஷ்மணனுக்கும்], நம் ஆண்மை தவிர்ந்து - நமது ஆண்மை [பௌருஷம்] அடங்கி, சயம் நிற்கும் - அவர்களுக்கு ஜயம் நிலைபெறும்; என் நெஞ்சு கம்பிக்கும் - என்மனம் நடுங்குகின்றது; (மேலும்) அவன் என்று ஏ கவல்கின்றேன் - அந்த வில்லி என்றே [ஸ்ரீராமனென்றே] கவலைப்படுகிறேன், எ - று.—வில்லி - ஆண்பாற்பெயர். மகரநகரங்கள் விரித்தல். எம்பி - முறைப்பெயர்; தம்பியுமது.

181.—ஐயா - அப்பா! நின்று உம் சென்று உம் வாழ்வன யா உம் நிலையா என்று உம் பொன்றும் மெய்ம்மை உணர்ந்தாம் - நிலைத்தும் இயங்கியும் வாழ்வனவாகிய எல்லாம் [சராசரங்கள் எல்லாம்] நிலை பெறுதனவாகி எவ்வளவு காலமிருந்தும் நசித்துப்போம் (என்னும்) உண்மையை யுணர்ந்தோம்; புலை ஆடற்கு ஒன்று உம் உன்னாய் என் உரை கொள்ளாய் - அற்பமான வார்த்தைகளைச் சொல்வதற்குச் சிறிதும் நினையாதவனாய் என்வார்த்தையைக் கேள்; (கேட்பாயாயின்) உயர் செல்வத்து இனி என்று உம்என்று உம்வைகுதி என்றான் - உயர்ந்த செல்வத்தோடு கூடி [ஸாம்ராஜ்யத்தோடு கூடி] இனி எக்காலத்தும் [பல்லாண்டுபல்லாண்டாய்] வாழ்வாய் என்று சொன்னான் (மாரீசன்), எ - று.—புலை - இதில் ஐ பகுதிப்பொருள்விகுதி. உன்னாய்-

முன்னிலை எதிர்மறை வினைமுற்று. கொள்ளாய் - முன்னிலையேவல் வினைமுற்று.

182.—(அதைக்கேட்ட ராவணன்) கங்கை சடை வைத்தவனொடு உம் கைலை வெற்பு ஓர் அங்கையின் எடுத்த எனது ஆடு எழில் மணி தோள் - கங்கையைச் சடையின்கண் தரித்த சிவபிரானோடும் கைலாஸ பர்வதத்தை ஒரு உள்ளங்கையினாலே எடுத்த என்னுடைய வெற்றி பொருந்திய அழகிய ரத்தினமிழைத்த (வாகுவலயமணிந்த) தோள்கள், இங்கு ஓர் மனிதற்கு எளிய என்றனை என - இப்போது ஒரு மனிதனுக்கு இளைப்பன என்று சொன்னாய் எனச் சொல்லி, தன் வெம் கண் எரிய புருவம் மீது உற விடைத்தான் - தன்னுடைய கொடிய கண்கள் நெருப்புப்போலெரியவும் புருவம் நெற்றியிலேறவும் பெருங்கோபங்கொண்டான், எ - று.—கங்கைசடைவைத்தவன் என்றது சிவபிரானது ஆற்றலையும், அவனோடுங்கைலைவெற்போரங்கையினெடுத்த என்றது தனது ஆற்றலையுங் குறித்துநின்றன. தோள் - புருவம் இவை முறையே தோஸ் - ப்ரூ என்னும் ஆரியத்திரிபுகள்.

183.—ஐயா! நிகழ்ந்ததை நினைத்திலை - நடந்த காரியத்தை நினைத்தாயில்லை; என் நெஞ்சின் நிலை அஞ்சாது இகழ்ந்தனை - என்னுடைய மனநிலைக்கு அஞ்சாது என்னை இகழ்ச்சி செய்தாய்; (மேலும்) எனக்கு இளைய நங்கை முகன் எங்கு உம் அகழ்ந்தால் அனையது ஒப்பு உற அமைத்தவனை புகழ்ந்தனை - எனக்கு இளையதங்கை [சூர்ப்பணகை] யினுடைய முகமெல்லாம் தோண்டினாற்போலச் செய்தவனை நீ புகழ்ந்தாய்; தனி பிழை இது பொறுத்தனென் என்றான் - ஒப்பற்ற பிழையாகிய இதனை க்ஷமித்தேன் என்றான் [இனி இப்படிப்பட்ட பிழைசெய்யாதேயென்றான் என்றபடி], எ - று.— 'அகழ்ந்தனையது' அகழ்ந்தால் அனையது என்பதன் ஈறு தொகுத்தல். அகழ்ந்தது அனையது என்பதன் ஈறுதொகுத்தலெனினுமமையும்.

184.—தன்னை முனிவுற்ற தறுகண் தகவு இலோனை - (இவ்வாறு) தன்னைக் கோபித்துக்கொண்ட கொடுமையையுடைய நடுவு நிலைமையில்லாத ராவணனை, பின்னை முனிவுற்றிடும் என தவிர்தல் பேணாது - பின்னும் தன்னைக்கோபித்துக்கொள்வான் என்றெண்ணி (முன் சொல்லிவந்த புத்திமதிகளைத்திரும்பவும் சொல்லாது) விடுதற்கு விரும்பாமல், உன்னை முனிவுற்று உன் குலத்தை முனிவுற்றாய் என்னை முனிவுற்றிலை - உன்னைக்கோபித்து உன் குலத்தையும் கோபித்தாயல்லாமல் என்னைக்கோபித்தாயில்லை, இது என் என இசைத்தான் - இது என்னகாரணமென்று சொன்னான் (மாரீசன்), எ - று.—முனிவுற்றிடும் - இதில் இடு பகுதிப்பொருள் விகுதி.

185.—எடுத்த மலை ஏ நினையின் - நீ யெடுத்த கைலாசமலையையே நீ மதித்தால், ஈசன் இகல் வில் ஆய் வடித்த மலை ஏ இது வலித்தி என - சிவபெருமான் பலமான வில்லாக வளைத்த மலையே யாகும் இதைச் (சற்றே) வளையென்று (ஜநகமகாராஜன்) சொல்ல, வாரி பிடித்த மலை நாண் இடை பிடித்து - (எளிதாக) எடுத்துப் பிடித்த மலைபோன்ற வில்லுக்கு நாணை நடுவிற் பூட்ட, ஒருவன் - ஒப்பற்ற ஸ்ரீராமனால், மேல் நாண் ஒடித்த மலை உம்பர் முகடு உற்ற மலை அன்று ஓ - (விவாஹத்துக்கு) முற்பட்டகாலத்தில் ஒடி

பட்ட அவ்வில்லாகியமலை அண்டகடாகத்தையடைந்தமலை [மேருமலை] யல்லவா, எ - று.—ஆய் என்பதும் பிடித்து என்பதும் செயவெனெச்சத் திரிபுகள்.

186.—யாது உம் அறியாய் - ஸ்ரீராமனைப்பற்றி யாதொன்றையும் அறிந்திலை; உரை கொளாய் - (என்போல்வார்) சொல்லையும் கேட்டிலை; இகல் இராமன் கோதை புனையா முன் உயிர் கொள்ளைபடும் - வலிமையுள்ள ராமனானவன் முன்கைத்தோற்கட்டியைத் தரிப்பதற்கு முன்னமே நம்முயிர்கள் (யமனாற்) கொள்ளையாய் விடும்; பேதை மதியால் இஃது ஓர் பெண் உருவம் என்றாய் - மூடபுத்தியினால் இது ஒருபெண்ரூபம் என்று நினைத்தாய்; சீதை உருவு ஓ - இது சீதாதேவியின் ரூபமோ, நிருதர் தீவினையது அன்று ஓ - ராக்ஷஸருடைய பாபரூபமல்லவா, எ - று.—இகல் என்றது தோள்வலி துணைவலிமுதலியவற்றைக்குறிக்கும். கோதையென்றது போர்க்குரியமாலையெனினும் பொருந்தும். சீதையுருவோ என்பதில் ஓகாரம் உயர்வு சிறப்பு. தீவினையது - குறிப்புவினைமுற்று.

187.—உறவினோடு உம் உஞ்சு பிழையாய் என உன்னா நெஞ்சு பறைபோதும் - உன் சுற்றத்தாரோடும் நீ தப்பிப் பிழைக்கமாட்டாயென்று எண்ணி என்னுடைய மனந்துடிக்கின்றது, அது நீ நினையகில்லாய் - அதை நீ நினையும் வலியில்லாய்; எனது ஆர் உயிர் அஞ்சும் - (அவ்விராமனைப்பற்றி நான் யாவுமறிவேனாகையால்) என்னுடைய அரிய உயிரானது (அவன் பெயர் சொல்லவும்) அஞ்சுகின்றது; அறிந்து அருகு நின்றார் நஞ்சு நுகர்வாரை இது நன்று எனல் உம் நன்று ஓ - (விஷத்தின் கொடுமையை) யறிந்து சமீபத்தில் நிற்கிறவர்கள் விஷபானம் பண்ணுவோரை (நோக்கி) இவ்வாறு விஷத்தைப் பருகுவது நல்லதென்று சொல்லுதலும் நன்மை யாமோ [தர்மமோ], எ - று.—உஞ்சு - இது உய்ந்து என்பதன்போலி.

188.—ஈசன் முதல் மற்று உம் இமையோர் உலகு உம் மற்றை தேசம் முதல் முற்று உம் ஓர் இமைப்பின் உயிர் தின்ப - ஈசன்முதலாக மற்றுமுள்ள தேவர்களுடைய [திக்பாலகர்களுடைய) லோகங்களையும்வேறு தேசங்களாகிய மத்ய லோகமுதலான எல்லாவற்றையும் ஒரு நிமிஷத்தில் உயிர் குடிப்பனவும், கோசிகன் அமைத்த - விசுவாமித்திரரால் கொடுக்கப்பட்டனவும் (ஆகிய), கடவுள் படை - திவ்யாஸ்திரங்கள், ஆசு இல - (அபஜயமுதலிய) குற்றங்களில்லாதனவாயும், கணிப்பு இல - எண்ணிறந்தனவாயும், கொதிப்பொடு - (சத்ருக்களை ஹிம்ஸிப்பதில்) அத்யுக்கிரத்துடன், இராமன் அருள் நிற்ப - அந்தராமனுடைய கட்டளைக்குரியனவாய் நிற்கின்றன, எ - று.—உலகு, தேசம் - என்பன இடவாகு பெயர்கள். அருளென்னுங் காரணம் அதன் காரியமாகிய கட்டளைமேல்நின்றது.

189.—வேதனை செய் காமம் விடம் மேலிட மெலிந்தாய் - உபத்ரவத்தை யுண்டாக்குகின்ற காமமாகிய விஷம் அதிகப்படுதலால் (அறிவும் ஆண்மையும்) குன்றி, தீது உரைசெய்தாய் - (பாபத்திற்கேதுவாகிய) தீச்சொல்லைச் சொன்னாய், இனைய செய்கை சிதைவு அன்று ஓ - இத்தன்மையதான காரியம் (உன்னுடைய) அழிவுக்குக் காரணமல்லவோ, மாதுலன் உம் ஆய் மரபின் முந்தை உற வந்தேன் ஈது உரை செய்தேன் - (உனக்கு) அம்மானுமாய் உன்னுடைய மரபில் வயது மூத்தவனுமாய் இருக்கிறேன் (ஆகையால்) இந்த புத்தியைச்சொன்னேன்; அதனைஎந்தை தவிர்க என்றான், அத்தீத்தொழிலை அப்பா விட்டுவிடக்கடவாய் என்று சொன்னான் [மாரீசன்], எ - று.—இச்செயல் யாவர்க்குந் தீமை பயப்பதாதலின் அருவருத்து அதனையெனச் சேய்மைச் சுட்டாகக்கூறினான். எந்தை என்றது என்தந்தை என்பதன் மரூஉ.

190.—என்ன உரை அத்தனை உம் எத்தனை உம் எண்ண சொன்னவனை - என்று தன் வார்த்தைகளை யெல்லாம் எவ்வளவாயினும் [சிறிதாயினும்] ஆலோசித்துப் பார்க்கும்படி சொன்னவனை [மாரீசனை] (நோக்கி), அரக்கர் பதி - ராக்ஷஸராஜன் [ராவணன்], அன்னை உயிர் செற்றவனை அஞ்சி உறைகின்றாய் - உன் தாயினுடைய பிராணனை வாங்கினவனுக்குப் பயந்து (ஒளித்து) இருப்பவனே! உன்னை ஒருவற்கு ஒருவன் என்று உணர்கை நன்று ஓ (என்று) ஏசின சொன்னான் - உன்னை ஒருவனுக்கு (உபகரிக்கிற) ஒருத்தனென்று அறிகை [மதிக்கை] நன்மையாகுமோஎன்று ஏசான பேச்சுக்களைப் பேசினான், எ - று.—அத்தனையும் என்பதில் உம்மை முற்றுப்பொருளோடு உயர்வுசிறப்புப்பொருளில் வந்தது. எத்தனையும் என்பதன் உம்மை முற்றுப் பொருளோடு இழிவு சிறப்புப் பொருளில்வந்தது. சொன்னவனை, ஏ, சினவு, அரக்கர் எனப்பிரித்து சினவுஅரக்கர் என்பதற்கு (சாதுக்களை நிஷ்காரணமாய்க்) கோபிக்கின்ற அரக்கர் எனப் பொருளுரைப்பினும் அமையும்.

191.—திசயம் ஒளிப்ப தேவர் நிலை கெட வானம் புக்கு அவர் இருக்கை புகைவித்து - திக்கஜங்கள் அஞ்சி ஒளிக்கும் படியாகவும் தேவர்கள் நிலைதடுமாறவும் தேவ லோகத்திற்குப் போய் அவர்களுடைய இருப்பிடத்தைக் கொளுத்தி, உலகம் யா உம் சக்கரம் நடத்தும் எனை ஓ - எல்லா உலகங்களிலும் ஆஜ்ஞா சக்கரத்தை நடத்துகிற என்னையோ, தயரதன் தன் மக்கள் நலிகிற்பர் - தசரதனுடைய பிள்ளைகள் வருத்தும் ஆற்றலுடையராவர் [வெல்லுவார்கள்], இது நன்று வலி அன்று ஓ - இது நல்ல வல்லமையல்லவா, எ - று.—இதனால் இராவணன் மாரீசனைப் பரிகாஸஞ் செய்தான். நலிகிற்பர் என்பதில் கில்என்பது ஆற்றலையுணர்த்தும் விகுதி.

192.—மூ உலகினுக்கு உம் ஒரு நாயகம் முடித்தேன் - திரிலோகத்துக்கும் ஏகாதிபத்தியத்தைத் தரித்தேன்; (அப்படிப்பட்டஎனக்கு) மேவலர் கிடைக்கின் இதன்மேல் இனியது உண்டு ஓ - இப்போது பகைவர்கிடைத்தால் இதனின்மேலான இனிமையான பொருள் உளதோ? எனது ஆணை வழி ஏவல் செய்கிற்றி - என்னுடைய ஆஜ்ஞாமார்க்கத்தின்படி (நீ) ஏவல் செய்யக்கடவை; (அன்றி) எண்ணி காவல் செய் அமைச்சர் கடன் நீ கடவது உண்டு ஓ - ஆலோசனைசெய்து காத்தற்றொழிலைச்செய்கின்ற மந்திரிமார் செய்யவேண்டிய கடமையை நீ செய்யக் கடவதுளதோ, எ - று.—இதனால் இராவணன் மாரீசனை வெறுத்துச்சொன்னமைகூறப்பட்டது. இதன்மேல் என்பதில் இது என்னுஞ் சுட்டு கிடைத்தலைச்சுட்டிநின்றது. கிடைக்கின் என்பது கிடைத்தலினருமைதோன்றநின்றது.

193.—மறுத்தனை என பெறின் உம் நின்னை வடி. வாளால் ஒழுத்து மனம் உற்றது முடிப்பது ஒழிகல்லேன் - (நான் சொல்வதைச் செய்யத்) தடுத்தாயென்று (சிறிது என் புத்தியில்) பட்டாலும் உன்னை வடித்தவாளாயுதத்தினால் தண்டித்து என் மனதுக் கிசைந்ததை நிறைவேற்றுவதினின்றும் நான் நீங்கமாட்டேன், உயிர் கொண்டு உழலின் - உன் பிராணனைத் தப்பித்துக்கொண்டு திரியவேண்டின், வெறுப்பன கிளத்தல் உறும் இ தொழிலை விட்டு என் குறிப்பின் வழி நிற்றி - வெறுக்கத்தக்க சொற்களைச் சொல்லத் தொடங்குகிற இக் கெட்டசெய்கையை விட்டு என்னுடைய கருத்தின்வழியில் நில், என்றான் - என்று சொன்னான், எ - று.—ஒழிகல்லேன் - தன்மை யொருமை எதிர்காலவினைமுற்று, ஒழி (பகுதி) - கு (சாரியை) - அல் (எதிர்மறைவிகுதி) - என் (தன்மையொருமைவிகுதி). வெறுப்பன - எதிர்காலவினையாலணையும் பெயர்.

194.—அரக்கன் அஃது உரைத்தல் ஓடு உம் அறிந்தனன் அடங்கி - அரக்கனாவன் [இராவணன்] அவ்வார்த்தையைச்சொன்னமாத்திரத்தில் அவனது கருத்தை யறிந்தவனாய்த் தாழ்ந்து, நெஞ்சம் தருக்கினர் அன்று ஏ கெடுவர் - மனச்செருக்கடைந்தவர்கள் தக்ஷணமே கெடுவார்கள், தத்துவம் நிலை இற்று அன்று ஓ - உண்மை நூல்களின் நிலையும் இதுவே யல்லவா, செருக்கினின் தீர்தும் என்பார் தம்மின் செருக்கர் ஆர் - கர்வத்தினாலழிவோம் என்பவர்களைப் பார்க்கிலும் கர்வமுள்ளவர்கள் யாவர், என்றா - என்று (சிந்தித்து), உருக்கிய செம்பின் உற்ற நீர் என உரைக்கல் உற்றான் - உருக்கப்பட்ட செம்பின்மேல் தெறித்த நீரைப் போலச் சொல்லத்தொடங்கினான், எ - று.—உருக்கிய செம்பினுற்ற நீரென என்பதற்கு நீர்மயமாக உருக்கிய செம்பைவாரிஇறைத்தாற்போல எனலுமாம். செருக்கு - முதனிலைத் தொழிற்பெயர். தீர்தும் - தனித்தன்மைப்பன்மை எதிர்காலவினைமுற்று. ஆர் - யாவர் என்னும் வினாப்பெயரின் மரூஉ. இராவணனை அரக்கனென்றது - ராக்ஷஸத்தன்மையிற் சிறிதும்குறைவிலனென்பதுதோன்ற.

195. உன்வயின் உறுதி நோக்கி உண்மையின் உணர்த்தினேன் - உன் விஷயத்தில் நன்மையைக்கருதி உண்மைவழியால் தெரிவித்தேன், என்வயின் இறுதி நோக்கி அச்சத்தால் இசைத்தேன் அல்லேன் - என்விஷயத்தில் முடிவைக்கருதிப் பயத்தினால் சொன்னேனல்லேன், நாசம் வந்து உற்ற போது நன்மை உம் தீமை அன்று ஓ - (ஒருவற்கு) விநாசகாலம் நேரிட்டபோது நன்றும் தீதாமல்லவா, (அதுநிற்க) புன்மையின் உற்ற நீராய் செய்வது புகறி என்றான் - அற்பவிஷயத்திற்பொருந்தியிருக்கிறகுணத்தையுடையவனே நான் செய்யவேண்டியதைச் சொல்வாயென்றான், எ - று.—ஸாபராதிகளைத் தண்டியாதொழியான் ஸ்ரீராமனென்பது இராவணன் மனதிலுறுத்தும்படி 'என்வயினிறுதிநோக்கி யச்சத்தாலிசைத்தேனல்லேன்' என்றான் என்க. 'நாசம் வந்துற்றபோது நன்மையுந்தீமையன்றோ' என்றது, "விநாசகாலே விபரீத புத்தி:" என்னும்பழமொழியை நோக்கியென்க.

196.—என்றலும் எழுந்து புல்லி எறிய வெகுளி நீங்கி - என்று (மாரீசன்) சொன்னவுடனே (ராவணன்) எழுந்து அவனைத் தழுவி (அவன்விஷ

யத்தில்) அதிகரித்திருந்த கோபம் தணிந்து, குன்று என குவிந்த தோளாய் - மலைபோல (உயர்ந்து பருத்துத்) திரண்ட தோள்களையுடையாய்! கொதிக்கும் மாரன் வேள் அம்பால் பொன்றலின் ராமன் அம்பால் பொன்றல் எ புகழ் உண்டு அன்று ஓ - அதி யுக்கிரமான காமபாணத்தினால் இறந்துபடுகிறதைப்பார்க்கிலும் ராமபாணத்தினால் இறந்து படுதலாலேயே கீர்த்தியுண்டாகுமல்லவா? (ஆகையினால்) தென்றலை பகையை செய்த சீதையை தருதி என்றான் - தென்றலோனுக்கு என்னைப் பகையாக்கின சீதையைக் கொண்டுவந்து கொடு என்று சொன்னான், எ - று.—மாரீசனாற் காரியங்கொள்ளவேண்டியோனாதலின், எப்படிப்பட்டவரிடத்தும் நீ ஒருவனே சென்று பொருதுவெற்றிகொள்ளத்தக்க தோள் வலி யுடையாய் என்று அவனைப் புகழ்ந்து கூறிய கருத்துத்தோன்ற "குன்றெனக்குவிந்ததோளாய்" என்றும் அவனைத்தனக்கு ஒப்போனாக்கி 'தருதி' என்றும் கூறினான் இராவணனென்க. மாரவேள் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை.

197.—ஆண்டையான் அனைய கூற - அந்நிலையனாகிய ராவணன் அத்தன்மையான வார்த்தைகளைச் சொல்ல, (கேட்டமாரீசன்) அரக்கர் ஓர் இருவரோடு உம் தவ வனம் புக்க போழ்தில் - இரண்டு அரக்கர்களுடனே (தண்டகாரண்யவாஸிகளாகிய ரிஷிகளின்) தபோவனத்திற் ப்ரவேசித்த காலத்தில், தூண்டிய சரங்கள் பாய துணைவர் பட்டு உருள - (ராமனால்) ஏவப்பட்ட பாணங்கள் (தம்மேற்) பாய்ந்ததனால் கூடவந்தவர்கள் மடிந்து உருள, பூண்ட என் மானம் தீர - (ஆயிரம் யானை பலமுடையேனென்றும் மலைபோற் பருத்துயர்ந்துளேனென்றும் யான்) கொண்டிருந்த அபிமானம் [கர்வம்] பங்கமாக, அஞ்சி மீண்ட யான் சென்று செய்யும் வினை என் - பயந்து திரும்பிவிட்ட நான் (இப்பொழுது மீண்டும்) போய்ச் செய்யத்தகுந்த காரியம் என்ன, விளம்புக என்றான் - சொல்லுக என்று கேட்டான், எ - று.—ஆண்டையான் என்பதில் ஆண்டு - பகுதி, ஐ - சாரியை, ஆன் - விகுதி. "அரக்கரோரிருவரோடும் தவவனம் புக்க போழ்தில்" என்றது விசுவாமித்திரருடைய யாகத்தில் இவனோடு கூட வந்த இவன்தாயையும் தம்பியையுங்குறித்ததன்று; அவர்களுடைய ப்ரஸ்தாபம் கீழ் 180-ம் பாட்டில் "எம்பிக்கும் என்னன்னைதனக்கும்" என்றதனாற் சொல்லப்பட்டது. இது மற்றியாரைக் குறித்ததெனின்,—ஸ்ரீராமன் தண்டகாரணியத்தில் பஞ்சவடியிலெழுந்தருளியிருந்தபோது, விசுவாமித்திரருடைய யாகத்தில் தன் தாயையும் தம்பியையும் இராமன் கொன்றானே என்ற பகை கொண்டு, மாரீசன் இரண்டு ராக்ஷஸர்களுடன் மான் வேஷம்பூண்டு அத்தண்டகவனஞ் சேர்ந்து ரிஷிகள் ஹோமஞ்செய்யுமிடங்களையும் நீராடுமிடங்களையும் கிட்டி அவர்களை வருத்திக் கொன்று தின்றுகொண்டு, லக்ஷ்மணனுடனும் ஜானகியுடனும் கூடித் தவசியாகி எழுந்தருளி இருந்த ஸ்ரீராமனைக்கண்டு பழையபகையை நினைந்து, இவன் இப்பொழுது தவவடிவம் பூண்டிருக்கின்றமையின் தன்னைக் கொல்லானென எண்ணிக் கிட்டியோடிக் கூரிய கொம்புகளினால் முட்டிக் கொந்திக் கொலைசெய்ய முயன்றான். அப்பொழுது ஸ்ரீராமபிரான் சினமூண்டு சரங்களைத் தொடுத்துவிட இவனுடன் வந்த இரண்டு ராக்ஷஸரும் சரங்கள் பட்டுச் சிரங்களறுப்புண்ணத் தான்மாத்திரந் தப்பித்துக்கொண்டோடி யொளித்துத் தவவேடம் பூண்டிருந்தான் என்று ஸ்ரீமத்ராமாயண

த்தில் கூறியபடி மாரீசனுக்குத் துணையாய் வந்த மற்ற இரண்டு ராக்ஷஸர்களையும் குறித்ததெனவறிக. மேல் 205-ம்பாட்டில் "முக்காலின்முடிந்திடுவான்" என்றதும் இக்கதையை யொட்டியேயெனவறிக. பழையபிரதிகளினும் "பூண்டவெண்மானந்திரத்தண்டகம் புக்கபோழ்தில்" என்று பாடமே காணப்படுகிறது.

198.—ஆயது அனைய ஆங்கு கூற - (மாரீசன்) நடந்தனவாகிய் அப்படிப்பட்ட காரியங்களைப் பற்றி அவ்விடத்திற் சொல்ல, அரக்கர்கோன்-ராக்ஷஸராஜன் [ராவணன்], ஐய - ஐயனே! நொய்து உன் தாயை ஆர் உயிர் உண்டானை கொல யான் சமைந்து நின்றேன் - எளிதாக உன் தாயை [தாடகையை] அரிய உயிர் பருகினவனைக் கொல்வதற்கு நான் சித்தமாயிருக்கிறேன்; ஐயா - ஐயனே! போய் புணர்ப்பது என் என்றது பொருந்திற்று அன்று ஓ - சென்று செய்வது என்னவென்று நீ கேட்பதும் யுக்தந்தான் அல்லவா; (ஆகையால்) அவளை மாயையால் வஞ்சித்து வவ்வுதல் என்றான் - அந்தசீதையை (நமது ராக்ஷஸ) மாயையினால் வஞ்சித்துக்கவர்ந்து வருகஎன்றான், எ - று.—ஆயது - பன்மையிலொருமைவந்தவழுவமைதி. நின்றேன் - என்பது நிகழ்காலம் துணிவுபற்றி இறந்தகாலமாக வந்தகாலவழுவமைதி. கோன் - இதில் னகரமெய் சாரியை. வவ்வுதல் - இது தல்லீற்று வியங்கோள், "மனத்துக்கண்மாசிலனாதல்" என்றவிடத்துப்போல.

199.—மாரீசன் - (அதைக்கேட்ட) மாரீசனானவன், மன்ன - அரசனே! புறத்து இனி உரைப்பது என் - வேறாக இனிச்சொல்லுவதென்ன, புரவலன் தேவிதன்னை திறத்துழி அன்றி வஞ்சித்து எய்துதல் சிறுமைத்து ஆகும் - அரசனாகிய ஸ்ரீராமனுடைய மனைவியை உன்சாமர்த்தியத்தாலல்லாமல் வஞ்சனை செய்து பெறுவது (உன்பெருமைக்குத்) தாழ்வுண்டாக்குவது ஆகும்; (ஆகையால்) அமர்தலை வென்று கொண்டு உன் மறம் துறை வளர்த்தி - போரில் (அந்த ராமனை) வென்று (சீதையைக்) கைக்கொண்டு உன் வீரத்தொழிலை விர்த்திசெய்யக்கடவாய், அறத்து உளது ஒக்கும் - (அப்படிச் செய்வதே) நீதி சாஸ்திரக்கொள்கைக்கு ஒத்திருக்கும், என்றான்-என்று சொன்னான், எ - று.

200.—ஆனவன் உரைக்க நக்க அரக்கர் கோன் - தனக்குஹிதனான [வேண்டியவனான] மாரீசன் அப்படிச் சொல்ல (அதைக்கேட்டுச்) சிரித்த ராக்ஷஸராஜன் [ராவணன்], அவரைவெல்ல தானை உம் வேண்டும் ஒ - அவர்களை [மனிதர்களை] வெல்லுதற்குச் சேனையும் வேண்டுமோ, என் தடம் கை வாள் தக்கது அன்று ஓ - என்னுடைய பெரிய கையினிடத்துள்ள வாள் ஒன்றே (அவர்களைக்கொல்லுதற்குத்) தகுதியானது அல்லவா, ஏனையர் இறக்கில் மான் அவள் தான் உம் தமியள் ஆய் அன்று ஏ இறக்கும் - மற்றவர் [ராமலக்ஷ்மணர்கள்] இறந்துவிட்டால் மானுக்கொப்பாகிய அவளும் [சீதையும்] ஒண்டியா யிருக்கவேண்டியகாரணத்தால் க்ஷணமே இறப்பாள், ஆதலால் - ஆகையால், (அப்படிச்செய்யாமல்) மாயையின் வலித்தும் - வஞ்சனையினால் பலாத்கரிப்போம், என்றான் - என்று சொன்னான், எ - று.

கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் க.] க௲அ௱சு௫ ஜூன்மீ [சஞ்சிகை ரு.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதியாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ னருளினெ லெளியவர்ச் சையுமாகி யுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

புராண விஷயம்.

புராணமென்பது சிருஷ்டி சங்காரமுதலியவற்றை விளக்குவதோர் சாஸ்திரமென்று முன்பே குறித்திருக்கிறோம். அது கிருதயுகத்தில் பிரமாவினால் நூறுகோடிகிரந்தவிஸ்தாரமாய்ச் செய்யப்பட்டு பிராம்மம் என்கிறபெயருடையதாய் ஒன்றேயாயிருந்தது. பின்பு திரேதாயுகத்திலே அதை ரிஷிகள் நூற்றுப்பதினொரு சங்கிதைகளோடுகூடின பதினெட்டுப் பிரிவுள்ளதாய்க் கோடிகிரந்தமாகச் சுருக்கினார்கள். பிற்பாடு வேதவியாசர் துவாபரயுகத்தின் கடைசியில் அந்தப் புராணங்களின் சாரங்களை நான்குலக்ஷம்கிரந்தத்தில் பாரதாதி ஆக்கியானங்களும், ரிபுதிதாகசரித்திராதி உபாக்கியானங்களும், பிருதிவி கீதை பிதுருகீதை முதலான காதைகளும், வராஹகல்பாதி கல்பநிர்ணயங்களும், சிருஷ்டி மனுவந்திராதிகளும் வமிச வமிசானுசரித்திரங்களும் விளங்கும்படிப் பதினெட்டுப்புராண சங்கிதைகளைச்செய்து தம்முடைய சிஷ்யரான ரோமஹர்ஷண ரென்பவருக்குஉபதேசித்தருளினார். அந்த ரோமஹர்ஷணருக்கு சுமதி, அக்கினிவர்ச்சன், மித்திராயு, ஸாம்சபாயனன், அகிருதவிரணன், ஸாவர்ணிஎன்று ஆறு சிஷ்யரிருந்தார்கள். அவர்களால் புராணப் பிரவசனம்செய்யப்பட்டு வந்தது.

எல்லாப் புராணங்களுக்கும் முதன்மையாயிருந்தது பிராம்மபுரா

ணம்; அதுமுதலாகப் பதினெட்டுப் புராணங்களுண்டு. அவை யாவன: பிராம்மம், பாத்துமம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பவிஷ்யத்து, பிரம்மகைவர்த்தம், லிங்கம், வாராகம், ஸ்காந்தம், வாமனம், கௌர்மம், மாச்சியம், காருடம், பிரஹ்மாண்டம் என்பவையாம். அவற்றின் முறையும் இதுவே. இப்புராணங்களுக்கெல்லாம்

सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणि च ।
वंशानुचरितं चेति लक्षणानाञ्च पञ्चकम् ॥

என்றபடியே சிருட்டி, சங்காரம், வமிசங்கள், மனுவந்தரங்கள் வமிசங்களின்சரித்திரம் என்பவை பொது விஷயமாயினும் அந்தந்தப் புராணத்துக்குத் தனித்தனி விஷயங்களுண்டு. அந்தந்த விஷயமுறைகளைப்பிடித்துச் சுருக்கமும் பெருக்கமுமாய்ப் பலசங்கிதைகள் செய்யப்பட்டிருக்கும்.

இனி இப்புராணங்களை ஆதியிற்செய்தவர்களின்னாரென்பதும் அவற்றின் தொகை இவையென்பதும், அவற்றின்விஷயங்களின்னவென்பதுஞ் சுருக்கமாய்க் குறிக்கப்படும்.

ब्रह्मणाभिहितं पूर्वं यावन्मात्रं मरीचये ।
ब्राह्मं तद्दशसाहस्रं पुराणं परिकीर्त्यते ॥

ஆதியில் பிரமதேவர் பிரமகல்பவ்ருத்தாந்தத்தைப்பற்றி மரீசி என்பவருக்கு எவ்வளவு சொன்னாரோ அவ்வளவும் பிரமபுராணமாம்; அதன்தொகை பதினாயிரம் கிரந்தம்.

एतदेव यदा ब्राह्मं पाद्मे जगद्धितम् ।
पाद्मं तत्पञ्चपञ्चाशत्सहस्राणीह पठ्यते ॥

பிரம்மபுராணத்திற் சொன்னவிஷயமே லோகத்திற்கு ஹிதமாகப் பாத்துமகற்பத்தில்ஐம்பத்தையாயிரங் கிரந்தமாகச்செய்யப்பட்டது; அது பாத்துமமென்றுசொல்லப்படும்.

वाराहकल्पवृत्तान्तमधिकृत्य पराशरः ।
यान्प्राह धर्मानखिलांस्तदुक्तं वैष्णवं विदुः ।
विष्णवष्टसाहस्रं तत्पुराणं विदुर्बुधाः ॥

வராஹ கற்பத்தின் சரித்திரத்தைப்பற்றிப் பராசரமுனிவர் வைஷ்ணவ தருமங்கள் விளங்கும்படி செய்தது விஷ்ணுபுராணம். இது எண்ணாயிரங் கிரந்தசங்கியையுள்ளதாம்.*

* இது ஆறாயிரங்கிரந்தத்தில் இப்போது வழங்குகின்றது.

श्वेतकल्पप्रसङ्गेन धर्मान्वायुरिहाब्रवीत् ।
यत्र तद्वायवीयं स्याद्रुद्रमाहात्म्यसंयुतम् ।
चतुर्विंशत्सहस्राणि पुराणं शैवमुच्यते ॥

சுவேத கற்பத்தின் சம்பந்தத்தினால் தருமம் விளங்குமாறு வாயுவினாற் செய்யப்பட்டு உருத்திரமஹத்துவமுள்ளதா யிருப்பது வாயுபுராணமாம். இதுவே சைவபுராணமென்றும் சொல்லப்படும். இது இருபத்து நாலாயிரங் கிரந்தம்.

यत्राधिकृत्य गायत्रीं वर्ण्यते धर्मविस्तरः ।
वृत्रासुरवधो यत्र तद्भागवतमुच्यते ॥
सारस्वतस्य कल्पस्य मध्ये ये स्युर्नरामराः ।
अष्टादशसहस्राणि तद्भागवतमुच्यते ॥

காயத்திரியின் பொருளாலே தொடங்கிப் பகவத்ஸம்பந்தமான தருமங்களை வருணித்து விருத்திராசுரனுடைய வதம் முதலானசரித்திரங்களோடு பதினெண்ணாயிரங் கிரந்தமாய் ஸ்ரீவியாசமுனிவராலே செய்யப்பட்டது பாகவதமாகும்.

यत्राह नारदो धर्मान् बृहत्कल्पाश्रयानिह ।
पञ्चविंशत्सहस्राणि नारदीयं तदुच्यते ॥

பிருஹத் கற்பத்தைப்பற்றித் தருமங்களை வருணித்து இருபத்தையாயிரங் கிரந்தமாக நாரதமுனிவர் சொல்லிய புராணம் நாரதீயமென்னப்படும்.

यत्राधिकृत्य शकुनिं धर्माधर्मविचारणा ।
तद्द्वात्रिंशत्सहस्रं च मार्कण्डेयमिहोच्यते ॥

சகுனி என்பவனை நோக்கித் தருமாதருமங்களை விசாரித்து மார்க்கண்டேயர்செய்தது மார்க்கண்டேய புராணம். இதன்தொகை முப்பத்திராயிரம்.

शावावसाने भृगुणा ऋषिणा संप्रकाशिता ।
चयनानां सवृत्तान्तमिष्टकाचयनं तथा ॥
क्रतुसंख्याधिकं कृत्वा आग्नेयं तदिहोच्यते ।
आग्नेयं चाष्टसाहस्रं सर्वक्रतुफलप्रदम् ॥

ஆக்கினேய புராணத்தில் சயனங்களின் வரலாறும், அந்தச்சயனங்களுக்காக இஷ்டகைகளின் தொகையும் யாகங்களின் தொகையுஞ் சொல்லப்படும். இதைச்செய்தவர் பிருகு முனிவர்; இது எண்ணாயிரங் கிரந்தமுள்ளது. அக்கினி புராணமென்பதும் இதுவே.

[illegible]
[illegible]
[illegible]

சதானீகன் வினவச் சுமந்து என்பவர் சூரியபகவானைப் பற்றிய தருமங்களையெல்லாம் சொன்னது பவிஷ்யத்புராணம்; இது முப்பத்தோராயிரங்கிரந்தமுள்ளது.

[illegible]
[illegible]
[illegible]

வசிஷ்டமுனிவர் அம்பரீஷனுக்கு விஷ்ணு தர்மங்களையும் பிரம சிருட்டியையும் எடுத்துச்சொன்னது பிரமகைவர்த்த புராணம். தொகை பன்னீராயிரம்.

[illegible]
[illegible]

ஈசான கற்ப விருத்தாந்தங்களை யெடுத்து நந்தியினால் பதினோராயிரங் கிரந்தமாகச் செய்யப்பட்டது லிங்கம்; இதுலிங்கபுராணமெனவும்படும்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

மானவகற்பசம்பந்தமாய் வராஹாவதாரமஹிமையை விஷ்ணு பூமிதேவிக்குச் சொன்னது வராஹபுராணம்; கிரந்தத்தொகை இருபத்துநாலாயிரம்.

[illegible]
[illegible]
[illegible]

முருகக்கடவுளால் தற்புருஷகற்பத்தின் சம்பந்தமாய் ருத்திர மகத்துவமும் ருத்திரதருமங்களும் விளங்கும்படி செய்யப் பட்டது ஸ்காந்தம்; இது லக்ஷம்கிரந்தமுள்ளது.

[illegible]
[illegible]
[illegible]

திரிவிக்கிரமாவதார மகத்துவத்தைப் பிடித்துச் சதுர்முகன் செய்தது வாமனபுராணம்; இதில் மூன்று தேவதைகளையுடைய அறம் பொருள் இன்பங்களும் விளக்கப்படும்; இது கூர்மகற்பத்தையனுசரித்தது. பதினாலாயிரங் கிரந்தமுள்ளது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இந்திரத்துய்ம்னனென்கிற அரசனைப்பற்றிப் பாதாளத்திலே இந்திரனுடைய எதிரிலே கூர்ம ரூபியான விஷ்ணு முனிவர்க்கு நான்கு புருஷார்த்தங்களின் மாஹாத்துமியத்தையும் பற்றிச் சொல்லியதுகூர்மபுராணம்; இதுஆறாயிரங்கிரந்தமுள்ளது; லக்ஷ்மி கற்பத்தைப் பற்றினது.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

மச்சியரூபியான திருமால் வேதங்கள் பிரவர்த்திக்கும் பொருட்டு மனுவுக்கு ஏழுகற்பங்களையும்பற்றி நரசிம்மாவதார மாகாத்துமியத்தோடு சொன்னது மச்சியபுராணம்; இதன் தொகை பதினாலாயிரம்; விரதங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கும்.

[illegible]
[illegible]

கருடகற்பத்திலே கருடனிடத்தில் பிரமாண்டம் உண்டானதைக் குறித்து விஷ்ணு எடுத்துச்சொன்னது கருடபுராணம். [இதன் தொகை ஆறாயிரமாய்வழங்குகின்றது.]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

பிரமாண்ட மாகாத்துமியத்தைப்பிடித்துப் பிரமதேவன்சொல்லியது பிரமாண்டபுராணம்; இதன் கிரந்தத் தொகை பன்னீராயிரம். இதில் வருங்கற்பங்களைப்பற்றியும் விஸ்தாரமாய்ச்சொல்லப்படும்.

ஆகப் புராணங்களின் கிரந்தத் தொகை நான்குலக்ஷத்துப்பதினாயிரம்.

இப்போது சொன்னவை பெருந்தொகை; ஒவ்வொன்றிலும் நூறு இருநூறு ஏறவுந்தாழவுமிருக்கும். ஒருகிரந்த மென்பது ஒரு சுலோகமேயாம்; சுலோகம் சிறிதும் பெரிதுமாயினும் பொதுவில் முப்பத்திரண்டு எழுத் தென்று குறிக்கப்படும். இங்கே எழுத்தாவது உயிரும்உயிர்மெய்யுமாம். இவற்றுளெல்லாம் பெரும்பாலுஞ் சரித்திரங்களை முன்னிட்டும் சிறுபான்மை நேராகவும் கருமஞானங்களின் விரிவும் அவற்றின் பயனும் அவற்றைப் பெறும்வழி முதலானவைகளும் போதிக்கப்படும்; விசித்திரமானகதைகளைக் கேட்க எவர்க்கும் பிரியமாதலால் அவற்றைக்கொண்டு தருமாதிகளைப் போதித்தல் நல்லவழியாம். சிலபுராணங்களில் கருமமும் சில புராணங்களில் ஞானமும் பிரதானமாய்க் கூறப்பட்டிருக்கும். இவற்றைப் படிப்பதனாலும் கேட்பதனாலும் விவேகம் விளங்கிப் பாவத்தில் பயமும் நல்லொழுக்கமும் உண்டாமாதலால் புராணங்களைப் படிப்பதுங் கேட்பதும் மகாபுண்ணிய மென்று சொல்வது. இவற்றுள் எடுத்த நற்காரியத்தில் மனம் பற்றும்பொருட்டு அதை மிகவும் மேன்மைப்படுத்திச் சொல்லியிருக்கும்; இதற்கு அர்த்தவாதம் என்று பெயர். இதன் கருத்தை அறியாதவர் இது பொய் என்று பிரமிப்பர். சகல விஷயமும் வேதங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் புராணங்களில் விளங்குவதுபோல் அவை வேதத்தில் விளங்கமாட்டா. வேதத்தின் பொருளை யறியப் பல கருவிகள் வேண்டும். புராணங்களுக்கோ அவை சாதாரணமாய் வேண்டுவதில்லை. எந்த நூலுக்குஞ் சம்பிரதாயமென்பது அவசியம் வேண்டும். சம்பிரதாயமாவது இதன்பொருள் இது, இதை. இன்னவிஷயத்துக்குக் கொள்ளவேண்டும் என்றிப்படிப்பட்ட காரியங்கள் பெரியோர்வழியாய் வழங்குவது. இது சான்றோர் செய்த உரைகளால் பெரும்பாலும் விளங்கும்.

[தொடர்ச்சி.]

புராணநாமவிவரணம்.

சீதை.—ஸ்ரீராமருடைய பத்தினி. ஜனகமகாராஜாவின் மகள். முற்பிறப்பில் இவள் குசத்துவசர் என்னுமுனிவர்க்கு மானஸபுத்திரியாய்ப் பிறந்து வேதவதி யென்னும் பெயருள்ள கன்னியாயிருந்தாள். அம்முனிவர் இவளை விஷ்ணுவுக்குக் கொடுத்துக் கலியாணஞ்செய்விக்க நினைத்திருக்கையில் தம்பன் என்னு மோரசுரன் இவளைத் தனக்குக் கொடுக்கச்சொல்லிக் கேட்க அதற்கு அவர் சம்மதியாமற்போக ஓரிரவில் தூங்கிக்கொண்டிருந்த சமயத்தில் அவ்வசுரன் அம்முனிவரைக்கொன்று அந்தப் பிரமஹத்தியினாலே தானுமிறந்தான். பின்பு இக்கன்னிகை விஷ்ணுவையே விவாகம் செய்துகொள்ளவேண்டித் தவம்புரிந்துகொண்டிருக்க, அப்போது திக்குவிஜயம் செய்ய அவ்வழியாகச்சென்ற இராவணன் இவளைக்கண்டு மோகித்து இவளுடைய தவத்திற்கிடையூறு செய்தான். அதுகண்டு இவள்அவனைநோக்கி,' அடகெடுவாய்; நீ யென் தவத்திற் கிடையூறு செய்தமையின் நான் இப்பூமியிலேயே அயோனிஜையாய்ப்பிறந்து உன்னையும் உன்னினத்தையும் நாசமாக்குதற்குக் காரணமாகிறேன்,' என்று சொல்லித் தீயைவளர்த்து அதிற் குதித்து உருமாய்ந்தாள். பின்பு இலங்கையில் ஓர்தாமரைத்தடாகத்தில் ஜனித்து, சிவபூசைக்குத் தாமரைமலர்கொய்யவந்த இராவணனுக்கு ஓர் கமலமலரிற் காணப்பட்டாள். அக்குழந்தையை ராவணன் ஆவலோடு எடுத்துப்போய் புரோகிதர் முதலானோர்க்குக் காட்ட, அவர்கள் இச்சிசுவால் இலங்கை யழியுமென்று சொல்ல, இராவணன் அதையோர்பொட்டியிலிட்டுக் கடலில் விடுத்தனன். அது அலைகளால் மோதப்பெற்று மிதிலாநகரத்துக்கருகில் வந்து மண்ணில் மறைந்துகிடந்து, அந்நகர்க்கரசனாகிய ஜனகமகாராஜர் மகப்பெறவேண்டி ஓர் மகமியற்றக்கருதி யாகசாலைக்கு நிலஞ் செப்பனிடுதற்கு ஏர்கட்டி உழுகையில் படைச்சாலில் அகப்[illegible]து. அப்போது அவர் அப்பெட்டியைத் திறந்து பார்த்துப் பெருநிதிகண்டவன்போல் பேரானந்த மடைந்து அக்குழந்தையை எடுத்து வளர்த்து சீதை யென்று பெயரிட்டு இராமனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தார். பின்பு இவள் இராவணனால் அபகரிக்கப்பட்டு, அவன் தன்னினத்தோடு மாண்டுபோவதற்குக்காரணமானாள். மக்கள் - குசன், லவன் (குசலவர்).

மாரீசன்—ஓர் அரக்கன். இவன்மிகமாயாவி. தாடகை யென்பவளுடைய மகன். சுபாகுஎன்பவனுக்கு அண்ணன். இவன்தகப்பன் ஸுகேது என்னும் ஓர்யக்ஷன். விசுவாமித்திரமுனிவர் வேள்விசெய்யத் தொடங்குகையில் மாரீசனும் சுபாகுவும் அவ்வேள்விக்கிடையூறு செய்யவந்தார்கள். விசுவாமித்திரர் அயோத்திக்குப்போய் தசரத சக்கிரவர்த்தியை வேண்டிக்கொண்டு இராமலக்ஷ்மணரை யழைத்துவந்து தம்வேள்விக்கு விக்கினம்செய்பவர்களை ஸம்ஹரிக்கவேண்டுமென்ன, ஸ்ரீராமன் ஆக்கினேயாஸ்திரத்தைப் பிரயோகித்துச் சுபாகுவை மாய்த்து, வாயவ்யாஸ்திரத்தைப் பிரயோகித்து மாரீசனைக்கடலில்வீழ்த்தினார். அவ்வளவில் மாரீசன் ஸ்ரீராமனுடைய பராக்கிரமத்தை

யறிந்தவனாய் அவனையெதிர்க்க முடியாதென்று தென்கரையில் ஓரிருக்கையிழைத்துக்கொண்டு அங்கு தவஞ்செய்துகொண்டிருந்து வனவாசஞ்செய்ய வந்த ஸ்ரீராமன் தண்டகாரண்ணியத்தில் பஞ்சவடியி லெழுந்தருளியிருந்தபோது, விசுவாமித்திரருடைய யாகத்தில்தன் தாயையும் தம்பியையும் ராமன் கொன்றானே யென்ற பகை கொண்டு இவன் வேறிரண்டு ராக்ஷஸர்களுடன் மான் வேஷம் பூண்டு அத்தண்டகவனம் சேர்ந்து ரிஷிகள் ஓமம்செய்யுமிடங்களையும் நீராடுமிடங்களையும் கெட்டி யவர்களை வருத்திக்கொண்டு பஞ்சவடியில் ஸ்ரீராமாசிரமத்தையடைந்து சீதாலட்சுமணருடன் கூடி மரவுரியும் சடைமுடியும் தரித்துத் தவக்கோலங்கொண்டெழுந்தருளியிருந்த ஸ்ரீராமனைக்கண்டு பழையபகையை நினைந்து இவன் இப்போது தவவேடம் பூண்டிருக்கின்றமையின் தன்னைக்கொல்லானென வெண்ணித்துணிந்து கெட்டியோடிக்கூரிய கொம்புகளினால் முட்டிக்கொந்திக் கொலைசெய்யமுயன்றான். அப்பொழுது ஸ்ரீராமபிரான் சினமூண்டு சரங்களைத்தொடுத்துவிட இவனுடன்வந்த இரண்டு ராக்ஷஸரும் சரங்கள்பட்டுச் சிரங்களறுப்புண்ணத் தான்மாத்திரந் தப்பித்துக்கொண்டோடியொளித்துப் பழையபடி தவவேடம்பூண்டிருந்தான். பின்பு இராவணன் சீதாதேவியை எடுத்துப்போக இவனுதவியை வேண்டினன். அப்போதுமாரீசன் ஸ்ரீராமனுடைய பராக்கிரமத்தை யவனுக்குத் தெரிவித்து 'அக்காரியத்தை நினையாதே' என்று பலபடியாய்ச்சொல்லியும் அவன்கேளாமையால் 'உன்கோபத்துக்குப் பாத்திரனாகிறதைக் காட்டிலும் ஸ்ரீராமனுடைய பாணத்துக்கிரையாகிறேன்' என்று ஓர் பொன்மானுருக்கொண்டு இராமனுடைய ஆச்சிரமத்துக்கெதிரில் பசும்புல்மேய்ந்துகொண்டிருந்தான். சீதை அதுகண்டு அதன்ரூபலாவண்ணிய முதலிய வற்றிற்குச் சந்தோஷித்து உடனே தன்பர்த்தாவுக்குச்சொல்லி அதைத் தனக்குப்பிடித்துக் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்தித்தாள். இராமன் அதைப்பிடிக்கப்போக அது அவர்கையிற் சிக்காமல்

"மிதித்தது மெல்ல மெல்ல வெறித்தது வெருவி மீதிற்
குதித்தது செவியைநீட்டிக்குரபத முரத்தைக்கூட்டி
உதித்தெழு மூதைவெள்ள மென்றிவை யுருவச்செல்லும்
கதிக்கொரு கல்விவேறே காட்டியதொந்ததன்றே"

என்கிறபடியே துள்ளியோட்டம் பிடிக்க அதைத்துரத்திக்கொண்டு வெகுதூரம் சென்று அதுமாயமானென்று அறிந்து பாணத்தைப் பிரயோகிக்க மாரீசன் தன்மெய்யுருக்கொண்டு "ஹாஸீதா லக்ஷ்மணா" என்று இரைச்சலிட்டுத் தரையில்விழுந்திறந்தான்.

இராவணன்—அரக்கர் குலத்தரசன். இவனுடைய இராசதானி இலங்கை. தகப்பன் புலஸ்தியருடைய புத்திரனான விச்சிரவசு. தாய் சுமாலியின்மகளாகிய கேகசி. மனைவி மயன்மகளாகிய மந்தோதரி. தம்பிமார் கும்பகர்ணன், விபீஷணன். தங்கை சூர்ப்பணகை. மகன் இந்திரஜித்து முதலியோர். இராவணன் பிர்மாவைக்குறித்து வெகுகாலந் தவஞ்செய்து அவர் பிரசன்னரானபோது "சுவாமி! மனிதரையும் மற்றுமுள்ள அற்பஜெந்துக்களையும் யான்மதிக்கின்றிலேன்; சுரர், அசுரர், கின்னரர், கிம்புருடர், இயக்கர், விச்சாதரர், கந்திருவர், நாகர்முதலிய தேவகணங்களாலும் சிங்க முதலிய மிருகங்களாலும் சாவில்லாதிருக்க வரமளிக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, பிரமதேவன் அங்ஙனமே யாகுக என்று அநுக்கிரகித்து, தசக்கிரீவா! நீ நினைந்த உருவமெடுக்கக்கடவை எனவும் அருளிச் செய்தார். இவன் அவ்வரப்பிரசாதத்தாலே மிகச்செருக்கடைந்து, திக்குவிஜயம் செய்யப்புறப்பட்டு முதலில் குபேரனைச் செயித்து அவனுடைய விமானமாகிய புஷ்பகத்தை அபகரித்துக்கொண்டு அதில் ஏறிச் சஞ்சரிக்கையில் அது கைலாசகிரியினருகில் நின்றுவிட அதற்குக் காரணம் ஒன்றும் தோன்றாமல் திகைத்திருந்தான். அப்பொழுது நந்திகேசுரர்வந்து அவனைப்பார்த்து, ஓ தசானனா! இம்மலை பரமசிவன் எழுந்தருளியிருக்குமிடம்; இதில் அவர் கட்டளையின்றி யாரும் வரக்கூடாது; நீயறியாது வந்தனை, வந்த வழியே திரும்பிச்செல் என்ன, இராவணன் சீற்றமுற்று, சிவனென்பவன் யாரடா எனக்கு இடையூறு இழைப்பவன் என்று வானரம்போலும் முகத்தோடு நின்ற நந்திதேவரைப் பரிகசித்தான். அதனால் நந்திதேவர் கோபங்கொண்டு அடா ராக்ஷஸா! நீ என்னை வானரமுகனென்று அவமதித்துப் பரிஹாஸம் செய்தாயாகையால் மகா பல பராக்கிரம மகிமையுள்ள வானரர்கள் பிறந்து உன் செருக்கையடக்கி உன் ஊரையும் பேரையும் யழிக்கவருவார்களென்று சபித்துப்போயினர், உடனே தசக்கிரீவன் அதைப் பாராட்டாமல் என் போக்குக்குத் தடைசெய்த இம்மலையை வேரோடு பிடுங்கி எறிகிறேனென்று அம்மலையைப் பெயர்த்துச் செண்டுபோல் வாரி எறியத் தொடங்கினான். பரமசிவன் அதையறிந்து தங் காற்பெருவிரலால் அம்மலையை அழுத்தினார்; அழுத்தவே இவன்கைகள் அதன்கீழ் அகப்பட்டுக்கொண்டு வாங்க வழியில்லாமற்போக அவ்வருத்தத்தால் வெகுகாலம் அழுதுகொண்டிருந்து கடையியில் பரமசிவனைப் பலபடியாகப் பாடித்துதிக்க அவர் இரங்கி தங்கால்விரலையெடுக்க இவன் தன்கையை வாங்கிக்கொண்டு அப்புறஞ் சென்றான்.

பின்பு ஒருநாள் இர்ராவணன் அங்கங்கேபோய்த்திரிந்துகொண்டிருக்கையில் இமயமலைச்சாரலிலே பிருகஸ்பதியின் குமாரராகிய குசத்துவசர் என்பவருடைய புத்திரியான வேதவதி என்னும் ஓர் மடந்தை தவவேடம்பூண்டு தாமரைக்கண்ணனைக் குறித்துத் தவஞ் செய்துகொண்டிருந்த விடத்திற்கு வந்து அவள் தவத்திற்கு இடையூறு செய்து அவளைக் கூந்தலைப்பற்றி இழுத்தான். இழுக்கவே அவள்சினந்து தன்கையாற் கூந்தலை அறுத்துவிட்டு உடனே தீயை வளர்த்து இராவணனைப் பார்த்து, அடா பாதகா! உன் கையாற் பரிசித்த உடலை இனி யான் வைத்திருக்கமாட்டேன். இதோ தீப்பாய்ந்து உயிரைவிடுகிறேன். உன்வதத்திற்கு நானே காரணமாக மறுபடியும் பிறப்பேன்என்று சொல்லி தீயிற்குதித்துவிட்டாள்.

பின்பு இராவணன் விமானமேறிச்சென்று உசீரபீசம் என்னுமிடத்தில் யாகஞ்செய்துகொண்டிருந்த மருத்தன் என்னு மரசனைச் செயித்து அப்

புறம் அங்கங்கேயுள்ள அரசர்களை அடக்கிக்கொண்டு அயோத்தியைக் கிட்டி அதன் அரசனான அநரண்ய மகாராசனோடு போர்புரிந்து தன் வலிக்குத் தோற்றுத் தரையில்விழுந்த அந்த அநரண்ய மகாராசாவைப் பார்த்து நகைத்து, ஓ இக்ஷ்வாகு குலத்தரசனே! என்னோடெதிர்த்து நீ என்னபயன் கண்டாய் என்று இகழ, அநரண்யமகாராசன் இராவணனைப்பார்த்து அடாதுராத்மாவே! நீ இக்ஷ்வாகுவம்சத்தைப் பழித்தாயாகையால் இக்குலத்தில் இராமனென்று ஒருமகாத்துமா அவதரித்து உன்குலத்தைக் கருவறுக்கும் என்று சொல்லிச் சுவர்க்கஞ் சேர்ந்தனன்.

பின்பொருகால் விமானமேறித் திரிந்துகொண்டிருக்கையில் அரம்பையென்னும் அச்சரப்பெண்மயில் நவமணியணிந்து நல்வண்ணப்பட்டுடுத்து நானத்தோடு களம்பம்பூசி மந்தாரப்பூமாலைசூடி அவ்வழியாய்க் குபேரன் மகனான நளகூபரனிடம் நாடிச் செல்லுகையில் இராவணன் அவளைப் பிடித்து அலைக்கழிக்க அவள் மெல்ல அவன்கையிலிருந்து தப்பித்துக்கொண்டு போய் அச்செய்தியை நளகூபரனிடஞ்சொல்ல, அவன் கண்சிவந்து கையில் நீரையெடுத்துக்கொண்டு இராவணனைக்குறித்து, "இனிக் கருத்திசையாத பெண்ணை இவன் வலிமையாற் கற்பழிக்க முயல்வனாயின் தலை ஏழுசுக்கலாய் வெடித்துச் சாகக்கடவன்" என்று சபித்தான்.

பின்பு திக்குப்பாலகரோடு போர்புரிய எண்ணங்கொண்டு இயமன், வருணன் முதலியோரைச்செயித்து தேவலோகத்தின் மேற்செல்ல இந்திரன் அதையறிந்து சேனையைத் திரட்டிவந்து அவனோடு எதிர்த்துப்போர்புரிய இராவணன் மகனாகிய *மேகநாதன் என்பவன் இந்திரனைக்கட்டிக்கொண்டு வந்து தன்தகப்பனுக்குக் காட்ட இராவணன் ஜயபேரிகைகொட்டிக்கொண்டு இலங்கைபோய்ச்சேர்ந்தான்.

மேலும் இவன் இந்திரனோடு போர்புரியும்போது இந்திரனுடைய யானையாகிய ஐராவதம் தன்னுடைய மருப்புக்களாலே இவனுடைய மார்பிற் குத்துகையில் அம்மருப்புக்கள் இவன்மார்பிலொடிந்து போயின. ஆகையால் இவன் மிகவும் வலிய தேகமுள்ளவன் என ஏற்படுகின்றது. இவன் மகத்தாகிய தவங்களைச்செய்து வரங்களைப்பெற்று மூவுலகிலுள்ள ஸாதுக்களையெல்லாம் வருத்த அவர்கள் அது பொறுக்கமாட்டாமல் பிரமதேவனிடத்து முறையிட அவர் அவர்களை யிட்டுக்கொண்டு பாற்கடலுட் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீமகாவிஷ்ணுவினிடத்துக்குப்போய் பிரார்த்திக்க அவர் ஸ்ரீராமனென்னும் பெயரோடு மனுஷியாவதாரஞ்செய்து இவனைச் சம்ஹரிக்க, அப்போது இவன் அவரைத்துதித்துப் பரகதியடைந்தான்.

* இம்மேகநாதனே இது முதலாக இந்திரசித்து என்னும் பெயரினாற் பிரசித்தியடைந்தனன். [இந்திரசித்து—இந்திரனை ஜயித்தவன்.]

ஆரணியகாண்டம்.

மாரீசன்வதைப்படலம்.

[ககஉ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

201.—தேவியை தீண்டா முன்னம் இவன் தலை சரத்தில் சிந்திபோம் வகை புணர்ப்பென் என்று புந்தியால் புகல்கின்றேற்கு உம் - சீதாதேவியைத் தொடுவதற்கு முன்னேதானே இவனுடைய சிரங்கள் ராமசரங்களாற்சிதறுண்டுபோகும் வகையைத் தெரிவிப்பேன் என்று விவேகத்தைத் தருகிற சொற்களைக்கொண்டு சொல்லுகின்ற எனக்கும், ஆம் வகை ஆயிற்று இல்லை - பிழைக்கத்தக்க மார்க்கம் உண்டாகவில்லை, (ஆகையால்) விதி விளைவை ஓர்வார் யார் - விதிப்பயனை யறிபவர்கள் யாவர் [ஒருவருமில்லையென்றபடி], ஏவது செய்வது அல்லால் வேறு ஒன்று இல்லை என்று எண்ணு - ராவணன் ஏவுவதைச் செய்வதன்றி வேறொரு வழியுமில்லை யென்றெண்ணி, எ-று.— இது குளகம். மேற்பாட்டோடுமுடியும். புந்தி - புத்தி என்னும் வடமொழித்திரிபு.

202.—என்ன மா மாயம் யான் மற்று இயற்றுவது இயம்புக என்றான் - என்ன பெரிய மாயம் யான்செய்யவேண்டுவது அதை நீ சொல்லென்றான் (மாரீசன்); (அதைக் கேட்ட ராவணன்) பொன்னின் மான் ஆகி (அவள்) புக்கு பொன்னை மால் புணர்த்துக என்ன - (நீ) ஒரு பொன்மானாகி (அவளிருக்குமிடம்) போய் சீதைக்கு ஆசையையுண்டாக்கக்கடவை யென்று சொல்ல, மாரீசன் அன்னது செய்வென் என்னா அமைந்து போனான் - மாரீசன் அந்தக்காரியத்தைச் செய்வேனென்று சம்மதித்துச் சென்றான், மின்னும் வேல் அரக்கர் கோன் உம் வேறு ஒரு நெறியில் போனான் - மின்னுகின்ற வேலாயுதத்தை யேந்திய ராக்ஷஸராஜனும் [ராவணனும்] மற்றொரு வழியாகச் சென்றான், எ - று.

203.—மேல் நாள் அவன் வில் வலி கண்டமையால் தான் ஆக அமைந்து சமைந்திலன் - முன்னாளில் அவனுடைய [ஸ்ரீராமனுடைய] வில்லாற்றலை அறிந்தமையால் தானாகவே ஒருமாயத்தைச் செய்யச் சம்மதியாதவனாகி, மான் ஆகுதி என்றவன் வாய்மொழியால் - மான்ரூபம் கொள் என்று சொன்னவனுடைய [ராவணனுடைய] வாய்ச் சொல்லினால், போனான் மனம் உம் செயல் உம் புகல்வாம் - (மானுருக்கொண்டு ஸ்ரீராமாச்சிரமத்தைக்குறித்துச்) சென்ற மாரீசனுடைய சிந்தையின்நிலையையும் செயலையும் சொல்வோம், எ - று.—மேல்பாட்டாற் சிந்தையின் நிலையும், 205 - 206ம் பாட்டுகளால் செயலும், முறையே கூறப்படுதல்காண்க. வில்வலிகண்டமை தானாக அமைந்துசமையாமைக்குக் காரணமாயிற்று. வாய்மொழி என்பதில் வாய் - தீச்சொற்பயின்றதென்கைக்கு. சமைந்திலன்- என வேண்டாதுகூறினார் இதில் இல் எதிர்மறைவிகுதி; இவ்வெதிர்மறைவிகுதி எதிர்காலமொழிந்த மற்றஇரண்டு காலங்களிலும் வரும்.

204.—வெம் சுற்றம் நினைந்து உகும் - (ஸ்ரீராமாச்சிரமத்தைக் குறித்துச் சென்ற மாரீசனுடைய மனமானது) விருப்பமான சுற்றத்தாரை நினைந்து வருந்தும்; வீரரை வேறு அஞ்சு உற்று மறுக்குறும் - வீரருக்கு [ராமலக்ஷ்மணருக்கு] வேறாக அஞ்சுதலையடைந்து மயங்கும்; ஆழ் குழி நீர் நஞ்சு உற்று உறும் மீனின் நடுக்குறும் - ஆழ்ந்த பள்ளத்திலுள்ள சலமானது விஷத்தைப்பொருந்த அதில் பொருந்திய மீன் நடுங்குவதுபோல நடுங்கும்; நெஞ்சு மால் உற்றது ஓர் பெற்றி நினைப்பு அரிது - (இன்னும் பலவாறாக அந்தமாரீசனுடைய) மனம் மயங்கிய ஒரு தன்மை (நம்மனதினால்) நினைக்கவு முடியாது, எ - று.—நஞ்சுற்று - செயவெனெச்சத்திரிபு. நெஞ்சால் நினைக்கவே முடியாதென்றமையால், வாயாற்சொல்ல முடியவேமுடியாதென்பது தானே போதரும். ஆல் இரண்டும் அசைகள்.

205.—அ காலம் உம் வேள்வியின் அன்று (உம்) அவனோடு நலிந்து உம் எ கால் உம் ஓர் ஈறு பெறான் - (தண்டக வனத்தில் மானாய்ச்சென்ற) அந்தக்காலத்திலும் விசுவாமித்திரருடைய யாககாலத்திலும் அவனால் [ஸ்ரீராமனால்] வருத்தமடைந்தும் (இவ்விரண்டுகாலங்களில்) எந்தக் காலத்திலும் ஒரு முடிவுபெறாதவன் [சாகாதவனான மாரீசன்], மு காலின் முடிந்திலோன் முயல்வான் அ இராகவன் வைகு புனம் புக்கான் - மூன்றாந்தரமாகிய இந்த சந்தர்ப்பத்தில் இறக்கும்பொருட்டே முயல்பவனாகி அந்த ஸ்ரீராமன் வஸிக்கின்ற புனத்தில் ப்ரவேசித்து, எ - று.—அன்று என்பதன்பின் உம்மை தொகுத்தல். முயல்வான் - எதிர்கால வினையெச்சம்; காரியப்பொருட்டு. புக்கான் என்பதனை முற்றெச்சமாக்கி மேற்பாட்டோடு முடித்துப் பொருளுணர்க. கால் - காலமென்னும் வடமொழிச்சிதைவு.

206.—தன் மானம் இலாத நயங்கு ஒளி சால் மின் வானம் உம் மண் உம் விளங்குவது ஓர் பொன் மான் உருவம் கொடு - தனக்கு ஒப்பில்லாத விளங்குகின்ற ஒளிநிறைந்த மின்னலையுடைய ஆகாயத்திலும் பூமியிலும் (சிரேஷ்டமாய்) விளங்குவதாகிய ஒரு பொன்மானின் உருவத்தைக் கொண்டு, நல் மான் அனையாள் தனை நாடுறுவான் - நிஜமான மானையொத்த சீதாதேவியைத் தேடுகிறவனாகி, போயினன் - போனான், எ - று.—மானமென்னும் வடமொழியை மானமென்றது முதற்குறை.

207.—கண்ட கலைமான் முதலாயின எலாம் - (இப்பொன்மானைக்) கண்ட கலைமான் முதலியவைகளெல்லாம், நிலை ஆம் மன வஞ்சனை - நிலையாகிய [எப்பொழுதும் நீங்காத] மனோவஞ்சகத்தையுடைய, நேயம் இலா - நட்புக் குணமில்லாத, விலை மாதர்கண் - வேசையரிடத்தில், யார் உம் விழுந்தால் என - (மதிகெட்டோர்) எல்லாரும் (மயங்கி) விழுந்தாற் போல, அலை மானுறும் ஆசையின் வந்தன - கடலை நிகர்க்கின்ற ஆசையுடன் [ஆசைப் பெருக்கத்துடன்] (தொடர்ந்து) வந்தன, எ - று.

208.—வைதேகி தன் வால் வளை மென் கை எனும் கொய்யா மலரால் மலர் கொய்துறுவாள் - வைதேகி [சீதை] தனது வெண்மையான வளையலணிந்த மெல்லிய கைகளென்னப்படுகிற (ஒருவராலும்) கொய்யப்படாத (தாமரை) மலர்களால் (அப்புனத்திலுள்ள) மலர்களைப் பறித்துக்கொண்டு வரும்படி எண்ணினவளாகி, பொய் ஆம் என ஓது புறம் சொலினால் நையா இடை நோவ நடந்தனள் - (இவளுக்கு இடையுண்டென்பது) பொய்தான் என்று சொல்லுகிற சொற்களுக்கு நைந்து (அல்லது நையாமல்) இடையானது நோவும்படி நடந்துபோனாள், எ - று.—வைதேகி - விதேகன் மகள்; இது - தத்திதாந்தம். ஜானகி (=ஜனகன்மகள்) என்பது மிது. கொய்யா மலர் என்றது பாயாவேங்கை, பறவாக்கொக்கு என்பனபோல.

209.—உண்டாகிய கேடு உடையார்-உளதாகிய பேரகூழையுடையவர்கள் [கெடுதியை யடையப்போகிறவர்கள்], எண் தான் உம் இயைந்து இயையா உருவம் துயில்வாய் கண்டார் எனல் ஆம் வகை - எண்ணத்திலும் இசைந்து மிசையாதுமிருக்கிற ரூபத்தைத்தூக்கத்தில் கண்டவரென்று சொல்லும்படி, பண்டு ஆர் உம் உறா இடர்பாடு உறுவாள் கண்டனள் - இதற்குமுன்யாரு மடையாத துக்கத்தையடையப்போகிறவள் [சீதை] (அப்பொன் மானைப்) பார்த்தாள், எ - று.

210.—காணா - (அம்மாயமானைக்) கண்டு, இராவணன் வாழ்நாளை மாளுதலால் - ராவணன்தன் ஆயுள் முடிதலாலும், வீழ் நாளின் புவி அறம் மேவுதலால் - அவனிறக்கும்நாளில் பூமியில் தர்மமானது பொருந்தப் போகிறதாலும், இது கைதவம் என்று உணராள் - இது வஞ்சனையுள்ளதென்று அறியாதவளாகி, பேணாத நலம்கொடு பேணினள் - (மனதினிடத்தில்) விரும்பத்தகாத இன்பத்தைக் கொண்டு அந்தமானை விரும்பினாள், எ - று.—வாணாள், வீணாள் - இவை வாழ்நாள், வீழ்நாள் என்பவற்றின் மரூஉ. வாணாளை என்பதில் ஐ - சாரியை. மூன்றனுருபு இரண்டடுக்கி உணராள் என்னும் வினைகொண்டன.

211—பிறைநெற்றியாள் முனம் நின்றிடலும் - மூன்றாம்பிறைச் சந்திரனையொத்த நெற்றியையுடையவள் [சீதை] முன்னே (அம்மான் சென்று) நின்ற மாத்திரத்தில், முற்றி பொழி காதலின் முந்து உறுவாள் - முதிர்ந்து பொழியாநின்ற [அதிகமாயுண்டாகிய] ஆசைப்பெருக்கினால் முந்திச்செல்பவளாகி, பற்றி தருக என்பென் என - பிடித்துக் கொடுமென்று சொல்வேன் என்று, பதையா - பதைத்து, வெற்றி சிலை வீரனை மேவினள் - விஜயகோதண்டத்தையுடைய வீரனை [ஸ்ரீராமனை] யடைந்தாள், எ - று.—நெற்றிப் பிறை நெற்றிப்பிறையாள் என்பதை விகுதி பிரித்துக் கூட்டுக. நெற்றிப்பிறை யென்பதுபோல்வனவற்றை உபமாநோத்தரபதஸமாஸம்என்பர் வடநூலார்.

212—ஆணி பொனின் ஆகியது - உரையாணிப்பொன்னாலானதும், ஆய் கதிரால் சேணில் சுடர்கின்றது - நல்ல காந்தியினால் ஆகாயத்தில் சொலிக்கின்றதும், திண் செவி கால் மாணிக்கம் மயத்து - திருடமான [பலம் இன்றதும், பொருந்திய] காதுகளும் வாலும் மாணிக்கமயமாயிருக்கப்பெற்றதும் ஆகிய, ஒரு மான் உளது - ஒருமான்வந்துளது; காண தகும் - (அது தேவரீரால்) பார்க்கப்படத்தக்கதாயிருக்கின்றது, என்றனள் கைதொழுவாள் - என்று சொலிக் கைதொழுவாளாயினள், எ - று.—மருண்டகாலத்து நெறித்த

செவிகள் வலியவாகலின் திண்செவி என்றார். மயந்து - இக்குறிப்புவினைமுற்று அகரந்தொகுத்தல்பெற்றது.

213.—இ மான் இ நிலத்தினில் இல்லை எனு - இந்தமான் இந்த பூமியினிடத்து இல்லையென்றும், இது எ மான் என சிறிது எண்ணல் செயான் - இது எப்படிவந்தமான் என்று கொஞ்சமும் நினையாமலும், செம் மான் அவள் சொல் கொடு - செவ்விய மான்போன்ற அவளுடைய [ஸீதையினுடைய] சொல்லைக்கொண்டு, தே மலரோன் அம்மான் உம் அருத்தியன் ஆயினன் - தெய்விகமான தாமரைமலரை யிருப்பிடமாக்கிய பிரமதேவனுக்குத் தந்தையாகியஸ்ரீராமபிரானும்ஆசையுள்ளவனானான், எ - று.—அருத்தி - ஆசை, வடசொல். வாடுதல் குவிதல் முதலிய குற்றமின்மையின் தே என்பதற்குத் தெய்விகமெனப் பொருள் கொள்ளப்பட்டது. அம்மானும் - உம்மை உயர்வுசிறப்போடு இறந்ததுதழீஇயது.

214.—இது விளைவு அன்று எனான் - இது இயற்கையாய் விளைந்ததன்றென்றெண்ணுதவனாய், பூண் தஞ்சு பொலம் கொடியோய் - ஆபரணங்கள் தங்கிய பொற்கொடிபோன்றவளே! வேண்டும் எனலால் - நீ வேண்டும் என்று சொல்லுதலால், அது நாம் காண்டும் எனும் வள்ளல் கருத்து உணர்வான் - அதை நாம் பார்ப்போம் என்று சொல்லும் உதாரகுணமுள்ளவனுடைய [ஸ்ரீராமனுடைய] திருவுள்ளக்குறிப்பை அறியும்பொருட்டு, ஆண்தங்கு இளையோன் உரையாடினன் - ஆண்மை நிலைபெற்றுள்ள இளையபெருமாள் [இலட்சுமணர்] சொல்லத்தொடங்கினார், எ - று.—அது மேற்கூறுகின்றார். ஆண் என்றது ஈண்டு ஆண்மைக்குக் கொள்ளப்பட்டது. கொடியோய்=கொடியாய் [நன். சூ. 353]. காண்டும் - உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்று. ஆல் - அசை, மகரம் விரித்தல். உணர்வான் - வினையெச்சம்.

215.—காயம் கனகம் சரீரம் பொன்னிறம்; கால் செவி வால் மணி - கால்களும் காதுகளும் வாலும் மாணிக்கநிறம்; பாயும் உருவோடு இது பண்பு எனலால் - பாய்கின்ற வுருவத்தோடுகூடிய இது குணமாயிருப்பதால், மாயம் எனல் அன்றி - இதைமாயமானென்று நினைப்பதல்லாமல், மனம்கொளமனதிலூன்றிவிசாரிக்க, இறை - ஸ்வாமீ! ஐயுறவு எய்தும் - சந்தேகமுண்டாகின்றது, என்றஅளவு ஏ - என்று சொன்னமாத்திரத்திலே, எ - று.—இறை ஐயுறவு - சிறிது சந்தேகம் என்னவுமாம்.

216.—இளம் குமரா - இளந்தன்மையையுடையவனே! [லக்ஷ்மணா!], நேர்மையினால் வல்லார் உம் நில்லா உலகின் நிலை உணர்ந்திலர் - செவ்வையானமார்க்கத்தினால் [கல்விகேள்விகளால்] வல்லவர்களும் ஸ்திரமில்லாத பூலோகத்தின் நிலைமையை அறியார்கள்; மன் உயிர் தாம் பல் ஆயிரம் கோடி பரந்து உள ஆல் - (லோகத்தில்) நிலைபெற்ற ப்ராணிகள்தாம்அநேக ஆயிரகோடி பரவியிருக்கின்றன ஆகையால், இல்லாதன இல்லை - இவ்வுலகின்கண் இல்லாத புதுமையான வஸ்துக்கள் இல்லை; [நமக்குத்தெரியாதன அநேகம் உள, அவற்றுள் இதுஒன்றாயிருக்கலாம் என்படி], எ - று.—ஆல் என்பது ஆயில் என்பதன் மரூஉ; அசையுமாம். தாம் என்பது கட்டுரைச்சுவைபட நின்றது.

217.—என் என்று நினைத்தது - என்னவென்று நீ நினைத்தது; இழைத்து உள வேறு உள நம் கன்னங்களின் காணுதும் - பிரமனாற் படைக்கப்பட்டுள்ளனவாய் (ஸாதாரண ஸ்ருஷ்டிக்கு) வேறாயிருப்பனவற்றையும் நமது காதுகளினால் கேட்டிருக்கிறோம்; (அன்றியும்) பொன்னின் ஒளிமேனி பொருந்திய எழ் அன்னங்கள் பிறந்தது அறிந்திலை ஓ - ஸ்வர்ணகாந்தியையுடைய சரீரத்தைக்கொண்ட எழு ஹம்ஸங்கள் உத்பத்தியானதை நீயறிந்திலையோ, எ - று.—கன்னங்களின்காணுதும் என்பதில் காணுதலென்னும் வினைக்கு இலக்கணையாய்ப்பொருள் கொள்ளவேண்டும்.

218.—மொய் உயிர் முறை உம் முடிவு உம் இலை—(உலகத்தில்) நிறைந்திருக்கிற ஜீவபேதங்களுக்கு (இப்படித்தான் இருக்கவேண்டு மென்னும்) முறைமையும் (இவ்வளவுதான் இருக்கவேண்டு மென்னும்) எல்லையும் இல்லை, என்று இறைவன் இளையானொடு இயம்பினன் - என்று சக்ரவர்த்தித்திருமகன் [ஸ்ரீராமன்] இளையபெருமாளுக்கு [லக்ஷ்மணருக்கு] சொன்னார்; (அப்பொழுது) ஏழை (பெண்களுக்குரிய குணங்களிலொன்றாகிய) மடமையையுடைய ஸீதாதேவி, பறையும் துணை - (தேவரீர் இப்படிப்) பேசுகிறதற்குள், அன்னது பல் நெறி போய் மறையும் என வருந்தினள் - அந்தமான் நெடுந்தூரம்போய் (கண்ணுக்கு)மறைந்துபோகும்என்று வருத்தப்பட்டாள்.

219.—அனையவள் கருத்தை உன்னு - அப்படி வருந்துகின்றவளுடைய [ஸீதாப்பிராட்டியினுடைய] மநோபாவத்தை நினைத்து, அஞ்சன குன்றம் அன்னான் - நீலமலைபோன்றவன் [ஸ்ரீராமன்], புனை இழை - அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களையணிந்தவளே! அது காட்டு என்று போயினன் - அந்த மானைக் காட்டுவா யென்று (அவள் பின்னே) போனான்; பொருந்தாசிந்தை கனை கழல் தம்பி பின்பு சென்றனன் - இந்தக் காரியத்தை ஸஹியாத மனதையுடைய ஒலிக்கின்ற வீரகண்டை யணிந்த இளையபெருமாளும் (அவர்கள்) பின்றொடர்ந்து போனார்; (அப்போது) வந்து நின்ற மான் - அந்த ஸ்ரீராமாச்சிரமத்திலே வந்திருந்த மாய மானானது, கடக்க ஒண்ணா வினை என எதிர் விழித்தது - யாவராலும் கடக்கமுடியாத ப்ராரப்தகர்மபலம்போலே எதிரில்நின்று (மருண்டு) பார்த்தது, எ - று.—புனையிழை-அன்மொழித்தொகை; அண்மைவிளியாதலின் இயல்பாயிற்று.

220.—நோக்கிய மானை நோக்கி - (எதிரில் நின்று மருண்டு) பார்த்த மானைப்பார்த்து, நுதி இழை மதியின் ஒன்று உம் தூக்கிலன் - (கல்வி கேள்விகளால்) கூர்மைசெய்த அறிவினால் சிறிதும் ஆலோசியாதவனாய், இது நன்று என்றான் - இந்தமான் நல்லமானே என்றான்; அதன் பொருள் சொல்லல் ஆகும் - அதன்பொருள் சொல்லப்படும்; (என்னெனின்), சேக்கையின் அரவு நீங்கி பிறந்தது - (திருப்பாற் கடலில்) ஆதிசேஷனாகிற படுக்கையைப் பிரிந்து (ஸ்ரீமந்நாராயணனே சக்கிரவர்த்தித்திருமகனாய்) அவதரித்ததற்குக் காரணம், தேவர் செய் பாக்கியம் உடைமை அன்று ஓ - தேவர்கள் தவம்பண்ணின பாக்கியத்தையுடைமை யல்லவோ, அன்னது பழுது போம் ஒ - அப்படிப்பட்ட தவப்பயன் வீண்போகுமா [போகாதென்பதாம்].

221.—இளையவ - தம்பி, என் ஒக்கும் என்னல் ஆகும் - (இதற்கு) எந்தப் பொருள் ஒப்பாமென்று சொல்லக்கூடும், இதனை நோக்காய்-இதனையுற்றுப் பார்; உவமை தன் ஒக்கும்அல்லால் - உவமையில் தன்னைத் தானே யொப்பதன்றி, தனைஒக்கும் உவமை உளதோ - தன்னையொத்திருக்கிறவேறுவமைப் பொருளுளதோ; பல் நக்க தாளம் ஒக்கும் - இதன்பற்கள் விளங்குகின்ற முத்துக்களை யொத்திருக்கின்றன; மென் நா பசும் புன்மேல் படரும் - இதனது ம்ருதுவாகிய நாக்கானது பசும்புல்லின்மேற் பரவுகின்றது; மேனி மின் செம் பொன் ஒக்கும் - இதன் சரீரம் மின்னலையும் செம்பொன்னையும் ஒத்திருக்கின்றது; புள்ளி வெள்ளியின் விளங்கும் - அதன்மேலுள்ள புள்ளிகள் வெள்ளிபோல விளங்குகின்றன, எ - று.—என் என்பது வினைப் பெயர்; "என்னுக்கடைவுடையேன் யான்," "என்றேற்றான் கொல்லென்னுஞ்சொல்" என்பனவற்றிற்போல. ஒக்கும் என்பதில் ஒ - பகுதி.

222.—வரி சிலை மறை வலோனே - கட்டமைந்த வில் வித்தையிலும் நான்மறையிலும் வல்லவனே! ஊர்வன பறப்ப யா உம் உருகிய மனத்த ஆகி - தவழ்வனவும் பறப்பனவுமாகிய எல்லாம் (ஆசையினால்) உருகிய மனத்தையுடையனவாகி, விரி சுடர் விளக்கம் கண்ட விட்டில் போல் வீழ்வ காணாய் - பரந்தவொளியையுடைய விளக்கைக் கண்ட விட்டில் (அவ்விளக்கில்விழும்தன்மை) போல (இதை விரும்பி வந்து) விழுமவற்றைப்பாராய்; மான் இதன் வடிவை உற்ற அரிவையர் மைந்தர் யார் ஏ ஆதரம் கூர்கிலாதார் - மானாகிய இதனழகைப்பார்த்த யுவதிகள் யுவாக்கள் இவர்களில் யார்தாம் இதனிடத்து ஆசைமிகாதவர்கள், [கண்டோரெல்லாரும் ஆசைமிகுவார்கள்], எ - று.—"அரிவையர் மைந்தர் யாரே யாதரங் கூர்கிலாதார்" என்றது தாமும் பிராட்டியும் ஆதரங்கூர்ந்தது குற்றமன்றென்றுணர்த்தற்குப் போலும்.

223.—ஆரியன் அனைய கூற - பூஜ்யனான தமையன் [ஸ்ரீராமன்] அத்தன்மையான வார்த்தைகளைச் சொல்ல, அன்னது தன்னை நோக்கி இது சீரியது அன்று என்று சிந்தையில் தெளிந்த தம்பி - அதனை [அந்த மானை] ப்பார்த்து இது சிறந்ததல்ல [நிஜமானதல்ல] வென்று புத்தியினால் நன்குணர்ந்த தம்பி [லக்ஷ்மணன்], வேரி அம் தெரியல் வீர - தேன் [அல்லது வாசனை] பொருந்திய அழகிய மாலையையணிந்த வீரனே! கண்டது கனகம் மான் - நாம் கண்டது பொன்மானே, ஈண்டு காரியம் என்னை - (இனி) இவ்விடத்து அதனால் நமக்காகவேண்டிய காரியமென்ன இருக்கிறது (ஒன்று மில்லையாகையால்), மீள்வது ஏ மேன்மை என்றான் - நம்மிடத்திற்குத் திரும்பிப்போவதே மேலானகாரியம் என்றுசொன்னான், எ - று.—அனைய - அனை என்னுமிடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர்.

224.—அற்று அவன் பகரா முன்னம் - அவ்வாறு லட்சுமணன் சொல்லாததற்குமுன்னே, அழகியாள் உம் அநகனை (நோக்கி) - கட்டழகியான ஜானகியும் பரிசுத்தனான ஸ்ரீராமபிரானைப் பார்த்து, கொற்றவன் மைந்த - சக்கிரவர்த்தித்திருமகனே, குழைவு உடை உழையை - நம்மிடத்தன்புடைய இந்தமானை, வல்லை பற்றினை தருதி ஆயின் - விரைவில் பிடித்துக் கொடுப்பீராயின், அவதி எய்த பெற்ற உழி - (வனவாசம் செய்யவேண்டிய பதினான்கு வருடங்களின்) எல்லை முடிவுபெற்றகாலத்தில், பதியிடை - (அயோத்தியா) பட்டணத்தில், இனிது உண்டாட - சந்தோஷமாய் விளையாடுதற்கு, பெறற்கு அரு தகைமைத்து - இது பெறுதற்கரிய தன்மையையுடைய பொருளாகும், என்றாள் - என்று சொன்னாள், எ - று.—வேறு மிருகங்களினு மிக்க அன்புடைமையை வஞ்சகமாகக்காட்டலால் அதை மெய்யென்று கருதி "குழைவுடையஉழை" என்றாள். உண்டாட்டு=மகளிர்விளையாட்டு; விளையாட்டுமாம்.

225.—ஐயம் நுண் மருங்கு நங்கை அஃது உரைசெய்ய - (உண்டோ இல்லையோ என்கிற) சந்தேகத்தை விளைக்கிற நுட்பமாகிய இடையையுடைய பெண்மணியானசீதை அவ்வார்த்தையைச் சொன்ன மாத்திரத்தில், ஐயன் செய்வென் என்று அமைய நோக்கி - தமையன் [ஸ்ரீராமன்] (அப்படியே) செய்வேன் என்று இசைய அதைப்பார்த்து, தெளிவு உடை செம்மல் செப்பும் - புந்தித் தெளிவையுடைய லட்சுமணன் சொல்லத் தொடங்கினான்; அண்ணல் - அண்ணா! வெய்ய வல் அரக்கர் வஞ்சம் விரும்பினார் வினையில் செய்த கைதவ மான் என்று கடையில் காணுதி - (இது) கொடிய வலியையுடைய அரக்கர் வஞ்சனைசெய்யவிரும்பி தந்திரத்தினால் செய்த மாய மான் என்று முடிவில்காண்பீர், என்றான் - என்றுசொன்னான், எ - று.—செம்மல், அண்ணல் - இவைபண்பாகுபெயர்கள். ஐயன் - இது ப்ராகிருதத்தின் வழியாய்வந்த ஆர்யசப்தபவம்.

226.—தேவரை இடுக்கண் தீர்ப்பான் - (அதைக் கேட்டு) தேவர்களைத் துன்பத்தினின்றும் தீர்க்கவந்தவன் [ஸ்ரீராமன்], (தம்பியை நோக்கி) மாய மேல்அன்றுஏ வாளியின் மடிவு ஆம் - இது மாயமானாயின் தக்ஷணமே ஒரே பாணத்தினால் மடிந்துபோம், மடிந்தபோது - (அப்படி இது) மடிந்தகாலத்தில், காய் சினத்தவரை கொன்று - (அதுகாரணமாகக்) காய்கின்ற கோபத்தையுடையவர்களை [ராக்ஷஸர்களை] ஸம்ஹரித்து, கடன் கழித்தேம் உம் ஆதும் - நம்முடையகடனைக்கழித்தவரும் ஆவோம்; தூயதேல் பற்றிக்கோடும் - (அவ்வாறன்றி) மெய்ம்மானாயின் பிடித்துக்கொள்வோம், சொல்லிய இரண்டின் ஒன்று உம் தீயது ஏ உரைத்தி என்றான் - சொல்லப்பட்ட இரண்டில் ஒன்றையும் செய்தல் கெட்டதோசொல்லென்று வினவினான், எ - று.—கடன் என்றது தண்டகாரண்ணியவாசிகளாகிய முனிவர்களுக்கு வாக்குத்தத்தஞ்செய்த கடமையை. கழித்தேம் - வினையாலணையும்பெயர். ஆதும் - கோடும் என்பன தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்றுகள் [நன் - சூ - 145]. இரண்டினொன்று என்புழி இன் உருபு ஏழாவதன்கூட்டிப் பிரித்தற்பொருளது [இலக்கணக்கொத்து - சூ. 42.]

227.—(அதைக் கேட்ட இலக்குமணன்) பொன் நின்ற வயிரத்தோளாய் - அழகுதங்கிய வஜ்ரபர்வதங்கள்போன்ற திருத்தோள்களையுடையவனே! பின் நின்றார் இனையர் என்று உம் உணர்கிலம் - (இந்த மானை

முன்னே ஓட்டி) பின்னே நிற்பவர் இத்தனையரென்றும் அறிகிலேம்; பிடித்த மாயம் என் என்று உம் தெளிதல்தேற்ருேம் - அவர் கொண்டவஞ்சம் ஏதென்றும் தெளிந்திலேம்; (மேலும்) இது யாவது என்று உம் ஓராம் - இதுயாதென்றும் அறியோம்; (ஆகையால்) முன்னின்ருர் முறையில் நின்ருர் முனிந்து உள வேட்டம் முற்றல் - அந்தணர் முறையில் நின்ற ரிஷியானவர் (நந்தந்தையைக்) கடிந்து சபித்த (லக்ஷியத்தின் உண்மையறியாத). வேட்டையை நாமாடுதல், புகழ் உடைத்து அன்று என்ருன் - ச்ரேயஸ்கரமானதல்ல என்று சொன்ஞன், எ - று.—ஆம் - அசை. இனையர் என்பது இத்தனையர் என்பதன் மரூஉ. 'முன்னின்ருர் முறையினின்ருர் முனிந்துளவேட்டம்' என்பதற்கு சக்கிரவர்த்தி ரிஷிபுத்திரனையறியாமல் வேட்டையாடிக்கொன்ற கதையைக்கொண்டு பொருளுரைக்கப்பட்டது. அக்கதையை புராணநாமவிவரணமென்னுந் தலைப்பில் தசரதன் என்னும் பெயரிற் காண்க. இனி இதற்கு 'முன்னிருந்தவராகிய முறைவழுவாதுநின்ற பெரியோர்களால் விலக்கப்பட்ட வேட்டை, எனவும் பொருள்கூறலாம்.

228.—அ நாள் - அந்த ஸமயத்தில், சதுமுகன் தாதை - பிரமனுக்குத் தந்தையானவன் [ஸ்ரீராமன்], பகை உடை அரக்கர் என்று உம் - (இவ்வாறு செய்தவர்) பகையையுடைய ராக்ஷஸரென்றும், பலர் என்று உம் - (அவர்கள்) அனேக ரென்றும், பயிலும் மாயம் மிகை உடைத்து என்று உம் - (அவர்கள்) செய்யும் மாயை மிகுதியையுடைய தென்றும் (எண்ணி), பூண்ட விரதத்தை விடுதும் என்றல் நகை உடைத்து ஆகும் அன்று ஏ - நாம் மேற்கொண்ட விரதத்தை விட்டுவிடுவோமென்பது (பார்ப்பவர்) நகைப்புக்குக் காரணத்தை யுடைத்தாமல்லவா, ஆதலின் - ஆகையால், இது நன்று என்ஞ தகை உடை தம்பிக்கு சொன்ஞன் - இதைப் பிடிப்பது நன்மையென்று பெருந்தகையையுடைய தம்பிக்கு [லக்ஷ்மணனுக்குச்] சொன்ஞன், எ - று.—பூண்டவிரதமென்றது - துஷ்டநிக்ரஹ சிஷ்டாநுக்ரஹங்களை. ஸகலப்பிராணிகளையும் படைத்து அவற்றினியற்கையை யுள்ளபடியே யறியவல்ல பிரமனுக்குத் தந்தையாகிய ஸ்ரீராமன் இது மாயமானென்பதை யுணராதவனல்ல னென்பது தோன்றச் சதுமுகன்தாதையென்ருர்.

229.—(இதுகேட்ட லக்ஷ்மணன்), அண்ணலே - அண்ணு! அடுத்த உம் எண்ணி செய்தல் அமைதி அன்று ஓ - (ஒரு கார்யத்துக்கு) அநுரூபமானவற்றையும் நன்காலோசித்துச் செய்வது நிறைந்த குணமல்லவா; விடுத்து இதன் பின் நின்ருர்கள் பலர் உளர் எனின் உம் - (இந்த மானை முன்னே வர) விட்டு இதற்குப்பின்னே நின்றவர்கள் [ராக்ஷஸர்கள்] அநேகராயிருந்தாலும், வில்லால் தொடுத்த வெம் பகழி தூவி தொடர்ந்தனென் - (என் கையிலுள்ள) வில்லினுல் ப்ரயோகிக்கப்பட்ட உக்ரமானசரங்களைத் தூவிக்கொண்டுதொடர்ந்து, விரைந்து சென்று படுக்குவன் - சீக்கிரமாகப் போய்க் கொல்வேன்; அது அன்று ஆயின் - அப்படியல்லாமல் உண்மை

மானேயானல், பற்றினென் கொணர்வென் - பிடித்துக்கொண்டு வருவேன், என்ருன் - என்றுசொன்ஞன், எ - று.

230.—அ இடை - அந்தச்சமயத்தில், அன்னம் அன்ஞள் - (நடையில்) அன்னத்தை யொத்தவள் [சீதாப் பிராட்டி], அமுது உகுத்தால் அனைய செய்ய வாயிடை மழலை இன் சொல் கிளியினில் குழறி மாழ்கி - அம்ருதத்தைச் சிந்தினதுபோன்ற செவந்த வாயினின்றுண்டாகிற. இனிமையான மழலைச் சொற்களை கிளிகொஞ்சுவதுபோற் கொஞ்சிக் குழைந்து, நாயக நீ ஏ பற்றி நல்கலை போலும் என்ஞ - ஸ்வாமீ! நீதானே (இதைப்) பிடித்துக் கொடாய்போலும் என்று சொல்லி, சே அரி குவளை முத்தம் சிந்துபு சிதறி போயாள் - செவ்வரிபடர்ந்த குவளைமலர்கள்போன்ற கண்களினின்று முத்துப்போன்ற நீர்த்துளிகளைச்சிந்தி வழித்தெறிந்து (பர்ணசாலையை நோக்கிச்) சென்ருள், எ - று.—ஆயிடை - அகரச்சுட்டு நீள யகரமெய்தோன்றியது [நன்னூல். சூ - 163]. அன்னம், அமுதுஇவை முறையே ஹம்ஸம், அம்ருதம் என்னும் ஆரியமொழித்திரிபுகள். அனைய சொல் எனக்கூட்டுக. நீயே என்பதில் ஏகாரம் பிரிநிலை. என்ஞ - செய்யா என்னும்வாய்பாட்டு வினையெச்சம். செம்மை அரி≐சேயரி [நன். சூ - 136]. குவளை, முத்தம் - உவமையாகுபெயர்கள். முத்தம், மூத்து என்பன மூக்தம் என்னும் வடமொழிச்சிதைவு. சிந்துபு - செய்பு என்னும் வாய்பாட்டு இறந்தகாலவினையெச்சம். போயாள் - போ - (பகுதி), ய் - (இறந்தகால இடைநிலை), ஆள் - (விகுதி.)

231.—புரவலன் - காத்தற்ரெழிலில் வல்லவன் [ஜகத்ரக்ஷகனை ஸ்ரீ ராமன்], போனவள் புலவி நோக்கி - (அப்படிப்) போனவளுடைய [சீதையினுடைய] பிணக்கத்தைப்பார்த்து, பொலம் கொள் தாராய் - அழகைக் கொண்ட மாலையை யணிந்தவனே [லக்ஷ்மணு], மான் இது நான் ஏ பற்றி வல்லையின் வருவேன் - இந்தமானை நானே பிடித்துக்கொண்டு சீக்கிரமாக வருவேன்; (அதுவரையில்) கான் இயல் மயில் அன்ஞளை காத்தனை இருத்தி என்ஞ - புனத்தில் வசிக்கின்ற மயிலை (சாயலால்) ஒத்திருப்பவளை [சீதையை]க் காத்துக்கொண்டிருவென்று கட்டளையிட்டு, வேல் நகு சரம் உம் வாங்கினன் விரையல் உற்ருன் - கூர்மையின் விளங்குகின்ற பாணங்களையும் கோதண்டத்தையும் எடுத்துக்கொண்டு விரைந்து செல்லத் தொடங்கினன், எ - று.—அன்று, ஏ - அசைகள். நானே என்பதில் ஏகாரம் பிரிநிலை. தன்னியல்பு குன்ருத மயிலென்பார் கானியல் மயிலென்ருர். சரம் - வடசொல்.

232.—முன்னம் மகவாய் வந்த மூவரின் ஒருவன் போஞன் - முன் விசுவாமித்திருடைய யாகத்தினிடத்தில் வந்திருந்த மூன்றுபேருக்குள் ஒருவன் பிழைத்தோடிப்போஞன்! இதனை அன்ன மாரீசன் என்று ஏ அயிர்த்தனென் - இந்த மானை அந்தமாரீசன்தான் என்று சந்தேஹித்தேன்! ஐயா - ஐயனே! இன்னம் உம் காண்டி - (நான் சொல்வதின் உண்மையை) இன்னமும் காணப்போகிறீர்! வாழி - வாழக்கடவீர்; ஏகு என - போய்

வாருமென்று, இரு கை கூப்பி - இரண்டுகைகளையும் குவித்து, பொன் அனாள் புக்க சாலை புறத்து நின்று ஏ காத்தனன் - லட்சுமிக்கு ஒப்பான சீதாதேவி போயிருந்த பர்ணசாலையை வெளியில்நின்றுகொண்டே காத்தல் செய்தான், எ - று.—முன்னமும் என்பதின் உம்மை அசையாக்கொள்க. இன்னமும் என்றதினும்மை இறந்ததுதழீஇயது. ஐயன் செல்லுமிடத்து அரக்கரால் ஒருதுன்பமுநேரிடாதிருக்கவேண்டி வாழி என்றார்.

233.—சிந்துரம் பவளம் செவ்வாய் முறுவலன் சிகரம் செவ்வி சுந்தரம் தோளினான் - செவந்த பவளத்தையொத்த செவந்த வாயினிடத்து புன்னகையுள்ளவனும் மலைபோன்ற இளமைப்பருவமுள்ள அழகிய தோள்களையுடையவனும் ஆகிய ஸ்ரீராமன், சந்திரற்கு உவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கி - பூர்ணசந்திரனுக்கு உவமையாயமைந்த முகத்தையுடையவளது [சீதையினுடைய] கோபத்தைப்பார்த்து, மந்திரத்து இளையோன் சொன்ன வாய்மொழி மனத்து கொள்ளான் - ஆலோசனை யுள்ள தம்பி [லக்ஷ்மணன்] சொன்னவார்த்தைகளை மனதினிடத்திற் கொள்ளாதவனாய், அ மானினை தொடரல் உற்றான் - அந்தமானைத் தானே பின்தொடர்ந்து செல்லத்தொடங்கினான், எ - று.—த்ரியம்பகமென்னும் வில்முறித்தல் விராதன்வதம் முதலியவற்றைக் கண்டிருந்தும் வாழிகூறினமையின் செவ்வாய்முறுவலனாயினனென்க.

234.—(அந்தமாயமானானது) மெல்லமெல்ல மிதித்தது-(முன்னே)மெல்ல மெல்ல (நிலத்தை) மிதித்து நின்று, வெருவி வெறித்தது - (பின்பு) பயந்து வெறித்து, செவியை நீட்டி குரபதம் உரத்தை கூட்டி மீதில் குதித்தது - காதுகளை நீட்டி குளப்படிகளை மார்பிற்சேர்த்துக்கொண்டு மேலெழும்பிக்குதித்தது; (அது எங்ஙனமிருந்ததென்றால்), உதித்து எழும் ஊதை உள்ளம் என்ற இவை - தோன்றி வீசுகின்ற காற்று மனம் என்று சொல்லப்படுகிற இவற்றிற்கு, உருவ செல்லும் கதிக்கு வேறு ஏ ஒரு கல்வி காட்டியது ஒத்தது - வேகமாய் ஊடுருவிச்செல்லுமோட்டத்தில் வேறொருவகை கற்பித்ததுபோலிருந்தது, எ - று.—அந்த மாயமான் வாயுவேகமனோவேகங்களைக்காட்டிலும் வேகமாயோடிற் றென்பதுகருத்து. குரபதம் - வடசொற்றொடர்.

235.—(அந்தஸமயத்தில்) உலகம் மூன்று உம் நின்று எடுத்து அளந்த பாதம் நீட்டினான் ஓட்டினான் - மூன்றுலோகங்களையும் (வாமனனாய் மஹாபலிக்கெதிரில்) நின்று (திரிவிக்கிரமஸ்வரூபத்தை) எடுத்து அளந்தருளின திருவடிகளை நீட்டி (அந்த மானின் பின்னே) ஓடும்படிசெய்தான்; தொடர்ந்த தன்னை ஒழிவு அற நிறைந்த தன்மை காட்டினான் அன்றி அன்று அ கடுமை யார் கணிக்கற் பாலார் - (அதனால்) தொடர்ந்து சென்ற தனது சிறிதிடமும் ஒழியாமல் ஸர்வவியாபியாய் நிறைந்திருக்குந் தன்மையைக் காட்டிவிட்டானேயன்றி அப்போது (அவன் சென்ற) அந்தவேகத்தை யார் மதிக்க வல்லவர்; மீட்டு உம் நாம் உரைத்தற்கு வேறு உம் ஓர் அண்டம் உண்டு ஒ - மீளவும் நாமெடுத்துச்சொல்வதற்கு மற்றுமோரண்டமுளதோ, எ - று.—அம்மா-வியப்பிடைச்சொல்.

236.—குன்றிடை இவரும் - (அம்மான்) குன்றின்மேல் ஏறும்; கூட சென்றிடின் அகலும் - (அதைப்) பின்தொடர்ந்துபோனால் தூரமாய்ப்போகும்; தாழின் தீண்டல் ஆம் தகைமைத்து ஆகும் - (கூடச்செல்லுதற்குத்) தாமஸித்தால் தொடக்கூடுமான தன்மையதாகும் [நெருங்கி நிற்கும்]; நின்றது ஏ போல நீங்கும் - நின்றதுபோலவே ஓடிப்போகும்; (இப்படிச் செய்துகொண்டே) நிதிவழி நேயம் நீட்டும் மன்றல் அம் கோதை மாதர் மனம் என போயிற்று - பொருளுக்குத் தக்கபடி அன்பைப் பெருக்கிக்காட்டுகின்ற வாசனைபொருந்திய அழகிய கூந்தலையுடைய வேசிகளின் மனம் போல (ஒருவழிநில்லாது) போயிற்று, எ - று.

237.—(அதைக்கண்ட) வள்ளல் - உதாரசீலரானஸ்ரீராமர், காயம் வேறு ஆகி - இந்த மானின் வடிவம் வேறாகி, கருமம் வேறு ஆகிற்று அன்று ஏ-இது செய்கிறசெய்கை வேறாகியிருக்கின்றதல்லவா, ஏயும் ஏ - (இதன் வடிவும் செய்கையும்) பொருந்தமாகுமோ; இளவற்கு எண்ணம் ஏ என்னின் முன்னம் உண்டு - தம்பிக்கு (இதுவஞ்சனையென்கிற) எண்ணமே எனக்கு முன்பேயுள்ளது; ஆயுமேல் உறுதல் செல்லா - இது முன்பே ஆராயப்படுமாயின் இப்படிப்பட்ட காரியங்கள் நேரிடா; நான் வருந்தியது அரக்கர் ஆயவர்கள் செய்த மாயம் ஏ ஆயது ஏ - நான்வருந்தியதற்குக் காரணம் ராக்ஷஸர்கள் பண்ணின வஞ்சனையே யாயிற்றே, என்றான் - என்று திருவுள்ளத்தில் நினைத்தார், எ - று.—தமக்குத் துன்பம்பயப்பதாயினும் பிறர்க்கு உபகரிக்கு மியல்புடையராதலின் வள்ளலென்றார். ஆயதே - இதில்ஏகாரம் இரக்கப் பொருளது.

238.—(அப்போது) அ மாய அரக்கன் - அந்த வஞ்சனையையுடைய ராக்ஷஸன் [மாரீசன்], இனி பற்றுவான் அல்லன் - இனிமேல் (இவன்நம்மைப்) பிடிக்க வருவோனல்லன், பகழியால் செற்று வானில் செலுத்தல் உற்றான் என - தன்பாணத்தினால் கொன்று சுவர்க்கத்திற்கனுப்ப வுத்தேசித்திருக்கிறானென்று, மனம் கொளா - மனதிற்கொண்டு, உற்ற வேகத்தின் உம்பரின் ஓங்கினான் - மிக்க வேகத்தோடு ஆகாயத்தில் உயர எழும்பினான், எ - று.

239.—அ கணத்தினில் - தக்ஷணமே, ஐயன் உம் - ஸ்ரீராமபிரானும், புக்க தேயம் புக்கு - (அந்த மான்) போன தேசத்திற்போய், இன் உயிர் போக்கு என - அதன் இனிய வுயிரை நீக்கிவிடு என்று, தன் வெய்ய சக்கரத்தின் தகைவு அரிது ஆயது ஓர் செக்கர் மேனி பகழி செலுத்தினான் - தனது வெவ்விய சக்கராயுதம்போலத் தடைசெய்தற் கரிதாகிய ஒரு செந்நிறமுள்ள பாணத்தை ப்ரயோகித்தான், எ - று.—செக்கர் என்பதில் அர் போலி.

240.—நெடு இலை சரம் வஞ்சனை நெஞ்சு உற பட்டது - தகட்டுவடிவினதாகிய பாணமானது வஞ்சனையையுடைய நெஞ்சினிடத்திற் பொருந்

தும்படியாகத் தைத்தது; அ பொழுது ஏ - தக்ஷணமே, அட்ட திக்கின் உம் அ புறம் உம் புக - எட்டுத்திக்கிலும் அதற்கப்பாலும் (சப்தம்) சென்று கேட்கும்படி, பகு வாயினால் - பிளக்கப்பட்ட வாயினால், விட்டுஅழைத்து - (ஹாஸீதா லக்ஷ்மணாஎன்று) உரக்கக் கூப்பிட்டு, ஒரு குன்று என வீழ்ந்தனன் - ஒரு மலைவிழுவதுபோலே விழுந்தான், எ - று.—உறு குன்று எனவும்பாடம்; அப்பொழுது பெருமலைபோலே எனப்பொருள்கொள்க. வஞ்சனை என்பதை மாரீசனென்றும் கொள்ளலாம். ஒரு குன்று என என்பதில் விழுந்தான் என ஒரு வினை வருவித்துப்பொருளுரைக்கப்பட்டது, மேல் வருவது அதுவாதலின். சரம்பட்ட அப்பொழுதே வீழ்ந்தனன் என்பதனால் ராமபாணத்தின் வேகமும் பிரபாவமும் குறிக்கப்பட்டதாம்.

241.—வெய்யவன் தன் உருவொடு வீழ்தலும் - கொடியவனாகிய மாரீசன் நிசரூபத்தோடு (கீழே) விழுந்த மாத்திரத்தில், செய்யது அன்று என செப்பிய தம்பியை - (இவ்வாறு செய்வது) தகுதியானதல்லவென்று சொல்லிய தம்பியை [லக்ஷ்மணனை] குறித்து, ஐயன் வல்லன் - என்னப்பன் சமர்த்தன்; என் ஆர் உயிர் வல்லன் - என் அரிய உயிர்போன்றவன் சமர்த்தன்; நான் உய்ய வந்தவன் வல்லன் - நான் பிழைக்கும்படி பிறந்தவன் சமர்த்தன்; என்று உன்னினான் - என்று நினைத்தான் [ஸ்ரீராமன்], எ - று.—செய்யதன்று என்பதற்கு இது நிஜமானதானன்று எனவுங் கூறியதாகக் கொள்ளலாம்.

242.—ஆசை நீளத்து அரற்றினன் வீழ்ந்த அ நீசன் மேனியை உடன் நின்று நோக்கினான் - திகாந்தத்தளவும் (தன்னுடைய சப்தம் கேட்கும்படி) இரைச்சலிட்டவனாய் விழுந்த அந்த நீசனாகிய மாரீசனுடைய தேகத்தை உடனே தாம் நின்று பார்த்து, மாசு இல் மா தவன் வேள்வியின் - குற்றமில்லாத பெருந்தவத்தினராகிய விசுவாமித்திரருடைய யாகத்தில், வந்த மாரீசன் ஏ இவன் என்பது உம் தேறினான் - வந்திருந்தமாரீசனே இவன் என்பதையும் தெரிந்து கொண்டார், எ - று.—வேள்வியின் என்பதில் இன் ஏழனுருபு.

243.—உழைக்க வாளி உரம் புக - ப்ரயாஸத்தோடு எய்யப்பட்ட பாணமானது மார்பில் தைத்தலால், புல்லியோன் இழைத்த மாயையின் - இவ்வற்பன் செய்த ஒருவஞ்சனையினால், என் குரலால் இசைத்து அழைத்தது உண்டு - என்னுடைய குரலோசைகொண்டு கூப்பிட்டதுண்டு, அது கேட்டு மழை கண் ஏழை அயர்வு எய்தும் - அவ்வோசையைக் (காதினாலே) கேட்டுக் குளிர்ச்சியான கண்களையுடைய சீதை சோர்வடைவாள், என்று உள்ளம் வருந்தினான் - என்று மனம் வருந்தினான் (ஸ்ரீராமன்), எ - று.—மாரீசன் ஒருநிலையில் நில்லாது ஓடித்திரிய மிகப்ரயாசத்தோடு இலக்குவைத்தடித்ததனால் உழைத்தவாளி யென்றார்.

244.—இளையோன் - தம்பி [லக்ஷ்மணன்], இன்னது ஈ மாய மாரீசன் மாற்றம் என்று ஏற்ற முன் உணர்ந்தான் எனின் - இது வஞ்சனையுள்ள மாரீசன் வார்த்தை யென்று ஏற்ற காரியங்களை முன்னே யறிந்துகொள்ள வல்லவனாயின், என் ஆற்றல் தேரும் அறிவினன் - என்னுடைய வல்லமையையும் தெளிந்தறிதற்குரியவிவேகமுள்ளவனே யாவன்; ஆதலால்தேற்றும் என தேறினான் - ஆகையால் (சீதை சிந்தை கலங்காது) தெளிவிப்பான் என்று மனந்தெளிந்தான், எ - று.

245.—மாள்வது ஏ பொருள் ஆக வந்தான் அலன் - (இவன் இவ்விடத்து) மாண்டுபோவதையே ஒரு பொருளாகக்கொண்டு வந்தவனல்லன்; சூழ்வது ஓர் பொருள் உண்டு - இவன் ஆலோசிப்பதாகிய வேறு ஒருபொருளிருக்கிறது, (அதாவது) இவன் சொல்லினால் மூள்வது ஏதம் - இவனழைத்த சொல்லால் உண்டாகப்போகிற தீமைதான்; அது முடியாமுன்னம் - அத்தீமை முடிதற்குமுன்னம், மீள்வது ஏ நலன் - பர்ணசாலைக்குத் திரும்பிப் போவதே நன்மை, என்று அவன் மீண்டனன் - என்று நினைத்துக்கொண்டு அவன் [ஸ்ரீராமன்] திரும்பினான், எ - று.

மாரீசன்வதைப்படலம் முற்றிற்று.

சடாயுவுயிர்நீத்தபடலம்.

1.—சங்கு அடுத்த தனி கடல் மேனியார்க்கு - சங்குகள் பொருந்திய ஒப்பற்ற கடல்போலும் [நீலநிறமான] திருமேனியையுடைய ஸ்ரீராமபிரானுக்கு, அங்கு அடுத்த நிலைமை அறைந்தனம் - அவ்விடத்தில் நேர்ந்த நிலைமையைச்சொன்னோம்; கொங்கு அடுத்த மலர் குழல் கொம்பு அனாட்கு - வாசனை பொருந்திய புட்பங்களை யணிந்த கூந்தலையுடைய பூங்கொம்பையொத்த சீதாப்பிராட்டியார்க்கு, இங்கு அடுத்த தகைமை இயம்புவாம் - இவ்விடத்தில் நேர்ந்த தன்மையைச் சொல்லுவோம், எ - று.— அங்கு என்றது மாரீசன்வீழ்ந்த இடத்தையும், இங்கு என்றது பர்ணசாலையையும் குறிக்கின்றது. இது கவிக்கூற்று.

2.—எயிறு அலைத்து முழை திறந்து எங்கிய செயிர் தலை கொண்ட சொல் செவி சேர்தலும் - (கோர) தந்தங்களைக் கடித்துக் குகைபோலும் வாயைத் திறந்து அழுத குற்றமுள்ள (மாரீசனது ஹாசீதா லக்ஷ்மணா என்ற) வார்த்தையானது தன்காதில் விழுந்தமாத்திரத்தில், (சீதாதேவி) வயிறு அலைத்து - வயிற்றிலே யடித்துக்கொண்டு, விழுந்து - பூமியின்மேல் விழுந்து; குயில் தலத்திடை உற்றது ஓர் கொள்கையாள் - குயிலானது பூமியின்மேல்விழுந்ததாகிய ஒருகொள்கையை யுடையவளாகி, மயங்கினாள் - மயக்கமடைந்தாள் [மூர்ச்சையடைந்தாள்], எ - று.— குயிலோசைபோறலின் குயில் விழுந்து புலம்புங்கால் அவள்குரலோசை குயிலெனறார்.

3.—இ உழை பிடித்து நல்கு என : இந்த மானைப்பிடித்துத் தா என்று சொல்லி, பேதையேன் வாழ்வு முதல் முடித்தனென் என - அறிவிலியாகிய நான் என்னுடைய வாழ்வை அடியோடே முடித்துவிட்டேன் என்று, மொய் குழல் - நெருங்கிய கூந்தலையுடைய சீதை, கொடி படிந்தது என -

ஒரு பூங்கொடியானது தரையிற்படிந்தாற்போலவும், கோள் அரா இடிக்கு உடைந்தது என - பலம்பொருந்திய சர்ப்பமானது இடியோசை கேட்டுப் புரண்டாற்போலவும், புரண்டு ஏங்கினாள் (தரையிலே விழுந்து) புரண்டழுதாள், எ - று.—மொய்குழல் - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

4.—குற்றம் வீந்த குணத்தின் எம் கோ மகன் - குற்றமற்ற கல்யாண குணங்களையுடைய என் ப்ராணநாயகன், வாள் அரக்கன் புரி மாயையால்- வாளையுடைய அரக்கன் [மாரீசன்] செய்த வஞ்சகத்தால், இற்று வீந்தனன் என்னவும் - மடிந்து விழுந்தானென்று நான் சொல்லவும், இளையோய்- இளையபெருமாளே, ஒரு நீ என் அயல் நிற்றி ஓ என்றாள் - (உன்னண்ணனிடத்து) ஒற்றுமையுடைய நீ என்பக்கத்தில் நிற்கிறாயோஎன்று சொன்னாள், எ - று.—அரக்கர்க்கு வாள் சாதியடையாதலின், மானுருக்கொண்டு வந்த காலத்தும் மாரீசனை வாளரக்கனென்றாளென்க. ஒரு நீ என்றது - "ராமஸ்யதக்ஷிணோபாஹு:" என்று அவன்பிரிவையாற்றவொண்ணாத நீஎன்றபடி.

5.—(அப்படி ஸீதாதேவி சொல்லக்கேட்டலக்ஷ்மணன்) எண்மை ஆர் உலகினின் இராமற்கு ஏற்றம் ஓர் திண்மையார் உளர் எனல் செப்பல் பாலதோ - எளிமைநிறைந்த உலகின் கண்ணே ஸ்ரீராமபிரானுக்கு அதிகமான ஒரு பலசாலியானவர் இருப்பர் என்று சொல்வது சொல்லத்தக்க பான்மையையுடையதோ; பெண்மையால் உரைசெய பெறுதிர் என - உம்முடைய பெண்தன்மையால் இவ்வார்த்தைகளைச் சொல்லப்பெறுகின்றீர் என்று, உண்மையான் அனையவட்கு உணர கூறினான் - உறுதிமொழிகளால்அச்சீதாதேவிக்குத் தெரியச்சொன்னான், எ - று.

6.—தையலீர் - மாதர்க்கரசியரே! கடல் ஏழு உம் - சப்தசாகரங்களும், உலகுஏழு உம் ஏழு உம்- பதினான்கு லோகங்களும், சூழும்ஏழ் மலை - உலகத்தைச் சூழ்ந்திராநின்ற சப்தகுல பர்வதங்களும், அவைதொடர்ந்த சூழல்வாய்- (ஆகிய) அவைகளாற் சூழப்பட்ட இடங்களில், வாழும் ஏழையர் சிறு வலிக்கு - வசிக்கிற அற்பர்களுடைய ஸ்வற்பபலத்திற்கு, இராகவன் தனிமை வாள் அமர் தாழும் ஏ - ரகுகுலதிலகனான என் தமையனது தனித்தன்மையானது வாளை யேந்திவருகிற யுத்தகளத்திலே குறையுமோ [குறையாது], எ - று.—இராகவன் - தத்திதாந்தம்; ரகுவினுடைய வம்சத்திற் பிறந்தவன் என்பதுபொருள். கடல்ஏழாவன: லவண, இக்ஷு, ஸுரா, ஸர்ப்பி, ததி, க்ஷீர, சுத்தோதக ஸமுத்திரங்கள் என்பவையாம்.—உலகம் பதினான்காவன: பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகாலோகம், ஜனோலோகம், தபோலோகம், சத்தியலோகம், அதலம், விதலம், சுதலம், தராதலம், ரஸாதலம், மஹாதலம், பாதாளம் என்பனவாம். இவற்றுள் முன்னேழும் ஊர்த்துவ லோகங்கள் (மேலுலகங்கள்) என்றும், பின்னேழும் அதோலோகங்கள் (கீழுலகங்கள்) என்றும் சொல்லப்படும்.—குலபர்வதங்கள்ஏழாவன: மஹேந்திரம், கந்தமாதனம், மலயம், ஸஹ்யம், சக்திமந்தம், விந்தியம், பாரியாத்ரம் என்பனவாம்.

7.—பார் என கனல் என புனல் என பகா பேர் என திசை என முனியின் பேரும் - பிருதிவியும் தேயுவும் அப்புவும் வாயுவும் ஆகாசமும் [பஞ்சமஹாபூதங்களும்] அவன் கோபித்தால் நிலைகுலையும்: (ஆகையால்) கார் என கரிய அ கமல கண்ணனை யார் என கருதி இ இடரின் ஆழ்குவீர் - மேகம்போற் கருமையான அந்தத் தாமரைக்கண்ணனை [ஸ்ரீராமனை] யாரென்று நினைத்து இந்தத் துக்கசாகரத்தில் அழுந்தாநிற்கிறீர், எ - று.—ஆழ்குவீரென்றதனால் இடரைக் கடலாகச் சொல்லப்பட்டது. முன்னுள்ள என ஐந்தும் எண்ணிடைச்சொற்கள். இதனால் சக்கிரவர்த்தித் திருமகன் ஸர்வநியாமகன் என்பது ஸூசிப்பிக்கப்பட்டது. பிருதிவி யப்பு தேயு வாயு ஆகாசம் என்பதே பிரஸித்தமான முறையாயினும் இப்பாட்டிலடைகியதுபோலக் கூறுவதும் முறையாமென்பது சில முனிவர் மதமேயாம். பகா+பேர்=பகாமல் பெயர்வது, இடைவிடாமல் ஸஞ்சரிப்பதுஎன்றபடி, வாயு; எதிர்மறைவினையெச்சவிகுதிதொகுத்தல். இது ஸதாகதி என்னும் வடமொழியின் பொருளுள்ளது. திசை என்பது பத்துத்திசையுமுணர்த்தும் பொதுச்சொல்லாயினும் இங்குஆகாயத்துக்குக்கொள்ளப்பட்டது.

8.—இராமன் நிசிசரற்கு இடைந்து போய் - ஸ்ரீராமர் ஒரு ராக்ஷஸனுக்குப் பின்னிடைந்துபோய் [தோற்றுப்போய்], எவ்வம் வந்து அடைந்தபோது - (அவரை) துன்பம் வந்து சேர்ந்தபோது, அழைக்கும் ஏ - கூப்பிடுவாரா (கூப்பிடமாட்டார்); அழைக்கும் ஆம் எனின் - (அப்படிக்)கூப்பிடுவாரென்றால், மிடைந்த பேர் அண்டங்கள் மேல கீழன உடைந்துபோம் - நெருங்கிய பெரிய அண்டங்களெல்லாம் மேல்கீழனவாய் [தலைகீழாகி] நசித்துப்போம்; அயன் முதல் உயிர் உம் தீயும் - பிரமன் முதலிய ஜீவராசிகளும் தீய்ந்து போம், எ - று.—இதனால் அண்டங்களுடைந்துபோகாமை முதலியவைகளே அவ்விராகவனுக்கு எவ்வம்வந்தடையாமைக்குச் சான்றென்பதுணர்த்தினார்.

9.—பகர்வது மாற்றம் என் - (அவன் பராக்கிரமத்தைக்குறித்து) யான் சொல்லவேண்டியதாகியவார்த்தை என்ன இருக்கிறது; மண் உம் வானம் உம் போற்ற - மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் துதிக்கும்படி, வல் திரிபுரம் எரித்த புங்கவன் - வலிய முப்புரங்களை யெரித்த தேவன் [ருத்ரமூர்த்தி], ஏற்றி நின்று எய்த வில் - நாணேற்றிநின்று பாணப்ரயோகம் பண்ணின தனுஸ்ஸானது, எம் பிரான் ஆற்றலின் இற்றது - (உமது திருக்கலியாணத்துக்குமுன்) எம்பிரானது [ஸ்ரீராமனது] தோள்வலியால் முறிந்தது; (ஆதலின் எம்பிரானது ஆற்றல்போல) அமைவது ஓர் ஆற்றல் உண்மை ஓ - நிறைவுள்ளதாகிய வேறொரு வல்லமை இருக்கிறதோ [இல்லை], எ - று.—பிரான் - விராட் என்னும் வடமொழிச்சிதைவு. பிரான் என்றது,—ஆண்பால்; பிராட்டி - பெண்பால். திரிபுரமெரித்தபுங்கவன் என்றது: தாரகாசுரனுடைய குமாரர்களாகிய கமலாக்ஷன், வித்தியுன்மாலி, தாரகாக்ஷன் என்பவர்கள் மிக்க தவம்புரிந்து பரமசிவனுடைய அனுக்கிரகம் பெற்று இரும்பினாலும் பொன்னினாலும் வெள்ளியினாலும் சமைக்கப்பட்ட மதில்களோடு ஆகாசத்தில் சஞ்சரிக்கத்தக்க மூன்று பட்டணங்

களைப்பெற்று உலகத்தைப்பாழாக்கிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் ஒரு பாஷண்டிவேஷம்பூண்டு நாரதமகாமுனிவரைத் தமக்குச்சிஷ்யராகச்செய்துகொண்டு அந்த திரிபுராஸுரர்களுக்கும் அவர்களைச்சேர்ந்தவருக்கும் பரமசிவனிடத்து பக்திகெடத்தக்கதாகப் போதித்தார். அப்போது அவர்களும் அவர்களைச்சேர்ந்தவர்களும் சிவத்வேஷிகளானார்கள். அதுகண்டு பரமசிவன் சினமூண்டு அவர்களையெல்லாம் அப்புரங்களோடு எரித்துவிட்டார்,—என்னும் கதையையுட்கொண்டு. இதை "இரும்புறுமாமதில்பொன்னிஞ்சி வெள்ளிப்புரிசையன்றோர், இரும்புறச் செற்ற" எனத் திருக்கோவையாருள் ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் கூறியவாற்றானுமுணர்க.

10.—காவலன் ஈண்டு நீர் கருதிற்று எய்துமேல் - (உலகம்) காத்தலில் வல்லவனானவன் [ஸ்ரீராமர்] இப்போது நீர் எண்ணினதை யடைவாராகில், மூ வகை உலகம் உம் முடியும் - திரிலோகங்களும் அழியும்; முந்து உள தேவர் உம் முனிவர் உம் முதல செவ்வியோர் எவர் உம் வீந்து உளார்- முதன்மையாகிய தேவர்களும் முனிவர்களும் முதலாக உள்ள ஸாதுக்களெல்லோரும் இறந்தோராவார்; அறம் உம் எஞ்சும் - தர்மதேவதையும் (தன்னிலையில்) குன்றும், எ - று.—மூவகையுலகமு முடியாமை முதலிய குறிகளாற் காவலனுக்கு ஒரு தீங்கும் நேரிடாமையைத் தெற்றெனவுணரலாமென்றாரென்பது கருத்து. ஜகத்ரக்ஷணத்திலே ஸமர்த்தனானவன் ஆத்மரக்ஷணத்திலே அஸமர்த்தனாகான் என்பதுதோன்றக் காவலன் என்றும், 'கோமகன் அரக்கர்மாயையா லிற்றுவீந்தனன்' என்று பிராட்டியார் கருதிச் சொன்னவாக்கியத்தைத் தம்வாயாற்சொல்லவும் ஸஹியாமையால் 'ஈண்டு நீர் கருதிற்று' என்றும் கூறினார். முந்துளதேவர் என்றது ஐம்மதேவர்களை. அவர் முப்பத்துமூவர்; அவர்களாவார்,—வசுக்கள் எண்மர் (8), ருத்திரர்கள் பதினொருவர் (11), ஆதித்தியர் பன்னிருவர் (12), இந்திரன் (1), பிரமன் (1) என்பவர்கள் ஆம்.

11.—பரக்க பகர்வது என் - விஸ்தாரமாகச் சொல்லவேண்டுவது என்ன இருக்கிறது; பண்ணவன் பகழி துரக்க - ஸ்ரீராமன் பாணத்தைப் பிரயோகிக்க, அது பட சோர்ந்து தொலைகின்ற அரக்கன் - அந்த பாணமானது அவனுடைய தேகத்தில் பட்டதனாற் சோர்வடைந்து இறந்து படுகின்ற அரக்கன், அ உரை எடுத்து அரற்றினன் - அந்த வார்த்தையை யெடுத்துச் சொன்னான், அதற்கு இரக்கம் உற்று இரங்கவிர் - அதற்காக வருத்தமடைந்து அழாதவராய், ஈண்டு இருத்திர் என்றான் - இவ்விடத்தில் (ஸ்வஸ்தசித்தத்தோடு) இரும் என்று சொன்னான். (எ - று.)—தொலைந்து சோர்கின்ற என்ற விடத்து - சோர்ந்து தொலைகின்ற என முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்க; அன்றி, வலிதொலைந்து சோர்கின்ற எனின் பொருள்சிறக்காமையறிக.

12.—என்று அவன் இயம்பலும் - என்று லக்ஷ்மணன் சொன்னமாத்திரத்தில், எடுத்த சீற்றத்தள் - மிகுந்த கோபமுடையவளும், கொன்றால் அன்ன இன்னலள் - தன்னைக்கொன்றாலொத்த துன்பத்தையுடையவளும், கொதிக்கும் உள்ளத்தள் - பதைக்கின்ற மனமுடையவளுமாகிய சீதை, (இலக்ஷ்மணனைநோக்கி) நின்ற நின் நிலை இது நெறியிற்று அன்று என- நிற்கின்ற உன்னுடைய நிலையாகிய இது நன்னெறியானதல்ல என்று, வல்- வலிய, தறு கண்ணினள் - தாக்ஷிண்யமில்லாதவளாய், வயிர்த்துகூறுவாள்- பெருஞ்சினங்கொண்டு சொல்லுவாள், எ - று.

13.—ஒரு பகல் பழகினர் உயிரை ஈவர் - ஒருநாள் பழகினவர்களும் தங்கள் உயிரைக் கொடுப்பார்கள், (அப்படியிருக்க) பெருமகன் உலைவு உறு பெற்றி கேட்டும் நீ வெருவலை நின்றனை - உன்தமையன் வருத்தத்தையடைந்த தன்மையைக் கேட்டும் நீ அஞ்சாமல் நின்றுகொண்டிருக்கிறாய், வேறு என் - (இதற்குப்பரியாயம்) வேறு என்னஇருக்கிறது; யான் ஈண்டு எரியிடை வீழ்ந்து உயிர் இறப்பல் என - இனி நான் இப்போதே தீப்பாய்ந்து உயிரைவிடுவேன் என்று சொல்லி, எ - று.—இது குளகம்.

14.—தாமரை வனத்திடை தாவும் அன்னம்போல் - (வண்டுகள் பறக்கின்ற) செந்தாமரை மலர்க்காட்டில் தாவிச்செல்கின்ற அன்னத்தைப்போல, தூமம் வெம் காட்டு எரி தொடர்கின்றாள் தனை - புகையோடு கூடிய கொடிய காட்டுத்தீயைத் தொடர்ந்து செல்கின்றவளாகிய சீதையை, சேமம் வில் குமரன் உம் விலக்கி - காவலாகிய வில்லையுடைய இளையபெருமாள் (அப்படிப்போகாமல்) தடுத்து, சீறடி பூ முகம் நெடு நிலம் புல்லி சொல்லுவான் - சிற்றடிகளாகிய தாமரைமலர்களுக்கு தன்முகத்தைப் பெரிதான பூமியிற் படிவித்து [ஸாஷ்டாங்கமாய்த் தண்டனிட்டு] சொல்லத்தொடங்கினான், எ - று.—இங்கு தாமரைவனம் காட்டெரிக்குவமையாதலின் செந்தாமரையெனப் பொருளுரைக்கப்பட்டது. உபமேயத்தில் தூம வெங்காட்டெரி என்றமையால் உபமானத்தில் வண்டுகள் பறக்கின்றமை கொள்ளப்பட்டது. சீறடி (=சிறுமை + அடி).

15.—துஞ்சுவது என்னை - நீர் இறப்பதற்குக்காரணம் என்ன? சொற்ற நின் சொல்லை யான் அஞ்சுவென் - நீர் சொன்ன சொல்லை நான் அஞ்சாநின்றேன், மறுக்கிலன் - (உமது கட்டளையை) மறுக்கமாட்டேன், அவலம் தீர்ந்து இனி இஞ்சு இரும் - மனவருத்தம் நீங்கி இனி இவ்விடத்தில் சுகமாயிரும், அடியனேன் ஏகுகின்றனன் - அடியேன் போகின்றேன், வெம் சினம் விதியினை வெல்ல வல்லம் ஓ - நம்மீது மிகுந்த கோபத்தையுடைய விதியை வெல்ல வல்லமையுடையோமோ, எ - று.—இங்கு இரும் எனற்பாலது இஞ்சிரும் என வந்தது ஓர் போலிவழக்கு. வெல்லவல்லமோ - என்பதில் ஓகாரம் எதிர்மறை.

16.—அடியனேன் போகின்றேன் — அடியேன் போகின்றேன், பொருந்தி வந்து கேடு ஆகின்றது - இசைந்து வந்து கெடுதியுண்டாகப்போகிறது; நீர் அரசன் தன் ஆணை மறுத்து ஏகு என்றீர் - நீர் அரசனதுகட்டளையைத் தடுத்துப் போவென்று அடியேனுக்கு நியமித்தீராய், தமியிர் இருக்கின்றீர்- தனியே யிருக்கிறீர், என்று - என்றுசொல்லி, பின் வேகின்ற சிந்தையான் விடைகொண்டு ஏகினான் - பிறகு வேகின்ற மனமுடையவனாய் உத்திரவு பெற்றுக்கொண்டுபோனான், எ - று.—வேகின்ற சிந்தையானனதற்

குக் காரணம், பிராட்டி தான் அரசன்தன் ஆணையை மறுத்தலுடன் தன்னையுமங்ஙனஞ்செய்ய வுடம்படுவித்தலும் தனிமையினேரிடப் போகுமனர்த்தங்களுமேயாம்.

17.—இருப்பனேல் இவர் எரியிடை இறப்பர் - நான் (போகாமல்) இவ்விடத்தில் இருப்பேனாயின் இவர் நெருப்பில் விழுந்து இறப்பார்; பொருப்பு அனையானிடை போவேன் எ எனின் - மலைபோலும் என்னையரிடத்தில் போவேனேயானால், அருப்பம் இல் கேடு வந்து அடையும் - மஹத்தானகெடுதிவந்துசேரும்; ஆர் உயிர் விருப்பனேற்கு - அருமையாகிய உயிரினிடத்தில் விருப்பமுள்ள எனக்கு, என் செயல் என்று விம்மினான்- என்னசெயலிருக்கிறது என்று அழுதான், எ - று.—அற்பம் என்பது அருப்பம் என நின்றது.

18.—அறந்தனால் அழிவு இலது ஆகின் ஆக்கலாம் - தர்மமார்க்கத்தினால் நமதுகருத்து நிறைவேறுவதாயின் அவ்வாறு செய்யலாம்; (அவ்வாறாகாமல்) இவர்க்கு இறந்துபாடு உறும் இதனின் - இந்தப் பிராட்டியார்க்கு இறந்துபடுதலுண்டாகிற இதனினும், தொல் வினை பிறந்து போந்து இது படும் பேதையேன் - பழவினையால் பிறந்துவந்து இந்தப்பாடுபடுகிற அறிவிலியாகிய நான், இ வழி துறந்து போம் இதனை எ துணிவென் எனா - இந்தவிடத்தை விட்டுப்போகிற இச்செய்கையையே நிச்சயிப்பேன் என்று.

19.—யான் போவது புரிவல்- நான்போதலைச்செய்கிறேன் [போகிறேன்]; புகுந்தது உண்டு எனின் - (ஏதேனும் தீங்கு) சம்பவித்ததுண்டானால், காவல் செய் எருவையின் தலைவன் கண்ணுறும் ஆவது காக்கும் - காவற்றொழிலைச் செய்கின்ற கழுகரசன் [ஜடாயு] பார்த்து தம்மாலானமட்டும் காப்பாற்றுவர், என்று அறிவித்து - என்று தெரிவித்து, தேவர் செய் தவத்தினால் - தேவர்கள்செய்த தபோபலத்தினால், செம்மல் அ வழி ஏகினான்- (தமையன் மானைத்துரத்திச்சென்ற) அந்த மார்க்கமாக பெருமையிற் சிறந்தோன் [லக்ஷ்மணன்] போனான், எ - று.—இளையபெருமாள் பிராட்டியாரைத் தனியேயிருத்திச் செல்லவே ராவணன் வந்து அவரைக் கவர்ந்து போவன், போகவே அதுகாரணமாக சக்ரவர்த்தித் திருமகனார் ராவணன் முதலிய ராக்ஷஸரை வேரோடு களைந்து தேவர்கட் கின்பத்தை யுண்டாக்குவர்; ஆதலின், 'தேவர்செய்தவத்தினால் செம்மலேகினான்' என்றார்.

20.—இளையவன் ஏகலும் - இளையபெருமாள் சென்ற மாத்திரத்தில், இறவு பார்க்கின்ற வளை எயிற்று இராவணன் - அவன் செல்லுதலை எதிர்பார்த்திருந்த [சமயம்பார்த்திருந்த] வளைந்த தந்தங்களையுடைய இராவணன், வஞ்சம் முற்றுவான் - (தான் செய்யக்கருதி வந்த) வஞ்சனையைமுடிக்கும் பொருட்டு, வரி மூளை தண்டு ஒரு மூன்று உம் - கட்டமைந்த மூங்கிற் றண்டொரு மூன்றையும் [திரிதண்டத்தையும்], மு பகை தளை அரி தவத்தவர் வடிவு உம் தாங்கினான் - முப்பகையாகிய பந்தத்தை அறுக்கிற தவசியர் வடிவத்தையும் [ஸந்யாஸி ரூபத்தையும்] தரித்தான், எ - று.—தாங்கினான் என்பதை முற்றெச்சமாக்கி 23-ம் பாட்டிலுள்ள அணுகினான் என்பதனோடு முடித்துப்பொருளுணர்க. முப்பகையாவன,—காமம், வெகுளி, மயக்கம் என்பன..

21.—ஊன் இலன் ஆம் என உலந்த மேனியன் - ஆகாரமில்லாதவன் என்றுசொல்லும்படிவாடியசரீரத்தையுடையவனும், சேண் நெறி வந்தது ஓர் வருத்த செய்கையன் - நெடுந்தூரம் நடந்துவந்ததாகிய மிக்க வருத்தத்துடன் கூடிய செய்கையையுடையவனும், பாணி இன் நடத்திடை படிக்கின்றான் என வீணையின் இசை பட வேதம் பாடுவான் - சங்கீதத்தை (காண்போர்களுக்கு) இனிதாகிய நடனத்திற் பொருத்திப்பாடுவோன்போல வீணாகானத்துடன் ஒற்றுமைப்பட ஸாமகானம் செய்பவனும், எ - று.

22.—பூ பொதி அவிழ்ந்தால் அன்ன நடையன் - மலர்கள் கட்டவிழ்ந்தாற்போன்ற நடையையுடையவனும், பூதலம் தீ பொதிந்தது ஆம் என மிதிக்கும் செய்கையன் - பூமியில் நெருப்புப் பரவியிருப்பதுபோல மிதிக்கின்ற செய்கையையுடையவனும், காப்பு அரு நடுக்கு உறும் காலன்- தடுத்தற்கரிய நடுக்கமிகுந்த கால்களையுடையவனும், கையினன் - (காப்பருநடுக்குறும்) கைகளையுடையவனும், மூப்பு எனும் பருவம் உம் முனிய முற்றினான் - மூப்பென்கிற பருவமும் வெறுக்கும்படி முதிர்ந்தவனும், எ - று.—காப்பருநடுக்குறும் என்றதைக் கையினன் என்றதற்குங் கூட்டுக.

23.—தாமரை கண்ணொடு ஏர் தவத்தின் மாலையன் - பத்மாக்ஷத்தோடு கூடிய அழகிய தவத்திற்குரிய மாலைகளை யணிந்தவனும், ஆமையின் இருக்கையன் - ஆமைபோல் ஐம்பொறிகளையுமடக்கிய நிலையையுடையவனும் [கூர்மவிருத்தியையுடையவனும்], வளைந்த ஆக்கையன் - வளைந்ததேகத்தையுடையனும், நாமம் நூல் மார்பினன் - பிரசித்தமுள்ள முப்புரிநூலை யணிந்த மார்பையுடையவனும் ஆகி, தூ மனத்து அருந்ததி இருந்த சூழல்வாய் - பரிசுத்தமாகிய மனதையுடைய அருந்ததியேயென்றுசொல்லத்தக்கசீதாதேவியிருந்த பர்ணசாலையினிடத்து, அணுகினான் - நெருங்கினான், எ-று.—யாக்கை என்பதின் யகரமெய் கெட்டு ஆக்கை எனநின்றது புணர்ச்சியில்விகாரம். அருந்ததி என்றது கற்புநிலைநோக்கி. அருந்ததி என்பவள் வஸிஷ்டமஹாமுனிவருடைய மனைவி. கற்புடையார்பலரினும் இவளை மேன்மை யாச்சொல்வதென்னையெனின், நக்ஷத்திரநிலையிலும் கணவனைப்பிரியா திருத்தலாலென்க. அதை இங்ஙனமறிக:—வடக்கில் ஸப்தரிஷி மண்டலமென்று 2700 வருஷங்களுக்கு ஒருசுற்றுசுற்றுகிற நக்ஷத்திரக்கூட்டமொன்றிருக்கிறது அதில் நான்கு நக்ஷத்திரம் நீண்டசதுரமாய்ப் பெட்டிப்பண்டிபோ லிருக்கின்றன. அவற்றின்முன்புறத்தடியில் நடுவளைந்த ஏர்க்காலைப்போலேமூன்று நக்ஷத்திரமிருக்கின்றன. இவற்றில் நடுநக்ஷத்திரம் வஸிஷ்ட நக்ஷத்திரமென்பதாம். அதனடியிற்கிட்டினதாய் நுட்பநோக்கினாற் காணப்படத்தக்கதொரு நக்ஷத்திரமிருக்கின்றது, இதுதான் அருந்ததி நக்ஷத்திரம். இதைவிவாகத்தில் பிரவேச ஹோமம் என்கிறசடங்கில் மணமகளுக்குக் காட்டுவதுண்டு, இதுகற்புநிலையை நோக்கி யென அறிக.

[தொடர்ச்சி]

அலங்காரவிஷயம்.*

அலங்காரமாவது காவியத்தின் சீரைவிளக்கும் ஓர்சாஸ்திரமாம்; எனவே, பாஷைக்கு அழகை விளக்கும் நூல் அலங்காரமென்றதாயிற்று. அழகுள்ளது இனிப்பாகுமன்றி ஏனையதாகாது. துய்க்கத்தகுவனவற்றையெல்லாம்சீர்ப்படுத்திக்கொள்வதே சீரியோர்செயலாக் காண்கின்றோம். வாக்கியங்களுள் குற்றநற்றங்களைப்பகுத்து நுட்பமாயுள்ள கருத்தினையுணரவும், அங்ஙனமே சிறந்ததோர் நூலியற்றவும், அணிநூலன்றிக் கருவிவேறின்றும்; ஆகலின் இது இன்றியமையா வைந்திலக்கணங்களுள் ஒன்றாக் கொள்ளப்பட்டது. இவ்விஷயம் தமிழ்நூல்களுள் சிறிதே காட்டி அணியியல் எனக்கூறப்பட்டது. அணிகளாவன,—

> "சுவைசான்ற சொற்பொருளுஞ் சோதி யணியு
> நவையிலா நற்குணமு நாடி—அவையுறூஉம்
> நன்னடையு நல்லொழுக்கு மின்ன பிறபலவும்
> பன்னருஞ்சீர்க் காப்பியத்தின் பாங்கு"

எனத் தொகுக்கப்பட்டவையாம். இவைதாம் காவியத்தின் அமைப்பாய்நின்று அழகுசெய்வனவாதலின் அணிகள் எனவும் அலங்காரங்கள் எனவும் பெயர்பெறும். [அலங்காரம் என்னும்வடமொழி கருவிப்பொருள்விகுதியினமைந்ததாதலின் அணி என்னுந் தமிழ்மொழியையும் அவ்வாறேகொள்க; விகுதி தொக்கு நின்றது]. அழகாவது அகங்கனிந்த சான்றோருவக்குமாறு நிற்குமோர் தன்மை. இதற்கு நன்கமைந்த உறுப்பு பண்பு நடை முதலிய பலவுங் காரணமாகலின் அணியெனத் தட்டில்லை. ஆயினும் மக்கட்கு உடுப்பனவும் முடிப்பனவும் பூசுவனவுமாகிய வெல்லாம் அழகுசெய்வனவாயிருப்ப, கைவளை தோள்வளை முதலியவற்றையே அணியெனக்கூறுமாபோல் ஈண்டும் உவமைமுதலியவற்றையே வெளிப்படையாத்தோன்றுஞ் சிறப்புப்பற்றிக் காரணவிடுகுறியா அணி யென்பது மரபு. இவையாவும் உலகவமைதி போலக் கூறப்பட்டிருக்கின்றன; எங்ஙனமெனின்,—

> †"காப்பியத் தியல்பே கருதுங் காலை
> யாப்பினு முறையினு மியைந்து பொலிவுறுஞ்
> சொற்பொருள் யாக்கையாத் தொனியே யுயிரா
> வற்புத வுவமை யாதி யணியாச்
> செறிவு முதலிய சிறந்த பண்பா
> வெறிகொள்பாப் பாகே வேண்டுபல் பாகமாக்
> கைசிகி முதலிய கருத்துறு விருத்தியாத்
> தைசிக வைதர்ப் பியர்தி நடையாப்

---

* இவ்விஷயம் தி - ஈ - ஸ்ரீநிவாஸராகவாசாரியரா லியற்றப்பட்ட அணிவிளக்கம், அலங்காரஸாரம் என்னும் நூல்களிலிருந்தும் வேறுசிலநூல்களிலிருந்தும் சேர்த்து எழுதப்பட்டது.

† காப்பியம் என்பது காவியம் என்னும் ஆரியமொழிச்சிதைவு.

> பொருந்திய தொடையே பொற்புறு சயனமாத்
> திருந்திய வுலகிற் றிகழுமென் றனரோ"

என்னுமாறறிக. இதில் உரை என்றது கட்டுரையை. இவற்றினிலக்கண முதலானவை மேல்விளக்கப்படும். இதுநிற்க.

காவியத்தின்பயன்என்னெனின்,—

> "புகழும் பொருளும் புவனத் தியல்புந்
> திகழு மொழிமுறையுந் தீதொழிவு மொப்பில்
> மகிழ்வு மடவரல்போன் மாணறிவு நல்கி
> நிகழுமே காப்பியத்தி னோர்".

என்றுரைக்கப்பட்ட பலவுமென்க. இவற்றுள்,—

புகழ்—நற்கருமங்களாலாகியதோரிசையாதலால் இம்மையில் மேன்மைக்குக்காரணமாவதுபோல் சுவர்க்கம் புகுதற்குங் காரணமாமென்பது தருமநூற்றுணிபு. காப்பியஞ்செய்தலும் உலகிற்குஅறிவைவிளக்கு நற்செயலாதலானும் புலமையுந்திறமையும் விளக்குமாதலானும் புகழ்பயக்குமென்னப்பட்டது.

பொருள்—அறத்திற்கு மின்பத்திற்குஞ் சாதனமாய வெறுக்கை. இதனை அரசரவையிற் பரிசுபெறுதன் முதலியவற்றால் பயக்குமென்பதுகருத்து.

புவனத்தியல்பு—நாடு காடு மக்கள் விலங்கு முதலியவற்றின் தன்மை செய்கை முதலியன. இவற்றையறியாது உலகினைப்புரவொழுகலரிதேயாம்.

திகழுமொழிமுறை—கருதியாங்கு கருத்துப் புலப்பட்டு உள்ளத்தையுருக்கவு முடன்படுத்தவுந்தக்க பொருளமைந்த சொற்களை நாகரிகமாப் பிரயோகிக்குந்திறன். உலகத்தின்கண் உணர்வுமிக்கோர் உண்பன உடுப்பன இருப்பன முதலியவற்றை அழகினவாச் செய்தே இன்புறுகின்றனர்; அங்ஙனமொழுகாதாரையுங் கடிகின்றனர்; ஆதலின் மொழிவதினும் இவ்வாறாயதிருத்தம் வேண்டுவர்.

தீதொழிவு—பிணி வறுமை மனக்கவலை முதலியன நீங்குதல்; புண்ணிய சரித்திரமன்றோ காப்பிய நுதலியபொருளுட்டலை.

ஒப்பில்மகிழ்வு—கடவுளைக்காண்டலிற் றோன்றும் பேரானந்தம்போல அனுபவகாலத்து மற்றவை மறக்கச்செய்யுமாறுதோன்று மோர் மாமகிழ்ச்சியாம். காப்பியத்தினுயிர் சுவை(=ரஸம்) யாதலின் இங்ஙனமுரைக்கத் தடையின்று. கடவுளுஞ் சுவைவடிவெனச் சுருதியுணர்த்தியது.

நன்று.. இப்பயனெல்லாம் பிறவாற்றானமையாதனவல்லவாகலின் இதற்குச் சிறப்பன்றே என மொழியற்க. ஓர் பயனை நாடிப் பலவுபாயங்களுலகத்திடை யிருக்கக் காண்கின்றோம். அன்றியும் ஒவ்வொன்றினமையுமொவ்வொருபயனு மிதிலொருங்கே யமைதல் சிறப்பாம். ஆங்காங்குஇருந்து கொள்ளற்பால பல பண்டங்களும் ஓராவணத்திடை மலிந்துகிடைக்கிற் கொள்வோர்க்குக்கொண்டாட்டமன்றோ? மேலும்புலமைத்திறனுக்கும்புகழ் பொருள்முதலியபோல் ஏனையவற்றானுமவை சிறப்பினவாகா. இலக்கணநூலினும் நியாயநூலினும் சொற்பொருணுட்பம் இங்ஙனந்தேரு. திருஷ்டாந்தத்தி னுரைக்கச்செய்யுமிதன்கண்ணேயன்றி உலகவியல்பும் பொருணூல்

முதலியவற்றினும் கருத்தினமையா. இப்பயனியாவும் அறமுதலிய நான்கின் பாலேபடுமாகலின் அவற்றைப் பொதுவினுஞ்சிறப்பினும் விளக்குந் தனிநூல் பலவுளவாயிருப்ப இந்நூல் சிறப்பின்றேயாமெனின் அங்ஙனமன்றெனக் காட்டப்படுகின்றது, 'மடவரல்போன்மாணறிவுநல்கி' என ; என்னை—

"அரசனை யொக்கு மருமறை நூலே
நண்பனை யொக்கு நற்புரா ணம்மே
நேரிழை யொக்கு நிகரில்காப் பியமே"

என்றுராகலின். சத்தப்பிரமாணமாகிய வேதம் அரசனைப்போலத் தன்சொன் மாத்திரையானேஉலகைநியதிப்படுத்துவதுபற்றிஅங்ஙனமொழுகற்கு அச்சமே காரணமாம்.—அர்த்தப் பிரதானமாகிய புராணம் நேசனைப்போலப் பயனைக் காட்டி நியமிப்பதனுன் அப்பயன் உள்ளத்துறைப்பக் காரணமின்றும். இங்கு அர்த்தமென்பது அர்த்தவாதம் ; அதாவது பயனுரைத்தல்.—தொனிப்பிரதானமாகிய காவியமோ மங்கையர் ஸரஸஸல்லாப விநோதங்களினுலே ஆடவரை வயப்படுத்தி மனக்களிப்பொடு தங்குறிப்பி லொழுக்குவதுபோலக் குணலங்கார மாதுரியத்தினுன் மனங்களித்துக் குறித்த பொருளிலூன்றி ஒழுகச் செய்வதாகலின் ஒப்பற்ற வுபதேசமேயாம். இதனுல் காப்பியஞ் சிறந்த பயனுடைத்தெனக்குறையில்லை. ஈண்டு புராணமென்பது இதிகாசத்தையுங் குறிக்கும். வேதபுராணுதிகளிலும் குணலங்காரங்களுள்ளனவாய் தொனிப்பிரதானமாகிய வாக்கியங்களிருக்கின்றமையின் அவற்றின் பொருணுட்பம் புலப்படவும் இவ்வலங்காரநூல் கற்கற்பாற்று. ஆகவே இது மீமாம்ஸையோடொக்க வைதிகநூலெனவுங் கொள்ளப்படும்.

இவ்வாறு பெரும்பயனுளதாய இந்நூலினுள்ளே ஸரஸஹ்ருதயர்க்கேயன்றி ஏனையோர்க்குப் புகுதலெளிதன்று. என்னை,—

"கன்ன லன்ன கவிபயின் றோர்க்கே
இன்ன காப்பிய மினிமையீ கும்மே
இன்ன வில்லா விந்துவின் கரங்கள்
துன்ன நிலாமணி யல்ல துருகாதே"

என்றுராகலின்.

ஆயின் கவிகளின்சாரமுணர இந்நூற்பயிற்சியும், இந்நூலிற்புகக்கவிப்பயிற்சியும் வேண்டுதலால் *ஒன்றனையொன்றவாவுதல் என்னும் குற்றமெய்துமேயெனின், எய்தாது ; இது சொற்பொருளுணர்ச்சியின்கண்ணே குற்றமாவது, ஏனையவிடத்தாகாது ; ஆதலானும், பொதுமையிற் கவிகளிற் பயின்று கனிந்தநெஞ்சுளர்தமக்கு அவற்றின் பாகுபாடுகளையறிய இந்நூல்வேண்டலானும் என்க. காரணகுணம் காரியகுணம்பொருந்துமிடத்தன்றிப் பயன்படாமை யுலகத்திற்காணப்படுதலின் இந்நூற்பயனுங் காவியப்பயிற்சியிற் கனியா நெஞ்சத்து உதவாதென்பதுதோன்ற 'இன்னலில்லாவிந்துவின்கரங்க டுன்னநிலாமணியல்லதுருகாது' என திருட்டாந்தங் காட்டப்பட்டது.

[தொடர்ச்சி]

* ஒன்றனையொன்றவாவுதல் என்னுங் குற்றத்தை அந்யோந்யாச்ரயதோஷம் என்பர் வடநூலார்.

கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் ௧.] ௧௮௯௬௵ ஜூலைமீ [சஞ்சிகை ௬.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யுருவாகி யகில்மா யான்றபொற் சோதி யாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ ரருளின லெளியவர்ச் சையுமாகி யுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

கம்பர்சரித்திரம்.

கம்பர் சாலிவாகனசகம் எட்டாவது நூற்றண்டின் பிற்பாதியில்

"பொன்னிசூழ் புனனு டென்னுங் கன்னிதன்
நன்னுதற் பொட்டென மன்னிப் பொலிந்த
திருவழுந் தூரிற் பொருவிறந் தமர்ந்தோன்"

என்றபடியே காவேரிசூழ்ந்த சோழநாட்டில் திருவழுந்தூர் என்னும் இவ்வியதேசத்திற் பிறந்தவர். இவருடைய பாலியத்திலேயே இவர்தந்தையாரிறந்துபோக, இவருடைய தாயார் இவரை யிட்டுக்கொண்டு திருவெண்ணெய்நல்லூரில் சடையப்பமுதலியார்வீட்டிற் போய்ச்சேர்ந்து அவர்கள் இட்டவேலைசெய்து உபாயமாய்க் காலங்கழித்துவந்தார். இவரும் முதலியார்வீட்டிற் கிடைத்ததைச்சாப்பிட்டுவிட்டு அவ்வூர் மாட்டுக்காரப்பையல்களோடுகூடி விளையாடிக்கொண்டிருந்தார். தாயார் அதுகண்டு முதலியார்வீட்டுப்பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகும்பொழுது தம்பிள்ளையை அவர்களுடைய சுவடிக்கட்டுகளை எடுத்துக்கொண்டு கூடப்போகவும் அவர்கள் வரும்பொழுது கூடவரவும் திட்டம்பண்ணினர். அந்தப்படியே சிலநாள் சென்றன; பின்பு இவர்க்கு ஏழெட்டு வயதானபொழுது அப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் வயிரபுரமென்னும் கிராமத்தில் உள்ள தமது கம்பங்கொல்லை தினைக்கொல்லைகளுக்குக் காவல் காப்பதற்காகத் தம்மிடத்தில் படித்துவரும்பிள்ளைகளில் தினம் ஒவ்வொரு பிள்ளையை அனுப்புவிக்கு முறைப்படி ஒருநாள் இந்தப்பிள்ளையை அனுப்ப, இவரும் அன்று காலை தொடங்கிக் கொல்லையில் காவல்காக்கும் பொழுது நல்லவெயிலுக்கு இவ

ர்க்குச் சற்றே கண்ணுறக்கம்வர, இவர் அக்கொல்லையருகிலிருந்த காளிகோயிலிற்போய்ப் படுத்துத்தூங்கினார். தூங்குகையில் தினைக்கொல்லையில் ஓர் குதிரை மேய்வதாகக் கனக் கண்டெழுந்துவந்து கொல்லையைப்பார்க்க அதில் கதிர்விட்டு மணிமுற்றியிருந்த தினைப்பயிரை அவ்வூராள்வோனாகிய காளிங்கராயனென்பவனுடைய குதிரைமேயக்கண்டு, அதை அதட்டியோட்டித்துரத்தியும் அது போகாமையால் பயந்து, ‘உபாத்தியாயருக்கு நானென்ன உத்தரம் சொல்வேன்; அவர் அடிப்பாரே!’ என்று நடுங்கி காளிகோயிலுக்கு எதிரேபோய் கண்ணுங் கண்ணீருமாய் அழுதுகொண்டுநிற்க, தேவி திருவுளமிரங்கி இவர்க்குப் பிரசன்னையாகி, ‘அட குழந்தாய்! நீ அழ வேண்டாம்; உன் நாவைநீட்டு’ என்று சொல்ல, நாவை நீட்டினவுடனே பீஜாக்ஷரத்தையெழுதி அனுக்கிரகித்து, ‘பயப்படாதே, போ’ என்றாள். உடனே அங்கிருந்து பின்னும் கொல்லையை வந்துபார்த்து, முன்போலவே குதிரை பயிரை மேய்ந்து அழிக்கக்கண்டு கோபங்கொண்டு, காளிகாதேவியின் அநுக்கிரகத்தால் ஸரஸ்வதீபிரசாதமுண்டானமையால்,

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மேகேள்
காய்த்த தினைப்புனத்திற் காலைவைத்தா—சாய்த்துக்
கதிரைமா ளத்தின்ற காளிங்க ராயன்
குதிரைமா ளக்கொண்டு போ

என்று ஒருவெண்யாப்பாட அக்கணமே அக்குதிரை கீழேவிழுந்துமாண்டு போயிற்று. அதைப்பார்த்திருந்தவர் யாரோ அச்சங்கதியை உபாத்தியாயருக் கறிவிக்க அவர் ஓடிவந்து, ‘அப்பா! அது அதிகாரிவீட்டுக்குதிரையாகையால் எப்படிப்போய் எப்படிவருமோ’ என்று கலக்கமுற இவர்முன்பாடின வெண்பாவின் முதல்மூன்றடிகளையே மறுபடியும்பாடி நான்கா மடியை மாத்திரம்

குதிரைமீ ளக்கொண்டு வா,

என்று திருப்பிச்சொல்ல மாண்டகுதிரை மறுபடியும் உயிர்த்தெழுந்து ஓட்டம்பிடித்தது. அவ்வூராள்வோனாகிய காளிங்கராயன் இவ்விருத்தாந்தங்களையெல்லாம் ஆதியோடந்தமாகக் கேள்வியுற்று அவன் அச்செய்தியை அக்காலத்தில் அரசுசெலுத்திவந்த துங்கனென்னும் சோழராசனுக்கு அறிவிக்க, நடந்தவர்த்தமானமெல்லாம் சோழன் விசாரித்தறிந்து அப்படிப்பட்ட சிறுவனைத் தான்பார்க்கவேண்டுமென்று வரவழைக்க, இவர் கொல்லையிற் கிளியோட்டும் கோலுங்கையுமாய் வந்து சமுகத்தில் நிற்க, அதிகாரியை நோக்கிக் கையிலே கோலேந்திநிற்கும் சிறுவனைச்சுட்டி இக்கம்பனா* அப்படிச் செய்தவனென்ன, அதற்கு அவன் ஆமென்றான்.

இந்தக்காரணத்தினாலும் கம்பங்கொல்லை காத்ததனாலும் இவர்க்குக் கம்பனென்று பெயருண்டாயிற்று. இதைக்குறித்து மற்றுஞ்சிலகாரணமும் சொல்லுவார்கள்.

* கொல்லை கம்பென்பது தாதுபாரணைக்கு

அப்புறம் அரசன் கம்பனைநோக்கி ‘நீ இருப்பது எந்தவூர்’ என்றுகேட்க அவர் ‘திருவெண்ணெய்நல்லூர்’ என்ன, ‘அது எப்படிப்பட்டது யாருடைய சுவாதீனத்திலிருப்பது’ என, அதற்கு உத்தரமாக

மோட்டெருமை வாவிபுக முட்டவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டம்
அடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லும்
உடையான் சடையன்ற னூர்.

என்று ஒரு வெண்பாப்பாடக்கேட்டுத் துங்கன் சந்தோஷித்தான். சடையப்பமுதலியாருக்கு இந்த சமாசாரம் தெரியவந்தசமயத்தில் அவர் வேந்தனிடத்திற்குவந்து சிறுவராகிய கம்பருடைய பூர்வோத்தரமெல்லாம் அரசற்கறிவித்து, கம்பனை அழைத்துப்போய்த் தமது கிருகத்தில் வைத்துக்கொண்டு முன்னிலும் பன்மடங்கு விசேஷமாக அபிமானித்து ஆதரித்துத் தக்கவயது வந்தபொழுது விவாகமும் செய்வித்தார். இவரும் முன்பு தம்மை ‘பையா’ என்றழைத்தவர்களெல்லாம் ‘ஐயா’ என்றழைக்கும்படி கம்பர்கம்பரெனஜகத்பிரஸித்தமாகப் பிரபலவித்வானானார். அப்போது துங்கனைப்பார்க்கிலும் அவன்மகனாகிய குலோத்துங்கன் கம்பனை அதிகமாக சன்மானித்து தன்னுடைய ஸமஸ்தானவித்வான்களுக்குத் தலைவராயிருக்கும்படி பிரார்த்தித்தான். அதனால் அவர், அந்தராஜசமூகத்துக்கு நாடோறும்போய் அங்குள்ள ஒட்டக்கூத்தர் முதலானவர்களும் சோழனும் வியக்கும்படிச் சமயோசிதமாகவும் சாதுரியமாகவும் பலகவிகள் பாடிப்பிரசங்கிக்கத்தலைப்பட்டு,

“புவிச்சக்கர வர்த்திகள் போற்றிப் பழிச்சும்
கவிச்சக்ர வர்த்தியாங் கம்பர்”......

என்னும் பிருதுகூறிப் புலமைசெலுத்திவந்தார்.

இவருக்கு அம்பிகாபதி என்று ஒரு அருமைப்புதல்வன்பிறந்து அவனும் தக்கவயதுவந்தவாறே தன்தந்தையைப்போல தானும் பிரபலவித்வானாக வேண்டி

“மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் றன்பா லருந்தமி ழுணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப் பியநெறி பலகாப் பியத்தும்
அணிபெறு மிலக்கண மரிதினிற் றெரிந்து
வடநூல் வழிமுறை மரபினின் வழாஅது
ஈரிரண் டெல்லை யிகவா மும்மைப்
பாகத விலக்கணம் பண்புறத் தழீஇ
* * * *
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்”

ஆகித்தானும் தன்தந்தையோடு ராஜஸபைக்கு நாடோறும்போய்வந்துகொண்டிருந்தான்.

அக்காலத்தில் சடையப்பமுதலியார் ஒருநாள் கம்பரைநோக்கி, ஐயா!

"பூமலி கமலப் பொகுட்டுள்வீற் றிருக்கும்
பாமகள் கொழுநன் படைத்த வெழுவகைத்
தோற்றத் துள்ளு மேற்றமிக் குயர்ந்த
மக்கட் பிறப்பிற் றுய்க்கத் தகுபயன்
எத்தன்மை யதுமற் றெத்துணைத் தாயதென்
றுய்த்துணர்ந் ததன்பி னுறுமா றெதுவென
உள்ளியாய்ந் ததனைத் தெள்ளித் தெளிவுறும்
கருவி யாதெனிற் கருதி யாவதிங்
கொன்றே யெளிதினஃ துணர்தற் பான்மைய
தன்றே யன்றியு மந்தண ராதிய
சிற்சிலர்க் குரிமை திகழ்வ தாகி
நச்சுநர்க் கெல்லாம் நணுகப் பெருமையின்,

*   *   *

திருவார் பரஞ்சுடர் தயரதன் சேயாய்
அறம்பொரு ளின்பம்வீ டடைதனற் பொருளும்
திறம்பட விளக்கிய திப்பிய சரிதமாய்ப்
பொருவில் வேதத்தோ டொருதன் மைத்தாய்
இருமையும் பயக்கு மிதிகா சத்தை,"

தமிழிலே நீவிர் ஓர்காவியமாகச் செய்தால் லோகோபகாரமாயிருக்குமெ ன்றுசொல்ல, கம்பரும் நல்லது அப்படியே செய்கிறேம் என்றுசொல்லிச் சிலநாள் காலஹரணம் பண்ணிக்கொண்டு வந்ததுகண்டு குலோத்துங் கனைக்கொண்டு சொல்வித்தால் ராஜாவின் தாக்ஷண்யத்திற்கு அஞ்சியாவது நமது அபிப்பிராயத்தை நிறைவேற்றுவாரென்று நினைத்து அரசனுக்குஅதை அறிவித்தார். அரசன் அதைப்பற்றித் தனக்குள்ளே யோசித்து, நாம் கம்ப ரைமாத்திரம் பாடச் சொன்னால் எப்படியும் தாமதப்படும்; கம்பரையும்ஒட்ட க்கூத்தரையும் தனித்தனி பாடச்சொன்னால் அவர்கள் ஒருவருக்கொருவர் முந்தவேண்டி விரைவிற் பாடிமுடிப்பார்களென்று அவ்விருவரையு மழைப் பித்துச்சொல்ல, ஒட்டக்கூத்தர் கிரமமாக பாலகாண்டமுதல் ஐந்துகாண் டம்பாடி ஆறுவதுகாண்டத்தில் கடல்காண்படலமட்டும் பாடினார். அதுவ ரையில் கம்பர் கடவுள்வணக்கமும் செய்யவில்லை என்பதைமுதலியார்அறி ந்து வேந்தனிடத்துப் போய்க் கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் இராமாய ணம் பாடச்சொன்ன தாங்கள் அதைப்பற்றி மறுபடியும் விசாரிக்கவில் லையே என்று ஞாபகமூட்ட, அரசன் அவ்விருவரையும் வரவழைத்து இரா மாயணம் எவ்வளவு பாடியாயிற்று என்றுகேட்க, ஒட்டக்கூத்தர் கடல் காண்படல பரியந்தம்பாடினேன் என்றார். கம்பர் ஒருபாட்டும் பாடாதிரு ந்தும், தமக்குப்பாரதியருளிருக்கிறபடியால் இவர்க்கு நாமிளைக்கலாகாதெ ன்று எண்ணி கடல்காண்படலத்துக்குமேல் சேதுபந்தனப்படலம் வரையில் பாடினேமென்றார். ஆனால் அதைச்சற்றே பிரசங்கியும் கேட்போமென்று

அரசன்சொல்ல, சரஸ்வதியானவள் பூர்வம் ஸ்ரீவான்மீகிபகவானுடையவாக் கில்நின்றும் ஸ்ரீராமாயணத்தைப்பாடி முடித்ததுபோல் இப்போது கம்ப ருடைய நாவி லெழுந்தருளியபடியால் உடனே இவர் அப்படலத்தைமாத் திரம் எழுபது செய்யுளிற் பாடி, மஹாராஜாவுடைய ஆணையால் சேதுபந் தனஞ்செய்யும்பொருட்டு வானரவீரரும் படைத்தலைவர்களும் மலைகளை வேரோடுபறித்துவந்து கடலிலிடுவதைப்பற்றி வர்ணிக்குமிடத்து 'குமுத னென்னும் படைத்தலைவன் (நளன்கையிற்கொடாமல்) விட்டெறிந்தபெரு மலையானது கூத்தாடிபோலத் திமிதம் என்று ஒலியெழச் சுழலாநின்றது; அதுகாரணமாக அலைகளையுடைய சமுத்திரத்தினது திவலைகள் தம்மூரிற்பிர வேசிக்கக் கண்டதேவர்கள் அமுதமின்னமுமுண்டாமென்னு மாசையுடை யராய்த் துள்ளிக் கூத்தாடினார்கள்,' என்னும் பொருளமைந்த

குமுத னிட்ட குலவரை கூத்தரின்
திமித மிட்டுத் திரியுந் திரைக்கடற்
றுமித மூர்புக வானவர் துள்ளினார்
அமுத மின்னு மெழுமெனு மாசையார்

என்னுமொருவிருத்தத்தையெடுத்துப் பிரசங்கித்தார். அப்பொழுது ஒட்டக் கூத்தர் கம்பரைப்பார்த்துத் துளியைத் துமியென்றதென்னையென, கம்பர் அதைக்கேட்டு துமிஎன்னும் முதனிலைத்தொழிற்பெயர் நீர்த்துளிக்கு ஆகு பெயராய் வந்ததென்றுகூறினர். ஒட்டக்கூத்தர் இது எந்த இலக்கியங்களிலா வது உண்டாவென்று கேட்கக் கம்பர் அவைகளிலெல்லாமில்லை, உலகவ ழக்கே என்ன, ஒட்டக்கூத்தர் ஆயின் அதை எனக்குமெய்ப்பிக்க வேண்டு மென்ன, நல்லதென்று செலவுபெற்றுக்கொண்டு கம்பர்வீட்டிற்குவந்து தம் மையறியாமல்சபையில் தம்வாக்கிற்பிறந்ததுமியென்னுஞ்சொல்லைக்குறித்து மிகுந்த சிந்தாக்கிராந்தராய் இது சரஸ்வதிகடாக்ஷமன்றி மற்றொன்றல்ல வென்று தமக்குள்ளேயோசித்துச் சரஸ்வதியைதியானிக்க, சரசுவதிபிரத் திக்ஷமாகி, முற்காலத்தில் வைதிகமுனிவராகிய வான்மீகருடைய வாக் கிலிருந்து வடமொழியில் ஸ்ரீமத்ராமாயணத்தை வெளியிட்டதுபோல் இப் போது உன்னுடைய வாக்கினின்று தென்மொழியில் வெளியிடச்சித்தமா யிருக்கின்றேனாதலால் இதைக்குறித்து நீ மனஸ்தாபப்படவேண்டுவதில்லை; சோழனையும் ஒட்டக்கூத்தனையும் இன்னுஞ்சிலரையும் நாளைப்பின்மாலையில் இடைத்தெருவுக்கு இட்டுக்கொண்டுவா, நான் அங்கே உன்வார்த்தையை மெய்ப்பிக்கிறேன் என்றுசொல்லி அந்தர்த்தானமாய்விட்டாள்.

அப்படியே குலோத்துங்கசோழனையும் ஒட்டக்கூத்தரையும் மற்றவர்களையு மவ்வீதிவழியே அழைத்துப்போகையில் ஒரு வீட்டில் அபௌருஷேயமா கிய வேதமேதயிர்த்தாழியும், வேதாந்தமேதயிரும், வைதிகசாஸ்திரங்களே மத்தும் தாம்பும், இதிகாசபுராணங்களே சிறுபிள்ளைகளுமாய் உருவெடுத் துவர, தானொருஆயர்மகளாய்த் திருவுருக்கொண்டு அக்கோரத்திலே தயிர்க டைந்துகொண்டிருந்த சரஸ்வதியானவள் அவர்கள்சமீபமாய் வாராநிற்கை

யில் அவர்களுக்குக் கேட்கும்படி, தன்னைச்சூழ்ந்துநிற்கின்ற இதிகாசபுராணங்களாகிய சிறுவர்களைநோக்கி, பிள்ளைகளே! உங்கள்மேல் மோர்த்துமி தெறிக்கப்போகிறது எட்டவிருங்களென்று சொல்ல, கம்பர் ஒட்டக்கூத்தரைக் கேட்டீரோவென்ன, அவர் சரிதானென் றெரப்புக்கொண்டு, இவ்வீடுகுடியில்லாவீடென் றெல்லோருக்குந் தெரியுமே இப்போ இவ்வீட்டில் யார்வந்திருக்கின்றார்க ளென்றறிவோமென்று மடியிற்செருகியிருந்த ஐமுதாட்டையுருவிக்கொண்டு ஓடிப்பார்க்கையில் அங்கேயொரு கோபிகாஸ்திரீயும் சிலகோபாலபாலர்களும் தயிர்த்தாழிமுதலானவைகளும் கண்ணுக்குத் தோன்றி மறைந்துபோனபடியால், இதெல்லாம் நான்முகன்கிழத்தி நடனமென்றுன்னி ஆச்சரியப்பட்டுத் திரும்பினர். அப்புறம் ஒட்டக்கூத்தர் சற்றேறக்குறைய ஆறுமாதத்திற்குள் கடல்காண்படலத்தினின்று மற்றதையும் பாடிமுடித்தார். முடித்தும், வரப்பிரசாதியானகம்பன் கவிக்குமுன் நமது கவிதலையெடாதென்று தீர்மானித்துக்கொண்டு ஒருநாள் தம்முடைய இராமாயணத்தைச் சஞ்சிகை சஞ்சிகையாக உருவிக் கிழித்துக்கொண் டிருக்கையில் ஒட்டக்கூத்தர்வசிக்கும் தெருவழியே ஏதோஒருகாரியார்த்தமாகச் சென்ற கம்பர் கிழிபட்டிருக்கும் ஏட்டுக்குவியல்களைக்கண்டு ஒட்டக்கூத்தரை நோக்கி கிழித்தெறிகின்றதென்னென, யாண்பாடின இராமாயணமென்ன, ஏன்கிழித்தெறிகிறீரென்ன, அவர் வரகவியேகவி மற்றைக்கவி என்னகவியென்று சொல்லி மற்றதையுங்கிழிக்க எத்தனிக்கையில் இவர் அப்புலவருடைய கையிலிருக்கும் ஏடுகளைவாங்கிப்பார்த்து, உத்தரகாண்டமென்று தெரிந்து கிழிக்கவொட்டாமல் தடுத்து ஸ்ரீராமசரித்திரமன்றி இராக்கதர்களுடைய சரித்திரத்தை உத்தரகாண்டம் சொல்லுகின்றமையால் அதைத் தாம்பாடவேண்டிய அவசியமில்லையென்றும், இவர்பாடினதையே வைத்துக் கொள்ளலாமென்றும், யோசித்து ஒட்டக்கூத்தரைநோக்கி நீரருமைப்பட்டுப்பாடினதை ஏன் வீணுகக்கிழித்தெறியவேண்டும், நான் ஆறுகாண்டம் பாடி அதன்பின்னே இரண்டாயிரம்பாட்டில் நீர்பாடிய இந்த உத்தரகாண்டத்தைச்சேர்த்துக் கொள்ளுகிறேனென்றார். அதற்கு ஒட்டக்கூத்தரும் உடன்பட்டார்.

பின்பு கம்பர் நல்லநாட்கொண்டு தம்மை பாலியத்தில் பாதுகாத்துமுன்னுக்குக் கொண்டுவந்த சடையப்பவள்ளல்பேரும் பெருமையும் விளங்கும்படி இடையிடையே அவரைப்புகழ்ந்து சுந்தரகாண்டத்தி னின்றும் பாடத் தொடங்கி அன்றுமுதல் இரவில் வடமொழிப்புலவர்களை வைத்துக்கொண்டு இராமுழுதும் வான்மீகம் வாசிட்டம் போதாயனம்முதலிய இராமாயணங்களையும் மற்றைப் புராணங்களையும் ஆராய்ந்தறிந்து மறுநாள் மத்தியான்னத்தில் தம்முடைய சிஷ்யர்களைக்கொண்டு பேருக்குக்கொஞ்சமாக எழுதச் சொல்லி அஸ்தமயத்துக்குள் நாளொன்றுக்கு எழுநூறுசெய்யுள் விழுக்காடு பாடிவந்தார். இப்படியாக சரஸ்வதிப்ரஸாதத்தால் பதினைந்துநாளைக்குள் ஆறுகாண்டமும் பதினாயிரம்பாட்டில்களில் பாடிமுடித்தனர். நாளொன்றுக்கு எழுநூறுகவிவீதம்பாடி றைொன்பது.

கழுந்தராயுனகழல்பணியாதவர்கதிர்மணிமுடிமீதே
அழுந்தவாளிகடொடுசிலைராகவவபிநவகவிநாதன்
விழுந்தஞாயிறதெழுவதன்முன்மறைவேதியருடனாராய்ந்
தெழுந்தஞாயிறுவிழுவதன்முன்கவிபாடியதெழுநூறே

என்னுஞ் செய்யுளால் விளங்கும்.

இந்தப்படி ராமாயணம்பாடி முடிந்தபின்பு சோழராஜனுக்கும் சடையப்பவள்ளல் முதலானவர்க்குந் தெரிவித்து சிறையிருந்தவளேற்றஞ் சொல்வதாகிய இவ்விதிகாசமானது வைதிகநூல்களி லொன்றாதலால் எல்லா திவ்யதேசங்களினுஞ் சிறந்த திருவரங்கம் பெரியகோயிலி லரங்கேற்றல் செய்யவேண்டுமென்றவர்களனுமதிபெற்று கிரந்தத்தையெடுப்பித்துக்கொண்டு கோயிலேறப்போய் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தாம்வந்திருக்கும் செய்தியைத்தெரிவிக்க, அவர்கள் காவியத்தில் நரஸ்துதிபண்ணப் பட்டிருப்பதாலும், தென்மொழியாயிருப்பதாலும், உபேக்ஷையால் தில்லை மூவாயிரவர் முதலியவர்களிடத்துச்சென்று அவர்களுடைய அங்கீகாரம் பெற்றுவந்தால் உமது காப்பியத்துக்கும் உமக்கும் அதிகபுகழாயிருக்குமென்றார்கள். அப்படியே கம்பர்திருச்சித்திரகூடத்துக்குச்சென்று தில்லைமூவாயிரவர்களிற் சிற்சிலரைக்கண்டு தாம்வந்தசெய்தியைத் தெரிவிக்க, அவர்கள் நாங்கள் மூவாயிரவரும் ஒன்று சேர்ந்தாலல்லது ஏகதேசத்தில் நாங்களுமக்கு உத்தரவு சொல்ல முடியாதென்றார்கள். தாம் யாரரைப்போய்க்கண்டாரோ அவர்களெல்லோரு மிப்படியேசொல்லிவிடவே சற்றே உள்ளங்கலங்கி

"வந்தெதிர்த்ததாடகைதன்னுரத்தைக்கீறி
வருகுருதிபொழிதரவன்கணையொன்றேவி
மந்திரங்கொண்மறைமுனிவன்வேள்விகாத்து
வல்லரக்கருயிருண்டமைந்தன்காண்மின்
செந்தளிர்வாய்மலர்நகைசேர்செழுந்தண்சோலைத்
தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்
அந்தணர்களொருமூவாயிரவரேத்த
வணிமணியாசனத்திருந்தவம்மான்றானே"

என்பது முதலிய பாசுரங்களாற் சித்திரகூடத் தெம்பெருமானைத் தியானித்துக்கொண்டு சயனித்தனர். அத்திவ்யதேசத்தெம்பெருமான் இவருடைய சொப்பனத்திலெழுந்தருளி நாளையுதயத்திலே இத்தில்லைமூவாயிரவர்களிற் தலைமையானவருடைய பிள்ளை அரவுகடித்திறந்து போகும்; அப்பிள்ளையைத் தகனஞ்செய்ய தில்லைமூவாயிரவரும் அவ்விடம்வந்து சேருவார்கள்; அந்த சமயத்தில் அங்குபோய் நீபாடினராமாயணத்தில் நாகபாசப்படலத்தையெடுத்து இன்ன இன்ன பாடலைவாசித்தால் விஷந்தீண்டின பிள்ளை பிழைக்கும்; உடனே அவர்கள் உன்னிஷ்டப்படி நடப்பார்கள் என்றருளிச்செய்தார்.

பின்பு பொழுதுவிடிந்தபோது கம்பர் தில்லைமூவாயிரவர்க்குத் தலைவர் வீட்டில் மூவாயிரவருமொன்றுகூடியிருப்பதைக்கண்டு இப்போது இராமாயணமரங்கேற்றல் வேண்டுமென்று சொல்லினர். அப்போது அப்புலவரே

உமக்கு இதுதானா சமயம்? நாங்கள்பிள்ளையைப் பறிகொடுத்து நிற்கிறோமே என்றார்கள். அப்படிச்சொல்லிய அனைவரையும்பார்த்து இந்த சமயந்தப்பினால் நீங்கள் மற்றெந்தச் சமயத்திலொன்றாய்ச் சேருவீர்கள், நான் நெடு நாளாக்காத்திருந்தும் இன்றுதானே நீங்கள்மூவாயிரவரும் ஒன்றாய்ச்சேரும் படி நேரிட்டது; இனி எந்தக்காலத்தி லிப்படிப்பட்டசமயம் நேரிடப்போகிறதென்றுசொல்லி, அக்குழந்தை எவ்விதமா யிறந்ததென்றுகேட்க, பாம்பு கடித்திறந்தது, பலமந்திர ஔஷாதிகளைப் பிரயோகித்தும் அநுகூலப்படவில்லை என்றுசொன்னார்கள். அதுகேட்டுக் கம்பர் அந்தப்பிள்ளையை யெனக்குச்சற்றே காட்டலாமாவென்ன அக்குழந்தையை எடுத்துவந்து காட்டினர். இவர்கடிவாயைக் கண்டு நான்கு பற்களும் பதிந்தபடியால் அசாத்தியமென்றே சொல்லுவார்களென்று சொல்லிக்கொண்டிருக்கையில், ஊர்க்குடிமி வந்து ஐயா இக்குழந்தை தலைமுழுகிவரும்போது தீண்டியபடியால் விஷம் அதிசீக்கிரமாய்த்தலைக்கேறிப் பற்கள்கருகிக் கண்பஞ்சடைந்துபோயிற்று, இனியென்னசெய்தாலும் பலியாது, பிரயாசமென்றான். இது மெய்தான், ஜகதீசனுடைய கடாக்ஷத்தால் இப்பிள்ளை உயிர்பெற்றெழுந்தால் எம்முடைய இஷ்டத்தை நிறைவேற்றுவீர்களாவென்றுகேட்க, செத்தவர்கள் உயிர்பெற்றெழுவது உலகத்திலாச்சரியமாயிருக்க நீர் உயிர்ப்பிச்சை கொடுத்தெழுப்பினால் உமது காரியத்தை நாங்கள் சிரசாவகித்துச் சீக்கிரத்தில் நிறைவேற்றியனுப்பாகிரோ மென்றார்கள். அதுகேட்டுக் கம்பர் திருச்சித்திரகூடத்தெம்பெருமானை மனதிற்றியானித்துக்கொண்டு தமதுராமாயணத்தை அவிழ்த்து நாகபாசப்படலத்தையெடுத்து இளையபெருமாள் முதலானோர் இந்திரசித்துஎய்தநாகபாசத்தால் கட்டுண்டு மூர்ச்சித்துக்கிடக்கையில் ஸ்ரீமந்நாராயணன் ஆதியிற்செய்த சங்கற்பத்தின்படி பெரியதிருவடிநாயினார் எழுந்தருளியதனால் அந்தநாகபாசக்கட்டு நிவாரணமான சந்தர்ப்பத்தில் 'கருடபகவான் பல ஆயிரயுகங்கள் முடியினும் ஓரிறகு முதிராத தம்முடையசிறகுகளை வீசுவதனாலுண்டாகிய படர்ந்தகாற்றானது செல்லுதற்குரியதாகாத நிலத்திலே அந்தகாரத்திற்செல்லவே இளையபெருமாள் முதலானவர்களைக் கட்டிக்கிடந்த நாகபாசமானது சிறுதுண்டங்களாக அற்றுப்போயினது; சகல இந்திரியங்களையு மடக்கி மூவாசைகளையும் பற்றறவிட்டு இதுவே ஆத்மோஜ்ஜீவனமென்று நல்லறிவாலே தீர்மானித்து பகவத்கைங்கர்யத்தையேசெய்யும்கலங்காத நிலையையுடைய பரமைகாந்தியின் விஷயத்தில் அவைதிகர்கள் மாச்சரியத்தாற் சார்த்தியபழிகள் அப்புருஷனையடையாத தன்மைபோல் அந்நாகபாசத்தாற் கட்டுண்ட அவர்களுடைய திருமேனியின் வடுக்களுந்தோன்றாமல் மறைந்துபோயின' என்னும் பொருளுள்கொண்ட

பல்லாயிரத்தின் முடியாதபக்க மலைவீசவந்தபடர்கால்
செல்லாநிலத்தி னிருளூடுசெல்லவுடனின்றவாளிசிதறுற்
றெல்லாமவித்துமுணர்வோடு மெண்ணியறனேயிழைக்குமுரவோன்
வல்லானொருத்த னிடையேபடைத்தவடுவானமேனிவடுவும்

என்னும் விருத்தத்தையும், 'பாதகனாகிய இந்திரஜித்து எய்த நாகபாசமானது வாசனைதங்கிய தாமரைத்தாளினது நூல் எளிதி னீங்குவதுபோல எளிதினீங்கியதென்று சொல்லுவது யாதுகாரணம்; கைம்மாறு வேண்டாமல் கொடுக்குந்தன்மையால் மேகமோவென்று கண்டோர் ஐயங்கொள்ளுகின்ற சலியாதநிலைமையையுடையோனாகிய சராமவள்ளல் (சடையப்ப வள்ளலுடைய இளையதம்பி) வாசஞ்செய்யுந் திருவெண்ணைநல்லூரில்வந்து சேர்ந்த அறிவுவிளக்கமாகிய அந்தணர்களும் வித்வஜனங்களும் மற்றும் சாதுஜனங்களுமாகியவர்களை எமபாசத்தைப்போற் சேர்ந்து வருத்துகின்ற தரித்திரத்தைப்போல இருந்தவிடமேதெரியாமல் மறைந்து போயிற்று' என்னும் பொருளைத் தருகின்ற

வாசங்கலந்தமரைநாளநூலின்வகையென்றதென்னமழையென்
றாசங்கைகொண்டகொடைமீளியண்ணல்சராமன்வெண்ணெயனுகும்
தேசங்கலந்தமறைவாணர்செஞ்சொலறிவாளரென்றிம்முதலோர்
பாசங்கலந்தபசிபோலகன்றபதகன்றுரந்தவுரகம்

என்னும் விருத்தத்தையும், மற்றுஞ்சில விருத்தங்களையும் வாசித்து—

ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட.

மங்கை யொருபாகன் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையும்
சீறியதன் மேலுருந் தெய்வத் திருநாணே
ஏறிய பாம்பே யிறங்கு.

பாரைச் சுமந்த படவரவே பங்கயக்கண்
வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—ஈரமதிச்
செஞ்சடையான் பூணுந் திருவாபரணமே
நஞ்சுடையாய் தூர நட.

எனவும், புதிதாக மூன்றுவெண்பாவையும்பாடி எல்லாப்பாம்பினங்களுக்கு மரசனாகிய ஆதிசேஷனைப் பிரார்த்தித்தவுடனே ஒரு சர்ப்பம் அதிவிரைவாய்வந்து யாவரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அக்குழந்தையைக் கிட்டி முன்பு கடித்தவாயில் மறுபடியுங்கடித்துத் தலைக்கேறினவிஷத்தை மீட்டுக்கொண்டு திரும்பிச் சிறிதுதூரம் போயிறந்தது. பின்பு இறந்து கிடந்த குழந்தை உயிர்பெற்று நித்திரைசெய் தெழுந்தாற்போல எழுந்தது. இவ்வற்புதத்தைக்கண்ட தில்லைமூவாயிரவர்களும் மற்றவர்களும் கம்பருடைய பொய்யில்புலமையைக்குறித்து வியந்து விஷகண்டனாகிய ருத்ரபகவானே இப்படிமானிடவுருவுகொண்டுவந்தாரென்று பலவாறாகத்துதித்தார்கள். எக்காலத்தினும் எவர்களையும் மதியாத அத்தில்லைவாழந்தணர் மூவாயிரவரும் கம்பரைத் தெய்வப்புலமையுள்ளவரென்று உள்ளபடியறிந்து, தெரியாமல் இவர்விஷயத்தில் அபசாரப் பட்டோமென்று உபசரித்தனர்.

பின்பு மரித்த பிள்ளைக்காக மசானத்தி லடுக்கிய காட்டத்தின்மேல் அப்

பாம்பைக்கொண்டுபோய்வைத்து தகனஸஞ்சயனம் முடித்துவந்து கவிஞரிடத்திலிருந்த இராமாயணத்தைத் தாங்களே வாங்கி அவிழ்த்துத் தனித்தனியே அனைவரும்பார்வையிட்டு சொல் பொருள் கற்பனை கருத்து சுவை ஓசை முதலானவைகளை நன்காராய்ந்து தமிழி லிப்பெருங்காவியத்தைப் போல வேறொரு நூலுமுண்டோவென்று வியந்து தங்களுக்குள் பிரமானந்தமடைந்து, நாம் சில ஆட்சேபஞ் செய்து பின்பு அங்கீகரிப்பதே நலமென்று கம்பனை நோக்கிச் சிலகேள்விகள்கேட்கத் தலைப்பட்டார்கள்.

> நாடியபொருள்கைகூடு ஞானமும்புகழுமுண்டாம்
> வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கும் .
> நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை
> சூடியசிலையிராமன் றோள்வலிகூறுவோர்க்கே.

என்னும் பாடலில் 'நாடியபொருள்கைகூடும்' என்றவாக்கியத்திலேயே பின்கூறுவனவெல்லா மடங்கியிருக்க, 'ஞானமும் புகழுமுண்டாம்' என்று மிகைபடக்கூறிய தென்னையென, கம்பர் பொருளென்பது ஒருபொருள், இருபொருள், முப்பொருள், நாற்பொருள், முதலியவாகப்பலவகைப்படும்; அவற்றுள், ஒருபொருள் - மோட்சம்; இருபொருள் - கல்வி, செல்வம்; முப்பொருள் - சித்து, அசித்து, ஈசுவரன்; நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு என்பன. உலகத்தார்யாவரும் பிரதானமாக நாடும்பொருள் கல்வி செல்வம் இரண்டுமேயாதலால் இங்கு அவ்விருபொருளையுமேகருதி 'நாடியபொருள் கைகூடும்' என்றும், அவற்றுள் கல்வியால்ஞானமும் செல்வத்தால் கைங்கர்யமும் உண்டாதல் பற்றிச் சாதனசாத்தியமுறையாக அவற்றின்பின் ஞானமும் *புகழுமுண்டாமென்றும், இவ்விரண்டுமொருசேர உண்டான விடத்துத் தன் புருஷகாரத்தால் அந்தமில் பேரின்பத்தையடைவிப்பிக்கும் பெரியபிராட்டியார் கடாக்ஷமுண்டாம் என்பது தோன்ற அவற்றின்பின் "வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்" என்றும், இப்பயனனைத்தும் உள்ளன்போடு ஸ்ரீராமசரித்திரத்தைக் காலக்ஷேபஞ் செய்வோர்க்காதலால், தவத்தில் மிகுந்த அரக்கர்களும் அவருடையசேனையும்நீறாகி நாசமடையும்படி வென்று வெற்றிமாலையைத்தரித்த ஸ்ரீகோதண்டராம பிரானுடைய திருத்தோள்களது பராக்கிரமத்தைப் படனஞ் செய்வோர்க்கேயென்பதுதோன்ற "நீடியவரக்கர்சேனைநீறுபட்டழியவாகை, சூடியசிலையிராமன்றோள்வலிகூறுவோர்க்கே" என்றுஞ் சொல்லினுமென்றார். பின்னு மவர்கள் 'சூடிய சிலையிராமன் றொல்கதை கூறுவோர்க்கே' எனின் உமதுகருத்தின்படி ஸ்ரீராமாயணமென்ப தடங்கும், அப்படிக்கூறாமல், கிரந்தகர்த்தர்கள் பெரும்பாலும் கடவுள்திருவடியைக் குறித்தே வாழ்த்துவதுவழக்கமாயிருக்க, நீர் அத்திருவடியைவாழ்த்தாது, மாறுகொளக்கூறலாய் 'தோள்வலி' என்ற தென்னையென, தெய்வக்கவிஞர்: தாடகையைச் சங்கரித்து, சுவாகுவைக்கொன்று, கௌசிகமுனி வேள்வியைக் காத்து, மிதிலையில் சிவனது வில்லையொடித்து, சீதாபிராட்டியைத் திருமணமுடித்து, அயோத்திக்கு மீண்டுவருகையில் பரசுராமனைவென்று,

*கைங்கர்யத்தைப் புகழென [illegible] காரணத்தை காரியமாக வுபசரித்தார்.

வனத்தில் விராதன்தோளைச்சரித்து, கரதூஷணதிரிசிரர்களையுமாயதமாக்கி, மாயமானைக்கொன்று, கவந்தனைமாய்த்து, மராமரத்தைத்தொளைத்து, வாலியைவதைத்து, சுக்கிரீவனுக் கரசளித்து, வருணனைவாட்டி, மகராக்ஷனைமடித்து, கும்பகருணனைச்சேதித்து, மூலபலத்தைமுடித்து, இராவணாதி ராட்சஸர்களை யெல்லாம் கருவறுத்து, விபீஷணாழ்வானுக்கு முடிசூட்டியது ஸ்ரீராமபிரானுடைய புஜபலமேயாதலால் ஆதிதொடங்கி அந்தமட்டும் அவன் தோளாண்மையைச் சொல்வதே ஸ்ரீராமாயணமென்பது ஆராய்வோர்க்கு நன்குவிளங்குதற் பொருட்டு 'தோள்வலி' யென்றும் என்றார். பின்னும் அவர்கள்கேட்ட வினவுக்கெல்லாம் தக்கபடி கம்பர் விடைகூறக்கேட்டு இவருடைய தெய்வப்புலமைக்கு நம்முடையதிறமை யெம்மாத்திரமென்று தங்களைத் தாங்களே யிகழ்ந்துகொண்டு அவரை வாயாரப்புகழ்ந்து சந்தோஷப்பட்டு நாடிய பொருள்கைகூடும் என்னும்விருத்தத்தில் நீறுபட்டழிய வென்றதற்கு நீரெந்தப்பொருளைச் சொல்லினும் சொல்லிக்கொள்க, அந்தராட்சஸ சேனைகள் நீர்தரித்திருக்கும் திருமண்பட்டன்றே நாங்கள் தரித்த நீறுபட்டுத்தானே யழிந்தது என்று சாதுரியமாகச்சொல்லி இவ்விதிகாச சிரேஷ்டத்தைப்பாட நீரேதகுந்தவர் என்றுமெச்சித் தங்களில் முதன்மையானவரொருவர்செய்த

> மெய்ச்சிட்டர்பொதுநோக்கிற் சீர்தூக்கிற்கம்பனெனுமேதக்கோன்றன்
> உச்சிட்டமுலகிலுள கசடறக்கற்றுயர்புலவருளுற்றியாப்பில்
> வைச்சிட்டசொற்பொருளேக்கணிமுதலவென்பர்தனிமிதிலைக்காந்தை
> விச்சிட்டமணவாளன்புகழெனின்மற்றிதன்றகைமைவிளம்பற்பாற்றே.

என்னும் துதிகவியோடு கையொப்பங்கொடுத்தனர். இச்செய்யுளையுங் கையொப்பத்தையுங் கொண்டுபோய் பெரியபெருமாள் சந்நிதியிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் காட்டி நடந்தசெய்திகளனைத்தும் சொல்ல, அவர்கள் ஆச்சரியப்பட்டு, திருத்தலத்திலுள்ள சமணர்கள் அனேகர் தமிழிற்பெயர்பெற்ற வித்துவான்களா யிருக்கின்றார்கள், அவர்களிடத்திலும் போய்க் கையொப்பம் வாங்கி வந்தால் நலமாயிருக்குமென்றார்கள். [தொடர்ச்சி.]

பழமொழிகள்.

4. அகமேறச் சுகமேறும்.
5. அகலவிருந்தால் பகையுமுறவாம்.
   தூரவிருந்தால் சேரவுறவு.
   கிட்டவிருந்தால் முட்டப்பகை.
   சேரவிருந்தால் செடியும்பகை.
6. அகோரதபசி விபரீதசோரன்.
7. அகோரதபசி விபரீதநிபுணன்.
8. அக்கரைமாட்டுக்கு இக்கரைபச்சை.

ஆரணியகாண்டம்.

சடாயுவுயிர்நீத்தபடலம்.

[௧௫௪-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

24.—தேவர் உம் மருள் கொள தெரிந்த மேனியான் - தேவர்களும் மயங்கும்படி தான் தெரிந்தெடுத்த ரூபத்தையுடையவன் [ராவணஸந்யாஸி], தோம் அறு சாலையின் வாயில் துன்னினான் - குற்றமற்ற பர்ணசாலையின் வாயிலை நெருங்கினவனாய், நா முதல் குழறிட நடுங்கு சொல்லினான் - அடி நாக்குக் குழறுதலினாலே நடுங்குகிற சொற்களால், யாவிர் இ இருக்கையுள் இருந்துளீர் என்றான் - இந்தப்பர்ணசாலைக்குள் இருக்கிற நீர் யார் என்று கேட்டான், எ - று.—வாசற்படியில் வந்துநின்று யாருள்ளே யிருக்கிறது என்று கேட்டான் என்பதுகருத்து. திரிந்தமேனியான் என்று பாடமாயின் (கபடத்தால்) மாறுபட்ட ரூபத்தையுடையவன் என்க.

25.—தோகையும் உம் - (சாயலில்) மயில்போன்ற சீதாப்பிராட்டியும், இ வழி தோம் இல் சிந்தனை சேகு அறு நோன்பினர் என்னும் சிந்தையாள் - இவ்வருகிலுள்ள குற்றமற்ற மனத்தையுடைய வயிரமற்ற தபஸியென்னும் கருத்துள்ளவளாய், பாகு இயல் கிளவியாள் - சர்க்கரைப்பாகின் இனியகுணமமைந்த சொல்லையுடையளாய் [இன்சொல்லளாய்], ஈண்டு ஏகுமின் என - இங்குவாருங்களென்று சொல்லி, பவளகொம்புபோன்று எதிர் வந்து எய்தினாள் - பவளக்கொடிபோலஎதிர்கொண்டு வந்தாள், எ - று.

26.—வெற்பிடை மதம் என வியர்க்கும் மேனியன் - ஒருமலையினிடத்தே மதஜலம் ஸ்ரவிப்பதுபோல வியர்க்கின்ற தேகத்தையுடையவனும், அற்பின் நல் திரை புரள் ஆசை வேலையன் - அன்பாகிய நல்ல அலைகள் புரளுகின்ற ஆசையாகிய கடலில் அமிழ்ந்திருப்பவனுமாகிய ராவணன், பொற்பினுக்கு அணியினை - அழகிற் கழகாயிருப்பவளும், புகழின் சேக்கையை - கீர்த்திக்கிருப்பிடமாயிருப்பவளும், கற்பினுக்கு அரசியை - கற்புக்கரசியாயிருப்பவளுமாகிய சீதாபிராட்டியை, கண்ணின் நோக்கினான் - தனது கண்களால் பார்த்தான், எ - று.—கண்ணின்நோக்கினான் என வேண்டாது கூறினார் பிராட்டியின் சௌந்தர்யாதிசயத்தை வற்புறுத்தற்கு.

27.—தூங்கல் இல் உருவினை சொல்லின் - வாடுதலில்லாத சரீரஸ்வபாவத்தை யாமெடுத்துச்சொல்லுமிடத்து, உம்பர் உம் ஓங்கிய அழகினாள் - மேலிடத்திலுமுயர்ந்ததாகிய பேரழகுடைய பிராட்டியாரது, உருவம்கண்டலும் - ரூபத்தைப்பார்த்தவுடனே, ஏங்கினன் வீர தோள்கள் வீங்கின மெலிந்தன - துயரப்பட்டவனாகிய ராவணனது வீரமாகிய தோள்கள் பூரித்தன இளைத்தன; மன நிலை யாது என்று உன்னுவாம் - அவனது மனத்தினது நிலைமை எத்தன்மையதென்று நினைத்துச்சொல்லுவோம், எ - று.—வீரத்தோள்கள் வீங்கினதற்குக் காரணம்பிராட்டியாரது பேரழகைக்கண்டதும், மெலிந்ததற்குக்காரணம் பெண்களின்பெருமையுமாம்.

28.—கண்ணின் மாலை - (ராவணனது) கண்வரிசை, (பிராட்டியாரது)

புனம் மயில் சாயலின் - புனத்திலுள்ளமயிலின் சாயலை யொத்தசாயலிலும், எழிலில் - அழகிலும், சுனை பூ நறை மடுத்து உண்டு இசை முரலும் தும்பியின் இனம் என களித்து உளது என்பது என் - சுனைகளிலுள்ள புட்பங்களது தேனை மிகுதியுமுண்டு இசைபாடுகின்ற வண்டுக்கூட்டம்போலக் களிப்படைந்திருந்தது என்று சொல்வது என்னபயனைத்தரும்; அவன் மனம் என களித்தது - அந்தப்பாவியினது மனம்போலக் களிப்படைந்தது, எ-று.—இசைமுரலுதல் களித்தகாலத்தேயாதலின் அதனை வண்டுக்கு அடையாக்கினார். தன்னியற்கை கெடாதமயில் என்பார் புனமயில் என்றார்.

29.—சே இதழ் தாமரை சேக்கை நீர்ந்து இவண் மேயவள் மணி நிற மேனி காணுதற்கு இங்கு இருபது ஏயும் ஏ - செவ்விதழ்களையுடைய தாமரைமலராகிய ஆசனத்தைவிட்டு இவ்விடத்தில் வந்திருப்பவளாகிய இத் திருமகளது ரத்நகாந்தியுள்ள திருமேனியைப்பார்ப்பதற்கு இப்போது நமக்குள்ள (இமைக்கின்ற) இருபதுகண்கள் அமையுமோ! இமைப்பு இல் நாட்டங்கள் ஆயிரம் இல்லை (ஏ) - இமைத்தலில்லாத ஆயிரங்கண்கள் நமக் கில்லையே, என்று அல்லல் எய்தினான்-என்றுநினைத்து மனவருத்தப்பட்டான், எ - று.—நாட்டங்கள் என்ப் பின்வருதலால் முன்னுள்ள இருபது என்னும் எண்ணலளவையாகுபெயராய்க் கண்களையுணர்த்தியது. பின் இமைப்பில் என்றதனால் இமைக்கின்ற என்பது வருவிக்கப்பட்டது. அல்லது 'இமைப்பின் + நாட்டங்கள்' எனப்பிரித்து இருபதுடனும், 'இமைப்பில் + நாட்டங்கள்' எனப்பிரித்து ஆயிரத்துடனுங்கூட்டிப் பொருளுரைப்பினும் அமையும். இல்லை என்றதற்குப்பின் இரக்கப்பொருட்டாகிய ஏகாரம் எஞ்சிநின்றது.

30.—நிரை வளை முன் கை நின்ற இ நங்கையின் கரை அறு நல் நலம் கடற்கு - வரிசையாக வளையலையணிந்த முன்கையோடு எதிர்நின்ற இந்தப் பெண்ணின் கரையில்லாத விலக்ஷணமான அழகாகிய கடலிற்றிளைத்தற்கு, புரை தபு தவத்தின் யான் படைத்த - குற்றமறுகைக்கேதுவான தவத்தினால் நான்பெற்றுள்ளனவாகிய, அரை கடை இட்ட மூ கோடி ஆயு உம் போதும் ஏ என்று உன்னினான் - அரையென்னுமெண்ணைக் கடையிலெழுதப்பெற்ற மூன்றுகோடியென்கிற ஆயுளும் போதுமா என்று நினைத்தான், எ - று.—நங்கை - பெண்மைக்குணங்கள்நிறைந்தவள். பிராட்டியைக்காணப்பெற்றமையால் தன்தவத்தைப் புரைதபுதவம் என்றான்.

31.—தேவர் உம் அவுணர் உம் தேவி மாரொடு உம் - தேவர்களும் அசுரர்களும் தங்கள் தங்கள் மனைவிமாரோடும், ஏவல் செய் தொழிலினர் - சொன்ன வேலைசெய்கின்ற தொழிலாளர்களாய் [தொழில் செய்யும்படி அழைத்தற்குரிய அடிமைசெய்யுவாளராய்], குடிமை செய்திட - குடியடிமை செய்யும்படி, மூ உலகம் உம் இவர் முறையின் ஆள - (சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்கின்ற) திரிலோகங்களையும் இந்தப்பெண்ணரசியார் கிரமமாக அரசு செய்யாநிற்க, யான் ஏவல் செய்து இனி உய்குவென் என்று உன்னினான் - நான் (இவளுக்கு) ஏவற்றொழிலைச்செய்து இனிமேல் பிழைப்பேன் என்று நினைத்தான், எ - று.—செயவெனெச்சம் இரண்டனுள்முன்

னது காரியப்பொருட்டாகிய எதிர்காலத்தது, பின்னது காரணகாரிய மிரண்டுமின்றிவந்தமையால் நிகழ்காலத்தது. ஏவல்-காரணவாகுபெயர். குடிமை - பரம்பரையாய்ச் செய்யும் அடிமை.

32.—உளைவு உறு துயர் முகத்து ஒளி இது ஆம் எனின் - உளைதல் மிகுந்த துக்கவேளையில் முகதேஜஸ்ஸானது இத்தன்மையதாயின், முளை எயிறு இலங்கிடும் முறுவல் என் படும் - முளைபோன்ற தந்தங்கள் ப்ரகாசித்தற்குரிய [புன்னகைசெய்யும்] காலத்தில் என்னவிதமாயிருக்கும்; தளை அவிழ் குழல் இவள் கண்டு தந்த என் இளையவட்கு என் அரசு அளிப்பென் என்று உன்னினன் - பூவரும்புகள் கட்டவிழ்தற்கிடமான கூந்தலையுடைய இவளைத்தேடிப்பார்த்து (எனக்கு)க் கொடுத்த என் தங்கைக்கு என்ன ரசாட்சியைக்கொடுப்பேனென்று நினைத்தான், எ - று.—முறுவல்என்பது இனிதிருக்குங்காலத்தை யுணர்த்துவதாகியவோர் குறிப்புச்சொல். இது என்பது குறிப்பு வினைமுற்று.

33.—ஆண்டையான் - அவ்விடத்தில்வந்தவனாய், அனையன உன்னி-அத்தன்மையானவிஷயங்களை நினைத்து, ஆசை மேல் மூண்டு எழு சிந்தனை முறை இலோன் தனை காண்டலும் - ஆசையானது மேன்மேலும் அதிகரித்துண்டாகின்ற மனத்தையுடைய முறைகேடனாகிய ராவணனைக் கண்ட மாத்திரத்தில், கண்ணின் நீர் துடைத்த கற்பினள் - தன் கண்ணினின்று சிந்தாநின்ற நீரைத்துடைத்துக்கொண்ட கற்புள்ள ஜாநகி, ஈண்டு எழுந்தருளும் என்று இனிய கூறினள் - இங்கே எழுந்தருளுக என்று இன்சொற் சொன்னாள், எ-று.—அனையன - குறிப்புவினைப்பெயர்; இனிய-என்பதும் அது. ஆசைமேல்மூண்டெழல் தகாதென்பார் முறையிலோன் எனவும், அச்சிந்தனை பயன்படாதென்பார் கற்பினள் எனவும் கூறினர்.

34.—எய்தலும் - (அந்த இன்சொற்களைக்கேட்ட ராவணசந்நியாசி அந்தப்பிரகாரம்) வந்தவுடனே, ஏத்தினள் - தோத்திரம்பண்ணி, ஈண்டு இருத்திர் என - இவ்விடத்தில் எழுந்தருளியிருக்க என்று சொல்லி, வேத்திரத்து ஆசனம் விதியின் நல்கினள் - பிரம்பினாலமைந்த ஆசனத்தை கிரமப்படி கொடுத்தாள்; மா திரிதண்டு அயல் வைத்த வஞ்சன் உம் பூ தொடர் சாலையின் இருந்த போழ்தின் - பெருமைபொருந்திய திரிதண்டத்தைப் பக்கத்தில் வைத்த கபடஸந்யாஸியாகிய ராவணனும் அழகு பொருந்திய பர்ணசாலையில் உட்கார்ந்த ஸமயத்தில், எ - று.—இது குளகம். பூ தொடர் என்பதற்குப் பூமாலைகளைத் தொங்கக் கட்டிய எனினும் பொருந்தும். அந்தப்பக்ஷத்தில் பூ என்பது கருவியாகுபெயர்; சினையாகுபெயரெனக் கோடலுமாம். ஆசனம் விதியினல்கி எனவே முன்பு அர்க்கியபாத்தியாசமனீயங்கள் கொடுத்தமையும் பெறப்பட்டது ; அதுவே முறையாதலின்.

35.—பாதகம் கடும் தொழில் அரக்கனை காணும் கண்ணின் - பாபத்துக்கேதுவாகிய க்ரூரமான வ்யாபாரத்தை நாடிவந்த அரக்கனை [ராவணனை]க்கண்டவிடத்து, மலைகள் உம் மரன் உம் நடுங்கின - பர்வதங்களும் வ்ருக்ஷங்களும் சலித்தன; பறவை உம் விலங்கு உம் நா அவிந்து அடங்கின - பக்ஷிகளும் மிருகங்களும் சப்தியாதொடுங்கின, பாம்பு உம் அஞ்சின படம் குறைந்து ஒதுங்கின - சர்ப்பங்களும் பயந்தனவாய்ப் படத்தைச் சுருக்கிக்கொண்டு ஒதுங்கிப்போயின, எ - று.—விலங்கு - மக்கள் முதலியோரைக்காணின் விலகிச்செல்வது என்னும் பொருளில் கர்த்தாப் பொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயர். படம் - உவமையாகுபெயர்.

36.—இருந்தவன் - (அப்போது) அவ்விடத்தில் உட்கார்ந் திருந்தவன் [ராவணன்], இ இருக்கை யாவது - இந்த ஆச்ரமம் யாது [என்ன ஆசிரமம்] ; இங்கு உறை அரும் தவன் யாவன் - இவ்விடத்தில் வசிக்கிற அரிய தபோதனன் எவன், நீர் யாரை - நீர் யார், என்றலும் - என்று கேட்ட மாத்திரத்தில், விருந்தினர் இ வழி விரகிலார் என - இந்த அதிதியர் [ராவணசந்யாசி] இவ்விடத்திற்கு இதுவரையில் வந்திலர் என்றுநினைத்து; பெரும்தடம் கண்ணவள் பேசல்மேயினள் - அகன்று நீண்ட கண்களையுடைய ஜாநகி பேசத்தொடங்கினாள், எ - று.—விரகு என்பது விரவு என்பது போன்ற முதனிலைத்தொழிற்பெயர். யாவது - என்பதில் வகரம் தோன்றியது புணர்ச்சியில்விகாரம். யாரை, ஐ-சாரியை. யார் என்பது ஐம்பாலூவிடத்துக்கும் பொது. பெருந்தடங்கண் என்பதற்கு மிகப்பெரியகண் எனவும் பொருள் கூறலாம்.

37.—பெருமையீர் - தபோமகிமையையுடையவரே! தயரதன் தொல் குலம் தலைவன் - தசரதசக்கரவர்த்தியின் பழமையான குலத்துக்குத் தலைவராயவதரித்தவர், உயர் குலத்து அன்னை சொல் உச்சி ஏந்தினன் - உயர் குடிப்பிறப்பினராகிய தாயாருடைய [கைகேயியினுடைய] வார்த்தையை சிரஸாவஹித்து, தம்பியோடு - தந்தம்பியோடு, அயர்வு இலது இ வழி உறையும் - தளர்ச்சியில்லாமல் இவ்விடத்தில் வசிக்கிறார், அன்னவன் பெயரினை தெரிகுதிர் என்றாள் - அவருடைய திருநாமத்தை யறிந்துகொள்ளும் என்று சொன்னாள், எ - று.—இலது - குறிப்புவினையெச்சம், உறையும் என்னும் வினையை விசேடித்துநின்றது. இதனைக் குறிப்புவினையாலணையும் பெயராக்கொண்டு வழிக்கு விசேடணமாக்கினு மமையும். தயரதன் றொல்குலம் விளக்கமடைதற்குக் காரணம் இவனாதலின் தயரதன் றொல் குலத்தலைவன் என்றார். தெரிகுதிர், இதில் கு - சாரியை. கற்புடைமகளிர் தங்கணவர் முதலியோர் பெயர்கூறலாகாதென்னும் தருமநூல் நெறிப்படி இங்கு பிராட்டியார் ஸ்ரீராமபிரானது பெயரைக்கூறாதே குறிப்பித்து அன்னவன்பெயர் தெரிகுதிர் என்றாரென்க.

38.—கங்கை நீர் கெழுவு நாட்டிடை ஒரு முறை நண்ணினேன் - கங்கைநீர்சூழ்ந்தநாட்டில் [கோஸலநாட்டில்] ஒருதரம் வந்திருந்தேன்; கேட்டனென் - (அப்பொழுது அவன்பெயரைக்) கேள்விப்பட்டிருக்கிறேன், கண்டிலென் - (அவனைப்) பார்த்திலேன் ; காட்டிடை அரும் பகல் கழிக்கின்றீர் - காட்டினிடத்தில் கழித்தற்கரிய நாட்களைக் கழிக்கின்றவரும், மலர் வாள் தடம் கண்ணினீர் - தாமரைமலரையும் வாளையும்போன்ற விசாலமாகிய கண்களையுடைய ஆகிய நீர், யாவன் மா மகள் என்றான் - யாருடைய திருமகள் என்று கேட்டான், எ - று.—கண்ணினீர் என்பதை கண்ணின் நீர் எனப்பிரிந்து கண்களையுடைய நீவிர் எனவும் கொள்ளலாம். நீர்

மாமகள் என்பது இடவழுவமைதியும் பால்வழுவமைதியுமாம். இராவண ஸந்யாஸி 'கங்கைநீர் கெழுவுநாட்டிடை யொருமுறைநண்ணினேன்' என்று ஸ்ரீராமன் அவதரிப்பதற்குமுன் அநரண்யமகாராஜாவோடு போர்செய்யப்போனதையும், 'கேட்டனன்' என்று அந்தராஜாகோபித்து ஸ்ரீராமன் கையாலிறப்பாயென்றபோது இப்பெயரைக் கேட்டதையும், 'கண்டிலென்' என்று அப்பொழுது ஸ்ரீராமன் பிறக்கவில்லையென்பதையும் கூடமாக சீதாதேவிக்குச்சொன்னான். இவ்விஷயத்தையெல்லாம் **புராணநாமவிவரணம்** என்னும்தலைப்பில் இராவணன் என்னும் பெயரிற்காண்க.

39.—(அதைக்கேட்ட) மறு இல் கற்பினாள் - களங்கமில்லாத கற்பையுடைய சீதாதேவி, (அந்த ராவண ஸந்யாஸியை நோக்கி), அனகம் ஆம் நெறி படர் அடிகள் - பாபரஹிதமான நன்னெறியில் ஒழுகுகின்ற ஸ்வாமிகளே, நும் அலால் நினைவது வேறு ஓர் தெய்வம் இலாத நெஞ்சினான் சனகன் மா மகள் - உங்களையல்லது [பரமஞானிகளையல்லது] நினைத்தற்குரியதாகிய வேறொரு தெய்வத்தையுடையதல்லாத மநஸ்ஸை யுடையவராகிய சனகமஹாராஜருக்குப் புத்திரி, பெயர் சனகி - (என்) பெயர் ஜானகி, யான் காகுத்தன் மனைவி - நான் காகுத்தனுக்கு பார்யை, என்றனள்-என்று மறுமொழி சொன்னாள், எ - று.—கற்பு - பாதிவிரத்யம். தெய்வம்-சொல்லால் அஃறிணையாதலின் 'நினைவது' என்றார். தவநெறியில் ஒழுகலாற்றும் சனகனுக்குரிய மா என்னும் விசேடணத்தைத் தன்மேலேற்றி மாமகளென்றது ஓர் மரபுவழுவமைதி. ஜானகி எனற்பாலது ஜனகி எனக்குறுகியது; ஜனகன் மகள் என்பது பொருள். காகுத்தன் - ககுத்தன் என்பவன் மரபிற்றோன்றினவன்; இராமன். சனகன், ககுத்தன் என்பவர்களைக் குறித்து **புராணநாமவிவரணம்** என்னுந் தலைப்பில் அவ்வப்பெயரிற் காண்க.

40.—அ வழி அனையன உரைத்த ஆய் இழை-அவ்விடத்தில் அந்தவார்த்தைகளைச் சொல்லிய சீதாப்பிராட்டி (அந்தராவண ஸந்யாஸியைநோக்கி), வெம் வழி வருந்தினிர் விளைந்த மூப்பினிர் இ வழி இருவினை கடக்க எண்ணினிர் - க்ரூரமான வழி நடந்து ஆயாசமடைந்தவரும் உண்டாகிய முதுமைப்பருவத்தையுடையவரும் இப்போது இருவினைகளைவெல்ல நினைத்தவரும் ஆகிய நீர், எ வழி நின்று உம் இங்கு எய்தினீர் என்றாள் - எவ்விடத்தினின்றும் இவ்விடத்திற்கு வந்தீர் என்று கேட்டாள், எ - று.—ஆயிழை-சீதாப்பிராட்டி; ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்தவளென்று வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இருவினை - நல்வினை தீவினையென்பன: இவ்விரண்டும் இருப்புவிலங்கும் பொன்விலங்கும் போலப் பந்தித்துப் பிறவிக்கேதுவாமாகலின் இருவினை கடக்கவென்றார். "இருள் சேரிருவினை" என்றார் பெரியோரும்.

41.—இந்திரற்கு இந்திரன் - (போகாதியநுபவங்களில்) இந்திரனுக்கும் இந்திரனை யொத்தவனும், எழுதல்ஆகலா சுந்தரன்- (ஓவியக்காரராலும்) எழுதப்படாத அழகுள்ளவனும், நான் முகன் மரபில் தோன்றினான் - பிரஹ்மகுலத்திற்பிறந்தவனும், அந்தரத்தோடு உம் எ உலகு உம் ஆள்கின்றான் - ஸ்வர்க்காதி ஸகல லோகங்களையும் ஆள்கின்றவனும், மந்திரத்து அருமறை

வைகும் நாவினான் - மந்திரத்தோடுகூடிய (ஓதியுணர்தற்கு) அருமையாகிய வேதங்கள் தங்கிய நாவையுடையவனும், எ - று.—அந்தரம் - ஆகுபெயர்.

42.—ஈசன் இருந்த பேர் இலங்கு மால் வரை ஆண்டு ஊசிவேரொடு உம் பறித்து எடுத்த ஊற்றத்தான் - பரமசிவன் எழுந்தருளியிருந்த பெயரினால் பிரஸித்தியடைந்த பெரியமலையை [கைலாஸபர்வதத்தை] பூர்வத்தில் ஊசிவேரோடே [சல்லிவேரோடே] கல்லியெடுத்த ஆற்றலுள்ளவனும், ஆசைகள் சுமந்த பேர் அளவு இல் யானைகள் பூசல் செய் மருப்பு இற பொடி செய் தோளினான் - திசைகளைச் சுமந்துகொண்டிருக்கிற பெரிய (பலத்திற்கு) அளவில்லாத யானைகளுடைய போர் புரிதற்குரிய தந்தங்கள் ஒடியப் பொடித்து நீறாக்கின புஜங்களையுடையவனும், (ஆகிய ஒருவன் உளன்), எ - று.—'ஆண்டிருந்த' என்பதற்கு ஆண்டுகொண்டிருந்த என்று பொருளுரைப்பினும் அமையும். ஆசை - வடசொல். ஊசிவேர் என்னுமிடத்து ஊசி என்பது சிறுமைப் பண்பையுணர்த்துவதாகிய ஓர் குறிப்புச்சொல். பறித்தெடுக்கும் என்றது அவனது ஆற்றலின் பெருமையையுணர்த்தி நின்றது.

43.—கடைத்தலை நிறைந்து நிற்பவர் தேவர் ஏ - (அவனது) தலைவாயிலில் (ஏவல்செய்ய) நிறைந்து நிற்பவர்கள் தேவர்களே; அவன் பெருமை சொல்லும் கால் சொல் பகும் - அவன்பெருமையை யெடுத்துச்சொல்லுமிடத்துச் சொற்கள் (தம்பொருளாகிய அவனதுப்ரதாபத்தைத் தாங்கமாட்டாமல்) பிளவுபடும்; கற்பகம் முதலிய நிதியம் கையன - கற்பகமுதலியநிதிகளும் அவனது வசப்பட்டிருக்கின்றன; மானம் நீர் பொன் இலங்கை நகர் பொற்பு அகம் - பெருமைபொருந்திய நீர் [சமுத்திரம்] சூழ்ந்த பொன்மயமான லங்காபட்டணம் (அவனுக்கு) அழகான உறைவிடம், எ - று—அவன் பெருமையைச் சொல்லு மாற்றலின்மையின் 'சொற்பகும்' என்றார்.

44.—வானம் துறந்து - சுவர்க்கலோகத்தை நீங்கிவந்து, அவன் தன் மாட்சியால் - அவனது (ஆணையின்) பெருமையால், ஊனம் இல் அடைப்பை (ஏந்துதல்) கால் வருடல் ஒண் செருப்பு ஆனவை (தொடுத்தல்) முதல் தொழில் - குறைவில்லாத அடைப்பை ஏந்துதல் கால் வருடுதல் அழகிய செருப்புத்தொடுத்தல் முதலான வேலைகள், மேனகை திலோத்தமை முதல ஏழையர் அவர ஆகும் - மேனகை திலோத்தமை முதலிய அப்ஸரஸப் பெண்களாகிய, அவர்களுடையனவாம், எ - று—ஏந்தல், தொடுத்தல் என்பன எஞ்சிநின்றன. மேனகை, திலோத்தமை என்பவர்கள் அப்ஸரஸப் பெண்கள். மேனகை என்பது மேனகா என்பதன் திரிபு. எல் என்பது ஏல் என எதுகை நோக்கி நீட்டல் பெற்று, நகைத்திலோத்தமை எனற்பாலது சந்தவின்பநோக்கி நகைதிலோத்தமை யெனத் தொகுத்தல் பெற்று நின்றதெனக் கொண்டு ஒளிபொருந்திய பற்களையுடைய திலோத்தமை எனவுமுரைக்கலாம். அவர - என்பது பொருளடியாகப் பிறந்த பலவின் படர்க்கைக்குறிப்பு வினையாலணையும் பெயர். வந்து என்னும் வினையெச்சம் ஏந்தல் வருடல் முதலிய தொழிற் பெயர்களைக் கொண்டது.

45.—சந்திரன் இரவி என்பவர்கள்தாம் அவன் சிந்தனை வழிநின்று திரி

வர் - சந்திர சூரியர் என்று சொல்லப்படுவோர் அவனது நினைப்பின் வழியே சஞ்சரிக்கிறார்கள்; தேசு உடை இந்திரன் முதலிய அமரர் ஈண்டு அவன் கந்து அடு கோயிலின் காவலாளர் - தேஜஸ்ஸையுடைய (சுவர்க்கலோகத்திலுள்ள) இந்திராதி தேவதைகள் இந்தலோகத்தில் அவனது (யானைகள்) கட்டுத்தறியை முறிக்கின்ற அரண்மனையின் காவலாளிகளாயிருக்கிறார்கள், எ - று.—கந்தடு என்பதன் வினைமுதலாகிய யானை எஞ்சிநின்றமையின் அது வருவித்துரைக்கப்பட்டது. கந்தடுகோயில் என்பதை கம் - தடு-கோயில்எனப் பிரித்து சுவர்க்கலோகத்தாரைத் தடுக்கின்ற கோயில் எனவும் பொருள்கொள்ளலாம். கோயில்—இலக்கணப்போலி. என்பவர்கள் - இதில் படுவிகுதி தொகுத்தல்.

46.—பொன் நகரத்தின் உம் - சுவர்க்கலோகத்திலும், பொலம் கொள் தொல் நாகர் தம் நகரத்தின் உம் - அழகைக்கொண்ட பழமையான நாகருலகத்திலும், தொடர்ந்த மா நிலத்து எ நகரத்தின் உம் - (அவ்விரண்டனோடு) தொடரப்பெற்ற பெரிய நிலவுலகத்திலுள்ள எந்நகரத்திலும் (உள்ள இனியபொருள்களைப்பார்க்கிலும்,) நவை இலாதன இனிய - குற்றமற்றனவாகிய இனியபொருள்கள், ஈண்டு அவன் நல் நகரத்தன - இவ்விடத்தில் அவனது விலக்ஷணமான (லங்கா) நகரத்தின்கண்ணுள்ளன, எ - று.—தொடர்தல் மேற்புறம்சுவர்க்கத்தையும் கீழ்ப்புறம் நாகலோகத்தையும் இசைந்திருத்தல். இனிய - பண்படியாகப்பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர்.

47.—தாள் உடை மலருளான் தந்த அந்தம் இல் நாள் உடை வாழ்க்கையன் - நாளத்தையுடையதாமரைமலரில் வஸிக்கிற பிரமதேவன் பிரஸாதித்த முடிவில்லாத [அதிதீர்க்கமான] ஆயுளுட்களோடுகூடிய வாழ்வையுடையவனும், நாரி பாகத்தன் (தந்த) வாள் உடை தட கையன் - மலைமகளமைந்த ஒருபாகத்தையுடையவன் [பரமசிவன்] பிரஸாதித்த வாளாயுதத்தையேந்திய பெரிய கையையுடையவனும், வாரி வைத்த வெம் கோள் உடை சிறையினன் - பிடித்துவைத்த வெவ்விய கிரஹங்களைக் கொண்டிருக்கிற சிறைச்சாலையை யுடையவனும், குணங்கள் மேன்மையான் குணங்கள் மேம்பட்டவனும், எ - று.—நாரி - வடசொல். அந்தமில் நாள் என்றது கீழ்ச்சொன்ன 'அரைகடையிட்டமுக்கோடியாயுளை'. 'வாரி வைத்த வெங்கோளுடைச்சிறையினன்'—இந்த விஷயம் கீழ் மாரீசன்வதைப் படலத்தில் 4 - வது பாட்டிலும் கூறப்பட்டிருப்பது காண்க. குணங்கள் மேன்மையான் - இனைவழுவமைதி.

48.—வெம்மை தீர் ஒழுக்கினன் - குற்றமற்ற (நல்) ஒழுக்கத்தை யுடையவனும், விரிந்த கேள்வியன் - விஸ்தாரமான கேள்வியையுடையவனும், செம்மையோன் - நடுநிலைமையுடையவனும், மன்மதன் திசைக்கும் செவ்வியன் - காமனும் கண்டுபிரமித்தற்குரிய கட்டழகனும், எம்மையோர் அனைவர் உம் இறைவர் என்று எனும் மும்மையோர் பெருமை உம் முற்றும் பெற்றியான் - எவ்வுலகத்தாரும் தலைவரென்று பாவிக்கிற மும்மூர்த்திகளுடைய பெருமையும் நிறைந்த தன்மையுடையவனும், எ - று.—கேள்வியாவது - கேட்கப்படு நூற்பொருள்களைக் கற்றறிந்தார்கூறக்கேட்டலாம். மன்மதன் என்பதில் உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். மும்மையோர் பெருமை- படைத்தல், காத்தல், அழித்தல் என்பன.

49.—அனைத்து உலகின் உம் அழகு அமைந்த நங்கையர் எனை பலர், அவன் தன் அருளின் இச்சையோர் நினைத்து அவர் உருக உம் உதவ நேர்கிலன் - எல்லாவுலகங்களிலும் அழகு நிறைந்தமாதர்கள் எத்தனையோ பேர் அவனது கிருபையிலே அபேக்ஷையுள்ளவராய்எண்ணி அவர்களுருகுவதைக் கண்டும் அவர்களிடத்து கிருபை செய்யாதிருப்பவனும், மனக்கு இனியாள் ஒரு மாதர் நாடுவான் - தன்மனத்துக்கினியளாகிய ஒருமங்கையைத்தேடிக் கொண்டிருக்கிறவனும், எ - று.—ஒருமாதர் என்றமையால் மாதர் என்பது பல்லோர்படர்க்கைப் பெயரன்று; மாது என்பதிலுள்ள குற்றியலுகரத்துக்கு அர் போலியாய்வந்தது. மனக்கு - இதில் சாரியை அத்து தொகுத்தல்; "மாடக்குச்சித்திரமும்" என்பதிற்போல.

50.—ஆண்டையான் அரசு வீற்றிருந்த அ நகர் வேண்டி யான் சில் பகல் உறைய வேண்டினேன் - (ஆகிய) அவன் அரசனாக வீற்றிருக்கிற அந்த நகரத்தை [லங்காநகரத்தை] விரும்பி நான் சிலநாள் அங்குவாசம்பண்ண அபேக்ஷித்தவனாய், நீண்டனென் இருந்து அவன் பிரிந்த நெஞ்சினேன் மீண்டனன் என்றனன் - காலநீட்டித்திருந்து அவனைப்பிரிந்த மனமுள்ளவனாய்த் திரும்பிவந்தேன் என்று சொன்னான், வினையம் உன்னுவான்- உபாயத்தையேசிந்தித்துக்கொண்டிருக்கிறவ்ன் [ராவணஸந்யாஸி], எ-று.—குணங்கள் மேன்மையானாதலின் அவனைப்பிரிந்தபிரிவு என் நெஞ்சைக்கவற்றுகின்றதென்பான் பிரிந்தநெஞ்சினேன் என்றான். இங்கு வினையம் என்றது பிராட்டியாரைக்கொண்டு போதற்குரிய உபாயத்தை.

51.—(அதைக் கேட்ட சீதாபிராட்டியார்) உடலம் உம் மிகை என்று எண்ணுவீர் - சரீரமும் அதிகமென்று நினைக்கிறவரே! வேதம் உம் வேதியர் அருள் உம் வெஃகலா - வேதங்களையும் அந்தணரது அருளையும் விரும்பாமல், சேதனை மன் உயிர் தின்னும் தீ வினை பாதகம் அரக்கர் தம் பதியின் வைகுதற்கு எது என் - அறிவு நிலைபெற்றிருக்கின்றவுயிர்களை (க் கொன்று) தின்னும் தீச்செயலால் பாபத்தையடைகிற ராக்ஷஸரிடத்தில் தங்கியிருத்தற்குக் காரண மென்ன? எ - று.—சேதந என்னும் வடமொழி சேதனை எனத் திரிந்தது. தின்னும் என்னும்காரணப்பொருட்டாகியபெயரெச்சம் தீவினை என்னும் காரியப்பொருட்டாகியபெயர்கொண்டது. பாதகம்-வடசொல்.

52.—வனத்திடை மாதவர் மருங்கு வைகலிர் - அரண்யத்தில் மஹாதபஸ்விகளின்பக்கத்தில் வஸிக்காதவராயும், புனம் திரு நாட்டிடை புனிதர் ஊர் புக நினைத்திலிர் - காடு சூழ்ந்த நல்லநாட்டிலே மனத்தூய்மையுடையாரது ஊர்களிற்போய் வஸிக்கநினையாதவராயும், அறம் நெறி நினைக்கிலாதவர் இனத்திடை வைகினிர் - தர்மமார்க்கத்தை எண்ணாதவரது [ராக்ஷஸரது] கூட்டத்தினடுவில் தங்கினவராய், என் செய்தீர் என்றாள் - என்ன காரியம் செய்தீர் என்று சொன்னாள், எ - று.—நாட்டுக்குரிய அரண் நான்கனுள் காடு ஒன்றாதலின் புனத்திருநாடு என்றார். என் என்பது இழிவின் மேலது.

53.—மங்கை அஃது உரைத்தல் கேட்ட வரம்பு இலான் - சீதாபிராட்டியார் அந்த வார்த்தை சொல்லக் கேட்ட வரம்பற்றவனானவன் [ராவணஸந்யாஸி], வெம் கண் வாள் அரக்கர் மறுவில் தீர்ந்தார் என்ன வெருவலம்- க்ரூரதிருஷ்டியையும் வாளாயுதத்தையுமுடைய ராக்ஷஸர் குற்றத்தினின்று நீங்கினவர்கள் என்றுநினைத்து அஞ்சாதிருக்கிறேம்; திங்கள் வாள் முகத்தினாய் - முழுமதிபோன்ற ஒளிபொருந்திய முகத்தையுடையவளே! (அவர்கள்) அ தேவரின் தீயர் அல்லர் - அந்ததேவர்கள்போலக் கொடியரல்லர்; (ஆகையால்) எங்கள் போலியர்க்கு நிருதர் ஏ நல்லார் என்றான் - எங்களையொத்தவர்களுக்கு ராக்ஷஸரே நல்லவர்கள் என்றுசொன்னான், எ-று.— போலும் - அசை. நிருதரோ, ஏ - தேற்றம்.

54.—அன்ன சொல்ல - அப்படிப்பட்ட சொற்களை (ராவண ஸந்யாஸி) சொல்ல, சேயிழை - (கேட்ட) சீதாபிராட்டியார், மாயம் வல் அரக்கர் வேண்டு உரு வரிக்க வல்லர் என்பது ஆயவள் அறிதல் தேற்றாள் ஆகலின்- மாயஞ்செய்ய வல்லரான கொடிய அரக்கர் தாம்வேண்டிய ரூபங்களைத் தரிக்கவல்லவரென்பதை அந்தச் சீதாபிராட்டி அறியமாட்டாளாதலின், அயல் ஒன்று எண்ணாள் - மற்றொன்றையும் நினையாதவளாய், தீயவர் சேர்தல் செய்தார் தூயவர் அல்லர் - தீயோரை நட்புசெய்தவர்கள் (தாம்தூயவரேயாயினும்) தூயவரல்லர்; சொல்லின் தொல் நெறி தொடர்ந்தோர் என்றாள் - சொல்லுமிடத்துப் பழைய திநெறியிற் செல்வோரேயாவர் என்று சொன்னாள், எ - று.—சேயிழை - செம் பொன்னணியைத் தரித்தவள் என்னும் பொருளதாதலின் ஓர்குறிப்புச்சொல்; பண்புத் தொகைப்புறத் துப்பிறந்த அன்மொழித்தொகை யென்னவுமாம். வருவிக்க என்பது வரிக்க என உகரமும் வகரமும் தொகுத்தது. ஆயவள்=அ+அவள்.

55.—அயிர்த்தனள் ஆகும் என்று ஓர் ஐயுறவு அகத்து கொண்டான் - இவள் சந்தேகித்தாளாகுமென்று ஒரு சந்தேகத்தை (தன்) மனதிற் கொண்டு, பெயர்த்து அது துடைக்க எண்ணி பிறிது உற பேசல் உற்றான்-மறுபடியும் அந்த சந்தேகத்தை நீக்க நினைத்து வேறொன்றில் மனஞ்செல்லுமாறு பேசத் தொடங்கினான்; மயக்கு அரு உலகம் மூன்றின் வாழ்பவர்க்கு - மயக்கமில்லாத மூன்று லோகங்களில் வசிப்பவர்க்கு, அனைய வல்லோர் இயற்கையின் திரியின் அல்லால் - அப்படிப்பட்ட வல்லவர்களாகிய ராக்ஷஸரது சுபாவத்தோடு பொருந்திச் சஞ்சரித்தாலன்றி, இயற்றல் ஆம் நெறி ஏன் என்றான்- (அதனின் வேறாகச்) செய்யத்தக்கதாகிய ஒரு நல்வழி என்ன இருக்கிறது என்று சொன்னான், எ - று.—ஐயுறவு, ஐயுறு - பகுதி; அது ஐயம்+உறு என்று இரண்டு சொற்சேர்ந்தது; காமுறு (காமம்+உறு), ஏமுறு (ஏமம்+ உறு) முதலியவைபோல.

56.—திறம் தெரி வஞ்சன் அ சொல் செப்பலும் - அவளது மன நிலையையறிந்த வஞ்சகனாகிய ராவணன் அந்தச் சொல்லைச் சொன்னவுடனே, செப்பம் மிக்காள் - செவ்வைக் குணங்களிற் சிறந்தவளாகிய சீதாபிராட்டி, அறம் தரு வள்ளல் ஈண்டு இங்கு அரு தவம் முயலும் நாளுள் - தர்ம மார்க்கங்களை விருத்திசெய்கிற உதாரசீலனாகிய தாசரதி இவ்வுலகத்தில் இந்த

அரணியத்திலே அரிய தவத்தை முயன்று செய்யுங் காலத்துக்குள்ளே, மறம் தலை திரிந்த வாழ்க்கை அரக்கர் தம் வருக்கத்தோடு உம் இறந்தனர் முடிவர் - பாபவழியிற் சஞ்சரிக்கிற வாழ்க்கையையுடைய இராக்கதர் தமது வம்சத்தோடு மாண்டொழிவார்கள், பின்னர் உலகு இடர் இலை என்றாள்- பிறகு உலகத்தில் துன்பமேயில்லை என்று சொன்னாள், எ - று.—மறத்தலை எனற்பாலது மறந்தலையென எதுகை நோக்கி மெலித்தது.

57.—மான் அவள் உரைத்தலோடு உம் - மான் போன்ற அந்த சீதை இப்படி சொன்னவுடனே, (ராவண சன்னியாசி அவளைநோக்கி), மீன் என மிளிரும் கண்ணாய் - கயல்போல் மிளிருங் கண்களையுடையவளே! மானவர் அரக்கர் தம்மை வேர் அற வெல்வர் என்னின் - மனுஷ்யர் ராக்ஷஸரை மூலமற [நிர்மூலமாகும்படி] வெல்வாராயின், யானையின் இனத்தை எல்லாம் இள முயல் கொல்லும் - யானைக்கூட்டத்தை யெல்லாம் ஒருசிறுமுயல் கொன்றுவிடும்; பின்னும் - மேலும், கூன் உகிர் மடங்கல் ஏற்றை குருளை மான் கொல்லும் என்றான் - வளைந்த நகங்களையுடைய ஆண்சிங்கத்தை ஒரு மான்குட்டி கொன்று விடும் என்று சொன்னான், எ - று.—மானவள் - மேம்பாட்டையுடையவளாகிய பிராட்டி எனினுமமையும். மானவர்-வடசொல். மிளிர்தல் - இடம் வலங்கொண்டு பிறழ்தல்.

58.—மின் திரண்டால் அனைய பங்கி விராதன் உம் - மின்னற் கொடிகள் திரண்டிருந்தாற் போன்ற மயிரையுடைய [செம்பட்டைமயிரையுடைய] விராதனென்பவனும், வெகுளி பொங்க கன்றிய மனத்து வென்றி கரன் முதல் கணக்கிலோர் உம் - (சூர்ப்பணகையின் பரிபவங்கண்டு) கோபம் அதிகப்படப் புழுங்கிய மனத்தையுடைய கரனும் முதலான எண்ணிறந்த அரக்கரும், பொன்றிய பூசல் ஒன்று உம் கேட்டிலிர் போலும் என்றாள்-மடிந்த யுத்தங்களைப்பற்றி ஒருசிறிதும் கேள்விப்பட்டீரில்லை போலும் என்று சொன்னாள்; அன்று அவர்க்கு அடுத்தது உன்னி - அன்றைக்கு அந்த ஸ்ரீராமருக்கு நேர்ந்ததை நினைத்து, அருவி மழை கண்ணீர் சோர்வாள் - அருவிபோலக் குளிர்ச்சியாகிய கண்ணீருகுப்பவள் [சீதாபிராட்டி], எ - று.—போலும் - ஐயப்பொருட்டாகிய வோரிடைச்சொல். விராதன், கரன் என்பவர்களைப்பற்றிப் புராணநாமவிவரணம் என்னுந் தலைப்பில் காண்க.

59.—வாள் அரி வள்ளல் தன்னால் - ஒளிபொருந்திய சிங்கத்தையொத்த உதாரசீலனாகிய சக்கிரவர்த்தித்திருமகனால், இலங்கை மா நிருதர் எல்லாம் கேளொடு மடியும் ஆறு உம் - இலங்கையிலுள்ள பெரிய ராக்ஷஸரென்கிற யானைகளெல்லாம் தஞ்சுற்றத்தோடு மடியும் விதத்தையும், வானவர் கிளரும் ஆறு உம் - தேவர்கள் உயரும் விதத்தையும், நாளை ஏ காண்டிர் அன்று ஏ - நாளைக்கே காண்பீரேயாவீர்; மீள் அரும் தருமம் தன்னை பாவம் வெல்லும் ஓ - மீளுதலில்லாத தர்மத்தை பாவம் ஜயிக்குமா? நவை இலிர் உணர்கிலீர் ஓ என்றாள் - மாசற்ற முனிவரே நீர்இதனை யறிந்திலீரோ என்று சொன்னாள், எ - று.—வள்ளலை வாளரி என்றதனால் ராக்ஷஸராகிய யானைகளென்றுரைக்கப்பட்டது. கேள் - பண்பாகுபெயர். நாளையே, ஏ - தேற்றம். காண்டிர் - துணிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகவந்த காலவழு

வமைதி. அன்றே என்னும் இடைச்சொல் தேற்றப்பொருளது. முன்னுள்ள ஓ - வினா; பின்னது - எதிர்மறை. தர்மத்துக்கு மீட்சியின்மையாவது - ஒருவர் தடுப்பினும் தடைபடாதுயர்தல்.

60.—தேனிடை அமுது அளாய அன்ன மெல் சில சொல் மாலை - தேனுடன் அமுதத்தைக் கலந்தாற்போன்ற மிருதுவான மிதமாகிய (சீதாதேவியின்) சொற்கூட்டமானது, தான் உடை செவிகளூடு தவழுற - தானுடைய காதுகளில் நுழைந்தமாத்திரத்தில், தளிர்த்து வீங்கும் ஊன் உடை உடம்பினான் உம் - புளகித்துப் பூரிக்கின்ற மாமிசத்தையுடைய சரீரமுள்ள ராவணனும், உரு கெழு மானம் ஊன்ற - ஒளிபொருந்திய [வெம்மையாகிய] அபிமான மேலிட, மானிடர் வலியர் என்ற மாற்றத்தால் சீற்றம் வைத்தான்- மனிதர்கள் [ராமலக்ஷ்மணர்கள்] வலியவரென்று (சீதை) சொன்ன சொல்லினால் கோபத்தை மனதில் வைத்தான், எ - று.—தன்கோபம் வெளிப்படின் அவள் ஐயுறுவாள், அதனால் தான் கருதிவந்த காரியத்துக்குக் கெடுதியுண்டாமாதலின் சீற்றம்வைத்தான் என்றார்.

61.—சீறினன் உரை செய்வான் - (ராவணஸந்யாஸி) இவ்வாறு கோபித்துச்சொல்லுகிறான்; அ சிலை வலி புல்லியோர்கட்கு - அந்த வில்லாற்றலில் அற்பராகிய கரதூஷணாதியர்க்கு, ஒரு மனிதன் ஈறு செய்தான் என்று எடுத்து இயம்பினாயேல் - ஒருமனுஷ்யன் முடிவை யுண்டாக்கினானென்று சிறப்பித்துச்சொன்னாயாயின், நாளை ஏ தேறுதி - நாளைக்கே நீ தெளிவாய்; அ இருபது திண் தோள் வாடை வீறிய பொழுது பூளை வீ என வீவன்-அந்த ராவணனது பலமான இருபது புஜங்களின் காற்றானது வீசின் காலத்தில் பூளைப்பூ [அல்லது இலவம்பஞ்சு] போல (அந்தமனிதன்) பறந்தோடுவன், எ - று.—கரதூஷணாதியரைக் கொன்றது ஸ்ரீ ராமபிரானொருவனேயாதலின் வீவன் என ஒருமையாற் கூறினார். தான் உடை என்பது எழுவாய்த்தொகாநிலைத்தொடர். உடை - குறிப்புப்பெயரெச்சம்.

62.—மேருவை பறிக்க வேண்டின் - மேருபர்வதத்தை வேரோடு பறிக்க விரும்பினாலும், விண்ணினை இடிக்க வேண்டின் - அண்ட கடாகத்தை இடிக்க விரும்பினாலும், நீரினை கலக்க வேண்டின் - சமுத்திரத்தைக் கலக்க விரும்பினாலும், நெருப்பினை அவிக்க வேண்டின்-வடவைத் தீயை அவிக்க விரும்பினாலும், பாரினை எடுக்க வேண்டின்-பூமியைப்பேர்த்து எடுக்க விரும்பினாலும், பல வினை - இப்பெரிய காரியங்களினும், இராவணற்கு - அந்த ராவணனென்னும் மஹாவீரனுக்கு, அரிது என்-செய்தற்கரிய காரியம் யாது [ஒன்றுமில்லையே], (அப்படியிருக்க அவனை) யார் என கருதி சொன்னாய்-யாவனென்று நினைந்து இவ்வாறு இகழ்ந்து கூறினை, சில சொல் ஏழாய்-மிதபாஷணமுள்ள மூக்கையே! என்றான் - என்று சொன்னான், எ-று.—பல சில என்பன பெருமை மென்மைகளைக் குறித்து நின்றன.

63.—(அதைக் கேட்ட சீதாபிராட்டி அவனைநோக்கி) அரண் தரு திரள் தோள் சால உள எனின் ஆற்றல் உண்டு ஓ - அழகைத்தருகின்ற அநேகமான திரண்டதோள்கள்உண்டாயிருப்பின் வல்லமையுமிருக்குமோ? கரண்டம் நீர் இலங்கை வேந்தை சிறை வைத்த கழல் கால் வீரன் - நீர்க்காக்கை

கள்சஞ்சரிக்கின்ற கடனீர்சூழ்ந்த லங்காதிபனாகிய ராவணனைச் சிறையிலிட்ட வீரகண்டையணிந்த காலையுடைய மகாவீரனது [கார்த்தவீரியனது], திரண்ட தோள் வனத்தை எல்லாம் - கூட்டமாகிய புயக்காட்டை யெல்லாம், இரண்டு தோள் ஒருவன் அன்று ஓ சிறியது ஓர் பருவம் தன்னுள் மழுவினால் எறிந்தான் என்றாள் - இரண்டுதோள்களையுடைய ஒருவன் [பரசுராமன்] அல்லவா பாலியத்தில் மழுவாயுதத்தால் அறுத்தான் என்று சொன்னாள், எ - று.—இராவணனைச்சிறைவைத்தவன் கார்த்தவீரியன், அவன் தோள் வனத்தைக்களைந்தவன் பரசுராமன், அவனது இறுமாப்பையடக்கினவன் சக்கிரவர்த்தித்திருமகன் என்று வற்புறுத்துவான் இலங்கை வேந்தை யென்று தொடங்கி மழுவினாலெறிந்தானென்னுந்துணையு முறையே கூறினாள். கார்த்தவீரியன், பரசுராமன் என்பவர்களைப்பற்றிப் புராணநாம விவரணம் என்னுந்தலைப்பிற் காண்க.

64.—என்று அவள் உரைத்தலோடும் - என்று அந்தச்சீதாபிராட்டி சொன்னவுடனே, நயனம் எரிந்தன - (ராவணனது) கண்கள் ஜ்வலித்தன; திரள் தோள் திக்கில் சென்றன - திரண்டபுஜங்கள் திசைகளையடைந்தன; மகுடம் வானம் தீண்டின - முடிகள் ஆகாசத்தைத் தொட்டன; திண் கை ஒன்றொடு ஒன்று அடித்த - பலமானகைகள் ஒன்றுடனொன்று அறைந்தன; எயிற்றின் ஒளி மேகத்து உரும் என மென்றன - பல்வரிசைகள் மேகத்தினிடத்துக்காணப்படுகின்ற இடியைப்போல சப்திக்கும்படி கடித்தன; வெகுளி பொங்க மாய வேடம் விட்டது - கோபம் மிகுதலால் (அவன் பூண்டுவந்த) மாயவேஷமானது அவனைவிட்டு நீங்கிற்று [அவனது நிஜரூபம் வெளிப்பட்டது], எ - று.—பொங்க - காரணப்பொருட்டாகிய செயவெனெச்சம். மாயவேடம்பற்றறவொழிந்ததென்பார் விட்டதென்றார்.

65.—(அப்போது) அரிவை உம் இவன் இருவினை துறந்த மேலோர் அல்லன் கொல் என்று எண்ணி ஐயம் எய்தா - (களங்கமற்றிருந்த) சீதாபிராட்டியும் இவன் இருவினைகளை நீக்கின மேலோரில் (ஒருவன்) அல்லனோ என்று நினைத்துச் சந்தேகமடைந்து, இவன் ஆர் என்று ஒன்றும் தெரிவு அரு நிலையள் ஆக - இவன் யாவனென்று சிறிதும் தெரிதற்கரிய நிலையையுடையவளாகி நிற்க, தீ விடத்து அரவம் தான் ஏ உரு கெழு சீற்றம் பொங்கி பணம் விரித்து உயர்ந்தது ஒத்தான் - கொடிய விஷத்தையுடைய பாம்பே வெப்பமான கோபமிகுந்து படத்தை விரித்துக்கொண்டு உயர்ந்து நின்றதை யொத்திருந்தான் (அவ்விராவணன்), எ - று.—இராவணன் பத்துத்தலைகளோடும் எதிர்நின்றது பத்துத்தலைப்பாம்பொன்று எதிரேசீறிக்கொண்டு நின்றதுபோலிருந்ததென்பதாம்.

66.—ஆற்ற வெம் துயரத்து அன்னாள் - மிகவும் வெவ்வியதுக்கத்தையுடைய அந்த சீதாபிராட்டி, ஆண்டு உற்ற அலக்கண் நோக்கின் - அவ்விடத்து அடைந்ததுன்பநிலையைப் பார்த்தால், என் ஏற்றம் நினைக்கல் ஆகும்- வேறெந்தத் துன்பத்தை அதிகமாக எண்ணலாகும்; எதிர் (என்) எடுத்து இயம்பல் ஆகும் - இதற்குவமையாக எத்துன்பத்தை யெடுத்துச் சொல்லலாகும்; மாற்றம் ஒன்று இல்லை - ஒருபேச்சுமில்லை; செய்யும் வினை இல்

லை - செய்தொழில் ஒன்றுமில்லை; கூற்றம் வந்து உற்ற காலத்து உயிர் என குலைவு கொண்டாள் - யமன்வந்தகாலத்தில் உயிர் நடுங்குவதுபோல நடுக்கங் கொண்டாள் (சீதாபிராட்டி), எ - று.—ஏற்றம் - தொழிலாகுபெயர்.

67.—விண்ணவர் ஏவல் செய்ய வென்ற என் வீரம் பாராய் - தேவர்கள் ஏவல்செய்யும்படி ஜயித்தஎனது வீரத்தன்மையைப்பாராமல், மண்ணிடை புழுவின் வாழும் மானுடர் வலியர் என்றாய் - பூமியிலுள்ள புழுப்போல்வாழ்கின்ற மனிதர் பலிஷ்டரென்று சொன்னாய்; (ஆயினும்) பெண் என பிழைத்தாய்-பெண்ணென்று நான்கருதினமையால் உயிர்பிழைத்தனை, அன்றேல் - அப்படிநினையேனாயின், உன்னை பிசைந்து தின்ன எண்ணுவன்- உன்னைப்பிசைந்து தின்பதற்கு நினைப்பேன், எண்ணின் பின்னை என்உயிர் இழப்பென் என்றான் - நினைப்பேனாயின் பிறகு என்பிராணனை இழந்துவிடுவேன் என்றுசொன்னான், எ - று.—பாராய் என்னும் முற்றெச்சம் என்றாய் என்னும் வினைகொண்டது. பிசைந்து தின்ன எண்ணுவேனாயின் என்னுயிர் இழப்பெனென்பதற்கு பிசைந்துதின்னவே நீயிறப்பாய் இறக்கவே உன்னிடத்துள்ள விருப்பமிகுதியால் யானும் உயிர்விடுவே னென்பது கருத்து.

68.—அன்னம் - நடையினால் அன்னத்தையொத்தவளே, குலைவுறல்- நடுக்கத்தையடையாதே, முன்னம் யாரை உம் கும்பிடா என் தலைமிசை மகுடம் என்ன தனிதனி இனிது தாங்கி - இதற்குமுன் எவரையும் வணங்காத என் தலைகளின்மீது கிரீடங்களை (தாங்குவது) போல தனித்தனியே பிரீதியோடு உன்னைத்தாங்கிக்கொண்டு, அலகு இல் பூண் அரம்பை மாதர் அடிமுறை ஏவல் செய்ய-அளவில்லாத ஆபரணங்களை யணிந்த தெய்வப்பெண்கள் உன்பாதங்களில் கிரமமாய்ப்பணிவிடைசெய்துநிற்க, உலகம் ஈர் ஏழு உம் ஆளும் செல்வத்துள் உறைதி என்றான் - பதினான்குலோகத்தையும் ஆளுகின்ற என்னுடையராஜ்யைசுவரியத்தில் ஆளக்கடவாய்என்றுசொன்னான், எ-று.—குலைவுறல், இதில் அல் - எதிர்மறைவியங்கோள்விகுதி. யாரையுங்கும்பிடா - என்பதில் உம்மை முற்றும்மையாதலால் யாவர் என்பதின் மரூஉ ஆகிய யார் என்பதின் முதனிலை யா எஞ்சாமைப்பொருளது.

69.—(அதைக்கேட்ட சீதாபிராட்டி) தளிர் கையாலே செவிகளை சிக்குஉற சேமம் செய்தாள் - தளிர்போன்றகைகளாலே காதுகளை உறுதியாக அடைத்துக்கொண்டு, (அவனைநோக்கி) கவினும் வெம் சிலை கை காகுத்தன் கற்பினேனை - அழகைத்தருகின்ற வெவ்வியகோதண்டத்தைத் தரித்ததிருக்கைகளையும் வெற்றியையும் உடைய காகுத்தனுடைய [ஸ்ரீராமனுடைய] பாதிவ்ரத்யத்தையுடைய என்னை, புவி இடை ஒழுக்கம் நோக்காய் - உலகத்திலுள்ள ஒழுக்கத்தையும்பாராமல், பொங்கு எரி புனிதர் ஈயும் அவியை நாய் வேட்டது என்ன என் சொன்னாய் அரக்க என்னா - ஜ்வலிக்கின்ற அக்கினியில் பரிசுத்தரானவேதியர்கொடுக்கின்ற அவிர்ப்பாகத்தை (இழிபொருளை இச்சிக்கின்ற) நாய்விரும்பியதுபோல என்னவார்த்தைசொன்னாய் ராக்ஷஸனே என்றுசொல்லி, எ - று.—கவினும் என்பது கவின்ற, கவினுகின்ற என மற்றைக்காலங்களிலும் வரும். அவி - இது ஹவிஸ் என்னும் ஆரியத்திரிபு.

கடவுள்துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் ௧.] ௧௮௯௨-ஞு ஆகஸ்டுமீ [சஞ்சிகை ௭.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதியாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ ரருளினா லெளியவர்ச் சையுமாகி யுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

கம்பர்சரித்திரம்.

[௧௫௫-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

கம்பர் நல்லதென்று புறப்பட்டு அத்திருத்தலத்திலுள்ள சமணரிடஞ்சென்றபோது முன் தில்லையில் நடந்தசெய்தியனைத்தும்அவர்கள் கேள்விப்பட்டிருப்பவர்களாகையால்என்றும் காணாதபொருளைக்கண்டவர்கள்போல சந்துஷ்டியடைந்து எதிர்கொண் டழைத்துப்போய் தக்கபடி யுபசரித்து எங்களிடம் வந்த கருத்தென்னையெனக் கம்பர் யாம் பாடிய ராமாயணத்துக்கு உங்களுடைய சம்மதம் பெறவேண்டி வந்தோமென்றனர்; அவர்கள் தமிழிற்சிறந்த வித்துவான்களா யிருக்கிற தில்லைமூவாயிரவருடைய கையொப்பம் பெற்றுக்கொண்டதே போதுமானதா யிருக்கின்றது, அப்படி யிருந்தும் எங்களையொரு பொருட்டாயெண்ணிவந்து எங்களையும் பெருமைப்படுத்தினீர் என்று சொல்லி, ஸ்ரீராமாயணத்தை வாங்கி சிற்சிலவிடங்களிற் பார்வையிட்டு சொற்சுவை பொருட்சுவை முதலியவற்றைக் கண்டுகளித்து, இவரைத்தெய்வக்கவிஞ [illegible]பதற்கு யாதொரு ஐயப்பாடுமில்லையெனக்கூறி இவருடைய புலமைத்திறம் விளங்கும்படி தாங்களும் சிற்சில ஆட்சேபஞ்செய்ய வேண்டுமென்று பற்பல கேள்விகள் கேட்டனர். அவற்றுட்சிலவருமாறு:—

உலகம்யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலுநீங்கலா
அலகிலாவிளை யாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க் கேசரணாங்களே.

என்றபாடலில் எப்பொருட்கும் இறைவன்செயலை விளையாட்டென்றதென்னை என்றும், ஒப்பாருமிக்காரும் இல்லாதகடவுள் விளையாடுவாராஞல் அவனைச்சிறுவனென்றன்றோ நினைக்கவேண்டிவரும் என்றும், மூன்றுசெய்யுளால் கடவுள்வணக்கஞ் செய்யவேண்டுவதென்னை ஒருசெய்யுளால் செய்ததேயமையாதோ என்றும், கேட்டார்கள். அம்மூன்று கேள்விக்கும் கம்பர் சகலாண்டசராசரங்களையும் ஆக்கலும் காத்தலும் அழித்தலும் சர்வசக்தியுடையஅவர்க்கு இச்சாமாத்திரத்தில் எளிதினிகழ்வன என்பதும், விளையாட்டுச்செய்கையே இப்படிப்பட்டதாயின் அவர்வேண்டுமெனக்கண்ணூன்றிச் செய்யும்செய்கை எப்படிப்பட்டதாயிராது, இதனினும் பெருஞ்செய்கையாயிருக்குமென்பதும்தோன்ற அவற்றை விளையாட்டென்றும், வஸ்து நிச்சயம் பண்ணுமிடத்தில் நாமரூபகிரியைகளை ஆவசிகமாகச் சொல்லவேண்டுமாதலால் அவற்றுள் சர்வேசுவரனுடைய கிரியை “உலகம்யாவையுந் தாமுளவாக்கலும்” என்றபாடலாலும், குணம் “சிற்குணத்தர் தெரிவருநன்னிலை” என்றபாடலாலும், நாமம் “ஆதியந்தமரிஇயெனயாவையும்” என்றபாடலாலுஞ்சொல்லப்பட்டன என்றும், நாமகிரியைகளைச் சொன்னவளவில் உருவந் தானேயமைதலால் அதனை யொழித்து அவரது அநந்தகலியாணகுணக்கடலிலாடுதல் ஆன்றோரொழுக்கமாதலால் குணங்கூறப்பட்டன என்றுங்கூறினர். அதுகேட்டுச் சைநர்கள் சரஸ்வதியமிசமாகிய உமதுவல்லமையை வியக்க எங்களாலாகாது என்றுகூறி,”ஐயா! இப்பெருங்காப்பியத்துள் எங்களுக்கேதாவது ஆதாரமுண்டோவெனவினவ, உண்டென்று யுத்தகாண்டத்தில் இந்திரசித்துவதைப்படலத்தில் ‘வில்வீரரிற்சிறந்த இந்திரசித்து இறந்தமாத்திரத்தில் இனிமே விராவணனுக்கு அரசாட்சிசெல்லமாட்டாதென்றுகளிப்படைந்த தேவர்களெல்லாரும் உடுத்தவாடையையும் உத்தரீயத்தையும் ஒக்கவுரிந்து சுருட்டி மேலேசெல்லும்படிவீசி ஆநந்தத்தால் ஆரவாரித்தபோது கொல்லாவிரதமுடையசமணர்களுடைய உபாசனதேவர்களாகிய அருகர் கூட்டம்போல இருந்தனர்கள்,’ என்னுங் கருத்தையுட்கொண்ட

வில்லாளரானார்க்கெல்லாமேலவன்விளிதலோடும்
செல்லாதவிலங்கைவேந்தற் கரசெனக்களித்ததேவர்
எல்லாருந்தூசுநீக்கியேறிடவார்த்தபோது
கொல்லாதவிரதத்தோர்தங் கடவுளர்கூட்டமொத்தார்

என்றபாடலைச்சொன்னார். அதை யவர்கள்கேட்டுவியந்து அவர்களுக்குள் தலைவராயினோரொருவர்

பாரேந்துபடவ்ரவப்பெரும்பாயன்மிசைத்துயிலும் பரமனார்த்திச்
சீரேந்துபெருங்காப்பியந்தமிழிற்புனைந்துலகஞ்சிறக்கவீந்தான்
நீரேந்துகடலாடைநீணிலத்திற்றனக்கொப்பு நிகழ்த்தவொண்ணாப்
பேரேந்துநற்றெய்வப்புலமைபெறுகம்பனெனும்பெரியனம்மா

எனக்கூறிய துதிகவியொன்றுங் கையொப்பமுங்கொண்டுபோய் கோயிலிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக்காட்ட இம்மட்டிலே போதுமென்னாது, மாவண்டூரில் மிகச்சிறந்தபண்டிதனுகிய ஓர் கருமானிருக்கின்றான் அவனுடைய கையொப்பமும் வாங்கிக்கொண்டுவாருமென்றார்கள். கம்பர் அப்படியேபுறப்பட்டு கருமானூர்க்குச் சென்று தமது வரவைத்தெரிவிக்க அவன் எதிர்கொண்டுவந்துபசரித்து என்னையு மொருபொருளாயெண்ணி வரவேண்டுமோ? தங்களுடைய நூலிலுள்ள செய்யுட்கருத்தையுண்மையாக வுணரவல்லவர்களிங்குண்டோ? என்றுசொல்லி அப்பெருங்காப்பியத்தைவாங்கி அவிழ்த்துவாசித்துப்பார்த்து எழுத்துச்சொற்பொருள்யாப்பணியென்னும் ஐந்திலக்கணங்களுக்கும் இலக்கியமாயுள்ளது இதனையன்றி வேறொன்றுமில்லையெனப் பலவாறுபுகழ்ந்து இந்நூலிலெங்களுக் கேதேனும் ஆஸ்பதமுண்டோவென்று வணக்கமாய்க் கேட்க, உண்டென்றுகூறி ஸ்ரீராமபிரான்மேல் இராவணன்மாயாஸ்திரத்தைப்பிரயோகித்தபோதுஅவர் விபீஷணரைநோக்கி இதென்னவென்று வினவ விபீஷணர் சர்வசுவாமியைநோக்கி ‘கருக்கொண்டு நிறைந்த மேகத்தைப்போலுந் திருமேனியை யுடையானே! திக்கஜங்களினுடைய தந்தங்களை யொடித்த மார்பையுடையராவணன் நூலிழை நுழைகின்றசிற்றூசியைச்செய்து இருப்புத்தொழிலிற் றேர்ந்த கருமானிடத்திற் சென்று விருப்பத்தோடு விலைக்கு வாங்கிக்கொள்ளென்று விற்கின்ற அறிவிலியைப்போல் மாயப்பெருமானாகிய நும்மேல்மீளாது மாயாஸ்திரத்தைப் பிரயோகித்தான்’ என்று கூறியபொருளமைந்த

இருப்புக்கம்மியற் கிழைநுழையூசியொன்றியற்றி
விருப்பிற்கோடியால்விலைக்கெனும்பதடியின்விட்டான்
கருப்புக்கார்மழை வண்ணவக்கடுந்திசைக்களிற்றின்
மருப்புக்கல்லிய மார்பவன்மீளருமாயை

என்றபாடலைச் சொல்லினர். அதற்கவன் சந்தோஷப்பட்டு

கருக்கொண்ட முகில்வண்ணத் தனிமுதல்வன்
கர்சில்கொற்றக் கதையொண்பாவால்
குருக்கொண்ட முதிர்கருணையொடுதந்தான்
கடப்பாடு கோளில்வானின்
மருக்கொண்ட பொழிலழுந்தூ ரெம்முடை
மாதவப்பேறு வந்துதோன்றித்
திருக்கொண்ட தனித்தெய்வப் புலமைபெறு
கம்பனெனுஞ் சீரியோனே

என்ற துதிகவியுங் கையொப்பமுங் கொடுத்தான்.

அதைக் கொண்டுவந்து காண்பித்தபொழுது ஸ்ரீரங்கத்தார் கம்பரை நோக்கி எஞ்சலில்லாத் தஞ்சாவூரி லஞ்சனாட்சியென்ற வஞ்சியாகிய தாசி பிரபலவித்துவாமிசையா யிருக்கிறாள். அவள் வெகு கர்வமுடையவளாகையால் அவளேதாவது பிதற்றுவாள். அவள்கையொப்பமும்வந்தால் சர்வோத்தமமாயிருக்குமென, ஆயினுமென்ன,

கடைநிலத்தோராயினுங் கற்றுணர்ந்தோரைத்
தலைநிலத்துவைக்கப்படும்

என்பதனால் குற்றமில்லையென்று அவளிடம் சென்றபொழுது அவளுள்ளந

டுங்கித் தேவரீர் என்னைப் பொருள்செய்து இவ்வளவுதூரம் வந்தது யார்செய்த பாக்கியமோ! ஆயினும் என்னகாரியமென்று வினயத்தோடுகேட்க; அதற்குத் தாம் வந்தகருத்தை வெளியிட்டார். இதற்கோ தாங்களெழுந்தருளியது! அடியாளைவரும்படி நியமித்தால் தலையால் நடந்துவாரோனே! இதென்ன அபசாரமென்று வருத்தமுற்று, சூரியனுக்கு முன்னே மின்மினியும் கடலுக்குமுன் கால்வாயுமோ வென்றுகூறி ஸ்ரீராமாயணத்தை வாங்கிக் கவிகளை வாசித்து அதி யாச்சரியத்தோடு களித்து இந்தக் காப்பியத்தில் அடியேங்கட்கு ஏதேனும் பற்றுண்டோவென்று கேட்டனள். கவிஞருண்டென்றும் அவற்றுளொன்று சொல்லுகிறேமென்றும் சொல்லி பாலகாண்டம் மிதிலைக் காட்சியில் ராஜவீதியிலுள்ள விசித்திரங்களைப் பார்த்துக்கொண்டே விசுவாமித்திரமுனிவர்பின்னேபோகிய இராமலட்சுமணர்கள் அங்கங்கு பலமங்கையர்கள் ஆணிமுத்திழைத்த பந்துகளையெறிந்து விளையாடுகையில் 'சரீரசம்பந்தத்தால்உண்டாகும் போகசுகத்தைத் தம்மைத்தழுவிய புருஷர்களோடு அநுபவித்து அதற்காகவிலையுங் கொள்ளுகின்ற வேசிகளதுமனம்போலவும், சமமாகஅடுத்தபொருளினுடையநிறத்தைக்காண்பிக்கின்ற பளிங்குபோலவும், மைதீட்டி செவ்வரி படர்ந்த நெடியகண்ணினது பார்வைபடுதலும் கறுத்துவந்து, சிவந்தகையில்வந்துசேர்ந்தபோது சிவந்துதோன்றும் பந்துகள்பலவற்றையுங் கண்டார்கள்' என்ற பொருளமைந்த

மெய்வருபோகமொக்க வுடனுண்டுவிலையுங்கொள்ளும்
பையரவல்குலார்த முள்ளமும்பளிங்கும்போல
மையரிநெடுங்கணோக்கம் படுதலுங்கருகிவந்து
கைபுகிற்சிவந்துகாட்டுங் கந்துகம்பலவுங்கண்டார்

என்றபாடலைச்சொன்னார். அதுகேட்டு அவள் உள்ளமகிழ்ந்து

அம்பராவணிசடையர னயன்முதல்
உம்பரான்முனிவரால் யோகராலுயர்
இம்பராற்பிணிக்கரு மிராமவேழஞ்சேர்
கம்பராம்புலவரைக் கருத்திருத்துவாம்

என்ற துதிகவியும்பாடிக் கைபொப்பமு மிட்டனள். அவ்விரண்டையுங் கொண்டுவந்து கோயிலிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் காட்டினர். ஸ்ரீரங்கத்தார் பின்னும் வாய்கூசாமல் சிற்சிலரைக்குறித்துக் கையொப்பம்வாங்கிவரச்சொல்ல அப்படியேவாங்கிவந்தும், அவர்களிவையெல்லாம் சரிதான் அம்பிகாபதி யென்னும் உம்முடைய புத்திரரும் ஒரு பெரியவித்துவானாகையால் அவருடைய கையொப்பமும் வாங்கித்தந்தால் நலமாயிருக்குமென்றார்கள். என்புத்திரனாகிய அம்பிகாபதி கையொப்பம் எனக்குச் சிறந்ததாவென்னாமல் பெரியோர்கள் சொல்லியபடி நடத்தல் தக்கதென்றெண்ணித் தம்முடைய கற்றுச்சொல்லிகளி லிருவரையனுப்பி யவனைவரவழைத்தனர். அவர் புறப்பட்டுவந்து என்னசெய்தி யெனக் கேட்கக் கவிஞர் அப்பா அம்பிகாபதி! உன்னுடைய கையொப்பமும் வேண்டுமென்று ஸ்வாமிகள் சொல்லுகிறார்களென்றனர். அம்பிகாபதி ஐயா இந்தப் பெருங்காவியத்தில் எனக்கென்ன

ஆஸ்பதம் இருக்கிறதென்ன, புலவரானவர் தமக்கு அம்பிகாபதி புத்திரனாகையால் அதற்குத்தக்கபடி உனக்கு வேண்டியவற்றையும் வைத்திருக்கிறேன்; அவையாவன, சள சள - கள கள-கொள கொள-கிஞ கிஞ என்பனவாம். அவைகளுள் க - வது பாலகாண்டம் திருவவதாரப் படலத்தில்

வளநகர்முனிவரன்வருமுன்வான்வன்
களனமர்கடுவெனக்கருகிவான்மிசை
சளசளவெனமழைத்தாரைகான்றன
குளனொடுநதிகடங்குறைகடீரவே

என்றபாடலிலும், உ-வது மேற்கூறியகாண்டத்து உண்டாட்டுப்படலத்தில்

வளைபயின்முன்கையோர்மயிலனாடனக்
கிளையவன்பெயரினைக்கொழுநனீதலும்
முளையெயிறிலங்கிடமுறுவல்வந்தது
களகளவுதிர்ந்ததுகயற்கணாலியே

என்றபாடலிலும், ௫ - வது யுத்தகாண்டத்தில் வருணனைவேண்டுகோட்படலத்தில்

அண்டமூலத்துக்கப்பா லாழியுங் கொதித்ததேழு
தெண்டிரைக்கடலின்செய்கைசெப்பியென்தேவன்சென்னிப்
பண்டைநாளிருந்தகங்கைநங்கையும்பதைத்தாள்பார்ப்பான்
குண்டிகை யிருந்தநீருங் கொளகொளகொதித்ததன்றே

என்றபாடலிலும், ௪-வது மேற்கூறிய காண்டத்து மாயாசனகப்படலத்தில்

அண்டத்தளவுமினையபகர்ந்தழைத்துப்
பண்டைத்தன்றுமத்தின்காரணத்தைப்பாரித்தான்
தொண்டைக்கனிவாய்துடிப்பமயிர்பொடிப்பக்
கெண்டைதீதடங்கண்ணாளுள்ளேகிளுகிளுத்தாள்

என்றபாடலிலும்கண்டுகொள்க என்றனர். உடனே அம்பிகாபதி எழுந்து தெண்டனிட்டு நின்று,

சம்பநாடன்னுமை செயிசாற்றுபூங்
கொம்பனாடன்கொழுநனிராமப்பேர்
பம்பநாடழைக்குங்கலைதபாச்செய்த
கம்பநாடன்கழறலையிற்கொள்வாம்

என நூதன கவியொன்றுசெய்துகொடுக்க அதைக்கவிஞர் திருவரங்கத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்கறிவிக்கச் சென்றபோது ஸ்ரீமந்நாதமுனிகள் எழுந்தருளியதைக்கண்டு அவரது திருவடிகளில் சாஷ்டாங்கமாக தண்டன் சமர்ப்பித்து தமது கருத்தைவிண்ணப்பஞ்செய்துகொள்ள, ஸ்ரீமந்நாதமுனிகள் கம்பராமாயணத்தைவாங்கிக் கடாக்ஷித்தருளி அது சொற்பொலிவும் பொருட்சுவையும் செறிந்ததாயிருப்பதை நோக்கி இப்பெருங்காப்பியத்தை பிரசித்தம்பண்ணுவிக்கத்திருவுளங்கொண்டு, கம்பரை மண்டபகைங்கரியமொன்றுசெய்ய நியமித்துத் தம்முடைய நியமனத்தின்படி அவர்செய்து முடித்தவுடனே ஓர் சுபதினம்பார்த்து அரங்கேற்ற எத்தனமாயிருக்கையில் நம்பெருமாள் அர்ச்ச

கமுகத்தாலே கம்பனைநோக்கி! நீ நம் சடகோபனைப்பாடினையோ? பாடினால்தான் நாம் உனது ராமாயணத்தைத் திருவுளம்பற்றுவோம், இல்லாவிடின் அது நமக்கு அங்கீகாரமாகாது என்றருளிச் செய்தனர். அப்போது கம்பர்,

வேதத்தின்முன்செல்கமெய்யுணர்ந்தோர்விரிஞ்சன்முதலோர்
கோதற்றஞானக்கொழுந்தின்முன்செல்ககுணங்கடந்த
போதக்கடலெங்கடென்குருகூர்ப்புனிதன்கவியோர்
பாதத்தின்முன்செல்லுமேதொல்லைமூலப் பரஞ்சுடரே

என்று தொடங்கி ஆழ்வார் விஷயமாய் நூறு கட்டளைக் கலித்துறையால் **ஆழ்வார் நூற்றந்தாதி** என்று வழங்குகின்ற சடகோபரந்தாதி என்னும் ஓர் பிரபந்தம்பாடினார். அதைக்குறித்துப் பின்பு அபியுக்தரொருவர் பாடிய பாடல்வருமாறு :—

நஞ்சடகோபனைப் பாடினையோவெனநம்பெருமாள்
விஞ்சியவாதரத் தாற்கேட்பக்கம்பன் விரைந்துரைத்த
செஞ்சொலந்தாதி கலித்துறைநூறுந்தெரியும்வண்ணம்
நெஞ்சடியேற்கருள்வேதந்தமிழ்செய்தநின்மலனே.

[தொடர்ச்சி]

புராணநாமவிவரணம்.

வால்மீகி.—இவர் ஒரு மஹர்ஷி. வல்மீகம்=புற்று, அதிற் பிறந்தவர். இவர் முதலில் பிருகுவம்சஸ்தரான ருக்ஷருக்குப் புத்திரராய்ப் பிறந்து தக்க வயது வந்தபோது தம்முடைய குலாசாரத்துக்குக் கட்டுப்படாமல் மன்மதாதீனராய் ஒருகுறப்பெண்ணின்மேற் காமுற்று அவளிடத்து மக்களைப் பெற்று மகிழ்ந்து அக்குடும்பப் பாதுகாப்பிற்கு விரகறியாதே காடுமலைகளிற்காத்திருந்து வழிப்போவோரை மறித்து அவர் கைப்பொருளைப் பறித்துக் கொண்டுபோய் அதனால் அக்குடும்பத்தைக் காத்துச் சிலகாலம் கழித்தனர். பின்பு ஒருநாள் *ஸப்தரிஷிகள் அவ்வழியே செல்லுகையில் இவர் அவர்களைப் பார்த்து அவர்களுடைய பொருளையெல்லாங் கொள்ளைகொள்ளநினைத்து அவர்களருகிற்செல்ல, அவர்கள் இவரைநோக்கி, "அடா! நீயேன் இத்தீச்செயல்செய்கின்றனை? இதனால் உனக்கு வரும்பயன் என்னை?" என்ன, இவர் சினங்கொண்டு கடுஞ்சொற் சொல்லி அவரிடத்துள்ள பொருள்களையெல்லாம் பறித்துக்கொண்டு ஓரிடத்து வைத்தார். அப்போது

* ஸப்தரிஷிகளாவார் :—மரீசி, அங்கிரஸர், புலஹர், வஸிஷ்டர், அத்திரி, புலஸ்தியர், கிரது என்பவர்கள்; கசியபர், அத்திரி, பரத்வாஜர், விசுவாமித்திரர், கௌதமர், ஜமதக்னி, வஸிஷ்டர் என்பவர்கள் என்றும்சிலர் சொல்லுகிறார்கள்.

அந்த ரிஷிகளிவரைப்பார்த்து, 'அட கெடுவாய்! இப்பொருள்களை இங்கே வைத்து உன் வீட்டுக்குப்போய் உன்பெண்டுபிள்ளைகளைக்கண்டு, நான் பாவத்துக் குள்ளாகித் தீச்செயல் செய்து உங்களைக்காக்கின்றேனே, இப்பாவத்தில் உங்களுக்கேதேனும்பங்குண்டா இல்லையா என்று கேள், நீ மறித்துவருமளவும் நாங்களிங்கேயே தங்கியிருக்கிறோம், எங்கள்பேச்சைநம்பு' என்று இவருக்குறுதிசொல்லியனுப்பினர். இவரும் வீட்டிற்குப்போய் தாம் கொண்டுவரும் பொருளுக்கெதிர்பார்த்திருந்த தம்மனைவிமக்களைக்கண்டு முனிவர்சொன்னதுபோற்சொல்லிக் கேட்க, அவர்கள் 'ஓகோ! இதென்ன பைத்தியம். பாவத்திலும் பங்குக்கு வருவாருண்டா? உன்பாவம் உன்னோடுறுதி; எங்களுக்கு ஒன்றும்சம்பந்தமில்லை' என்று சொன்னார்கள். அதுகேட்டு இவர் திடுக்கிட்டுத் திரும்பி ரிஷிகளிருந்த விடஞ்சேர்ந்து சிந்தை கலங்கி, 'ஐயரே! என்னையாண்டிடுமின்? யான் ஒன்றுமறியாமல் இத்தனைகாலமும்கொன்னேகழித்தேன், இனியாகிலும் கடைத்தேறும்வழியைக் கவனிக்கிறேன், உம்மைச் சரணமடைகிறேன், அடியேனைக் காத்தருளுமின்' என்று பிரார்த்திக்க, அவர்கள் இவரிடத்துக் கருணைகூர்ந்து இவருடைய ஜன்மகர்மங்களைத் தமதுதிவ்வியஞானத்தாலறிந்து ராமமந்திரத்தை இவருக்குத் தலைகீழதாக மரா என்றுபதேசித்துச்சென்றனர். பின்பு இவர் அங்கு ஓரிடத்துட்கார்ந்து முனிவருபதேசித்த மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருந்தார். இப்படி வெகு காலம் செல்ல, இவரிருந்த இடமெல்லாங் காடாய் அங்கிருந்த செடிகொடிமண்கல் முதலியவற்றுளிருந்தும் ராம என்னும் சப்தம் புறப்படத் தலைப்பட்டது.

இப்படி இவர் தவஞ்செய்து கொண்டிருந்தபோது இவர்மேல் புற்று மூடிக்கொண்டது. அது மழைபெய்து கரைய இவர்காணப்பட்டமை பற்றி இவரைப் 'புற்றிற்பிறந்தவர்' என்கிறது. அன்றியும் இவருக்கு பிராசேதஸர் என்கிற திருநாமமுமுண்டு; பிரசேதஸ்=வருணன், அவன் குமாரராதலால் பிராசேதஸர்; புற்றுக் கரையும்படி மழைபொழிவித்தவன் வருணனாதலால் அப்படிச் சொல்லப்பட்டது. இவருடைய குலம் பிருகு குலமாதலால் இவருக்கு பார்க்கவர் என்கிற திருநாமமும் உண்டு.

சதுர்முக பிரமா தமதுலோகத்திலே நூறுகோடி சுலோகமாயிருக்கிற ஸ்ரீராமசரித்திரத்தைப் பூமியிலுள்ளோருக்கு விளங்கும்படிச் சுருக்கமாக வால்மீகரைக் கொண்டு செய்விக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி ஒருகாலவிசேஷத்தில் தமது புத்திரராகிய நாரதமுனிவரை வால்மீகரிடம் சென்று அவருக்கு ஸ்ரீமத்ராமாயணத்தைச் சுருக்கமாய் உபதேசித்து வரும்படி நியமித்தார். அந்நியமனத்தைத் தலைக்கட்ட தபஸ்வாத்தியாய நிரதரான நாரதமகாமுனிவர் அவ்விடத்துக் கெழுந்தருள அம்முனி சிரேஷ்டரை நோக்கி நிர்மலஹிருதயமுடையவராயும், பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களையறிய ஆவல்கொண்டவராயுமுள்ள வால்மீகிமுனிவர், "இவ்வுலகத்தில் இக்காலத்தில் சகலகல்யாணகுணங்களையுமுடையவர் யார்? சௌசீல்ய குணமுடையவரும் பிறரைவெல்லுந்திறமுடையவரும் ஸகலதருமங்களையு மறிந்தவ

ரும் யார்? பிறர் செய்த நன்றி சிறிதாயினும் அதைப் பெரிதாகப் பாவிப்பவரும், எப்படிப்பட்டசங்கடங்களிலும் தாம்சொன்ன சொற்றவறுதவரும், தங்குலாசார தருமங்களைத்தவறுது ஆசரிப்பவ்ரும், தாமெடுத்தகாரியத்தை யிடையில்நெகிழவிடாமல் நிறைவேற்றும் கடைப்பிடியுள்ளவரும், ஸகலாத்துமாக்களுக்கும் ஸந்தோஷத்தைச் செய்கிறவரும், ஸகலவேதங்களையும் ஸாங்கோபாங்கமாக வறிந்தவரும், என்று மொருதன்மையரும், பிரியமானகாட்சியுடையவரும், அசைக்கக்கூடாத தைரியமுடையவரும், கோபத்தைவென்று சுவாதீனமாக்கிக்கொண்டவரும், ஒப்பில்லாதகாந்தியுள்ளவரும், யார்? அப்படிப்பட்ட புருஷனைக் கேட்டறிய அடியேன் விரும்புகிறேன்,'' என்று விண்ணப்பஞ்செய்ய, திரிலோகஸஞ்சாரியான நாரதபகவான், "ஓ வால்மீகரே! நீர் வினவியகுணங்கள் சிலவாயிருந்தாலும் ஒவ்வொன்றிலும் பல வடங்கியிருத்தலாலே அநேகங்களாயிருக்கின்றன; அன்றியும் சிருஷ்டிக்குட்பட்ட எவரிடத்தும் அத்தகையகுணங்கள் காணத்தக்கவையல்ல; ஆதலால், முன்பு பிரஹ்மாவினிடத்திலே கேட்ட அர்த்தங்களை நினைத்து அனந்த கல்யாணகுணங்களோடு கூடிய அந்தப்புருஷனைச் சொல்லுகிறேன்கேளும்.— இக்ஷுவாகு வமிசத்திலவதரித்த ஸ்ரீராம ரென்பவரை நீருமறிவீரே, ஸகல ஜனங்களும் அறிவார்களே, அவர்தாம் நீர் சொற்றவும் மற்றவுமான ஸமஸ்தகல்யாண குணங்களும் நிறைந்தவர். இப்படிப்பட்டவர் 'தசரதசக்கிரவர்த்தியார் தவப்பயனுல் கௌஸல்யாதேவியாருடைய கர்ப்பத்தி லவதரித்தார்' என்றுதொடங்கி ஸ்ரீராமபிரானுடைய திவ்வியசரித்திரத்தைச் சுருக்கமாயருளிச்செய்தார். அப்போது வால்மீகிமுனிவர் நாரதபகவானுடைய வாக்கியங்களையெல்லாம் கேட்டு, நம்முடையகருத்தறிந்து நன்றுயருளிச்செய்தாரென்று அந்தவாக்கியங்களைத் தஞ்சிஷரோடுகூடிக் கொண்டாடி அவரைத்தக்கபடி பூஜிக்க, அந்ததேவரிஷியும் வால்மீகிமுனிவரிடம் விடைபெற்றுத் தெய்வலோகஞ்சென்றுர்.

பின்பு வால்மீகிபகவான் கங்காநதிக்குச் சமீபத்திலுள்ள தமஸாநதிக்கு மாத்யாஹ்நிகஸ்நாநம் செய்கிறதற்கு தம்சிஷ்யரான பரத்துவாஜ மஹாரிஷியுடனே எழுந்தருளி அந்நதிக்கரைசேர்ந்து அந்நதிதீரத்திலிராநின்ற விசாலமான வனத்தினழகைப்பார்த்துக்கொண்டு சற்று நிற்கும்போது அதனருகே ஒரு விருக்ஷத்தின்மேல் இரண்டு கிரவுஞ்ச பக்ஷிகள் ஒன்றையொன்று பிரியாமல் அதிமனோஹரமாய்க் கூவிக்குலாவிக்கொண்டிருக்கக் கண்டார். அப்போது ஒருவேடன் அப்பக்ஷிகளைப்பார்த்து ஆண்பக்ஷியை அவர்கண்ணுக்கெதிரில் வதைத்தான், வதைக்கவே அந்தப்பறவை கீழேவிழுந்து உடம்பெல்லாம் உதிரம்தோய்ந்து பூமியிலே புரளுகிறதை அந்த பெண்பக்ஷிபார்த்து அச்செஞ்சூட்டுச் சேவலின் பிரிவைஆற்றுததாய் யாவரும் மனம் இரங்கி உருகும்படி துக்கக்கூச்சலிட்டது. அதைக் கேட்டும் அடிபட்டிறந்த ஆண்பக்ஷியைப்பார்த்தும் வால்மீகிமுனிவர் மிகவுமிரக்கமுற்று, குற்றமற்று விளையாடிக்கொண்டிருந்த இந்தப்பக்ஷியைக்கொன்றது மஹாஅதர்மம் ஆகையால் இவ்வேடனைச் சபிக்கவேண்டுமென்றுநினைத்தபோது,

𑌮𑌾 𑌨𑌿𑌷𑌾𑌦 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌂 𑌤𑍍𑌵𑌮𑌗𑌮𑌃 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀𑌃 𑌸𑌮𑌾𑌃 ।
𑌯𑌤𑍍𑌕𑍍𑌰𑍌𑌞𑍍𑌚𑌮𑌿𑌥𑌨𑌾𑌦𑍇𑌕𑌮𑌵𑌧𑍀𑌃 𑌕𑌾𑌮𑌮𑍋𑌹𑌿𑌤𑌮𑍍 ॥

[அடா நிர்ப்பாக்கியனுனவேடா! நீ காமவேட்கைகொண்டு விலாசமாயிருந்த இவ்விரண்டு கிரௌஞ்சங்களில் ஒன்றைக்கொன்றதனுல் நெடுநாள் வாழ்வற்று துர்க்கதியடையக்கடவாய், என்பது ஒருபொருள்—"திருமகளுக்கிருப்பிடமான பகவானே! மந்தோதரியும் இராவணனுமாகிய இரண்டுராக்ஷசர்களில் காமமயக்கங்கொண்ட ஒருவனை [இராவணனை] சங்கரித்ததனுலே நெடுங்காலமும் பெருங்கீர்த்திபெற்று வாழ்வீர்" என்பது மற்றொருபொருள்] என்னும் சுலோகம் அவர்வாக்கில் வந்தது.

இவ்வாறு தமதுவாக்கில் வந்ததைக்குறித்து வால்மீகியானவர் ஆச்சரியப்பட்டு நாம் இந்த கிரவுஞ்சபக்ஷிக்காகச் சொன்னது சுலோகமானதுஎன்ன காரணமென்று தமக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு தஞ்சிஷரான பரத்துவாசரைநோக்கி: ஓ பரத்துவாசரே! நான் கிரவுஞ்ச பக்ஷியினிடத்தில்கருணையாலே சொல்லியது நான்குபாதங்களுடையதும், சமமான அக்ஷரங்களுடையதும், வீணையில் வாத்தியங்களோடு இசைத்துப்பாடக்கூடியதுமான ஒருசுலோகமானது சரியே வேறன்று, நீர் பாருமென்ன, அவரும் படித்துப்பார்த்து ஆம் இதுசுலோகமே என்ன, வால்மீகர் நீராடி அந்தசுலோகத்தை அடிக்கடி நினைத்துக்கொண்டே ஆச்சிரமத்துக்கெழுந்தருளி ஆசனத்தில் உட்கார்ந்து அந்தசுலோகத்தையேநினைத்து வெகு ஆலோசனையுடையவராய் வேறே கதைகளைத் தம்முடைய சிஷருக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அப்போது சதுர்முகப்பிரஹ்மாவானவர் வால்மீகருடைய ஆச்சிரமத்திற்கெழுந்தருளி அவரால் பூஜிக்கப்பட்டு அவரை உட்காரச்சொல்ல, அவரும் அப்படியே உட்கார்ந்து, பெரும்பாவி அந்தப்பக்ஷியைக்கொன்றானேயென்று சோகத்தோடு தமது வாக்கிலுண்டான சுலோகத்தை மனதிலே பாடிக்கொண்டிருக்க, நான்முகக்கடவுள் அம்முனிவரைநோக்கிப் புன்சிரிப்புடனே ஓ வால்மீகரே! நீர் சொன்னது சுலோகமேதவிர வாக்கியமன்று, நம்முடைய சங்கல்பத்தினுலேயே இந்த ஸரஸ்வதி உம்முடைய வாக்கிலே தோன்றினுள்; நீரொன்றும் ஆலோசிக்கவேண்டாம். முன் நாரதரால்லே நீர் கேட்டிருக்கிற ஸ்ரீராமசரித்திரத்தை நூர் பிரபந்தமாகச் செய்யக்கடவீர் என்று ஆஜ்ஞாபித்து அந்தர்த்தானமாய் சத்தியலோகத்துக்கெழுந்தருளினுர்.

பின்பு அந்தப் பிராசேதஸமுனிவர் கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு ஆசமனம்பண்ணிக் கிழக்குமுகமாயுட்கார்ந்து தெய்வவணக்கம் குருவணக்கமுஞ்செய்து முன் கேட்டவிஷயத்தை யுள்ளத்தமைத்து ஸ்ரீராமர், இலக்ஷ்மணர், சீதாபிராட்டியார், தசரதர், நாட்டார், நகரத்தார், இன்னும் அவரவர்கள் பேசியது சிரித்தது செய்தது வனவாசத்தில் நடந்தது முதலிய சகல விஷயங்களையும் பிரமதேவருடைய அனுக்கிரகபலத்தால் உள்ளபடியறிந்து நாரதர் கூறிய முறைப்படி தருமமோக்ஷங்கள் பிரதானமாகவும், அர்த்தகாமங்கள் அப்பிரதானமாகவும் தோன்றும்படி ஸ்ரீமத்ராமாயணத்தை

ஸ்ரீராமபிரான் ராஜ்யபாரஞ்செய்துகொண்டிருக்கும்போதே *இருபத்துநாலாயிரம் சுலோகங்களும், ஐந்நூறு சருக்கங்களடங்கிய ஆறு காண்டங்களும் உத்தரகாண்டமும்சேர ஏழுகாண்டங்களுமாகச் செய்தருளி, ஸ்ரீராமபிரானுடைய திருக்குமாரர்களான குசலவர்க்குக் கற்பித்து அவர்களைக்கொண்டு அதை பூலோகத்தில் பிரவசனம் செய்வித்தார்.

இந்த ஸ்ரீராமாயணத்தில் கிருகஸ்தன் நடக்கவேண்டிய ஆசாரமும், சத்தியத்தின் மேன்மையும், பிதாவினிடம் புத்திரன் நடந்துகொள்ளுமுறையும், சகோதரருடைய நிலையும், பதிவிருதாதருமமும், தருமநிலைதவறினால் எப்படிப்பட்டவனும் அழிந்துபோவானென்பதும் இவைமுதலான சாமானிய தருமமும்; ஸ்ரீராமபிரான் சகலகல்யாணகுணபரிபூர்ணமானபரதத்துவமென்பதும், அவரைச் சரணமடைவதே சகலாபீஷ்டங்களையும்பெறுமுபாயமென்பதும், அடியார்கள் ஆசரிக்கவேண்டிய கயிங்கரியமுதலானவற்றின்முறைகளும் ஆக இப்படிப்பட்ட விசேஷதருமங்களும்;. செம்பொருளாகவும் கருத்துப்பொருளாகவும் காட்டப்பட்டிருக்கின்றன. இதனாலேதான் இது 'வேதோபப்பிரம்மணம்' என்னப்பட்டது. உபப்பிரம்மணம்* என்றால் பொருளை நன்றாய் விளக்கிக்காட்டுவது என்றுபொருள்.

நாரதர்.—பிரமபுத்திரர். இவர் சென்ற மஹாகற்பத்தில் உபபர்ஹணன் என்னும் கந்தர்வனாகவிருக்க, ஒருகாலத்தில் விசுவஸ்ரஷ்டரான பிராஹ்மணர்கள் தேவஸத்திரம் என்னும் யாகம் செய்கையில் நாராயணநாமகானம்செய்யும்படி இவரை அழைப்பித்தார்கள். அப்போது அவ்விடத்துக்கு இவர் போய்ப் பாடிக்கொண்டிருந்து அங்குவந்திருந்த சில ஸ்திரீகளைப் பார்த்து மோகித்து அவர்களைப் புணர்ந்துசென்றனர். அதுகண்டு அந்தப் பிராமணர் கோபித்து இவரை சூத்ரஸ்திரீக்குப் பிள்ளையாகப் பிறக்கும்படி சபித்தார்கள். அச்சாபத்தின்படியே பிறந்து பூர்வஜந்மவாசனையால் பிரஹ்மவாதிகளான பெரியோர்களையடுத்து வழிபட்டு அப்புண்ணியவசனத்தினால் இந்தமஹாயுகத்தில் பிரஹ்மமானஸபுத்திரராய் ஜனித்தார். இவருடைய தங்கைபிள்ளையாகிய பர்வதரென்பவரும் இவரும் வெகுஸ்நேகமாய் தங்களுடைய எண்ணங்களை ஒருவருக்கொருவர் ஒளிக்காமலிருக்கும்படி ஏற்பாடு செய்துகொண்டு பூமண்டலமுழுதும் ஸஞ்சரித்துவருகையில் ஒருகாலத்தில் ஸ்ருஞ்ஜயன் என்னும் அரசனிடஞ்சென்று அவன் வேண்டுகோளின்படி அவன் மகளாகிய சுகுமாரி என்னுங் கன்னியால் பரிசரியைகளைக் கைக்கொண்டு சிலநாளிருந்தனர். அப்போது நாரதர் அப்பெண்ணினிடத்து மையல்கொண்டு நாளுக்குநாள் உடல்வற்றி வெளுத்துவருவதைக்கண்டு அதன் காரணத்தைத் தம்மிடத்து ஒளியாது சொல்லாமைக்காக, அப்பெண்ணை

* இப்போது வழங்கிவருகிற பாடப்படி ஸ்ரீமத்ராமாயணத்தில் உடுருசுலோகங்களும் சில சர்க்கங்களும் அதிகமாயிருக்கின்றன. வெகுகாலமானதனால் இந்த வித்தியாசம் வந்ததென்றும், அல்லது முனிவரே சில்லறையைக்கருதாமல் பிரதானமாகக் கூறியிருக்கலாமென்றும் பெரியோர் அதற்கு நியாயஞ்சொல்லுகிறார்கள்.

யணந்தபின்பு நாரதரை குரங்குமுகமுள்ளவராம்படி பர்வதர் சபித்தார். அதற்கு நாரதர் பர்வதருக்கு நாகலோகத்துக்குப் போகாமலிருக்கும்படி பிரதிசாபங்கொடுத்தார். பின்பு இவ்விருவரும் தங்களுடையசாபங்களை விமோசனஞ்செய்துகொண்டு முன்போலவே சிநேகமாயிருந்தார்கள்.

ஒருகாலத்தில் நாரதர் நாராயணாச்சிரமத்தில் எழுந்தருளியிருந்த நாராயணருஷியினிடஞ்சென்று, ஸத்துவமுதலிய குணசூனியமான பிரமத்தினிடத்து ஸத்துவாதிகுணகோசரமான வேதங்கள் எவ்வாறுசெல்லும் என்று கேட்கையில் அந்தமஹரிஷி முன் ஸநகஸநந்தநாதியர்க்கு பிரமதேவன் அருளிச்செய்தபடி பரமதத்வார்த்தமானசுருதிகீதைகளை இவருக்கு உபதேசித்தார்.

நாரதர் தக்ஷப்பிரஜாபதியின் பிள்ளைகளெல்லார்க்கும் விரக்திமார்க்கத்தையுபதேசித்து ஸிருஷ்டிக்குப்பராங்முகராகும்படிசெய்ததனால் இவரை தக்ஷப்பிரஜாபதியானவர் அகபத்தியராயும் அஸ்திரராயும் ஆகும்படி சபித்தார்.

நாரதர் என்னும் சொல்லுக்கு 'ஜனங்களுக்கு ஞானத்தைக்கொடுப்பவர்' அல்லது 'ஜனங்களுடைய அஜ்ஞானத்தை யறுப்பவர்' என்பதுபொருள்.

ஊர்வசி.—இவள் ஓர் அப்ஸரமகள். விஷ்ணுவம்ச ஸம்பூதரான நரநாராயணர் என்னும் தேவமுனிவரிருவர் பதரிகாசிரமத்தில் வெகுகாலம் தவஞ்செய்துகொண்டிருக்கையில் தெய்வப்பெண்கள் அவர்களுடையதவத்துக்கிடையூறுசெய்யும்படி அவ்விடம்வர, அம்மஹாமுனிவர் கலங்காநிலையினராயிருந்தார்கள். அவர்களுள் நாராயணர் தமது கலங்காமையை அப்பெண்மணிகளுக்குக் காட்டவிரும்பித்தந்துடையைக் கீற அதிலிருந்து அதிரூபலாவணிய சுந்தரிகளாகி ஊர்வசிமுதலியவர் பலர் தோன்றினர். தெய்வப்பெண்கள் அதுகண்டு தம்மெண்ணம் ஈடேறமாட்டாதென்று தெளிந்து ஊர்வசியையே தமக்கு முக்கியமானவளாக்கிக் கொண்டு தமது லோகத்துக்குப் போனார்கள். மேலும் அர்ஜுனன், உருத்திரன் முதலிய தேவர்களால் பாசுபதமுதலியதிவ்வியாஸ்திரங்களைப்பெற்றுத் தேவர்களுக்குத் தீங்குசெய்துவந்த காலகேயநிவாதகவசர்களைக் கொன்று தெய்வலோகஞ் சென்றபோது, ஊர்வசி அவனைவிரும்ப, அவன் அதற்குச் சம்மதியாமையால், அவள் அவனுக்கு பேடித்தன்மைவரும்படிசபித்தாள். அதை இந்திரன் அறிந்து அந்த சாபத்தை அர்ஜுனன் அஜ்ஞாதவாஸகாலத்தில் அனுபவிக்கும்படியாகவும், அக்காலமுடிவில் சாபமோக்ஷமாகும்படியாகவும் அனுக்ரகித்தான். ஊர்வசி என்னுஞ்சொல்லுக்குத் 'துடையிற்பிறந்தவள்' என்பதுபொருள்.

கார்த்தவீரியன்.—இவன் ஹைஹயவம்சத்து அரசருள் ஒருவன். அர்ஜுனன் என்பது இவனுடைய இயற்பெயர். இவன் கிருதவீரியன் மகனானமையின் கார்த்தவீரியன் என்றும், அதனோடு இயற்பெயருங்கூட்டி கார்த்தவீரியார்ஜுனன் என்றும் சொல்லப்படுவான். இவனுடைய ராஜதானிநர்மதாநதி தீரத்திலுள்ள மாஹிஷ்மதிபுரம். இவன் யதுவினுடைய மூத்தகுமாரனாகிய ஸஹஸ்ரஜித்துவின் வம்சத்தவன். இவன் ஸ்ரீமந்நாராயணாம்சமாய் அத்திரிகுமாரராய் விளங்காநின்ற தத்தாத்திரேய மகாமுனிவரையாரா

கித்து அவருடைய அநுக்ரகத்தினாலே அதருமத்திற் புகாமையும் ஸ்வதருமத்திற் பற்றுண்மையும் ஆயிரங்கைகளுடைமையும் யுத்தத்திலேவெற்றியும் பூமியைத் தருமத்தினாற் காத்தலும் சத்துருக்களினால் அவமானப்படாமையும் சகல லோகங்களுங் கொண்டாடும்படியான மகாபுருஷனால் மரணமுமான இவ்வரங்களைப்பெற்றான். அதனால் சகலதீவுகளோடுங்கூடின பூமண்டலமெல்லாம் பரிபாலனஞ்செய்து பதினாயிரம் வேள்விகளையுமியற்றினான். எந்த ராஜாக்களும் யாகங்களினாலும் தானங்களினாலும் தவங்களினாலும் வணக்க முதலிய சற்குணங்களினாலும் சாஸ்திரக் கேள்விகளினாலும் கார்த்தவீரியார்ச்சுனனை யொவ்வார்கள். அவனுடைய ராஜ்யத்தில் ஒருவனும் பொருளிழந்ததில்லை. இக்காலத்திலும் அவனது நாமத்தைச் சங்கீர்த்தனம் பண்ணுகிறவனுக்கு இழந்தபொருள் கைகூடுமென்று ஹரிவம்சாதிகளிலே சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வாறு இவன் எண்பத்தையாயிரம் வருஷகாலம் ஆரோக்கியம், செல்வம், பலம், பராக்கிரமம் இவைகளில் யாதொரு குறைவுமில்லாதவனாய்ச் செங்கோல் செலுத்திவந்தான். இப்படியிருக்க ஒருகாலத்தில் இராவணன் திக்குவிஜயம்செய்து வருகையில் இவனுடைய பராக்கிரமத்தைக்கேட்டு இவனோடு போர்புரிய வேண்டுமென்று மாஹிஷ்மதிக்குவந்தான். அப்போது அர்ஜுனன் வேட்டைக்குப் போயிருந்த சமாசாரங் கேள்விப்பட்டுத் தன் வரவறிந்து அவன் ஒளிந்துகொண்டானென்று சிரித்துச்சென்று விந்தியாரணியத்திற் சற்றுநேரம் உலாவிக்கொண்டிருந்து நர்மதாநதிக்கரையில்வந்து அவ்விடத்துச் சிவபூஜைசெய்துகொண்டிருந்தான். அப்போது நருமதாநதியில் ஜலக்கிரீடைசெய்துகொண்டிருந்த கார்த்தவீரியார்ஜுனன் தன் ஆயிரங்கைகளாலும் நர்மதையினுடைய பிரவாஹத்தைத் தடுத்துக் கையை யெடுத்துவிட்டதனால் அந்தப் பிரவாஹமானது ராவணனுடைய பூஜாதிரவியங்களை யெல்லாம் அடித்துக்கொண்டுபோயிற்று; அதை இராவணன் அறிந்து அர்ஜுனன் இருந்த இடத்துக்குப்போய் போர்புரிந்து அவனால் பிடிபட்டு அவன் பட்டணத்திற் சிறையிலிடப்பட்டான். அந்த சமாசாரத்தை இராவணன் பாட்டனான புலஸ்தியர் கேள்விப்பட்டு கார்த்தவீரியனைவேண்டிக்கொண்டு இராவணனை விடுவித்தார். பின்பு இந்தக் கார்த்தவீரியன் பரசுராமன்தந்தையாகிய ஜமதக்கினியாருடைய ஹோமதேனுவை பலாத்காரமாய் ஓட்டிக்கொண்டுபோக, அதைக் கேள்விப்பட்ட ஸ்ரீமந்நாராயணனம்சத்தினாலவதரித்த மஹாபுருஷராகிய பரசுராமர் இவனோடு போர்புரிந்து இவனைச் சங்கரித்தருளினார். பின்பு சிலநாளைக்கெல்லாம் கார்த்தவீரியன்பிள்ளைகள் ஜமதக்கினியைக் கொன்றுவிட்டனர். அதுகாரணமாக பரசுராமர் பூமண்டலத்திலெங்கும் க்ஷத்திரியகுலமில்லாமற்போம்படி நாசஞ்செய்யத்துணிந்து இருபத்தொருமுறை க்ஷத்திரியர்மீது படையெடுத்துப்போர்புரிந்து அரசர்களையெல்லாந் தேடிக் கொன்று அந்த ரக்தத்தை ஐந்துமடுவாக்கி அவற்றில் பிதுருதர்ப்பணஞ் செய்தார். கார்த்தவீரியனுக்கு நூறுபிள்ளைகளிருந்தார்கள். அவர்களுள் பரசுராமர் கையிலகப்பட்டிறவாமல்தப்பிப் பிழைத்தவர்கள், ஜயத்வஜன், சூரஸேனன், விருஷஸேனன், மது, சூரன் என்னும் ஐவராம்.

ஆரணியகாண்டம்.

சடாயுவுயிர்நீத்தபடலம்.

[கசு௪-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

70.—(மேலும்) புல் நுனை நீரின் நொய்து ஆய் போதலே புரிந்து நின்ற இன் உயிர் இழத்தல் அஞ்சி இல் பிறப்பு இழத்தல் உண்டு ஏ - புல்லினது நுனியிற்றங்கியிருக்கிற நீரைப்போல எளிதாய்நீங்குதலையே விரும்பி நின்ற இனிய பிராணனையிழந்துபோதலையஞ்சி உயர்குடிப்பிறப்பை நான்இழத்தலுண்டோ [இல்லை]; மின் உயிர்த்து உருமின் சீறும் வெம் கணை விரவா முன்னம் - மின்னிக்கொண்டு இடிபோற்சீறிவருகிற உக்ரமான (ராம) பாணம் வந்து உன்மேல் படுவதற்குமுன்னமே, உன் உயிர்க்கு உறுதி நோக்கின்-உன் பிராணனுக்கு உறுதியை [நிலைபேற்றை] ஆலோசிப்பாயாயின், ஓடி ஒளித்தி என்றாள் - ஓடியொளித்துக்கொள்என்றுசொன்னாள், எ - று.—உயிர்க்குறுதி என்பதில் நான்கனுருபு ஆறுவதன்பொருளில் வந்தது. உயிரினுஞ்சிறந்த பொருள் வேறொன்றின்மையின் இன்னுயிர் என்றார். உண்டே, ஏ - எதிர்மறை. "புன்னுனிமேனீர்போல்" என்றார் பிறரும்.

71.—என்று அவள் உரைக்க நின்ற இரக்கம் இல் அரக்கன் - என்று இவ்வாறு அந்த ஜானகிசொல்ல எதிரில்நின்ற இரக்கமில்லாத ராவணன், (அவளை நோக்கி) அ உயர் திசை ஓங்கல் வல் திறன் மருப்பின் ஆற்றல் மடித்த என் மார்பின் - அந்த உயர்ந்த திக்குகளைச் சுமந்து நிற்கிற கஜங்களின் [திக்கஜங்களின்] மிகவுமுறுதியான தந்தங்களின் பலத்தை வென்ற என் மார்பின்மேல், உன் துணை கணவன் எய்த அம்பு வந்தால் - உன்னுயிர்த் துணையாகிய நாயகனால் எய்யப்பட்ட அம்பானது வந்தால் [தைத்தால்], அது குன்றிடை தொடுத்து விட்ட பூ கணை என்றான் - அந்த அம்பானது மலைமேலெய்துவிட்ட புஷ்பபாணமேயாம் [புஷ்பபாணம்போலப் பயன்பெறாதொழியும்] என்று சொன்னான், எ - று.—ஓங்கல் - ஆகுபெயர். சுட்டு உலகறிபொருண்மேற்று. வன்திறல் - ஒருபொருட்பன்மொழி.

72.—(மேலும்) உலகம் தாங்கு மலையின் உம் வலிய தோளான் - உலகத்தைச்சுமக்கின்ற மலையைப்பார்க்கிலும் பலமான தோள்களையுடையவன் [ராவணன்], (ஜானகியாரைப்பார்த்து), அணங்கினுக்கு அணங்கு அனாய் - தெய்வப்பெண்ணுக்குத் தெய்வப்பெண்போல்பவளே! நின் ஆசை நோய் அகத்து பொங்க உணங்கிய உடம்பினேனுக்கு உயிரினை உதவி - உன்னாசையாகிய நோய் என்மனதில் விருத்தியடைவதனால் வாடிய சரீரத்தையுடைய எனக்குப் பிராணனைக்கொடுத்து, உம்பர் கணம் குழை மகளிர்க்கு எல்லாம் பெரும் பதம் கைக்கொள் என்னா வணங்கினன் - தெய்வலோகத்திலுள்ள கூட்டமாய்த் திரண்ட குழையையுடைய பெண்களெல்லாருடைய பதவியினும் மேலான பதவியைக் கைக்கொள்வாய் என்று சொல்லிப்

பணிந்தான், எ - று.—மலையினும், உம்மை உயர்வுசிறப்பு. உலகந்தாங்கு மலை - மேருமலை.

73.—அவன் தறைவாய் வந்து அடி தாழுதலும் - அந்தராவணன் தரையில் வந்துவிழுந்து அடிவணங்குதலும், கறை வாள் பட ஆவி கலங்கினள் போல் - இரத்தந்தோய்ந்த வாளானது படுதலால் உயிர் நடுங்கினவள்போல, இறைவா - என் தலைவரே, இளையோய் - இளையவரே! என ஏங்கினள்- என்று ஏங்கினவளாகி, பொறை உயிர் போவதுபோல் புகல்வாள் - சரீரமானது உயிர்நீங்குவதுபோல் சொல்லுவாள், எ - று.—தாழுதலும் - இறந்தகாலவினையெச்சம்; உம் விகுதி காலங் காட்டியது. தறை, தரை இவ்விரண்டும் ஒருசொல்; தராசப்தபவம்.

74. — ஆண்டு அ இடை தீயவன் ஆய் இழையை தீண்டால் எனும் மேல் உரை சிந்தைசெயா - அந்தசமயத்தில் அவ்விடத்தில் கொடியவனாகிய ராவணன் பெண்ணைத் தொடாதே யென்கிற பூர்வத்திலுண்டான சாபத்தை நினைத்து, தான் தாம் எனல் ஆம் உயர் தோள் வலியால் - தானேயென்று சொல்லலாம்படியான உன்னதமாகிய தன்புஜபலத்தினாலே, நிலம் கீழொடு மேல் யோசனை கீண்டான் - பூமியை கீழ்தொடங்கி மேல்வளாக்கும் ஒருயோசனைதூரம் பேர்த்தெடுத்தான், எ-று.—'மேலுரை' என்றது நளகூபரனிட்டசாபத்தை. அதை புராணநாமவிவரணம் என்னுந்தலைப்பில் இராவணன் என்னும்பெயரிற்காண்க. தீண்டால் - எதிர்மறையேவல் வினைமுற்று; ஆல்-விகுதி. கீண்டான், கீள் - பகுதி. யோசனை என்பது சற்றேறக்குறைய ஒருகாவதம் என்கிறார்கள்.

75.—(கீண்டு) உயர் தேர்மிசை கொண்டான் - உயர்ந்ததேரின்மேல் வைத்துக்கொண்டான்; (அதை) கோல் வளையாள் கண்டாள் - அழகிய வளையலையணிந்த பிராட்டியானவள் பார்த்து, தனது ஆர் உயிர் கண்டிலள்- தனது அரிய பிராணனைக் காணுதவளாய், மண் உறும் மின்னின் மயங்கினள் - பூமியில் விழுந்த மின்னற்கொடிபோல் துவண்டு மயங்கினாள்; (அப்போது இராவணன்) விண் தான் வழி ஆ எழுவான் விரைவான் - ஆகாசமே மார்க்கமாகக் கொண்டுபோம்பொருட்டுத் துரிதப்படுபவனாய், எ-று.—இது மேலிற்பாட்டோடுமுடியும். கோலம் என்பது கோல் என அம் குறைந்து நின்றது. ஆருயிர் ஸ்ரீராமனுமாம்.

76.—தேர் விடு என - தேரைநடத்து என்று சாரதியைநோக்கிச் சொல்ல (கேட்டு), வெம் கனல் வெந்து அழியும் கொடிபோல் புரள்வாள் - வெவ்விய நெருப்பில் வீழ்ந்து வெந்து தன்னியற்கைகெடுகிற பூங்கொடிபோலப் புரளுவாள்; குலைவாள் - மனங்குலைவாள்; அயர்வாள் - சோர்வடைவாள்; துடியா விழுவாள் - துடித்துவிழுவாள்; துயரால் எழுவாள் - துன்பத்தோடெழுந்திருப்பாள்; அறனே இது கடிது ஆ கா எனும் - தர்மதேவதையே! இத்துன்பத்தினின்றும் விரைவாக (என்னை)க் காப்பாற்று என்று சொல்லுவாள், எ - று.

77.—மலையே - மலைகளே! மரனே - மரங்களே! மயிலே - மயில்களே!

குயிலே - குயில்களே! கலையே - கலைமான்களே! பிணையே - பெண்மான்களே! களிறே - ஆண்யானைகளே! பிடியே - பெண்யானைகளே! நிலையா உயிரே - நிலைத்திராத என் பிராணனே! நீர் நிலை தேறினர் போய் உலையா வலியாருழை உரையீர் - நீங்கள் (என்னாயகரிருக்கும்) இடத்தைத் தேடிப் போய் வாடாத தோள்வலியையுடையவரிடத்து (இச்செய்தியைச்) சொல்லுங்கள், எ - று.

78.—மஞ்சே - மேகமே! பொழிலே - சோலையே! வன்தேவதைகாள்- வனதேவதைகளே! செம் சேவகனூர் நிலை நீர் தெரிவீர் - செம்மையாகிய வீரத்தன்மையுடையவராகிய ரகுநாயகருடைய நிலையை [இருப்பிடத்தை] நீங்கள் அறிவீர்கள், (ஆதலால்), அஞ்சேல் என நல்குதிரேல் - பயப்படாதே யென்று ஒருவார்த்தை கிருபை செய்வீராயின், (அது பற்றுக்கோடாக), அடியேன் உய்ஞ்சால் அது இழிபு ஓ - அடியேன் பிழைத்தால் அது உங்களுடைய குறைவுக்குக் காரணமாமோ, உரையீர் - சொல்லுங்கள், எ - று.—வனதேவதை - வடமொழித்தொகைநிலைத்தொடர்; இது அம்மொழியுள் வனத்திற்குத் தேவதை என விரியும். உய்ஞ்சால்-உய்ந்தால் என்பதற்குப் போலி, இது இங்கு எதுகை நோக்கிவந்தது.

79.—வரதா - ரகுநந்தனு! இளையோய் - இளையவரே [லக்ஷ்மணு]! மறு ஏது உம் இலா பரதா - களங்கம் சிறிதும் இல்லாத பரதரே! இளையோய்- சத்ருக்னரே! கிருதாதியர் வேர் அற நீள் முகில்போல் சரதாரைகள் வீசினிர் சார்கிலிரோ - ராக்ஷசர்முதலாயினோர் நிர்மூலமாம்படிப் பெரிய மேகம் போலப் பாணவர்ஷத்தைப் பொழிந்துகொண்டுவந்திலீரோ! பழி பூணுதிர் ஓ - இப்பழியைத் தாங்குகிறீர்களோ, எ - று.—பழிபூணுதிரோ - ஓகாரம் இரக்கப்பொருளது.

80.—கோதாவரியே - கோதாவரிநதியே! குளிர்வாய்-குளிர்ந்திருக்கிறாய், குழைவாய் - நெகிழ்ந்திருக்கிறாய்; (ஆகையால்) மாதா அனையாய் - தாயையொத்திருக்கிறாய்; மனன் தெளிவாய் - என் மனநிலையை நன்குணர்வாய்; ஓதாது உணர்வாருழை - சொல்லாமலே யறிந்துகொள்ளுமியல்பினராகிய ரகுநாயகரிடத்தில், ஓடினை போய் - ஓடிப்போய், வினையேன் நிலை நீ சொல்லலை ஓ - (இத்துயரமனுபவித்தற்குக் காரணமாகிய) தீவினையையுடையேனது தசையை நீயாயினும் சொல்லமாட்டாயோ, எ - று.

81.—முந்தும் சுனைகாள் - என்னெதிரிற் காணப்படுஞ் சுனைகளே! முழைவாள் அரிகாள் - குகைகளிலுள்ள ஒளியையுடைய சிங்கங்களே! இந்த நிலனோடு உம் எடுத்த கை நாலைந்து உம் தலை பத்து உம் சிந்தும்படி கண்டு சிரித்திடுவீர் - இந்த மண்ணுடனே (என்னைப்) பேர்த்தெடுத்த இருபது கைகளும் பத்துத்தலைகளும் வருந்தியழிய (ரகுநாயகரது அம்பினால்) சிதறுண்ணும் பிரகாரத்தைப் பார்த்து நீங்கள் சிரிக்கப்போகிறீர்கள், எ - று.

82.—அன்னான் வாக்கினால் சொல்ல - அவன் [ராவணன்] தன் வாயால் (அற்பமானசொற்களை) சொல்ல, (கேட்ட ஜானகியார் அவனைநோக்கி) மாயையால் வஞ்ச மான் ஒன்று ஆக்கினாய் - மாயையினால் ஒரு பொய்

மானையுண்டாக்கினாய்; ஆக்கி உன்னை ஆர் உயிர் உண்ணும் கூற்றை போக்கினாய் - உண்டாக்கி (அதனால்) உனது அரியவுயிரை உண்ணுதற்குரிய கூற்றுவனை [ரகுநாதனை] (என்னைவிட்டுப்பிரிந்து) போகும்படி செய்தாய்; புகுந்து கொண்டு போகின்றாய் - (அவரில்லாதசமயத்தில் திருடன்போல) வந்து (என்னை) எடுத்துக்கொண்டுபோகிறாய்; பொருது நின்னை காக்கும் ஆ காண்டி ஆயின் - அவரோடு போர்செய்து உன்னைக் காத்துக்கொள்ளும் வழியையறிவாயானால், உன் தேனை கடவல் என்றாள் - உனது தேனைச் செலுத்தாதேயென்று சொன்னாள், எ - று.—ஆறு என்பது கடைக்குறைந்தது. கடவல் - எதிர்மறை ஏவல் ஒருமை.

83.—மீட்டு உம் ஒன்று உரை செய்வாள் - மறுபடியும் ஒரு வார்த்தை சொல்லுவாள்; (அதுவருமாறு) நீ வீரனேல் - நீவீரத்தன்மையுள்ளவனானால் [நீ சுத்தவீரனானால்], உன் கூட்டர் ஆம் அரக்கர் தம்மை விரைவின் கொன்று உங்கை கொங்கை மூக்கு உம் வாட்டினார் வனத்தில் உள்ளார் என்ற வார்த்தை கேட்டு உம் இ மாயம் செய்தது அச்சத்தின் கிளர்ச்சி அன்று ஓ - உன் கூட்டத்தாராகிய ராக்ஷஸரை சீக்கிரமாகக் கொன்று உன் தங்கை கொங்கைகளையும் மூக்கையும் அறுத்தவர்களாகிய மனிதர்கள் அரணியத்திலிருக்கிறார்கள் என்ற வார்த்தையைக் கேள்விப்பட்டும் இந்த மாயம் செய்து வஞ்சித்தது (உனக்கு அவர்கள் திறத்துள்ள) பயத்தின் மிகுதியல்லவா? எ - று.—ஒன்று - எண்ணலளவையாகுபெயர். கேட்டும் - உம்மை உயர்வுசிறப்பு; இறந்தது தழீஇயதுமாம். உங்கை-உன்தங்கை யென்பதன் மரூஉ.

84.—மொழிதரும் அளவில் - (இப்படி ஜானகியார்) சொல்லுமளவில், (ராவணன்) நங்கை - பெண்மைக்குணநிறைந்தவளே! இதுகேள் - இந்த வார்த்தையைக்கேள்; முரண் இல் யாக்கை இழிதரு மனிதரோடு யான் செரு ஏற்பல் என்றால் - பலமில்லாத சரீரத்தையுடைய தாழ்ந்த மனிதருடன் நான் சண்டைசெய்வேனாயின், (அச்செயல்), விழி தரும் நெற்றியான் தன் வெள்ளி வெற்பு எடுத்த தோட்கு பழி தரும் - நெற்றிக்கண்ணையுடைய ருத்ரமூர்த்தியின் வெள்ளிமலையை (வேரோடு பறித்து) எடுத்த என் புஜங்களுக்குப் பழியையுண்டாக்கும்; (ஆகையால்) அதனின் வஞ்சம் சால பயன் தரும் என்றான்-அதைப்பார்க்கிலும் வஞ்சனையே மிகவும் (புகழாகிய) பயனைத்தரும் என்று சொன்னான், எ - று.—நங்கை - பெண்பால்; நம்பி - ஆண்பால். அண்மை விளியாதலின் நங்கையென இயல்பாயிற்று.

85.—பாவை உம் அதனை கேளா - பதுமைபோல்வாளும் அதைக்கேட்டு, (அவனை நோக்கி), தம் குல பகைவர் தம்பால் போவது குற்றம்-தமது குலத்துக்குச் சத்துருக்களிடத்துப்போகிறது குற்றமும், வாளின் பொருவது நாணம் - வாளினால் யுத்தஞ்செய்வது வெட்கமும், ஆம் - ஆகும்; கற்பினை வஞ்சிக்கும் ஆற்றல் ஏ ஆவது ஆம் - பதிவிரதைகளை வஞ்சிக்கிற சாமர்த்தியமே நன்மையாகும்; இரக்கம் இல் அரக்கர்க்கு - இரக்கமில்லாத ராக்ஷஸருக்கு, ஏவம் என் - குறையென்ன? பழிதான் என்னை - பழிதானென்ன; என்றாள் - என்று சொன்னாள், எ - று.—பாவை - உவமையாகுபெயர். எவ்வம் - ஏவமென நீட்டல்பெற்றது. எவன் என்பதன் மரூஉவாகிய என், என்னை என்பன எதிர்மறைப்பொருளன.

86.—என்னும் அ வேலையின்கண் - என்றுசொல்லுகிற அந்தசமயத்தில், அடா எங்கு போவது என்னா - அடாராக்ஷஸா எங்கே போகிறதென்று, நில் நில் என்று - நில்லு நில்லு என்று சொல்லிக்கொண்டு, இடித்த சொல்லன் - அதட்டுகிற சொல்லையுடையவனும், இடை நெருப்பு பரப்பும் கண்ணன் - தம்மிடத்தில் நெருப்பைப் பரப்புகின்ற கண்களையுடையவனும், மின் என விளங்கும் வீர துண்டத்தன் - மின்போல் விளங்குகின்ற பலமானமூக்கையுடையவனும், மேரு என்னும் நெடும் பொன் குன்றம் வானின் வருவது ஏ போலும் மெய்யான் - மேருவென்கிற நெடியபொன்மலையானது ஆகாசத்தில் வருவதையே நிகர்த்திருக்கின்ற சரீரத்தை யுடையவனும், எ - று.—சேடா, சேட என்னும் வடமொழிகள் ஏடா, ஏட எனச்சிதைந்து அவை அடா, அட என மருவிவழங்குகின்றன என்பர்.

87.—பாழி வன் கிரிகள் எல்லாம் பறித்து எழுந்து ஒன்றோடு ஒன்று பூழியின் உதிர - பெரிய பலமான மலைகளெல்லாம் பிடுங்கப்பட்டு மேலேயெழுந்து ஒன்றுடனொன்று (தாக்குண்டு) புழுதிபோலுதிரவும், விண்ணில் புடை உற கிளர்ந்து பொங்கி ஆழி உம் உலகு உம் ஒன்று ஆய் அழிதர - ஆகாசத்திற்சென்று போகும்படி எழுந்தோங்கிக் கடலும் மண்ணுமொன்றாகி அழியவும், முழுது உம் வீசும் ஊழி வெம் காற்று இது என்ன - முற்றிலும் வீசுகிற பிரளயகால்சண்டமாருதம் இதுவென்று சொல்லும்படி, இரு சிறை ஊதை மோத - இரண்டு சிறைகளிலுண்டாகிற காற்றானது மோதவும், எ - று.—உதிர அழிதர என்பன வீசும் என்னும் எச்சத்தையும் அது காற்று என்னும் பெயரையும் கொண்டன.

88.—மரம் உம் சாகை (ஒடு) வன் தலை ஒடு தாழ - விருக்ஷங்களும் கிளைகளோடும் வலிய நுனிகளோடும் [சாகோபசாகங்களோடும்] பூமியில் படியவும், மேல் மேகம் உம் விண்ணில் செல்ல - மேலிடத்தில் உள்ள மேகங்களும் ஆகாயத்தில் சிதறிப்போகவும், மீமிசை மாக வெம் கலுழன் வருகின்றான் என நாகம் உம் படம் ஒளித்து ஒதுங்கி நைய - உயர்வாகிய ஆகாசமார்க்கத்தில் அத்யுக்கிரனான கருடபகவான் வருகின்றானென்று நினைத்துப் பாம்புகளும் படத்தைச் சுருக்கிக்கொண்டு ஒதுங்கி வருந்தவும், எ - று.—ஆம் - அசை. மீமிசை - ஒருபொருட்பன்மொழி. கலுழன் - கருடன் என்னும் வடமொழிச்சிதைவு. கருடன் என்பதற்கு சிறகுகளாற் பறப்பவன் என்றும் பாம்புகளை பக்ஷிப்பவன் என்றும் பொருளாம். நாகமென்னும் வடமொழிக்கு மலையிலாயினும் சந்தனமரத்திலாயினும் பிறப்பதென்பது பொருள்; காலால் நடவாததென்பதும் பொருளாம்.

89.—யானை உம் யாளி உம் முதல யாவை உம் - யானைகளும் யாளிகளுமுதலிய யாவையும், கானொடு மரத்தொடு தூறு கல் இவை - காட்டுடனேயும் மரத்துடனேயும் புதல்களும் கற்களுமாகிய இவைகளும், இரு சிறை வீச்சின் மேல் நிறைந்து எறலால் வானம் உம் கானம் உம் மாறு

கொள்ள - இரண்டுசிறைகளின் வீச்சினால் ஆகாயத்தில் நிரம்பியெழுதலால் ஆகாயமும் காடும் மாறுபடவும், எ - று.—கான் கானம் இவை கானநமென் னும் வடமொழிச்சிதைவு; ஜலத்தையே பிராணமாக உடையது என்பது அதன் பொருள்.

90.—உத்தமன் தேவியை உலகொடு ஓங்கு தேர் வைத்தனை ஏகுவது எங்கு - புருஷோத்தமனுடைய தேவியை மண்ணோடு பேர்த்தெடுத்து உயர் ந்த தேரின்மேல் வைத்துக்கொண்டு நீ போவது எவ்விடம்? வானினோடு இதனை திசையை உம் ஈண்டு மறைப்பேன் என - ஆகாயத்துடன் இத் தனை திக்குகளையும் சீக்கிரமாக மறைப்பேனென்று, பத்திரம் சிறைகளை விரிக்கும் பண்பினன் - தனது அழகிய சிறகுகளை விரிக்கின்ற குணத்தை யுடையவனும் (ஆகிய), எ - று.

91.—எருவையின் மன்னன் - கழுகரசன் [ஜடாயு], மாண்பு இலான் எந்திரம் தேர் செலவு ஒழிக்கும் எண்ணினன் - மாட்சிமைக்குணமில்லா தவனது [இராவணனது] எந்திரங்களமைந்த ரதத்தின் போக்கைத் தவிர்க்க வேண்டுமென்கின்ற எண்ணமுள்ளவனாகவும், சிந்துரம் கால் சிரம் - சிவந்த கால்களையும் தலையையும், செக்கர் சூடிய கந்தரம் - செம்மை நிறத்தைத் தரித்த கழுத்தையும் உடைய, கைலையை நிகர்க்கும் காட்சியான் - கைலாச பர்வதத்தையொத்திருக்கின்ற தோற்றத்தையுடையவனாகவும், வந்தனன்- வந்தான், எ - று.—கந்தரம் - கழுத்து; தலையைத்தாங்கிக்கொண்டிருப்பதென் பது பொருள். 86-ம் பாட்டுமுதல் இப்பாட்டுவரையில் ஒரே வாக்கியமாக் கொண்டு சொல்லனும் கண்ணனும் துண்டத்தனும் மெய்யானும் (86), பண்பினனும் (90), ஆகிய எருவையின் மன்னன் எண்ணினனும் காட்சி யானும் ஆகி வந்தனன் (91) என முடித்துப் பொருளுணர்க.

சிறை ஊதை மோத (87), அதனாலே தாழ செல்ல நைய (88), மாறு கொள்ள (89), விரிக்கும்பண்பினன் (90) என்க.

92.—ஆண்டு உற்று அ அணங்கினை அஞ்சல் என - அவ்விடத்துவந்து அந்த சீதாபிராட்டியை அஞ்சாதேயென்று சொல்லி, தீண்டுற்றிலன் என்று உணர் சிந்தையினன் - (ராவணன்) தொடவில்லையென்று அறிந்த மனமுள் ளவனாய், மூண்டுற்று உள வெம் கதம் முற்றிலன் - மூண்டெழுந்த உக்கி ரமான கோபத்தை முற்றச்செய்யாதவனாகி [அடக்கிக்கொண்டு], மீண்டு உற்று உரையாடலை மேயினன் - மறுபடியும் பொருந்திப் பேசத்தொடங் கினன், எ-று.

93.—(அடா ராவணா!) கிளையோடு கெட்டாய் - உன் உறவினருடன் நீ நசித்துப்போனாய்; நின் வாழ்வை எலாம் சுட்டாய் - உனது வாழ்க்கையை யெல்லாம் சுட்டுவிட்டாய் [உனது போகபாக்கியங்களையெல்லாம் நாசம்பண் ணினாய் என்றபடி]; நீ இது என்ன தொடங்கினை-நீ இது என்னகாரியத்தை யாரம்பித்தாய்; பட்டாய் என ஏ கொடு பத்தினியைவிட்டு ஏகுதி - நீ இறந் தாயென்றே யெண்ணிக்கொண்டு பதிவிரதையாகிய சீதாபிராட்டியை விட் டுப்போ; (அப்படிச்செய்வாயாயின்) விளிகின்றிலை-இறக்கமாட்டாய், எ-று.-

கெட்டாய், சுட்டாய், பட்டாய் என்பன துணிவுபற்றி எதிர்காலம் இறந்த காலமாய் வந்த காலவழுவமைதி.

94.—பேதாய் - அறிவில்லாதவனே! எண்ணம் இலாய்-ஆலோசனையில் லாதவனே, பிழை செய்தனை - அபராதம்செய்தாய்; பேர் உலகின் மாதா அனையாளை-பெரியவுலகத்துக்குத் தாய்போன்றவளை [லோகமாதாவை], நீ யா து ஆக மனக்கொடு நினைத்தனை - நீ என்னவென்று மனதிற்கொண்டு நினைத் தாய்? இனி நினக்கு ஆதாரம் ஆர் உளர் - இப்பொழுது (இப்படி நக்ஷமா மிக்கிலக்கான) உனக்குப் பற்றுக்கோடானவர் [ஆச்ரயமானவர்] யாரிருக் கிறார்கள் [ஒருவருமில்லை], எ-று.—மனக்கொடு - சாரியைதொகுத்தல். இனி என்றது "எண்கையாய் கேளினி," "இனி நினைந்திரக்கமாகின்றேன்" என் பவற்றிற்போல இப்பொழுது என்னும் பொருள் தந்தது.

95.—உமர் உய்யாமல் மலைந்து-உன் சுற்றத்தார் (பிழைக்கும்வழியறிந்து) பிழைக்காமல் போர்செய்ய, ஆர் உயிரை மெய் ஆக இராமன் விருந்திட- (அவரது) அருமையான வுயிரை உண்மையாக ஸ்ரீராமன் விருந்துசெய்ய, அந்தகனார் கை ஆர முகந்து கொடு ஐ ஆ புதிது உண்டது அறிந்திலை ஓ- யமதர்மராஜாவானவர் கைநிறைய மொண்டுகொண்டு [வாரிக்கொண்டு] அழ காக விருந்துண்டதை நீ யறிந்தாயில்லையோ [அறிந்தால் இப்படிச் செய்யமா ட்டாயே], எ-று.—மலைந்து-காரணப்பொருட்டாகிய செயவெனெச்சத்திரிபு. இதுகாறும் இவர்களுயிருண்ணுஞ் சமயமெப்போது வாய்க்குமென்று எதிர் பார்த் திவர்க்குக் கூசியிருந்த அந்தகன் இப்பொழுது ஸ்ரீராமனே தன்னை யழைத்து இவர்களுயிரைத் தனக்கு விருந்திடப்பெற்றமையால் கூசாமல் கைநிறையவாரி அழகாக வயிறார உண்டானென்பது தோன்ற 'அந்தகனார் கையாரமுகந்துகொடு ஐயாபுதிதுண்டது' என்றார். புதிது என்னுங்குறிப்பு வினைப்பெயர் ஈண்டு உணவின்மேற்று. அந்தகனார் என்பது அரக்கரதுஉயி ருண்ட வுயர்வுபற்றி வந்த பால்வழுவமைதி; அல்லது யமதர்மராஜா கடவுட் சாதியிற் சேர்ந்தவராதலின் பூஜ்யார்த்தமாகச் சொன்னாரென்னவுமாம்.

96.—கொடு வெம் கரி கொல்லிய வந்து-கொடிய கோவங்கொண்டயானை யானது கொல்லுதற்குவர, அதன்மேல் விடும் உண்டை கடாவ விரும்பினை ஏ - அதன்மீது வில்லினின்றும் விடுதற்குரிய உண்டையைச்செலுத்த அபே க்ஷித்தனையே! அடும் என்பது உணர்ந்திலை - அது உன்னைக் கொல்லுமென் பதை அறிந்தாயில்லை; ஆயின் உம் வன் கடு உண்டு உயிரின் நிலை காணுதி ஓ - ஆனாலும் வலியவிஷயத்தையுண்டு உயிரினது நிலைத்திருத்தலைக் காணப் போகிறாயா [விஷபரீக்ஷைபண்ணிப் பிழைத்திருக்கப்போகிறாயா], எ-று.

97. — எல்லா உலகங்கள் உம் - எல்லா லோகத்தார்களும், இந்திரன் உம் - தேவேந்திரனும், அல்லாதவர் மூவர் உம்-அவரை யொழிந்தவராகிய மும்மூர்த்திகளும், அந்தகன் உம்-யமனும், புல்வாய் புலி கண்டது போல்வர் அலால் - மான்கள் புலியைக்கண்டதையொப்பர் அல்லாமல், வில்லாளரை வெல்லும் மிடுக்கு உளர் ஓ - வில்வீரரை [இராமலக்ஷ்மணர்களை] வெல்லுதற் குரிய பலமுள்ளவராவரோ, எ-று.—மும்மூர்த்திகளாவார்: பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்பவர்கள். புல்வாய் - அன்மொழித்தொகை. உளரோ என் பதில் ஓகாரம் எதிர்மறை.

பொருளிலக்கணவிஷயம்.

1. பொருளாவது,—மக்களுயிர்க்கு உறுதிபயப்பதென உயர்ந்தோரால் வேண்டப்படுவதாம். [இதனை வடநூலார் புருஷார்த்தம் என்பர்.] அப்பொருள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்குவகைப்படும். [இவற்றை வடநூலார் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பர்.] அவற்றுள் வீடு என்பது சிந்தையு மொழியுஞ்செல்லாநிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற்கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம். அவற்றுள்,

2. அறமாவது—இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயப்பதாய் மநுமுதலிய நூல்களில் விதித்தனசெய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். [இவற்றை வடநூலார் ஆசாரம், வியவஹாரம், பிராயச்சித்தம் என்பர்]. அவற்றுள்,

(a) **ஒழுக்கமாவது**—அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியமுதலிய நிலைகளில் நின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களில் வழுவாது ஒழுகுதல்.

(b) **வழக்காவது**—ஒரு பொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள்மேற்சொல்வது. அது கடன்கோடன்முதற் பதினெட்டுப் பதத்ததாம். *

(c) **தண்டமாவது**—அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழுவினோரை அந்நெறி நிறுத்தற்பொருட்டு ஒப்ப நாடி அவ்வவ்வழுவிற்குத் தக்கபடி தண்டித்தலாம்.

3. பொருளாவது—இம்மை மறுமையென்னும் இரண்டையும் பயப்பதாய், அரசநீதி துணைக்காரணமாகச் சம்பாதிக்கப்படுவது. அது மணி, பொன், நெல் முதலாயினவாம். [அரசநீதியாவது - காவலை நடாத்தும் முறைமை.]

4. இன்பமாவது—பொருளைத்துணைக்காரணமாக உடைத்தாய் இம்மையொன்றனையே பயப்பதாய் ஒருகாலத்தில் ஒருபொருளால் ஐம்புலன்களும் நுகர்தற்சிறப்புடையதாம்.

5. அறம் பொருள் இன்பம் என்கிற இம்மூன்று பொருளும் தமிழ் இலக்கணநூலுள் அகப்பொருள், புறப்பொருள் என இருவகையாய் வழங்கும். இவை முறையே அகத்திணை, புறத்திணை எனவும்படும். அவற்றுள்,

6. அகப்பொருளாவது,—மேற்குறித்த அறமுதலியமூன்றனுள் இன்பமென்னும் பொருளாம். அது ஒத்த அன்பினால் ஒருவனும் ஒருத்தியுங் கூடிய கூட்டத்திற் பிறந்து அவருள்ளத்தின்கண் நிகழ்வதாதலின் அகப்பொருளென்னப்பட்டது. இதில் சிருங்கார ரஸமே தலையெடுத்திருக்கும்.

* அவையாவன:—கடன்கோடல், நிக்ஷேபம், உடையனல்லான் விற்றல், கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, கூலிகொடாமை, கட்டுப்பாடு கடத்தல், விற்றுகொண்டு உள்ளமொப்பாமை, ஸ்வாமிபாலவிவாதம், எல்லைவழக்கு, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, திருட்டு, வன்செய்கை, ஸ்திரீஸங்கிரஹணம், மாதராடவர்தருமம், தாயபாகம், சூது என விவை.

7. அவ்வகப்பொருள்.—(1) கைக்கிளைத்திணையும், (2) குறிஞ்சி, (3) பாலை, (4) முல்லை, (5) மருதம், (6) நெய்தல் என்னும் ஐந்திணையும், (7) பெருந்திணையும் ஆகிய இவ்வேழிணையும்பற்றி நிகழும். இவற்றுள், கைக்கிளையென்பது - ஒருதலைக்காமம். ஐந்திணையென்பது - அன்புடைக்காமம். பெருந்திணையென்பது - பொருந்தாக்காமம்.

8. புறப்பொருளாவது,—மேற்கூறிய அறமுதன் மூன்றனுள், அறமும் பொருளும் என்று சொல்லப்படுந்தன்மைத்தாய்ப் புறம்பே நிகழுமொழுக்கமாம். இது எல்லாராலும் அனுபவித்தறிந்து பிறர்க்குச் சொல்லப்படுவதாதலின் புறப்பொருளென்னப்பட்டது.

9. இப்புறப்பொருள் (1) வெட்சித்திணை, (2) வஞ்சித்திணை, (3) உழிஞைத்திணை, (4) தும்பைத்திணை, (5) வாகைத்திணை, (6) காஞ்சித்திணை, (7) பாடாண்டிணை, என எழுவகைப்படும். இதில் சிருங்காரரஸமொழிந்த வீரரஸ முதலியன தலையெடுத்திருக்கும்.

10.

அகம்	புறம்.
குறிஞ்சி	வெட்சி.
முல்லை...	வஞ்சி.
மருதம்	உழிஞை.
நெய்தல்	தும்பை.
பாலை	வாகை.
பெருந்திணை	காஞ்சி.
கைக்கிளை	பாடாண்.

11. மேற்கூறிய அகத்திணையானது அகப்பொருள் என்றும், அகப்புறப்பொருள் என்றும் இருவகைப்படும். அவற்றுள், அகப்பொருளாவது—ஐந்திணையைப்பற்றியதாம்; அகப்புறப்பொருளாவது — கைக்கிளையையும் பெருந்திணையையும் பற்றியதாம். இவற்றுள் சிருங்காரரஸத்தாற் சிறந்தவை ஐந்திணையேயாம்; ஏனை இரண்டும் அத்துணைச்சிறப்பில்லனவாம்.

12. ஐந்திணையாவன,—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என முன்சொன்னவையேயாம்.

13. இவ்வைவகைத்திணைகளுக்கும் அடையாளமாக ஒவ்வொன்றிற்கும் (1) முதற்பொருள், (2) கருப்பொருள், (3) உரிப்பொருள் என மூவகைப் பொருள்கள் சொல்லப்படும்.

[கருப்பொருள் தோற்றுதற்கும் உரிப்பொருள் நிகழுதற்கும் காரணமாய் முதனிற்றலின் முதற்பொருள் என்றும், முதற்பொருளாற்றோன்றுதல்பற்றிக் கருப்பொருள் என்றும், இவையிரண்டினுஞ் சிறந்து திணைக்கு உரித்தாய் நிற்றலின் உரிப்பொருள் என்றும் அப்பெயர்களுக்குக் காரணங்காட்டி, அப்பொருள்களுள் முதலிற் கருவும் கருவினுரியும் சிறந்ததாம் என்றும் கூறுவர்.]

[தொடர்ச்சி.]

அலங்காரவிஷயம்.

[கசச - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

இனி, காவியமாவது,—விழுமிய பொருள்கொண்டு விளங்கிய சொற்றொடையாம். விழுமியபொருளாவது,—'உனக்கு மகன் பிறந்தான்,' 'உன்பகைவன் பட்டான்' என்னு மித்திறத்த வாக்கியங்களாலாவதோரின்பத்தினும் வேறாயதோர் பேரின்பம் விளைப்பது. இதனை விளக்குவன குணமும் அலங்காரமும்; ஆகவே காவியத்திற்கு அப்பொருள் உயிரும், சொற்றொடை உடம்பும், குணவலங்காரங்கள் சிறப்பிப்பனவும் என்றதாயிற்று. இக்கருத்தே

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்னுஞ் சூத்திரத்தாற் கூறப்பட்டது. செய்யுளெனினும், காவியமெனினும் ஒக்கும். செய்யுள் என்னுந் தொழிற்பெயர் கவியின் செய்கையாலாகிய பிரபந்தத்திற்காயிற்று. காவியம் என்னும் வடமொழிக்கு மிதுவே பொருள். இதனை யாப்பிற்கும் கட்டுரைக்குங் கொள்க. [வடநூலார் யாப்பை பத்யம் என்றும், கட்டுரையை கத்யம் என்றும் கூறுவர்.]

இனி, கவியாவான் பிரதிபைமுதலியவுடையனாய் வர்ணனங்களில் சமர்த்தனானவன் என்பர். பிரதிபைமுதலியவாவன,—

கவிதையெனுங் கற்பகப் பூங்கொடிக்கு வித்தா
நவிலும் பிரதிபையே நல்ல—கவியுணர்வும்
பன்னூ லுணர்வும் பலகாற் பயிறலு
நன்னீர் முதலியவா நாடு

என்றுரைக்கப்பட்ட பிரதிபை, செய்யுளாராய்ச்சி, பலநூலாராய்ச்சி, பலகாலுங் கவியியற்றப்பயிறல், உலகவியல்பினுணர்ச்சி, என்னும் இவைகளேயாம். அவற்றுள் பிரதிபையாவது,—

முக்காலக் காரியமு முன்னுணரும் புத்திதனைத்
தக்கார் பிரஞ்ஞையெனத் தாமுரைப்பர்—சிக்கா
திரதிருந் தோற்ற மியங்கி னதுவே
பிரதிபையாம் பேரைப் பெறும்

என்றியம்பியபடி * சென்றது பொச்சாவாது செல்வதையு மூகித்துச் செல்கின்றதினூன்றிநிற்கு நீர்மைத்தாய புத்திவிசேடத்திற்கு பிரஜ்ஞை என்று பெயர். அந்தப் பிரஜ்ஞையானது தடைபடாமல் களிப்புத்தரும்படியான பல தோற்றங்கள் ஒன்றுமேலொன்றாய்க் கிளைக்கப்பெறுமாயின் பிரதிபை என்று சொல்லப்படும். ஆகவே ஜன்மாந்தரபுண்ணியவசத்தினொருமிப் பிரதிபையையன்றி ஓர் பாட்டு மிசைக்குந் திறனுண்டாகாதாதலின் இது வித்தெனப்பட்டது. இஃதுளதேனும் சான்றோர் செய்த செய்யுட்பலவற்றின் நுட்பவுணர்ச்சியும், இலக்கணநூல் அறநூல் பொருணூல் முதலிய பலநூற்பொருட்டேர்ச்சியும் பயிர்ச்சியுமில்லையாயின் செய்த செய்யுள் சிறக்காது கற்றோர் கடியுந் தன்மைத்தாமாகலின் இவையாவும் நன்னீர்முதலிய என்னப்பட்டன. இதனால் ஓர்நூல் செய்யப் பிரதிபை முதற்காரணமெனவும், ஏனையவை துணைக்காரணமெனவும் கூறப்பட்டனவெனவறிக.

* சென்றது பொச்சாவாமையை ஸ்ம்ருதி என்றும், செல்வதையூகித்தலை மதி என்றும், செல்கின்றதினூன்றிநிற்றலை புத்தி என்றுங் கூறுவர் வடநூலோர்.

வர்ணனமாவது,—அநேகவித உல்லேகங்கள்.

இனி கவிகர்ம ரூபமான காவிய மித்தன்மைத்தென்றும், அதன் பரிகாரங்களிவையென்றும் அறியப்புகுமுன்னர் கவிகளுடைய ஸமயங்கள் [ஸங்கேதங்கள்] இப்படிப்பட்டவையென்று ஒருவாறு அறியவேண்டும். அவற்றையறியாமல் காவியஸ்வரூபங்களையறிதல் இன்பமாயிராது.

கவிகளுடைய ஸங்கேதத்துக்குட்படாமல் ஸ்வதந்திரமாய் நடக்குங் காவியங்கள் துஷ்டங்களென்றெண்ணப்படும். [துஷ்டங்கள்—குற்றப்பட்டவை].

கவிஸமயங்களாவன,—பழையகவிகளெல்லோரும் ஒரேவகையாய் வர்ணிக்கும்படிசெய்துகொண்ட ஏற்பாடுகள். அவை பொதுவாய் மூன்றுபேதங்களுள்ளன. அவை (1) உள்ள பொருள் குணஞ் சாதி தொழில்களைவர்ணியாமை, (2) இல்லாதபொருள் முதலியவற்றை வர்ணித்தல், (3) பலவிடத்துமுள்ள பொருள்முதலியவற்றை ஓரிடத்தே நியமித்தல், என்பனவாம். அவற்றுள்,—

1. (a)—உள்ளபொருளைவர்ணியாமை — கிருஷ்ணபக்ஷத்தில் நிலவிருப்பினும், சுக்லபக்ஷத்தில் இருளிருப்பினும் வர்ணியாமை.

(b) உள்ளகுணத்தைவர்ணியாமை—காமுகருடைய பற்களிற் செம்மையிருப்பினும், தாமரைமொக்குளிற் பசுமையிருப்பினும், வர்ணியாமை.

(c) உள்ளசாதியைவர்ணியாமை — வஸந்தகாலத்தில் சிறுசண்பகமலரிருப்பினும் வர்ணியாமை. சந்தனமரங்களில் பூவும் பழமுமிருந்தாலும், அசோகமரங்களில் காய்கனிகளிருந்தாலும் வர்ணியாமை.

(d) உள்ளதொழிலைவர்ணியாமை —பகலில் கருங்குவளைக்கு மலர்ச்சியிருப்பினும் இரவிலவற்றிற்குக் குவிவிருப்பினும், தாமரைமலர்க்கு இரவில் மலர்ச்சியிருந்தாலும் பகலில் குவிவிருந்தாலும் வர்ணியாமை.

2. (a) இல்லாதபொருளைவர்ணித்தல்—அந்தகாரத்துக்கு தீண்டத்தகுதல், பிடியிற்பிடிக்கத்தகுதல், ஊசியாற்குத்தத்தகுதல், கந்துதிரட்டத்தகுதல்; நிலவுக்குக் குடங்களில் மொள்ளத்தகுதல், சோங்கையாற் குடிக்கத்தகுதல் முதலியன.

(b) இல்லாதகுணத்தைவர்ணித்தல்—கீர்த்தியிலும் நகை [—சிரிப்பு] யிலும் வெண்மையையும், அநுராக பராக்கிரமங்களில் செம்மையையும், அபகீர்த்தி பாவம் முதலியவற்றுக்குக் கருமையையும் வர்ணித்தல் முதலியன.

(c) இல்லாதசாதியைவர்ணித்தல்—சாதாரண மலைகளிலும் பொன் மணி முதலியவற்றை வர்ணித்தல்; சிறுகுளங்கள் முதலியவற்றுள்ளும் அன்னங்களை வர்ணித்தல்; சந்தனம் கற்பகம் முதலிய மரங்களைக் கொடிகளாக வர்ணித்தல் முதலியன.

(d) இல்லாததொழிலை நியமித்தல் — இரவிற்சக்ரவாகமிதுனங்களுக்குப் பிரிவும்வேறிடத்திருப்பும், உதயகாலத்திற்சேர்க்கையும்; சகோரபக்ஷிகளுக்கு நிலவைக் குடித்தலும்; இலக்குமிக்கு இராஜநேத்திரம், பதுமம்முதலியவற்றி லிருப்பும்; பூமிக்கு மன்னர்தோள்களிலிருக்கையும்; மழைக்காலத்தில் அன் னங்கள் மானஸவாவிக்குப்போதலும், முதலிய தொழில்களை நியமித்தல்.

3. (a) **பலவிடத்துமுள்ள பொருளை யோரிடத்து நியமித்தல்** — ஆகாசம் மேலுங்கீழும் முழுவதுமிருந்தாலும் மேற்பாகத்திலேயே அதை வர்ணித்தல்.

(b) **பலவிடத்துமுள்ள குணங்களை யோரிடத்து நியமித்தல்**—பொதுவாய் வஸ்திரம் புஷ்பம் சத்திரம் [=குடை] முதலியவற்றை வெண்மையாகவேவர் ணித்தல்; சாதாரணமாய் மேகத்தையும் கடலையும் கறுப்பாகவே வர்ணித்தல்.

(c) **பலவிடத்துமுள்ள சாதியை யோரிடத்தே நியமித்தல்**—மலயபருவதத் திலேயே சந்தனமரங்களு முத்துக்களுமுள்ளனவாகவும்; இமயமலையிலேயே மான்மதமும் சாமரையுமுள்ளனவாகவும்; யவனதேசத்திலேயே புரவிகளுள் ளனவாகவும்; கலிங்கதேசத்திலேயே யானைகளுள்ளனவாகவும் வர்ணித்தல்.

(d) **பலவிடத்துமுள்ள தொழில்களை யோரிடத்து நியமித்தல்** — வசந்த காலத்திலேயேகுயில்கொஞ்சுதலைநியமித்தல்; மழைக்காலத்திலேயே மயில்க ளகவுதலை நியமித்தல்; முதலியன. [இங்கு இடம் காலத்தினிடமாயிற்று. மற்றவிடங்களையும் வந்தாங்குகாண்க.]

இன்னுஞ் சில நியமங்களுமுண்டு.—அவை ஐராவதத்தை வெண்மையா னதாகவே வர்ணித்தல். உலகங்களை மூன்றாயும் ஏழாயும் பதினான்காயும் சொல்லுதல். திக்குகளை நான்காகவும் எட்டாகவும் பத்தாகவும் வர்ணித்தல். ஸமுத்திரங்களை நான்காகவும் ஏழாகவும் வர்ணித்தல். யானையின் மதத்தை மூன்றாகவும் ஏழாகவும் எடுத்துரைத்தல். சந்திரனிடத்து முயலுக்கும் மானுக்கும், மன்மதனுடைய கொடியிடத்து மகரத்துக்கும் மத்ஸ்யத்துக் கும், தானவாஸுரதைத்யர்களுக்கும் அபேதமேயெண்ணுதல் முதலியன.

[தொடர்ச்சி.]

பழமொழிகள்.

9. அசைந்துதின்பதுமாடு அசையாமற்றின்பதுவீடு.
ஆனையசைந்துதின்னும் வீடுஅசையாமற்றின்னும்.
10. அச்சாணியில்லாததேர் முச்சாணுமோடாது.
மீகாமனில்லா மரக்கலமோடாது.
11. அஞ்சலிவந்தனம் ஆருக்குநன்மை.
கீழோராயினும் தாழவுரை.
12. அஞ்சினவன்கண்ணுக்கு ஆகாயமெல்லாம்பேய்.
வெருண்டவன்கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய்.
13. அடாதுசெய்தவர் படாதுபடுவர்.

கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் ௧.] ௧௮௯௬ - ௵ செப்டெம்பர் மீ [சஞ்சிகை ௮.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதியாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ னருளினெ ளெளியவர்ச் சையுமாகி யுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருளிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

ஜடபரதோபாக்கியானம்.

சுவாயம்புமனுவினுடைய மூத்தகுமாரராகிய அக்நீத்ரர் என்பவருக்கு ஒன்பதுபிள்ளைகளிருந்தார்கள். அவர்களுள் ஒரு வருக்கு நாபி என்றுபேர். இவர்பங்குக்கு ஜம்பூத்துவீபம் வந்தது. இந்த நாபிமஹாராஜாவுக்கு மேரு தேவியென்னும் மனையாளிடத்து ருஷபர் என்று ஒரு குமாரர் பிறந்தார். இந்த ருஷபரை விஷ்ணுவின் அவதாரம் என்பர். இந்த ருஷபருக்கு நூறுபிள்ளைகள் பிறந்தார்கள். அவருள் மூத்தபிள்ளைக்கு பரதர் என்று பெயர். ருஷபர் வெகுகாலம் ராஜ்யபாரம்வகித்துப் பின்பு நல்லொழுக்க முள்ள தமது மக்களுக்கு ஸமஸ்த தர்மங்களையும் உபதேசித்து, பரதருக் குப் பட்டங் கட்டித் தாம் அவதூதராய் தேசாடனஞ்செய்துகொண்டி ருந்தார். இவர் பரமயோக தியானபரர் என்றும் புராணங்களிற்சொல்லப் பட்டிருக்கின்றது.

நல்லொழுக்கத்திற்சிறந்த பரதமகாராஜரும் சிலகாலம் ராஜ்யபரிபாலனம் பண்ணி விரக்தராய் ஸர்வஸங்கபரித்தியாகஞ்செய்து ஸ்ரீவாசுதேவனிடத் திலேயே ஹ்ருதயத்தை நிறுத்தி அவர் திருவடிகளையே தியானஞ்செய்து கொண்டு ஸாளக்கிராம க்ஷேத்திரத்திலே நெடுநாள் வாசஞ்செய்திருந்து மஹாகுணவானாய் அஹிம்ஸை முதலான காரியங்களிலே மிகவுத்தமராய் மனதையடக்குவதிலும் வெகுசாமர்த்தியமடைந்திருந்தார். மேலும்

𑌯𑌜𑍍𑌞𑍇𑌶𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌮𑌾𑌧𑌵𑌾𑌨𑌨𑍍𑌤𑌕𑍇𑌶𑌵।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁𑌤𑍇 ॥

[யஞ்ஞேச, அச்சுத, கோவிந்த, மாதவ, அநந்த, கேசவ, கிருஷ்ண, விஷ்ணோ, ஹிருஷீகேச, வாசுதேவ, உனக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறேன்]

என்று இப்படிக் கனவிலும் நனவிலும் உச்சரித்து அவைகளின் பொருள்களையே சிந்தித்துக்கொண்டு, சமித்து, புஷ்பம், தருப்பை, முதலான திரவியங்களை ஸங்கிரகித்து வைதிககர்மங்களையேசெய்துவந்தார். இப்படியவர் பற்றில்லாமல் யோகதபசு செய்துகொண்டிருக்கையில் ஒருநாள் மகாநதியினிடத்துக்குப்போய் நீராடிச் செய்யவேண்டுமான சடங்குகளையுஞ் செய்து நிற்கையில், அங்கே கருவுயிர்க்குந்தருணமுடையதான மானொன்று தனியே வந்து தண்ணீர்குடித்துக்கொண்டிருந்தது. அப்போது ஒருசிங்கத்தின்கர்ச்சனை அங்கே கேட்கப்பட்டது. அதிபயங்கரமான அந்த கர்ச்சனை கேட்டமாத்திரத்திலே அம்மான் மகாபயமுற்றுத் திகைத்துப் பரபரப்புடனே மிக உயரமான அந்நதியின் கரையின்மேலேற அதன் கருப்பமானது கீழே நதிஜலத்தில் நழுவிவிழுந்து அலைகளிலே மிதந்தது. அதுகண்டு பரதர் அந்த மான்குட்டியை வாரியெடுத்துக் கொண்டார். அந்தத்தாய்மானும் கருப்பம் விழுந்த அதிர்ச்சியினாலும் மிகவுயரத்திலேநின வருத்தத்தினாலும் கீழே விழுந்து இறந்தது. அவ்வாறு அந்தமான் இறந்ததும் அந்தச் சிறுகுட்டி அந்தரமாயிருப்பதுங்கண்டு அந்தமகாயோகி மிகவும் இரக்கமுற்று அக்குட்டியை எடுத்துக்கொண்டு தமதாச்சிரமஞ்சேர்ந்து அதை வெகு அன்புடனே வளர்த்துவர, அதுவும் நாளுக்குநாள் வளர்ந்ததாகி அவ்வாச்சிரமத்தின் சமீபத்திலே இளம்புற்களைமேய்ந்து திரிந்துகொண்டும், ஒவ்வொருவேளை தூரத்திற்போய் மேய்ந்துகொண்டிருந்து ஆச்சிரமத்திற்கு ஓடிவந்துகொண்டும், காலையிற்புறப்பட்டு அங்கங்கே ஓடிமேய்ந்து சாயங்காலத்தில் அவர்வாசஞ்செய்யுங் குடிசையி னருகேவந்துகொண்டுமிருந்தது. இவ்விதமாய் அந்த மிருகமானது தூரத்திலேயும் சமீபத்திலேயும் இருந்து விளையாடுகையில் அம்முனிவருடையமனம் அதனிடத்திலேயே பற்றிநின்றதேயன்றி வேறொருவிஷயத்திலுஞ்செல்லவில்லை. இராச்சியம் மக்கள் முதலான சகல பந்தங்களையும் விட்டு யோகநிஷ்டையிலிருந்த அம்முனிவர், அம்மான்குட்டியினிடத்திலே தனதென்னும் அபிமானம் பற்றினவராய் அது சிறிதுபொழுது காணப்படாமலிருந்தால் "ஐயோ என்னுடைய மான்குட்டியைச் செந்நாய் தின்றதோ, புலியறைந்ததோ, சிங்கந்தான்கொன்றதோ, இன்னும் வரவில்லையே என்னசெய்வேன்! அந்தமான்குட்டி இங்கே குதித்து விளையாடும்போது அதன் சிறுகுளம்புகளினால் பெயர்க்கப்பட்டு மேடுபள்ளமாயிருக்கிற இந்த இடம் எனக்கு எவ்வளவுசந்தோஷத்தை யுண்டுபண்ணுகிறது. அப்படிப்பட்ட என்னுடையமான்குட்டி எங்கேபோயிற்றோ, தெரியவில்லை! மேலும் அது என்னருகிலேவந்து தன்கொம்பினாலே என்னுடம்பைச்சொறிந்து சுகமுண்டாக்குமே! அப்படிப்பட்ட அந்தக்குட்டி க்ஷேமமாய் வந்துசேர்ந்து எனக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குமோ, வந்துசேராமல் துக்கத்தை யுண்டாக்குமோ, என்செய்வேன்! அந்தக்குட்டி இப்போதுதான்முளைத்த தன்சிறியபற்களாலே கடிக்க, நுனிகளை யிழந்து நிற்கிற இந்தத்தருப்பைகளும் நாணல்களும் சாமவேதிகளான பிரமசாரிகளைப்போலே மொட்டைகளாய் விளங்குகின்றனவே! இவ்வாறு மறுபடியும் அதுவந்து மேய்க்கான் பேறோ என்னவாகுமோ!" என்றுவிசனப்படுவதும், அது சமீபத்தில்வரும்பொழுது மிகுந்த மகிழ்ச்சியடைவதுமாயிருந்தார்.

இப்படி அதன்மேலே அன்பு பாராட்டிவந்தமையாலே ராச்சியபோகாதிகளெல்லாவற்றையுந் துறந்த அவருக்கும் சமாதி நிஷ்டை குலைந்து போயிற்று. அந்த மான்குட்டி ஓடிவிளையாடும்போது அதன் வடிவான பார்வையையும் தூரத்தில் போயிருக்கும்போது மனமும் தூரமாக வோடிச் சிந்தித்துக்கொண்டிருப்பதுமாய் யோகபங்கமுற்ற அந்தப் பரதமகாராஜாவுக்கு நிரியாணகாலம்நேர்ந்தது. அப்போது பிதாவை மிகவும் அன்புள்ள மகன் நோக்குவதுபோல அந்த மிருகமானது கண்களில்நீர்ததும்ப அவரை நோக்கிக்கொண் டிருந்தது. அவரும் அப்படியே பிரியமான புத்திரனைப்பார்ப்பதுபோலவே கண்ணுங் கண்ணீருமாய் அம்மான்குட்டியைப் பார்த்துக்கொண்டே பிராணனைவிட்டார். ஆனதனாலே அவர் மறுஜனனத்திலே ஜம்பூமார்க்கமென்கிற கங்கைக்கரைக்காட்டிலே மானாகவேபிறந்து யோகப்பிரபாவத்தினாலே பூர்வஜன்மஞானமுடையவராய் வெறுப்படைந்து தாயைவிட்டுப்பிரிந்து முன்னிருந்த சாளக்கிராம க்ஷேத்திரத்திற்கே வந்து உலர்ந்துபோன புற்களையும் சருகுகளையுந் தின்றுகொண்டு, மானாய்ப்பிறப்பதற்கு ஏதுவாயிருந்த கருமத்தைக் கழித்துவந்து அங்கேதானே மரணமடைந்து, நல்லொழுக்கமும் யோகநிஷ்டையும் மிகுந்த உத்தமமான ஒரு பிராமணகுலத்திலே பூர்வஜன்ம ஸ்மரணத்தோடுபிறந்து முன்னிருந்தபடியே சகலசாஸ்திரங்களின் உண்மையறிந்தவராய் சகலவித ஞானத்திலும் தேர்ந்தவரா யிருந்து ஆத்தும சொரூபத்தைப் பிரகிருதிக்கு வேறாகவும் தேவாதிசகல சரீரங்களிலுமுள்ள ஆத்தும ஸ்வரூபங்களெல்லாம் தன்னைக்காட்டிலும் பேதமில்லாமல் விலக்ஷணமான ஞானாகார முள்ளவைகளாகவும் பாவித்திருந்தார். வேதமுதலான சகலசாஸ்திரங்களுங் கற்று அவற்றால் பெறவேண்டிய ஞானத்தைப் பெற்றிருக்கையாலே குரு ஓதுவித்த வேதாதிகளை அவர் ஓதினாரில்லை; ஆத்துமஞானம் கைவசப்பட்டு அனுபவநிஷ்டையி லிருந்தபடியினாலே யாதொரு கருமத்தையுஞ் செய்தாரில்லை; அவர் வித்துவானாயிருந்தும் மூடனைப்போலே இலக்கணங்களுக்குப் பொருந்தாத பேச்சைப் பேசிக்கொண்டு அழுக்கு நிறைந்த வுடம்பும் அழுக்கான கந்தைத்துணியும் ஊத்தைமிகுந்த பல்லுமாய் கண்டோர் யாவரும் அருவருத்துத் தூஷித்து அவமதிக்கும்படி நடந்து,—

ஸந்மாநநா பராம் ஹாநிம் யோகர்த்தே: குருதே யத: ।
ஜநேநாவமதோ யோகீ யோகஸித்திஞ்ச விந்ததி ॥

ததா சரேத வை யோகீ ஸதாம் தர்மமதூஷயந் ।
ஜநா யதாவமந்யேரந் கச்சேயுர் நைவ ஸங்கதிம் ॥

[உலகத்தார்செய்யும் வெகுமதிப்பானது யோகசம்பத்துக்கு மிகுந்த கேட்டைத்தரும்; அவமதிப்போ கர்வாகங்காரங்களைப் போக்குவதனாலே யோக சித்தியைத் தரும்; ஆதலால் யோகியானவன் யாவரும் தன்னிடத்திற்சேராமல் தன்னை யவமானம்பண்ணும்படி ஜடனைப்போலக்காட்டிப் பெரியோர்களுடைய ஒழுக்கத்துக்குப்பழுதுவாராமற் காத்துநடக்கவேண்டும்.] என்கிற இரணியகர்ப்ப வாக்கியங்களைநினைத்து அந்தபரமயோகியானவர் மூடனைப்போலவும் பயித்தியம்பிடித்தவனைப்போலவும் திரிந்துகொண்டிருந்தார். அப்படியிருந்ததனாலேதான் அவருக்கு ஜடபரதர் என்றுபெயருண்டாயிற்று. அவர் புழுத்துக்கெட்டுப்போன உழுந்து யவை முதலியவைகளாற்செய்த அப்பங்களாகிலும் கீரையாகிலும் காட்டுக்கிழங்கு முதலியவை யாகிலும் தினையாகிலும் எது எப்போது எவ்வளவுகிடைக்குமோ அவ்வளவையே மேன்மையாகவும் வெகுவாகவும் பாவித்துப் பிராணதாரணை செய்துகொண்டு சந்துஷ்டியடைந்திருந்தார். இவ்விதமான இவருக்குத்தகப்பனார் லோகாந்தரஞ்சேர்ந்தபின் இவருடைய அண்ணன்தம்பிமார்களும் அவர்களுடைய மக்களும் மற்றுமுள்ளபந்துக்களும் அல்ப ஆகாரமே கொடுத்து இவரைக்கொண்டு கழனிவேலைசெய்வித்து வந்தார்கள்; அவர் வேலைகளைத் திருத்தமாகச்செய்யாமல் மூடனைப்போற்செய்துவந்தார்; அவர் அப்படி அல்பாகாரமுண்டு வேலைசெய்துவந்தாலும் உடம்புநன்றாய்ப் பருத்துக் கண்களிரண்டும் வித்தியாசமில்லாமற் சமானமாய் விளங்கியிருந்தார். இவரை இவர் பந்துக்கள்மாத்திரமேயன்று அன்னியர் யாராவலும் வேறுகூலியில்லாமல் கிஞ்சித்து ஆகாரமே கூலியாக எந்தவேலைசெய்யச்சொன்னாலும் தடையின்றிச்செய்தேவந்தார்.

முன்சொல்லியபடி அழுக்குத்தீர்ப்பது முதலானசெய்கைகள் ஒன்றுமில்லாமல் சிகாயஞ்ஞோபவீதமுதலான பிராமணசின்னங்களும் நீராடல் சந்தியாவந்தனஞ்செய்தல் முதலிய பிராமணாசாரங்களு மாத்திரமுடையவராய்ப் பித்தனைப்போலே திரிந்துகொண்டிருந்த அந்த யோகியை ஸவ்வீராஜனுடைய சாரதியானவன் ஒருகாலத்தில் காளிக்கு நரபலியாகக்கொடுக்கும்படி நிச்சயித்து இரவில் பிடித்துக்கொண்டுபோய் பலியிடுவதற்கு உரிய கோலஞ்செய்து காளிகோயிலுக்கு எதிரில் கொலைக்களத்திற்கொண்டுபோய் நிறுத்த, அந்தக்காளியானவள் இவர் மகாயோகீச்சுரர் என்பதை யறிந்து இவரைப்பலியிடவந்த அந்தக்கொடியவனையேகத்தியினாலேவெட்டி அவன் கழுத்தினின்றுமொழுகின உதிரத்தைத் தன்பரிவாரத்தோடு கூடக் குடித்துக் குதூகலமடைந்தாள்.

பின்பொருகாலத்தில் இக்ஷுமதீநதிதீரத்தில் எழுந்தருளியிருக்கும் கபில மகாமுனிவரிடத்துக்கு துக்கமயமான இந்தச் சமுசாரத்தில் எது சிரேயசு என்றுவிசாரித்தறியும்பொருட்டுப் பிரயாணப்பட்டிருந்த ஸவ்வீராஜனுடைய சேவகனொருவன், நீறுபூத்த நெருப்பைப்போலே பிரபாவம்வெளிப்படாமல் ஜடாகிருதியாய்த்திரிந்துகொண்டிருந்த பரதரை வழியில் அரசன் சிவிகையைச் சுமப்பதற்குத்தகுந்த சிவியானாகநினைத்து அமிஞ்சிபிடித்துப் போட்டான். அவ்வரசனுடைய பல்லக்குப்போயிகளாக அமிஞ்சிபிடித்துப் போட்டிருக்கிற ஆட்களுக்குள்ளே இவரும் ஒருவராய், சகல ஞானபூர்ணராயிருந்தாலும் பூர்வஜன்மத்தைநினைத்துப் பாபங்கள் க்ஷயிக்கும்பொருட்டுப் பல்லக்கைச்சுமந்துபோனார். போகையில் இவர் அஹிம்ஸையேபரமதர்மமென்று அறிந்தவராதலால் தமதுகாலின்கீழ் ஒருஜந்துவும் அகப்பட்டிறவாதிருக்கும்படி நுகத்தடியளவுதூரம் தரையைப்பார்த்துக்கொண்டு மெதுவாய்நடக்க, மற்றவர் துரிதமாய்நடக்க, பல்லக்கின்நடை விஷமமாயிருந்தபடியால் அவ்வரசன் சரியாய்நடவுங்கள் என்றுசிவியாரைநோக்கிச்சொல்லியும் சிவிகையின் கதி விஷமப்பட்டே போனபடியினாலே கோவத்தினால் சிரித்துக்கொண்டு, ஓ சிவியாரே என்பேச்சையுங்கடந்து ஏனிப்படி நடக்கிறீர்கள் என்று பலதரம் சொல்ல, அச்சிவியார், மகாராஜாவே! எங்களிற் குற்றமில்லை; இவனொருவன் இப்படிநடக்கிறானென்றார்கள். அதுகேட்டு அந்தராஜன் அந்தப் பிராமணோத்தமரை நோக்கி, 'அடா என்பல்லக்கைச் சிறிதுதூரமே நீசுமந்தாய், இதனாலேயே விடாய்த்துப்போனையோ? மேலும் நீ வருத்தஞ்சகிக்கமாட்டாதவனோ? பிரத்தியக்ஷமாய்ப் பருத்தவனாகவே காணப்படுகிறாய்' என்றுசொல்ல, அந்தப்பிராமணர் அரசனைநோக்கி, 'நான் பருத்தவனுமல்லேன், உன்பல்லக்கைச் சுமக்கவுமில்லை, நான்வருந்தவுமில்லை, அதன்காரணமான் ஆயாசமும் எனக்கில்லை' என்றார். அரசன் அதுகேட்டு அவர்கருத்தறியாமல், பிரத்தியக்ஷத்தில் நீபருத்துக்காண்கிறாய்; இப்போதும் உன்தோளில்என்பல்லக்கிருக்கின்றது, சுமைசுமப்பதனால் சகலபிராணிகளுக்கும் ஆயாசம் உண்டென்பதும் நிச்சயம், அப்படியிருக்க நீயென்ன பொய்சொல்லுகிறாயென்று அவரைப் பார்த்துச்சொன்னான். அதற்கு அந்தப்பிராமணர் 'ஓ அரசனே! நீஎன்னவோபிரத்தியக்ஷமாய்க்கண்டேனென்று சொன்னையே அந்தவஸ்துவை முன்னே எனக்குத்தெரியச்சொல்; அது பலமுள்ளதென்றும் பலமில்லதென்றும் விசேஷணங்களைப் பின்னே சொல்லலாம். மேலும் உன்னாலே சிவிகைசுமக்கப்பட்டதென்றும் இப்போதும் உன்மேல் அது இருக்கின்றதென்றும் சொன்னையே, இது சுத்தப்பொய்; அதைக்குறித்து நான்சொல்வதைக்கேள்: நிலத்திலேஇரண்டுபாதங்களிருக்கின்றன; அவற்றின்மேல் கணைக்கால்களிருக்கின்றன; அவைகளிலே தொடைகளிரண்டுநிற்கின்றன, அவற்றை ஆதாரமாகப்பற்றி நிற்கின்றது வயிறு; மார்பு கைகள் தோள்கள் இவையெல்லாம் வயிற்றின்மேலிருக்கின்றன; அந்தத்தோள்களைப் பற்றியிருக்கின்றது சிவிகை; இப்படியிருக்க எனக்குப் பாரம் எதனாலே உண்டாயிற்று? அந்தச்சிவிகையிலே நீயென்று உன்னா

லே நினைக்கப்பட்டதேகமிருக்கிறது; அந்தத்தேகத்திலே நீயிருக்கிறாய்; அப்படியே இந்தத்தேகத்தில் நான் இருக்கிறேன்; இப்படியிருக்க இதுவெல்லாம் உன்னாலே வேறுவிதமாயன்றோ சொல்லப்படுகிறது; அரசனே! நானும்நீயும் மற்றவர்களும் தேகங்களாய் மாறிநிற்கிறபிருதிவிமுதலான பஞ்சபூதங்களாலே சுமக்கப்படுகிறோம்; இந்தப்பூதவர்க்கமும் குணங்களின்பிரவாகத்திலேவீழ்ந்து அதன்வசத்தினாலே நடத்தல்முதலிய வியாபாரங்களைப் பெற்றிருக்கின்றது; அந்தச் சத்துவமுதலான குணங்களும் கருமங்களுக்கு வசப்பட்டிருக்கின்றன; அந்தக்கருமங்கள் அவித்தையினாலே சம்பாதிக்கப்பட்டிருக்கின்றன; அவ்வவித்தை சகலப்பிராணிகளிலுமிருக்கின்றது; ஆத்துமாவோ சுத்தமாய் நாசமில்லாததாய் பசிமுதலான ஷடூர்மிகளுமற்றதாய்ச் சத்துவாதி குணரகிதமாய் குணமயமானபிரகிருதியைக்காட்டிலும் வேறானதாயிருக்கின்றது; அது சகலஜந்துக்களிலும் தேகம்போலே அனேகாம்சமாயிராமல் ஒரேயம்சமாயிருக்கிறது; அதற்கு வளர்தலுந் தேய்தலுமில்லை; இப்படி ஆத்துமாவுக்கு விருத்திக்ஷயங்களில்லாமலிருக்க, நீ பருத்திருக்கிறாயென்று எந்தயுத்தியினாலேசொன்னாய்? அன்றியும், பூமி, பாதம், கணைக்கால், தொடை, இடை, முதலான அவயவங்களின் அடுக்கின்மேலான தோளிலிருக்கிற பல்லக்கினால் எனக்குப்பாரமுண்டென்றால் அந்தப்பாரம் உனக்கும் சமமாயிருக்கவேண்டும்; மேலும் சகலமானபேருக்கும் இந்தப் பல்லக்கின்பாரம்மாத்திரமன்று, காடு, மலை, வீடு, முதலானவற்றைப்பற்றிய பாரமும் உண்டாகின்றதெனச் சொல்லவேண்டும்; இப்படியல்லாமல் ஆத்துமாவானது பிராகிருதங்களான அவயவங்களைக்காட்டிலும் வேறென்பது சித்தமாகிறபோது நான் பாரத்தைச் சுமக்கிறேனென்பது எது? இந்தச் சிவிகை எந்தவஸ்துவினாலானதோ அந்தவஸ்துவினாலானதுதான் இந்தவுடம்பு. இதிலேதான் உனக்கும் எனக்கும் மற்றவர்களுக்கும் மமத்துவம் [எனது என்கிற அபிமானம்] ஆரோபிக்கப்பட்டிருக்கிறது;' என்றிவ்வளவு பேச்சைப்பேசி அந்தயோகியானவர் வாயைமூடிக்கொண்டு பல்லக்கைச்சுமந்துகொண்டேபோனார். இதுகேட்டவுடனே அவ்வரசன் திடுக்கிட்டுச் சிவிகையினின்றுந் திடீரென்றுகுதித்து அவர்திருவடிகளைப்பிடித்துக்கொண்டு, 'ஓ, பிராமணோத்தமரே! இப்பல்லக்கைவிட்டு அடியேன்அறியாமையினாலே செய்தகுற்றத்தைமறந்து அடியேனிடத்தில் அனுக்கிரகஞ்செய்தருளல்வேண்டும். தேவரீர் ஜடனைப்போலே ரூபந்தரித்துக்கொண்டிருக்கிறீர்; தேவரீர் யாரோ தெரியவில்லை; மேலும் என்னகாரணத்தினாலே என்ன பயனைக்கருதி இங்கே எழுந்தருளியது? இவற்றையெல்லாம் அறியவிரும்பி வணங்கிநிற்கிற அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும்' என்று பிரார்த்திக்க ஜடபரதர் அருளிச்செய்கிறார்.

அரசனே! கேள். நீயாரென்று வினாவினையே, அதற்கு நானின்னானென்று விடைகொடுக்கக்கூடாததாயிருக்கின்றது. எப்பயனைநோக்கி எதனால் இங்கேவந்தாயென்பதற்கும் விசேஷித்துவிடைகொடுக்கவேண்டுவதில்லை; ஏனென்றால் எங்கும் வருவதற்குப்பயன் அனுபவமே. இந்தச்சுகதுக்கானுபவங்கள் புண்ணியபாவங்களினாலே உண்டானவைகளாய் இடத்தையுங் காலத்தையும் பற்றியிருப்பதனாலே பிராணிகள் தங்கர்மானுபவத்திற்கு உரிய தேசகாலங்களிலே தேகாதிகளைப்பெற்றுவருகிறார்கள். ஓ அரசனே! இப்படிச் சகலஜந்துக்களுக்கும் சகலஇடங்களிலும் உடலோடுவருதல் கர்மானுபவத்திற்கென்று சாதாரணமாயிருக்கிறபடியினாலே, என்னைவருதற்குக்காரணமென்னென்று நீயேன் வேறுவினவினாய் என்றருளிச்செய்தார். அரசன் அதுகேட்டு யோகீந்திரரே சகலகாரியங்களுக்கும் தருமா தருமங்கள் காரணமென்பதும், சுகதுக்கானுபவத்திற்காக தேகம்விட்டுத்தேகம்பிரவேசிப்பதென்பதும் சரிதான். ஆனால் நானின்னானென்று ஆத்துமாவைக்குறித்துச்சொல்லக்கூடாதென்று தேவரீர் அருளிச்செய்தீரே? அதைஅறிய விரும்புகிறேன்; ஓ, பிராமணோத்தமரே! ஆத்துமாவானது இல்லாதவஸ்துவாகையாலே அப்படிச்சொல்லக்கூடாதென்றால் ஆத்துமா இருக்கிறவஸ்துவேயல்லாமல் இல்லாததன்றே? இந்த நானென்கிறசொல்ஆத்துமாவின்மேல் பிரயோகிப்பது குற்றமன்றே? இப்படியிருக்க நான் இன்னானென்று சொல்லக்கூடாதென்று எப்படியருளிச்செய்தீர்? அதைஅடியேனுக்கு விளங்கவருளிச்செய்யவேண்டும் என்றுவினவ பரதயோகி அருளிச்செய்கிறார்.

'அரசனே! கேள். ஆத்துமாவைக்குறித்து நானென்னுஞ் சொல்லைப்பிரயோகிப்பது குற்றமன்று, அது சரிதான்; ஆனால் நான் இன்னானென்பதனாலே ஆத்துமாவல்லாத தேகாதிகளிலே ஆத்துமபுத்தியும் இப்படிப்பட்ட பிராந்தியைத் தெரிவிக்குஞ் சொல்லாவதும் ஆகிய குற்றங்களுண்டாம். அரசனே! நாக்கும் உதடும் பல்லும் தாலுக்களும் நான்என்றுசொல்லுகின்றனவென்று நினைக்கின்றையோ? அவைபலவும் கருவிகளேயன்றிக் கர்த்தாவான ஆத்துமாவன்று. இந்தக் கருவிகளைக்கொண்டு வாக்கென்னும் இந்திரியமே நான் என்கிறதென்பாயோ? அந்தப்பக்ஷத்தில் நீபருத்திருக்கிறாய் என்பது எப்படி சரிப்படும்? அன்றியும் என்னுடையவாக்கு என்றுவேறாய்ப் பேசுவதுங்கூடாது. இவ்வாறே மற்ற இந்திரியங்களும் ஆத்துமாவென்பது கூடாது. தேகமே ஆத்துமாவென்றால் அந்தத்தேகம், தலை கால் கை முதலான அனேகவஸ்து ரூபமாகையாலே எந்த அவயவத்திலே அந்தச்சொல்லைப் பிரயோகிக்கலாம்? மேலும் இந்தத்தேகத்தைக்காட்டிலும் ஆத்துமா வேறானவஸ்து; எப்படியென்றால் ஜாக்கிரத்திலே எனது வுடம்பு என்று வேறாகத் தோன்றுவதுமன்றிச் சொப்பனத்தில் அதற்கு வேறுவிதமாகத் தோன்றுவதனாலும் ஸுஷுப்த்தியில் தோன்றாமையாலும் அப்படியென்றறி. இப்படியானாலும் நான் இன்னானென்று சொல்லக்கூடாமையெப்படியென்பையோ கேள். ஞானமே வடிவாகக்கொண்ட நானென்னும் ஆத்துமஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறானவடிவுள்ள ஆத்துமஸ்வரூபமொன்றிருக்குமாயின் அதைக்காட்டிலும் வேறாக என்னை இன்னானென்று சொல்லலாம். அப்படியில்லையே! சகலதேகங்களிலேயுமிருக்கின்ற ஆத்துமாக்கள் ஞானஸ்வரூபமாய் சுத்தியாதிவிசேஷணங்களைப் பொருந்தினவையேயன்றி வேறுவிதங்களல்ல. ஆனபடியினாலே தேகதர்மங்களான ஜாதியாதிகளையிட்டுப்

பேதப்படுத்திச் சொல்லக்கூடாமலிருக்க நீயார் என்கிறகேள்வியும், நான் இன்னானென்கிற உத்தரமும் பொருந்ாதவைகளாம். ஆத்துமா நித்தியப் பொருள், உடம்புமுதலானவை அநித்தியப்பொருள்; ஆனதனால், ராஜாவென் கிற நீயும் இச்சிவிகையும் சுமக்கிற நாங்களும் உன்சேவகரும் எல்லாம் ஸத் [இருக்கிறபொருள்] அன்று; எப்படியென்றால், முன்பு மரமாயிருந்தது வெட் டப்பட்டுக் கட்டையாயிற்று; பின்பு நீயேறியிருக்கிற பல்லக்காயிற்று; இந்த ஸ்திதியிலே அதற்குவிருக்ஷமென்கிறபெயரும் கட்டையென்கிறபெயரும் எங் கே? இருக்கிறதென்றுசொல்வாயானால் மகாராஜா விருக்ஷத்தின்மேல் ஏறி யிருக்கிறாரென்று உன்மனிதர்கள் சொல்வார்களா? கட்டையின்மேலிருக் கிறாரென்றாகிலுஞ் சொல்வார்களா? சிவிகையின்மேலிருக்கிறார் என்றல்ல வோ சொல்வார்கள். ஆராய்ந்துபார்த்தால் இந்தச்சிவிகையென்பது ஒரு வகைக் கோப்புப்பெற்றிருக்கின்ற கட்டைகளின் கூட்டமேயல்லதுவே றன்று; இந்தக்கோப்பைப் பிரித்துவிட்டுப் பல்லக்கு எங்கேயிருக்கிறது தேடிப்பார். இப்படியே சலாகைமுதலானவைகளைப் பிரித்துவிட்டுக் குடை யெங்கேயென்றுபார். இந்த நியாயத்தையே உன்னிடத்திலும் என்னிடத் திலும் வைத்துப்பார்த்தால் நீ இன்னான் நான் இன்னான் என்பது தெரியும். லோகவியவகாரம் எப்படி யிருக்கிறதென்றால் கர்மவசத்தினாலுண்டாயிருக் கிற தேகங்களிலே புருஷனென்றும், ஸ்திரீயென்றும், மாடென்றும், ஆ டென்றும், குதிரையென்றும், யானையென்றும், பக்ஷியென்றும், மரமென் றும், பெயர்கள் வழங்கப்படுகின்றன. நீ நான் என்கிறசொற்களின் முக் கியப்பொருளான ஆத்துமசொரூபமானது ஆணுமன்று, பெண்ணுமன்று, தேவனுமன்று, மனிதனுமன்று, மிருகமுமன்று, மரமுமன்று. இத்தேவத் துவாதிதருமங்களெல்லாம் கருமத்தினால் வந்த சரீரத்தின்ரூபபேதங்களே யாம். இப்படியே உலகத்தில் அரசனென்கிறவஸ்துவும் ராஜபடர்முதலான வைகளாகிய பொருள்களும் உற்பத்தியாலாகிறதுபற்றி உள்பொருளென்று சொல்லப்படாவாம். எது எந்தக்காலத்திலும் திரிபுமுதலானவைகளாலுண் டாகிற வேறுபெயர்களையடையமாட்டாதோ அதுதான் வஸ்து. அரசனே! அது எது? யோசித்துப்பார். இதோபார் நீ உலகத்தாருக்கு அரசன், தகப்ப னுக்கு மகன், சத்துருவுக்குச்சத்துரு, மனையாளுக்குப்புருஷன், மகனுக்குப் பிதா; இப்படியிருக்க உன்னையாரென்று சொல்வேன். மேலும் நீயென்ன சிரசா, கழுத்தா, வயிறா, அல்லது கால்முதலியவற்றுள் ஏதுவானாலுமா, சொல். இவ்வுடம்புக்கு நீயார்? உனக்கு இவ்வுடம்பு என்ன? ஓராஜாவே! இவ்விதமாய்ச் சகலாவயவங்களுக்கும் வேறாய்நிற்கிற நீ நன்றாய் ஆலோசித்து நான் யார் என்று சிந்தித்துக்கொள். உண்மை இப்படியிருக்க என்னைநான் இன்னானென்று வேறுபடுத்திச்சொல்வது எப்படிக்கூடும் என்று ஜடபரதர் அருளிச்செய்தார்.

இப்படிப் பரமார்த்தத்தோடுகூடின பரதயோகீந்திரருடைய வார்த்தை களைக்கேட்டு அந்த மகாராஜன் மிகவும் வணக்கத்தோடு அந்தப் பிராம ணோத்தமனை வினாவுகிறான்: ஸ்வாமீ! தேவரீர் பரமார்த்தஞ்சேர்ந்த வார்த்

தைகளை யருளிச்செய்தீரன்றோ? அவைகளைக்கேட்டு என்மனம் பிரமித்திருக் கின்றது. தேவரீர்அருளிச்செய்தவைகளான சகலஜந்துக்களிலேயும் பிரகி ருதியைக்காட்டிலும் வேறாய் ஞானஸ்வரூபமாய் மகத்தாய் ஒரேவிதமானது ஆத்துமஸ்வரூபமுண்டென்று காட்டப்பட்டது - ஒன்று; சிவிகையைநான் சுமக்கிறேனில்லை, என்னிடத்தில் சிவிகையுமில்லை, இச்சரீரஞ் சுமக்கின்றது, அது நம்மைக்காட்டிலும் வேறானது, திரிகுணங்களின் ஏவுதலினாலே பஞ்ச பூதங்கள் அசைகின்றன, அக்குணப்பிரவிர்த்தியும் கருமத்தினால் ஏவப்பட் டது, ஆதலால் அவைகளினா லெனக்கென்னவென்று காட்டப்பட்டது- ஒன்று; இவைகள் என்செவியிற்பட்டவுடனே என் இருதயம் பரமார்த்தத் தை நன்றாய்த்தெரிந்துகொள்ள ஆவலுடையதாய்த் தழதழத்து நிற்கின்றது. ஓ மகானுபாவரே! முன்னமே நான் இந்தச்சம்சாரத்திலே எது சிரேயசு என்று கேட்டறியும்பொருட்டு ஸ்ரீகபிலமகாமுனிவரிடம்போகப் புறப்பட் டேன். கும்பிடப்போனதெய்வம் குறுக்கேவந்ததுபோல் இதனிடையில் தேவரீர்எழுந்தருளி இப்படிப்பட்டவார்த்தையை யருளிச்செய்யக்கேட்டபடி யினாலே அந்தப்பரமார்த்தவிஷயமாய் மனம்தேவரீரிடத்திலேயே ஓடுகின் றது. அந்தக்கபிலமகாரிஷியானவர் உலகத்தினுடைய அஞ்ஞானத்தைப் போக்கும்பொருட்டுப் பூமியில் அவதரித்த ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய அம் சமன்றோ? அந்த ஸ்ரீகபிலபகவானே அடியேனுக்கு இதம்போதிக்கவேண்டு மென்கிற பரமகிருபையினாலே வழியில்பிரத்தியக்ஷமாய் எழுந்தருளினா ரென்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் அடியேனுக்கு இப்படி இதம் உபதேசிப்பார்யார்? ஆதலால் இதங்கேட்க அவாவோடு வணங்கிநிற்க அடி யேனுக்கு எதுசிரேயசோ அதை நன்றாய்த்தெரிவித்தருளவேண்டும். தேவ ரீர் ஞானக் கடலாயிருக்கிறீர் என்று பிரார்த்தித்தராஜாவைநோக்கி அந்த மகாயோகி யருளிச்செய்யத்தொடங்கினார்.

ஓராஜாவே! நீ இப்போது என்னை சிரேயசை வினாவுகிறையோ, பர மார்த்தத்தை வினாவுகிறையோ? சிரேயசென்பதும் பரமார்த்தமென்பதும் ஒன்றன்று. சிரேயசுகளெல்லாம் பரமார்த்தங்களல்ல; சிரேயசுகளைச்சொல்லு கின்றேன்கேள்: எந்தமனிதன் இஷ்டதேவதைகளை யாராதித்து தனம் முதலான சம்பத்துக்களை அடைய இச்சிக்கிறானோ அவனுக்கு அந்தச்செல்வப் பேறே சிரேயசு; புத்திர சந்தானத்தை இச்சிக்கிறவனுக்கு அதைப்பெறுதல் சிரேயசு; இராச்சியமிச்சிப்பவனுக்கு அதையடைதல் சிரேயசாம்; யஞ் ஞாதி கர்மங்களைச்செய்து சுவர்க்காதிகளைப்பெறநினைப்பவனுக்கு அந்தச் சுவர்க்காதிகளே சிரேயசாகும்; யாதொருபலனையுங்கருதாமல் யாகாதிகரு மஞ்செய்பவனுக்கு அக்கருமமே சிரேயசாகும்; யோகநிஷ்டையிலிருந்து ஆத்துமத்தியானஞ் செய்வோர்க்கு அதுவே சிரேயமாம்; அந்த ஆத்துமாவுக் குப் பரமாத்துமாவோடு ஒன்றாகக்கூடுதல் மேலானசிரேயசாகும்; இப்படி ஒன்றுக்கொன்றுமேலான ஏழுசிரேயங்கள் பிரதானங்களாம். இவற்றின் உட்பிரிவானசிரேயங்களும் அனேகமுண்டு. இவையெல்லாம் பரமார்த்தங்க ளல்ல; அவ்வகைசொல்லுகிறேன்கேள். தனமே பரமார்த்தமானால் அதைத்

161980

தருமத்திற்காகவும் காமத்திற்காகவும் செலவுசெய்வார்களா? அப்படிச்செலவுசெய்வதனாலே அதுபரமார்த்தமாகமாட்டாது. அதனாலே சாதிக்கப்படுகிற தர்மகர்மங்களும் அழியுமவைகளாதலால் பரமார்த்தமென்று சொல்லப்படாவாம். புத்திரன் பரமார்த்தமென்றால் அவன் தன்பிதாவுக்கு அவனும் அவன்பிதாவுக்கு என்கிறதனாலே உலகத்திற்குப்பரமார்த்தம் எப்படியாவான்; காரியங்களெல்லாம் காரணங்களுக்குப் பரமார்த்தமேயல்லாமல் யாவர்க்குமாகமாட்டா. இராச்சியமுதலானவை பரமார்த்தமென்றால் அவை ஸ்திரமாகாமையாலே எப்படி பரமார்த்தமாம். இருக்கு, யசுர், சாமம் என்கிற வேதங்களின் விதிப்படிசெய்கிற யாககருமம் பரமார்த்தமென்று நீ நினைத்திருப்பையாகில் அதற்குஞ் சொல்லுகிறேன்கேள்: மண்ணென்கிறகாரணப்பொருளினாலே உண்டாக்கப்படுகிற குடமுதலான காரியங்களெல்லாம் காரணமானமண்ணின்தன்மையையே அடைந்திருப்பதுபோலே நாசப்படத்தக்க சமித்து நெய் தருப்பை முதலானவைகளினாலே செய்யப்படும் யாகாதிகருமமும் நாசப்படத்தக்கதாதலால் பரமார்த்தமென்று சொல்லப்படாது. பரமார்த்தமென்பது நாசப்படாததாக ஞானிகளாலே அங்கீகரிக்கப்பட்டிருப்பது. யாதொருபலனையும் விரும்பாமற்செய்த யாகாதிகளோவென்றால், அவை மோக்ஷத்திற்குச் சாதனமாகையாலே பலனைக்கொடுத்தவுடனே நசிப்பதனால் பரமார்த்தமல்ல. ஆத்துமத்தியானமும் பரமார்த்தமன்று; ஏனெனில் அது விசதம், விசததரம் [பிறவற்றினின்றுந்தெளிவு, நற்றெளிவு] என்றிப்படிப்பட்ட அவஸ்தாபேதங்களை யடைதலாலேயும், ஸ்மிருதி, பிரத்தியயம் [போனதைநினைத்தல், பிரத்தியக்ஷத்தோற்றம்] முதலாக க்ஷணந்தோறும் மாறுதலினாலேயும், பரமார்த்தமன்றென அறிந்துகொள். பரமாத்துமாவோடு ஆத்துமாவுக்கு ஐக்கியமாகிறயோகமே பரமார்த்தமென்று சிலர் நினைக்கிறார்களன்றோ? அப்படிப்பட்டயோகம் பொய்யாகையினாலே பரமார்த்தமன்று; ஏன்பொய்யெனில் ஒருபொருள் மற்றொருபொருளாய் ஆகமாட்டாதாகையால் ஜீவாத்துமாவானது பரமாத்துமாவாக எப்படி மாறும்? *ஆதலால் ஓராஜாவேநான்முன்சொன்னவைகளெல்லாம் சிரேயசுகள் என்பதற்குச் சந்தேகமில்லை; ஆனாலும் பரமார்த்தமாகமாட்டா. பரமார்த்தம் எதுவென்றால்,—சுருக்கமாகச்சொல்லுகிறேன்கேள்: தேகத்தைப்போல் பலபொருளாயிராமல் ஒருபொருளாயும் ஞானத்தினாலே எங்கும் வியாபிக்கவல்லதாயும் தேவமனுஷியாதி தேகத்தைப்பற்றிய வைஷம்யமில்லாதேசமமாயும் நிர்மலமாயும் சத்துவாதிகுணசம்பந்தமில்லாததாயும் பிரகிருதிக்குவேறுபட்டதாயும் உற்பத்திவிநாசவிருத்திக்ஷயாதிகளில்லததாயும் நுண்மையினாலே அக்கினிவாயுஜலாதிகளான அழிக்கும்பொருள்களுக்கு உட்படாததாயும் பற்றிக்கொள்ளுதல் முதலான தோஷங்களில்லாததாய் தேகாதிகளுக்கு அதிபதியாயுமிருக்கிற ஆத்துமஸ்வரூபம் யாதொன்றோ அது மேலானஞானவடிவாய் அவித்தியாரூபங்களான ஜாதிநாமாதிகளோடு பூதம் வர்த்தமானம் பவிஷ்யத் என்கிற மூன்றுகாலங்களிலேயும்கூடாதது; தன்னுடையதும் பிறருடையதுமான தேகங்களிலே இருக்கிற அந்த ஆத்துமஸ்வரூபத்தைப்பற்றி எல்லாம் ஒரேவிதம் என்கிறஞானம் எதுவுண்டோ அந்தஞானஸ்வரூபந்தான் பரமார்த்தமாம்; ஆதலால் தேகபேதத்தினாலே பேதமாகநினைக்கிறவர்கள் யதார்த்தத்தையறியாதவர்கள். வேய்ங்குழலில்பிரவேசித்தகாற்று ஒன்றாயிருந்தும் அதன் துவாரபேதங்களினாலே அக்காற்றுக்கு ஷட்ஜாதி ஸ்வரபேத நாமதேயமுண்டானதுபோலே அவ்வாத்துமஸ்வரூபம் பேதமில்லாததாயிருந்தும் அதற்குப் புறம்பான கர்மபேதத்தினாலேவந்த சரீரபேதத்தைப்பற்றி தேவன் மனிதன் என்கிற வியவகாரம் உண்டாகின்றது. அந்தக் கர்மமாகிய மறைவு அழிந்தால் அந்தத்தேவாதிபேதம் இல்லவேயில்லை என்றறி.

இப்படியாகச் சொல்லியபோது அவ்விஷயம் மனதில் திடப்படாமையினாலே ஒன்றும்பேசாமல் சிந்தித்துக்கொண்டிருந்த அந்தராஜாவைப்பார்த்து அந்தப் பிராமணோத்தமர் ஞானபேதமில்லாமையைப்பற்றிய கதையொன்று சொல்லத்தொடங்கினார்.

ஓ ராஜேந்திரனே நிதாகருக்கு ஞானத்தை யுண்டாக்கும்பொருட்டு ருபுவென்பவர் சொன்னதைச் சொல்லுகிறேன்கேள்:—பூர்வத்தில் பரமேஷ்டிக்கு ருபுஎன்கிறகுமாரர் ஒருவர் சுபாவத்திலேயே தத்துவஞானமுடையவராயிருந்தார். அவருக்குப் புலஸ்திய குமாரரான நிதாகர்என்கிற சிஷ்யரொருவரிருந்தார். அவருக்கு அந்த ருபு அதிகசந்தோஷத்தினால் சகல கலைஞானங்களையும் ஓதுவித்தார். சகல ஞானசாஸ்திரங்களை ஓதியும் அவருக்கு ஆத்துமஸ்வரூபத்தில் பேதமில்லாமையைப்பற்றிய வாசனை இல்லையென்பதை அந்த ருபு அறிந்திருந்தார். யோகசாஸ்திரமறிந்தவரான அந்த நிதாகர் தேவிகாநதியின்கரையிலே புலஸ்தியராலே ஏற்படுத்தப்பட்டு மிகவும் ரமியமாயும் வளப்பமுள்ளதாயுமிருந்த வீரநகரமென்னும்பட்டணத்தின்பக்கத்தில் ஒரு உத்தியானவனத்திலே வாசஞ்செய்துகொண்டிருந்தார். ஆயிரம் வருஷகாலஞ்சென்றபின்பு அந்த ருபுமகாமுனிவர் தம் சிஷ்யராகிய நிதாகரைப்பார்க்கும்பொருட்டு அவ்விடத்திற்குப்போனார். அந்தநிதாகர் வைசுவதேவத்தைமுடித்து வாசலில்வந்து அதிதிகளைப் பார்க்குந்தருணத்தில் ருபு நேரிட்டபடியால் இவரை அர்க்கியாதி உபசாரத்துடனே உள்ளே இட்டுக்கொண்டுபோய் ஆசனத்தில் உட்காரவைத்து, சுவாமீ அமுதுசெய்தருள்க என்றுபிரார்த்திக்க, அந்தமுனிவர் நிதாகரைப்பார்த்து, ஓபிராமணோத்தமரே! உம்முடைய கிருகத்தில் நான்புசிக்கத்தக்கவஸ்து என்னஇருக்கிறது சொல்லும்; ஈனமானபோசனத்தில் எனக்குப்பிரியமில்லை என்று சொல்ல, அதைக்கேட்டு, சுவாமி! அடியேன்குடிசையில் அரிசிமாவினாலும் யவதானியங்களினாலும் செய்யப்பட்டிருக்கிற அன்னங்களிலும் காய் கிழங்கு கனிகளிலும் அப்பங்களிலும் எதெது தேவரீருக்குத் திருவுள்ளமாயிருக்கிறதோ அவற்றையெல்லாம் யதேச்சையாய் அமுதுசெய்தருளலாம் என்று சிஷ்யர்

* அப்படிசொல்வதற்கு அடியென்னவென்றால் யோகபலத்தினாலே பரமாத்துமாவைப் பிரத்தியக்ஷமாய் அனுபவிக்கும்போது வேறொன்றுந்தோன்றாமல் ஆனந்தமயமான பிரமஸ்வரூபமே தோன்றுவதால்.

சொல்ல, அந்தக்குரு, ஓபிராமணா! இவையெல்லாம் அற்பபோஜனங்கள், இவற்றில் எனக்குப்பிரியமில்லை. மோர்க்குழம்பு, பாயசம், தேன்குழல், மதுரான்னம், முதலியவைகளை யெனக்குக்கொடும் என்றுகேட்டதற்கு அந்நிதாகர், அப்படியேயாகட்டும்என்றுசொல்லித் தம்பாரியைப்பார்த்து, அடிவிளக்கமுள்ளபெண்ணே! நம்முடையகிருகத்தில் மிகவும்சிரேஷ்டமாகிய எந்தவஸ்துஇருக்கிறதோ அதைக்கொண்டு இவருக்கு விசேஷமதுரமான அன்னஞ்செய்து அளிப்பாயென்றுநியமித்தார். அவளும் தன்பர்த்தாவின் நியமனப்படி அக்காரவடிசில்முதலானவைகளைச்செய்து அளித்தாள். இவ்விதமாகப்பிரசாதித்தஅடிசிலை யமுதுசெய்திருக்கிற அந்தஅதிதியைநோக்கி நிதாகர் மிகுந்தவணக்கத்துடனே, சுவாமி தேவரீருக்கு மிகுந்ததிர்ப்தியும் சந்துஷ்டியும் உண்டாயினவா? தேவரீர் திருவுள்ளம் சொஸ்தமாயிருக்கிறதா? தேவரீர் எழுந்தருளியிருக்குமிடம் எது? எங்கிருந்தெழுந்தருளுகிறது? எங்கேயெழுந்தருளஉத்தேசித்து இங்கெழுந்தருளியது? இவற்றையெல்லாம் அருளிச்செய்யவேண்டும்என்று பிரார்த்திக்க ருபுசொல்லத்தொடங்கினார்.

ஓ பிராமணோத்தமரே! எவனுக்குப்பசியோ அவனுக்கு அன்னத்தைப்புசிப்பதனால் திர்ப்தியுண்டாகின்றது, எனக்குப்பசியில்லை, அப்படியிருக்க எனக்குத் திர்ப்தியுண்டாவென்று என்கேட்கிறீர்? பிருதிவீ சம்பந்தமான தாதுவானது கர்ப்பத்திலிருக்கும் அக்கினியினாலே அழிக்கப்படுமளவில் பசியும் அந்தஅக்கினிவேகத்தினால் உள்ளிருக்கும் நீர்வற்றிப்போவதனாலே தாகமுமுண்டாகின்றன. இந்தப்பசிதாகங்கள் (இச்சாரூபங்களாகையாலே மனோதர்மங்களானாலும்) தாதுக்ஷயத்தினாலுண்டாகின்றனவாதலால் தேகதருமங்களேயாகின்றன. எனக்கு இவையில்லையே! ஆதலால் பசியினாலுண்டாகுந்திர்ப்தி இப்போது மாத்திரமன்று எப்போதும் எனக்கு இல்லை. மனசு சொஸ்தமா யிருப்பதும் சந்துஷ்டியும் சித்தத்தின்தன்மைகளாதலால் இவ்விரண்டையும்பற்றிச் சித்தத்தையன்றோ கேட்கவேண்டும்? என்னையேன் கேட்கிறீர்? நான்மாத்திரமன்று என்னைப்போலுள்ள ஆத்துமாக்களுக்கெல்லாம் இந்தப்பசி முதலானவை இல்லையென்றறியும். நீர் கேட்டீரன்றோ வாசஸ்தானமெதுவென்றும் எங்கிருந்து வருகிறாயென்றும் எங்கேபோகிறாயென்றும், இம்மூன்றையும்பற்றி உத்தரஞ் சொல்லுகிறேன்கேளும். புருஷன் தேவமனுஷ்யாதி சகலசரீரங்களிலேயும் இருக்கத்தக்கவனாய் சகல அசேதனங்களையும் வியாபிக்கத்தக்கவனாய் ஆகாசத்தைப்போலே ஒன்றோடும் ஒட்டாதவனாயிருக்கிறான். இப்படிப்பட்ட ஆத்துமாவைப்பார்த்து எங்கிருக்கிறாய் எங்கிருந்துவருகிறாய்எங்கேபோகிறாய் என்னுங்கேள்விகளுக்குப்பொருளில்லை, ஆனதுபற்றிஅப்படிப்பட்ட நான்போகிறவனுமல்லேன் வருகிறவனுமல்லேன் ஓரிடத்திலிருப்பவனுமல்லேன்; நீரும் மற்றவர்களும் அப்படியே; ஆனால் வருவதும்போவதுமாகத் தோன்றுவதெப்படியென்பீரோ ஆசிரயமான தேகவசத்தினாலென்றறியும்; ஆதலால் போக்குவரவுகளுக்குக் கர்த்தாவாகத் தோன்றுகிற இந்தத்தேகம்நானன்று; அப்படிப்பட்ட நீரும் நீரன்று; மற்றவர்களும் மற்றவர்களன்று; ஆனால் நல்ல அன்னங்கொடும் அற்ப அன்னம் வேண்

டாமென்று நான்சொன்னது எப்படியென்கிறீரோ; நான்மெய்யாய்க்கேட்டேனில்லை, மற்றென்னவென்றால் இந்தவித்தியாசம் சுபாவசித்தமோ உபாதியைப்பற்றியதோ என்று உமதுகருத்தை யறியும்படி பரீக்ஷைசெய்ததேயல்லது வேறன்று. அவ்விஷயத்தைப் பற்றியுஞ் சொல்லுகிறேன்கேளும்:- உண்கிறவனுக்கு இது ருசியுள்ளது இதுருசியில்லதென்று சொல்லும்படி ஒருபொருளும் நியதிப்பட்டிருக்கவில்லை; எப்படியென்றால் யாதொருவியாதியுமில்லாமல் நல்லபசியுள்ளவனுக்குப் புழுத்தவுழுந்து முதலானவைகளாற்செய்த தாழ்வானவுணவுகளும் ருசிகரமாகவேயாகின்றன; அப்படியல்லாதவனுக்குத் தேன்குழல் அக்காரவடிசில் முதலானவைகளும் ருசிகரமாகாமற்போகின்றன; ஆதலால் உண்பவனுடைய உடம்பின்தன்மையின்படி உணவுகளிலும் ருசியும் அருசியும் உண்டாயிருப்பதனாலே மதுரமென்பதும் அமதுரமென்பதும் ஔபாதிகமேயல்லது சுவாபாவிகமன்றெனநிச்சயித்துக்கொள்ளும். மண்ணாற் செய்தவீடு மண்ணினாலேயே பூசப்பட்டு உறுதியாவதுபோலே பிருதிவீமயமான இந்தத் தேகமும் பிரிதிவீசம்பந்தமானபொருள்களினாலே உறுதியாகவேண்டியிருப்பதனால் யாவரும் உணவைக்கொள்ளவேண்டியிருக்கின்றது. யவம் கோதுமை பயறு முதலான தானியங்களும், நெய் எண்ணெய் பால் தயிர் முதலான ரசவஸ்துக்களும், வெல்லம் கனிகள் முதலானபொருள்களும் பிருதிவீசம்பந்தமான அணுக்களேயாம்; ஆகையால் நாம் முன்சொல்லிவந்தவிஷயங்களையெல்லாம் நன்றாயறிந்து இது இனிப்பு இது இனிப்பன்று என்றும், இவன் தேவன் இவன் மனுஷ்யன் என்றும் பேதவிசாரணையுள்ளமனதை, இப்படிப்பட்ட பேதங்களெல்லாம் கர்மத்தினால்வந்த விகாரங்களென்றும் ஆத்துமசொரூபத்தில் வைஷமியம் யாதுமில்லையென்றும் சமத்துவஞான முள்ளதாகச் செய்யவேண்டும். இப்படிப்பட்ட சமத்துவபுத்திதான் மோக்ஷகாரணமாகும்; என்று ருபுமுனிவர்சொன்ன வாக்கியங்களைக்கேட்டு அந்தநிதாகர் குருவைத் தெண்டன்சமர்ப்பித்து, ஓபிராமணோத்தமரே! பரமார்த்தத்தைப்பற்றின தேவரீர் வசனங்களைக்கேட்டு எனக்கு அஞ்ஞானம் நீங்கிற்று. அடியேனுக்கு இதம் போதிப்பதற்காக இங்கெழுந்தருளின தேவரீர் யாரோ தெரியவில்லை, சாதித்தருளவேண்டும், என்று விண்ணப்பஞ்செய்ய அந்தருபு சீஷனைநோக்கி, உமக்கு ஆசாரியனான ருபுஎன்பவன் நான், உமக்கு ஞானங்கற்பிக்கும்பொருட்டு இங்கேவந்தேன், நினைத்தபடி உமக்குப் பரமார்த்தத்தைத் தெரியப்படுத்தினேன், இனி நான் என்னிடம்போகிறேன். உமக்குச்சுருக்கம்ஒன்று சொல்லுகிறேன்கேளும். தேவமனுஷ்யாதிபேதமாய்க் காணப்படுகிற சேதன ஸ்வரூபமெல்லாம் ஒன்றேயல்லாமல் பேதப்பட்டதன்று; தேவாதிபேதங்களோ கர்மவசத்தினால்வந்த பூதவிகாரங்கள்; இப்படி சேதனசேதனாத்துமகமான சகலப்பிரபஞ்சமும் ஸ்ரீவாசுதேவனென்னுந் திருநாமமுடைய பரமாத்துமாவுக்குத் திருமேனியாயிருக்கின்றது என்று ஆசாரியர் போதித்ததைக்கேட்டுச் சீஷரானநிதாகர், இனி அடியேன் அப்படியே நினைத்திருக்கிறேனென்று தண்டன் சமர்ப்பித்து மகாபக்தியோடு உபசாரஞ்செய்யப்

பெற்று அந்த ருபுவானவர் தம்மிஷ்டப்படி போகவேண்டு மிடத்திற்குப் போனார்.

ஜடபரதர் சவ்வீரராஜனை நோக்கிப் பின்னையு மருளிச்செய்கிறார்: கேள் அரசனே! மறுபடியும் ஆயிரம்வருஷஞ்சென்றபின்பு அந்தருபுவானவர் நிதாகருக்கு ஞானத்தைஸ்திரப்படுத்தநினைத்து அந்நகரத்திற்கேபோனார். அப்போது அனேகபரிவாரங்களோடு அரசன்பட்டணத்திற்குள்சென்றுகொண்டிருக்க, இந்த நிதாகர் காட்டினின்றும் சமித்து தருப்பைகளைச் சேகரித்துக்கொண்டு வழியில்சந்தடியாயிருந்தபடியால் நெட்டுப்படுவோமென்று பட்டணத்திற்குள்ளே போகாமல் தூரத்தில்நின்றுகொண்டிருந்தார். இவ்வகையாப்பசியினாலே மெலிந்துநிற்கிற அந்தநிதாகரைக்கண்டு அந்தருபுவானவர் ஓபிராமணரே நீர் ஏன் இங்கே ஒன்றியாய்நிற்கின்றீர் என்றுவினவினார். அதற்கு அந்நிதாகர், சுவாமீ அதோ ராஜா பட்டணத்தினுள்ளேபோகிறான், ஆனதனாலே நானாவிதஜனங்களும் சேர்ந்து சம்மர்த்தமாயிருக்கிறபடியால் உள்ளேபோகக்கூடாமல் இங்கே நிற்கிறேன் என்றார். அதுகேட்டு ருபு, ஐயா ராஜா யார், மற்றச்சனங்கள் யார் எனக்குத்தெரியவில்லை; நீர்தெரிந்தவராயிருக்கிறீர், ஆதலால் தெரியச்சொல்லவேண்டும் என்றார். அதற்கு அந்தநிதாகர், அதோபாரும் பெரியபர்வதத்தின் சிருங்கம்போலே மிகப்பெரிதாயிருக்கிறயானையின்மேல் ஏறிக்கொண்டு பிரகாசிக்கிறானே அவன்தான் ராஜா, அவனைச்சுற்றிநிற்பவர் பரிவாரங்கள் என்றறியும்என்றுசொல்ல, ருபு ஐயா நீர் ராஜாவென்றும் யானையென்றும் வெவ்வேறான லக்ஷணமுடையனவாய் இரண்டுபொருள்களை ஒரேகாலத்திற் சொல்லிக்காட்டினீர், எனக்கோ அவைகளுக்குப் பேதம் ஒன்றுந்தெரியவில்லை, என்ன விசேஷமோ அதையெனக்குத் தெரியச்சொல்லவேண்டும்; யார்ராஜா, எதுயானை இதையறியவிரும்புகிறேன் என, நிதாகர், என்ன பிராமணா, கீழிருப்பது யானை, மேலிருப்பவன் ராஜா, இவ்விருவருக்கும் சுமப்பதும் சுமக்கப்படுவதுமான சம்பந்தமிருக்கின்றது, இது சாதாரணமான கா[illegible]ம், யாருக்குத்தான்தெரியாது என்றுசொன்னார். அதுகேட்டு ருபு பிராமணரே நீர் கீழ் இன்னது மேல் இன்னது என்று எனக்கு நன்றாய்த்தெரிவிக்கவேண்டும் என்று சொன்னார். உடனே நிதாகர் அந்தருபுவின்மேல் சீக்கிரமாய் ஏறிக்கொண்டு அவரைநோக்கி நான்சொல்வதை நன்றாய்க்கேளும்; நானிருக்குமிடந்தான்மேல்; மேலே என்னைப்போலேறியிருப்பவனை ராஜாவென்றறியும்; நீர் இருக்குமிடந்தான்கீழ், உம்மைப்போல் கீழேசுமந்துகொண்டிருப்பதை யானையென்றறியும். இக்காரியம் உமக்குநன்றாய்த்தெரியும்பொருட்டுத் திருஷ்டாந்தங் காண்பித்தேன் என்றார். பின்பு ருபுவானவர் சரிதான்; நீயென்பதும் நான்என்பதும் எனக்குத்தெரிந்தாலன்றோ மற்றைக்காரியங்களையு மறிந்துகொள்ளுவேன், அந்தப்பேதமே எனக்குத்தெரியவில்லை; ஆதலால் நீநான் என்பவர்கள் யாரோ எனக்குத்தெரியச்சொல்லுமென்றார். இப்படிச் சொன்னதைக் கேட்டவுடனே நிதாகர் வெகுபரபரப்பாய்க் கீழே குதித்து அவர் திருவடிகளில் வீழ்ந்து தெண்டன்சமர்ப்பித்து, சுவாமி தேவரீர் அடியேனுக்கு ஆசாரியரான ருபுவென்று நினைக்கிறேன், மற்றவர்களுடைய இருதயம் இப்படி ஆத்தும அபேதஞானத்தினாலே சுத்தப்பட்டிருக்கமாட்டாது; ஆதலால் தேவரீர் ஆசாரியர் என்பதற்குச் சந்தேகமில்லை என்றுசொல்ல, ருபுவும் ஆம் நான்ருபுதான், நீர்செய்திருந்த பணிவிடைக்குஉவந்து உமக்கு ஞானத்தை ஸ்திரப்படுத்தும்பொருட்டுவந்தேன்; பரமார்த்தசாரமான அபேதஞானத்தையும் உமக்குச்சுருக்கமாய் அறிவித்தேன் என்றுசொல்லித் தம்மிடம்போய்ச்சேர்ந்தார். அந்த நிதாகரும் சகல ஆத்துமசொரூபங்களும் ஒரேவிதமென்கிற அபேதஞானந்திருந்தினவராய் அப்படியே பாவனையுமுதிப்பட்டு இவற்றையெல்லாம் பிரம ஸ்வரூபமாகத் தியானித்து மேலான மோக்ஷத்தையடைந்தார்.

ஓ ஸவ்வீரமகாராஜனே நீயும் அப்படியேதான், சத்துரு மித்திரன் என்னுமிடங்களிலே வித்தியாசமில்லாதவனாகி கர்மவசத்தினாலே எங்குமிருக்கிற ஆத்துமசொரூபம் ஒருவிதமானதேயென்று நினைத்திரு; சுத்தமான ஆகாசம் ஒன்றே உபாதிவசத்தினாலே கறுப்பு வெளுப்பு முதலாகப் பலவகையாய்த் தோன்றுவதுபோலே, ஒரேவிதமான ஆத்துமஸ்வரூபமும் அஞ்ஞானிகளுக்கு வெவ்வேறாகத் தோன்றுகின்றது. முடிவு சுருக்கமாச் சொல்லுகிறேன்கேள். எந்த எந்தப்பொருளுண்டோ அவையெல்லாம் ஸ்ரீ அச்சுதனுடைய சொரூபமேயாம், அவனுக்குவேறாய் மேற்பட்டதொன்றுமில்லை, நானும் அவன்சொரூபமே, நீயுமப்படியே, சகலமும் அப்படியே; ஆதலால் எல்லாம் வேறுவேறென்கிறபேதபுத்தியாகிற அஞ்ஞானத்தைவிட்டுவிடு; என்றிப்படி அந்தயோகீந்திரராலே நன்றாய்ப்போதிக்கப்பட்டு அந்த ராஜா சுத்தஞானமடைந்து முன்னிருந்தபேதஞானத்தை விட்டுவிட்டான். அந்தப்பரதயோகியும் பூர்வஜன்மஸ்மரணத்தினாலே ஞானயோகமடைந்தவராய் அந்தச்சனனத்திலேயே மோக்ஷமடைந்தார். இப்படிக்கு மகானுபாவரான பரதயோகியினுடைய இந்த மேன்மையான சரித்திரத்தை எவன் சொல்லுகிறானோ, எவன் பக்தியோடு கேட்கிறானோ அவர்களெல்லாம் சுத்தஞானமுடையவர்களாகி மோக்ஷம்பெறுதற்கு யோக்கியராவார்கள்.

[இங்கே ஜடபரதர் முதலானோர் பக்த்திஷ்டருக்கு ஆத்துமஸ்வரூபானுபவம் ஆவசியகமானதனாலே அதுதெளிந்து அனுபவப்படும்படி நாநாவிதவுபாயங்களினாலே போதித்தார்களே யல்லது அவ்வளவே உபாயபரமபுருஷார்த்தங்களென்றன்று; கடைசியில் வாசுதேவத்தியானத்தையும் மோட்சத்தையுஞ் சொல்லியிருப்பதனால்; ஆனால் ஆத்துமசொரூபத்தையே பரமார்த்தமென்றுசொன்னதென்னவெனில், பிரகிருதிசம்பந்த மறநீங்கி ஆத்துமா அனன்யார்த்த சொரூபத்தோடுநிற்பதே பரமபுருஷார்த்தமாகையால் அப்படிச்சொன்னாரென்று உணரவேண்டும்.]

அலங்காரவிஷயம்.

[கசுஉ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

இனி காப்பியங்களில் வர்ணிக்கவேண்டிய அம்சங்களிற் சில குறிக்கப்படுகின்றன.

பெருங்காப்பியமுதலியவற்றுள் ராஜாவும், ராஜபத்னியும், ராஜபுத்ரனும், மந்திரியும், புரோகிதனும், சேனாபதியும், நாடும், நகரமும், காடும், மலையும், பொழிலும், பொய்கையும், மந்திரமும், சூதும், படையெழுச்சியும், வேட்டையும், கரிபரிதேர்காலாளென்னும் நால்வகைச்சேனாபலமும் மற்றும் பலவும் வர்ணிக்கப்படவேண்டும். அவற்றுள்,—

ராஜாவினிடத்து வர்ணிக்கத்தக்க அம்சங்கள்;—கல்வி, கேள்வி, அறிவுடைமை, பொறையுடைமை, செங்கோன்மை, ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, கீர்த்தி, பிரதாபம், துஷ்டநிக்ரகம், சிஷ்டபரிபாலனம் முதலியவை.

ராஜபத்னியினிடத்து வர்ணநீயமான அம்சங்கள்,—அழகு, அமைதி, மானம், வ்ரதம், அன்பு முதலியன.

ராஜபுத்ரனிடத்து வர்ணிக்கத்தக்கவை,—புலமை, திறமை, யானையேற்றம், குதிரையேற்றம், ஆயுதப்பயிற்சியிற்றேர்ச்சி முதலியவை.

மந்திரியினிடத்து வர்ணிக்கப்படத்தக்கவை;—கலங்காமையும், கல்வியறிவும், முயற்சியும், உலகவியல்பினுணர்ச்சியும், சூழ்ச்சியும் ஆகிய இவை முதலியன.

புரோகிதனிடத்து வர்ணநீயங்கள்,—குலன், அருள், தெய்வபக்தி, வேதம் வேதாங்கம் புராணம் இதிகாசம்தர்மசாஸ்திரம்முதலிய நூற்பொருட்டேர்ச்சி, ஒழுக்கமுடைமை, வாய்மையுடைமை, பொறையுடைமை முதலியன.

சேனாபதியிடத்து வர்ணிக்கத்தக்கவை,—ராஜபக்தியும், ஊரஞ்சாமையும், உயிரோம்பாமையும், தெவ்வடக்குந்திறனும், அதிற்பழக்கமும் ஆகிய இவை முதலியவை.

நாடுநகரங்களில் வர்ணிக்கத்தக்கவை,—உழவர் துறவர் அந்தணர் வணிகர் முதலாயினோருண்மையும், ஆகரங்களிற்படுவனவும், வயலினும் பொழிலினும் விளைவனவும், கேணிகளும் ஏரிகளும் ஆறுகளுமாகிய ஜலாதாரங்களும், மலையும், அருவியும், அரணும், பிணியின்மையும், செல்வப் பெருக்கும், விளைவுமிகுதியும், இன்பப்பெருக்கும், காவன்முறைமையும், குடிகள் வேந்தனிடத்தன்புடையாராதலும், வேந்தன் குடிகளிடத்தருளுடையானாதலும் முதலாயின.

இவ்வாறு வர்ணிக்கவேண்டிய பல அம்சங்களும் வடமொழியுள் கவிசிக்ஷாதி பழையநூல்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. தமிழ்நூல்களுள்ளும் சிலஅம்சங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு உதாரணங்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணமுதலியவற்றுள் ஆங்காங்குக்காணப்படும்.

[நாயகஸ்வரூபநிரூபணம்.]

இனி காவியத்திற்குரிய நாயககுணங்கள் சிறிது விளக்கப்படுகின்றன.

நற்குண மமைந்த நாயகனை நாடிற்
பொற்புறுங் காப்பியம் பொன்மலர் மணத்ததே

என்றமையின், கவித்தலைவன் மகாபுருடனாதல்வேண்டும்.

புல்லர்தம் பாற்படுஞ் சொல்லினைச் செவியுறார்
நல்லிய லமைந்த நாவலர் தாமே,—ஆகலின்.
கருத்தினுமகற்றுககாப்பியம்

என்னுந்தருமநூலின்றுணிபுமீதே. மகாபுருட குணவர்ணனையானது பற்றியே இராமாயணமுதலியன சிறந்துநின்றன. அவற்றுள் இராவணாதிபாதகர்* சரித்திரங்கூறப்பட்டிலையோவெனின், அங்ஙனமன்று; வரப்பிரசாதத்தானளவற்ற செல்வமுதலாய சிறப்பினைப்பெற்றோரும் நெறியினொழுகாமை பற்றிக் கேடுற்றனராதலின், தீவழியொழுகற்கவெனவுணர்த்தியதாம். மக்கட்குப் பயின்றவழி வாதனை யுறுதிப்படுவதுபற்றித் தீவழிச்சென்றோரியல்பினைச் சிறப்பித்துக்கூறுநூல் தின்மையேதரும்; நல்வழியொழுகினோரியல்பினைக்கூறுநூலோ நன்மையேதருமெனவறிக. [கவித்தலைவனை நாயகனென்பது மரபு.]

இனி (1) நாயககுணங்களாவன:—

உயர்குலப் பிறப்பே யொளியுடை மையே
அயர்வறு மீகையோ டறத்தி னிலையே
மயர்வுறும் வண்மையே மாபாக் கியமே
வியப்புறுந் திறனொடு வியக்கமா வனவெலா
நயனுடை நாயக னற்குண மென்ப

எனவிரித்துந் தொகுத்துங் கூறப்பட்டவையாம். இதில் அரசற்குரியனவே பெரும்பான்மையுரைக்கப்பட்டிருப்பினும் ஏனையோர்க்குரியனவற்றையுமாங்காங்குக்கொள்க. [உதாரணம் வருமாறு.]

உயர்குலப்பிறப்பு.—

"ஆதித்தன்குலமுதல்வன்மனுவினையாரறியாதார்
பேதித்தவுயிரனைத்தும்பெரும்பசியால்வருந்தாமல்
சோதித்தன்வரிசிலையானிலமங்கைமுலைசுரப்பச்
சாதித்தபெருந்தகையுமிவர்குலத்தராபதிகாண்."

ஒளியுடைமையாவது,—கீர்த்திப்பிரதாபமுடைமை.

(ஏ) கீர்த்தி—

இராகு முகம்படா னேலான் களங்க
மிராப்பக லெல்லா மிருந்தொளி செய்வான்
இராம னெனுங்குணப்பா லேர்க்கடலிற் றோன்று
மிராம னொருவனுண் டிங்கு.

(b) பிரதாபம்.—

தனிச்சிலை யேந்தனுந் தாசரதி வீரப்
பனிப்பகை மேற்கொண்டு பாய வமரா
மனத்தி னகன்றுறுகண் மங்குறங் கிற்றே
சினத்தரக்கர் சித்தத்துச் சேர்ந்து.

அயர்வறுமீகையாவது - *வள்ளன்மையே:—*

"மொய்யார்கலிசூழ்முதுபாரின்முகந்துதானக்
கையார்புனலானனையாதனகையுமில்லை
மெய்யாயவேதத்துறைவேந்தருக்கேய்ந்தயாருஞ்
செய்யாதயாகமிவன்செய்துமறந்தமாறோ."

அறத்துநிலைக்கு *மேற்பாட்டின்பின்னடிகளையேகாட்டாகக்கொள்க; அன்றியும்,—*

"தாயொக்குமன்பிற்றவமொக்குநலம்பயப்பிற்
சேயொக்குமுன்னின்றொருசெல்கதியுய்க்குநீரான்
நோயொக்குமென்னின்மருந்தொக்குநுடங்குகேள்வி
யாயப்புகுங்காலறிவொக்குமெவர்க்குமன்னான்."

*[முன்னுதாரணத்தில் கிரியையான அறம் கூறப்பட்டது; இவ்வுதாரணத்தில் குணமாகிய அறம் கூறப்பட்டது. மக்கட்குச் சத்தியம், தயை, பொறுமை முதலாக * எட்டுக்குணங்கள் அறத்துட்டலையானவையெனத் தருமநூலோர் உரைத்திருப்பதுகாண்க. இப்பாடல்களையும் மற்றவைகளையும் இராமவிஷயமாகவேகொள்க.]*

மயர்வுறும்வண்மையாவது - *மோகிக்கத்தகுமழகு:*

பொருளின்பம் போரப் புறத்திட்டுப் போந்து
மருணீக்கு மாதவத்தே நின்ற—இருடிகளும்
மாலாகிப் பெண்மை வரித்தனரொன் றாலோதற்
பாலாமோ காகுத்தன் பாங்கு.

மாபாக்கியமாவது - *முற்றரசாட்சி:—*

"நேமிமால்வரைமதிலாகநீள்புறப்
பாமமாகடல்கிடங்காகப்பன்மணி
வாமமாளிகைவரையாகமன்னர்க்குப்
பூமியுமயோத்திமாநகரம்போன்றதே."

வியப்புறுந்திறனாவது - *சதுரப்பாடு; அதாவது அற்பத்தினாற் பெரிதைச் சாதித்தலும், ஒன்றிற் பலவற்றைச்சாதித்தலுமாம்.*

---

* *அவையாவன:—சத்தியம், தயை, பொறுமை, தேவபக்தி, சுத்தி, பொறாமையின்மை, மங்களமுடைமை, உலோபத்தனமின்மை எனவிவை.*

புகரில் புகலெனும் பூந்தேன் பொழியு
நிகரின் முகமலரை நேர்ந்து—சகல
சகமுந்த னங்கையிற் சார்த்துஞ் சனகன்
மகளை மணந்த மகன்.

ஊன்கொண்ட வன்பகழி யொன்றெய்து வைதேகி
தான்கொண்ட சோகமுந் தண்டாச் சுரர்சோர்வும்
கூன்கொண்ட நெஞ்சத் தரக்கர் குதுகலமுந்
தார்கொண்ட வண்டோ தரிமங் கலநாணு
மோர்கொண் டிறுத்தா னிவன்; என்பதுமது.

இனி, (2) **நாயகசொருபமாமாறு:—**

புகழும் வீரமும் பொருந்திப் பொருளிற்
றகமுயலுந் துரந்தர னாகிக் குணங்கள்
மிகநின் றவனே மேதகு நாயகன்.

புகழ்வீரங்கட்கு *முன்பே யுதாரணங் காட்டப்பட்டன.*

பொருள் - *அறமுதலியன.*

முயற்சியிற்றகமையாவது - *ஒன்றோடொன்று முரணாதுவைத்தல்.*

சேற்றினிற்பூச்சிபோற்படியாதுபல்லறஞ்செய்துலகின்வெப்பமாறப்
போற்றுமாதித்தனீர்கொளலெனத்திறைகொண்டுபொங்குவிளைவுன்னியுழவன்
ஏற்றநிலனோம்பலெனவிணையிலாப்பெண்டிரொடிணைந்துசந்ததிவாய்க்கவே
சாற்றருமியோகுபலசாதித்தகாகுத்தசார்வபவுமன்வாழியே.

துரந்தரத்துவமாவது - *பாரந்தாங்கல்; என்றால் பெரியகாரியம் நிர்வகித்தலாம்.*

காடு மலையுங் கடலுங் கடிநகரு
நீடுநில னெல்லா நெடுஞ்சிலையன்—ஆடும்
புயங்கத்தோ டொத்த புயத்திற் றரித்தா
னியங்கத்தோட் பூணோ டியைந்து;

பல்பிறப்பாய்ப்பிறந்துவருந்தியும்பயன்படாமே
யொல்கியாழ்கடற்றுயின்றவுந்திபூத்தவனுவப்பப்
பல்கலைமேவுஞ்சந்தப்பனுவறம்பிணக்கறுத்தான்
சொல்வளமல்குபன்னூல்சொரிந்ததெதிராசன்றானே; என்பதுமது.

குணங்கண்மிகநின்றமை:—

"ஆதிம்மதியும்மருளும்மறனும்மமைவும்
ஏதின்மிடல்வீரமுமீகையுமெண்ணில்யாவும்
நீதிந்நிலையும்மிவைநேமியினோர்க்குநின்ற
பாதிம்முழுதும்மிவற்கேபணிகேட்பமன்னோ."

இங்ஙனஞ் சொருப முரைக்கவே செயற்கரியசெய்து செய்யபுகழ்நாட்டி அயர்வின்றி அறமுதலாமவற்றுளமைந்த பெருந்தகையின் சரிதமே யியம்பற்பாலதென்றதாயிற்று. [தொடர்ச்சி.]

பழமொழிகள்.

14. அடிக்குமொருகை அணைக்குமொருகை.
15. அடிநாக்கிலேநஞ்சும் நுனிநாக்கிலே அமுதும்.
உள்ளேநெருப்பெரிய உதடுபெழஞ்சொரிய.
உள்ளேபகையும் உதட்டிலுறவும்.
வாய் வாழைப்பழம் கை கருணைக்கிழங்கு.
* அந்தஸ்தாபோ பஹிஸ்ஸீதம்.
* விஷகும்பம் பயோமுகம்.
16. அடிமேலடிவிழுந்தால் அம்மியும் நகரும்.
17. அடியாதமாடு படியாது.
18. அடியுதவுவதுபோல் அண்ணன்தம்பியுதவார்.
19. அடுக்(கு)கிற அருமை உடைக்கிறநாய்க்குத் தெரியுமா?
குசவனுக்கு ஆறுமாசம் தடிகாரனுக்கு அரைநாழிகை.
20. அடுத்ததுகாட்டும் பளிங்கு கடுத்ததுகாட்டு முகம்.
அகத்திலழகு முகத்திற்றெரியும்.
21. அடுத்துக்கெடுப்பான் கபடன் தொடுத்துக்கெடுப்பாள் வேசி.
22. அடுப்பெரிந்தால் பொரி பொரியும்.
முன்கைநீண்டால் முழங்கைநீளும்.
23. அட்டமத்துச்சனி நட்டம்வரச்செய்யும்.

பொருளிலக்கணவிஷயம்.

[கஅகூ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

I.—முதற்பொருள்.

14.—முதற்பொருள் நிலமும் பொழுதும் என இருவகைப்படும். அவற்றுள்,—

(1) நிலம்—மலையும், மலைசார்ந்தவிடமும்,
சுரமும், சுரஞ்சார்ந்தவிடமும்,
காடும், காடுசார்ந்தவிடமும்,
பழனமும், பழனஞ்சார்ந்தவிடமும்,
கடலும், கடல்சார்ந்தவிடமும்,
எனப்பத்துவகைப்படும். இவற்றுள்,—
குறிஞ்சிக்கு நிலம்—மலையும், மலைசார்ந்தவிடமும்,
பாலைக்கு ,, —சுரமும், சுரஞ்சார்ந்தவிடமும்,
முல்லைக்கு ,, —காடும், காடுசார்ந்தவிடமும்,
மருதத்திற்கு ,, —பழனமும், பழனஞ்சார்ந்தவிடமும்,
நெய்தலுக்கு ,, —கடலும், கடல்சார்ந்தவிடமும் ஆம்:

(2) பொழுது (a) பெரும்பொழுது என்றும், (b) சிறுபொழுது என்றும் இருவகையாம்.

(a) பெரும்பொழுது—கார் (ஆவணி, புரட்டாசி)
கூதிர் (ஐப்பசி, கார்த்திகை)
முன்பனி (மார்கழி, தை)
பின்பனி (மாசி, பங்குனி)
இளவேனில் (சித்திரை, வைகாசி)
முதுவேனில் (ஆனி, ஆடி)
என்னும் ஆறுபகுதியினையுடையதாகும். [பெரும்பொழுது, பருவம் என்பன ஒருபொருள். வடநூலார் பெரும்பொழுதை ருது என்றும், கார் முதலிய ஆறினையும் முறையே வர்ஷருது, சரத்ருது, ஹேமந்தருது, சசிருது, வஸந்தருது, க்¡ஷ்மருது, என்றும் கூறுவர்.]

(b) சிறுபொழுது—மாலை (1 - 10 நாழிகை இரா)
யாமம் (11- 20 ,, ,,)
வைகுறு (21- 30 ,, ,,)
காலை (1 - 10 ,, பகல்)
நண்பகல் (11- 20 ,, ,,)
எற்பாடு (21- 30 ,, ,,)
என்னும் ஆறுபகுதியினையுடைய தாகும்.

இவற்றுள்,—

	பெரும்பொழுது:	சிறுபொழுது:
குறிஞ்சிக்கு	—கூதிர் (முன்பனி)	—யாமம்.
பாலைக்கு	—இளவேனில் முதுவேனில் (பின்பனி)	—நண்பகல்
முல்லைக்கு	—கார்	—மாலை
மருதத்திற்கு — } நெய்தலுக்கு — }	அறு பொழுதும்	{ —வைகுறு விடியல் (காலை) { —எற்பாடு

என்பன உரியவாம்.

II.—கருப்பொருள்.

15. கருப்பொருள்,—(1) தெய்வம், (2) உயர்ந்தோர், (3) தாழ்ந்தோர், (4) புள், (5) விலங்கு, (6) ஊர், (7) நீர், (8) பூ, (9) மரம், (10) உணவு, (11) பறை, (12) யாழ், (13) பண், (14) தொழில் எனப்பதினான்குவகையாம். அவையாமாறு:—

கருப்பொருள்.	குறிஞ்சி.	பாலை.	முல்லை	மருதம்.	நெய்தல்.
1. தெய்வம்	—சேய்	—கன்னி (*ஆதித்தன்)	—நெடுமால்	—இந்திரன்	—வருணன்.
2. உயர்ந்தோர்: (a) தலைமகன்	—(a) பொருப்பன் வெற்பன் சிலம்பன்	—(a) விடலை காளை மீளி	—(a) குறும்பொறை நாடன் தோன்றல்	—(a) ஊரன் மகிழ்நன்	—(a) சேர்ப்பன் துறைவன் புலம்பன் கொண்கன்.
(b) தலைமகள்	—(b) குறத்தி கொடிச்சி	—(b) எயிற்றி பேதை	—(b) மனைவி கிழத்தி	—(b) மனைவி கிழத்தி	—(b) பரத்தி நுளைச்சி.
3. தாழ்ந்தோர் (மக்கள்)	—(a) குறவர் குன்றவர் கானவர் இறவுளர்	—(a) எயினர் மறவர்	—(a) இடையர் ஆயர்	—(a) உழவர் கடையர்	—(a) நுளையர். பரதர். அளவர்.
	—(b) குறத்தியர்	—(b) எயிற்றியர் மறத்தியர்	—(b) இடைச்சியர் ஆய்ச்சியர்	—(b) உழத்தியர் கடைச்சியர்	—(b) நுளைச்சியர் பரத்தியர் அளத்தியர்
4. புள்	—கிளி மயில்	—புறு பருந்து எருவை கழுகு	—காட்டுக்கோழி மயில் சிவல்	—வண்டானம் நீர்க்கோழி அகன்றில் நாரை அன்னம் போதா கம்புள் குருகு தாரா	—காக்கை அன்னம் அன்றில் அகன்றில்
5. விலங்கு	—புலி பன்றி கரடி யானை சிங்கம்	—செந்நாய் (வலியழிந்த) யானை புலி	—மான் முயல்	—எருமை நீர்நாய்	—சுறா முதலை
6. ஊர்	—சிறுகுடி	—குறும்பு	—பாடி சேரி	—பேரூர் மூதூர்	—பாக்கம் பட்டினம் சிறுகுடி.
7. நீர்	—அருவி சுனை	—குழி (அறுநீர்க்) கூவல் (,, ச்) சுனை	—குறுஞ்சுனை கான்யாறு	—ஆறு கிணறு குளம்.	—உவர்நீர்க்கேணி. சுவர்நீர் மணற்கிணறு உவர்க்கழி.

கருப்பொருள்.	குறிஞ்சி.	பாலை.	முல்லை.	மருதம்.	நெய்தல்.
8. பூ	—வேங்கை குறிஞ்சி காந்தள் சுனைக்குவளை	—குரா மரா உழிஞை பாதிரி	—குல்லை முல்லை தோன்றி பிடவம் கொன்றை காயா	—தாமரை செங்கழுநீர் குவளை காஞ்சி வஞ்சி	—நெய்தல் (வெள்ளிதழ்க்) கைதை முண்டகம். அடம்பு.
9. மரம்	—சந்தனம் தேக்கு அகில் அசோகம் நாகம் மூங்கில் திமிசு வேங்கை	—ஓமை இருப்பை பாலை கள்ளி புளி	—குருந்து கொன்றை முருங்கை பாதிரி வாகை காயா	—மருது வஞ்சி காஞ்சி தெங்கு கமுகு வாழை மா பலா	—கண்டல் பனை புன்னை ஞாழல்
10. உணவு	—எண்வகைக்கூலம்* முதிரை† கிழங்குபேதம்‡ மூங்கிலரிசி.	—வழிப்பறித்தன பதியிற்கவர்ந்தன	—வரகு சாமை முதிரை†	—செந்நெலரிசி வெண்ணெலரிசி	—மீனை, உப்பைவிற்றலாற் [பெற்றன. மீன்.
11. பறை	—தொண்டகம் வெறியாட்டுப்பறை குரவைப்பறை	—துடி பூசற்பறை ஊரெறிபறை நிரைகோட்பறை	—ஏற்றுப்பறை முரசு	—கிணைமுழவு மணமுழவு.	—மீன்கோட்பறை நாவாய்ப்பம்பை.
12. யாழ்	—குறிஞ்சியாழ்	—பாலையாழ்	—முல்லையாழ்	—மருதயாழ்	—விளரியாழ்.
13. பண்	—குறிஞ்சி	—பஞ்சுரம்	—சாதாரி முல்லை.	—மருதம்	—செவ்வழி.
14. தொழில்	—வெறியாடல் ஐவனம்வித்தல் தினைகாத்தல் தேனழித்தல் கிழங்ககழ்தல் அருவியாடல் சுனையாடல் குன்றமாடுதல்	—போர்புரிதல் சூறையாடல் நிரைகோடல் சரத்தெறிதல்	—சாமை,வரகுவித்தல் 〃 〃 கட்டல் 〃 〃 அரிதல் கடாவிடல் கொன்றைக்குழலூ [தல் மூவினமேய்த்தல் விடைதழுவல் குரவையாடல்	—விழாக்கொளல் வயற்களைகட்டல் நெல்லரிதல் கடாவிடல் குளங்குடைதல் புனலாடல்	—மீனுப்புப்படுத்தல் அவைவிற்றல் மீனுணக்கல் புள்ளோப்பல் கடலாடல்.

* எண்வகைக்கூலமாவன:—"நெல்லும் புல்லும் வரகுதினை சாமையு, மிறுங்கு தோரை கறைவிளை நெல்லே" என்பன. [புல்-கம்பு. இறுங்கு-சோளம். தோரை - மலைநெல்; கோதுமையுமாம். கறைவிளைநெல் - கேழ்வரகு.]

† முதிரையாவன:—அவரை, துவரை, உழுந்து, கடலை, மொச்சை, காராமணி, பயறுவகைகள் முதலியவாம்.

‡ அவை மஞ்சள், கருணை, சேமை, உள்ளி, வள்ளி, இஞ்சி, முதலியன.

III—உரிப்பொருள்.

16. உரிப்பொருள்,—(1) புணர்தலும், (2) புணர்தனிமித்தமும்; (3) பிரிதலும், (4) பிரிதனிமித்தமும்; (5) இருத்தலும், (6) இருத்தனிமித்தமும்; (7) ஊடலும், (8) ஊடனிமித்தமும்; (9) இரங்கலும், (10) இரங்கனிமித்தமும், எனப் பத்துவகையாம். அவற்றுள்,—

(1)—(பாலையொழிந்த) நான்குநிலத்தும்புணர்ச்சிநிகழுமேனும், முற்பட்ட புணர்ச்சியே புணர்தற்சிறப்புடைமையின், ஈண்டுப் புணர்ச்சியென்றது முற்படக்குறிஞ்சியினிகழும் புணர்ச்சியையாம். [அது இயற்கைப்புணர்ச்சியும், இடந்தலைப்பாடும், பாங்கற்கூட்டமும், பாங்கியிற்கூட்டமும், அதன்பகுதியாகிய பகற்குறி யிரவுக்குறிக்கண்ணெதிர்ப்பாடும் போல்வதாம்.]

(2)—தலைவன் தோழியைக்குறையுறும்பகுதியும், ஆண்டுத்தோழிகூறுவனவும், குறைநேர்தலும், மறுத்தலும் முதலியன புணர்தனிமித்தமாம்.

(3)—ஓதலும், தூதும், பகையும், அவற்றின்பகுதியும், பொருட்பிரிவும், உடன்போக்கும் பிரிவாம்.

(4)—ஒன்றுத்தமரினும் பருவத்தும் சுரத்தும் தோழியொடுவலித்தன் முதலியன பிரிதனிமித்தமாம். [பிரிந்தபின் தலைவிவருந்துவனவும் தோழியாற்றுவிப்பனவும் பாலையாதலின் பின்னொருகாற்பிரிதலுக்கும் நிமித்தமாம்; அவை பின்னர்ப்பிரியும் பிரிவிற்கு முன்னிகழ்தலின்.]

(5)—தலைவிபிரிவுணர்த்தியவழிப்பிரியாரென்றிருத்தலும், பிரிந்துழிக்குறித்தபருவமன்றென்று தானேயுரைத்தலும், பருவம்வருந்துணையும் ஆற்றியிருந்தமைபின்னர்க்கூறுவனவும் போல்வன இருத்தலாம். [அப்பருவம்வருதற்கு முன்னர்க்கூறுவன முல்லைசான்ற கற்பன்மையின் பாலையாம்.]

(6)—பருவங்கண்டு ஆற்றாது தோழிகூறுவனவும், பருவமன்றென்று வற்புறுத்துவனவும், வருவரென்றுவற்புறுத்துவனவும், தலைவன் பாசறைக்கண்ணிருந்துரைப்பனவும், அவைபோல்வனவும் இருத்தனிமித்தமாம்.

(7) புலவி முதலியன ஊடலாம்.

(8) பரத்தையும் பாணனும் முதலியோர் ஊடனிமித்த மாம்.

(9) கடலுங்கானலுங்கழியுங்காண்டொறு மிரங்கலும், தலைவனெதிர்ப்பட்டு நீங்கியவழியிரங்கலும், பொழுதும் புணர்துணைப்புள்ளுங் கண்டிரங்கலும் போல்வன இரங்கலாம்.

(10) அக்கடல் முதலியனவும் தலைவனீங்குவனவும் எல்லாம் இரங்கனிமித்த மாம். இவற்றுள்,—

திணை.	உரிப்பொருள்.
குறிஞ்சிக்கு - - -	புணர்தலும், புணர்தனிமித்தமும்;
பாலைக்கு - - -	பிரிதலும், பிரிதனிமித்தமும்;
முல்லைக்கு - - -	இருத்தலும், இருத்தனிமித்தமும்;
மருதத்திற்கு - - -	ஊடலும், ஊடனிமித்தமும்;
நெய்தற்கு - - -	இரங்கலும், இரங்கனிமித்தமும்;

உரியனவாமெனவறிக.

[வழக்கியலாற்சிறுபான்மை பிறழ்ந்து வருமேனும், பெரும்பான்மை இவை உரியவெனக் கொள்க.]

17. இனி, இவ்வைந்திணையிடத்து களவும், கற்பும் என இரு கைகோள் [=ஒழுக்கம்] நிகழும். அவற்றுள்,—

18. களவாவது,—வேதவிகிதமாகிய * அஷ்டவிதவிவாஹத்துள் காந்தர்வவிவாஹத்தோடொத்தவியல்புடையதாய் பிணிமூப்பிறப்புக்களின்றிளஞ் ஞான்று மொருதன்மையராய் உருவுந்திருவும் பருவமுங் குலனுங்குணனு மன்பு முதலியவற்றாற் றம்முளொப்புமையுடையராய தலைமகனுந் தலைமகளும் பிறர் கொடுப்பவு மடுப்பவுமின்றிப் பால்வகையாற் றாமே யெதிர்ப்பட்டுப்புணர்ந்துவருவது. இது புணர்ச்சி எனவும்படும். இதனை வடநூலார் ஸம்போகசிருங்காரம் என்பர்.

19. கற்பாவது,—வேள்விச்சடங்கோடுகூட ஒத்தகுலத்தோனும் மிக்க குலத்தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன், ஒத்தகுலத்தாளும் இழிந்தகுலத்தாளுமாகிய தலைவியை, கொடுத்தற்குரிய முறைமையினையுடையார் [அவர்களாவார்: இருமுதுகுரவரும், தாயொடு பிறந்தாரும், தாயத்தாரும், ஆசானும் முதலியோர்] கொடுப்பக்கொள்ளுதலாம்.

20. இது கற்பெனப்பட்டதெதனானெனின்,—கொண்டானிற்சிறந்த தெய்வமின்றெனவும், அவனை யின்னவாறுவழிபடுகவெனவும், இருமுதுகுரவர்கற்பித்தலானும்; அந்தணர் திறத்துஞ் சான்றோர்திறத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன்கற்பித்தலானும்; அவ்வேள்விச்சடங்கு நிகழுங்கால் இவளை யின்னவாறு பாதுகாப்பாயெனவும், இவற்கின்னவாறே நீ குற்றேவல்செய்தொழுகுகவெனவும் அங்கியங்கடவுளறிகரியாக மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலினானும்; என்பர்.

இது மகிழ்வு மூடலும் பிரிவு மிரங்கலு மருவியதாம். இதனை வடநூலார் விப்ரலம்பசிருங்காரமென்பர்.

அகப்பொருளுக்குரியவெனக் கூறப்பட்ட கைக்கிளைமுதலாப்பெருந்திணை யிறுவாயுள்ள எழுதிணையுள்ளும் கைக்கிளையும் பெருந்திணையும் ஐந்திணையை அடுத்துவருவனவேயன்றித் தனித்துவருஞ் சிறப்புள்ளனவல்லவெனவும், தனித்துவருஞ்சிறப்புள்ளன ஐந்திணையேயெனவும் அறிக. [தொடர்ச்சி.]

---

* அஷ்டவிதவிவாஹமாவன:—பிராஹ்மம், பிராஜாபத்யம், ஆர்ஷம், தெய்வம், காந்தர்வம், ஆசுரம், ராக்ஷசம், பைசாசம் எனவிவை. என்னை: "அறநிலையொப்பே பொருள்கோடெய்வம், யாழோர்கூட்ட மரும்பொருள்வினையே, இராக்கதம்பேய்நிலை யென்றிக்கூறிய, மறையோர்மன்றலெட்டு"...... என்பதன்பொருளுணர்வது. பிராஹ்மம் - அறநிலை. பிராஜாபத்யம் - ஒப்பு. ஆர்ஷம் - பொருள்கோள். காந்தர்வம் - யாழோர்கூட்டம். ஆசுரம் - பொருள்வினை. பைசாசம் - பேய்நிலை. இவற்றுள் ஆசுரமுதலிய மூன்றும் கைக்கிளைக்குரியன; பிராஹ்மமுதலிய நான்கும் பெருந்திணைக்குரியன; காந்தர்வம் - ஐந்திணைக்குரிய கைகோளிரண்டினுள் களவுக்குரித்து என்பர். [இவ்விவாஹபேதங்களின் விவரமெல்லாம் தர்மசாஸ்திரவிஷயம் என்னுந் தலைப்பில் எழுதப்படும்; ஆண்டுக்கண்டுகொள்க.]

தர்க்கசாஸ்திரவிஷயம்.

தர்க்கசாஸ்திரமென்றால் பொருள்களை நன்றாய் நிரூபிக்கும் சாஸ்திரம் என்பதுபொருள். நிரூபித்தலாவது-அதன் இலக்கணமின்னது, அதன் ஸ்வரூபமின்னது, அது இதனாற் கொள்ளத்தக்கது என்றிப் படிப்பட்டபலவகையால் விளக்குவது. இந்தசாஸ்திரமானது வேதத்தின் உபாங்கங்களி லொன்றாய்ப் பதினான்குவித்தைகளிற் சேர்ந்தது.

இந்தசாஸ்திரமானது ஆதியில் கவுதமமுனிவராலும் கணாதமுனிவராலும் பிரவசனம் செய்யப்பட்டது. இவ்விருவர் செய்த நூல்களிலும் சிலபேதங்களுண்டு; ஆயினும் பொதுக்காரியங்களில் பேதமிராது. இக்காலத்தில் பெரும்பாலும் வழங்கிவருவது கணாத தர்க்கமே. இந்தக் கணாதசூத்திரத்துக்கு உதயனாசார்யர் என்பவர் பாஷியஞ்செய்திருக்கிறார்.

காணாதம் பாணிநீயஞ்ச ஸர்வஶாஸ்த்ரோபகாரகம்.

என்கிறபடியே இந்தசாஸ்திரமானது எந்தப்பொருளையும் ஆராய்வதற்கும் விவாதமெடுத்துப் பேசுவதற்கும் அவசியமானது. இதன் உதவியில்லாத ஆராய்ச்சியும் பேச்சும் நேராகவும் உறுதியாகவும் இருப்பது அருமை.* மேலுதாகரித்தவாக்கியத்தின்பொருளையே தமிழில்

"எண்ணெழுத்திகழேல்,"
"எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும்" என ஔவையாரும்;
"எண்ணென்பவேனையெழுத்தென்பவிவ்விரண்டுங்
கண்ணென்பவாழுமுயிர்க்கு" என நாயனாரும்

கூறியிருப்பதும் காண்க. இங்கு எண்ணென்பது தருக்கநூலுக்கும், எழுத்தென்பது இலக்கணநூலுக்கும்பெயர். அது

"எண்ணுமெழுத் துங்கண் ணிவையாய்ந்திந் நூற்பயனைக்
கண்ணுககாண் பார்நற் கதி;
"காண்ட லனுமானங் கதையருத்தா பத்தியிவை
யீண்டிசைத்த வெண்ணெனவே யெண்;
"வழுப்பதத்தை வாக்கினுக்கு மாற்றிவர மாக்கு
மெழுத்தெழுவா யைந்து மெழுத்து;"

என்னும் பரமததிமிரபானுத் திருக்குறளானுணர்க.

---

* இவ்விஷயம் "எண்ணென்பவேனை யெழுத்தென்ப" என்னுந்திருக்குறளுரையுள் "இதனாற்கற்கப்படுநூல்கட்குக்கருவியாவனவும் அவற்றதின்றியமையாமையுங்கூறப்பட்டன" எனவும், "அவை கருவியாதல் 'ஆதிமுதலொழியவல்லாதன வெண்ணி, னீதிவழுவாநிலைமையவான்—மாதே, யறமார்பொருளின்பம்வீடென்றிவற்றின், றிறமாமோவெண்ணிறந்தாற்செப்பு,' 'எழுத்தறியத்தீருமிழிதகைமைதீர்ந்தான், மொழித்திறத்தின்முட்டறுப்பானாகும்—மொழித்திறத்தின், முட்டறுத்தநல்லோன்முதனூற்பொருளுணர்ந்து, கட்டறுத்து வீடுபெறும்' இவற்றானறிக" எனவும் கூறிய பரிமேலழகர் வாக்கியங்களால் ஐயமற விளக்கப்பட்டமைகாண்க.

கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் ௩.] ௧௮௮௬ ௵ அக்டோபர்மீ [சஞ்சிகை ௯.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதியாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானென் றருளினொ லெளியவர்ச் சையுமாகி யுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

துருவசரித்திரம்.

சுவாயம்பு மனுவுக்கு சதரூபி என்னும் மனையாளிடத்து பிரியவிரதனென்றும் உத்தானபாதனென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் உத்தானபாதனுக்கு சுருசி, சுநீதியென்று மனைவியரிருவரிருந்தார்கள். அவர்களுள் சுருசி உத்தானபாதனுக்குப் பிரியமுள்ளவளா யிருந்தாள். அவளுக்கு உத்தமனென்று ஒருகுமாரன்பிறந்து தகப்பனுக்கு மிகவும் பிரியனாயிருந்தான். சுநீதியென்பவள் புருஷனுக்குப் பிரியமில்லாதவளாயிருந்தாள், அவளுக்குத் துருவன் என்கிற குமாரன் பிறந்து சகலகுணாபிராமனாக இருந்தான். ஒருநாள் அவன், சிங்காசனத்தில் வீற்றிருந்த தன்தகப்பன்மடியிலுட்கார்ந்திருந்த வுத்தமனைப்பார்த்துத் தானும் அப்படி உட்காரவேண்டுமென்று கிட்டப்போனான். அப்போது தகப்பன் சுருசி எதிரிலிருந்தபடியினாலே மகனுடைய எண்ணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விதமாய் தகப்பன் மடியின்மேலேறவேண்டுமென்றுவந்த சக்களத்திமகனான துருவனை சுருசி பார்த்து, "பாலகனே! நீயேன்விருதாவாக இப்பிரயத்தனஞ்செய்கிறாய்? இந்தமனோரதமுனக்கு துர்லபமாயிருக்கும்; என் வயிற்றிலேபிறவாமல் வேறொருத்திவயிற்றிற்பிறந்த நீ இந்த உத்தமோத்தமமான சிங்காதனத்திலே யிருக்கநினைக்கிறது அவிவேகமேயாம். நீ இந்த மகீபாலனுக்கு மகனானாலும் சகலராஜ்ய லக்ஷ்மீநிவாசமான சிங்காதனத்துக்கு நீ தகுந்தவனாகமாட்டாய்; என்மகனே அதற்கு யோக்கியமானவன்; என்குமாரனுக்கிருக்கிறதுபோல் உனக்கும் இப்படிப்பட்ட மேன்மையான மனோரதம் இருக்கத்தகாது; பிள்ளாய்! நீ பாக்கியஹீனையான சுநீதிகர்ப்

பத்திலே பிறந்ததை நினைத்துக்கொள்ளவேண்டாமா" என்று இழிவாகச் சொன்னதைப்பொருமல், கோபத்தினுற் கலங்கின மனமுடையவனாய் சரேலென்று தன்தாயார் வீட்டுக்குப்போய்விட்டான்.

அந்தச்சுநீதி கோபத்தினுற் கண்சிவந்து உதடுதுடிக்கவந்த தன்மகனை மடியிலுட்காரவைத்துக்கொண்டு, குழந்தாய் உன்கோபத்துக்குக் காரணமென்ன? உனக்கு இப்படி அபராதஞ்செய்து மகீமண்டலேசுவரனுன வுன்தகப்பனை யவமானஞ்செய்தவர்யார்? என்று கேட்டதற்கு, துருவன் ஸபத்தினீமாதாவான சுருசி கர்வத்துடன் இராஜாவின்சமீபத்திலே தன்னைச்சொன்னவார்த்தைகளையெல்லாம் தாயாருடனே சொன்னுன். அதைக்கேட்டவுடனே சுநீதியானவள் பெருமூச்சுவிட்டுக் கண்ணொளியற்று மெலிந்தவளாய்ச் சொல்லுகிறுள்:—

"அப்பா! சுருசிசொன்ன வார்த்தைகளெல்லாம் நிஜந்தான். நீ சொற்பமானபாக்கியமுள்ளவன்; ஏனென்றுல் மகா புண்ணியமுள்ளவர்களுடைய குழந்தை சத்துருக்களால் இப்படிச்சொல்லப்படுமா? இத்தனையு முன்னுடைய பூர்வஜனனகர்மபரிபாகமாக நினைத்து மனதிலேகிலேசத்தைவிட்டுவிடு. உன்னுடைய பூர்வஜன்ம சுகிர்தபலத்தையபகரிக்க யாராலேயாகும்? நீசெய்யாதகர்மபலத்தைக் கொடுக்கத்தான்யாராலாகும்? பாக்கியவான்களான புருஷர்களுக்கேயல்லாமல் மற்றவருக்கு மகாராஜயோக்கியமான சிங்காசனமுஞ் சுவேதச்சத்திரமும் கஜதுரகாதி வாகனங்களு முண்டாகுமா? சுருசியானவள் பாக்கியவசத்தினுலே புருஷன் தன்னிடத்தில் மிகவும் பிரியமுள்ளவளாயிருக்கப்பெற்று பரிபூர்ணமனோரதையாய் சுகமாயிருக்கிறுள், என்னைப்போலே பாக்கியஹீனையாயிருக்கிறவள் பாரியையென்கிற பெயர்மாத்திரமுடையவளாய் துக்கித்திருக்கிறுள். உத்தமன் புண்ணியவானுனபடியினுலே சுருசிக்கு மகனுகப்பிறந்தான், சொற்பபாக்கியவானுன நீ என் கர்ப்பத்திலே ஜனித்தாய் குழந்தாய்! என்னசெய்யலாம் எவனுக் கெந்தமட்டும் அதிர்ஷ்டமோ அவன் அந்தமட்டிலே சந்தோஷிக்கவேண்டும்; இதுதான் புத்திமானுடையகாரியம்; ஆனபடியினுலே ஐசுவரியத்தைநினைத்து துக்கிக்கவேண்டாம்; ஆனுல் சுருசிசொன்ன வசனங்களுக்கு நீ மனம்பொருவிட்டால் உனக்குமப்படிப்பட்டமேன்மையுண்டாகும்படி சகலப்பிரதமானபுண்ணியத்தைச்செய்ய எத்தனப்படு; தர்மாத்துமாவாய் நல்லநடக்கையிலிருந்துகொண்டு சர்வபூத தயாபரனும் சர்வஜனமித்திரனுமாகச் சுகிர்தங்களைச் செய்தால் தண்ணீர் பள்ளத்திலெப்படிபோய்ச் சேருமோ அப்படியே சம்பத்துக்களும் அவனிடத்தில் தாமேவந்துசேரும்" என்று தாய்சொல்லக் கேட்டு, துருவன், தாயாரைப்பார்த்து "தாயே! நீ சொன்னவார்த்தைகள் சுருசிசொன்ன துர்ப்பாஷணத்தாலே பிளந்திருக்கிற என்னிருதயத்திலே பதியவில்லை, ஐசுவரிய கெர்விதையான அவளாலே நிராகரிக்கப்பட்ட நான் சர்வோத்தமமான ஸ்தானத்தைச்சம்பாதிக்கிறதற்கு எத்தனஞ்செய்கிறேன் பார்; மகீபாலனுக்கு அத்தியந்தப்பிரியையான சுருசியினுடைய கெர்ப்பத்திலே பிறவாமல் உன்னுதரத்திலே பிறந்தவனுனுலும் என்னுடைய திரா

னையைப்பார்; என்னுடைய பிராதாவான வுத்தமன் சுருசிக்குக் குமாரனுனபடியினுலே தகப்பன்கொடுத்தராச்சியத்தை அனுபவிக்கட்டும், நான் என் சக்தியினுலே சம்பாதிக்கப்பட்ட விபவமல்லாமல் ஒருவர்கொடுத்தவிபவத்தைக் கைக்கொள்ளேன்; என் தகப்பனுக்குந் துர்லபமான திவ்யஸ்தானத்தைத்தவத்தினுலே சம்பாதிக்கிறேன்" என்றுசொல்லித் தாயாருடைய அனுமதிபெற்றுக்கொண்டு அதிசீக்கிரமாகப் பட்டணத்தைவிட்டு சமீபத்திலேயுள்ள ஒரு உபவனத்திலேசென்று, அங்கே கிருஷ்ணாஜினங்களையே ஆசனமாக விரித்துப்போட்டு உட்கார்ந்துகொண்டிருந்த ஏழு ரிஷிகளைக்கண்டு அந்த ராசபுத்திரன் அவர்களுக்குத் தெண்டன்சமர்ப்பித்து விநயத்தினுல் உடம்பு வணங்கி "முனீந்திரர்களே! நான் உத்தானபாதனுக்கு சுநீதிவயிற்றிலே பிறந்த குமாரன், துருவனென்கிற நாமதேயமுடையவன், மிகுந்தமனக்கிலேசத்தினுலே தேவரீர்கள் சந்நிதிக்கு வந்தேன்" என்றுசொல்ல, அந்த மகாமுனிகள் அவனைப்பார்த்து "ராசகுமாரனே! நீ நாலைந்துவயதுள்ளவனுயிருக்கிறுய், இவ்வளவு சிறுவனுன உனக்கு மனதில் துக்கமுண்டான காரணமென்ன? உன்பிதா வாழ்ந்துகொண்டிருக்கையாலே உனக்குக் குடும்பரக்ஷண பாரமில்லையே! உனக்கு இஷ்டமான அர்த்தமேதாகிலு முனக்குக் கைகூடாம லிருக்கமாட்டாதே? இஷ்டபந்துஜன வியோகமுண்டானதாகவும் தோன்றவில்லை. இப்படி யிருக்க மனவெறுப்புக்குக் காரணமென்ன சொல்லப்பா" என்று கேட்டார்கள். துருவன் அந்த மகாமுனிகளைப்பார்த்து எனக்குச் சக்களத்தித் தாய் சொன்னவார்த்தையாலேவெறுப்புண்டாயிற்று. அவ்வவமானத்தைப்பொறுக்கமாட்டாமையால் வந்தேனென்று சொல்லக் கேட்டு அந்த முனிவர்கள் ஒருவரோடொருவர் 'இந்தப்பாலகன் சக்களத்தித்தாய்பேச்சைப் பொறுக்கமாட்டாமல் கோபபரவசனுகப் புறப்பட்டு வந்தானன்றே, உக்கிரமான க்ஷத்திரியதேஜசைப் பார்த்தீர்களோ, இவ்வளவுபையனும் அவமானம் பொறுக்கவில்லையே' என்று பேசிக்கொண்டு துருவனைப் பார்த்து ராசகுமாரனே! நீ மனஸ்தாபத்தினுலே நொந்து என்னசெய்யவேண்டுமென்று நினைத்திருக்கிறுய்? அதற்காக எங்களாலே உனக்குவேண்டிய சகாயமென்ன? சொல்; என்று கேட்க, துருவன் அவர்களைப்பார்த்து முனீந்திரர்களே அடியேன்ராச்சியத்தையாவது மற்றுமுண்டான அர்த்தங்களையாவது அபேட்சிக்கிறேனில்லை; ஆனுல் பூர்வத்திலே யொருவனுலேயு மனுபவிக்கப்படாததாய் அபூர்வமாய்சகலஸ்தானங்களுக்கும் உன்னதமாயுமிருக்கிற ஸ்தானத்தை வேண்டுகிறேன்; இந்தமனோரதம் நிறைவேறும்படியான உபாயத்தை அடியேனுக்கு அனுக்கிரகிக்கவேண்டும் என்று சொன்னுன்.—அதற்கு மரீசிமகாமுனிவர் ஓராசகுமாரனே! ஸ்ரீகோவிந்தனுடைய சரணுரவிந்தங்களை யடைந்து ஆராதியாதவர்களுக்கு சர்வோத்தமமான ஸ்தானங்கிடைக்கமாட்டாது. ஆனபடியினுலே நீ பக்தபராதீனனுன அச்சுதனையாராதனஞ் செய்யென்று அருளிச்செய்தார்.—பின்பு அத்திரிமகாரிஷி அந்த ராசகுமாரனைப்பார்த்து, லோகேசுவரரான பிரமாதிகளுக்கும் அதீசுவரனுன ஜனார்த்தனன் எவனைக் கடாக்ஷிப்பனே அவனே அக்ஷயமான திவ்யஸ்தா

னத்துக்கு உடையவனாவன், என் வசனத்தைச் சத்தியமாக நினை என்றார்.— அப்பால் ஆங்கிரசர் சராசராத்மகமான சகலப்பிரபஞ்சமும் எவனுடைய குக்ஷியிலிருக்கிறதோ அந்தக்கோவிந்தனுடைய சரணகமலங்களை அர்ச்சனை பண்ணு, சர்வவுன்னதமான ஸ்தானத்தைப்பெறுவாய் என்று அருளினார். அப்பால் புலகமகாரிஷி எவன் பரப்பிரம்மமும் பரமபிராப்பியமும் சர்வவியாபகனுமாக இருக்கிறானோ அந்த ஸ்ரீஹரியையாராதனஞ்செய்கிறதினாலே அத்தியந்தம் துர்லபமானமோக்ஷத்தையுமடையலாமென்றால் இதரஸ்தானங்களை யடைகிறதற்குச் சந்தேகமென்ன என்று சொல்லியருளினார்.—அப்புறம் கிரதுமகாரிஷி எவன் யஜ்ஞங்களாலே ஆராதிக்கப்படும் புருஷனாகவும் யஜ்ஞசொரூபியாகவும் யஜ்ஞங்களுக்கு அதிபதியாகவும் இருக்கிற பரமபுருஷனோ அந்தச் சனார்த்தனன் திருவுள்ளம்பற்றினானானால் அடையக்கூடாதஸ்தானமுமுண்டோவென்று சாதித்தார்.—பின்பு புலஸ்தியமகாரிஷி பூர்வத்திலே இந்திரன் செகத்பதியான எவனையாராதித்துச் சர்வோன்னதமான இந்திரபதத்தையடைந்தானோ அப்படிப்பட்ட யஜ்ஞேசுவரனான ஸ்ரீவிஷ்ணுவையாராதனம்பண்ணு என்று சாதித்தருளினார்.—அப்பால் வசிஷ்டர் குழந்தாய்! ஸ்ரீவிஷ்ணுபகவானை ஆராதனஞ்செய்வையாகில் இதுவரையிலும் இல்லாத நூதனமான ஸ்தானமொன்றை நீ மனசிலே நினைத்தாலும் அப்படிப்பட்டதையும் சித்தமாய் அடைவாய்; அப்படியிருக்க உண்டாயிருக்கிற மூன்றுலோகத்துக்கு முட்பட்ட மேலான ஸ்தானமடையச் சந்தேகமென்ன என்று அருளிச்செய்தார்.

இவைகளைக்கேட்டுத் துருவன் அந்தமகாமுனிகளைப்பார்த்து முனீந்திரர்களே தேவரீர்கள் ஆராதிக்கவேண்டியவனை அடியேனுக்குத்தெரியும்படி அருளிச்செய்தீர்கள்; அவ்வெம்பெருமான் திருவுள்ளமுவந்து கிருபைசெய்யும்படி ஜபிக்கவேண்டிய மந்திரத்தையும் ஆராதனஞ்செய்யவேண்டியவிதத்தையும் அடியேனுக்குப் பிரசாதிக்கவேண்டுமென்று கேட்டதற்கு, அந்த மகரிஷிகள் துருவனைப்பார்த்து ராஜபுத்திரனே! ஸ்ரீ விஷ்ணுவினிடத்தில் பக்திசெய்யவேண்டுமென்கிறமனிதன் முன்னதாக பாஹ்யவிஷய வபிலாஷைகளை வர்ஜித்து மனதை நிர்மலமாக்கிப் பின்பு அம்மனதை முகுந்தனுடைய சரணாரவிந்தங்களிலே நிச்சலமாகச்சேர்த்து வேறுநினைவில்லாமல் அத்திருவடிகளையே பாவித்துக்கொண்டு பரிசுத்தனாய் வியஷ்டி ஸமஷ்டி ரூபமாகப் பிரகிருதியும் புருஷனும்சரீரமாகவுடைய சுத்தஞானமயனான வாசுதேவனுக்குத் தெண்டன்சமர்ப்பிக்கின்றேன்*என்கிற பொருளையுடைத்தான மகாமந்திரத்தைச் செபிக்கவேண்டும். உன்னுடைய பிதாமகனான சுவாயம்புமனுவானவர் இந்தமகா மந்திரத்தினாலே ஜனார்த்தனனையுபாசனைசெய்ததனாலே அவர் திருவுள்ளமுவந்து அந்த மனுவுக்கு அவர்விரும்பியபடி திரி

*இங்கே ஸ்ரீயத்துவாதசாக்ஷர மஹாமந்திரம் உபதேசிக்கப்பட்டது. அது தகுந்த சிஷ்யனுக்கு ஏகாந்தத்தில் உபதேசிக்கவேண்டியதானதால் அதைமகரிஷி நேராயருளிச்செய்திலர்; இது லிங்கபுராணத்தினால் விளங்கும்.

லோகதுர்லபமான ஐசுவரியத்தைப் பிரசாதித்தருளினார். நீயுமப்படியே இந்த மகாமந்திரத்தைச்செபித்து ஸ்ரீயப்பதியை ஆராதனஞ் செய்யக்கடவையென்று நியமித்தருளினார்கள்.

இப்படி ஸப்தமகாரிஷிகளுபதேசஞ் செய்யப்பெற்று துருவன் சந்துஷ்டியுடையவனாகி அவர்களுக்குத் தெண்டன் சமர்ப்பித்துக் கிருதார்த்தனானேனென்று நினைத்துக்கொண்டு அந்தவனத்தைவிட்டுப் புறப்பட்டு மதுவென்கிறபெயரையுடைய அசுரனுக்கு வாசஸ்தானமாயிருந்ததனாலே மதுவனமென்று பேர்பெற்றதாய் பின்பு ஸ்ரீசத்துருக்னாழ்வான் அந்தமதுவின்புத்திரனான லவணாசுரனைச் சங்கரித்து மதுரையென்கிறபுரத்தைச் செய்தருளப்பெற்றதாய், தேவதேவனாகியும் சகலபாபங்களையும் போக்கும்படியான சக்தியுள்ளவனாகியுமிருக்கிற எம்பெருமானுடைய சான்னியத்தியமுள்ளதாய், யமுனாதீரத்திலே விளங்குகின்ற மதுவனத்துக்குவந்து சகலபாபக்ஷயகரமான அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திலே மரீசிமுதலான மகாரிஷிகள் உபதேசித்தகிரமமாக சகலதேவதைகளுக்கும் நாதனான ஸ்ரீவிஷ்ணுவைத் தன் ஹ்ருதய கமலத்திலே தியானித்துக்கொண்டிருந்தான்.

இப்படி ஒருநினைவாய் தியானஞ்செய்துகொண்டிருந்த அந்தத் துருவனுடைய சித்தத்திலே ஸ்ரீஹரிபகவான் அதிப்பிரகாசமாகத் தோன்றியருளினார். அதைக்கண்டு அந்த மனுவந்தரத்திலேயிருந்த யாமரென்னுந் தேவதைகள் சித்தங்கலங்கி இந்திரனுடனே ஆலோசனைசெய்து துருவனுடைய தியானத்திற்கு விக்கினஞ்செய்யவேண்டுமென்று எத்தனஞ்செய்தார்கள்.

அப்போது தேவேந்திரனுடைய உத்தரவினாலே விரூபங்களும் பயங்கரங்களுமான கூசுமாண்டங்களென்கிற பூதவிசேஷங்கள் அந்தமகாயோகிசெய்கிற தியானத்தைக்கலைக்கும்படி வந்து சூழ்ந்து சிலமாயங்கள்செய்தன. அவ்விதஞ் சொல்லுகிறேன்கேளும்: துருவனுக்குத் தாயான சுநீதியின் சொரூபத்தைத்தரித்து ஒருமாயை துருவனுக்குஎதிரில் அப்பாமகனேயென்று. இரக்கமான தொனியோடு கூவிக்கொண்டுவந்துநின்று, குமாரனே! சரீரம் அபாயமடைவதற்குக் காரணமாகையாலே கொடியதான இந்தத் தவத்தைநிறுத்து, அப்பாமகனே! அனேககாலந் தவஞ்செய்து உன்னைப்பெற்றேனே! என் மனோரதங்களைத் தவிர்த்து அனாதையும் பேதையுமான என்னைத் தனியே அலையவிட்டுச் சக்களத்தித்தாய் சொன்னபேச்சினாலே நீயிப்படிவருகிறது நியாயமோ? குழந்தாய் கதியில்லாத எனக்கு நீயன்றோ கதி, அஞ்சுவயதுள்ள பாலகனான நீயெங்கே! மிகவுங் கடினமான இத்தவமெங்கே! நிஷ்பலமான இந்தப்பிரயாசத்திலிருந்து மனதைத்திருப்பு, அப்பனே! இது உனக்கு விளையாடுகிறகாலமாயிற்றே! அப்புறம் வேதசாஸ்திரங்களை அத்தியயனஞ் செய்யுங்காலம்; அப்புறம் போகானுபவங்களுக்குக் காலம்; அதற்குப்பிறகே தவஞ்செய்வதற்குக்காலம்; ஆனதனால் புத்திரனே விளையாடுகிறபிராயத்திலே ஆத்துமக்கிலேசமான தவஞ்செய்கிறது யுக்தமன்று, எனக்குச் சந்தோஷஞ்செய்வதன்றோ உனக்குத் தருமம், தாயான என்வார்த்தைகளைக்கேட்டு இந்தப் பிராயத்துக்குத் தகுந்தபடி என்னுடனே கூடவரவேண்டியது. உனக்கு

நியாயம்; இப்படிசெய்யாமல் புத்திமோகத்தினாலே இவ்வதர்மத்தைச்செய்கிறாய்; இனியாகிலும் விட்டுவிடு; என்னருமையானகுழந்தாய் நீகடின இருதயனாகி யென்வசனத்தைக் கேளாமலிருக்கிறாய்; இனி இந்தத் தவத்தை விடாமற்போனையேயானால் இதோபார் உன்னெதிரிலேயே என்பிராணனை விட்டுவிடுகிறேனென்று தாரைதாரையாகக் கண்ணீர்பெருகக் கதறியழுது கொண்டு நிற்கக்கண்டும் துருவன் நாராயண சரணாரவிந்தங்களிலே சித்தத்தை வைத்திருப்பதனாலே காணாதவனாகவே யிருந்தான். பின்பு அந்தமாயாசுநீதியும் துருவனைப்பார்த்து குழந்தாய்! கோராகாரர்களான ராக்ஷஸர்கள் கதாகட்காதி ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு இதோ வுன்னைச் சங்கரிக்கவருகிறார்கள், இப்போதாகிலும் தவம்விட்டோடிவாவென்றுசொல்லி மறைந்து போனாள். அப்பால் நாநாவித ஆயுதங்களோடு அக்கினிச்சுவாலாகுலமான முகங்களுடையவர்களாய் அநேக ராக்ஷஸர்கள் வந்து தோன்றினார்கள். அவர்கள் அச்சிறுவனுக்கெதிரில் வந்து அதிதீக்ஷணங்களான கதாகட்கசூலங்கள்முதலான ஆயுதங்களைக் கைகளிலேந்திப் பளபளவென்று மின்னும்படி திருப்பிக்கொண்டு பயங்கரமாகக் கர்ச்சனைசெய்தார்கள்; அன்றியும் குபுகுபுவென்றுஅனலெழும்புகிற முகங்களுடன் கூடினநரிகள் அந்தப்பாலகனை நாற்புறமுஞ்சுற்றிவந்து அதிகோரமாகக் கூவிக்கொண்டிருந்தன; சிங்கமுகங்களும்முதலைமுகங்களும் ஒட்டகமுகங்களுமுள்ள நிசாசரர்கள், இந்தப்பையனைச்சங்கரியுங்கள் குத்துங்கள் வெட்டுங்கள்பட்சியுங்களென்று ஒருவர்க்கொருவர் சொல்வதுபோல் குரூரவசனங்களினாலே அதட்டிக்கொண்டு பெருங்கூச்சலிட்டுப் பயப்படுத்தினார்கள்; அவன்கோவிந்தனுடைய சரணாரவிந்தங்களிலே லயமான இருதயமுடையவனானதனாலே அந்தராக்ஷஸர்களும் அவர்களுடைய ஆயுதங்களும் அந்தநரிகளும் பயங்கரமான சத்தங்களும் அந்தப்பாலனுக்கு ஒன்றுஞ்செய்யமாட்டாமற்போயின. அவன்இவைகளைக்கவனியாமல் ஸ்திரசித்தத்துடனே ஸ்ரீமந்நாராயணனைத் தனக்குள்ளே எழுந்தருளியிருக்கிறவனாகத் தியானித்துக்கொண்டு மற்றொன்றுமறியாமலிருந்தான்.

இப்படிப் பிரயோகித்த அந்தமாயைகளெல்லாம் உபயோகப்படாமல் நாசமடைந்துபோகவே தேவதைகள் அந்தமகாத்துமாவினுடைய தபோமகத்துவத்தினாலே தங்களுக்கு என்னஅபாயம்நேரிடுமோவென்று மெத்தவருந்திச் சித்தங்கலங்கி அத்தவத்தை நிறுத்த வுபாயஞ்செய்யவேண்டுமென்று அநாதிநிதனனாய் ஜகத்காரணபூதனாய் சரண்ணியனுமாயிருக்கிற ஸ்ரீமந்நாராயணனைச் சரண மடைந்து, "தேவதேவனே! ஜகந்நாதனே! புருஷோத்தமனே! துருவனுடையதவத்தின் பிரபாவத்தினாலே நாங்கள்தபிக்கப்பட்டவர்களாய் உன்சன்னிதியில் சரணாகதிபண்ணினோம்; சந்திரன் தினந்தினமுங் கலைகளினாலே அபிவிர்த்தியடைவதுபோலே உத்தானபாதனுடைய குமாரன் தபோவிசேஷத்தினாலே அபிவிர்த்தியாகிவருகிறான்; அதனாலே அடியேங்கள்பயப்படுகிறோம்; அந்தப்பாலகன் இந்திரவருணகுபேரசூரிய சந்திராதிகளுடைய அதிகாரத்திலே யெதைக்கேட்பானோ அறியோம்; ஆனதனாலே அவனுடையதவத்தை நிறுத்தி அடியேங்களுடைய விசாரத்தைத்

தீர்த்தருளவேண்டும்" என்று பிரார்த்திக்க, கமலாக்ஷன் அமரர்களைக் கடாக்ஷித்து, துருவனானவன் இந்திர வருண சூரிய சந்திராதிகளுடைய அதிகாரங்களிலே யொன்றையும் அபேக்ஷிக்கவில்லை; அவனுடைய மனோரதத்தை நானறிவேன், நீங்கள் கிலேசத்தைவிட்டு உங்களுடைய வாசஸ்தானங்களுக்குப் போய்ச்சேருங்கள், நான் அவனுக்கு இஷ்டமானவரத்தைக்கொடுத்துத் தவத்தைநிறுத்துகிறேனென்று அருளிச்செய்தார். பிறகு இந்திராதி தேவதைகள் தெண்டன் சமர்ப்பித்துச் சொஸ்தசித்தர்களாய்த் தங்களுடைய வாசஸ்தானத்துக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

பின்பு சர்வாத்மகனான எம்பெருமான் துருவனுடைய ஏகசித்தமான தியானத்திற்குத் திருவுள்ளமுவந்து நான்கு திருத்தோளுள்ள திருமேனியோடு துருவனுக்குப் பிரத்தியக்ஷமாகி, 'ஓ உத்தானபாத புத்திரா! உனக்குச் சுபமுண்டாகக்கடவது. உன்தவத்துக்குச்சந்தோஷித்து அபீஷ்டமானவரங்கொடுத்தற்காக இதோ வந்தேன்; நீ பாஹ்ய விஷயங்களைப் பரித்யஜித்துச் சித்தத்தை யென்னிடத்திலே நிலையாகநிறுத்தினதனாலே சந்தோஷமடைந்தேன்; இஷ்டமானவரத்தைக் கேள்' என்று அருளிச்செய்யக்கேட்டு,அந்தப் பாலகன் தன்கண்களைத்திறந்து தான்தியானஞ்செய்தவிதமாகவே எதிரில் சங்குசக்கிர கதாகட்க சார்ங்கங்களாகிய பஞ்சாயுதங்களுடனேயும் கிரீட வனமாலிகா கவுஸ்துப பீதாம்பராதிகளுடனேயும் எழுந்தருளிச் சேவைசாதித்த ஸ்ரீயப்பதியைக் கண்டு திடீரென்று சாஷ்டாங்கமாய்ப் பூமியில் விழுந்து தெண்டன் சமர்ப்பித்துப் புளகாங்கிதகாத்திரனாய் பயபக்திகளுடனே தேவதேவனான ஸ்ரீமந்நாராயணனைத் துதிசெய்யநினைத்து, இந்தமகாபுருஷனைக்குறித்து எந்த வாக்கியஞ்சொல்வேன் ஆர்சொன்னபடி துதிப்பேன் என்று மனங்கலங்கிஒன்றுந்தோன்றாமல் அவ்வெம்பெருமானையேசரணமடைந்து, ஸ்வாமீ! ஷட்குண அயிசுவரியசம்பன்னனே! அடியேன்தவத்துக்குத் திருவுள்ளமுவந்ததனால் தேவரீரை ஸ்தோத்திரஞ்செய்ய நினைக்கிற அடியேனுக்கு அதற்கேற்றஞானத்தைப் பிரசாதித்தருளவேண்டும். தேவதேவனே! வேதாந்தவேதிகளான பிரமாதிகளும் உம்முடைய பிரபாவத்தைவர்ணிக்கமாட்டார்கள், அப்படிப்பட்டவும்மைப் பாலகனான அடியேன் எந்தவிதமாகத்துதிப்பேன். பரமேசுவரனே! அடியேன்மனசு தேவரீர்சரணகமலங்களிலே பத்தியுத்தமாய் தேவரீரைத்துதிக்கவேண்டுமென்கிற விருப்பமுடையதாயிருக்கிறது, ஆகையால் அடியேனுக்கு அதற்கேற்ற ஞானவிசேஷத்தைப் பிரசாதிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க, ஸ்ரீகோவிந்தன் சகலவித்யாமயமான தன்னுடைய திவ்யசங்கத்தினாலே அஞ்சலிபண்ணிநின்றுகொண்டிருக்கிற அந்தப்பாலகனை முகத்திலே பரிசித்தருளினார்.

பின்பு அந்தராசகுமாரன் ஞானோதயமானதனாலே பிரசன்னமான முகத்துடனே தெண்டன்சமர்ப்பித்து அந்தக்ஷணத்திலே சர்வபூதேசுவரனான அச்சுதனைத் தோத்திரஞ்செய்யத்தொடங்கினான். எப்படியென்றால் : "பிரிதிவி அப்பு தேஜசு வாயு ஆகாசங்களும், தன்மாத்திரைகளும், மனசும், மற்றுமுள்ள இந்திரியங்களும், மகதகங்காரங்களும், மூலப்பிரகிருதியும், எவனு

டையரூபங்களோ அந்தச்சருவேசுரனுக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறேன்; சுபாவத்தில் சுத்தனாய் சூட்சுமரூபியாய் ஞானத்திலே எங்கும்வியாபித்தவனாய் பிரகிருதிக்கும் பரனாயிருக்கிற புருஷனும் எவனுடைய ரூபமா யிருக்குமோ அந்தக்குணாகரனான புருஷோத்தமனுக்குத் தெண்டன்சமர்ப்பிக்கிறேன்; பிருதிவி முதலான பூதங்களும் கந்தாதிகுணங்களும் புத்தியாதிகளும் பிரகிருதியும் சம்சாரியான ஜீவனும் ஆகிய இவர்களைக் காட்டிலும் பரனான மூத்தபுருஷன் எவனுடைய ரூபமாயிருக்குமோ அப்படிப்பட்ட ஜகத்பதியானவனுக்குத் தெண்டன்சமர்ப்பிக்கிறேன்; பரமேசுவரனே! பிரமலக்ஷணமுள்ளதாய் சகலலோகத்துக்கும் அதிபதியாய் சுத்தமாயுமிருக்கிற உமதுசொரூபத்துக்கு வந்தனஞ்செய்கிறேன்; சர்வாத்மகனே சமஸ்தசத்திகளும் அமைந்திருக்கையாகிற பிருகத்துவத்தினாலேயும், ஜகதாகாரத்தினாலேயும் மகாப்பிரமாணமாக இருப்பதனாலேயும் பிரமமென்கிற நாமதேயமுடையதாய் விகாரமில்லாததாய் யோகிசிந்தியமாய் விளங்குகிற உமது சொரூபத்துக்கு வந்தனஞ்செய்கிறேன்; நீர் * ஸஹஸ்ரசிரசுகளும் ஸஹஸ்ரபாதங்களும் ஸஹஸ்ரநேத்திரங்களும் உடையவனாய் புருஷனுமாய் சர்வத்தையும்வியாபித்து பூமி

* ஸஹஸ்ரம் என்பது இங்கே ஆயிரமன்று, அளவில்லாதது என்னும் பொருளைத்தரும்; சிரம் என்பது சகல அங்கங்களுக்கும் உபாங்கங்களுக்கும் உபலக்ஷணமாம்; ஆகவே அளவற்ற சிரசுமுதலானசகல அங்கங்களையுமுடையவன் என்பது பொருளாம்: அதனால் அபரிமிதமாய் அற்புதமாயிருக்கிற மகாஞானமும் மகாசத்தியு முள்ளவன் எம்பெருமான் என்பது கருத்து. இதையே ஸஹஸ்ரபாதன் ஸஹஸ்ரநேத்திரன் என்பவை விளக்குகின்றன; எப்படியெனில் பாதம் என்பது கர்மேந்திரிய மெல்லாவற்றையும், நேத்திரம் என்பது ஞானேந்திரிய மெல்லாவற்றையும் காட்டுகின்றதினா லெனவறிக; ஆக முக்கியமானகருத்து என்னவெனில், இவ்வெம்பெருமான் சகல இந்திரியங்களாலேயாதல் ஓரிந்திரியத்தினாலேயாதல் ஒருவிஷயத்திற்குரிய இந்திரியத்தை மற்றொன்றிற்கு மாற்றியதால் திருமேனியாலேயாதல் திவ்யாத்தும ஸ்வரூபத்தினாலேயாதல் எல்லாவற்றையும் எப்போதும் எல்லாவிதத்திலும் நேராகஅறிகிறவனும் செய்பவனுமாயிருக்கிறானென்கிறதேயாம். இப்படியேயல்லது, முள்ளம்பன்றி தேகமுழுவதிலும் முள்ளுகளாலே செறிந்திருப்பதுபோல் அனேகந்திருமுடிகள் திருக்கண்கள் திருக்கைகள் திருவடிகள் முதலான அவயவங்களால் செறிந்து கோரரூபமுள்ளவனாயிருக்கிறான் பகவான் என்பது கருத்தன்று. அளவில்லாத கண்முதலியவைகளையுடையவன் எப்படி அளவில்லாத காட்சி முதலானவற்றை யுடையவனாயிருப்பானோ அப்படியே பகவானும் என்று ஒரு திஷ்டாந்தம் காட்டினபடியாம் என்று பெரியோர் அருளிச்செய்தார். இங்கு சிலர் உலகமெல்லாம் பகவானுடையசொரூபமாதலாலே உலகத்திலுள்ளோருடைய சிரம்கண்முதலானவையெல்லாம் அவனுடையவையாம் எனக்கருத்துக்கூறுவர்; அது பலவிதத்திலும் பொருந்தாதெனவறிக.

யென்று சொல்லப்பட்டசராசரமயமான பிரபஞ்சத்தைக் காட்டிலும் பதின்மடங்கதிகமாகமேற்பட்டிருக்கிறீர். பூதபவிஷ்யத்வஸ்துசாதங்கள் நீரே; புருஷோத்தமனே விராட்டு என்றுசொல்லப்பட்ட அவியத்தசரீரனான அனிருத்தனும் ஸ்வராட்டுஎன்றுசொல்லப்பட்ட கேவலாத்ம பிராப்தியுள்ளவனும் சம்ராட்டு என்றுசொல்லப்பட்ட பரமபதத்தையடைந்தவனும் ஆதிபுருஷன் என்று சொல்லப்பட்டபிரமதேவனும் உம்மிடத்திலே யுண்டானார்கள்; சமஷ்டிதேகனானஇரணியகர்ப்பனென்கிறஅந்தப்புருஷன் பிரிதிவிக்கு அதோபாகத்திலும்பாரிசதேசத்திலும் ஊர்த்துவதேசத்திலும் வியாபித்திருக்கிறான்; உம்மிடத்திலே பிரபஞ்சமெல்லாமுண்டாயிற்று; உம்மிடத்திலேயே உண்டாகவும் போகிறது; இப்படி உம்மிலே சிருட்டிக்கப்பட்டு உம்முடைய ரூபமாயிருக்கிற இரணியகர்ப்பனுதரத்திலே அகிலப்பிரபஞ்சமும் அடங்கி யிருக்கிறதனால் எல்லாம் உமக்குள்ளேயென்று வேறாகச் சொல்லவேண்டுமோ? எல்லாம் ஓமஞ்செய்யப்பெற்றயாகமும் பிரஷதாச்சியம் என்கிற அவிசும் கிராமியங்களென்றும் ஆரணியங்களென்று மிரண்டுவிதமான பசுக்களும் ருக்கு யசுர் சாமங்களும் சந்தங்களும் அசுவங்களும் அஜாதிகங்களும் ஒற்றைப்பல்வரிசையுள்ளவையாகிய ஜந்துசாதங்களும் மிருகங்களும் உம்மிடத்தில் உண்டாயின; உமதுவதனத்திலே பிராமணர்களும் புயங்களிலே க்ஷத்திரியர்களும் தொடைகளிலே வைசியர்களும் பாதத்திலே சூத்திரர்களும் கண்களிலேசூரியனும் மனதிலே சந்திரனும் பிராணத்திலே வாயுவும் முகத்திலே அக்கினியும் நாபியிலே அந்தரிட்சமும் சிரத்திலே சொர்க்கமும் கர்ணங்களிலே திசையும் பாதங்களிலே பூமியுமுண்டாயின. அதிவிஸ்தீர்ணமான ஆலமரம் அதிகசொல்பமான பீஜத்திலே யடங்கியிருந்தாற்போலே மூகத்தான இந்தப் பிரபஞ்சமெல்லாம் பிரளயகாலத்திலே ஆதிகாரணபூதனான வும்மிடத்திலே யடங்கியிருந்தது, வடவிருட்சம் மறுபடியும் பீஜத்தினின்று முண்டாய்ச் சாகோப சாகமாக விஸ்தாரமானாற்போலே சிருட்டிகாலத்திலே பிரபஞ்சமெல்லா மும்மிடத்திலிருந்து உண்டாய் விஸ்தீர்ண மாயிற்று. ஜகந்நாயகனே, பட்டைக ளொன்றின்மேலொன்றாய் மூடப்பெற்று ஏகாகாரமாகத் தோன்றுகிற இளம்வாழைக்கன்றே பெரிதாகி வேறாகாமலிருப்பதுபோலே சூக்ஷ்ம சிதசித்துக்களோடு கூடிக் காரணரூபமான உம்மைக்காட்டிலும் ஸ்தூலசிதசித்துக்களின் ரூபமாய்க் காரியமான இந்தப் பிரபஞ்சம் வேறாகாமலிருக்கிறது; சுத்தசந்தோஷகரமும் இடைவிடாது நிகழ்வதும் எப்போதும் ஒரேவிதமுமாகி யிருக்கிற ஞானவிசேஷம் உம்மிடத்திலேயே உண்டு; இப்படியல்லாமல் சந்தோஷதுக்கங்களை யுண்டாக்குவதும் சுத்ததுக்கத்தை யுண்டாக்குவதுமான ஞானங்கள உம்மிடத்திலில்லை; ஏனெனில் நீர் பிராகிருதங்களான சத்வாதிகுணங்களோடு கலப்பில்லாமல் அப்பிராகிருத சுத்தசத்துவ மயனாயிருக்கிறீரன்றோ; பிரபஞ்சத்துக்கு வேறாய்நிற்கிற ஓரேயாத்துமாவாய் சர்வபூதசரீரகனாய் விளங்குகிற உமக்குத் தெண்டன் சமர்ப்பிக்கிறேன்; பிரபஞ்சத்திலே சிரேஷ்டரான பிரமாதிசுரூபியும் சர்வபூதாந்தர்யாமியுமான வுமக்கு வந்தனஞ் செய்கிறேன்; சூக்ஷ்மபிரகிருதியும் ஸ்தூலப்

பிரகிருதியும் புருஷனும் விராட்டு ஸ்வராட்டு சர்மராட்டு என்கிறவர்களும்
எல்லாம் நீரேயாகிறீரன்றோ; அன்றியும் யாவருடைய அந்தக்கரணங்களி
லேயும் அக்ஷயமான ஞானமயனைப் பிரகாசிக்கிறீர். நீர் *அதநின்சாரமாய்
சர்வத்திலேயுமிருக்கிறீர். உம்மிடத்திலே சர்வமுமிருக்கிறது; ஆதலால்
சர்வாத்துமகனை உமக்குத் தெண்டனிடுகிறேன்; இப்படி நீர் எல்லாவற்றிற்
கும் காரணமாய் எல்லாவற்றையும் வியாபித்து எல்லாவற்றினுள்ளுமிருக்
கிறீ ரானபடியினாலே நீரே அடியேனுடைய மனோரதமுழுதும் அறிவீர்,
ஆதலால் அடியேன் விண்ணப்பஞ் செய்யவேண்டுவ தென்ன இருக்கிறது;
சுவாமீ! உம்மைப் பிரத்தியக்ஷமாகச் சேவித்துத் தெண்டன் சமர்ப்பித்தே
னானதனாலே அடியேன் மனோரதங்களும் சபலமாயின; அடியேன் தபசும்
பலமாயிற்று; அடியேன் கிருதார்த்தனானேன்," என்று இப்படி துதிசெய்து
நின்ற துருவனைப்பார்த்து எம்பெருமான் அருளிச்செய்கிறார்.

ராஜகுமாரனே என்னைக்கண்டு சேவித்ததனாலே உன் தபசு பலமானதுசரி
தான், ஆனால் நான் சேவைசாதித்தது வியர்த்தமாகக் கூடாதாகையாலே
உனக்குவேண்டிய அபீஷ்டத்தைக்கேள், என்று பெருமாள் அருளின
தைக்கேட்டுத் துருவன் விண்ணப்பஞ் செய்கிறான்: தேவதேவனே சர்வ
பூதாந்தர்யாமியானவுமக்கு அடியேனபீஷ்டந் தெரிந்தே யிருக்கிறது ஆனா
லும் நியமித்தபடியினாலே விண்ணப்பஞ் செய்கிறேன்; மூடனான அடியே
னுக்குத் துர்லபமான அர்த்தத்தைப் பிரார்த்திக்கிறேன். இந்திரன் உம
தனுக்கிரகத்தினாலேயன்றோ திரிலோகராச்சியத்தை யனுபவித்துக்கொண்
டிருக்கிறான், ஜநார்த்தனனே சுருசியானவள் தன் கருப்பத்திலேபிறவாத
படியினாலே நீ ராஜயோக்யமான சிங்காசனத்துக்கு அதிகாரியல்லையென்று
அடியேனைப்பார்த்து வெகு இறுமாப்போடு சொன்னாளன்றோ, ஆனதனாலே
ஜகத்துக்கு ஆதாரபூதமும் சர்வோத்தமமும் அவ்யயமு மான உன்னதஸ்
தானம் பெறவேண்டுமென்று அபேக்ஷிக்கிறேன் அனுக்கிரகித்தருளவேண்
டும் என்று கேட்டதற்கு ஸ்ரீபகவான் ராஜநந்தனனைக் கடாக்ஷித்து, பால
னே உனக்கபீஷ்டமான ஸ்தானத்தையடைவாய்; இதற்குக்காரணம்வேறு
முண்டு சொல்லுகிறேன்கேள். பூர்வஜன்மத்திலே நீ யென்னை யாராதித்து
உகப்பித்தாய்; அதெப்படியென்றால், பூர்வஜன்மத்திலே நீ யொருபிராமண
னாய்ப்பிறந்து மாதுர் பிதுர் சிசுரூஷைகள் செய்துகொண்டு தர்மதப்பா
தே ஏகாக்கிரசித்தனாய் என்னை யாராதித்துக்கொண்டிருந்தாய்; சிலநாள்
சென்றபிறகு உனக்கு யவ்வனவயசுவந்தபோது சர்வாபரணபூஷிதனும்சகல
போகசம்பன்னனும் மகாசுந்தர தேகமுடையவனுமான ஒருராஜகுமாரன்
சினேகிதனானான்; அப்போது துர்லபமான அவனுடைய ஐசுவரியபோகங்
களைக்கண்டு ஆசைப்பட்டு ராஜபுத்திரனாகப்பிறக்கவேண்டுமென்று இச்சித்
தாய்; ஆனதனாலே உன் மனோரதத்துக்கு ஏற்றதாகத் துர்லபமான உத்

* அதநின்சாரமாய் என்றால் எந்த வஸ்துவுக்கு எதனாலே விசேஷமோ
அந்தவிசேஷமெல்லாம் பகவத்ஸ்வரூபமாம்; அது ஆகாசத்திற்குச் சப்தம்,
மனிதருக்குப் பவுருஷம், சூரியனுக்கு ஒளி இப்படியாகக் கண்டுகொள்வது.

தானபாதன்கிரகத்திலேபிறந்தாய்; என்னை யாராதியாத மற்றவர்களுக்கு
ஜகத்பூசிதமான சுவாயம்புவமனுவமுசத்திலே ஜனனமுண்டாவது துர்லபம்;
இப்போதும் நீ அத்தியந்த பக்தி விசேஷத்தினாலே நான் உவக்கும்படி செய்
தாய்; என்னிடத்தில் சித்தத்தைச்சமர்ப்பித்து என்னை யாராதனஞ்செய்த
மனிதன் அதிசீக்கிரத்தில் சர்வோத்தமமானமோக்ஷத்தையும் அடைவனானால்
அற்பமான சொர்க்காதிபலன்களை யடைவது அதிசயமோ? நீயும் என்னு
டைய அனுக்கிரகத்தினாலே மூன்று லோகங்களுக்கும் மேற்பட்டதாய் சகல
தாராகிரக நக்ஷத்திரங்களுக்கும் ஆதாரபூதமாய் சூரிய சந்திர அங்காரக புத
பிரகஸ்பதி சுக்கிர சனிகளுடையஸ்தானங்களுக்கும் நக்ஷத்திர மண்டலத்துக்
கும் விமானாரூடராய்ச் சித்தாதிகள் சஞ்சரிக்கிற ஸ்தானங்களுக்கும் அதி
யுன்னதமாய் விளங்குகிற திவ்யஸ்தானத்தை யடைந்து சுகமாயிருப்பாய்;
தேவதைகளிற்சிலர் சதுர்யுக பரியந்தமும் சிலர்மனுவந்தரபரியந்தமு மல்லா
மல் அதிககாலம் இரார்கள்; நீயோ என்கிருபையினாலே கல்பகால பரியந்த
மும் அந்தச்சர்வோன்னத ஸ்தானத்திலே சுகமாக இருக்கக்கடவாய், உன்னு
டைய தாயான சுநீதியும் திவ்யவிமானத்திலேறிக்கொண்டு நக்ஷத்திரரூப
மாய்ப் பிரகாசித்துக்கொண்டு கல்பாந்த பரியந்தமும் உன்சமீபத்திலே யிருக்
கக்கடவள்; எவனாகிலுஞ் சாயம்பிராதக்காலங்களிலே மனவுறுதி யுள்ளவனா
யுன்னைக்கீர்த்தனம்பண்ணுவானாகில் அவன் மகாபுண்ணியத்தைப்பெறுவான்
என்று சொல்லிவரந்தந்தருளினார்.

இவ்விதமாகத்தேவதேவனும் சகத்துக்கு நாதனுமான சனார்த்தனனு
டையகிருபையினாலே இஷ்டமானவரம்பெற்றுத் துருவன் சர்வலோகோன்
னதமான ஸ்தானத்தையடைந்தான், மாதா பிதாக்களுடைய சிசுரூஷையி
னாலும் தவத்தின் பிரபாவத்தினாலும் ஸ்ரீமத்துவாதசாக்ஷர மகாமந்திரமாகாத்
துமியத்தினாலும் மகாத்மாவான துருவனுக்கு உண்டான அபிமானமும் லோ
கோத்தரமான ஐசுவரியமும் மகிமையும்பார்த்து அசுரகுருவானசுக்கிராசார்
யர் சந்தோஷமடைந்து, சப்தரிஷிகளும் எந்தமகாத்மாவை முன்னிட்டுக்
கொண்டுசஞ்சரிக்கிறார்களோ அந்தத்துருவனுடைய மேன்மையான தவ
சின் பிரபாவத்தை என்னசொல்லுவேன், இவனுடைய தவத்தின்பயனை
என்னசொல்லுவேன்; வெகு ஆச்சரியமாயிருக்கிறது; இந்தப்பிரபாவத்தைக்
கொண்டாடயாராலேயாகும்; இதமும் சத்தியமுமான வாக்குள்ளதுருவன்
தாயான சுனீதியின்மகத்துவத்தை வர்ணிக்கத்தக்ககவிகளும் உலகத்திலுண்
டோ; அந்தப்பெண்ணரசு துருவனைக்கர்ப்பத்திலே தரித்ததினாலேசர்வோத்த
மும் சாசுவதமும் மூன்றுலோகங்களுக்கு மாதாரபூதமுமான அந்தத்திவ்ய
ஸ்தானத்தையடைந்தாள்; ஓகோ! என்ன அதிர்ஷ்டம்! என்ன மகிமை
என்று துதித்தார்.

எந்தமனுஷ்யன் துருவசரித்திர கீர்த்தனஞ்செய்வானோ அவன் சகல
பாப நிவர்த்தியுள்ளவனாய் சொர்க்கலோகத்தில் வாசஞ்செய்வான்; அன்றியும்
அவன் வானத்திலும் பூமியிலும் ஸ்தானப்பிரஷ்டனாகாமற் சகலஸௌபாக்
கியங்களுமுண்டாய் தீர்க்காயுசாய்வாழ்வான்.

தர்க்கசாஸ்திரவிஷயம்.

[உ௨௦ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

இனி, கணாதமுனிவராலியற்றப்பட்ட நூலானது பிற்காலத்தில் பற்பல பெரியோர்களால் பற்பல விதமான நிபந்தனைகளைப் பெற்றமையால், அவைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மதமெனப் பல மதங்களையுடையதாயிருந்தது. பின்பு சாலிவாகனசகம் பதினைஞ்ருவது நூற்றாண்டின் பிற்பாதியில் ஆந்திரதேசத்தில் கௌண்டின்னியபுரம் அல்லது கொண்டவீடு என்னும் சீமையிற் பிறந்து தர்க்கசாஸ்திர பாரங்கதராகிய அந்நம்பட்டர் என்னும் மகா பண்டிதர் மேற்கண்ட பற்பல மதங்களையும் பரிசோதித்துப் பதார்த்தங்களைக் குரோடீகரித்து இந்த சாஸ்திரத்தை முதலிற் படிப்பவர்க்கு எளிதில் விளங்கும் பொருட்டு தர்க்கசங்கிரகம் என்னும் பெயரினால் ஒருநூலும் அதற்குத் தர்க்கசங்கிரகதீபிகை என்னும் பெயரினால் ஒருவியாக்கியானமும் இயற்றியிருக்கின்றனர். இவ்வந்நம்பட்டர் மஹாபாஷியத்துக்கு கையடர் இயற்றிய வியாக்கியானத்துக்கு ஒரு உரையும் செய்திருக்கின்றனர். இத்தர்க்கசங்கிரகம் சிறுவரும் எளிதில் உணரும்படி மிகச்சுருக்கமாய்ச் செய்ப்பட்டமையால், தர்க்கசாஸ்திரம் படிக்கத்தொடங்குவோரெல்லோரும் இதனையே கற்றுவருகின்றனர். இதற்கு அநேக வியாக்கியானங்கள் உண்டு. அவற்றுள்,—

1. **தர்க்கசங்கிரகதீபிகை.**—இது மேற்குறித்தபடி அந்நம்பட்டராலே செய்யப்பட்டது. இதனை **அந்நம்பட்டீயம்** எனவும் சொல்லுவர்கள். இது தர்க்கசங்கிரகத்துக்குச் செய்யப்பட்ட வியாக்கியானங்கள் பலவற்றுள்ளும் மிக அரிதினுணரத்தக்கது. இது மூந்நூற்றைம்பது கிரந்த முள்ளது. இந்த வியாக்கியானத்துக்கு ஐந்து வியாக்கியானங்கள் இருக்கின்றன. அவை யாவன:—

(1.) **அநுமதீயம்.**—இது மாத்துவராகிய அநுமதாசாரியராலே செய்யப்பட்டது. இவர் கர்ணாடர். சற்றேறக்குறைய நூற்றுமுப்பது வருடத்துக்குமுன் னிருந்தவர். இவ்வநுமதீயம் ஆறாயிரங்கிரந்தமுள்ளது.

(2.) **நீலகண்டீயம்.**—இதுபல்லாரியில் இருந்த ஸ்மார்த்தராகிய நீலகண்டசாஸ்திரியாராலே செய்யப்பட்டது. இவர் ஏறக்குறைய் அறுபது வருடத்துக்குமுன் இருந்தவர். இந்நீலகண்டீயம் ஆயிரத்திருநூற்றைம்பது கிரந்தமுள்ளது. இதற்கு ஸ்மார்த்தராகிய இராமபத்திரபட்டராலே **ராமபத்ரீயம்** என ஒருவியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது.

(3.) தர்க்கசங்கிரகத்துக்கு **நிருக்தி** செய்த பட்டாபிராமசாஸ்திரியாரும் தர்க்கசங்கிரக தீபிகைக்கு ஒரு வியாக்கியானம் செய்தனர்.

(4.) **முகுந்தபட்டீயம்.**—இது முகுந்தபட்டராலே செய்யப்பட்டது.

(5.) **தீபிகாப்ரகாசிகை.**—இது தமிழ்நாட்டில் இருந்த ஸ்மார்த்தராகிய நரசிங்கசாஸ்திரியாராலே செய்யப்பட்டது. இவர் சித்தாந்தமுக்தாவலிக்குப் பிரபை என்னும் பெயரினால் ஒரு வியாக்கியானமும் செய்தனர். இவர் ஏறக்குறைய எழுபதுவருடத்துக்கு முன்னிருந்தவர். பிரகாசிகை ஆறாயிரங்கிரந்த முடையது.

2. **நியாயபோதினி.**—இது கௌடரும் தர்க்கபாஷாப்பிரகாசஞ் செய்தவருமாகிய கோவர்த்தனமிசிரராலே செய்யப்பட்டது. இது நானூறு கிரந்தமுடையது.

3. **நிருக்தி.**—இது தமிழ் நாட்டிலிருந்த ஸ்மார்த்தராகிய பட்டாபிராமசாஸ்திரியாராலே தமது புத்திரியின் பொருட்டுச் செய்யப்பட்டது. தர்க்கசங்கிரகத்துக்குள்ள வியாக்கியானங்கள் எல்லாவற்றுள்ளும் இது மிக எளிதினுணர்தற்பாலது. இவர் ஏறக்குறைய அறுபது வருடத்துக்கு முன்னேயிருந்தவர். இந்நிருக்தி அறுநூறு கிரந்தமுடையது.

4. **சித்தாந்தசந்திரோதயம்.**—இது கிருஷ்ணதூர்ஜடிதீக்ஷிதராலே செய்யப்பட்டது. தர்க்கசங்கிரகத்துக்குரிய வியாக்கியானங்களுள் தர்க்கசங்கிரகதீபிகையொழிந்தொழிந்த மற்றெல்லாவற்றினும் இது மிக அரிதினுணர்தற்பாலது. இது ஆயிரத்து முந்நூறு கிரந்தமுடைத்து.

5. **தர்க்கசங்கிரகசந்திரிகை**—இது மகாராஷ்டிரராகிய முகுந்தபட்டராலே செய்யப்பட்டது. இது ஆயிரத்திருநூறு கிரந்தமுடைத்து.

6. **பதகிருத்யம்**—இது கௌட க்ஷத்திரியராகிய சந்திரசிங்கராலே செய்யப்பட்டது. இது கங்கைக்கரையிலுள்ள நாடுகளிலே கற்கப்படுகின்றது. இது ஆயிரங்கிரந்தமுடைத்து.

7. **தர்க்கசங்கிரகோபந்யாசம்.**—இது மகாராஷ்டிர சந்நியாசியாகிய மேருசாஸ்திரியாராலே செய்யப்பட்டது. இது தார்க்கிகர்களாலே மிக நன்குமதிக்கப்படுகின்றது. இது ஐஞ்ஞூறு கிரந்தமுடைத்து.

இவையெல்லாம் சிறுநூல்கள். இந்தசாஸ்திரத்தில் ஒவ்வொருபிரகரணத்தையுங்குறித்தபெருநூல்கள்பலவுள. இந்நூல்களெல்லாம் வடமொழிப் பண்டித சமூகத்தில்மாத்திரம் பயன்பட்டுத்தமிழருக்குள் விளங்காமலிருந்தன. மக்களுக்கு நேத்திரஸ்தானமாயுள்ள இந்த சாஸ்திரமானது தமிழிலில்லையென்னுங் குறையை ஒருவாறு ஒழிக்கக் கருதி **தர்க்கசங்கிரகத்தையும், தர்க்கசங்கிரகதீபிகை** என்னும் அதன் வியாக்கியானத்தையும் ஸ்ரீ கைலாஸபரம்பரைத் திருவாவடுதுறை நமச்சிவாயமூர்த்திகள் மரபில் சிவஞானசுவாமிகள் தமிழில் மொழிபெயர்த்தனர். ஆயினும், அவை சற்றேகடினநடையில் எழுதப்பட்டுப் பலர்க்கும் பயன்படாததனால் இந்த சாஸ்திரவிஷயங்கள் இதில்வெளிப்படுத்தப்படுகின்றது. கருதியபமானநடையில் ஒருவாறு எழுதி இதில்வெளிப்படுத்தப்படுகின்றது. இந்நூலறிவு விளங்கும்படி சிற்சிலப் பிரகரணங்களும் மொழிபெயர்த்துப் பிரசுரஞ்செய்யப்படும். பயன்காணப்படுமாகில், படிப்பவர்க்கு மேன்மேலும்

[தொடர்ச்சி.]

அலங்காரவிஷயம்.

[௨௩௩-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

தீரோதாத்தனே தீரோத் ததனே
தீர லலிதனே தீர சாந்தனென்
றோதிய நாயகர் நால்வகை யென்ப.

அவருள்,—

1. கருத்தி னாழமுங் கருணையுங் கண்ட
பரிசெடுத் துரைத்தலுந் தற்புகழ் வின்மையும்
தீரமு முடையனே தீரோ தாத்தன்.

கருத்தினாழமாவது—இன்பதுன்பங்களில் விகாரமின்மை-(உதா):—

மணிமுடிநீகொள்கவெனமன்னர்பிரானுரைத்துழியு
மணிசடைமுடியெனச்சிற்றன்னையுரைத்துழியுமோர்
வணமேயிராகவன்றன்வாண்முகத்துக்குறிநோக்கித்
துணைவருந்தங்கருத்துரைக்கத்துணியாதுநின்றனரோ.

கண்டபரிசெடுத்துரைத்தல்.—ஏதிலரிடத்துங் கண்ட குணங்களை யெடுத்துரைக்கத்தகுமழுக்காறின்மை. (உதா):—

தன்பெருமைதனையுரைக்கிற்றலைவணங்கிமுகங்கோட்டும்
தன்பகைஞர்தங்குணத்தைத்தானெடுத்துத்தகவுரைக்கும்
துன்புறுத்தவரக்கனையுந்துணிக்கமனம்பதைத்துருகும்
வன்பொடெவரெதிர்த்திடினுமகிழ்ந்தேற்குமிராகவனே.

இதில் கருணைமுதலியவற்றையுங் காண்க.

2. கடுமையி றுமாப்பொடு தற்புகழ்த லுனு
முடைய னாகுந் தீரோத் ததனே.

கடுமை-சினமிக்குறல். (உதா.):—

"கேளிதுநீயுங்காணக்கிளர்ந்தகோளரியின்கேழில்
தோளொடுதோளுநீக்கிநின்னையுந்துணித்தபின்னென்
வாளினைத்தொழுவதல்லால்வணங்குதன்மகளிரூட
னாளினுமுளவோவென்றுவண்டடங்கணடுங்கநக்கான்."

இதில் கடுமைமுதலியவற்றைக் கண்டுகொள்க.

[இக்கவி இரணியன்கூற்றாயினும், அரி என்பதற்குவானரமெனப் பொருள்கொண்டு இராவணன் அனுமானோடு கூடிவந்த விபீடணனை நோக்கிக்கூறியதெனக்கொள்க.] இன்னும்,—

இருபதுபுயங்களுமிருந்திமாழ்கநீ
யொருமலையசைத்தனையொப்பையோவெமை
இருபுயத்தாற்பலமலைகொணர்ந்தியாங்
கருங்கடனார்த்தனங்கருதுகென்னவே.

இஃது இராவணனைநோக்கி வானரர்கூறியதாம். இதிற் றற்புகழ்தல் நன்று காண்க.

3. சிந்தை யின்றிச் சீரிய போகா
னந்த முடையோன் றீரலலி தன்னே.

சிந்தையாவது - மனக்கவலை.

4. கவர்ச்சி யின்றிக் களிமனத் தனனுத்
தவத்துறை வோனே தீர சாந்தன்.

கவர்ச்சியாவது - புலன்வயப்படுதல்.

இருவர்க்குமுதாரணம்வருமாறு:—

நறுமலர்கற்பகச்சோலைநண்ணியரம்பையர்தம்மைமயர்த்துமேவி
யுறுகண்முனமுற்றவெலாமுடன்மறந்துவாழ்ந்தனர்காணும்பரெல்லாம்
* மறுவிலராய்மறையவர்க † ஐம்பொழுதுமறைவகுத்தமுறையிற்போக்கி
யிறுதியிலாவானந்தத்தாழ்ந்திருந்தாரிராமனரசியற்றுங்காலே.

இதில் முன்னடிகளை தீரலலிதனுக்கும், பின்னடிகளை தீரசாந்தனுக்குங் கொள்க.

இந்நாயகரெல்லாம் நவரசங்கட்கும்பொதுவாவார். [தொடர்ச்சி.]

பொருளிலக்கணவிஷயம்.

[௨௩௨-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

களவு.

இவ்விஷயம் பெரும்பாலும் அகப்பொருட்கிளவித்துறைகள் தலைவன் முதலியோர் மனதிற்றோன்றுமொழுங்கின்படி உரைக்கப்படுவதேயாம். இக்கிளவித்துறைகள் பலமணிகளும் ஒரினமாக ஒழுங்குபடக்கோக்கப்படுவதுபோலக் கோக்கப்படுதலின் கோவை எனப்படும். அதுதான் ஓர்கதைபோலவந்து நாடகத்துக்கேற்றலின் இத்தமிழ் நாடகத்தமிழெனப்படும்.

இனி அக்கிளவித்துறைகள் மனதிற்றோன்றுமுறையாமாறு:—

உடன்பிறந்து உடன்வளர்ந்து சீருடனாடிச் சீருடன்பெருகி ஒலுடனாட்டப் பாலுடனுண்டு பல்லுடனெழுந்து சொல்லுடன்கற்றுப் பழமையும் பயிற்றியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியுமுடையார் பற்பனாருயிரவர் கண்ணுமனமுங்கலரும் ஒண்ணுதன்மகளிர் தற்சூழத் தாரகை

* மறுவிலாமையாவது - கவர்ச்சியின்மை. † ஐம்பொழுதாவன:—அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்தியாயம், யோகம் என ஸ்ரீபாஞ்சராத்திரத்துட்கூறிய பகலின்பிரிவுகளாம். இவ்வைந்தும் கைங்கரியகாலம். இவற்றுள்முதலாவது-கடவுளைச்சரணம்புக்குப்பிரார்த்தித்தல்; இரண்டாவது-பூசைக்குவேண்டுவன தேடல்; மூன்றாவது - பூசித்தல்; நான்காவது - மந்திரங்கள்ஜபித்தல்; ஐந்தாவது - தியானித்தல்.

நடுவட்டண்மதிபோலப் பொழில்விளையாட்டு விருப்பாற்சென்ற பொருவிறந்த தலைமகள் பொழிலிடம்புகுதலும், அவளாயங்களும் ஒருவர் ஒருவரின்முன்னர் தழைவிழையத்தக்கன தொடுத்துமென்றும், கண்ணி தண்ணறுநாற்றத் தனசெய்துமென்றும், போது மேதக்கனகொய்துமென்றும், மயிலொடு மாறுடுதுமென்றும், குயிலொடு மாறுகூவுதுமென்றும், அருவியாடி யஞ்சுனை குடைதுமென்றும், வாசமலர்க்கொடியி லூசலாடுதுமென்றும் பரந்து, அப்பாலுள்ளா ரிப்பாலுள்ளார்கொல்லோவென்றும், இப்பாலுள்ளா ரப்பாலுள்ளார்கொல்லோவென்றும் இவ்வகைநினைத்து, அவளைத்தமியளாய்விட்டுப் பிரிய, அவள் சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியு மூசோகுங் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவைஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்த பொரிப்புன்கும் புன்னாகமும் உருக்கொடுமுகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்களிசைபாடத், தண்டென்றலிடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலதுநடுவண் ஓர்மாணிக்கச்செய்குன்றின்மேல் விசும்புதுடைத்துப் பசும்பொன்பூத்து வண்டுதுவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல்களிகூர்ந்து தன் செம்மலர்ச்சீறடிமேல் சிலம்புகிடந்து சிலம்புபுடைப்ப, அம்மலரணிக்கொம்பர் நடைகற்பதெனநடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்தவிடத்து மரகதமணிவிளிம்படுத்த மாணிக்கச்சுனைமருங்கினதோர் மாதவிவல்லிமண்டபத்துப் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்திக்கொடிபிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடுதொடுத்து வந்திழிதரும் அருவிபொன்கொழித்து மணிவரன்றி மாணிக்கத்தொடுவயிரமுந்தி அணிகிள ரருவி யாடகப் பாறைமேல் அதிர்குரன்முரசின்கணிரட்ட, வண்டுந் தேனுந் யாழ்முரல, வரிக்குயில்களிசைபாடத், தண்டாது தவிசுபடப்போர்த்ததோர் பளிக்குப்பாறைமணித்தலத்துமிசை நீலஆலவட்டம்விரித்தாற்போலத் தன்கோலக்கலாபங் கொளவிரித்து முளையிளஞாயிற்று இளவெயிலெறிப்ப ஓர் இளமயிலாடுவதுகண்டுநிற்க;— கற்கந்தும் எறிபோத்துங் கடுங்கண் யானையுந் தறுகட்பன்றியுங் கருவரையும் இருநிலனும் பெருவிசும்புமனையார் ஆளி மொய்ம்பினர் அரிமான் றுப்பினர் பற்பனூறுயிரவர் கூர்வேலிளையர் தற்சூழ வேட்டவிருப்பாற்சென்ற தலைமகன் அக்கூர்வேலிளையரொடு குளிர்மலைச்சாரல்வேட்டம்போய் விளையாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடுமாவின்பின்றேடிக், காவலிளையரைக் கையகன்று, நெடுமான்றேரொடு பாகனை நிலவுமணற்கானியாற்று நிற்கப்பணித்துத், தொடுகழல் அடியதிரச் சுருளிருங் குஞ்சி பொன்ஞாணிற் பிணித்துக், கடிகமழ் நறுங்கண்ணிமேற்கொண்டு, வண்டுமணமயர, அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன்பொழிலிடைப்பரந்துநாற, அடுசிலையொருகணையேந்தி வடிவுகொண்ட காமன்போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில் புக்கு,

(1) அவளைக்கண்ணுற்று இஃதொருவியப்பென்னென்றலாகிய காட்சியும்;

(2) கண்டபின் இத்துணை மேதகவுடையளாய இவள் வரையரமகள்கொல்லோ, வானவர்மகள்கொல்லோ, நீரரமகள்கொல்லோ, அன்றிமக்களுள்ளாள்கொல்லோ என்று ஐயப்படும் ஐயமும்;

(3) ஐயுற்றபின்னர் விண்ணகத்ததன்றி மண்ணகத்ததாய்ப், பயின்றதன்மேலல்லது செல்லாத தாதூதும்வண்டும், ஒருவரா லிழைக்கப்பட்ட அணிகலன்களும், தோள்முதலியவற்றெழுதுந் தொய்யிற்கொடியும், கைக்கொண்டு மோந்துயிர்க்குங் கழுநீர்ப்பூவும், கண்டறியாத வடிவுகண்ட அச்சத்தாற் பிறந்த தடுமாற்றமும், கண்ணிவாடுதலும், சாந்து புலர்தலும், கண்ணிமைத்தலும், கால் நிலந்தோய்தலும், நிழலீடும், நுதல்வியர்த்தலும், அவயவமியங்கலுமுதலிய மக்கட்குரிய குணங்கண்டு இவள் மக்களுள்ளாளென்றுதுணியும் துணிவும் [தெளியுந் தெளிவும்];

(4) தெளிந்தபின்னர் மக்களுள்ளாளென்றுநயந்து இடையில்லைகொல்லென்றநெஞ்சிற்கு ஏதுக்காட்டி இடையுண்டென்று சென்றெய்த நினையாநிற்கும் நலம்பாராட்டலும் [நயப்பும்];

(5) தலைமகள்வேட்கை அவள் பார்வையாற் றன்னிடத் துண்டென்று குறிப்பானறியும் குறிப்பறிதலும் [உட்கோளும்];

(6) உட்கொண்டுநின்று, என்னிடத்து விருப்பத்தை யுடைய இவளைத் தந்த தெய்வத்தையல்லது வேறொருதெய்வத்தை யான் வியவேனெனத் தெய்வத்தை மகிழ்ந்துகூறாநிற்கும் தெய்வத்தைமகிழ்தலும் ஆகிய இவை முன்னர் நிகழாநிற்கும்.

இவ்வளவும் தலைவிவேட்கைக்குறிப்புத் தன்மேனிகழ்வதனைத் தலைவன் அறிதற்குமுன்னே தன்காதன் மிகுதியாற் கூறுவனவாதலின் ஒருதலைக்காமமாகிய கைக்கிளையாம்.

இவற்றிற்கு முறையே செய்யுள் வருமாறு:—

1.—காட்சி.

1. திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக்
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையோர்வல்லியினொல்கியன்னநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே.

1, திருவளருந் தாமரைப்பூவினையும் [முகம்], அழகுவளரு நீலப்பூக்களையும் [கண்கள்], ஈசர்தில்லைவரைப்பின்கணுண்டாகிய பூங்குமிழினது நிறம் வளரும் பூவினையும் [நாசி], கோங்கரும்புகளையும் [தனங்கள்], செவ்விக் காந்தட்பூக்களையும் [அங்கைகள்] உறுப்பாகக்கொண்டு, மேம்பட்டதெய்வ மணம் வளரும் மாலை [பெண்], ஓர்வல்லிபோலநுடங்கி, அன்னத்தின் நடைபோல நடைவாய்ந்து, வடிவுவளரும் காமனது வெற்றிக்கொடிபோன்று

2. பூமருகண்ணிணைவண்டாப்புணர்மென்முலையரும்பாத்
தேமருசெவ்வாய்தளிராச்செருச்செந்நிலத்தைவென்ற
மாமருதானையெங்கோன்வையைவார்பொழிலேர்கலந்த
காமருபூங்கொடிகண்டேகளித்தவெங்கண்ணிணையே.

3. புயலேசுமந்துபிறையேயணிந்துபொருவிலுடன்
கயலேமணந்தகமலமலர்ந்தொருகற்பகத்தின்
அயலேபசும்பொற்கொடிநின்றதால்வெள்ளையன்னஞ்செந்நெல்
வயலேதடம்பொய்கைசூழ்தஞ்சைவாணன்மலயத்திலே.

4. பூவும்பழுத்தசெழுந்தீங்கனியும்பொழியமுத
மேவுங்குடங்களிரண்டுடனேயிருமீனுங்கொண்டு
சேவுந்தழகர்திருவெங்கைவாணர்சிலம்பின்மலர்
தூவும்பொழிலிலெதிர்ப்பட்டதாலொருதூமணியே.

5. சீர்கொண்டதாமரைப்போதைந்திரண்டுசெழுமுகைநல்
லேர்கொண்டநீலமிரண்டோர்குமுதமிவற்றொடுதெண்
ணீர்கொண்டவேணியர்கோடீச்சுரேசர்நெடுவரைமேற்
கார்கொண்டகாவினிடையிலொராவிநங்கண்ணுற்றதே.

விளங்காநின்றது, என்னவியப்போ! என்றவாறு. [இதன்விரிவெல்லாம் திருக்கோவையார் உரையுட்காண்க.]

2. தாமரைப் பூவிதழ்போன்றவிணைக்கண்களையே தன்னிடத்துப்பயிலும் வண்டாகவும், நெருங்கிய மெத்தெனவையுடைய கொங்கைகளையே தன்னிடத்தரும்பிய அரும்புகளாகவும், இனிமைபொருந்திய செவ்வாயையே தன்னிடத்துள்ள தளிராகவும்கொண்டு, செயற்கையழகுவிரவப்பெற்ற இயற்கையழகுவாய்ந்த வோர் பூங்கொடியைப், பகைவரதுபோர்க்களமாகியசெந்நிலத்தைக்கடந்த பெருமைபொருந்திய சேனையையுடைய எம்மிறைவனது வையைநதிநீராற்செழித்தோங்கிய பொழிலின்கட்கண்ணுற்று எம்மிருகண்களும் களித்தன, எ - று.

3. வெண்மையாகிய அன்னப்புட்செறிந்த செந்நெல் வயலும் பெருவாவியும் சூழ்ந்த தஞ்சைவாணன்பொதியவெற்பில், ஒருகற்பகத்தருவின்பக்கத்தில் ஒரு பசும்பொற்கொடி [பெண்] புயலைத்தாங்கி [கூந்தல்], பிறையைத்தரித்து [நுதல்], போர்செய்யும் விற்களுடன் [புருவங்கள்] கெண்டைமீன்கள் [கண்கள்] பொருந்திய தாமரை [முகம்] மலர்ந்து என்கண்ணெதிரே நின்றது, எ - று.

4. ஏறாருகின்ற அழகராகிய திருவெங்கைத் தலத்தில் வாழ்பவரது மலையினிடத்து மலர்களைச் சொரியும் பொழிலகத்து ஓர்தூயமணியானது [பெண்], தாமரைப்பூவையும் [முகம்], பழுத்தசெழுமையாகிய மதுரம்பொருந்திய கோவைக்கனியையும் [அதரம்], பெருகுகின்ற அமுதம்பொருந்திய குடங்களிரண்டுடனே [தனங்கள்] இணைக்கயல்களையும் [கண்கள்] தன்னிடத்துக்கொண்டு எமக்கு எதிர்ப்பட்டது, எ - று.

5. நிர்மலமாகிய கங்கையையேற்றுக்கொண்ட ஜடாபாரத்தையுடைய கோடீச்சுரேசரது பெரியமலைமேலுள்ள மேகத்தின் தன்மையைக்கொண்டிருக்கிற [இருண்டிருக்கிற] சோலைநடுவில், அழகைத்தம்மிடத்தே கொண்ட ஐந்துதாமரைமலர்களும் [முகம் - க, அங்கைகள் - உ, அடிகள் - உ], இரண்டுசெழுமை பொருந்திய அரும்புகளும் [தனங்கள்], இரண்டு நல்ல அழகு பொருந்தியகருங்குவளைகளும் [கண்கள்], ஒருசெவ்வல்லிமலரும் [வாய்] ஆகிய இவற்றுடனே யொருதடாகம் [இடை இல் ஓர் ஆவி - இடையில்லாத வோருயிர்] நமது கண்ணுக்குப் புலப்பட்டது, எ - று.

இக்காட்சி குறிஞ்சிக்கண்ணிகழ்வதொன்றாதலின் அந்நிலக் கருப்பொருளானே அதற்கிலக்கியங்கூறவேண்டுமென்பது மரபாயினும் மற்றைநிலக் கருப்பொருளும் விரவிவர இலக்கியங்கூறுவதும் வழுவன்று; ஓரிடத்தோர் கலியாண முண்டாயின் எல்லாரிடத்துமுள்ள ஆபரணங்களெல்லாம் அவ்விடத்துக்கூடி அக்கலியாணத்தைச்சிறப்பித்தாற்போலப் பலநிலக்கருப்பொருளும்கூடி அக்குறிஞ்சியைச் சிறப்பித்து நிற்றலால், என்பர்.]

[தொடர்ச்சி.]

பாஷாவிஷயம்.

[௮௯ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

பின்பு நக்கீரதேவர் தாங்கற்றநூலினை ஐயமறமற்றப்புலவர்கட்கும் புலப்படுத்திக்கொண்டு அவர்களுடன் சங்கமிருக்கையில் அப் பாண்டிநாடு பன்னிரண்டு வருஷம் மழை யில்லாது வருந்த, அப்போது செங்கோல்செலுத்திவந்த உக்கிரப்பெருவழுதியென்னும் பாண்டியன் சங்கப்புலவரெல்லாரையும் வரவழைத்துப், புலவர்களே! இப்போது உங்களுக் கறிந்த தேசங்களிற் போயிருந்து என்றுநன்றான நாளில் என்னை மறந்துவிடாமல் வந்து சேருங்களென்று வேண்டிக்கொண்டான்.

அதுகேட்டுச் சங்கத்தார் அவர்களுக் கிஷ்டமான தேசங்களிற் சென்றார்கள். அப்பொழுது நக்கீரதேவர் வடதிசையிலே இமயமலைக்குச்சமீபத்திலுள்ள ஒரு பெருங்காட்டினுள்ளே செல்லும்போது, அங்கேயொருதடாகத்தைக்கண்டு அதில் நீராடிச் சிவபூசைசெய்துகொண்டிருக்கையில்; அத்தடாகக்கரையிலுள்ள தெய்வத்தன்மைபொருந்திய ஓராலமரத்திலிருந்து ஒரு பழுப்பு அவருக்குமுன்னே பாதிநீரிலும் பாதிநீர்ப்புறத்திலுமாக விழுந்தது. நீரிலேவிழுந்தபாதி மீன்வடிவமும் நீர்ப்புறத்துவிழுந்தபாதி பறவைவடிவமும் அடைந்து இருபுறமுமிழுக்க, நக்கீரதேவர் அவ்வாச்சரியமான காரியத்திலே கருத்துச் செலுத்தினார்; அதனாலே சிவபூஜைக்குத் தவறுண்டாயிற்று. அதன்முன்பு அவ்விடத்தே அப்படியே சிவபூஜையிலவழுவினவர்களாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒருமலைக்குகையில்அடைத்து, இன்னும் ஒருவன்வேண்டுமெனக் காத்திருந்த ஒருகொடிய

பூதமானது நக்கீரரையெடுத்துக்கொண்டுபோய் அக்குகையில் அடைத்து, ஆயிரவராக்கித் தன்னியமப்படி அகப்பட்ட அவ் வாயிரவரையும் உண்ணுதற்கு நீராடப்போயிற்று. அச்சமயத்தில் முன் அடைபட்டிருந்தவரெல்லாரும் நக்கீரதேவரைப்பார்த்து, ஐயா! நாங்களெல்லாரும் நெடுங்காலமாக இப்பூதத்தின் சிறையில் அகப்பட்டிருந்தும், இப்பூதத்தாலே உணவுமுதலியவைபெற்று உயிர்பிழைத்திருந்தோம்; இன்றைக்கு உம்மாலே இப்பூதத்துக்கு இரையாகுங்காலம் நேர்ந்தது, என்று அழுதார்கள். நக்கீரதேவர் அது கேட்டு மனமிரங்கி முருகக்கடவுளைக்குறித்துத் திருமுருகாற்றுப்படை என்னும் ஓர்பிரபந்தம்பாடி முருகக்கடவுளைத் தரிசித்து அவர்களெல்லாரையுங் காப்பாற்றி யப்பாற் சென்றனர்.

பன்னிரண்டு வருஷத்திற்குப் பின் நாடுமலிய மழைபெய்து நல்விளைவு விளைந்து நாடு செழித்து நன்றானபின் பாண்டிய ராஜன் இனி நூல்வல்ல சங்கத்தாரைக் கொண்டுவாருங்களென்று தூதுவரைத் திசைதோறும் அனுப்ப அவர்போய் எல்லாத்தேசங்களிலும் தேடி எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லவரைக் கண்டு அழைத்துவந்துவிட்டுப் பொருளதிகாரம் வல்லவரை யெங்குந்தேடியும் அகப்படவில்லையென்று சொல்லினர். அப்போது அவ்வரசன் அதிகக் கவலையுற்று, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பயன் அறிதற் கல்லவோ? பொருளதிகாரம் நமக்குக் கிடையாவிட்டால் ஏனையமூன்றுங் கிடைத்துப் பயனென்னவென்றுசொல்லி வருந்த, அதனைத் திருவாலவாயான் திருவுளங்கொண்டு "அன்பினைந்திணை" என்னுஞ்சூத்திரமுதலிய அறுபது சூத்திரங்களினால் ஓரகப்பொருணூல் செய்தருளி மூன்றுசெப்பேட்டிலெழுதிப் பீடத்துக்கீழிட்டருளினார். அது களவியல் எனவும், இறையனாரகப்பொருள் எனவும் பெயர்பெறும். அன்று காலையில் தேவாலயத்துப் பரிசாரகன் ஆலயமெங்குந் திருவலகிட்டு நீர் தெளித்துப் பூவிட்டு, பீடத்தின்கீழென்றும் திருவலகிடாதவன் அன்று தெய்வதக் குறிப்பினால் பீடத்தின்கீழ் திருவலகிட்டான். அப்போது அத்திருவலகோடு செப்பேடுகளும் வெளிப்பட்டன. வெளிப்பட்ட ஏடுகளை எடுத்துப் பார்க்குமளவில் வாய்ப்புடையதாகிய பொருளதிகாரமாகக் காணப்பட்டது. அரசன் பொருளதிகார மின்மையைக் குறித்துக் கவலைப்படுகின்றதை அப்பரிசாரகன் அறிந்து அதனை யெடுத்துக்கொண்டு தன்வீட்டிற்குச்செல்லாமல் அரசன்கோயிற்றலைக்கடைச்சென்று நின்று வாயில்காப்போருக்குத் தன்வரவையுணர்த்த அக்காவலாளர்சென்று அரசனுக் கறிவிக்க அரசன் அப்பரிசாரகபிராமணனை வாருமென்றழைக்கப் பிராமணன் உள்ளே சென்று அச்செப் பேட்டினைக் காட்ட அதனை யிருகையுமேந்தி வாங்கிப்பார்த்துப் பொருளதிகாரமிது, இதனை நமது சோமசுந்தரக்கடவுள் நமதிடுக்கண் கண்டு அருளிச் செய்தன ரென்று அத்திசை நோக்கித்தொழுது நின்று சங்கத்தாரை அழைப்பித்து இது நமது பெருமான் அருளிச்செய்த பொருளதிகாரம், இதனைக் கொண்டுபோய்ச் சங்கப்பலகை ஏறியிருந்து பொருளாய்ந்து வாருங்களென்றனன். அவர்களும் அப்படியே

அதைவாங்கிப் போய்த் தனித்தனியே அதற்கு உரையிட்டு, தத்தம் உரையே சிறந்ததென்று சிறப்பித்துக்கொண்டு சில நாள்கழித்தும் ஒருநாள் யாவரும் ஒருமித்து அரசனிடஞ்சென்று யாமியற்றிய உரைகளையெல்லாங் கேட்டு இவற்றுள் எவ்வுரை சிறந்ததென்று நிர்ணயிக்கத்தக்க ஓர் காரணிகனைக் கொடுக்கவேண்டுமென்று கேட்க, அரசன் உங்களுக்கொரு காரணிகனை எங்குத் தேடுவேன்; உங்களுக்கொப்பாவார் ஒருவருமில்லையே! என்று சொல்லப் பின்பு இச்சூத்திரஞ் செய்த ஆலவாயிலவிர்சடைக்கடவுளிடஞ் சென்று எமக்கோர் காரணிகனைத்தரல்வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய, சுவாமியினுடைய திருவருளால் இம்மதுரை வைசியர் மரபில் உப்பூரிகுடிகிழான் மகனாகத்தோன்றி ஐந்து பிராயமுள்ள உருத்திரசன்மனென்று ஒரூமைப் பிள்ளை யிருக்கின்றனன். அவன் குமாரதேவன் சாபத்தாற் றோன்றினவன்; ஆதலால் அவனை அத்தன்மையனென்றிகழாது அழைத்துப்போய் ஆசனத்திருத்தி நீவிர் கீழிருந்து சூத்திரப் பொருளைச் சொல்லுவீராயின் அவன் மெய்யுரைகேட்டவிடத்துக் கண்ணீர்மல்கி மெய்ம்மயிர் பொடிப்பன், அல்லாவிடத்துச் சும்மாவிருப்பன் எனச் சொல்லிய அசரீரிவார்த்தை கேட்டு யாவரும் எழுந்து ஆலயத்தைவலம்வந்து உப்பூரிகுடிகிழானிடத்திற்சென்று இவ்விருத்தாந்தத்தை யறிவித்து ஐயனாகிய உருத்திரசன்மரைத்தரல்வேண்டுமென்று வேண்டி அழைத்துப்போய், அவருக்கு வெண்தூசுடுத்தி வெண்பூச்சூட்டி வெண்சாந்தணிந்து, பின்பவரைச்சங்கப்பலகையிலேற்றித் தாம் கீழிருந்து சூத்திரத்தின்பொருள்களை ஒவ்வொருவராக உரைப்ப அவ்வுருத்திரசன்மர் அவற்றைக்கேட்டுச் சும்மாவிருந்து, மதுரைமருதநாகனார் உரைத்தவிடத்து ஓரோவிடத்துக்கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்நிறுத்திப், பின்பு கணக்காயனார் மகனார்நக்கீரர் உரையைக்கேட்டவிடத்து கண்ணீர்வார மெய்ம்மயிர்சிலிர்ப்பவிருந்தார். அப்போது மற்றப் புலவர்கள் தம்முரைகளையெல்லாங் கிழித்தெறிந்துவிட்டு நக்கீரருரையே மெய்யுரையென்று கொண்டாடி உருத்திரசன்மருக்கு வெகுவித உபசாரங்கள் செய்து மறுபடியும் அவரை அவரிருப்பிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டுத் தாங்கள் பழையபடி சங்கமிருந்து நூலாராய்ந்து வந்தனர்.

அங்ஙனம் நூலாய்ந்துவந்த சங்கப்புலவர்களின் பெயர்வருமாறு:—

1. கபிலர்— 2. பரணர்—3. நக்கீரர்—4. மாமூலனார்—5. கல்லாடர்— 6. சீத்தலைச்சாத்தனார்— 7. மருத்துவன்றாமோதரனார்— 8. நாகன்றேவனார்— 9. அரிசிற்கிழார்—10. பொன்முடியார்— 11. கோதமனார்—12. நத்தத்தனார்— 13. முலையலூர்ச்சிறுகருந்தும்பியார்— 14. ஆசிரியர்நல்லந்துவனார்—15. கீரந்தையார்—16. சிறுமேதாவியார்—17. நல்கூர்வேள்வியார்— 18. தொடித்தலைவிழுத்தண்டினார்—19. வெள்ளிவீதியார்—20. மாங்குடிமருதனார்—21. எறிச்சலூர்மலாடனார்—22. போக்கியார்—23. மோசிகீரனார் —24. காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார்—25. மதுரைத்தமிழ் நாயகனார்—26. பாரதம்பாடியபெருந்தேவனார்—27. உருத்திரசன்மகண்ணனார்— 28. பெருஞ்சித்தனார்—29. நரிவெருத்தலையார்—30. மதுரைத்தமிழாசிரியர்

செங்குன்றூர்க்கிழார்— 31. மதுரையறுவைவாணிகர்இளவேட்டனார்— 32. கவிசாகரப்பெருந்தேவனார்—33. மதுரைப்பெருமருதனார்—34. கோவூர்க்கிழார்—35. உறையூர்முதுகூற்றனார்—36. இழிகட்பெருங்கண்ணனார்—37. செயிர்க்காவிரியார்மகனார்சாத்தனார்—38. செயலூர்க்கொடுஞ்செங்கண்ணனார்—39. வண்ணக்கஞ்சாத்தனார்—40. களத்தூர்க்கிழார்—41. நச்சுமனார்—42. அக்காரக்கனிநச்சுமனார்—43. நப்பாலத்தனார்—44. குலபதிநாயனார்—45. தேனீக்குடிக்கீரனார்—46. கொடிஞாழன் மாணிபூதனார்—47. கவுணியனார்—48. மதுரைப்பாலாசிரியனார்—49. ஆலங்குடிவங்கனார்.

இனி இக்கடைச்சங்கத்தாருள் நக்கீரர்நீங்கிய மற்ற புலவர்களுள் கல்லாடர் என்பவர் கல்லாடம் என்று ஒருநூல் திருக்கோவையாருக்குச் சமர்த்தனமாகச்செய்திருக்கிறார் என்றுசொல்லுகிறார்கள். அந்நூலிலே "நண்ணியபாதி" என்னுஞ்செய்யுளில்,—

"சமணக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

என்றுகூறப்பட்டிருப்பதால், அது கடைச்சங்கத்துள் திருக்குறளரங்கேறிய பின்னரேசெய்யப்பட்டதென ஏற்படுகின்றது.

பாரதம்பாடிய பெருந்தேவனார் என்பவர் **பாரதவெண்பா** என்று ஒருநூல் செய்திருக்கிறார். அது எண்பதினாயிரஞ் செய்யுளாலமைந்த தெனவும், அறுபதினாயிரஞ்செய்யுளாலமைந்ததெனவும், பதினாயிரஞ்செய்யுள்ாலமைந்த தெனவும், பலவாறாகக் கூறுகின்றனர். இந்நூல் பெரும்பாலும்வெண்பாவாலான தாயினும், இடையிடையே அகவற்பாவும் கட்டுரையும் விரவியதாயிருக்கின்றது. இப்போது இந்நூல் உத்தியோகபருவந்தொடங்கி யுத்தபருவத்திற் சிறிதுதூரம் வரைக்குமே யகப்படுகின்றது, முழுதுங்கிடைப்பதருமை.

ஆசிரியர் நல்லந்துவனார் என்பவர் **கலித்தொகை** என்று ஓர் நூல்செய்திருக்கின்றனர். அது சொல்லழகும் பொருட்பொலிவும் பொருந்தியதாய் அகப்பொருளிலக்கணத்திற் கிலக்கியமாயிருத்தலின் அதனைப் பொருளதிகார வுரைமுதலியவற்றுள் நச்சினார்க்கினியர் முதலாயினோர் பலவிடத்தும் உதாரணமாக எடுத்தாண் டிருக்கின்றனர்.

மாமூலனார் **மாமூலம்** என்று ஒருநூல் செய்திருக்கிறதாகவும் கேள்வி.

இவ்வாறே மற்றவர்களும் தனித்தனியே நூல் செய்திருக்கலாம்; அவை இக்காலத்து உள்ள இடமும் பெயருந் தெரியாமல் மறைந்து கிடக்கின்றன. ஆயினும், இருநூற்றைந்துபுலவர்களாற் பாடிமுடிக்கப்பெற்ற தொகைச்செய்யுளாகிய **குறுந்தொகை** என்னும் நூலுள் கபிலர், பரணர், நக்கீரர், மாமூலனார், கல்லாடர், வெள்ளிவீதியார், மாங்குடிமருதனார், மோசிகீரனார், மதுரையறுவைவாணிகர் இளவேட்டனார், கோவூர்க்கிழார், ஆலங்குடிவங்கனார் என்னும் இப்புலவர்களும் பாடியனவாக இடையிடையே சிலபாட்டுக்கள் காணப்படுகின்றன.

[தொடர்ச்சி.]

கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் ௧.] ௧௮௮௬௵ நவம்பர்மீ [சஞ்சிகை ௧௦.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதி யாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானை யருளினை வெளியவர்ச் சையுமாகியுள்
வானர் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்செ
[ய்வாம்.

விரதாதிகள்.

நவராத்திரி.

இந்த விரதத்தைக்குறித்து "முன்பொரு திரேதாயுகத்தில் துன்னாரிகலறநூறி இருநிலமுழுவதுந் தனதெனக்கோலித் தன்மதவாரணத் திசைதொறுநிறுவியதிறலும், கருங்கழல்வெண்குடைக்கார்நிகர்வண்கையும் உடைய சுகேதுவென்னுமரசன், மேகம்போன்ற கூந்தலும், குறைமதிபோன்றநுதலும், விற்போன்றபுருவமும், கணைபோன்றகண்களும், முழுமதிபோன்றமுகமும், வள்ளைபோன்றகாதுகளும், எள்ளுப்பூப்போன்றநாசியும், முல்லையரும்புபோன்றபற்களும், குயில்போன்றகுரலும், கிளிபோன்றமொழியும், மூங்கில் போன்ற தோள்களும், மகரம்போன்ற முன்கையும், செங்காந்தள்போன்ற அங்கையும், கெளிறுபோன்ற கைவிரல்களும், கிளிமூக்குப்போன்ற கைந்நகங்களும், கொடிபோன்ற இடையும், தும்பிக்கைபோன்ற துடைகளும், நண்டுபோன்ற முழந்தாளும், காகளம்போன்ற கணைக்காலும், கைத்தாளம் போன்ற காற்பரடுகளும், ஆமைபோன்ற புறவடிகளும், பவளத்துண்டு போன்ற கால்விரல்களும், முத்துப்போன்ற நகங்களும், பஞ்சுபோன்ற பாதங்களும், அன்னம்போன்ற நடையும், மயில்போன்ற சாயலும், மாந்தளிர்போன்ற மேனியும், பொன்னினைப் பொடியாவராவி மீதிற் போட்டிட்டதுபோன்ற தேமலுமுடைய கட்டழகியாகிய சுவேதியென்னுந் தனது

மனையாளுடன் இல்லற நடத்திவருநாளில், முன்னை வினைப்பயத்தால் முனைவர் முனைக்க அவர் கையிற்சிக்கி அஸ்திர சஸ்திரங்களாலடிபட்டு அழகுகெட்டு அஸ்வாதீனனுயினன். அப்பொழுது அவன் மனைவியானவள் தன்காதலனைக்கண்டு கடுந்துன்பமுற்று அவனைத் தன்தலையிலும் முதுகிலுந் தோளிலுந் தூக்கிக்கொண்டு காட்டிற்சென்று காய் கனி கிழங்கு முதலியவற்றைப்புசித்துக் கடுக நடந்து பஞ்சவடதீர்த்தக்கரைசேர்ந்தாள். அச்சமயத்தில் அங்கு நீராடுவதற்கு வந்த ஆங்கிரசமுனிவர் அவர்களுடைய நிலைமையைக்கண்டு மனமிரங்கி அருகேசென்று சுவேதியை நோக்கி அம்மா! உன்னைப்பார்த்தால் ராஜபோகமனுபவித்தவள்போற் காண்கிறதே! இக்காட்டிற் சரிக்கக்காரணமென்ன? உன் வரலாற்றைச் சொல்வாயாயின் உனது வருத்த மெல்லாம் இரவிமுன் பனிபோல் இப்பொழுதே யொழியத்தக்க ஓர் உபாயஞ் சொல்லுகிறேன் என்றார்? அதுகேட்டு சுவேதி அம்முனி புங்கவர்க்கு வந்தனை வழிபாடுசெய்து தன் வரலாற்றைச்சொல்லி நிற்க, அவர் அப்பஞ்சவடதீர்த்தக்கரை துர்க்கா லக்ஷ்மீ ஸரஸ்வதியென்னும் தேவீத்ரயமும் வாஸஞ்செய்யு மிடமாகையால் அச்சுவேதியை அத்தீர்த்தத்தில் ஸ்நாநம்செய்யச்சொல்லி, தாமும் நீராடி நித்திய கர்மங்களை நிறைவேற்றி, குங்குமம் கஸ்தூரி கர்ப்பூரம் முதலிய பொருள்களையும், கோட்டுப்பூக் கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ என்னும் நால்வகையுள்ளுஞ் சிறந்த பல சாதிப்புட்பங்களையும், நிவேதனப்பொருள்களையும் சேகரித்துக் கொண்டு, அன்று ஹஸ்த நட்சத்திரத்தோடுகூடிய புரட்டாசிமாதம் பூர்வ பக்ஷத்துப் பிரதமையாயிருந்ததனுல் அப்பிரதமைமுதல் திரிதியைவரையில் பராசக்தியாகிய துர்க்கையையும், சதுர்த்தி முதல் ஷஷ்டிவரையில் லக்ஷ்மியையும், ஸப்தமிமுதல் நவமிவரையில் ஸரஸ்வதியையும் பூஜிக்கச்செய்து தசமியன்று புனர்பூஜையும் செய்வித்தனர். அம்மூவரது கடாக்ஷத்தினுல் சுவேதி யுடனே கர்ப்பந்தரித்து நவமன்மதன்போல ஓராண்பிள்ளையைப் பெற அக்குழந்தைக்கு ஆங்கிரசமுனிவர் சூரியபிரதாபனென்று பெயரிட்டு அவனைத் தமது அனுக்கிரகத்தினுல் ஸகலவித்தைகளிலுஞ் சமர்த்தனுகச் செய்தனர். பின்பு அவனுக்குத் தக்கவயது வந்தபோது அவன் தன்தந்தையின்பகைவர்மேற் படையெடுத்துச்சென்று வெற்றியடைந்து தன் மாதாபிதாக்களுடன், நாட்டார் நகரத்தார் முதலிய யாவருங் கண்டுகளித்துக் கொண்டாடும்படி பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு குறைவறவெகுகாலம் வாழ்ந்திருந்தான். இந்த விரதத்தை யனுஷ்டிப்பவர்களுக்கு ஸகலாபீஷ்டஸித்தியு முண்டாகும்" என்று புராணங்களிலும், வருஷப்பிரதி வருஷம் புரட்டாசிமாசம் பூர்வபட்சத்துப் பிரதமைதிதிமுதல் நவமிதிதிவரையில் ஒன்பதுதினங்களின் இராத்திரிகாலங்களில் பராசத்தியாகிய பரமேசுவரியைக்குறித்து விசேஷஜபதபங்கள், தர்ப்பணங்கள், பூஜைகள், ஆஹுதிகள், சந்தர்ப்பணைகள் இவைகளெல்லாம் விதிப்படி நடத்துகிறவர்களுக்கு இஷ்டசித்திகளும் சகல சாம்ராஜ்யங்களும் அந்த மஹாதேவி கடாக்ஷத்தினுல் உண்டாகுமென்றும், ஸ்ரீவித்தியா உபாசகர்கள் முக்கியமா யிந்த நவராத்திரி தினங்களில் உபாசித்தால் மந்திரசித்தி யடையவரென்றும், சகலமந்திரங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள், ஜபங்கள், பாராயணங்கள் இந்தக் காலங்களில் செய்தால் இஷ்டசித்தியாமென்றும் சாக்தேய தந்திரத்திலும் சொல்லியிருக்கின்றது.

துர்க்கா லக்ஷ்மீ ஸரஸ்வதி இம்மூவர்களையும் மும்மூன்றுதினமாக ஒன்பதுதினமும் இராத்திரிகாலங்களிற் பூசிப்பது விசேஷமானதால் நவராத்திரியென்றும், இந்த ஒன்பது தினமும் பூசைசெய்யக் கூடாமற்போனுல்

[illegible]

என்னும்வசனப்படி பெரும்பாலும் அந்த பக்ஷத்து ஸப்தமியில் வரும் மூலா நட்சத்திரம்முதல்தொடங்கி நவமிவரையில் பூசைசெய்யவேண்டுமென்றும், அதுவும் கூடாமற்போனுல் கடைத்தினமாகிய நவமியன்றைக்கு வித்தியா பீடமாகிய புஸ்தகங்களைவைத்து துர்க்காலக்ஷ்மீஸரஸ்வதி இம்மூவர்களையுங் கற்பவிதிப்படி பூசிக்கவேண்டியதென்றும், அப்படி பூசிப்பதால் அத்தினத்திற்கு மஹாநவமி யென்றும், ஸரஸ்வதியைப்பூசிப்பதால் ஸரஸ்வதிபூஜை யென்றும், ஆயுதங்களைவைத்துப் பூஜிக்கிறதனுல் ஆயுதபூஜை யென்றும் இந்த விரதத்திற்குப் பெயருண்டாயிற்று என்கிறார்கள்.

மறுநாளாகிய தசமி திதிக்கு விஜயதசமி யென்று பெயர். நூதனமாய் வித்தியாரம்பம் பண்ணுவதற்கு அது மிகவும் உத்தமமானதினம்; வாசித்திருக்கிறவர்களும் கிரந்தங்களைப் படிக்கவேண்டும், என்னென்றால் வித்தியாதாரணையாக இருக்குமென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அஸ்திர சஸ்திர வித்தையறிந்தவர்களும் ஆயுதமெடுத்து விளையாடவேண்டியது. இது கர்ணடக ஸம்ஸ்தானங்களில் நடந்துவரும்.

புராணநாமவிவரணம்.

சாலிவாகனன்.—இவன்ஒருசகபுருஷன். இந்தச்சாலிவாகனனுல்விக்கிரமார்க்கன் ஜயிக்கப்பட்டான். இவன் நாகேந்திரனது வரப்பிரசாதத்தால் ஓர் கன்னிகையின் வயிற்றிற்பிறந்தவன் என்கிறார்கள். இதற்கு

[illegible]

என்பதேபிரமாணமாம்.

பைடணபுரியென்னும்பட்டணத்தில் சோமகாந்தன் என்னும் அரசன் செங்கோல்செலுத்திவருநாளில், அப்பட்டணத்தில் நீதிமானும் தர்மிஷ்டனுமான சுலோசனன் என்னும் அந்தணனொருவனிருந்தான். அவனுக்கு சுமித்திரை என்றொருபெண்பிறந்தாள். அவள் நாலுவயதிலேயே தாயற்றகுழந்தையாய்த் தகப்பனுல் வளர்க்கப்பட்டுக் கலியாணமாவதற்குமுந்தியே தெய்வகதியாய்க்கிடைத்த ஓர்புருஷனைப்புணர்ந்துகர்ப்பந்தரித்தாள். அப்பொழுது சுமித்திரை கன்னிகையாகிய தான் கர்ப்பமானதனுல் தன்னையூரார் பழிப்பாரென்னும் பயத்தினுல் மனம்வருந்தி, தன்னிடம்வரும் புருஷனேடு தன்கு

றையைச்சொல்லிக்கொண்டாள். அது கேட்டு அவன், நான் சாதாரண
மனிதனல்லேன், நான் ஆதிசேஷன், என்னுடையசேர்க்கையால் உனக்கு
சுசகர்த்தாவும் சௌரியவானுமாகிய ஓர் பிள்ளைபிறக்கப்போகிறான். உனக்
காவது உன்தந்தைக்காவது எவ்விதசங்கடம்வந்தாலும் என்னை நினைத்துக்
கொள்ளுங்கள், நான் உடனேவந்து உங்கள் சங்கடங்களை யொழித்துப்போடு
வேன், என்றுசொல்லித் தன் நிஜவடிவைக்காட்டி மறைந்து போயினான்.
பின்பு இச்செய்தியையெல்லாம்சுமித்திரை தன்தகப்பனுக்குச்சொல்ல, அவன்
கடவுள்கட்டளைப்படி எது எப்படிநடக்கவேண்டுமோ அது அப்படி நடந்தே
தீரும், என்றுதன்னைத்தேற்றத் தேறிக் கவலையற்றிருந்தாள்.

பின்பு சுமித்திரைகலியாணமாவதற்குமுந்தியே கர்ப்பந்தரித்தசங்கதிஅவள்
சுற்றத்தார்க்கெல்லாருக்குந் தெரிய, அவர்கள் அவளையும் அவள்தகப்பனையும்
சாதியினின்றும் விலக்கிச் சங்கதியெல்லாம் அரசனுக்கறிவித்தார்கள். அது
கேட்டு அரசன் அவர்களைத்தன்நகரத்தினின்று வெளியே துரத்திவிடக்கட்
டளையிட்டனன். அவ்வளவில் சுலோசனன் பட்டணத்துக்கு வெளியில் ஓர்
குயவன் வீட்டிற்சேர்ந்து காலங்கழித்துவருகையில் சாலிவாகனன் பிறந்து
இளமையிலேயே தோழப்பிள்ளைகளைச் சேர்த்துக்கொண்டு தான் அரச
னென்றும் மற்றவர்கள் மந்திரி முதலானோரென்றும் ஏற்படுத்திக்கொண்டு அர
சுபுரிபவன்போல விளையாடிக்கொண்டிருந்தான். இவன் விளையாட்டைப்
பார்க்கும் கும்பகாரரெல்லாரும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அப்
படியிருக்கையில் சாலிவாகனன் அக்கும்பகாரர்களை நோக்கி அரசன் சபை
யில் நடக்கும் விவகாரங்களை விசாரித்துக்கொண்டுவந்து நாடோறும் நமக்கு
அறிவியுங்களென்று சொல்ல, அவர்களும் அப்படியே செய்துவந்தார்கள்.

ஒருநாள் சாலிவாகனன் தன்தோழர்களோடு கொலுவிருக்கையில் ஒரு
பிராமணன் வந்து பரிகாசத்துக்குப் பஞ்சாங்கஞ் சொன்னான். அப்போது
சாலிவாகனன் அவனைப்பார்த்து, ஓ வேதியரே! நமது ராச்சியத்திற்கு
யோகமெப்படி யிருக்கிறதென்று கேட்டான். அதற்கு அந்தப்பிராமணன்
உங்கள் ராச்சியத்திற் கென்ன? நன்றாயிருக்கிறது என்றுசொல்ல, அங்கிருந்த
மட்குடங்களிலொன்றையெடுத்து அவ்வேதியனுக்கு வெகுமானமளித்து
விடைகொடுத்தனன். அப்பாத்திரம் மறுநாள் சுவர்ணமயமானதனால் இச்சி
றுவன் பொற்குடமளிக்கும் நற்கொடையாளனென நாடெங்கும்நல்லபெயரு
ண்டாயிற்று. பின்பு சாலிவாகனன் அங்கிருந்த குயவர்களைக்கொண்டு கரிபரி
தேர்காலாள் என்னும் நால்வகைச்சேனையும் மண்ணினாற்செய்வித்துக்கொண்
டிருந்தான். அப்படியிருக்க இந்தச்செய்தியை யெல்லாம் விக்கிரமார்க்கன்
கேட்டு இவனைத்தன்பட்டணத்திற்கு வரவழைத்துப் பார்க்கவேண்டுமென்று
வெகுபிரயத்தினஞ்செய்தும் முடியாமற்போய்விட்டது. அப்போது புரந்தர
புரமென்னும் பட்டணத்திலுள்ள தனஞ்சயன் என்னும் ஓர்வணிகன் தன்மர
ணகாலத்தில் தான்படுத்திருந்த கட்டிலின் நான்கு கால்களினடியிலும் மண்,
உமி, கரி, எலும்பு ஆகிய இவைகளைப்புதைத்துவைத்துத் தன்பிள்ளைகள்நால்
வரையுமழைத்து இக்கட்டிற்கால்களின்கீழ் புதைத்துவைத்திருக்கும்பொருளை

நீங்கள்நால்வரும் சமபாகமாய்ப் பங்கிட்டுக்கொண்டு சுகமாகச்சீவியுங்களென்று
சொல்லி மரணமடைந்தான். அப்பிள்ளைகளும் தகப்பனுக்குச் செய்யவேண்
டிய உத்தரக்கிரியைகளையெல்லாம் செய்துமுடித்து தமது தகப்பனார் சொல்
லிப்போனபடியே கட்டிற்கால்களின்கீழ் வெட்டிப்பார்த்து அப்பொருள்களைச்
சரியாய்ப் பங்கிட்டுக்கொள்ளவேண்டியவகை யின்னதென்று தெரியாமல்,
அக்காலத்தில் பிரசித்தராயிருந்த அரசர்களையும் நியாயாதிபதிகளையும் தங்களு
க்குப் பங்குபிரித்துக்கொடுக்கும்படி கேட்க, அவர்களும் இதற்கு வகைதெரி
யாமல் வருந்திநிற்க, கடைசியில் விக்கிரமார்க்கனிடஞ்சென்று அங்கும்அப்ப
டியேயாக, இனித்திரிந்து பலனில்லை என்று நிராசைசெய்துகொண்டு தமதூ
ருக்குச் செல்லும் வழியில் தற்செயலாய் இந்தச்சாலிவாகனனிருந்த இடம்
வந்தார்கள். அப்போது சாலிவாகனன் அவர்களுடைய சமாசாரத்தை விசா
ரித்து மேற்சொல்லிய நான்குபொருள்களையும் மூத்தமுறைப்படி ஒவ்வொரு
வன் ஒவ்வொன்றையெடுத்துக்கொள்ளவேண்டியதென்று உங்களுடைய தக
ப்பனார் அபிப்பிராயம்; அஃதெவ்வாறெனில், பெரியவனுக்கு மண்ணைக்கொ
டுத்தார்; அதற்கு தம்பூமிமுழுவதும் அவனுடையதென்பதுகருத்து. இர
ண்டாவது பிள்ளைக்கு உமியைக்கொடுத்தார்; அதற்கு தம்முடைய தானியங்
களெல்லாம் அவனுடையதென்பதுகருத்து. மூன்றாவதுபிள்ளைக்கு கரியைக்
கொடுத்தார்; அதற்கு பொன்வெள்ளிமுதலிய லோஹத்திரவியமுழுவதும் அவ
னுடையதென்பது அபிப்பிராயம். நான்காவது பிள்ளைக்கு எலும்பைக்கொ
டுத்தார்; அதற்குத் தம்முடைய கால்நடைகள் (ஆடுமாடுகள்) எல்லாம் அவனு
டையதென்பது அர்த்தம் என்று பங்குகளின் ஏற்பாட்டையெல்லாம் விவர
மாய் எடுத்துச்சொன்னான். அவர்கள் அது சரியான தீர்மானமென்று ஸந்
தோஷித்துத் தமதூருக்குச்சென்று அவ்வாறே பங்கிட்டுக்கொண்டு சுகமாக
வாழ்ந்திருந்தார்கள்.

பின்பு விக்கிரமார்க்கன் இந்தசமாசாரத்தைக் கேள்விப்பட்டுப் பொறாமை
கொண்டு சாலிவாகனனைத் தனக்குக்கீழ்ப்படுத்திக்கொள்ளாவிட்டால் தன்
கீர்த்தி குலைந்துபோகுமென்று நினைத்து நால்வகைச்சேனையுடனே படையெ
டுத்து சாலிவாகனனிருந்த பட்டணத்தைநோக்கிவந்தான். வரவே சாலிவா
கனன் அதைத்தெரிந்துகொண்டு தான் முன் மண்ணினாற்செய்வித்திருந்த சது
ரங்கசேனைகளையும் நாகேந்திரனுடைய பலத்தாலே உயிருள்ளனவாகச்செய்
வித்துக்கொண்டு விக்கிரமார்க்கனை யெதிர்த்துக்கொன்றுஅவன் சேனையை நரு
மதையாற்றங்கரைமட்டுந்துரத்திச் சென்று திரும்பினான். அதனால் நருமதை
க்குத் தென்னண்டை சாலிவாகனசகமும், அதற்குவடவண்டை விக்கிரமார்க்க
சகமும் வழங்குகின்றது. இந்தச்சாலிவாகனன் பின்பு மகாகவியாகி வைத்
திய சாஸ்திரம் அசுவசாஸ்திரம் முதலியவைகளும், ஸப்தசதி என்னும்பெய
ரால் ஓர் அலங்காரசாஸ்திரமும் செய்திருக்கிறதாகச் சொல்லுகிறார்கள்.

பொருளிலக்கணவிஷயம்.

[௨௩௯-வது பக்கத்தின் தொடர்ச்சி.]

2.—ஐயம்.

1. போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோ
யாதோவறிகுவதேதுமரிதியமன்விடுத்த
தூதோவனங்கன்றுணையோவிணையிலிதொல்லைத்தில்லை
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே.

2. அணங்குகொலாய்மயில்கொல்லோகனங்குழை
மாதர்கொள்மாலுமென்னெஞ்சு.

3. உரையுறைதீந்தமிழ்வேந்தனுசிதன்றென்னாட்டொளிசேர்
விரையுறைபூம்பொழின்மேலுறைதெய்வங்கொலன்றிவிண்டோய்
வரையுறைதெய்வங்கொல்வானுறைதெய்வங்கொனீர்மணந்த
திரையுறைதெய்வங்கொலையந்தருமித்திருநுதலே.

---

1. யமனால்விடுக்கப்பட்டதூதோ, வசித்தற்கரியாரைவசித்தற்கு அனங்கற்குண்டாயிற்றோர் துணையோ, ஒப்பில்லாதானது பழையதாகிய இத்தில்லைக்கண்வாழ்வாரோர் மாதரோ, மடப்பத்தையுடையமயிலோவென்று சொல்லும் வண்ணம் நின்றவரது வாழ்பதி, தாமரைப்பூவோ [இலக்குமியோ], ஆகாயமோ [இந்திராணியோ], நீரோ [நீரரமகளோ], பாம்புகளது பதியாகிய நாகருலகமோ [நாககன்னியோ], யாதோசிறிதுந்துணிதலரிது, எ - று.

2. இக்கனவியகுழையையுடையாள் இப்பொழிற்கணுறைவாளோர் தெய்வமகளோ [சூரரமகளோ], அன்றியொருமயில்விசேடமோ, அன்றியொரு மானுடமாதரோ, இவளையின்னளென்றுதுணியப்படாது என்னெஞ்சுமயங்காநின்றது, எ - று.—[எழுதலாகாவுருவுந் தன்வருத்தமும்பற்றி அணங்குகொலென்றும், சாயலும் பொழில்வயினிற்றலும்பற்றி ஆய்மயில்கொலென்றும், தன்னெஞ்சஞ்சென்றமையும் அவளெதிர்நோக்கியவாறும்பற்றி மாதர்கொலென்றுங் கூறினான்.]

3. ஒருவாற்றானுந் தெளியப்படாமலெனக்கையத்தைவிளைவித்துக்கொண்டிற்குமித்திருநுதலையுடையாள், புகழ் உறைதற்கிடமாகியதீந்தமிழ்வேந்தனாகிய உசிதனது தென்னாட்டின்கண், ஒளியுடைப்பொருள்களாகிய இருசுடருந்தவழாநின்ற பரிமளந்தங்கும் பூஞ்சோலையில் வசிக்குந்தெய்வமோ [சூரரமகளோ], அல்லது ஆகாயத்தைத் தீண்டுகின்ற மலையில்வசிக்குந்தெய்வமோ [மலையரமகளிரோ], வானுறைதெய்வமோ [இந்திராணியோ], நீர்சேர்ந்த அலைகளில் வசிக்குந்தெய்வமோ [நீரரமகளிரோ], அறிகிலேன், எ - று.—[உரை உறை என்பதற்கு சொற்செறிவுள்ள எனவும் பொருள்கூறலாம்.]

4. பாரணங்கோதிருப்பாற்கடலீன்றபங்கேருகத்தின்
றாரணங்கோவெற்புறையணங்கோவுயர்பாவலர்க்கு
வாரணங்கோடிதருந்தஞ்சைவாணன்றென்மாறைவைய
நீரணங்கோநெஞ்சமேதனியேயிங்குநின்றவரே.

5. மண்ணேநிவிரைச்சந்தனவரையோமலர்மாளிகையோ
விண்ணேறுவலைத்தண்புனலோபழமலைவெங்கையன்ன
பெண்ணோடிருக்கும்பொழுதிளஞ்சேவிற்பிறழுநெடுங்
கண்ணோடிருக்குமுகம்போல்வதாங்கதுகண்டிலமே.

6. மூலைப்பகையோகட்பகையோவவர்தம்முகப்பகையோ
மலைப்பகையாம்விண்முழுதாளியென்றும்வணங்குமயன்
தலைப்பகையாயகரமுடையான்வெங்கைசார்ந்துநின்ற
சிலைப்பகையாகுநறுநுதலார்தந்திருமனையே.

7. பாரோவலாரியின்பாருலகோகஞ்சப்பார்வையண்ணல்
ஊரோவிதிதன்பதியோமதியோடொளிரும்விண்ணிற்
றேரோதைசூழ்தருகோடீச்சுரத்தர்தின்சிலம்பின்
எரோர்வடிவெடுத்தன்னவின்னாளொரடிலங்கிடமே.

---

4. பாரினிடத்துப் பொழிலின்மேலிருந்து புவியிலுள்ளோர் சிறப்புச்செய்ய அச்சிறப்பைக்கொள்ளுந்தெய்வப்பெண்ணோ [சூரரமகளோ], திருப்பாற்கடல்பெற்ற பங்கேருகத்துக்கண்ணிருக்கும் ஒப்பில்லாததெய்வப்பெண்ணோ [திருமகளோ], உயர்ந்தபாவலர்க்குக் கோடியானையைக்கொடுக்குந்தஞ்சைவாணனது நாட்டகத்துவரும் வையையாற்றின்கட்டோன்றிய நீரரமகளோ, நெஞ்சமே! தனியேயிங்குநின்றவர் யாரோவென்றறியப்படாது, எ-று.

5. பழமலையைச்சேர்ந்த வெங்கைத்தலத்தையொத்தபெண்ணோடு கூடியிருக்கும்பொழுது, இளமைபொருந்திய சேல்போற்பிறழும் காதளவுநீண்ட கண்ணோடுகூடியிருக்கும்முகம்போல்வது, பூலோகமோ [மானுடமாதோ], வாசனைபொருந்திய சந்தனமரங்களுள்ளபொதியமலையோ [வரையரமகளோ], தாமரைவீடோ [கலைமகளோ], சுவர்க்கலோகமோ [இந்திராணியோ], அலைகளோடுகூடியகுளிர்ச்சிபொருந்தியகடலோ [திருமகளோ], அது நாமறியோம்.

6. மலைகளுக்குச்சத்துருவாகிய தேவேந்திரன் எக்காலமும்வணங்குகின்ற பிரமசிரசுக்குப்பகையாகிய திருக்கரத்தையுடையானது [பரமசிவனது] இத்திருவெங்கைத்தலத்தைச்சார்ந்துநின்ற வில்லுக்கு விரோதியாகிய நல்லநெற்றியையுடையாரது அழகிய இடமானது, அவரது மூலைப்பகையாகிய மலையோ [மலைமகளோ], அவரது கட்பகையாகிய பாற்கடலோ [திருமகளோ], அன்றி அவரது முகப்பகையாகிய புண்டரீகமோ [கலைமகளோ], (துணியப்படவில்லை) எ - று.—வணங்கும், நின்ற என்னும் பெயரெச்சங்கள் முறையே உடையான், நுதலார் என்னும் பெயர்கொண்டன.

7. சந்திரனோடுகூடப் பிரகாசியாநின்ற ஆகாசமார்க்கத்தில் தேவரதங்

யாப்பிலக்கண விஷயம்.

1. யாப்பாவது,—எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு என்னும் இவ்வேழுறுப்பினோடும் புணர்ந்து, குற்றமின்றிக் குணமுமணியும் பெற்று நடப்பதாம்.

[என்னை:—

"எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா நடைய தியாப்பெனப் படுமே" எனவும்;

"இமிழ்கடல் வரைப்பி னெல்லையின் வழாஅத்
தமிழியல் வரைப்பிற் றமினிது விளங்க
யாப்பிய றனே யாப்புற விரிப்பின்
எழுத்தசை சீர்தளை யடிதொடை தூக்கோ
டிழுக்கா மரபி னிவற்றொடு பிறவு
மொழுக்கல் வேண்டு முணர்ந்திசி னோரே" எனவும்;

* "தாதுக்க
ளேழும் புணர்ந்த தியாக்கை யெழுத்தாதி
யேழும் புணர்ந்த தியாப்பு" எனவும்;

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்" எனவும்

கூறுபவாகலின்.]

யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள், பா என்பன ஒருபொருட்சொற்கள்.

[என்னை:—

"யாப்பும்,
பாட்டுந் தூக்குந் தொடர்புஞ் செய்யுளை
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே" எனவும்;

களதுசத்தம் நிறையப்பெற்றகோடீச்சுரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற திரு இன்னியமலையினிடத்துள்ள அழகே ஒருவடிவெடுத்துவந்தாற்போன்ற இவளோடுகூடி விளங்குகின்ற இடமானது பூமியோ [மானுடமாதோ], வலனென்னும் அசுரனுக்குச்சத்துருவாகிய தேவேந்திரன் போகசுகங்களை நுகர்கின்ற வுலகமோ [இந்திராணியோ], தாமரைக்கண்ணனாகிய பெருமையிற் சிறந்த திருமாலினது பரமபதமோ [திருமகளோ], பிரமனது ஸத்தியலோகமோ [ஸரஸ்வதியோ], துணியப்படவில்லை, எ - று.

* தாதுக்களேழாவன: தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுக்லசுதீர் எனவிவை.

"தூக்கும் பாட்டும் பாவு மொன்றென
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே" எனவும்;
"பாவென மொழியினுந் தூக்கின் பெயரே" எனவும்;

கூறுபவாகலின்.]

இவ்வேழுறுப்பினுந்தீர்ந்து யாப்புண்டோவெனின், இல்லையாம்; *முப்பத்திரண்டுறுப்பொடும் புணர்ந்தது மக்கட்சட்டகமென்றால், முப்பத்திரண் டுறுப்பினுந்தீர்ந்து மக்கட்சட்டகமில்லையானாற் போல.

இவ்வாற்றை யிம்முறையே வைத்ததென்னையெனின், எழுத்தானசையும், அசையாற்சீரும், சீராற்றளையும், தளையானடியும், அடியாற்றொடையும், தொடையாற்றூக்குமாதல்பற்றிக் காரணகாரிய முறைநோக்கிவைத்ததாம். அதுமேல் விளங்கும்.

க.—எழுத்து.

2. † உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில், அளபெடை, வன்மை, மென்மை, இடைமை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் என்னும் பதினைந்து திறத்தெழுத்தும் அசைக்குறுப்பாவனவாம்.

[என்னை,—

"உயிரே மெய்யே யுயிர்மெய் யென்றா
குறிலே நெடிலே யளபெடை யென்றா
வன்மை மென்மை யிடைமை யென்றா
சார்பிற் றோன்றுந் தன்மைய வென்றா
ஐஔ மகரக் குறுக்க மென்றாங்
கைம்மூ வெழுத்து மாயசைக் குறுப்பே"

என்பவாகலின்.]

[எழுத்து, அக்ஷரம் என்பன ஒருபொருட்சொற்கள்.]

* குழல், நுதல், புருவம், கண், காது, நாசி, வாய், பல், முகம், கண்டம், தோள், முன்கை, அங்கை, கைவிரல், கையுகிர், கொங்கை, கொங்கைக்கண், வயிறு, ரோமரேகை, வயிற்றுமடிப்பு, இடை, உந்தி, மர்மஸ்த்தானம், தொடை, முழந்தாள், கணைக்கால், புறவடி, பரடு, குதி, கால்விரல், கால்நகம், தாள் என்பனவாம்.

† உயிரும் மெய்யும் போறலின் இவ்விருவகையெழுத்திற்கும் உயிர், மெய் என உவமவாகுபெயராய்க் காரணப்பொதுப்பெயராயின; ஏனையவுமிவ்வாறேகாண்க.

3. அவற்றுள்,—உயிராவன:- அகரமுதல் ஔகாரமீறுப்க்கிட ந்த பன்னிரண்டெழுத்துமாம்.

[என்னை:—
"(அகரமுதல்) ஔகார விறுவாய்ப்
பன்னீ ரெழுத்து முயிரென மொழிப" எனவும்;
"அகர முதலா ஔகார மீறு
இசையொடு புணர்ந்த வீரா றுமுயிரே" எனவும்;
"அம்முத லீரா றாவி" எனவும்;
கூறுபவாகலின்.]
[ஆவி, உயிர், அச்சு, ஸ்வரம் என்பன ஒருபொருட்கிளவிகள்.]

4. மெய்யாவன:- ககரமுதல் னகர மீறாய்க் கிடந்த பதினெட் டெழுத்துமாம்.

[என்னை:—
"(ககரமுதல்) னகர விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப" எனவும்;
"கம்முதன்
மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்" எனவும்;
கூறுபவாகலின்.]
[மெய், உடம்பு, உறுப்பு, ஒற்று, புள்ளி, ஹல், வியஞ்சனம் என்பன ஒருபொருட்சொற்கள்.
என்னை:—
"மெய்யுடம் புறுப்பொற் றிவைதா மொருபொருட்
செய்யு மென்று செப்பினர் புலவர்" என்றாராகலின்.]

5. உயிர்மெய்யாவன: - உயிருமெய்யுங் கூடிப்பிறப்பனவாம். அவை பதினெட்டு மெய்மேலும் பன்னிரண்டுயிரும் தனித்தனியே வருதலாலாகிய இருநூற்றிருபத்தாறெழுத்துமாம்.

[என்னை:—
"உயிரு மெய்யும் புணர்ந்த புணர்ச்சி
உயிர்மெய் யென்ப வுணர்ந்திசி னோரே" எனவும்;
"உயிரு மெய்யு மொருங்கியைந் தனவும்
உயிர்மெய் யென்ப வுணர்ந்திசி னோரே" எனவும்;
"உயிரீ ராறே மெய்ம்மூ வாறே
அம்மூ வாறு முயிரோ டுயிர்ப்ப
இருநூற் றிருபத் தாறுயிர் மெய்யே" எனவும்;
"புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே" எனவும்;
"மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே" எனவும்;
கூறுபவாகலின்.]

6. குறிலாவன:- அ, இ, உ, எ, ஒ, என்னும் இவ்வைந்துமாம்.

[என்னை:—
"குறிலோ ரைந்து மறிவுறக் கிளப்பின்
அஇ உஎ ஒவ்வென்னு மிவையே" எனவும்;
"அஇஉ,
எஒ வென்னு மப்பா லைந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப" எனவும்;
"அஇ உஎ ஒக்குறி லைந்தே" எனவும், கூறுபவாகலின்.]
[குறில், ஹ்ரஸ்வம் என்பன ஒருபொருட்கிளவிகள்.]

7. நெடிலாவன: ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும்இவ்வேழுமாம்.

[என்னை:—
"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔவெனும்
ஏழு நெட்டெழுத் தென்ற வியல்பே" எனவும்;
"ஆ ஈ ஊ ஏ ஐ
ஓ ஔ வென்னு மப்பா லேழும்
ஈரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப" எனவும்;
"ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்" எனவும்; கூறுபவாகலின்.]
[நெடில், தீர்க்கம் என்பன ஒருபொருட்கிளவிகள்.]

8. அளபெடையாவன: - மாத்திரைகுன்றலிற் சீர்குன்றித் தளை கெடநின்றவிடத்து யாப்பழியாமைப்பொருட்டு வேண்டப்படுவன வாம்.

[என்னை:—
"மாத்திரை வகையாற் றளைதம கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்"
என்பவாகலின்]

அவ்வளபெடை உயிரளபடை ஒற்றளபெடை என்று இரண்டு வகைப்படும்.

[என்னை:—
"உயிரள பெடையு மொற்றள பெடையுமென்
றுயிரண் டென்ப வளபெடை தானே"
என்றாராகலின்.]

9. உயிரளபெடைக்குச்சொல்லுமாறு:—உயிருள்நெட்டெழுத் தேழும் அளபெடுக்கும். அவையளபெடுக்குமிடத்து அவற்றின்

பின் அவற்றிற்கினமாகிய குற்றெழுத்துக்கள் வரிவடிவின்கண் அறிகுறியாய் வரும்.

[என்னை:—

"குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே" எனவும்;

"ஐஔ வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை வாகும்" எனவும்;

"இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே" எனவும்;

கூறுபவாகலின்.]

அவ்வுயிரளபெடைதான் நான்குவகைப்படும்; தனிநிலையளபெடை, முதனிலையளபெடை, இடைநிலையளபெடை, இறுதிநிலையளபெடை என.

[என்னை:—

"தனிநிலை முதனிலை யிடைநிலை யீறெனா
நால்வகைப் பதேஉமள பாய்வரு மிடனே" என்றாராகலின்.]

அவை வருமாறு:—

(1) ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ என இவையேழுந் தனிநிலையளபெடை.

(2) ஆஅரிடம், ஈஇரிலை, ஊஉரிடம், ஏஎரிகள், ஐஇயவி, ஓஒரிகள், ஔஉவியம் என இவை யேழு முதனிலையளபெடை.

(3) படாஅகை, பரீஇயம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், புரோஒசை, அநௌஉகம் என இவை யேழு மிடைநிலையளபெடை.

(4) கடாஅ, குரீஇ, கழூஉ, மிலேஎ, கடைஇ, அரோஒ, அநௌஉ என இவ்வேழு மிறுதிநிலையளபெடை.

இனி, செய்யுளோசைகுன்றுவிடத்தும் இன்னிசை நிறைக்கவும் சொல்லிசை நிறைக்கவும் வரும் அளபெடைகளும் உண்டு. இன்னிசைநிறைக்கவருமளபெடையாவது,—குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீண்டு இன்னிசைநிறைத்தற்பொருட்டளபெடுப்பது. சொல்லிசைநிறைக்கவருமளபெடையாவது,—பெயர்ச்சொல் வினையெச்சச்சொல்லினிசையைநிறைத்தற்பொருட்டளபெடுப்பது.

அவை வருமாறு:—

"கெடுப்பதூஉங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றாங்கே, யெடுப்பதூஉமெல்லாமழை"—இதனுள், கெடுப்பதும் எடுப்பதும் எனநிற்பினும் செய்யுளோசைகுன்றாதாயினும், இன்னிசைநிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தமைகாண்க. "உரனசைஇயுள்ளந்துணையாகச்சென்றார், வரனசைஇயின்னுமுளேன்,"—இதனுள், உரனசை வரனசை எனநிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், விருப்பமெனப்பொருள்படும் நசையென்னும் பெயர்ச்சொல், விரும்பியென வினையெச்சப்பொருள்படும்பொருட்டு வினையெச்சச் சொல்லாதற்கு நசைஇ என அளபெடுத்தமைகாண்க.

இனி, உயிரளபெடையெல்லாம் இயற்கையளபெடை, செயற்கையளபெடையென இருவகைப்படுமென்றும்; அவற்றுள் இயற்கையளபெடையாவது,—இசை, விளி, பண்டமாற்றாத்தல், புலம்புதல், முறையிடுதல் ஆகியிடத்துச் சொற்குப்பின்றோன்றாது கூடப்பிறப்பது எனவும்; செயற்கையளபெடையாவது,—சீர்தளைவழுவினவிடத்துவருஞ்செய்யுளிசை [அசைநிலை] யளபெடையும், இன்னிசையளபெடையும், சொல்லிசையளபெடையும் எனப்பட்டு, சொற்பிறந்தபின் புலவன் செய்துகொள்வதெனவும் கூறுவர்.

இனி, குரீஇ, ஆடூஉ, மகடூஉ, குழூஉ என்றாற்போல்வனவும் இயற்கையளபெடையேயாம்.

10. ஒற்றளபெடைக்குச் சொல்லுமாறு:—ஒற்றுக்களுள் ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம் என்னும் பதினொரொற்றுங் குறிற்கீழும் குறிலிணைக்கீழும்வந்தளபெடுத்து இடைநிலையளபெடையும் இறுதிநிலையளபெடையுமாகும். அவ்வாறு அளபெடுத்தனவற்றிற்கு அவற்றின்பின் அவ்வெழுத்துக்களே வரிவடிவின்கண் வேறறிகுறியாய்வரும்.

[என்னை:—

"ஙஞண நமன வயலள வாய்தம்
எனுமிவை யீரிடத் தளபெழு மொரோவழி" எனவும்,

"வன்மையொடு ரஃகான் ழஃகா னொழிந்தாங்
கன்மை யாய்தமோ டளபெழு மொரோவழி" எனவும்,

கூறுபவாகலின்.]

அவை வருமாறு:—

மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு எனக் குறிற்கீழ்ப்பதினொற்றுமளபெழுந்தவாறு.

அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வ்வை, அரைய்ய்யர், குரல்ல்கள், இரள்ள்கள், வரஃஃகு எனக் குறிலிணைக்கீழ்ப்பதினொற்றுமளபெழுந்தவாறு.

இவ்விருபத்திரண்டு புள்ளியளபெடையுஞ் செய்யுளகத்தல்

லது பரவை வழக்கினுள் வாராவெனக்கொள்க. [பரவைவழக்கு= உலகவழக்கு.]

11. வன்மையாவன:— க ச ட த ப ற. மென்மையாவன:— ங ஞ ண ந ம ன. இடைமையாவன:— ய ர ல வ ழ ள.

[என்னை:—

"வல்லினங் கசட தபறவென வாறே"
"மெல்லினங் ஙஞண நமனவென வாறே"
"இடையினம் யரல வழளவென வாறே" எனவும்;
"வன்மை யென்ப கசட தபற"
"மென்மை யென்ப ஙஞண நமன"
"இடைமை யென்ப யரல வழள" எனவும்;
"வல்லெழுத் தென்ப கசட தபற"
"மெல்லெழுத் தென்ப ஙஞண நமன"
"இடையெழுத் தென்ப யரல வழள"
"அவைதாம்
புள்ளியொடு நிலைய வியல்பென மொழிப
புள்ளியில் காலே யுயிர்மெய் யாகும்" எனவும்

கூறுபவாகலின்]

12. குற்றியலுகரம் வருமாறு: நெடிற்கீழும், நெடிலொற்றின் கீழும், குறிலிணைக்கீழும், குறிலிணையொற்றின்கீழும், குறினெடிற் கீழும், குறினெடிலொற்றின்கீழும், குற்றொற்றின்கீழும் என்று இவ் வேழிடத்து ஆறுவல்லெழுத்தினையுமூர்ந்து உகரம்வந்தால் அது குற்றியலுகரம் என்று வழங்கப்படும்.

[என்னை:—

"நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"
"எழுவகை யிடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே"

என்றாராகலின்]

அவைவருமாறு:—

(1) நாகு, காசு, காடு, காது, காபு, காறு என நெடிற்கீழ் ஆறுவல்லெழுத்தினையுமூர்ந்து குற்றியலுகரம்வந்தவாறு.

(2) நாக்கு, காச்சு, காட்டு, காத்து, காப்பு, காற்று என நெடிலொற்றின் கீழ் ஆறுவல்லெழுத்தினையுமூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

(3) வரகு, முரசு, முருடு, மருது, தரபு, கவறு எனக் குறிலிணைக்கீழ் ஆறுவல்லெழுத்தினையு மூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

(4) அரக்கு, பொரிச்சு, தெருட்டு, குருத்து, பொருப்பு, சிரற்று எனக் குறிலிணையொற்றின்கீழ் ஆறுவல்லெழுத்தினையுமூர்ந்து குற்றிய லுகரம் வந்தவாறு.

(5) அசோகு, பலாசு, மலாடு, கெடாது, புதாபு, விராறு எனக் குறினெடிற்கீழ் ஆறுவல்லெழுத்தினையு மூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

(6) நமாக்கு, நடாச்சு, பனாட்டு, கடாத்து, புதாப்பு, விராற்று எனக் குறினெடிலொற்றின்கீழ் ஆறுவல்லெழுத்தினையு மூர்ந்து குற்றிய லுகரம்வந்தவாறு.

(7) அக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று எனக்குற்றொற்றின் கீழ் ஆறுவல்லெழுத்தினையுமூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

இனி குற்றியலுகரம் அறுவகைப்படுமென்பாருமுளர். அவை யாவன:—ஈரெழுத்தொருமொழி, உயிர்த்தொடர்மொழி, இடைத் தொடர்மொழி, ஆய்தத்தொடர்மொழி, வன்றொடர்மொழி, மென் றொடர்மொழி என்றிவை.

[என்னை:—

"ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட ரிடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன்" எனவும்;
"நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத்
தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே" எனவும்;

கூறுபவாகலின்]

13. குற்றியலிகரம் வருமாறு: - உகரந்திரிந்தும் திரியாதும் யகரமோடியை பின்கண்வந்த இகரங் குற்றியலிகரமெனப்படும்.

[என்னை:—

"யகர முதல்வரி னுகர மொழிய
இகரமுங் குறுகு மென்மனார் புலவர்" எனவும்;
"வல்லெழுத் தாறொ டெழுவகை யிடத்தும்
உகர மனையாம் யகரமோ டியையின்
இகரமுங் குறுகு மென்மனார் புலவர்" எனவும்;
"யகரம் வரும்வழி யிகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது" எனவும்;

கூறுபவாகலின்.]

வருமாறு:—நாகியாது, காசியாது, காடியாது, காதியாது, காபியாது, காறியாது எனவரும். ஒழிந்தனவுமிவ்வாறே யொட்டிக்கொள்க.

இனித்திரியாது வந்தகுற்றியலிகரம்வருமாறு:—கேண்மியா, சென்மியா வெனக்கொள்க.

[என்னை:
"குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே" என்றாராகலின்]

14. ஆய்தம் ஒருமொழியுள் வருகின்றுழிக் குற்றெழுத்திற் கீறாய் உயிர்மெய்யாகியவல்லெழுத்தினைச் சார்ந்துவரும்.

[என்னை:—
"குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே"
என்றாராகலின்.]

வருமாறு:—அஃகம், வெஃகம், எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு, எனக்கொள்க. தொடர்மொழியுள்ளும் அவை வருமாறு வந்துழிக்காண்க.

[ஆய்தம், அக்கேனம், தனிநிலை, புள்ளி, ஒற்று, இவை ஒருபொருட் கிளவிகள். என்னை:—
"அக்கேன மாய்தந் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால வைந்து மிதற்கே."
என்றாராகலின்.]

15. ஐகார ஔகாரக்குறுக்கம் வருமாறு:- ஐகாரம் தனியேநின் றொருபொருளைச் சொல்லுதற்கண்ணும், தன்னைக்கருதித்தன்பெயர் கூறுமளவிலு மல்லாதவழி மொழி முதலிடைகடையென்னு மூன்றிடத்தும் முன்னும் பின்னு மிருமருங்குமாயவெழுத்தின்றொடர்பாற் றன்மாத்திரையிற் குறுகும்; ஔகாரமும் தனியேநின்று ஒருபொருளைச்சொல்லுதற்கண்ணும், தன்னைக்கருதித்தன்பெயர் கூறுமளவிலுமல்லாதவழி மொழிமுதற்கட் பின்வருமெழுத்தின்றொடர்பாற் றன்மாத்திரையிற்குறுகும்.

[என்னை:—
"மொழிமுத லிடைகடை யெனுமூன் றிடத்தும்
அழியா ஐகா ரங்குறு கும்மே" எனவும்;
"தற்சுட் டளபொழி யைம்மூ வழியும்
நையு மௌவு முதலற் றாகும்" எனவும்;
கூறுபவாகலின்]

வருமாறு:—
ஐப்பசி, மைப்புறம், ஐக்கட்டி;
[illegible]டையன், கொடையன், உடைவாள், கடைவாள்;
குவளை, தவளை, இனை, பனை;
பௌவம், மௌவல், கௌவை.

[இவற்றுள், ஐகாரக்குறுக்கம் மொழிமுதற்கணொன்றரைமாத்திரையாயும், ஏனையவிடங்களி லொருமாத்திரையாயும்; ஔகாரக் குறுக்கம் மொழிமுதற்கணொன்றரைமாத்திரையாயும் குறுகுமெனக் கொள்க. அவ்வாறுகொள்ளாக்கால், "வைகலும்வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும்வைகலை வைகுமென்றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல்வைகுதல், வைகலை வைத்துணரா தார்" எ-ம், "கைவேல்களிற்றொடுபோக்கி வருபவன், மெய்வேல்பறியா நகும்" எ-ம், "ஔவியநெஞ்சத்தானாக்கமுஞ் செவ்வியான், கேடு நினைக்கப்படும்" எ-ம், வரும் இலக்கியங்கட் கிலக்கணமின்றாய் முடியுமென்க.]

16. மகரக்குறுக்கமாமாறு:- மகரமொரோவிடத்து அரைமாத்திரையிற் குறுகிக் கால்மாத்திரையாம்.

அங்ஙனங்குறுகுமிடத்துவகரமொடுகூட்டத்தின்கண் குறுகுமெனவறிக.

[என்னை:—
"வகார மிசையு மகாரங் குறுகும்" எனவும்
"வகரமொ டியையின் மகரமுங் குறுகும்" எனவும்
"ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்" எனவும்
கூறுபவாகலின்.]

வரலாறு:—வரும்வளை, வாழும் வணிகன், சூழும்வாவிகள் எனக்கொள்க. பிறவழியானும் வந்தவழிக்கண்டுகொள்க.

17. இனி, ஓரெழுத்தே யொருபொருளைப்பயந்து நிற்பன சிறப்பெழுத் தென்றும், இயைந்துபொருள்பயப்பன உறுப்பெழுத்தென்றும் வழங்கப்படும்.

18. எழுத்தெல்லாம் உயிரும், மெய்யும், உயிர்மெய்யுமென வழங்குவனவற்றை இவ்வாறுவிகற்பித்துக்கூறியது எழுத்துக்களது பெயர்வேறுபாடெல்லாமுணர்த்துவதற்கும், இப்பெயர்களையே பெயராக்கி யேலே செய்யுள்களை யெடுத்தாளுவதற்குமாமென்க.

19. சீருந்தளையுங் கெடவந்தவிடத்துக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், உயிரளபெடையும் அலகுகாரியம் பெறாமல், குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஒற்றியல்பினவாயும், உயிரளபெடைகள் நெட்டெழுத்தியல்பினவாயும் நிற்கும். ஒன்றரைமாத்திரையென்றோதப்பட்ட ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தேபோலக் கொண்டு அலகிடப்பெறும். ஒற்றுக்கள் அளபெழுந்த விடத்தே அலகு பெறுவனவன்றி அளபெழாதவிடத்து அவை அலகுபெறா.

[தொடர்ச்சி.]

தர்மோபதேசம்.*

பிள்ளைபேய் பித்தன் பிணியாளன் பொன்றேக்கி
வெள்ளை களிவிடமன் வேட்கையான்—றெள்ளிப்
புரைக்கப் பொருளுணர்வா னென்றிவரே நூலை
யுரைத்தற் குரிமையிலா தார்.

(இ - ள்.) பாலனும், பேய்கொண்டானும், பித்தனும், வியாதியாளனும், தனமோசியும், அடக்கமில்லாதானும், களிப்பானும், கடுவிஷமனும், தன்னுரைமேற்படுப்பானும், தோஷக்கிராகியும் என்றிச் சொல்லப் பட்டாரியாவருக்கும் தர்மமுரைக்கலாகாது; எ - று.

அட்டை கிளிவெரு காடெருமை வல்லூறு
குட்டற் குடங்கல் லொடுமண்ணு—மட்டக்கண்
ணெய்வடிநார் போல்வாரை நீத்தன்ன மேபோலும்
மெய்யுணர்வார் கேட்டல் விதி.

(இ - ள்.) அட்டை ஊனமுள்ளவிடத்தைப் பற்றினாற்போல தோஷக்கிராகியாயிருப்பானும்; கிளி சொல்விற்றே சொல்லும தல்லது தன்னாலொன்றுந்தேர்ந்துரைக்கமாட்டாது, அதுபோல் பரிக்ஷையில்லாதானும்; வெருகு அடங்கியொடுங்கிப்பார்த்திருந்து வந்துற்ற சிவனைப்பிடித்துப் பக்ஷிக்குமது போலப் பார்த்தார்க்குச் சாதுபோன்றிருந்து ஹிம்சாதிகளைநிகழ்த்துவானும்; ஆடு எல்லாக்குளகுந் தின்னுமதுபோல் எல்லாத் தெய்வமு மெல்லாத்தர்மமும் ஒக்குமென்றிருந்து நன்று தீதென்று பரீக்ஷையறியாதானும்; எருமை தெளிந்த நீர்குடித்துச் சாணகமு நீருமிட்டு அந்நீரைக்கலக்கிப் போகுமது போல தர்ம்மசிரவணஞ்செய்யப்புக்கு ஏதேனுங் குற்றம்நாடிச்சொல்வானும்; வல்லூறு பிடித்ததுவிடாமற்பற்றினாற்போல சர்வசிவதயாபரமே தர்ம்மமென்பதோர்பரிக்ஷையின்றிப் பற்றித்து விடேனென்றிருக்கும் அஜ்ஞானியும்; பின்னபாஜனத்தட்டின்ஜலம்போல எத்தனைநாள் தர்மத்தைக் கேட்டுங் கொள்ளமாட்டாத சூனிய ஹ்ருதயனும்; கல் எத்தனைநாள் நீரிற்கிடப்பினும் மெத்தென்றாதவாறுபோல எத்தனைநாள் தர்மங் கேட்பினும் உட்புகாத மனமுடையானும்; மண் நீர்கண்டபோது நெகிழ்ந்து அல்லாத பொழுது நயங்கெட்டு வலிக்குமதுவேபோல தர்ம்மசிரவணங் கேட்டபொழுது நெகிழ்ந்து அல்லாதபொழுது வலித்திருக்கும் மனமுடையானும், நெய்வடிநார் சாரமான வஸ்துவைவிட்டு துஸ்ஸாரத்தை சங்கிரகித்தாற்போல தர்ம்மம்விட்டு தோஷம் பிடித்திருக்கும் மனமுடையானும், ஆகிய இச்சொல்லப்பட்டவர்க்கன்றி, க்ஷீரோதகத்தில் நீரொழியப் பால்நுகரும் ஹம்ஸம் போல தோஷத்தைவிட்டு குணக்கிராகியாயிருப்பாரே தர்ம்மசிரவணஞ்செய்தற்கு உரியர், எ - று.]

---

* இவ்விஷயம் நமது நண்பராகிய ஒரு ஜைனரால் எழுதி யனுப்பப்பட்டது. இதிலுள்ள பலவிஷயங்களும் பொதுவாய்ப் பலர்க்கும் உபயோகப்படுமாகையால் இப்பத்திரிகையில் இதற்கு இடங்கொடுக்கப்பட்டது.—பத்திராதிபர்.

நாவலந் தீவிற் பூமலர் பொழில்சூழ் குலபர்வதங்களால் கூறிடப்பட்ட வெழுநாட்டினுள்,—

“பரவையினீர்ப்புனன்முகந்துமிசையெழுந்துபயோதரங்க
ளிரவிமிகுவிபுலகிரிமிசையின்மிகப்புயல்பொழியக்
காரகிலின்குறடுக்கிக்கருமாவினெயிறுகொடு
வேரிமிகுமதுமலர்கள்மேன்மேலாக்கொண்டெழுந்து
சந்தனத்தைமுறித்தெறிந்துதமனியத்தின்றழைவாரிச்
சிந்தூரமிலவங்கந்திமிசுதெறுங்கர்ப்பூரம்
கறையடியின்கொடியினொடுகணமயிற்பீலியைவாரித்
துறைதுறையின்புகத்தள்ளிச்சுரும்பெழுந்தின்னிசையார்ப்ப
அங்குநின்றுபோந்திழிந்தரும்பாலைபுறக்கிட்டுக்
கொங்குலவுமலர்முல்லைக்கோவலர்களிடங்குறுகிக்
கொன்றைமலர்பொன்காட்டக்கோபமெழில்வாய்காட்ட
மன்றலருங்காந்தண்மலர்கைகாட்டவளம்பெருகி
* * * *
மாதவியின்பொழிலுழைந்துமலர்தொகுத்துச்சினைமுறித்துத்
தாதவிழுஞ்சண்பகத்தைத்தடித்தீர்த்துத்தலைக்கொண்டு
கற்பகத்தின்வனஞ்சாடிக்கழுநீரின்மலர்கவர்ந்து
பூகத்தின்பொழிலுழைந்துபுன்னைக்கோடிறுத்து
நாகத்தின்மலர்பறித்துநாளிகேரத்திடைபுக்கு
வரம்பேறித்தாங்கொண்டுமதிப்பரியவயன்மண்டிக்
கரும்போடுபெருஞ்செந்நெற்குலைவயுந்திக்கமலத்திற்
புள்ளெழுந்துபுறம்பாயப்புனல்பாயக்கருமேதி
மள்ளர்களுடன்பாயவயலின்மிசைக்கயல்பாயச்
சங்கீன்றவெண்முத்துஞ்சலஞ்சலமும்பசும்பொன்னும்
அங்கங்கேயுழவர்களுக்களித்தினி துதிரைக்கரத்தால்
எங்கெங்குஞ்சென்றெய்தியிருமருங்கும்பொருதலைத்து
மங்கையர்கள்மனம்போன்றுவருகலுழிநுரைசுமந்து
அறவோர்தம்பொருள்போன்றங்க்கவிடத்திற்பொருள்பெருக்கி
நிறைவாகத்தெளித்தெங்குநிரம்பித்தன்வளம்பெருக்கி
யன்னதுசூழ்பெருவளநாட்டளப்பரியகாட்சியது”

ஆகிய பரதக்ஷேத்திரத்துள்

“குன்றனையமாடமிடைக்கோபுரமுஞ்செய்குன்றும்
மன்றலருஞ்சோலைகளும்வாவிகளு - மென்றும்
விளைவறாச்செய்கைவிருப்பறாக்காட்சி
யளவறாத்தொன்னகரமாங்கு.
பண்ணொலியும்யாழொலியும்பல்லியங்களார்ப்பொலியும்
எண்ணொலியும்வேதியர்தம்மின்னொலியும் - மண்ணுலகின்

அம்பரஞ்சேர்நீடுகொடியாடுமணிநகர
மும்பருஞ்சேர்வானுலகேயொப்பு."

என்று மின்னதொல் சிறப்பினையுடைய அயோத்திமாநகரத்தில்

"அன்பினான்மன்னுயிர்களோம்பியறநெறியால்
இன்பினல்லையமினிதேந்த - முன்புகழ்
நீதியால்வேந்தர்திறைகொணர்ந்துநின்றிறைஞ்ச
ஆதியானண்டானரசு"

என்று தர்மமார்க்கம் தலைசிறப்பத் திறைகொணர்ந்து தேர்வேந்தர் முறை முறை யடிவணங்க ஷட்கண்டாதிபதியாய்ச் *சகலசக்ரவர்த்தியாயிருந்த சகரனென்போன் தொண்ணூற்றாறாயிரம் தேவிமாரோடும், முன்னூற்றறு பதின்மர் மடையரோடும், மூன்றரைக்கோடி பந்துவர்க்கத்தோடும், மெய்காப் பாளர் பதினாயிரம் கணபந்த தேவரோடும் கூடியிருந்து, வண்டோகை, மா ஞோகை, பிங்கலிகை, பத்மை, சங்கை, வேசங்கை, காளை, மஹாகாளை, சவ்வாதமென்று பெயர்பெற்ற †நவநிதிகளும் தனது கட்டளைப்படியே

---

* ஒருகோடி கிராமம் ஆள்வான் மகுடவர்த்தனனும்; மகுடவர்த்த னர் ஐந்நூற்றுவரை வணக்கியாள்வான் அதிராஜனும்; மகுடவர்த்தனர் ஆயிரவரைவணக்கியாள்வான் மகாராஜனும்; மகுடவர்த்தனர் இரண்டா யிரவரை வணக்கியாள்வான் அர்த்தமண்டலிகனும்; மகுடவர்த்தனர் நாலா யிரவரை வணக்கியாள்வான் மண்டலிகனும்; மகுடவர்த்தனர் பதினாறா யிரவரை வணக்கியாள்வான் அர்த்தசக்ரவர்த்தி யென்றும் வாசுதேவனென் றுமாம்; மகுடவர்த்தனர் முப்பத்திராயிரவரை வணக்கியாள்வான் சகலசக்ர வர்த்தியாகும், என்பர்.

† "வண்டோகை மாஞோகை பிங்கலிகை யேபதுமை, விண்டோயுஞ் சங்கையே வேசங்கை—தண்டாச்சீர்க், காளையே மாகாளை சவ்வாதமே பெயர் கள், ஆகுமாமென்றுரைப்பாராய்ந்து." (1) "சாலிமுதலாகிய தானியமனை த்தும், ஏலமின்கோ டெழில்திகழ்மருந்து, தண்டுதலின்றி வண்டோகை கொ டுக்கும்; (2) சத்திதோமரந் தண்டெழுநாஞ்சில், வித்தகவாள்வளை விற்கணை பிறவு, மிக்கவாயுதம் விரலங்கரக்கை, மக்களையினையன மாஞோகை கொடுக் கும்; (3) பெரியோர் சிறியோர் பேதையர் தமக்கும், சரிபரிதேர்க்குங் கயி னுடைமணிப்பூண், செப்புதலின்றி பிங்கலிகை கொடுக்கும்; (4) துகிலொடு நூலுங் கவரியுஞ்சவரியும், தகவுநிணியுந் தான் பதுமையே; (5) தண்ணிய காற்றுஞ் சந்தனக்குழம்பும், புண்ணிய நறுநீர்த்திவலையும் நிழலும், என்றிவை முதலாச் சங்கை பயக்கும்; (6) தாளமுஞ் சங்குஞ் சகண்டையுந் திமிலையும், காளமுங்குழலுங் கரடியுந்துடியும், வீணையும் யாழும் விளங்குசுளிகையும், இனையனபிறவும் வேசங்கை கொடுக்கும்; (7) எழுத்துஞ்சொல்லும் பரமுஞ் சுலோகமும், விழுத்தகுநூலும் புராணமும் விருத்தமும், காளை யென்னுங் கணநிதி கொடுக்கும்; (8) உழவுந் தொழிலும் வரைவும் வாணிகமும், செழு மிசை விச்சையும் சிலமும் பிறவும், வழுவுதலின்றி மாகாளை கொடுக்கும்;

காத்து நிற்க, எண்பத்துநான்குலக்ஷம் பத்திரஹஸ்தியும், அத்துணை ரதங்களும் பதினெட்டுக்கோடி ஜாத்யசுவங்களும், எண்பத்துநான்குகோடி காலாள்களும் முதலிய அநேக விபவங்களையுடைய சகரசக்ரவர்த்தி இஷ்டவிஷய காமபோகங்களையநுபவித்துச்செல்லாநின்றகாலத்து அறுபதினா யிரம் புத்திரருற்பவித்து யௌவனமும் வித்தையும் ஸ்ரீயும் பெருகிச்செல்லா நிற்கத் தாதையாகிய சகரனைக்கண்டு மக்கள் அனைவரும் எங்களுக்கு ஒருபணி ஏவவேண்டுமென்றுரைப்ப, நமக்கரியவும் பெரியவுமாயிருப்பன லோகத்திலில் லை, நீங்களுங்கள்விபவங்களை யநுபவித்து விளையாடியிருப்பதே பணியென்று சக்ரவர்த்தி யுரைப்பவும், பின்னையும் திவசந்தோறும் தங்களிஷ்டத்தைத் தந் தைக்குறிவிப்பக்கேட்டு, பரதேசுவரனென்னும் சகலசக்ரவர்த்தி கயிலாசமெ ன்னும் பர்வதத்தின்மேல் பஞ்சவர்ண ரத்தினங்களால் சயித்தியாலயங்களைச் செய்து இருபத்துநால்வர் தீர்த்தகரர் தத்தத்வர்ணத்தார் ரத்தினமயமாகிய பிர திமைகளைச் செய்வித்தான். அவன்குமாரன் அர்க்ககீர்த்தியென்பான் அம் மலையை அஷ்டாபதமாகச் செய்வித்தான். அப்பிரதிமைகளுக்கு ரக்ஷை யாக பூசரர்க்கு அகோசரமாக அதனைச்சூழ அகழ்செய்து கங்கையினீரைத் தந்துசெய்மினென்றலும், மகாபிரசாதமென்று நமஸ்காரஞ்செய்து சக்ர வர்த்தி பணியென்று தண்டரத்தினத்தையிடுதலும் அப்பர்வதத்தை பிரத க்ஷிணமாக அகழ்செய்து வந்ததனைக்கண்டு அறுபதினாயிரவர்க்கு மூத்த ஜஹு தேவியுடைய புத்திரன் பகிரதியை நீ தண்டரத்தினத்தைக் கைக்கொண்டு போய் கங்கையின்நீரைத் தருவாயாகவென்று விட்டிருக்கு மெல்லைக்கண், பலபத்திரனென்பான் சக்ரவர்த்தியினுடைய மடையன் ஆயுஷ்யாவஸான மானகாலத்துச் சக்ரவர்த்திசென்று பஞ்சநமஸ்காரஞ் சொல்லக் கைக் கொண்டு சரீரம்விட்டு ஸவுதர்ம கல்பத்து சுப்பிரபனென்னுந் தேவனுமாய்த் தோன்றி தன்னுடைய முற்பவத்தை அவதிஞ்ஞானத்தாலறிந்து என்னுடைய ஸ்வாமி என்னை ரக்ஷித்தவனுக்கு பிரத்தியுபகாரம் பண்ணுவேனென்று சிந் தித்து பிரஸந்ந ரூபத்தினால்வந்து இவனுக்கு வைராக்ய ஹேதுவாகிய கார ணங்களைப் பலவுங்காட்டவும் சொல்லவும் வைராக்யம் வாராமைகண்டு எப் பிரகாரத்தினாலேவினை வைராக்யபரனாச்சுவேனென்று இருந்தபின்னை, இப் பொழுது அறுபதினாயிரவர் மக்களும் இங்கேவந்து நின்றமையறிந்து இது காலமென்று நினைத்து நாகேந்திரனாய்வந்து சகரபுத்திரரைக்கண்டு தரணி யானுஞ் சக்ரவர்த்திகளுக்கு பூமியல்லது கிழாட்சியுண்டோ? என்னுடைய லோகத்தளவும் உம்முடைய தண்டரத்தினத்தை ஏவலல்லீரோ? எம்மில் திகரில்லையென்று கர்வித்தீரோ வென்று பல பருஷவாக்கியங்கள்சொல்ல, ஷட்கண்டாதிபதியாய் ஸமஸ்த லோகங்களைச்சாதித்து ராஜ்யுஞ்செய்கின்ற சக்ரவர்த்திக்கு பூமி இத்துணையென்று வரையறுத்துரைத்த உன்னுடைய

---

(9) மரகதம் வச்சிரம் வயிடூரியமும், பரவிய நீலமும் பதுமராகமும், கோமே தகமும் கொழும் புட்பராகமும், தாமமு முத்தும் தடமாணிக்கமும், இந்திர நீலமோ டெழுவகை லோகமும், தவ்வுதலின்றிச் சவ்வாத மீயும்."

ஆயுஷ்யம் இற்றையளவே யாகல்வேண்டுமென, நாகராஜன் மகாரோஷஸ்தனாய் இவர்கள் ஆங்காரத்தைக்கெடுக்கவேண்டுமென்று தன் வித்தையினாலே அறுபதினாயிரவரையும் மரிக்கும்வண்ணம் நோக்கினான்; நோக்குதலும் அறுபதினாயிரவரும் ஒருங்கே மரித்துப்பார்சேர்ந்தார். அதுகண்டு சுப்பிரபனென்னுந்தேவன் சக்ரவர்த்திக்குப் பிரத்யுபகாரம் பண்ணவேண்டி ஒரு விருத்தப்ராஹ்மண வேஷங்கொண்டு சக்ரவர்த்திகோயில்வாயிலிலேநின்று அவிதாவிட, ராஜாவும் அதுகேட்டு அங்கவனையழைத்து நீ அவிதாவிடுகின்றதென்னென்றுவினவ, யான் வினவிற்று ஆராய்ந்து கொடுக்கவல்லையாயின் சொல்வனென்று பிராமணன் சொல்லக்கேட்டு, சக்ரவர்த்தி நான் ஆராயாதபக்ஷத்தில் மற்றுனக்கு ஆராய்வாருண்டோ? யானே ஆராய்ந்து கொடுக்கின்றேன் சொல்லென்ன, எனக்குப்புத்திரரில்லாமையி லனேகம்பிரயத்தினத்தினின்றும் தெய்வங்களைப் பிரார்த்தித்து அரிதாகப்பெற்ற புத்திரனை மிருத்தியுராஜன் கொண்டுபோனான். அவனைப் பெயர்த்துந் தரல்வேண்டுமெனக்கென்றலும், அதுகேட்டு முன்னந் தானவனுக்கு வியவஸ்தைபண்ணின க்ரமத்தையும் மிருத்தியுகொண்டஜீவனை மீட்பதினருமையையுநினைத்து சித்ரதரனென்னும் பிரதானமந்திரியைக் கூவிக்கொண்டு தானுமவனும் பிராமணன் வசனத்தை விசாரித்து பிரதியுத்தரங்கண்டு பிராமணனைநோக்கி ஓமம்பண்ணினாலல்லது உன்மகனை எழவேட்கவாராது; ஓமத்துக்கரியவும் பெரியவுமாகிய வஸ்துக்களெல்லாம் எம்பக்கலிலேயுள, இனி யெளியவாயிருப்பன இரண்டுவஸ்துக்களுள; அவையுன்னாலன்றித் தரவாரா; அவையாவையென்பாயாகில், தம்வம்சத்திலே யாவரும் எக்காலத்துஞ் சாவாதாருடைய மனையிற் புல்லும் நெருப்புங் கொண்டுவரவல்லையாயில் உன்மகனை ஓமத்திலே எழவெட்போமென்றுரைப்ப, வேதியனும்போய் நகரமுற்றுந்திரிந்து எங்கும் அவை பெற்றிலேனென்று சொல்ல, அரசன் சொல்லுவான்: முன்பு பலசக்ரவர்த்திகள் இப்பூமியாண்டார் அவர்தாம் மிருத்தியுகொண்ட ஜீவனைப் போத்தாரென்று கேட்டறிவதுண்டோ? பிறந்தார் யாவரும் இறவாதாரின்மையும், போன ஜீவனும் மீட்கவொண்ணாமையுமறிந்து, அறியாதழுவதென்னோ? கூற்றுக் கழுது கண் குருடாயிற்று என்று தேற்றமுடையார் சொற்கேளாதே திகைப்பதென்னென்ன, அதுகேட்டு வேதியன் துக்கமும் பிணியுந் தம்மை வந்துறுதபொழுது எல்லாருஞ் சகிப்பார்கள், உற்றபொழுது ஒருவரும் சகிப்பாரில்லை என்றலும், ராஜராஜன்,—

அறிவெனப் படுவது துன்பந் துடைத்தல்
செறிவெனப் படுவது மும்மையுஞ் செறிதல்
ஆண்மை யெனப்படுவ தைம்புலன் வென்றல்
கேண்மை யெனப்படுவது கேட்டிடத் துதவல்
அருமை யெனப்படுவ தறநெறி வழுவாமை
பெருமை யெனப்படுவது பிறனில் விழையாமை
அறமெனப் படுவ தாருயி ரோம்பல்
உறவெனப் படுவ துற்றுழி நிற்றல்

வாய்மையெனப் படுவது வருந்தா துரைத்தல்
தூய்மையெனப் படுவ துள்ளந் தூய்மை
இன்பமெனப் படுவ தீறி லின்பம்
அன்பெனப் படுவ தார்வ முடைமை
தவமெனப் படுவது தான்பிறர்ச் செறாமை
விரதமெனப் படுவது கொல்லா விரதம்

என்றுகூறிப், பின்னும்

ஓடு நீரு மாடுந் துகளுங்
காற்றின்முன் விளக்குங் கடும்பேய்த் தேரும்
இந்திர தனுவுங் கொந்தழற் சிகையும்
இந்திர ஜாலமும் எறிகடற் றிரையும்
பரிதரு பவனமும் பனிநீர் மொக்குளும்
மருவிய வுருவமே போன்முகில் நிரையும்
ஆற்றங் கரைமரமு மாகிய மின்னொளித்
தோற்ற மெவ்வகை யவ்வகை நிலையா
விரைந்து கெடெய்தும் நிரந்தர மாகி
நிலையி லாமையே நிலைதனக் கான
மக்க ளின்ப மனைவாழ் வதன்மேல்
மிக்க வசூரியும் சோனை மாரியும்
குலைப்பு முலைப்பிலா வலிப்பெனு நோயும்
தொண்டதோர் நாட்டி லுண்டியில் லாதோர்
கருவறு கடுமைச் சிறுவிலைக் காலம்
பெருவிலைக் காலம் பெருவிலை யாகிய
பேற்றி யேற்றலமுங் காட்டுறு தீயும்
கலந்து வந்தாற்போற் கடுந்தொழிற் காலன்
மாற்ற மொன்றின்றி வந்துயி ருண்ணும்,—என்றும்,
கூறிற் றென்னான் குறைவில் வடிவுடைத்
தேசுடை யிளமை செறிந்தன னென்னான்
பித்தன் பேயன் பிறர்க்கிடர் செய்யும்
புத்தியி லாளன் போகிடு கென்னான்
பலநோ யாளன் பாவி யென்னான்
அழுகிய தொழுநோ யாதுல னென்னான்
புழுநெளி புண்பயில் யாக்கைய னென்னான்
துன்னருங் குணமிலி தூர்த்த னென்னான்
பட்டங் கட்டினன் பலர்க்குப காரி
சிட்டன் சிதைவிலாத் தேசிக னென்னான்
உருவினொ டொண்கலை யுளபொருள் பலவும்
மருவிய பொருளறி மாவல னென்னான்
மெய்ம்மை யறத்தின் மேவின னென்னான்

இம்மையு மறுமையு மிகழா னென்றன்
குலந்திகழ் நலந்தவங் கொள்கையிற் குறையா
நலந்திகழ் நன்கறி நன்மக னென்றான்
நன்மை தின்மை நடுவுநிலை யின்றிக்
கன்றிக் காலன் கதறி வருவான்

என்று சொல்ல, "துன்பமுற்றபொழுது க்ஷமிப்பதென்றுரைத்த தர்மோபதேசம் எனக்கேயோ உனக்குமுண்டோ" என்று பிராமணன் கேட்ப, அரசன் 'எனக்கு முன்னேயுண்' டென்று சொல்ல, அப்பெற்றியாகில் உன்மக்களாறு பதினாயிரவரு மொருங்கே அவிந்தாரென்றுரைப்ப, அதுகேட்டு ஸம்ஸாரஸ்திதி அனித்தியமன்றோ அதனுக்கு ஐயுறவுண்டோவென்று பிராமணனுக்கு அரசன் ஸம்ஸாரத்தினனித்தியம் சொல்லுகின்ற எல்லைக்கண், கெங்கைநீர் கொணரப் போயின பகீரதி மற்றது கொணர்ந்து சுற்றகழ்நிறைத்துத் தம்பிமாரனைவரும் மரித்தமைகண்டு துக்காக்கினியுற்றதேகனாய் பெரும்பொழுது பிரலாபித்து அரிதாகத் தன்னைத்தானேதேற்றி புகையுற்றகண்ணேபோலவும் புன்பனியுற்ற தாமரைப்பூப் போலவும் ஒளியற்ற முகத்தினனாகி அயோத்தியாநகரநண்ணி பலபுஷ்பபதபரிதமாகியபைம்பொழிலை வாயுசகிதமாக அக்கினி சுட்டாற்போல வெந்து நொந்து அரசன் கோயில் புக்கு, ஓலக்கமாக இருந்து குமாரரனைவரும் மரித்தமைசொல்ல, தர்ம்ம நிர்ம்மல சித்தனாகி அரசன் அநித்தியத்துவம் பாவித்திருப்பக்கண்டு முன்னம் வந்த பிராமணன் தன் தேவருபங்காட்டிநிற்ப, அரசன் விஸ்மயப்பட்டு நீயார், உன்னையுள்ளவாறுரையென்னத் தேவன் சொல்லுவான்: பண்டென்னுடைய மடையன் பலபத்திரனென்பேன்; நீ என்னுடைய ஆயுஷ்யாவஸாநகாலத்துப் பஞ்சநமஸ்கார முரைப்ப சமாதிபெற்று சரீரம்விட்டு தேவலோகத்து சுப்பிரபனென்னும் தேவனாய்த் தோன்றினேன்; நீ செய்த உபகாரத்துக்கு பிரதியுபகாரம் செய்யுமுபாயத்தால் இந்த அவசரத்துன்னுடைய துக்கநீக்கவந்தேன்; உன்னுடைய அறிவும் க்ஷமையும் தீரமுங் கண்டேனென்று தேவன் அதிருசியமாயினான்; இப்பால் அரசன் மக்களாறுபதினாயிரவரும் ஒருங்குடனவிந்த கர்மத்தின் பயனும் மடையனென்கைப்பெற்ற தர்மத்தின் பயனும் பிரத்தியக்ஷமாகக் கண்டும் மெய்மறந்து இருப்பது காரியமன்றென்று ஜினேந்திரனுக்கு மஹாபிஷேக முதலாகிய பூசையும் தானமுஞ்செய்து ஒருபொழுதாகிலும் மெய்மறந்திருத்தல் மேதகவன்றென்று சிந்தித்து, பாஹியாப்பியந்தர பரிக்கிரகங்களை பாம்புரி தோலினும் நஞ்சினுந்துறந்து தபாங்களையோடுகூடி அஷ்டவித கர்ம்மங்களையு மொழித்து முடிவில்லாத முத்தியங்களைமேல் மோகிதனாகி ஜராமரணங்களையின்றி அனந்தசுகத்தை யெய்தினான். முன்னம் தர்ம்மோபதேசஞ்செய்த தேவன் அரசன்மக்களாறுபதினாயிரவரையும் தன்மாயத்தைவிட்டெழுப்பி உங்கள் பிதாவும் தாய்மாரும் பந்துவர்க்கமும் எல்லாம். பகீரதிக்கு ராஜபட்டங்கொடுத்து ஸம்ஸாரமனித்தியமென்று சிந்தித்து தீக்ஷை கைக்கொண்டார், நீங்களிருந்ததென்னென்று சொல்லக்கேட்டு, அவர்களாறுபதினாயிரவரும் உடனே தீக்ஷித்து தபச்சரணம் தரித்து கர்மக்ஷயம் செய்தார்கள்.

[இதில் அங்கங்கே சில பிழைகள் காணப்படினும் பிரதியந்தர மின்றித்திருத்தத்துணியாது நமது நண்பரெழுதியவாறே விடுத்தனம்.—பத்திராதிபர்.]

கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் ௫.] ௧௮௯௬ டிசம்பர்மீ [சஞ்சிகை ௧௫.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதி யாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ ரருளினா லெளியவர்ச் சையுமாகி யுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

விரதாதிகள்.

ஸ்கந்தஷஷ்டி.

முன்னொரு காலத்தில் . சிவசுப்பிரமணியர் கயிலாயத்துக்குப்போய் அதன் சாரலில் தம்முடைய வாகனமும் கொடியுமாகிய மயிலையும் சேவலையும் விடுத்து உள்ளேசென்று, பரமசிவனையும் பார்வதிதேவியையும் வணங்கித் துதித்துநிற்க, அதுகண்ட பரமசிவன் சந்தோஷப்பெருக்கால் திருநடஞ்செய்தருளினர். அப்போது மகாவிஷ்ணுவும் பிரமதேவனும்வந்து தங்கள் வாகனங்களாகிய கருடனையும் அன்னத்தையும் அம்மலையின் ஒருபக்கத்தில் விட்டு உள்ளே போயினர். அச்சமயத்தில் அங்கே சாபத்தால் பூதகணத்தலைவர்களாயிருந்த சூரன், பதுமன், சிங்கன், தாருகன், ஆகியநால்வரும் மயிலுக்கும் சேவலுக்கும் அருகிற்சென்று அவற்றைநோக்கி முருகக்கடவுளுக்கு வாகனமும் வெற்றிக்கொடியுமாகிய வுங்களுடைய பராக்கிரமத்தை யெடுத்துச் சொல்ல வல்லவர் யார், அப்படியிருந்தும் கருடனும் அன்னமும் தங்களுக்கு விஞ்சியவல்லவர்கள் இல்லையென்று உங்களை யவமதித்து உங்களுடன் போர் செய்யச்சித்தமாயிருத்தலால் நாங்கள் உங்களுக்குச் சகாயமா வருகிறோமென்று கலகஞ்செய்தார்கள். அதைக்கேட்ட மயிலும் சேவலும் அவர்களைச் சேர்த்துக்கொண்டு கோபத்துடன் சீறிக் கருடனையும் அன்னத்தையும் விஷ்ணுலோகம் பிரமலோகம்வரையில் அடித்துத் துரத்தித் திரும்பிக் கைலைமலைச்

சாரலில்வந்துசேர்ந்தன. தேவர்களிதைச் சகிக்கமாட்டாது கயிலாயத்துக்கோடிவந்து திருநடன தரிசனஞ்செய்து வெளியேவந்த சுப்பிரமணியரோடு முறையிட்டார்கள்; அவரதற்கிரங்கி அந்தப்பூதகணத்தோர் நால்வரையுமழைப்பித்து நீங்கள் இக்குற்றத்திற்காக உலகத்தில் அசுரகுலத்திற்பிறந்து அங்கும் தேவர்களுக்குத் துன்பஞ்செய்வீர்கள், அக்காரணத்தால் நம்முடைய வேலாயுதத்தாலிறந்து கதியடையக் கடைவீர்களென்று சாபித்தருளினர். அப்போது சூரனும் பதுனும் அவரை அடிவணங்கித் துதித்து நாங்கள் பிறக்குங் குலத்தில் செய்யுந்தவத்தால் தங்கள் வேலாயுதத்தினாலிறக்கும்போது நாங்கள் மயிலாகித் திருவடியைத் தாங்கவும் சேவலாகிக் கொடியாயிருக்கவும் கிருபைசெய்தருளவேண்டுமென்று வேண்டி வரம்பெற்றுக்கொண்டு இருவரும் ஒருருவமாய் மாயையின்வயிற்றில் சூரபன்மனென்றொருவனும், சிங்கமுகனென்றொருவனும், தாருகனென்றொருவனும் இவ்வுலகில் அசுரர்களாய்ப் பிறந்தார்கள். அவர்கள் பின்பு வீரயாகம் முதலிய தவங்களைச்செய்து ஈசுவரனிடத்தில் பிரபலவரங்களைப் பெற்றுக்கொண்டு அதிக கர்வத்தினால் தேவர்களுக்குமிக்கதுன்பத்தைச்செய்துகொண்டு ஆயிரத்தெட்டண்டங்களையும் ஆண்டிருந்தார்கள். அவ்வருத் தங்களைச் சகிக்கமுடியாதவர்களாய்த் தேவர்கள் பரமசிவனிடத்து விண்ணப்பம்பண்ண அவர் அவர்கள் துன்பத்தை நீக்கும்பொருட்டுக் குமாரசுவாமியை யுற்பத்திசெய்யவெண்ணி ஆறுமுகங்களோடு கூடினவராய் பார்வதிதேவியாருடைய திருமுகத்தை நோக்கும்போது அப்பரமசிவன் தேகத்தினிடமாய்நின்று அனந்தகோடி சூரியப்பிரகாசம்பொருந்திய மஹாவீரியம் உண்டாய் நெற்றிக்கண்வழியாக ஐப்பசிமாசம் பூர்வபக்ஷத்துப்பிரதமைதிதியில் தோன்றி, துவிதியைதிதியில் பரமேசுவரி கர்ப்பஸ்தமாகவிருந்து, திரிதியைதிதியில் அக்கினிபகவானிடத்தில்கொடுக்க, அவன் வகித்து, சதுர்த்தி திதியில் கங்கையில் விட கங்கை சகியாமல் சரவணத்திற்சேர்க்க ஆறுகுழந்தைகளாகத் திருவவதாரமாய்ப், பஞ்சமிதிதியில் கிருத்திகாதேவிகளால் பால்கொடுக்கப்பட்டு, ஷஷ்டிதிதியில் பார்வதிதேவியார் பரமேசுவரருடன் எழுந்தருளிவந்து குழந்தைகளையெடுக்க ஒரே திருவுருவமாய் ஆறுமுகமும் பன்னிரண்டுகரமுமான திவ்வியஸ்வரூபத்தைத் தரித்துத் தேவர்களை யனுக்கிரகித்ததனால் இந்த ஆறுதினங்களும் குமாரசுவாமியினுடைய உற்பவ தினங்களாகவே குமாரதந்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

உபாசிக்கவேண்டிய இந்த ஆறுதினங்களிலும் அனேக மஹாரிஷிகளும் முசுகுந்தன் முதலிய சக்கிரவர்த்திகளும் இந்த விரதத்தையனுஷ்டித்து அடைந்தபலனையும் அதன்மகிமைகளையும் காந்தபுராணம் தேவகாண்டத்தில் விவரமாய்க் காணலாம்.

இந்தவிரதத்தை யனுஷ்டிப்பவர்க்கு சகலபாபங்களும் வியாதிகளும் ஒழியும், அஷ்டைசுவரியமும் சகலசம்பத்தும் உண்டாகும், எண்ணியகோரிக்கைகளெல்லாம் சித்தமாய் நிறைவேறும். இந்தக்காரணத்தால் வருடந்தோறும் ஐப்பசிமாத பூர்வபக்ஷ பிரதமைதொடங்கி ஷஷ்டிவரையில் கந்தஷஷ்டிவிரதத்தை யனுஷ்டிப்பவர்கள் அந்த ஆறுதினமும் இரண்டுகாலங்களி

லும் நித்தியானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, கும்பத்திலும் பிம்பத்திலும் யந்திரத்திலுமாவது கூடாமற்போனால் இவற்றிலொன்றிலாவது சுவாமியை யாவாஹித்துப் பூஜித்து ஜபமஸந்தர்ப்பணை முதலியவற்றை விதிப்படி நடத்தவேண்டும். இந்த விரதத்திற்கு உபவாசமாயிருக்கவேண்டும்; அல்லது ஹவிசு முதலியவைகளைச் சொற்பமாய்ப் புசிக்கவேண்டும். சுப்பிரமணியக்கடவுளைப்பூசித்துச் செய்யவேண்டிய ஸகலவிதங்களும் குமாரதந்திரத்தில் விவரமாய்ச் சொல்லும்.

புராணநாமவிவரணம்.

வாலி, சுக்கிரீவன்.—ஒருகாலத்தில் பிரமதேவன் யோகாப்பியாசஞ்செய்துகொண்டிருந்தபோது அவர்கண்ணிலிருந்து ஒரு நீர்த்துளிதுளித்து அஃதோர் வானரவடிவமாயிற்று. அந்தவானரத்துக்கு ருக்ஷரஜசு என்று பிரமதேவன் பெயரிட்டனர். பின்பு அந்தவானரமானது ஸகலதேசங்களிலும் வனங்களிலும் தன்னிச்சையாய்த் திரிந்துகொண்டு மேருமலையையடைந்து அங்கோர் தடாகத்தில் தன்பிரதிபிம்பங்காணப்பட அது தன்னையெதிர்க்கவந்த வேறொரு வானரமென்றுநினைத்து அதனோடு போர்செய்யும்படி அத்தடாகத்திற் குதித்தது. அதில் முன்பொருகாலவிசேஷத்தில் பார்வதிதேவி நீராடிக்கொண்டிருக்கையில் சிலகாமரூபிகளான அரக்கர்கள் பெண்வேடம் பூண்டுவந்து ஸ்நானஞ்செய்யவந்தவர்போல அத்தடாகத்திலிறங்கி விளையாட, அதைப்பார்வதிதேவியறிந்து இத்தடாகத்தில் இனி எவர்மூழ்கினாலும் பெண்களாகக்கடவர்; இவர்கட்கும் ஆண்மையின்றி யொழியக்கடவது என்று சபித்திருந்தாளாதலால், அங்ஙனங்குதித்த ஆண்குரங்கானது உடனே அழகியதோர் பெண்குரங்காயிற்று. அப்போது இந்திரசூரியர்களிருவரும் அவ்வழியாய்ச் செல்கின்றவர் அதன் ரூபலாவண்ணியாதிசயங்களைக்கண்டு இந்திரியத்திற்கு வசப்பட்டனர்.

அப்பொழுது இந்திரனுடைய ரேதஸ்ஸு அப்பெண்குரங்கின் வாலபிரதேசத்திலும் சூரியன் ரேதஸ்ஸு க்ரீவாப்பிரதேசத்திலும் விழுந்தது. அப்போது வாலபிரதேசத்தில்விழுந்த ரேதஸ்ஸினால் வாலியும் [வாலம்=வால்], க்ரீவாபிரதேசத்தில்விழுந்த ரேதஸ்ஸினால் ஸுக்ரீவனும் [க்ரீவம்=கழுத்து] பிறந்தனர். இவ்விருவரும் மிக்கபலசாலிகள். இவர்களில் வாலிக்கு இந்திரன் தன்கழுத்திலிருந்த ஹேமமாலிகையைக்கொடுத்து எந்தவீரன் உன்னையெதிர்த்தாலும் எதிர்த்தவனுடையபலத்தில் பாதி உனக்குவரும்; அதனால் நீ எல்லார்க்கும் அஜேயனாய் விளங்கக்கடவாய் என்று வரமளித்துச் சென்றனன். ஒருகாலவிசேஷத்தில் வாலி மயனுடையபிள்ளைகளும் மந்தோதரியின் சகோதரருமாகிய மாயாவி, துந்துபி யென்னும் இருவர்களில் துந்துபி யென்பவனோடு போர்புரிந்து அவனைக்கொன்று அவன்களேபரத்தை வாரியெறிந்தான். அப்போது அதிலிருந்து ரக்தபிந்துக்கள் மதங்கமஹரிஷி

தவஞ்செய்துகொண்டிருந்த ரிசியமூகபர்வதத்தில் விழுந்தது. அதற்கு அவர் கோபித்து அம்மலைமீது வாலிவந்தால் அவன்தலை ஆயிரஞ்சுக்கலாம்படி சபித்தனர். பின்பு தம்பியைக்கொன்ற வாலிமீது கோபங்கொண்டு அவனோடு போர்புரிய மாயாவி சென்றான்; செல்ல, வாலி அவனைத்துரத்திக்கொண்டு இருவரும் ஓர் மலைமுழையிற்சென்று சிலநாள்வரையில் வெளிப்படாதிருக்க, சுக்கிரீவன் தன் தமையனாகிய வாலி மாயாவியினாற் கொல்லப்பட்டானென்று நினைத்து அம்முழையின் வாயிலை அடைத்துவிட்டுவந்து அவனுடைய ராச்சியத்தைத் தான் ஆண்டுவந்தான். பின்பு வாலி வெளியில்வந்து சுக்கிரீவன் தன்னை வேண்டுமென்று மலைமுழையில் அடைத்துவிட்டு வந்தானென்று அவன்மீது வைரங்கொண்டு அவனைக்கொல்லத்துணிய, சுக்கிரீவன் அஞ்சியோடி அனுமார் முதலிய சில மந்திரிகளுடன் சாபத்தால் வாலிவரக்கூடாத இடமாகிய ரிசியமூகபர்வதத்தில் வெகுகாலமிருந்து, சீதையைத்தேடிக்கொண்டு ஸ்ரீராமன் அவ்விடம்வந்தபோது அவரால் வாலியைக் கொல்வித்தான். வாலிமகன் - அங்கதன்; மனைவி - தாரை. சுக்கிரீவன்மனைவி - ருமை.

அநுமான் (ஹநுமான்)—இவர் அதிபலசாலியும் அஸஹாயசூரருமான ஒரு வானரவீரர்; சுக்கிரீவனது மந்திரி; ஸ்ரீராமதூதன். வருணன்மகளாய், புஞ்ஜிகஸ்தலையென்னும் பெயருடையளான ஓர் அப்ஸரஸானவள் ஒருசாபவசத்தால் காமரூபிணியான வானரமாய்ப்பிறந்து அஞ்சனையென்னும்பெயரோடு கேஸரியென்னும் வானரனுக்குப் பாரியையாயிருப்பவள் ஒருநாள் மானுடமாதருருவமெடுத்து உலாவிநிற்கையில், வாயுபகவான் அவளைக்கண்டு காமுற, அவர் பிரசாதத்தால் பொன்னொத்தமேனியோடு அவ்வஞ்சனையின் வயிற்றிற் பிறந்தவர். இவர் பிறந்தபோது உதித்துக்கொண்டிருந்த சூரியனை ஓர் கனியெனக்கருதி அவனைப்பற்ற ஆகாசமார்க்கத்திற் கிளம்புகையில் இந்திரன் தன்வச்சிராயுதத்தினால் இவரது இடது ஹநுவிலடித்தனன். அங்ஙனம் இவர் இந்திரனாலடிக்கப்பட்டு மூர்ச்சித்துப்போக வாயுபகவான் பார்த்துக்கோபித்துத் தம்முடைய வியாப்தியை உபஸம்ஹரித்தார். அப்போது எவரும் வயிறுவீங்கிச் சுவாசம் விடமாட்டாமற் றவித்ததனால் வேள்விமுதலிய வைதிகமொன்றும் நடவாமற் றேவதைகட்கு மகிமை குறையலாயிற்று. அதனால் வானவர்யாவரும் நான்முகக் கடவுளைக்கிட்டிச் சகத்திற்குற்றதை விண்ணப்பஞ்செய்ய, அந்தச்சதுர்முகபகவான் அமரரோடுங்கூடி அநுமான்விழுந்த இடம்வந்து தந்தைமடியில் மந்தசுவாசத்தோடு கிடந்த அக்குரக்குக்குழவியைத் தமது கரத்தாற்றடவினார். அவர் ஹஸ்தபங்கயத்தாற் பரிசித்தமாத்திரத்தில் அவ்வநுமான் வேதனைதீர்ந்து கண்விழித்து முன்போலுல்லாசமாயிருந்தார். அப்போது சமீரணனு மெழுந்து பிரமதேவனுக்கு வந்தனைவழிபாடுகள் செய்துநிற்க, அந்தப்பிரமதேவர் பொன்னுலகத்தோரனைவரையுநோக்கி, ஓதேவர்களே! வாயுவினுகப்பிற்காகவும் இனியாகவேண்டிய பெரியகாரியங்களுக்காகவும் இவ்வானரசிசுவுக்கு வரங்கொடுங்கள் என்றனர். அதைக்கேட்டுப் பாகசாசனன் "என்வச்சிரத்தா

லடிபட்டு ஹநு [=கவுள்] முறிந்தபடியால் இவனுக்கு ஹநுமான் என்று பெயர்வழங்கக்கடவது; இந்த வச்சிரத்தால் மரணமில்லாதிருக்கக்கடவது" என்று வரங்கொடுத்து ஒருபொற்றாமரை மாலையுமளித்தனன்.—சூரியபகவான் "என் தேசில் இவனுக்கு நூற்றிலொருகலைதந்தேன்; அன்றியும், இவன் சாஸ்திரங்களைக் கற்கும்பருவமுற்றபோது இவனோடொத்தவன் யாருமில்லையென்னுமாறு சகலசாஸ்திர ஞானமுங்கற்பிப்பேன்" என்று அருளினன்.—வருணதேவன் "என்பாசத்தினாலுந் தண்ணீரினாலும் இவனுக்கிறுதிவாராதிருக்கக்கடவது" என்றனன்.—யமதருமராசன் "எனது காலதண்டத்தாற் சாவின்மையும் நோயின்மையும் சண்டையில் இளைப்பின்மையும் இவற்குத்தந்தேன்" என்றான்.—குபேரன் "என்கதாயுதத்தால் இவன் முடியாதிருக்கக்கடவன்" என்றான்.—சாம்பமூர்த்தியும் "என்னாலும் என்னாயுதங்களாலும் இப்பாலனுக்கோரூறுமில்லையாகுக" என்று அநுக்கிரகித்தனர்.—பிரமதேவனும் "இவன் எந்த அஸ்திரத்தினாலும் மரணமுறாதவனாய்த் தீர்க்காயுசு உள்ளவனும் பேரியல்பான மனமுள்ளவனுமாகக்கடவன்" எனவரமளித்தனர்.—விசுவகர்மா "யுத்தத்திற்காக யான் கற்பித்த படைக்கலங்களுள் ஒன்றாலும் இவன் ஊறுபடாதிருக்கக்கடவன்" எனக்கூறினன். இவ்வாறே பிறதேவதைகளுந் தந்தமக்கியைந்த வரப்பிரதானம் பண்ணினார்கள். பின்பு பிரமதேவன் வாயுபகவானைப்பார்த்து, "உன்மகன் மகாபலபராக்கிரமசாலியாயும் வித்துவானாயுங் காமரூபியாயுமாகி ஸ்ரீராமசந்திரனுக்குப் பிரியமாயும் இராவண நாசத்திற்கேதுவாயுமுள்ள மகாகாரியங்களைச்செய்து விசேஷ கீர்த்திவானாவான்" என்றுசொல்லித் தேவர்குழாத்தோடு தம்முலகிற் கெழுந்தருளினார். வாயுதேவனும் களிப்போடு குழந்தையையெடுத்துப்போய் அஞ்சனைகையிற் கொடுத்து நடந்தசரித்திரத்தையுஞ் சொல்லிப் பிரஜைகளுக்குப் பீடையில்லாமற் செய்துவிட்டான். இப்படி மகாவரங்களைப்பெற்றதனால் ஹநுமான் சற்றுச்செருக்குற்று மஹரிஷிகளுடைய ஆச்சிரமங்களிற் புகுந்து யாகபாத்திரங்களை யுடைத்தன் முதலிய பலதுன்பமிழைத்துவர, அம்மஹரிஷிகள் "இவனுக்குத் தன்பலம் தெரியாமற்போய் நெடும்போது புகழ்ந்து மூட்டினாற் றோன்றக்கடவது" எனச்சாபமிட்டனர். பின்பு ஹநுமான் யாதொரு துன்பமுஞ் செய்யாமல் அவ்வாச்சிரமங்களிலேயே சஞ்சரித்துக்கொண்டு தவசிகளனுக்கிரகத்திற்குப் பாத்திரராயிருந்தார். பின்னர் இவ்வநுமான் சூரியனிடஞ்சென்று எனக்குக் கல்விகற்பிக்க வேண்டுமென்ன, சூரியன் "நான் எப்பொழுதும் திரிந்துகொண்டிருப்பேனே, என்னிடத்து எப்படிப்படிப்பாய்," என்று வினவினார். அதற்கு அநுமான் "நான் உம்முடைய ரதத்தோடுகூட ஓடிவாராமல் சரீரத்தை வளர்த்துக்கொண்டு உதயபர்வதத்தின்மீது ஒருகாலும் அஸ்தமயபர்வதத்தின்மீது மற்றொருகாலுமாய் நின்று உம்முடைய வெப்பத்திற் காற்றியிருந்து படிப்பேன்" என்றுசொல்லி எல்லாவியாகரணங்களையும் அவற்றின் விருத்தி பாஷியம் முதலாயவுரைகளையும் ஓதியதுமன்றி, மற்றுமுள்ள பலகலைகளையும் ஓதியுணர்ந்து புவிக்கொரு பிரகஸ்பதி யென்னலாயினர்.

இப்படி யிருக்கையில் ருக்ஷரஜசு என்னும் வானரராஜன் இறந்தவுடனே தேவேந்திராம்சமான வாலியென்கிற அவன்குமாரனுக்குக் கிஷ்கிந்தையில் பட்டாபிஷேகம் நடந்தது. சூரியாம்சமான அவன்தம்பி சுக்கிரீவன் இளவரசாயிருந்தான். அந்தச்சுக்கிரீவனோடு இவ்வநுமானுக்கு மாறுதலில்லாத் தோழமையுண்டாயிருந்தது. பின்பு வாலிசுக்கிரீவர்களுக்குப் பகைநேர்ந்தபோது தம்தோழனை அவனண்ணன் அலைத்து வருத்தியதை நேரே கண்டிருந்தும், சாபத்தினால் தமது பலத்தை மறந்திருந்ததனாலே தாமும் அச்சுக்கிரீவனுடன் சுற்றிக்கொண்டிருந்து ஸ்ரீராமலக்ஷ்மணர்களைக்கண்டு அவர்களுடைய சிநேகத்தால் வாலியைக்கொல்வித்து சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்து, ஸ்ரீராமபிரானிடத்து மிக்கபக்தியுள்ளவராயிருந்தார். இராவணன் ஸீதாதேவியை யபஹரித்துக்கொண்டுபோயிருக்கையில் அவளைத்தேடும்படி யனுப்பப்பட்ட வானரங்களில் இவர் மகேந்திரமலையினின்றும் எழும்பித் தமக்குதவியாகவந்த மைநாகபர்வதத்தைச் சமாதானஞ்சொல்லிக்கடந்து தம்வல்லமையைப் பரிக்ஷிக்கவந்த சுரசையென்பவளையேமாற்றி நிழலைக்கவர்ந்து பிடிக்கவல்ல ராக்ஷஸியைக்கொன்று கடலைத்தாண்டி இலங்கையிற் குதித்து அதற்குக்காவலாகிய பிடாரியைவென்று சிறிய உருவத்தோடு அந்தப்புரமுதலிய பலவிடங்களிலுஞ் சீதாபிராட்டியாரைத் தேடிக் கடைசியில் அசோகவனத்திற்கண்டு கிட்டிப்பேசிக் கணையாழிகொடுத்துச் சமாதானப்படுத்தி அவ்வனத்தையும் ஒரு மண்டபத்தையுமழித்து இராவணனால் ஏவப்பட்ட சேனாபதிமுதலானவர்களையும் இராவணனுடைய மகனாகிய அக்ஷனென்பவனையுஞ் சங்கரித்து இராவணனிடத்துச்சென்றுபேசி அவனால் வாலில் மூட்டப்பட்ட தீயினாலேயே அந்நகரத்தைஎரித்துப் பிராட்டியினிடத்து விடைபெற்று மீண்டுங் கடலைத்தாவிவந்து தம்முடைய துணைவரோடுகூடி வழியிலுள்ள மஹாராஜருடைய மதுவனத்திற்சென்று யாவரோடும் மதுவுண்டு துரிதமாய் ஸ்ரீராமபிரானுடைய சன்னிதியிற்சென்று பிராட்டியார் அடையாளமாத் தந்த சூடாமணியைக் கொடுத்துச் சீதாபிராட்டியாரின் செய்திகளையெல்லாஞ் சொல்லி அவரையுஞ் சமாதானப்படுத்தினார். சமாதானப்படுத்தி வானரசேனைகளைச் சேர்த்துக்கொண்டு ஸ்ரீராமபிரானுடன் இலங்கைக்குச்சென்று அரக்கரை வென்று அசோகவனத்தி லெழுந்தருளியிருந்த பிராட்டியாரை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு அயோத்திக்கேகி ஸ்ரீராமபட்டாபிஷேக மஹோத்ஸவாநந்தரம் ஸ்ரீராமபிரானால் வஜ்ரஹாரமும் பீதாம்பரமும் சீதாபிராட்டியாரால் ஒரு திவ்வியமான முத்தாரமும்பெற்று, அத்திவ்விய தம்பதிகளிடத்து விடைபெற்று, மஹாராஜருக்கு மந்திரியாக மீண்டும் அவருடன் கிஷ்கிந்தையைச் சேர்ந்தார். இவர் அஞ்சனையின் புத்திரராதலால் ஆஞ்சனேயர் என்றும், வாயுதேவனுடைய மகனானதால் மாருதி [மருத்—வாயு] என்றும் இவருக்குப் பெயர்களுண்டு.

பொருளிலக்கணவிஷயம்.

[௨௪௯-வது பக்கத்தின்தொடர்ச்சி.]

3.—தெளிதல் [துணிவு].

1. பாயும்விடையரன்றில்லையன்னாள்படைக்கண்ணிமைக்குந்
தோயுநிலத்தடிதூமலர்வாடுந்துயரமெய்தி
யாயுமனனேயணங்கல்லளம்மாமுலைசுமந்து
தேயுமருங்குற்பெரும்பணைத்தோளிச்சிறுநுதலே.

2. நின்றறிகல்வியொன்றியமாந்தர்
புனைபெருங்கவியுட்டருபொருளென்ன
வோங்கிப்புடைபரந்தமுதமுள்ளூறிக்
காண்குறிபெருத்துக்கச்சவைகடிந்தே
யெழுத்துமணிபொன்பூமலையெனயாப்புற்
றணிபெருமுலைமேற்கோதையுமொடுங்கின
செங்கோலரசன்முறைத்தொழில்போல
வழுதமுங்கடுவும்வாளும்படைத்த
மதர்விழித்தாமரைமலர்ந்திமைத்தமர்த்தன
செய்குறைமுடிப்பவர்செனனம்போலப்
பதமலர்மண்மிசைப்பற்றிப்பரந்தன
வமுதம்பொடித்தமுழுமதியென்ன
முகம்வெயர்ப்புறுத்தினவுள்ளமுஞ்சுழன்றன

---

1. பாய்ந்துசெல்லும் விடையையுடைய அரனது தில்லையை யொப்பாளுடைய படைபோலுங் கண்கள் இமையாநின்றன; நிலத்தின்கண் அடி தீண்டாநின்றன; தூயமலர்கள் வாடாநின்றன; ஆதலின், துயரத்தை யெய்தி ஆராயுமனனே! அழகிய பெரியவாகிய முலைகளைச்சுமந்து தேயாநின்றமருங்குலையும் பணைபோலும் பெரியதோள்களையுமுடைய இச்சிறுநுதல் தெய்வமல்லள், எ-று. [அவ்வகை தெய்வங்கொல்லோ வென்றையுற்றுநின்றான் இவ்வகைகுறிகண்டு தெய்வமல்லள் மக்களுள்ளாளெனத் துணிந்தானென்பது.]

2. (பிணங்கி...மனனே) என்னொடுமாறுபட்டு இச்சித்துமயங்காநின்ற மனமே கேட்பாயாக;—(இகழ்...அருளி) கொன்றைமாலையையுந்தும்பைமாலையையும் இளமதியையுமறைத்து வளையல்விற்பவராது உருவங்கொண்டருளி, (முத்தமிழ்...வாக்கால்) முத்தமிழும் நான்மறையும் பிறந்தருளிய திருவாக்கால், (வீதி...புலர) வீதியின்கண்விலைகூறி முற்காலத்திற் கட்டளையிட்டவரங்காரணமாகக் கரியமேகங்கள் வெளிறாகவும் கருமணல் நீரிற்குளிப்பவும் பார்க்கின்றோர்கண்கள் புதைந்திடத்தக்க திணிந்தவிருட்பிழம்பானது விடியவும் உடல்கடோறும் பிணித்த பாவங்களும் வாடவும், (கண்ட...நாயகன்) செய்தமுடிகூடிய கூந்தலையுள்ள வணிகமாதர்களுடைய கைகளைக்குவித்துப் பிடித்துவளையலென்னும் அணியையிசைத்த தனக்கொப்புமுயர்வுமில்லாததலை

விதழியுந்தும்பையுமதியமுங்கரந்து
வளைவிலைமாக்கள்வடிவெடுத்தருளி
முத்தமிழ்நான்மறைமுளைத்தருள்வாக்கால்
வீதிகூறிவிதித்தமுன்வரத்தாற்
கருமுகில்விளர்ப்பவறனீர்குளிப்பக்
கண்புதையாப்புத்திணியிருள்விடிய
வுடன்றுறும்பிணித்தபாவமும்புலரக்
கண்டநீள்கதுப்பினர்கைகுவிபிடித்துக்
குருகணிசெறித்ததனிமுதனாயகன்
குருகுமன்னமும்வால்வளைக்குப்பையை
யண்டமும்பார்ப்புமாமெனவணைக்கும்
மலைநீர்ப்பழனமுதுநகர்க்கூடல்
ஒப்புடைத்தாயவிப்பொற்றொடிமடந்தை
யணங்கினளாமெனநினையல்
பிணங்கிவீழ்ந்துமாழ்குறுமனனே.

வனது, (குருகும்...மடந்தை) குருகுகளுமன்னப்பறவைகளும் வெள்ளிய சங்கினங்களைத்தாந்தாமீன்ற முட்டைகளுங்குஞ்சுகளுமாமெனக்கருதி அணைக்கின்ற அலைபொருந்திய நீரினையுடைய வயனிலங்களாற்சூழப்பட்ட நகரங்களுள் முதுமையானகூடலை ஒப்புடையாளாகிய இந்தப்பொற்றொடியினையுடையாள், (நின்றறிகல்வி...ஒடுங்கின) நிலைபெற்றறியத்தக்க கல்வியைப் பொருந்திய அறிஞர்களாற் செய்யப்பட்ட புனைபெருங்கவியுட்டருபொருள் போலே யோங்கிப்புடைபரந் தமுதமுள்ளூறிக் காணுங்குறியுடன் பெருத்துக் கச்சைக் கிழித்து, எழுத்தெனவும் மணியெனவும் பொன்னெனவும் பூவெனவும் மலையெனவும் அச்செய்யுள் போற்கொண்டு அழகுபெற்ற முலைமேற்றரித்த மாலைகளும் வாடாநின்றன; (செங்கோல்...அமர்த்தன) செங்கோலினையுடையவரசனது மநுமுறைச்செய்கைபோல அமுதமும் விஷமும் வாளும் பெற்றமதர்த்தவிழிகளாகிய தாமரைமலர் மலர்ந்து அமர்செய்தலுடனிமையாநின்றன; (செய்குறை...பரந்தன) முன்செய்துவிட்ட குறையை நிறைவேற்றவந்தவரது ஜனனம்போலப் பாதங்களாகிய மலர்கள் மண்மீது பொருந்தி நடவாநின்றன; (அமுதம்...நினையல்) அமுதத்துளிகளரும்பினநிறைமதியென்னுமாறு முகத்தின்கண் வியர்வரும்பாநின்றன; இவளுள்ளமுஞ் சுழன்றன; ஆதலால், இவள் தெய்வப்பெண்ணாமென நினையற்க, எ - று.—[மாழ்குறுமனனே! இதழிமுதலியகரந்து வளைவிலைமாக்கள் வடிவெடுத்து நீள்கதுப்பினர் கைகுவிபிடித்து குருகணிசெறித்த நாயகனது கூடலொப்புடைத்தாயமடந்தை முலைமேற் கோதையுமொடுங்கின, விழித்தாமரைமலர்ந்திமைத்தமர்த்தன, பதமலர் மண்மிசைப்பற்றிப் பரந்தன, முகம் வியர்ப்புறுத்தின, உள்ளமுஞ் சுழன்றன, ஆதலால் அணங்கினளாமென நினையல் எனமுடித்துப் பொருளுணர்க. முத்தமிழாவன: இயல், இசை, நாடகம் என்பன.

3. பாவடியானைப்பராங்குசன்பாழிப்பகைதணித்த
தாவடிவேன்மன்னன்கன்னித்துறைச்சுரும்பார்குவளைப்
பூவடிவாணெடுங்கண்ணுமிமைத்தனபூமிதன்மேற்
சேவடிதோய்வகண்டேன்றெய்வமல்லளிச்சேயிழையே.

4. மையார்குவளைவயற்றஞ்சைவாணனைவாழ்த்தலர்போல்
நையாதொழிமதிநன்னெஞ்சமேயினிநம்மினுந்தன்
நெய்யார்கருங்குழற்செம்மலர்வாடினநீலவுண்கண்
கையாலழைப்பனபோலிமையாநிற்குங்காரிகைக்கே.

5. சேணும்பிலமுமலர்மாளிகையுஞ்செழுஞ்சிலம்பும்
நாணும்படிநம்படியேதவப்பயனண்ணினமை
பூணும்பணியரன்வெங்கையின்மாநிழற்பூம்பொழில்வாய்க்
காணும்பிறைநுதலாட்சுமவாநின்றுகாட்டியதே.

நான்மறையாவன: தைத்திரியமும் பௌடியமுந் தலவகாரமுஞ் சாமவேதமுமாம். இனி வேதவியாசர் வரையறைப்படுத்தியகாலத்து ஓதுகின்ற ருக்கு யஜுஸ், ஸாமம், அதர்வணமென்பனவுமாம்.

3. நெஞ்சமே! பாவிய அடிகளையுடையயானைப்படையையுடைய, வேற்றரசராகிய யானைகளை யடக்கியாளுந் திறத்தில் அங்குசம்போல்பவனாய், பலம் பொருந்திய சத்துருக்களை யடக்கிய ஊன்பொதிந்த வடித்த வேலாயுதத்தையேந்திய மன்னனது கன்னித்துறையிலுள்ள மலையில், அரியகுவளைப் பூவினழகைக்கொண்டு வாள்போல் விளங்காநின்ற நெடியகண்களும் இமையாநின்றன, செவந்தபாதங்கள் பூமியின்மேற்படியாநின்றன, இவைகளைக் கண்கூடாகக் கண்டேன்; ஆகையால், இந்தச்செவ்வியபணியணியாள் தெய்வமல்லள், மானுடமாதே; எ - று.—[பகை - பண்பாகுபெயர். இமையாநின்றனவாகிய கண்களையும் பூமிமேற்படியாநின்றனவாகிய பாதங்களையும் கண்டேன் எனவுமுரைக்கலாம்.

4. நல்லநெஞ்சமே! இன்று இக்காரிகைக்கு நம்மினுந்தனது நெய்யார்ந்த கருங்குழலிற்சூடிய செம்மலர்வாடின; அன்றியும், நீலம்போன்றமையுண்ட கண் கையினால் வாவென்றழைப்பதுபோலிமையாநின்றன; ஆதலால், கருமை பொருந்திய குவளைமலர்ந்த வயல்சூழ்ந்த தஞ்சைவாணனை வாழ்த்தாத தெவ்வர்போல நீநையாதொழிவாயாக, எ - று.—[மதி - முன்னிலையசை. உண்கண்-மையுண்டகண். நெய் - புழுகு; "நெய்யொடுகுங்குமநிறைந்தநாணினாற், பொய்கைகள்பூம்பாடம்போர்த்தபோன்றவே" என்றார் பிறருமென்க.]

5. விண்ணுலகும், நாகருலகும், மலர்மாளிகையும், செழுமைபொருந்திய வெள்ளிமலையும் வெட்கும்படியாக, நமது மண்ணுலகமே தபோபலத்தைப் பொருந்தியிருத்தலை சர்ப்பங்களை யாபரணமாக வணிகின்ற பரமசிவனது திருவெங்கைத்தலத்தின் மிக்கநிழலையுடைய அழகிய பொழிலின்கண் காணப்படும் பிறைபோன்ற நுதலையுடையாளைச்சுமந்து நின்றுகாட்டியது, எ-று.—[இவள் கால்நிலந்தோயப்பெறுகின்றாள்; ஆதலால், இந்திராணியல்லள், நாக

6\. கடியேறுகொன்றையர்கோடீச்சுரவெற்பிற்கண்டதொரு
கொடியேயிதனடிக்கொண்டதுபூமுகங்கொண்டதுவேர்
முடியேறியவண்டுருநோக்கியையுறன்முன்னுமிந்தப்
படியேயிதனிலையென்றுநெஞ்சேயிவைபன்னிடுமே.

4\.—நயப்பு [நலம்பாராட்டல்.]

1\. அகல்கின்றவல்குற்றடமதுகொங்கையவையவநீ
புகல்கின்றதென்னைநெஞ்சுண்டேயிடையடையார்புரங்க
ளிகல்குன்றவில்லிற்செற்றோன்றில்லையீசனெம்மானெதிர்ந்த
பகல்குன்றப்பல்லுகுத்தோன்பழனம்மன்னபல்வனைக்கே.

[இந்நாற்றுறைச்செய்யுளும் ஒருவருள்ளக்கருத்தை ஒருவரறியாத ஒருதலைக்காமமாதலிற் கைக்கிளைப்பால. அகத்திணையின்கட்கைக்கிளைவருதல் திணைமயக்காம் பிறவெனின், கைக்கிளைமுதற் பெருந்திணையிறுவாய் எழுதிணையினுள்ளுங் கைக்கிளையும் பெருந்திணையும் அகத்தைச்சார்ந்தபுறமாயினும், களவிக்கோவையின் எடுத்துக்கோடற்கண் காட்சிமுதலாயின சொல்லுதல் வனப்புடைமைநோக்கிக் கைக்கிளை தழீஇயினர். பெருந்திணை தழுவுதல் சிறப்பன்மையின் நீக்கினர்.] [தொடர்ச்சி.]

கன்னியல்லள், கலைமகளல்லள் [திருமகளல்லள் என்னவுமாம்], மலைமகளு மல்லள்; மற்று இவள்மானுடமாதே எனத்துணிந்தானென்பது].

6\. மனமே! மணம்மிகுந்த கொன்றைமலர்மாலையை யணிந்தவராகிய பரமசிவனது கோடீச்சுரவெற்பின்கட் காணப்பட்டது ஒருகொடியே [பூங்கொடியே; கொடிபோன்ற பெண்ணே]; இதனடி பூக்கொண்டது [இக்கொடியின்வேர் பூவினைக்கொண்டிருக்கின்றது; இப்பெண்ணினது பாதம் பூமியைக்கொண்டிருக்கின்றது]; முகம் வேர்கொண்டது [இக்கொடியின் மேற்பாகம் வேரைக்கொண்டிருக்கின்றது; இப்பெண்ணின்முகம் வேர்வையைக் கொண்டிருக்கின்றது]; வண்டுகள் முடிமீதேறியிராநின்றன; ஆகையால், உருவைக்கண்டு ஐயப்படாதை; முன்னுமிந்தப்படியே யிதனிலை [முற்காலத்தும் இத்தன்மையே இக்கொடி யினிருப்பு; மூவுலகத்தினுஞ் சிறந்த இந்தப்பூமியே இப்பெண்ணினிருப்பிடம்] என்று இச்குறிகளே நமக்கறிவியாநின்றன, எ - று.—[இவள் கானிலந்தோய்தலானும், முகம் வெயர்த்தலானும், வண்டுமூசப்பெறுதலானும், மானிடப்பெண்ணே யெனத் துணிந்தானென்பது. கண்டது - செயப்பாட்டுவினை. கொடி - கொடிவையும் கொடிபோல்வாளையும், அடி - வேரையும் பாதத்தையும், பூ - மலரையும் பூமியையும், முகம் - மேலிடத்தையும் முகத்தையும், வேர் - வேரினையும் வேர்வையையும், படி - தன்மையையும் பூமியையும் உணர்த்திநின்றன.]

1\. அகலாநின்றவல்குலாகியதடம் அது, முலை அவை, நெஞ்சே! காரணமின்றி நீ சொல்லுகின்றதென்! அடையாதார் புரங்களது இகலைக் குன்றமாகிய வில்லாற் செற்றவன், தில்லைக்கணுளனாகியவீசன், எம்முடைய விறைவன், மாறுபட்ட ஆதித்தனது பெருமைகுன்றப் பல்லையுகுத்தோன், அவனது திருப்பழனத்தையொக்கும் பல்வளைக்கு இடையுண்டு, எ - று.—[தடம்-உயர்ந்தவிடம். இகல்குன்ற வில்லிற் செற்றோனென்பதற்கு இகல்குறைய வில்லாற் செற்றோனெனினும் அமையும்.]

யாப்பிலக்கணவிஷயம்.

[உருகூ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

உ.—அசை.

20. அசையாவது எழுத்தாலாக்கப்படுவது. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

[என்னை:—

"நேரசை யென்று நிரையசை யென்று
வாயிரண் டாகி யடங்குமன் னசையே"

என்பவாகலின்.]

[நேரசை, நிரையசைகளைத் தனியசை, இணையசை யென்பாருமுளர்.

என்னை:—

"தனியசை யென்று விணையசை யென்று
இரண்டென மொழிமனு ரியாப்புணர்ந் தோரே"

என்றாராகலின்.]

21. நேரசை ஓரலகும், நிரையசை ஈரலகும் பெறும்.

[என்னை:—

"நேரசை யொன்றே நிரையசை யிரண்டல
காகு மென்ப வறிந்திசி னோரே."

என்றாராகலின்.]

[1.—நேரசை.]

22. நேரசையாவது,—(1) நெட்டெழுத்துத்தனியேநின்றும், (2) குற்றெழுத்துத் தனியே நின்றும், (3) நெட்டெழுத் தொற்றடுத்துத் தனியே நின்றும், (4) குற்றெழுத் தொற்றடுத்துத் தனியே நின்றும் நான்குவகையான் நடத்தல் பெறுவதாம்.

[என்னை:—

"நெடில்குறில் தனியாய் நின்று மொற்றடுத்தும்
நடைபெறு நேரசை நால்வகை யானே" எனவும்;
"தனிநெடி றனிக்குறி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நேரசை யென்ப" எனவும்;
"நேர்நால் வகையு நெறியுறக் கிளப்பின்
நெடிலுங் குறிலுந் தனியே நிற்றலும்
அவற்றின் முன்ன ரொற்றொடு நிற்றலும்
இவைதா நேரசைக் கெழுத்தி னியல்பே" எனவும்;
"தனிநெடி லாகியுந் தனிக்குறி லாகியும்
ஒற்றொடு வந்து நேரசை யாகும்" எனவும்;

கூறுபவாகலின்.]

(உதாரணம்) :—ஆ ழி வெள் வேல்.

ஆ —தனிநெடில் நேரசை.
ழி —தனிக்குறில் நேரசை.
வெள் —குற்றெழுத்தொற்றடுத்த நேரசை.
வேல் —நெட்டெழுத்தொற்றடுத்த நேரசை.

(உதாரணச்செய்யுள்) :—

"போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே"

இது நேரசை நான்கும் வந்தசெய்யுள்.

23. குறிப்பின்கண்ணும், ஏவற்கண்ணும், தற்சுட்டின்கண்ணுமல்லாதவழி வந்த தனிக்குறில் மொழிமுதற்கண் நேரசையாகாது.

[என்னை:—

"குறிப்பே யேவ றற்சுட் டல்வழித்
தனிக்குறின் மொழிமுத றனியசை யிலவே" எனவும்;
"தற்சுட் டேவல் குறிப்பிவை யல்வழி
முற்றுந் தனிக்குறின் முதலசை யாகா" எனவும்;

கூறுபவாகலின்.]

"உண்ணு ணொளிநிறு ணோங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்"

இதனுள் அ ஆ வென்றவழிக் குறிப்பின்கண் தனிக்குறில் மொழிமுதற் கணின்று நேரசையாயிற்று. [அ ஆ வென்பது அருளின்கட் குறிப்பு.]

"வெறிகமழ் தண்சிலம்பின்* வீங்கி யுகளு
மறிமுலை யுண்ணாமை வேண்டிப்—பறிமுன்கை
அஉ வறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ"

இதனுள் நொ என ஏவற்கண் தனிக்குறில் மொழிமுதற்கண்வந்து நேரசையாயிற்று. [நொ என்ப தொன்றைச்செய்யென்றமையான் ஏவல்.]

அ உ வறியாவெனத் தற்சுட்டின்கட்டனிக்குறில் மொழிமுதற்கணின்று நேரசையாயின [அ உ வறியாவென்பது அகர உகரந்தம்மை யுணர்த்திற்றாகலான் தற்சுட்டு.]

இனி சுட்டின்கண்ணும், வினாவின்கண்ணும் ஒருசார் தனிக்குறில் மொழிமுதற்கண்வந்தும் நேரசையாம் என்பர்.

---

* புறவின் என்றும் பாடம் காணப்படுகின்றது.

[என்னை:—

"ஏவல் குறிப்பே தற்சுட் டல்வழி
யாவையுந் தனிக்குறின் முதலசை யாகா
சுட்டினும் வினாவினு முயிர்வரு காலை
ஒட்டி வருஉ மொருசாரு முளவே"

என்றாராகலின்.]

(உதாரணம்):—

"அஅவனும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால்
எஎவனை வெல்லா ரிகல்"

இதனுள் முன்னைய மூன்றுஞ்சுட்டு; எஎவன் என்பது வினா.

24. குறிப்பு, ஏவல், தற்சுட்டு, வினா, சுட்டு என்னும் ஐந்தன்கண்ணுமன்றி வேறிடத்து குற்றெழுத்து விட்டிசைக்கப்பெறாதென்றும், குற்றெழுத்து விட்டிசைத்து நின்றவிடத்து நேரசையேயாவதன்றி, மற்றோரெழுத்தினொடுங்கூடி நிரையசையாகாதென்று மறிக.

25. நெட்டெழுத்து அளபெழுந்துவருமெனின் அஃது இரண்டு நேரசையேயாம்; மூன்று மாத்திரையின் மிகவுச்சரிக்கப்படினும் நேர்நேராகவேயாகும் எனவறிக.

[2.—நிரையசை.]

26. நிரையசையாவது (1) குறிலிரண்டிணைந்தும், (2) குறினெடிலிணைந்தும், (3) குறிலிணையொற்றடுத்தும், (4) குறினெடிலொற்றடுத்தும் இந்நான்கு முறைமையினும் வருவதாம்.

[என்னை:—

"குறிலிணைகுறினெடி றனித்து மொற்றடுத்தும்
நெறிமையி னான்காய் வருநிரை யசையே" எனவும்;
"குறிலிணை குறினெடி லொற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நிரையசை யென்ப" எனவும்;
"இணைக்குறில் குறினெடி லிணைந்துமொற் றடுத்தும்
நிலைக்குரி மரபி னிரையசைக் கெழுத்தே" எனவும்;
"குறிலிணை யாகியுங் குறினெடி லாகியும்
ஒற்றொடு வந்து நிரையசை யாகும்" எனவும்;

கூறுபவாகலின்.]

(உதாரணம்):— வெறி சுறா நிறம் சுறால்.

வெறி —குறிலிணைந்துவந்தநிரையசை.
சுறா —குறினெடிலிணைந்துவந்தநிரையசை.
நிறம் —குறிலிணையொற்றடுத்துவந்தநிரையசை.
சுறால்—குறினெடிலிணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை.

(உதாரணச்செய்யுள்):—

"அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே"

இது நிரையசைநான்கும் வந்த செய்யுள்.

27. நெடிலிரண்டிணைந்தும், நெடில்குறிலிணைந்தும் நிரையசையாகா.

[என்னை:—

"நெடிலொடு நெடிலு நெடிலொடு குறிலும்
இணையசை யாகுத லில்லென மொழிப"

என்றாராகலின்.]

28. நேரசைகட்கும் நிரையசைகட்கும் ஓதிய எழுத்துக்கள் மொழிப்பட நிற்பினும், மொழிக்குறுப்பாய் நிற்பினும், கொள்ளப்படும்; அவற்றுள் பொருள்பயந்து மொழிப்பட நிற்பன சிறப்பசை என்றும், மொழிக்குறுப்பாய் நிற்பன சிறப்பிலசை என்றும், வழங்கப்படும்; இவ்விரண்டினும் எட்டசையுமுறழப் பதினாறும்.

[3, 4.—நேர்பசை, நிரைப்சை.]

29. இனி, குற்றுகரமுற்றுகரங்களோடு மேற்கூறிய நேரசையும் நிரையசையும் ஒருசொல்விழுக்காடுபட இயைந்துவரின் நேர்பசை, நிரைபசை ஆம் என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

[என்னை:—

"இருவகை யுகரமோ டியைந்தவை வரினே
நேர்பு நிரைபு மாகு மென்ப"

என்றாராகலின்.]

[இயைந்தென்றது - இருவகை உகரமும் இருபிளவு படாது ஒன்றாகிவரல்வேண்டும், அங்ஙனம் அசையாங்காலென்றற்கு.]

நேரசை நிரையசைகள் இயலசை என்றும், நேர்பசை நிரையசைகள் உரியசை என்றும் சொல்லப்பெறும்.

மேற்கூறிய குற்றுகர முற்றுகரங்கள் ஒற்றிரட்டு நிற்கவும்பெறும், அவ்வொற்றுத் தோன்றிய ஒற்றாயின்; அவை நிலைமொழி ஒற்றுடையவாயின் நேர்பும் நிரைபுமாகா.

(உதாரணம்):—

சேற்றுக் கால் எனவும்,
நாணுத் தளை எனவும்;
செருப்புச் சினம் எனவும்,
களவுக் கொல் எனவும்;
} இருவகை உகரமும் ஒற்றடுத்து உரியசை யாயின.

உண்ணும் எனவும், நடக்கும் எனவும் நிலைமொழி யொற்றுநின்றவழித் தேமாவும் புளிமாவுமாவதல்லது நேர்பசையும் நிரைபசையுமாகாதெனவறிக. விக்குள், கடவுள் என்பனவும் அவை.

30. முன்னர் நேரசை நான்கு நிரையசை நான்கு என எண்வகையான் அசைகூறி அவற்றுப்பின் இருவகை யுகரமும் வருமெனவே அவை குற்றுகரத்தோடெட்டும் முற்றுகரத்தோடெட்டுமாகப் பதினாறு உதாரணப்பகுதியவாய்ச் சென்றவேனும், அவற்றுள் குற்றெழுத்துப் பின்வரும் உகரம் நேர்பசையாகாது. ஒழிந்தன குற்றுகர நேர்பசை மூன்றும் நிரைபசை நான்குமாயின.

(உதாரணம்):—

நேர்பசை,— வண்டு, நாகு, காம்பு;
நிரைபசை,—வரகு, குரங்கு, மலாடு, மலாட்டு.

இவை குற்றுகரம் அடுத்து நேர்பும் நிரைபும் வந்தவாறு.

31. இனி, முற்றுகரம் இரண்டசைப்பின்னும் வருங்கால் குறிலொற்றின்பின்னும் நெடிற்பின்னும் என நேரசைக்கு இரண்டல்லதாகாது; நிரையசைக்கண்ணுங் குறிலிணைப்பின்னும் குறிலொடிற்பின்னுமல்ல தாகாது.

(உதாரணம்):—

மின்னு, நாணு.
உருமு, குலாவு.

32. இனி, சிலர் நேர்பசை, நிரைபசை என வேறு கூறாது இவற்றையும் நேரசை நிரையசையுளடக்கிக் கூறுவர்; ஆயினும், அவை வண்டு, தொண்டி என ஓசை ஒவ்வாமை செவிகருவியாகவுணர்ந்து கொள்க என்றார் நச்சினார்க்கினியர் முதலாயினார்.

[தொடர்ச்சி.]

அலங்காரவிஷயம்.

"[௨௬௫ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

இனி, சிருங்காரரசத்திற்கேயுரிய நாயகர்கள் அநுகூலன், தக்ஷிணன், திருஷ்டன், சடன் என்று நால்வகையராவர். [நாயகன்=தலைவன்; நாயகி=தலைவி]. அவருள்,—

1. அநுகூலன் என்பவன் பரஸ்திரீகளைக் கனவிலும் விரும்பாது தனது குலஸ்திரீயினிடத்தே அன்புமிகுந்திருப்பவனும்; "ஓர்மடவாட்கே யுற்ற வயத்தினன், அநுகூலன்னென வறைந்தனர்புலவர்." (உ - ம்.) [க்குர்
"பொன்னுலகின்மேவமுதமொருபொறிக்கே பயனளிக்கும்பொதுவாம்யார்
தன்னுமின்றவுறுப்புமில்லை மறுமையின்மாத்திரங்கிடைக்குந்தூயமற்றோர்

இன்னமுதமைம்பொறிக்குஞ்சுவையீந்துசிறப்பாகியெனக்கேபெண்ணின்
மன்னுருவம்வாய்ந்தநன்ருயிம்மையிலேகிடைத்ததுகாண்மழைவைமா
இஃது தலைவியைத் தலைவன்புகழ்ந்தது. [னே."

2. தக்ஷிணன் என்பவன் பல நாயகிகளிடத்தும் ஒருதன்மைத்தாய அன்புடையவனும்; "பலமாதருக்கும் பொதுவினினிற்போன், தக்கிணனென்னச் சாற்றப்படுமே." (உ - ம்.)

" இரக்கமுண்டோபெண்களொடுபிறந்திலரோபாவமுஞ்சற்றெண்ணுரோவவ்
வரக்கியரென்காதலனைக்காணுதற்காயினுமொருகாலனுப்புவாரோ
புரக்கவெனைப்பலரறியக்கைப்பிடித்தோனிரங்காமற்போவானுகிற்
பரக்குமலைமழைவைமின்னேயவர்களைநொந்தாவதென்னபாரின்மீதே."
இஃது தலைவிசொல்.

3. திருஷ்டன் என்பவன் தான் அபராதஞ்செய்திருந்தும் அதிற் பயமில்லாதவனுகித் தலைவி முன்செல்ல அவள் பரிகரிக்கக்கண்டும் அவளைவிட்டு விலகாமற் சொந்தம்பாராட்டி அதிக பிரியங்காட்டுபவனும்; "விளக்கமாகிய வழுவினனுகி, வெருவாதிருப்போன் திருஷ்டனென்ப." (உ - ம்.)

" படுக்காளிவந்தானேசேர்ந்தானென்றென்னுதேபாவாயென்னை
முடுக்காகவெறிநெருப்பைநெய்விட்டுத்திகுதிகெனமூட்டல்போல
அடுக்காவப்பெண்பேயைவர்ணித்தான்விடியுமட்டுமவள்போலாசை
கொடுக்காதபேர்க்கென்னவாயென்ருன்மழைவைமின்னேகுன்றினேனே."
இஃது தலைவி தோழியொடு கிளத்தல்.

4. சடன் என்பவன் நாயகியினிடத்து தன்கூடவிருத்தியாற் காரியத்தைச்சாதிப்பவனும்; "உரியளாகனை யுணருமின்னுச், செய்கையன்சடனெனச் செப்புவர்புலவர்." (உ - ம்.)

" முளைத்துமூன்றிலைவிடுமுன்களைபுரண்டமோகத்தான்மொத்துண்டையோ
வளைத்துவிடுமவன்கணைகளுடலமெல்லாஞ்சல்லடைக்கண்வடிவமாக்க
உளைத்தணையிற்கிடந்தகிடையாகிவிட்டாளென்குழந்தையோகோபாவம்
விளைத்துவிட்டுவேடிக்கைபார்க்கின்ருன்மழைவைநகர்மேவுவோனே."
இஃது தாய்க்கூற்று.

கூற்றுவனுமுளநடுங்குமிந்தநடுநிசியதனிற்கொடிபோல்வாளே
ஆற்றருகினமர்சோலையாறுதனியேகுகினதகக்கருத்தென்
வேற்றுமையோர்சிறிதுமின்றிவிளம்பிடுவாய்நீசெல்லும்வெவ்வழிக்கென்
போற்றுணைவர்கிடைப்பரோபுத்தேளிர்போற்றுமல்லிக்கேணிமானே.
இஃது தலைவன் கூற்று.

ஊடல் முதலியவற்ருல் பிணங்கிய நாயகிகளைக் கூடச்செய்வதற்கு நாயகர்களிடத்தே துணைவர் சிலருண்டு. அவர்கள் பீடமர்த்தன், விடன், சேடன், விதூஷகன் என நால்வகைப்படுவர். அவர்களில் பீடமர்த்தன் - நாயகியினது கோபத்தை இனியவசனங்களா லாற்றுபவன்; விடன் - காமசாஸ்திரத்திற் கைவந்தவன். சேடன் - சமயம்பார்த்து நாயகநாயகிகளை ஓரிடத்துக் கூடச்செய்பவன். விதூஷகன் - வாக்கியாங்கவேஷ விகாராதிகளாலே பரிகாசஞ் செய்பவன்.

இனி, சிருங்காரநாயகிகள் ஸ்வாதீனபதிகை, வாஸகஸஜ்ஜிகை, விரஹோத்கண்டிதை, விப்ரலப்தை, கண்டிதை, கலஹாந்தரிதை, ப்ரோஷிதபர்த்ருகை, அபிஸாரிகை என எட்டுவகையாச்சொல்லப்படுவர். அவர்களுள்,—

1. ஸ்வாதீன பதிகை யென்பவள் தன்மனக்குறிப்பறிந்து தன்சொற்படியே நடக்கின்ற நாயகனையுடையவளாம்; "அன்பன்கொண்டாட் டடைந்தபாவை, வயப்படுபதியின ளென்னவகுப்பர்." [வயப்படுபதியினள் - ஸ்வாதீனபதிகை.] பொழில்விளையாட்டு, மதம், அகங்காரம், தான் கருதியதை முடித்தல் முதலியவை அவள் குணங்களாம். (உ - ம்)

முகமாமதியுமுல்லையரும்பனையநகையுமொழித்தேனும்
அகில்பூண்முலையுங்கொண்டுவிளங்கமுதேயுன்னையன்றியெந்த
மகளிர்தமையுங்கனவினிலுமதியாதனதுவழியொழுகும்
தகையார்மகிழ்நன்பால்வருந்தல்தகவோவல்லிப்பதிமானே.
இஃது பாங்கி தலைவியொடு கிளத்தல்.

2. வாஸகஸஜ்ஜிகை யென்பவள் நாயகன் இன்று வருவானென்று ஸுரதஸாமக்கிரிகளைச் சேகரித்துக்கொண்டு அவன் வரவை யெதிர்பார்த்திருப்பவளாம்; "தானும்படுக்கைத் தலனுமணியிற், கைசெய்துற்ற காமாதுரையாய்க், கிழவனெதிர்வு கிட்டுறநோக்கும், ஏந்திழைவாசக சச்சிகையென்ப." தோழிமார்களைப் பரிகசித்தலும், தூதியை வினவலும், பல்வகைக்கோரிக்கைகளைக்கொள்ளுதலும், போக்கியவஸ்துக்களைச் சேகரித்தலும், வழிபார்த்திருத்தலும் ஆகிய இவைமுதலியன அவள்குணங்களாம். (உ - ம்)

குழல்சீவிக்கொண்டையிட்டுக்கூறுபலவாசனைகள்குலவவூட்டி
எழிலாரும்பொன்னுடைபுனைந்துவிலைவரம்புறியாவிழைகள்பூண்டு
வழிதேனின்மலரதனுலமளியலங்கரித்துத்தன்மகிழ்நன்போதும்
வழிமேற்றன்விழிவைத்துநிற்குமல்லிக்கேணிவளநகருண்மானே.
இஃது கவிக்கூற்று.

3. விரஹோத்கண்டிதை யென்பவள் தாங்குறித்தவிடத்திலிருந்துகொண்டு நாயகன் வாராமையைக் கருதி விரகத்தாற் கன்றுகின்ற மனமுடையவளாம்; "தணப்பினெழுந்த தகையாவேட்கையள், விரகோத்கண்டிதை யென்னலாகும்." அரதியும், உடல்வாடுதலும், அழுதலும், பாங்கியொடு கிளத்தலும், ஆகிய இவைமுதலியவை அவள்குணங்களாம். (உ - ம்.)

" அவன்பேச்சைநம்பாதேயாச்சென்பான்பிடிக்குமதற்காறுமாதம்
இவிடமகத்தியம்வருவேனென்றுனக்குப்பொய்யாணையிட்டுச்சும்மா
அவள்வீட்டில்மூன்றுநாளாயிருந்தான்பின்பெங்கேயடைந்திட்டானோ
பவளவிதழ்மழைவைமின்னேமறுபடியுமொருதரம்போய்ப்பார்த்திடா
இஃது தலைவி பாங்கியைத் தூதனுப்பல். [யே."

4. விப்ரலப்தை யென்பவள் குறித்த இடத்துக்குப்போய் நாயகன் வாராமையினால் இப்படிமோசஞ்செய்தானேயென்று மனம்வருந்துபவளாம்; "காமமேற்கொளீஇக் கணவன்வஞ்சனையின், மூழ்கியமெல்லியல் விப்ரலப்தை." சரீரவேதனையும், நெடுமூச்செறிதலும், சகிகளைக்கோபித்தலும், கண்ணீர்ததும்பலும், மூர்ச்சித்தலும் ஆகிய இவைமுதலியவை அவள் குணங்களாம். (உ - ம்)

மாதவர்களேத்துமல்லிக்கேணிவளநகரமரிம்மாதாாள்தான்
காதலன்முன்குறித்ததோரிடந்தன்னிற்கலந்திலனென்றுளங்கனன்றே
போதனையவிழிசிவந்துநீர்ததும்பப்பொன்னிதழையதுக்கிப்பல்லால்
தாதியரைமுனிந்துநெடுமூச்செறிந்துதயங்கினின்றுள்தனைமறந்தே.

இஃது கவிக்கூற்று.

5. கண்டிதை யென்பவள் வேறொருநாயகியைக்கூடிய அடையாளங்களுடன் உதயகாலத்தில் வாராநின்ற தன்நாயகனைக்கோபிப்பவளாம்; "அயன்மகட்புணர்ந்த குறிகண்டழுங்கி, வெகுளியுற்றோள் கண்டிதையாகும்." கடுஞ்சொல்லும், நெடுமூச்சும், கண்ணீர்மல்கலும், சித்திரம்போற் சும்மாவிருத்தலும் முதலியவை அவள் குணங்களாம். (உ,- ம்)

"என்னத்துக்கவன்வார்த்தை யெடுக்கின்றாய் வேறொருபேச்சிருந்தாற்சொல்லு
சொன்னத்துக்கிரண்டுசெய்யேனொருநாளுமவனுடைய சோலிவேண்டாம்
சின்னத்துக்கிடமாக்கியெனைத்தெருவார்நகைக்கவைத்தசீமானந்த
அன்னத்துக்கேயுரியபணிசெய்கமழைவைநகரமர்ந்தமானே."

இஃது தலைவி பாங்கியொடு கூறியது.

அன்னநடைமாதொருத்தியணிவதனத்தணிந்தமஞ்சளணிந்தேயன்னாள்
மின்னுபிறைநுதலணிந்தகுங்குமந்தன்விளங்குநுதலணிந்தேகாலைத்
தன்னுதலைவனைக்கண்டுமனம்வருந்திநெட்டுயிர்த்துத்துயரமீக்கூர்ந்
தின்னலுழைவழங்கியசைவறநின்றாளிணையிலல்லிக்கேணிமானே.

இஃது கவிக்கூற்று.

6. கலஹாந்தரிதை யென்பவள் தன்நாயகன் பரஸ்திரீபோகமனுபவித்ததற்காக அவன்மீது கோபத்தினால் அவனைமதியாமல் அவமானப்படுத்தி வெளியே துரத்திவிட்டு அவன்போனபின்பு மனமிரங்கி விசனமுறுபவளாம்; "அணைந்திடுகணவனை யனன்றுபோக்கிக், கலங்கியபேதை யலகாந்தரிதை." மெய்மறதி, நெட்டுயிர்ப்பு, அழுகை முதலியன அவள்சேஷ்டையாம். (உ-ம்)

"மண்ணாளுமழைவையர்கோனிரவில்வந்துவாய்புதைத்தென்காலவருடிமானேயாசைக், கண்ணனபெண்ணரசேயேதோபொல்லாக்கர்மவசத்தாலடியேனுன்னைநீங்கி, எண்ணுமற்செய்தபிழைபொறுக்கவேண்டுமென்றுகுழைக்கடித்ததொன்றுமேற்றிடாமற், புண்ணானேனெஞ்சினியுன்னுறவுபோதும் போவென்றேன்மனங்கசந்துபோனான்மாதே."

இஃது தலைவி பாங்கியொடு கிளத்தல்.

7. ப்ரோஷிதபர்த்ருகை யென்பவள் தன்நாயகன்தேசாந்தரம்போயிருக்கையில் பிரிவாற்றாமையால் அவனை நினைந்துருகி வருந்துபவளாம். "அன்பனயனு டடையவுருகுறும், பாவைபிரிந்த பதியினளாகும்." [பிரிந்தபதியினள்=ப்ரோஷிதபர்த்ருகை.] அபிலாஷை, சிந்தை, ஸ்ம்ருதி, குணகீர்த்தனம், உத்வேகம், விலபனம், உன்மத்தம், வியாதி, ஜடதை, லயம் என்னும் அவஸ்த்தைகள் பத்தும் அவளுக்குக் குணங்களாம். (உ - ம்)

"சகுனமும்பார்த்தாள்குறியையுங்கேட்டாள்சாதகப்பயனுமோர்ந்திட்டாள்
தருபெருந்தெய்வசந்நிதிமுன்னேசாற்றுறுபூவும்வைத்தெடுத்தாள் [ம்
மகிழ்நனூர்வருவாரென்றுளங்களித்தாள்மழைவையாய்சொன்னவித்தனையு
மகள்பொருட்டாலோகலியுகத்தாலோமாயமாய்ப்[illegible]ய்த்ததுவீணே."

இஃது தாயிரங்கல்.

8. அபிஸாரிகை யென்பவள் நாயகன் தன்னையநுசரிக்கவாவது தான் அவனை அநுசரிக்கவாவது தகுந்த வுபாயங்களைச் செய்யுமவளாம். "வீழ்வுகொண்டோர் விடலையாற்றானே, ஏகுமரிவை யபிசாரிகையாம்." சமயோசிதமான வேஷபூஷணங்களும், சங்கையும், புத்திகோசரமும் ஆகிய இவைமுதலியவை அவள் குணங்களாம். (உ - ம்)

"மோசம்நிதம்நடக்கிறதுமழைவையர்கோன்கண்டறியான்மூந்தாநாளில்
வாசமுறுமலரணையிலிருக்கையிலேவேறொருவன்வரவுபார்த்துக்
கூசிவிளையாடுதல்போலவன்கண்ணைப்பொத்தலவன்கூடத்தோரம்
ஏசறக்கட்டியவறைக்குட்புகுந்திட்டான்கையையெடுத்தேய்த்திட்டாளே."

இஃது பரத்தைசெய்கையைப் பாங்கியர் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ளல்.

இவ்வாறு நாயகிகள் எட்டுவகையரென்று பொதுவாகச்சொல்லப்படினும் இவருள் ஒவ்வொருவரும் முக்தை, மத்தியை, பிரகல்பை என்னும் மூன்று பருவபேதங்களையுடையராவர்; "அரும்பியயௌவன முடையளாகி, வேளினைநாணில் வென்றவள்முக்தை," "இடைப்படுபருவமு நாணுமேந்திய, மங்கையைமத்தியை யென்னவகுத்தனர்," "பருவநிறைந்து வெள்குதலில்லாக், காரிகைதான்பிரகல்பையென்ப."

இந்நாயகநாயகிகளுக்கு ரஸத்தைப்பற்றிய பலபாவங்களும் சேஷ்டைகளும் அவஸ்த்தைகளும் லீலைகளும் சம்பவிக்கின்றன; அவை மீண்டுவிரிப்பிற் பெருகுமெனவிடுத்தனம். அவ்விஷயங்களெல்லாம் வடமொழியில் ரஸமஞ்சரி, ரஸதரங்கிணி முதலிய நூல்களுள் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன; தமிழிலும் தொல்காப்பியப் பொருளதிகார முதலியவற்றுள்ளும் சிறிது கூறப்பட்டிருக்கின்றன; வேண்டுமாயின் ஆண்டுக்கண்டுகொள்க.

[தொடர்ச்சி.]

ஸ்ரீ

கடிதம்.

சென்னையிற் செழித்தோங்கும் கலாதரங்கிணி பத்திராதிபரவர்கட்கு வந்தனம்.

ஐயா,—தங்களுடைய பத்திரிகையில் கம்பராமாயணம் ஆரண்யகாண்டத்துச்செய்யுட்களுக்கு எழுதியுள்ள உரையை யான் பலகாலும் படித்து வருவதுண்டு. அதில் ஆண்டையானனையகூற" "முக்காலின் முடிந்திடுவான்" என்பவை முதலிய செய்யுட்கு முதனூலையொட்டித் தாங்கள் செய்திருக்கும் பொருத்தமான வுரையைப் படித்துப் பெருமகிழ்ச்சியடைந்தேன். தாங்கள் கம்பராமாயணத்துக்கு அதன் முதனூலைத் தழுவிப்பொருளெழுதி வருவதாலும் காண்டந்தோறும் காப்புச்செய்யுட்களுக்கு ஸ்ரீராமன்விஷயமாகவே பொருளுரைத்து வருகிறதாய்க் கேள்விப்படுகிறபடியாலும், அடியிற் குறிக்கும் பாலகாண்டச்செய்யுட்களுக்குப் பொருத்தமாகப் பொருளெழுதி விளக்குவீர்களென்று பிரார்த்திக்கிறேன்.

திருவெவ்வுளூர்,
௧௮௯௬௵
டிசம்பர்௴ }

இங்ஙனம்,
இயற்றமிழ்மாணாக்கன்,
ஒருகையொப்பக்காரன்.

1. உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கேசரணாங்களே.

2. சிற்குணத்தர்தெரிவருநன்னிலை
எற்குணர்த்தரிதெண்ணியமூன்றனுள்
முற்குணத்தவரேமுதலோரவர்
நற்குணக்கடலாடுதனன்றரோ.

3. ஆதியந்தமரியெனயாவையும்
ஓதினாரலகில்லனவுள்ளன
வேதமென்பனமெய்ந்நெறிநன்மையன்
பாதமல்லதுபற்றிலர்பற்றிலார்.

4. பம்பிமேகம்பரந்ததுபானுவால்
நம்பன்மாதுலன்வெம்மையைநண்ணினான்
அம்பினாட்டுதுமென்றகன்குன்றின்மேல்
இம்பர்வாரியெழுந்ததுபோன்றதே.

[1. அலைகடனடுவேயோரனந்தன்மீமிசை மலையெனவிழிதுயில்வளரு மாமுகிலாய்ப் பரம்புருஷனாகிய மன்றலர்துளவினானே, கசரததுரகமாக்கடல்கொள்காவலனாகிய தசரதன் மதலையாய் இம்மாண்கதைக் கோரிறையாய் ஸ்ரீராமனாகித் திருவவதரித்ததனானே, கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் ஈடுமெடுப்புமில்லாத இவ்வுத்தமநாயகன் விஷயமாகச் செய்யப்புக்க இப்பெருங்காப்பியத்திற்கு அவனையே வாழ்த்தல்வேண்டுதலின் காண்டந்தோறும் அவர்விஷயமாகவே கடவுள்வாழ்த்துக் கூறத்துணிந்து, இம்முதற்காண்டத்தில் சுவரூபோபாய புருஷார்த்தங்களைச் சொல்லுகின்றமுறையாலே மூன்று கவிகளாற் கடவுள்வாழ்த்துக்கூறத்தொடங்கி, இம்முதற்கவியால் முதற்கடவுளாய் இக்காப்பியத்தலைவராகிய ஸ்ரீராமபிரானது சுவரூபமும், அவர்க்குதாசபூதனான சேதனனாகிய தம்முடைய சுவரூபமும் சொல்லுகின்றார்.

(இதன்பொருள்) தாம் - தாமே—உலகம் யாவை உம் உள ஆக்கல் உம் - சகல புவனங்களையும் படைத்தலும்—நிலை பெறுத்தல் உம் - காத்தலும்—நீக்கல் உம் - அழித்தலும்—நீங்கல் ஆ - (ஆகிய இவை) நீங்கலாக—அலகு இலா - (இன்னும்) அளவில்லாத—விளையாட்டு உடையார் - லீலைகளையுடையவர் (எவர்)—அவர் தலைவர் - அவரே இக்காப்பியத்தலைவர் [இம்மாண்கதைக் கோரிறை]—அன்னவர்க்கு ஏ நாங்கள் சரண் - அவர்க்கே நாங்கள் அடைக்கலம் புக்கவரானோம், (என்றவாறு).

இதில் உலகம் யாவையுந் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா அலகிலாவிளையாட்டுடையார் (எவர்) அவர் தலைவர் என வஸ்துநிர்த்தேசரூபமங்களமுகத்தாலே இக்காப்பியத்தலைவரது சுவரூபமும், அன்னவர்க்கேசரணாங்கள் எனத் தம்முடைய சுவரூபமுங் கூறப்பட்டமையறிக. கடவுள்வாழ்த்துக்கூறுமிடத்து "அவன்சேவடிசேர்தும்," அவன் "அடித்தாமரை சென்னிவைப்பாம்" என்பவைபோல நமஸ்காரபரியாயமாய்க்கூறாது "அன்னவர்க்கே நாங்கள்சரண்" எனக்கூறியது சரணென்னுஞ்சொல்லாற்றலால் ஸ்ரீராமபிரானே சரணாகதரக்ஷகனென்பதும், தேற்றேகாரத்தால் தாம் தேவதாந்தரபரரன்றென்பதும், நாங்கள் என்றதனால் தாமேயன்றி "எந்தைதந்தை தந்தைதம் மூத்தப்பனேழ்படிகாறொடங்கி,வந்துவழிவழியாட்செய்கின்றோம்" என்கிறபடியே தந்தாதை மூதாதை முதலியோரும் பிரபன்னரான ஸ்ரீவைஷ்ணவர்களேயென்பதும் விளங்குதற் பொருட்டென்க.

எல்லாநூற்கும் மங்கலமொழிமுதல் வகுத்துக்கூறவேண்டுதலின் இவரும் உலகமென்று மங்கலமொழிமுதல் வகுத்துக்கூறினார். ஈண்டு உலகமென்றது அண்டங்களையும் அவற்றிலுள்ள சராசரங்களையும் குறித்துநின்றது. உடையார் என்பதன்பின் எவர் என ஒருசொல்வருவித்து, அலகிலா விளையாட்டுடையாரெவர் அவர்தலைவர் என்றொரு வாக்கியமும், அன்னவர்க்கே சரணாங்கள் என மற்றொரு வாக்கியமுமாகக் கொள்க. யாவையும் - முற்றும்மை. ஆக்கல், பெறுத்தல், நீக்கல் - காலந்தோன்றாத வினைப்பெயர். ஆக என்னும் வினையெச்சவீறு தொகுத்தல்; அது உடையார் என்பதன் முதனிலை

யோடு முடியும். இலா என்னும் எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சம் வினையாட்டென்னும் பெயர்கொண்டது. ஏகாரம் - ஈற்றசை.

துறை - கடவுள்வாழ்த்து. "வாழ்த்தியல்வகையே நாற்பாற்குமுரித்தே" என்றதன்கண் வகையென்றதனாற்கொண்ட அறுமுறை வாழ்த்தன்றித் தனக்கும் பிறர்க்கும் பயன்படும்படி, "யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது" என்றதனால் முன்னிலையன்றியுங் கடவுளைவாழ்த்துதலின் இக்கவியும் மேலிரண்டுகவிகளும் கடவுள்வாழ்த்து எனப்பெயர்பெற்றன.

இனி நீங்கலா அலகிலா என்னும் இவ்விரண்டையும் எதிர்மறைப் பெயரெச்சமாகக்கொண்டு, தம்மைவிட்டு நீங்காத அளவில்லாத எனப்பொருள்கூறி, மூவாமுதலாவுலகம் என்னுமிடத்து மூவா முதலா என்னும் எதிர்மறைப்பெயரெச்சங்களடுக்கி உலகமென்னும் பெயர்கொண்டதுபோல,இவை வினையாட்டென்னும் பெயர்கொண்டன வென்பாருமுளர்.

2. இதனால் உபாயங்கூறுகின்றார்.

இ - ள். சித் குணத்தர் - ஞானமாகிய பிரதானகுணத்தையுடையவர்கள்—தெரிவரு - அறிகின்ற—நல் நிலை - (இக்காப்பியத்தலைவரது) மெய்ந்நிலையை [யாதார்த்யஸ்வரூபத்தை]—எற்கு உணர்த்த அரிது - (பேதையாகிய) எனக்கு உணர்த்த அரியது; (ஆயினும்), எண்ணிய மூன்றனுள்-(நூல்களால்) எண்ணப்பட்ட முக்குணங்களுள்ளும், முன் குணத்தவர் ஏ - சிறந்தகுணத்தையுடையவரே—முதலோர் - (இக்காப்பியத்துக்கு) பிரதான நாயகர்;—(ஆதலால்), அவர் நல் குணம் கடல் - அவரது கலியாணகுணங்களாகிய கடலிலே—ஆடுதல் - மூழ்குதலே—நன்று - (அவருடையமெய்ந்நிலையை யறிதற்கு) நல்ல உபாயமாம்; எ - று.

சத்துவம், ரஜசு, தமசு என்பன முக்குணமென்றும், அவற்றுள் சத்துவகுணம் சிறந்ததென்றும் சாஸ்திரங்கள்கூறும். இக்காப்பியத்தலைவரது நன்னிலையை ஞானிகளறிந்துளாரென்பது இதன் முதனூலாகிய ஸ்ரீமத்ராமாயணத்தில் "அஹம் வேத்மி" என்னும் சுலோகத்திற்குப் பூர்வாசாரியர்கள் செய்தருளிய வியாக்கியானங்களால் விளங்கும்.

"கடி சொலில்லை காலத்துப் படினே" என்பதனால் சித் என்னும் வடமொழியில் தகரம் றகரமாயிற்று. உற்பலம், தற்போதம், தற்சமம், தற்பவம், தற்புருடன் எனவழங்குதல் காண்க. அன்றியும், "அற்புதனாராயணனரிவாமன, னிற்பதுமேவியிருப்பதென்னெஞ்சம், நற்புகழ்வேதியர் நான்மறைநின்றதிர், கற்பகச்சோலைத்திருக்கடித்தானமே" என்னும் பெரியோர் செய்யுளிலும் அற்புதம், கற்பகம் எனத்தகரமும் லகரமும் றகரமாத்திரிந்து வருதல் காண்க. எற்கு=எனக்கு, அகரச்சாரியையின்றி வந்தது. நான்காவது வினைமுதற்பொருண்மையின்கண்வந்த காரகம். உணர்த்தவென்னும்செயவெனெச்சவீறு தொகுத்தல். முற்குணத்தவரே என்பதில் ஏகாரம் பிரிநிலை. அவரது கலியாணகுணங்கள் அனந்தங்களென்பது தோன்ற அவற்றைக்கடலாக உருவகப்படுத்தி, அதற்கேற்ப ஆடுதலென்றார். ஆடுதல் - இடையறாது அவரது குணானுபவம் பண்ணுதல். அரோ - ஈற்றசை.

இனி, சிற்குணத்தர் தெரிவரு என்பதற்கு ஞானமாகிய பிரதான குணத்தையுடையவரும் தெரிதலருமையாகிய எனவும் பொருள் கூறுவர். அப்பொழுது சிற்குணத்தர் என்பதினீற்றில் உயர்வுசிறப்பும்மை தொக்கதாக் கொள்க.

3. இதனால் "பற்றிலர் பற்றிலார்" எனப் பெரியோரநுட்டானமெடுத்துக்காட்டி ஸ்ரீராமபிரானுடைய திருவடிகளையடைவதே தமக்கும் பிறர்க்கும் புருஷார்த்தமென்கிறார்.

இ - ள். அலகு இல்லன உள்ளன வேதம் என்பன யாவை உம்—அநந்தங்களாயும் நித்தியங்களாயும் உள்ளவேதமென்று சொல்லப்பட்டவையெல்லாவற்றையும்—ஆதி அந்தம் அரி என ஓதினார் - முதலிலுங் கடையிலும் (பிரணவத்தோடுகூடிய) ஹரியென்னும் சொல்லைச்சொல்லி அத்தியயனஞ் செய்தவராகிய— பற்று இலார் - இவ்வுலகப்பற்றில்லாத ஞானிகள்—மெய் நெறி - ஸத்யவாக்கையும் த்ருடவ்ரதத்தையுமுடைய — நன்மையன் பாதம் அல்லது - மனத்துக்கினியானுடைய [ஸ்ரீராமபிரானுடைய] திருவடிகளையல்லாமல்—பற்றிலர் - வேறொன்றையும் தமக்குப் புருஷார்த்தமாகப்பற்றினாரில்லை, எ - று.

வேதத்தை ஓதத்தொடங்கும்பொழுதும் ஓதிமுடிக்கும்பொழுதும் பிரணவத்தோடுகூடிய ஹரி யென்னும் சொல்லைச் சொல்லுதல் மரபாமென்க. வேதம் அநந்தசாகைகளாய் அளவில்லாததென்றும் நித்தியமென்றும் வேதமே சொல்லுகின்றது. ஆதியந்தமரியென வேதம்யாவையுமோதினார் நன்மையன்பாதமல்லதுபற்றிலரெனவே, வேதப்பிரதிபாத்தியமான பரதத்துவம் ஸ்ரீராமபிரானென்பதும், அவர் திருவடிகளையடைவதே பரமபுருஷார்த்தமென்பதும் பெறப்படுமாறறிக. இராமனென்னும் பதத்தின் அவயவப்பொருளையுட்கொண்டு ஈண்டு 'நன்மையன்' என்றார்.

அலகில்லன உள்ளன என்னும் வினையாலணையும் பெயர்கள் வேதம் என்னும் பெயரையும், ஓதினார் என்னும் வினையாலணையும்பெயர் பற்றிலார் என்னும் பெயரையும் விசேடித்து நின்றன.

4. இக்கவியால் இம்மலையின்மேல் மேகம் வியாபித்தது சமுத்திரம் அதனை நீராட்டும்பொருட்டுப் பொங்கிவந்ததுபோலிருந்ததெனக் குறிக்கப்பட்டது; தன்னுடைய மாமனென்னும் பரிவுபற்றி யெனக்காரணங் கூறப்பட்டது.

இ - ள். மேகம் பம்பி பரந்தது - மேகம் எழுந்துபரவியது—நம்பல் மாதுலன் - விசுவாசபாத்திரனாகிய நமது மாமன்—பானுவால் வெம்மையை நண்ணினான் - சூரியனால் வெப்பமடைந்தான்—அம்பின் ஆட்டுதும்என்று - (அவற்கவ்வெப்பந்தணிய) நீராட்டுவோமென்று (நினைத்து)—அகன்குன்றின் மேல் - அகன்ற அம்மலையின்மேல்—இம்பர் வாரி எழுந்தது போன்றது - இப்பூமியைச்சூழ்ந்த கடலானது எழுந்ததையொத்தது, எ - று.

இம்பர் - இவ்விடம், இடைச்சொல். வாரி - சமுத்திரராஜன். போன்றதென்பது தற்குறிப்புப் பொருளில் வந்தது; அதாவது பெரும்பான்மை நிச்ச

யமும் சிறுபான்மை சந்தேகமு முள்ள எண்ணம். ஏகாரம்-ஈற்றசை. பாவதராஜகுமாரியாகிய கங்கை சமுத்திரராஜனுக்கு மனைவியாதலால் சமுத்திரராஜன் பர்வதராஜனை மாமனென்றான். இதன் விவரமெல்லாம் இப்பத்திரிகையில் புராணநாமவிவரணமென்னுந் தலைப்பில் கங்கை யென்னும் பெயரிற் கூறப்படும், ஆண்டுக்கண்டுகொள்க.

இனி, நம்பன் மாதுலன் என்பதற்கு சிவனுடையமாமனென்று பொருள் கொள்ளலாமாயினும் அஃதீண்டுச் சிறக்காமையறிக.— பந்திராதிபர்.]

பழமொழிகள்.

24. அதிகாரிவீட்டுக்கோழிமுட்டை படியாள்வீட்டு அம்மியையு முடைக்கும்.
25. அத்திப்பழத்தைப்பிட்டால் அத்தனையும்பொத்தல்.
26. அப்பனருமைமாண்டாற்றெரியும் உப்பினருமைகுறைந்தாற்றெரியும்.
27. அமரிக்கை ஆயிரம்பெறும்.
28. அரசனன்றுகொல்லும் தெய்வம்நின்றுகொல்லும்.
29. அரசனெவ்வழி அவ்வழிகுடிகளும்.
    *யதாராஜா ததாப்ரஜா:.
30. அரிசி ஆழாக்கானாலும் அடுப்புக்கட்டி மூன்றுவேண்டும்.
31. அரிசியுண்டானால் வரிசையுண்டாம்.
32. அரைக்காசுக்குப்போனமானம் ஆயிரங்கொடுத்தாலும் வாராது.
33. அரைச்சொற்கொண்டம்பலமேறலாகாது.
    அரைவித்தைகொண்டம்பலமேறலாகாது.
    *அர்த்தவித்பத்தி அநர்த்தஹேது [அர்த்தம்=அரை, பாதி.]
34. அவசரக்காரனுக்கு புத்திமட்டு.
    ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.
35. அவப்பொழுதிலும் தவப்பொழுது.
36. அவிசாரிக்கானையில்லை திருடனுக்கு தெய்வமில்லை.
37. அழுகுக்கிட்டால் ஆபத்துக்குதவும்.
38. அழுகிறவீட்டிலிருந்தாலும் ஒழு (கு) கிறவீட்டிலிருக்கலாகாது.
39. அழுதபிள்ளை பால்குடிக்கும்.
    வாயிருந்தால் பிள்ளைபிழைக்கும்.
40. அளவுக்குமிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்.
41. அறப்பேசி உறவாடவேண்டும்.
42. அறுக்கமாட்டாதவனரையில் ஐம்பத்தெட்டரிவாள்
43. அறையிலாடியன்றோ அம்பலத்திலாடவேண்டும்.
44. அன்னமொடுங்கினால் ஐந்துமொடுங்கும்.
45. அன்றெழுதினவன் அழித்தெழுதுவானோ?

கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் க.] க௲௮௱௫௰ ஜனவரிமீ [சஞ்சிகை கஉ.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதி யாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ ரருளினு லெளியவர்க் கையுமாகியுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருளிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

விரதாதிகள்.

சர்வாலயதீபதரிசன வரலாறு.

ஸ்ரீகைலாசத்தில் பரமசிவன் பார்வதீசமேதராய் வீற்றிருக்கும்போது ஒருநாள் அங்கேற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒன்று ஒளிமழுங்குந் தருணத்தில் ஓரெலி அபுத்திபூர்வகமாய் அதைத் தன்முகத்தால் தூண்டிப் பிரகாசிக்கச்செய்தது. அதைநோக்கிக் கைலாசபதி திருவுளத்திற் கிருபைகூர்ந்து அவ்வெலிக்குத்தானவசரீரமும் தண்டச்செல்வமுங் கொடுத்து பூமியில்பிறக்கும் படிகடாக்ஷித்தருளினார். அவ்வெலியானது அக்கைலாசபதியினுடைய கடாக்ஷத்தினாலே மஹாபலிசக்கிரவர்த்தியாய்ப்பிறந்து சகல ஐசுவரியத்தையும் அநுபவித்திருக்குங் காலத்தில் ஒருநாள் சிவதரிசனத்துக்குப் போகவெத்தனித்துத் தன் இராஜசின்னமுதலிய சகல ஆடம்பரத்துடன் சிவாலயத்துட் பிரவேசித்து பிரதக்ஷிணம் வருகையில் அவ்விடத்திலேற்றியிருந்த தீபமொன்றியில் ஓர்துளி யிச்சக்கிரவர்த்தியின் தேகத்திற்சொட்டியது; உடனே சக்கரவர்த்தி தேகமுழுமையும் வ்ரணம் (புண்) கண்டுவெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒருநாள் பரமேசுவரர் கிருபைகூர்ந்து சக்கிரவர்த்தியே நீ மிகவும் அகங்காரியாகையால் இஃதுண்டாயிற்று; நீ இன்றுமுதல் உத்தேசித்து நெய்முதலிய பொருள்களால் ஆலயங்கட்குத் தீபமேற்றுவையேயானால் உனக்கு இந்த வ்ரணந்தீர்ந்து சாயுச்சியபதங் கிடைக்குமென்று அசரீரியாகத் திருவுளம்பற்றியதைக்கேள்வியுற்ற சக்கிரவர்த்தியானவர் ஆனந்

தமடைந்து அந்தக்கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலு மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும் தீபமேற்றிக்கொண்டு வருங்காலத்தில் ஒரு நாள் ஸ்ரீகைலாசபதியான சிவபெருமானுனவர் திருவுளமிரங்கிக் கார்த்திகை மாசம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தேஜோமயமாயெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச் சாயுச்சிய பதமளித்தருளினுர். அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அச்சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உக்கிர உஷ்ணந்தணியும்பொருட்டுப் பொரியவல் நிவேதனம் பண்ணினுர்கள். இவ்வாறு கைலாயபதி மாபலிசக்கிரவர்த்திக்குச் சோதிசொரூபமாகத் தரிசனங்கொடுத்த காரணமாகச் சிவாலயங்கள் தோறும் கார்த்திகைமாசம் பூர்வபக்ஷம் கார்த்திகைநக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் சுட்கப்பனை (சொக்கப்பானை) கட்டவுமாயிற்று. இதற்கு ஆகமவிதியென்னெனில், கார்த்திகைநக்ஷத்திரத்திற்கு முன்னுளாகிய பரணிநக்ஷத்திரத்தின் சாயங்காலம் அதிவாசதீபத்தில் அக்கினிகாரிய முதலானவைகளின் மூலமாக மகாலிங்கமூர்த்தியை ஆவாகனம்பண்ணி அந்தத்தீபத்தைச் சுவாமி சன்னிதியிற் றுனே பூஜித்துவைக்கவேண்டும்; அதற்குமேல் தென்னை பனை கமுகு வாழை மூங்கில் என்னும் இந்தமரங்களில் ஓர்விதமரத்தை ஆலயத்திற்கும் இந்திரதிக்குக்கும் மத்தியஸ்த்தானமாகிய பிரமஸ்த்தானத்தில் நாட்டவேண்டும்; இந்தமரத்துக்குத் தீபதண்டமென்று பெயராம், இந்தத்தீபதண்டம் கர்ப்பகிருகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது அந்தவிமானக்கழுத்தினளவாவது இருக்கவேண்டும்; இவ்வித தீபதண்டத்துடன் உலர்ந்த ஓலையாவது சருகாவது விமானம்போல் கட்டவேண்டும். மேற்சொன்ன பரணிநக்ஷத்திரத்துக்கு மறுநாளாகிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்தசமேதமாய் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி மேற்படி தீபம் சுவாமிக்குமுன்னே வரும்படியாகக் கொண்டுவந்து தீபதண்டத்தை ஸம்ஸ்காரப்படுத்திக்கொண்டு அத்தீபத்தை அந்ததண்டத்தின் மேல்வைத்துச் சருகுகளைக்கொளுத்திவிட்டு அச்சருகுகள் எரிந்தபின்பு மேற்படி தண்டத்தைச் சேதித்து விடவேண்டும். அந்தச்சோதியைச் சிவமாகப் பாவனைசெய்து தரிசிப்பவர்களுக் கிம்மையிற் செல்வமும் மறுமையில் மோக்ஷமுமுண்டு. மலையைச் சேர்ந்ததலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாகவும், சமுத்திரஞ் சேர்ந்த தலங்களில் பௌர்ணமி பிரதானமாகவும், தீபம் வைக்கவேண்டியது; இவை ஆகம முறைமை.

இனி, திருவண்ணுமலைத் தீபதரிசனவிவரம்:—

முன்னொருகாலத்தில் மகாவிஷ்ணுவுக்கும் பிரமதேவனுக்கும் பிரமவாதம் நேரிட்டதால் அதைத்தீர்க்கும்பொருட்டாகச் சிவபெருமான் அக்கினி மலைவடிவாய் அவர்கள் மத்தியில்நின்று அக்கலகத்தைத்தீர்த்தருளினுர். பின்பு அவர்கள் வேண்டுதலினுலே அவரொரு சிறியமலையுருக்கொள அதைக்கண்டபிரமதேவனும் மகாவிஷ்ணுவும் மகிழ்ச்சியோடவரைநோக்கிச் சுவாமி இம்மலையினுச்சியில் ஒருசோதியெந்நாளுந் தெரியும்படிக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமானுனவர்,—

" கார்த்திகைக்குக்கார்த்திகைநாளொருசோதி
மலைநுனியிற்காட்டாநிற்போம்
வாய்த்தவந்தச்சுடர்காணிற்பசிபிணியில்
லாதுலகின்மன்னிவாழ்வார்
பார்த்திவர்க்குமருந்தவர்க்குமிடையூறு
தவறுமிதுபணிந்தோர்கண்டோர்
கோத்திரத்திலிருபத்தோர்தலைமுறைக்கு
முத்திவரங்கொடுப்போமென்றுர்."

அப்படி அருணுசலபதி திருவாய்மலர்ந்தருளிய பிரகாரம் அம்மலையின் மேல்தீபதரிசனமாகிக்கொண்டுவந்த பாவனையாக இப்போதும் தீபதரிசனமாகின்றபடியால் அத்தினத்தில் இந்திரதீர்த்த முதலிய தீர்த்தமாடி கிரிவலம் வந்து தீபதரிசனஞ்செய்து துதிப்பவர் அளவிலாச்சம்பத்தையுமோக்ஷத்தையுமடைவர் என்பதாம்.

நீதி போதம்.

ஒருவன் இம்மையில் அடையவேண்டிய அறம்பொருளின்பங்களுள், அறமே ஏனைப்பொருளின்பங்கள் பெருகுவதற்குக் காரணமாதலால் அதனையியற்றுமாறு ஒருவாறு சுருக்கமாகக் கூறப்படுகின்றது.

விருப்பும் வெறுப்புமிலனுகித் தன்வயத்தனுதல் முதலிய எண்குணங்களுமுளனுகித் தர்மஸ்வரூபியாயிருக்கின்ற முதற்கடவுளைத் தொழுது வழிபட்டு,

" கல்லாதானூருங்கலிமாப்பரிப்பின்று
வல்லாதான்சொல்லுமுரையின்பயனின்று
வில்லாதானல்லவிழைவின்றுவின்று
கல்லாதான்கோட்டிகொளல்"

என்கிறபடியே கல்லாமையால் நேருமிழிவையறிந்து,

" உற்றுழியுதவியுமுறுபொருள்கொடுத்தும்
பிற்றைநிலைமுனியாதுகற்றனன்றே
பிறப்போரன்னயவுடன்வயிற்றுள்ளுஞ்
சிறப்பின்பாலாற்றாயுமனந்திரியு
மொருகுடிப்பிறந்தபல்லோருள்ளு
மூத்தோன்வருகவென்னுதவரு
ளறிவுடையோனுறாசுஞ்செல்லும்
வேற்றுமைதிரிந்தநாற்பாலுள்ளுங்
கீழ்ப்பாலொருவன்கற்பின்
மேற்பாலொருவனுமவன்கட்படுமே"

எனக்கூறுமாற்றுல் கல்வியின் பெருமையை ஓர்ந்து அதனை விரும்பிக்கற்று,

" மறவுரையுங்காமத்துரையுமயங்கப்
பிறவுரையுமல்கியஞாலத்—தறவுரை

கேட்குந்திருவுடையாரேபிறவியை
மீட்குந்திருவுடையார்"

என்கையாலே கற்றறிந்தொழுக்கந்தவறுதார்மாட்டுப் பலபொருளையும் பரக்கக்கேட்டு,

" அறிவினுன்மாட்சியொன்றில்லாவொருவன்
பிறிதினுன்மாண்டதெவனும்—பொறியின்
மணிபொன்னுஞ்சாந்தமுமாலையுமற்றின்ன
வணியெல்லாமாடையிற்பின்"

என்பவாகலின் அறிவுடையனுகி,

" தன்னைவியந்துதருக்கலுந்தாழ்வின்றிக்
கொன்னேவெகுளிபெருக்கலு—முன்னிய
பல்பொருள்வெஃகுஞ்சிறுமையுமிம்மூன்றுஞ்
செல்வமுடைக்கும்படை"

என்பதனுல் தன்னிடத்துள்ள குற்றங்கடிந்து;

" மொய்சிதைக்குமொற்றுமையின்மையொருவனைப்
பொய்சிதைக்கும்பொன்போலுமேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும்பாலின்சுவையைக்குலஞ்சிதைக்குங்
கூடார்கட்கூடிவிடின்"

என்று முன்னோர்கூறியதனுல் சிற்றினஞ்சேராதிருந்து, பெரியாரைத்துணைக்கொண்டு,

" மழையின்றிமாநிலத்தாரில்லைமழையுந்
தவமிலாரில்வழியில்லைதவமும்
அரசனுமில்வழியில்லையரசனும்
இல்வாழ்வானில்வழியில்"

என்றதனுல் உலகமும், அதனிடத்துக்கோலுங்குடியும், அறம்பொருளின் பங்களும் நிலைபெறுதற்பொருட்டு முதற்கடவுளினருளினுல் நிகழ்கின்ற மழையின் வளங்குன்ருவண்ணம் ஸத்கர்மங்களையியற்றி, நாற்பொருட்பயனுணர்ந்து, பஞ்சேந்திரிய நிக்கிரகம்பண்ணின சாதுக்கள் சங்கத்தில் பயபத்தியும், நெறிதவருத அந்தணர்குழாத்தில் பணிவும், வித்துவான்கள்சபையில் விசுவாசமும் வைத்து, முற்றத்துறந்த முனிவர்களைவந்தித்து, தந்தைதாயர் ஆசாரியர் முதலிய பெரியோர்களையும் வேதாகமங்களையும் கௌரவப்படுத்திவரல்வேண்டும்.

" எளிதெனவிகழா தரிதெனவயாது
நுமக்குநீர்நல்குதி ராயின்மனத்திடை
நினைப்பினும்பிறக்கு மொழியினும்வளருந்
தொழிற்படிற்சினைவிடூஉப் பயக்குமுணர்த்தின்
இவணுமும்பருந் துணையேயதனற்
றுறைதொறுந்துறைதொறுநோக்கி
அறமேநிறுத்துமி னறிந்திசினோரே"

என்பவாகலின், இம்மை மறுமைகட்குப் பொருளையும் போகத்தையும் அதன்